கழக வெளியீடு: கசுகுகு

பெருந்தேவனார் பாரதம்

என்னும்

பாரத வெண்பா

உத்தியோக, வீடும, துரோண
பருவங்கள்

****

பதிப்பாசிரியர்:

புலவர் இரா இளங்குமரன்

****

திருநெல்வேலி, தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்,
1/140, பிரகாசம் சாலை, சென்னை-1
திருநெல்வேலி-6 மதுரை-1 கோயமுத்தூர்-1
1973

இராமு இளங்குமரன் (1930)

1973 © THE SOUTH INDIA SAIVA SIDDHANTA WORKS PUBLISHING SOCIETY, TINNEVELLY, LTD.,

Ed 1 January 1973

17398

O31, 1 IC75, 1
N·73

PERUNDEVANAR BHARATAM

Appar Achakam, Madras-1. (I/1)

பதிப்புரை

“குமரியொடு வடவிமயத் தொருமொழி”யாகச் செந்தமிழ் மொழி நிலவிய காலமொன் றிருந்ததாகப் பண்டை நூற் குறிப்புகளா லறியலாகின்றோம். ஆயினும், வரலாற்றுக் காலத் திற்கு முன்பே அந்நிலை மாறி ஆரிய மொழியாகிய சமற்கிருதம் இமயந்தொட்டுக் குமரிவரை யேற்றம் பெற்றுப் போற்றப்படுவ தாயிற்று அந்நிலையினை விளக்கும் அறிகுறிகளின் சுவடுகள் பதிவு பெற்ற வாழ்க்கையும் இலக்கியங்களுமே இந்நாள் நமது பாரதநாட்டுப் பன்மொழியாளரிடையிலுங் காணவுள்ளன. இவ் வாறான ஆரிய மொழியின் வீருதிக்கத்தின் விளைவாகப் பிற மொழி இலக்கிய உலகால் பெருநிதியங்களென உவந்தேற்றுக் கொள்ளப் பட்டவை வான்மீகியின் இராமாயணம், வியாசரின் பாரதம் ஆகிய இரு பேரிதிகாசங்களாகும்.

“கற்புடைப் பெண்டிர் பிறர் நெஞ்சு புகாரே” என்பது இலக்கணமாக, அவ்விலக்கணத்திற்கு எடுத்துக்காட்டான இலக்கியங்களையுங் கொண்டவர்கள் தமிழர்கள். அத்தகையினர் அயலானொருவனால் கவர்ந்து செல்லப்பட்டுப் பத்துத்திங்கள் சிறையிருப்புப் பெற்ற சீதையையும், ஐவருக்குத் தேவியாயமைந்த பாஞ்சாலியையும் உத்தம நங்கையராக உயர்த்துக் கூறும் இராமாயண பாரத காவியங்களை ஏற்றுப் போற்றியது அவர்தம் நயநாகரிகப் பண்பாட்டைத் தெற்றென விளக்குவதாகும்.

காலம், இடம், நிகழ்ச்சியென்னுமிவற்றைப் பொறுத்துச் சீலமும் வேறுபடுவதாகுமென்னும் பொதுவுண்மையினைக் கருதிச் சீதையும் பாஞ்சாலியும் தமிழ்ச் சான்றோர்களால் செவ்வியர்களாக மதிக்கப்பெற்றனர். எனவே, இவ்விதிகாச வரலாறுகளைச் சங்கச் சான்றோர் தாம் பாடிய பனுவல்கட் கிடையே யேற்ற பெற்றியமைத்து மகிழ்வாராயினர்.

இவ்விதிகாசங்கள் இரண்டனுள் இராமாயணத்திலுங் காட்டில் பாரதமானது அதன்பாலமைந்த பலதிறப்பட்ட வாழ்விய லுண்மை விளக்கங்களினால் மக்களின் கவர்ச்சிக்குப் பெரிது முரியதாயிற்று. “அறம் வெல்லும் பாவந் தோற்கும்”, “அறத்தின திறுதி வாழ்நாட்கிறுதி யஃதுறுதி”, “பொறுத்தவர் பூமி யாள்வார்” என்னும் உண்மைகள் பாரத காவியத்தின்கண் சுவைமிகு வாழ்க்கை நிகழ்ச்சிகளின் வாயிலாக நன்கு விளக்கப்

பட்டுள்ளன. இவற்றிற்கு மேலாக, "முன்னவனே முன்னின்றால் முடியாத பொருளுளதோ" என்னும் ஆன்ற வுண்மைக்கிலக்காகத் திருமாலின் முழுநிறை அவதார புருடராகக் கருதப்பட்ட கண்ணபிரான் துணையுற்றுப் பாண்டவர் உய்வுபெற்ற வரலாறு நெஞ்சு பிணிக்கும் செய்தியாயிற்று. ஆனமையால், சங்கச்சான்றோர் இராமாயண பாரத வரலாற்றுச் செய்திகளைத் தம்பாடல்களில் ஏற்றவிடங்களில் குறிப்பிட்டுப் போற்றியிருப்பினும் இவ்விரு காவியங்களுள் முதன்முதல் தமிழ்மொழியில் பாரதகாவியமே முழுமையாக இயற்றப்படும் சிறப்பினையுற்றது.

பாரதம் பாடிய பெருந்தேவனார் அருந்தமிழோடாரியமும் வல்லார்போலும். அதனால் ஆரிய மொழியிலமைந்த பாரத காவியத்தின் இன்சுவையை மாந்தி மகிழ்ந்து மனநிறைவெய்தினார். "யான் பெற்ற வின்பம் பெறுகவிவ் வையகம்" என்னும் பண்பினராய் அதனைத் தமிழ்ப் பாடலாக்கியுதவினார். இவர் பாரதத்தை எவ்வாறு மதித்தார் என்பது இவர் பெயரால் திருவள்ளுவ மாலையிலமைந்துள்ள ஒரு செய்யுளின் மூலம் நன்கு விளக்குகிறது.

"எப்பொருளும் யாரும் இயல்பின் அறிவுறச்
செப்பிய வள்ளுவர்தாஞ் செப்பவரு—முப்பாற்குப்
பாரதம் சீராம கதைமனுப் பண்டைமறை
நேர்வனமற் றில்லை நிகர்"

என்பது அச்செய்யுள்.

எல்லாப் பொருளும் இதன்கண் உளவென்னுமாறு மக்கள் நல்வாழ்விற்கியன்ற உண்மைகளெல்லாவற்றையும் ஒருங்குடைத்தாய், உள்ளுதோறுள்ளுதோறுள்ளமுருக்கும் பான்மையிலமைந்த திருக்குறளுக்கிணையாக உலகிடைச் சில நூல்களைத் தெரிந்துரைக்க வேண்டுமெனில், பாரதம் சீராமகதையாகிய இராமாயணம், வேதம் ஆகியவற்றைக் கூறலாம்; வேறில்லையென இச்செய்யுளின்கண் விளம்பியுள்ளார் பெருந்தேவனார். எனவே, வேதத்திற்கிணையாகப் பாரதத்தை இவர் மதித்தனர் என்பது புலனாகின்றது. இவர் மதித்தது மட்டுமோ! உலகடங்கலுமே பாரதத்தை ஓர் உயர்பெருங்காவியமாக மதித்துத் தத்தம் மொழிகளில் பெயர்த்துப் போற்றி வருகின்றது. வேறு கூறுவானேன், இந்நாள் புதுமையறிவின் உயர்வரம்பில் நிற்பவராகக் கருதப்படும் உருசியர்களுங் கூடத் தமது மொழியில் பாரதத்தைப் பெயர்த்தமைத்துக் கொண்டுள்ளனரென்பது அதன் பெருமைக்குச் சிறந்த எடுத்துக்காட்டாகும்.

இத்தகு பாரதத்தினைப் பெருந்தேவனார் என்பவர் முதன் முதல் தமிழ்மொழியில் கடைச்சங்ககாலத்தில் இயற்றினாரென் றறிகின்றோம். அதனால் அவர் பாரதம் பாடிய பெருந்தேவனார் என வழங்கலாயினர். ஆயின், எக்காரணத்தாலோ அந்நூல் முழுமையாகக் கிடையாமல் உரையாசிரியர்களின் மேற்கோள்களானும், புறத்திரட்டுத் தொகைநூலானும் ஒரு சில செய்யுள்களே கிடைத்துள்ளன. கிடைத்துள்ள அச்செய்யுள்கள் வெண்பாவானும் ஆசிரியப்பாவானும் இயன்றவையாகவுள்ளன. இந்நூற் பாடல்கள் பண்டை உரையாசிரியர்களால் "இது பெருந்தேவனார் பாட்டு," "இது பாரதப் பாட்டு" எனக் குறிப்பிடப் பட்டுள்ளன.

பின்னாளில் கி. பி. 9 ஆம் நூற்றாண்டளவில் பாரதக் கதையினால் பெரிதும் உளங் கவரப் பெற்ற நிலையினராயினாரொரு தமிழ்ப் புலவர். இவரும் முன்னையவரைப் போன்றே ஆரியமும் தமிழும் வல்லவரெனக் கருதற்குரியர். இவர் காலத்திலேயே முன்னைய தமிழ்ப் பாரதம் முழுமையாகக் கிடைத்திலது போலும். எனவே, அக்குறை தீர்ப்பான் தாமே முன்னைய பாரதத்தோ டொருபுடை யொப்புமை யுடைத்தாய்ப் பாரத காவியத்தைத் தமிழில் இயற்றுவாராயினர். பாரதம் பாடிய காரணத்தாலோ இயற்கையாகவோ இப்புலவரும் பெருந்தேவனார் என்றே பெயர் கொண்டுள்ளார். இப் பின்னையவர் இயற்றிய பாரத காவியம் பெரிதும் வெண்பாக்களும் இடையிடையே சில ஆசிரியப் பாக்களும் விருத்தங்களும் கலந்தமைந்துள்ளது. வெண்பாக்களே மிகுதியாகவுள்ளமையால் இது பாரத வெண்பாவென வழங்கப் படுவதாயிற்று. மேலும் இவரியற்றிய பாரதச் செய்யுள்கள் இடையிடையே யமைந்த உரைநடைப் பகுதிகளால் தொடர்பு படுத்தப்பட்டுள்ளன. ஆகவே, இப்பாரத நூல் உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள் என வழங்கப்படுகிறது. இவ்வுரைநடை வடசொற்கள் மிகுதியாகக் கலந்த மணிப்பிரவாள நடையிலமைந் துள்ளது. இந் நூல் தானும் இந் நாள் முழுமையாகக் கிடைத் திலது. உத்தியோகபருவந் தொடங்கித் துரோண பருவத்தில் பதின்மூன்றாம்நாட் போர்ச் சருக்கம் வரையிலுமே உள்ளது. கடவுள் வாழ்த்துச் செய்யுள் இரண்டுடன் ஆகக்கூடி 830 செய்யுள்கள் இந் நூலின்கண் ணுள்ளன. 831 ஆம் செய்யுள் செங்......என்னும் ஓரசை யுடன் நிற்கின்றது. இந்நூல் திருவாளர் பண்டித அ. கோபாலையர் என்பவரால் 1925 ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்களில் பதிப்பித்து வெளியிடப்பட்டுள்ளது. இந் நூலும் இன்னும் சில வாண்டுகளிற் கிடைத்தற்கரிதாகிவிடுமோ வென்னும் அச்சத்தால் இதனைக் கழகத்தின் வாயிலாகப் பதிப்பித்து வெளியிட முற்பட்டோம்.

இந்நூலின்கண் ணமைந்துள்ள வெண்பாக்கள் பிற்காலத்தில் நளன் வரலாற்றை வெண்பாயாப்பால் இயற்றி, "வெண்பாவிற் புகழேந்தி" யென்னும் புகழுக்குரியரான புகழேந்திப் புலவருடைய வெண்பாக்களுக்கு அடுத்தபடியாகக் கூறத்தக்க நிலையிலுள்ளன. அடுத்தபடியென்று கூறுவதென்றுவெனின் - இவ்வெண்பாக்கள் யாப்பமைதியானும், பொருளறிவுறுத்தும் போக்கினானும் நள வெண்பாவோ டொருங்கெண்ணத்தக்க வாயினும் கவிதைக்கான கற்பனை நயத்தில் மட்டும் அன்னதற்கடுத்த நிலையிலுள்ளன.

இந்நூலினை வெளியிடக்கருதியபோது இதனிலமைந்த வடசொற்கள் மிகுதியாகக் கலந்த உரைநடையினை அனைவரும் எளிதிற் புரிந்து கொள்ளலரிதென்று அதனைச் செவ்விய தமிழ்ச் சொன்னடையாக மாற்றியமைக்க விரும்பினோம். அல்லாமலும், செய்யுள்களிலுள்ள அருஞ்சொற்களுக்குப் பொருள் விளக்கமும் தரவிழைந்தோம். முன்னமே எங்கள் கழக நூலாசிரியராகவும் பதிப்பாசிரியராகவுமிருந்து நூல்கள் சில நன்முறையில் வெளி வருதற்குத் துணைபுரிந்த மதுரைத்திருநகர் புலவர் திரு. இரா. இளங்குமரன் அவர்களிடம் எங்கள் நோக்கத்தை வெளியிட்டோம். அவர் எங்கள் விழைவின்படியே இந்நூலை நன்கு ஆய்ந்து மூல நூலிலுள்ள சில பிழைகளையுங் களைந்து, உரைநடையிலமைந்த வட சொற்களை நீக்கித் தமிழ்ச் சொற்பெய்து, அருஞ்சொற்பொருள் விளக்கமும் அடிக்குறிப்பாக அமைத்து, அரிய ஆராய்ச்சிமுன்னுரை யொன்று மெழுதிச் சேர்த்து இந்நூல் நன்முறையில் வெளி வருதற்கு உதவினார். உரைநடையிலமைந்த வடசொற்கள் மட்டும் நீக்கப்பட்டன; ஆனால், நடைப்போக்கு மாற்றியமைக்கப்படவில்லை. தனியொரு போக்கிலமைந்த அவ்வுரைநடையை அறிஞர்கள் சுவைத்தல் வேண்டுமென்பதே அதற்குக் காரணமாகும்.

நூலாய்வையே தமது மேலாய வாழ்க்கை நுகர்வாகக் கொண்டுள்ள புலவர் திரு இரா. இளங்குமரன் அவர்களுக்குக் கழகத்தின் கனிவான நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். தமிழ் பேணும் நன்னோக்கத்துடன் இத்தகு நூல்களை வெளியிடும் எங்களை ஊக்கும் வகையில் தமிழ்ப் பெருமக்களும் தமிழக அரசினரும் ஒல்லும் வகையாலெல்லாம் உதவிபுரியுமாறு வேண்டிக் கொள்ளுகின்றோம்.

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்.

ஆராய்ச்சி முன்னுரை

"மாபாரதம் தமிழ்ப் படுத்தும், மதுராபுரிச் சங்கம் வைத்தும்" பாண்டியர் தமிழ் புரந்த செய்தியைச் சின்னமனூர் பெரிய செப்பேடு கூறுகின்றது. பாண்டியன் சங்கம் நிறுவிய செயலுடன் பாரதம் தமிழ்ப் படுத்த செய்தியும் இணைத்துக் கூறப் பெற்றுள்ளதனை நோக்கப், பாரதம் வடமொழியில் இருந்து தமிழ்ப் படுத்திய முதற்பணி அதுவாகலாம் என்றும், அது செயற்கரிய செயலாகக் கருதப்பெற்றது என்றும் உணரலாம். இப் பாரதப் பணி சங்க காலத்தைச் சேர்ந்தது. அதன் பின்னரும் அப்பணி தொடர்ந்து நடந்ததை இலக்கியங்களும் வரலாறுகளும் தெரிவிக்கின்றன.

மாபாரதம் தமிழ்ப்படுத்தும் பணியில் ஈடுபட்டவர்களுள் பெருந்தேவனார் இருவர் அறியப் பெறுகின்றனர். முன்னவர் சங்கஞ் சார்ந்தவர் ஆகலாம். பின்னவர் ஒன்பதாம் நூற்றாண்டில் வாழ்ந்தவர்; தெள்ளாறு எறிந்த நந்திவர்மன் எனப்பெறும் மூன்றும் நந்திவர்மன் காலத்தவர். அவர் இயற்றிய பாரதம் 'பாரத வெண்பா' எனப் பெயர் பெற்றது. ஆசிரியமாலை, வெண்பாமாலை, கலித்தொகை, பரிபாடல் என்பன போலப் 'பாரத வெண்பா' என்பது யாப்பினால் பெற்ற பெயராம்.

பாரத வெண்பாவில் இப்பொழுது 830 பாக்களே கிடைத்துள. இவற்றுள் அகவல் பாக்கள் ஆறும், விருத்தப் பாக்கள் ஆறும் இடம் பெற்றுள. எஞ்சிய 818 பாக்களும் வெண்பாக்களே. அகவலும் விருத்தமும் சிறுபான்மை இடம் பெற்றிருப்பினும், வெண்பாக்களின் பெரும்பான்மை கருதிப் 'பாரத வெண்பா' என்றே அழைக்கப்பெற்றதாம். களவு, கற்பு ஆகிய கைகோள் இரண்டனையும் கூறினும் மிகுதி கருதிக் 'களவியல்' என்று இறையனார் அகப்பொருள் பெயர் பெற்று விடவில்லையா! அதுபோல் என்க.

ஒருவர் ஒருநூலை யாத்தற்குச் செவ்வியதொரு காரணம் இருத்தல் வேண்டும். அவர் அந்நோக்கத்தைக் கூறிச் செல்லுதலும்

இலக்கிய மரபேயாம். ஆனால் [1]உத்தியோக பருவம் தொடங்கித் துரோணபருவத்தில் பதின்மூன்றும்நாள் போரின் ஒருபகுதி வரைக்குமே இந்நூற் பாடல்கள் கிடைப்பதால் பெருந்தேவனார் நூல் யாக்கப் புகுந்த காரணத்தை அறியக் கூடவில்லை. ஆயினும், கம்பர் கூறியாங்கு

"ஆசைபற்றி அறைந்தார்"

என்பது தகும்.

ஆழ்வார் பெருமக்கள் கொண்டிருந்த ஆராப்பத்திமை அளவினை நிகர்க்கும் வண்ணம் பெருந்தேவனார் திருமால் அன்பில் திளைத்திருந்தார் என்று கூறுதற்கு அகச் சான்றுகள் மிக்குள.

"மாலென்ப தாம்பின்னை மால்வரையான் மால்விசும்பின்
மாவின் புயல்காத்த மால்வண்ணன்—மாலரவப்
பேரோத மேனியான் பேரோத நீர்கடைந்தான்
பேரோத மேனியான் பேர்" [3]

என்னும் திருமால் வணக்கப் பாடலால் 'மால்' மேல் பெருந்தேவனார் எத்துணை 'மால்' கொண்டிருந்தார் என்பது தெள்ளிதின் விளங்கும்.

"பொருப்படைந்து தங்கள் புலனைந்தும் செற்று
நெருப்படைந்து நீரடைய வேண்டா—விருப்படைந்து
வைகுந்தஞ் சிந்தையிலே வைப்பார்க்கு மாதவனும்
வைகுந்தஞ் சிந்தையுளே வந்து" [387]

என்றும்,

"ஊன்கிடந்த இவ்வுடல்விட் டோடுவதன் முன்னமே
கான்கடந்த காலாற் கடல்கடந்து—வான்கடந்த
மாதவனே பாண்டவர்க்கா மண்வேண்டிச் சென்றிரந்த
தூதுவனே என்றென்றே சொல்" [571]

என்றும்,

"மாண்ட பொழுதுன் மலரடிகள் வந்தடியேன்
தீண்டும் படியுன் திருவருளால்—மூண்டமரில்
ஒன்னார் உடைய ஒளிவளைவாய் வைத்தூது
மன்னா தருவாய் வரம்" [532]

---

1. முன்னே ஆதிபருவம், சபாபருவம், ஆரணியபருவம், விராட பருவம் என்னும் நான்கு பருவங்களும், பின்னே துரோணபருவத்தின் பிற்பகுதியும், கன்னபருவம், சல்லியபருவம், சப்திக பருவம் என்பவையும் கிடைக்கப் பெறவில்லை.

என்றும் இவர் 'திராக்காதலில்' திருமாலை நோக்கிப் பாடுவதும் வீடுமன்,

"ஆக்கை குலைந்திட் டனைத்தெலும்புங் கைவிட்டுக்
காக்கை பருந்து கலவாமுன்—நோக்கிக்
கருமாலை மாற்றக் கருதிமட நெஞ்சே
திருமாலை ஏத்தாய் தெளிந்து" [631]

என்று இசைத்துத் திருமாலை வழிபடுவதாகக் கூறுவதும்; பொய்யனை இட்டுக் கண்ணனைக் குழியுள் வீழ்த்தத் துரியோதனன் முனைந்த பொழுதில் விண்ணுற நிவந்த கண்ணனை நோக்கி அவையோர்,

"எந்தாய் போற்றி! இறைவா போற்றி!
மன்னா போற்றி! மணாளா போற்றி!
அஞ்சன வண்ணத் தரியே போற்றி!
கஞ்சனை அடர்த்த கண்ணா போற்றி!
கருங்கடற் றுயின்ற காரே போற்றி!
ஆயிரந் தோளுடை அடுபோர் வாணனை
நேமியிற் றுணித்த நெடியாய் போற்றி!
பேய்முலை யுண்ட பிரானே போற்றி!
பேருல களந்த மாலே போற்றி!
மருதிடைத் தவழ்ந்த மாயா போற்றி!
மாக்கடல் கடைந்த மகேசா போற்றி!
பெருவரை எடுத்த பிரானே போற்றி!
சங்கொடு சக்கரந் தரித்தாய் போற்றி!
தண்டொடு சார்ங்கமும் தனிநாந் தகமும்
பிண்டி பாலமும் பெருவச் சிரமும்
எண்டிசை நிறைந்த எம்மான் போற்றி!
அண்டமும் விசும்பும் அகலிடம் எல்லாம்
உண்டுமிழ்ந் தவனே ஒருவா போற்றி!
திருமறு மார்பத் திருமால் போற்றி!
தீவினை கெடுக்கும் செல்வா போற்றி!
அருமறை தேடும் அடியாய் போற்றி!
அடியவர் வினைகெட அருள்வாய் போற்றி!
சென்றொரு தூணிடை நின்றாய் போற்றி!
சிறுவனை உகந்த செல்வா போற்றி!
அயனொடு தேவர்க் கரியாய் போற்றி!
மலர்மகள் புணர்ந்த மணாளா போற்றி
நிலமகள் இடந்த நெடியாய் போற்றி!
திருவருள் தருவாய் திருவடி போற்றி!" [212]

எனப் போற்றி உரைப்பதாகச் சாற்றுவதும் இவர்தம் இறையன்பு வெள்ளத்தின் பெருக்கே என்பதில் ஐயமில்லை.

[1]கரைபுரண் டோடும் காட்டாற்று வெள்ளமெனப் பெருக்கெடுத்த இறையன்புக்கு நான்கடி வெண்பா யாப்பு இடந்தாராதெனக் கொண்டுபோலும் அகவற் பாவிலே புகுந்து 150 அடிகள் பாடினார்! பெருமாள் கோயிலில் தமிழ் வழிபாட்டுக்கு ஏற்ற போற்றித் திருவகவல் ஒன்றை வழங்கிய பெருமை பெருந்தேவனார்க்கு உண்டென்பதை உணர்ந்து, பெருமாள் கோயில்கள் போற்ற முன் வந்தால், அது பெருந்தேவனார்க்குச் செய்யும் நன்றிக் கடன் ஆகுமல்லவா!

*   *   *

"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு"

என்னும் குறள் நெறியைக் குறிக்கொண்டு வாழ்ந்தவர் பெருந்தேவனார். அதனால் தம்மைப் புரந்த பல்லவ வேந்தனைப் புகழ்ந்து போற்றியுள்ளார். (4) இவர்தம் நன்றிப் பெருக்கு நூலகத்து விரவிக் காணப் பெறுகின்றது.

செய்ந்நன்றிகளில் தலையாயது 'சோறளிக்கும்' நன்றியே என்பது தெளிவு; 'நாலெலார் தொகுத்தவற்றுள் எல்லாம் தலை'யாய நன்றி அஃது ஆதலால், அந் நன்றிக்குப் பதிலுதவி செய்தலைச் 'செஞ்சோற்றுக் கடன் கழித்தல்' என்று சான்றோர் கூறினர். 'உண்டி முதற்றே உணவின் பிண்டம்' ஆதலால், 'உண்டி கொடுத்தோர் உயிர்கொடுத் தோரே' என்று மண்டிப் பொருவர் வீரர் என்று கருதியே, பண்டைவேந்தர் பகைமேற் செல்வதன்முன் வீரரைப் பெருஞ்சோறளித்துப் போற்றினர். இச் செய்தியை நன்கறிந்த பெருந்தேவனார் தாம் எடுத்துக் கொண்ட கதைக்கண் எத்துணை நயமாகவும் திறமாகவும் பயன் படுத்துகிறார். அவர்தம் நன்றியுணர்வின் வெளிப்பாடே அஃதெனின் மிகையன்றாம்.

செஞ்சோற்றுக் கடன்கழிப்பதே 'கருமமும் தருமமும்' என வாழ்ந்த கன்னனை அறிவோம்.

---

1. இவர்தம் இறையன்புப் பெருக்கை 484, 514, 546, 559, 583, 590, 618, 629, 678, 711, 771 ஆகிய கடவுள் வாழ்த்துப் பாக்களிலும், 16, 36, 80, 81, 155, 167, 217, 350, 355, 360, 476, 477, 478 ஆகிய பாடல்களிலும் காண்க.

சல்லியன்—கண்ணன்—அசுவத்தாமன் ஆகியவர்களையுமா பெருந்தேவனார் தம் கைப் பிடித்த நன்றி வலைக்குள் அகப்படுத்தி விடவேண்டும்?

பாண்டவர்க்கு உதவச் செல்லும் சல்லியனை இடை விலக்கித் தன் சோறுண்ண வைத்த துரியோதனன், சல்லியன் தனக்கே படைத்துணை செய்ய வேண்டும் என்று வேண்டு கின்றான். அதற்குச் சல்லியன்,

"முன்னொருவன் செய்யும் உபகாரம் மூவுலகந்
தன்னைக் கொடுத்தாலும் சாருமோ—என்னே
உயிர்க்குறுதி யாக ஒருவர்சோ றுண்டார்
பிறர்க்குரியர் ஆவரோ பேசு" [20]

"தஞ்சம் என ஒருவர் சோறுண்ட தாளாண்மை
வெஞ்சமரில் அன்றி விளிவரோ—தஞ்சம்
அவர்க்காக வந்தேன் அரவுயர்த்தாய் மீட்டாய்
எமக்காமா றீதோ இயம்பு" [22]

என்றான். பின்னர்த் தருமனைக் கண்ட சல்லியன் சோற்று நன்றியை மறந்தானா?

'சோற்றின் வலியால் துவக்குண்டேன்'

என்கின்றான். எவ்வளவு எளிய வலைவீச்சு! நன்றியுணர்ந்த வாய்ப் பேச்சு!

விதுரன் மனையில் தங்கி விடியல் பொழுதில் துரியோதனன் அரண்மனைக்கு வருகின்றான் கண்ணன். அவனைக் கண்டதும் துரியோதனன்,

"தொன்னகர்க்கு நின்வரவு கேட்டுச் சுவையமுதம்
என்னகத்தி லேசமைக்க என்கொலோ—வின்னகத்து
வானகங்கைக் கொண்ட வளரொளியாய் மற்றகத்துப்
போனகங்கைக் கொண்ட பொருள்?" [164]

என வினவுகின்றான். வாய்ப்பை விட்டு விடுவாரா பெருந்தேவனார்? கண்ணன் வாக்காகப் பாடுகின்றார்:

"ஒருவீர் அகத்தொருவர் உண்டுடுத்துத் தம்மின்
மருவி மனமகிழ்வா ராகிற்—செருமுனையின்
மன்னப்போர் செய்யும் மழகளிற்றாய் மாநிலத்துப்
பின்னப்போர் தக்கதோ பேசு" [165]

"அன்பின் இடுஞ்சோறும் ஆபத் திடுஞ்சோறும்
இன்ப முடன்சோ றிரண்டுண்டே—அன்பினிலே
இல்லாத உன்னகத்தியான் உண்ணுமா றெங்ஙனே
மல்லார்தோள் மன்னா மதித்து" [166]

தன்னை இகழ்ந்த துரியோதனனை வெறுத்து வில்லை யிறுத்துப் போகட்டுச் சென்றான் விதுரன். வீடுமன், துரியோதனன் செயலைக் கடிந்துரைத்தான். அப்பொழுது கன்னன்,

"மண்ணரசர் எண்ண வரிசிலையின் வட்டத்து
நண்ணிப் பொருதகலும் நல்லோரை—எண்ணில்
ஒருவர்சோ றுண்டங் கொருவர்க்காய்ப் பேசித்
திரிகுவரோ சொல்லாய் தெளிந்து" [190]

என்று கூறி 'விதுரன் நன்றி மறந்தவன்' என்று பழிப்பதால் விம்மிதம் உறுகின்றான். இத்தகைய கன்னன் தன் நிலையில் எவ்வாறு இருப்பான்?

கன்னனொடு தொடர்புண்டாகிய நாள் தொட்டுத் துரியோதனன் அவனை விடுத்துத் தானே உண்டது இல்லையாம்! (224) தன்னெச்சில் உண்ணாத துரியோதனன் கன்னன் எச்சில் உணவை இனிக்க உண்டானும்!

"இன்னான் எனவறியா என்னை முடிகவித்து
மன்னர் வணங்க அரசியற்றிப்—பின்னையும்
தன்னெச்சில் உண்ணாத் தகைமையான் தானுண்டான்
என்னெச்சில் என்னோ டினிது" [315]

"கொன்னவிலும் தேர்ப்பாகன் என்று குலம்பேசி
என்னைப் பலரும் இகழ்ந்துரைப்பப்—பின்னையுந்தான்
என்னெச்சில் என்னோடும் உண்டானை எங்ஙனே
உன்னச் சிழப்பேன் உரை" [316]

"மதமா மழகளிற்றான் மற்றெனக்குச் செய்த
உதவி உலகறியும் அன்றே—உதவிதனை
நன்றுசெய்தோர் தங்களுக்கு நானிலத்தில் நல்லோர்கள்
குன்றுவதோ செய்ந்நன்றி கூறு" [318]

தன்னொடும் வருமாறு அழைத்த அன்னையிடம் கன்னன் உரைக்கும் செய்தி இது.

அவைக்கண் இருந்த அசுவத்தாமனை அழைத்துச் சென்று விரலாழியை வீழ்த்தி எடுப்பித்து வாங்கிக் கொள்கின்றான் கண்ணன். அசுவத்தாமன் மேல் துரியோதனனுக்கு ஐயம் பிறந்தது! ஐயத்தைத் தாங்கமாட்டாது அவலங் கொண்டான் அசுவத்தாமன்,

"ஒருவர்சோ றுண்டடங் கொருவர்க்காய் நிற்பார்
இருநரகில் வீழ்வார்போய் இன்றே—திருவருளான்
மண்ணின்மேல் வீழ்ந்த மணியாழி தாவென்றான்
எண்ணியவா றென்றறியேன் யான்" [233]

என்று மன்றாடுகின்றான்! மாண்டு போகவும் துடிக்கின்றான்!

* * *

புறத்துறைகளுள் ஒன்று வஞ்சினம் என்பது. நெடுமொழி என்பதும் அது.

"இன்னது பிழைப்பின் இதுவா கியரெனத்
துன்னருஞ் சிறப்பின் வஞ்சினம்" [தொல். புறத். 24]

என்று கூறப்பெறும். பகைமேல் படைகொண்டு செல்லும் வீரர்பால் வெளிப்படும் வஞ்சின மொழி. அதனைப் பெருந்தேவனார், கொடைமேல் தடையின்றிச் சென்று வெற்றி கொள்ளும் கன்னன்பால் வைத்துப் பாடுகின்றார்!

நெஞ்சத்தில் முதிர்ந்து விளங்கும் உயிர்ப்பான உணர்வே வஞ்சின மொழியாக வெளிப்படும். சொல் நெஞ்சூர்தி தானே! ஒல்லையூர் தந்த பூதப் பாண்டியன், தலையாலங்கானத்துச் செரு வென்ற நெடுஞ்செழியன் சோழன் நலங்கிள்ளி ஆகியோர் கூறிய வஞ்சின மொழிகள் (புறம் 70-72) இவ்வுண்மையைத் தெள்ளிதின் வெளிப்படுத்துகின்றன. ஆனால், காவியத்தில் வரும் உறுப்பினர் கூறும் வஞ்சினம் எவர் உணர்வைப் பொறுத்தது? அவ் வுறுப்பினர் இயல்பறிந்து பாடும் பாவலன் உணர்வைப் பொறுத்தது. பாவலன் உயிர்ப்பாகக் கருதும் உணர்வே பாட்டுடையார் வாக்காக வெளிப்படுகின்றது. இதனை உட்கொண்டு நோக்கினால் பெருந்தேவனார் சீரிய பண்புகள் சிலவற்றை நாம் அறிந்துகொள்ள வாய்ப்பாம்.

கண்ணனின் ஏவலை மேற்கொண்டு, மறையோன் வடிவில் இந்திரன் கன்னனைக் காணச் சென்றான். கன்னனைக் கண்டு,

"நல்லார்கள் எல்லாரும் நன்கறிந்து வேண்டுவன
சொல்லாது கொண்டார்கள் சொன்னேனென்" [252]

என்று வினவ,

"உயிர்தான் இறந்திடினும் நன்றேநீ ஏதேனும்
வேண்டிற்றுப் பெற்றாய்" [253]

என மறுமொழி கூறினான் கன்னன். "என் எண்ணத்திற்கு உடன்பட்டு ஈந்தால் உனக்குப் பெரும்புகழ்" என்று மேலும் மறையோன் கூறக் கன்னன் கூறினான்:

"அழகியதே சொன்னாய்நீ அந்தணனே புந்தி
பழகியதே சொல்லில்மறுப் பேனோ—தழுவியபோர்த்
தன்னா யகன்படவே தான்சாவுக் கஞ்சிப்போ
மன்னாக வெண்ணாய் மதித்து" [257]

"மன்றில் வலிந்தோனும் மாதவரைச் செற்றோனும்
நன்றி மறந்தோனும் நானிலத்துள்—அன்றியுந்தான்
பெற்றவரைத் தானிகழும் பேதையும் என்றிவர்கள்
உற்றவிட மெய்தவனு லுற்று" [258]

"ஆண்டவனை விட்டமருள் ஆடவர்கள் பின்தொடர
நாண்டுறந்து போனவனும் நல்லோர்கள்—வேண்டியதொன்
றீயா தவனு மியானாக இந்நிலத்து
நீயா தரித்துக்கொள் கின்று" [259]

இவ்வாறு வஞ்சினம் உரைக்கின்றான். இவை கன்னன் வாக்காகப் பெருந்தேவனார் கூறும் உயிர்ப்பான கோட்பாடுகள் அல்லவா! பெற்றோரைப் பேணல், நடுவுநிலை திறம்பாமை, பெரியாரைப் போற்றல், நன்றி மறவாமை, தலைவனைக் காத்தல், அஞ்சாமை, ஈகை ஆகிய அரும்பெருங் குணங்களையெல்லாம் பெரிதும் மதித்துப் போற்றிய பெருந்தேவனார் சீர்மை நூற்கண் ஆங்காங்கு மின்னுகின்றன. அவற்றை விரிப்பிற் பெருகும் ஆகலின் ஆங்குக் கண்டு இன்புறுக.

* * *

'வெண்பாவிற் புகழேந்தி' என்று பாராட்டப் பெற்றவர் புகழேந்திப் புலவர். அவர்க்கு நானூறு ஆண்டுகளுக்கு முன்னே வாழ்ந்தவர் பெருந்தேவனார். நீதி நூல்களுக்கு வெண்பாவைப் பயன்படுத்தியதுபோல் காவிய நூல்களுக்குப் பயன்படுத்தியோர் அரியர். அவ்வகையில் நம் கையகத்துக் கிட்டியுள்ள வெண்பாவால் அமைந்த முதல் காவிய நூல் 'பாரதவெண்பா'வே யாகும். அம் முயற்சியில் பெருந்தேவனார் வெற்றி கொண்டாரா இல்லையா என்பதைப் பாரத வெண்பாவைக் கற்பார் முடிவுக்கே விட்டு

விடுதல் சாலும்! புகழேந்தியாரை வெண்பா யாப்பில் பாட ஏவிப் புகழேந்தச் செய்வித்தவரே பெருந்தேவனார் ஆகலாம்!

எச் செய்தியை எவ்வகையால் சொல்லுதல் முறையோ அச் செய்தியை அவ்வகையால் தேர்ந்து சொல்லுதலில் தேர்ந்தவர் பெருந்தேவனார்.

தருமன் தௌமியனை அழைத்து,

"தந்தைக் குரியதுவும் தாளுள; நாளுள
எந்தைக் குரியதொன் றீயுமே—வந்து
புனத்தினைக்கே மான்புகுதும் பொன்வரைசூழ் நாடன்
மனத்தினைக்கண் டாய்வை அறிந்து" [38]

என்று கட்டளையிட்டுத் துரியோதனனிடம் தூதுவிடுக்கின்றான். தூது செல்வான்,

"விடுமாற்றம் வேந்தர்க் குரைப்பான் வடுமாற்றம்
வாய்சோரா வன்க ணவன்" (குறள்-689)

என்னும் குறள்நெறியைப் போற்றுதல் வேண்டும் எனத் தெளிந்த பெருந்தேவனார், தௌமியன் வாக்காகக் கூறுகின்றார்:

"தன்தாதை தன்னுரிமை தாளுள; நாளுள
என்தாதை என்னுரிமை ஈயுமே—முன்றூதில்
வண்டிரங்குந் தாரான் மனமறிந்து மற்றிதனைக்
கண்டுரைத்து வாவென்றான் காண்" [42]

இதற்கு மறுமொழி கூறுகின்றான் துரியோதனன்:

"எந்தைக் குரிய தெனவே; இடுகவற்றால்
தந்தைக் குரியதுமுன் தான்தோற்றான்—முந்தி
வலனுள் நெடுங்கொடிமேல் மாமுரசங் கொண்டான்
இகல்தாயம் என்னோ இனி?" [43]

ஏவினான் உரை, தூதுரை, பதிலுரை இவற்றில் அமைந்துள்ள தொடர்ச்சியும், மீண்டும் மீண்டும் அதே கருத்துக் கூறப்பெற்றும் சுவைகுன்றாமையும், தூதுரைப்பான் கடனுரைக்கும் குறிப்புரையும் அறிந்து மகிழத்தக்கன.

இனித் தருமன் உரையில் துரியோதனனைப் 'புனத்தினைக்கே மான் புகுதும் பொன்வரைசூழ் நாடன்' என்றதும், தௌமியன் உரையில் 'முன் தூதில் வண்டிரங்கும் தாரான்' என்றதும் அடைமொழிகளாய் அமைந்தனவே எனினும் அரிய உள்ளுறைகளை உட்

கொண்டு புலவன் சீரிய புலமை மாண்பைப் புலப்படுத்த வல்லனவாம்.

வித்தியும் காத்தும் விளைத்தவர் இருக்க, அவர் பயன் கொள்ளா வண்ணம் மான் புகுந்து அழிக்கின்றது. மான் மேய்தற்குரிய புற்காடு இல்லாமல் போய்விடவில்லை. இருந்தும் இனைப் பயிரை அழிக்கும் நாட்டை உடையவன் என்பதால், தன் பங்கிருந்தும் எம் பங்கையும் கவர்ந்து கொண்டான் துரியோதனன் என்பதைக் குறிப்பாகக் கூறி, அஃதறமற்ற செயல் என்பதை அடைமொழியால் விளக்குகிறான் தருமன்.

அவன் கூறும் தூதுரையை அணுவும் மாற்றாது உரைக்கும் தௌமியன், அடைமொழியை மட்டும் நயமாக மாற்றிக்கொள்கிறான். இருப்பினும் தருமன் உணர்வை வெளிப்படுத்தா திருத்தலும் தூதன் கடப்பாடு அன்று. ஆதலால்,

> "தொகச் சொல்லித் தூவாத நீக்கி நகச்சொல்லி
> நன்றி பயப்பதாம் தூது" (குறள்-685)

என்னும் தூதிலக்கணத்தை உட்கொண்டு, 'முன் தாதில் வண்டிரங்கும் தாரான் மனமறிந்து...கண்டுரைத்து வா' என்றான் என்கிறான்.

மலர் இருக்கவேண்டிய இடத்தில் இருந்தால் அதன் தேனையே உண்டு வாழும் தேனீ, ஆங்கே இனிதின் மகிழ்ந்து அமையும். அம்மலரைத் தேனுடன் பறித்து அணிந்து கொண்டமையால், அத்தேனை நுகர்தற்கு வந்து, மார்பில் அசைந்து ஆடித் தவழும் மாலையில் உள்ள தேனை நுகர்தற்கு ஆற்றாமல் இரங்கும் நிலைமை வண்டுக்கு நேரிட்டது என்று கூறுவதால் துரியோதனன் செயல், முறையற்றதும் இரக்கமற்றதும் ஆம் என்பதை வெளிப்படுத்துகின்றான்.

இனித், துரியோதனன் தருமனை 'முரசக் கொடியுடையோன்' என்னும் அடைமொழியால் கூறுகின்றான். அந்த அடைமொழியும் வாளா கூறப் பெறவில்லையாம்.

தருமன் அறவோன் என்பதற்கு அடையாளமாகத் திகழ்வது அவன் முரசக்கொடி! தான் அறவோன் என்பதைக் கொடிகட்டிப் பறக்கவிட்டுக் கொண்டிருக்கும் அவன், சூதில் தான் தோற்று விட்ட நாட்டைத் தன் தந்தைக்குரியதென உரிமை பாராட்டிக் கேட்கலாமா? இதுவோ அறநெறி? எனக் குறிப்பாக வினாக் கணைகளைத் தொடுக்கின்றான். இவ்வாறெல்லாம் நயமான

குறிப்புகளை உட்கொண்ட உள்ளுறைகளை ஓடும் ஓட்டத்தில் பாடிச் செல்கிறார் பெருந்தேவனார். அவற்றையெல்லாம் நூலினகத்துக் கண்டு மகிழ்க.

காவிய நிகழ்ச்சி குறித்தோ காவிய உறுப்பினர் குறித்தோ கவிஞன் சில வேளைகளில் தன் கருத்தைத் தன் கருத்தாகவே கூறுவான. அக் கூற்றில் அவனும் காவிய உறுப்பினனாகி விட்டானோ என்று கருதுமாறு தோன்றுவான். ஆயினும், அவன் உறுப்பினன் ஆகாமல் ஒதுங்கியே நிற்கிறான். குறித்த நிகழ்ச்சியைப் பாராட்டியோ பழித்தோ கூறும் பார்வையாளன் நிலைமையிலேயே பங்கு கொள்கின்றான். இலக்கிய உலகம் இதனைக் 'கவிக் கூற்று' என்று பெயர் சூட்டி அழைக்கும். பெருந்தேவனார் ஓர் அரிய கவிக் கூற்றைப் படைத்துள்ளார்.

துரியோதனன் படைத்து வைத்த பொய்க்குழியுள் வீழ்ந்து விண்ணுற வோங்கிய கண்ணனைக் கண்டோர், கலங்கினர்; நடுங்கினர்; கைகூப்பித் தொழுதனர். ஆனால், துரியோதனன் நிலைமை யாதாயிற்று ? இவ்வினாவுக்கு விடை கூறுகின்றார் பெருந்தேவனார் :

"பேர்ந்திலன் ஆசனத்துப் பேசிய பேராண்மை
சோர்ந்திலன்; கையால் தொழுதிலன்;—வாய்ந்த
மதுவொன்று மாலை மணிநீள் முடியான்;
இதுவன்றோ வீரமா மாறு !" [216]

துரியோதனனின் துளங்கா உளமாண்புக்கும் அஞ்சா ஆண்மைக்கும் இவ்வொரு கவிக் கூற்றுக் காட்சி போதுமன்றோ! வீடுமன், துரோணன், கன்னன், அசுவத்தாமன், அருச்சுனன் ஆகியோர் வீரமாண்பை வீடுமன் வாக்காக (470) விளக்கியுரைக்கும் பெருந்தேவனார் துரியோதனன் பேராண்மைகண்டு, 'இதுவன்றோ வீரமா மாறு' என்று வாய்விட்டுக் கூறுகின்றார் என்றால் துரியோதனன் உளத்திண்மையை என்னென்பது! சொல்லழகும் பொருளழகும் சொட்டச்சொட்டப் பாடவல்ல பெருந்தேவனார் அணியழகையும் விட்டு வைத்தாரல்லர்.

வீடுமன்மேல் சிகண்டி அம்பு எய்கின்றான்; அருச்சுனனும் எய்கின்றான். சிகண்டியின் அம்பைக் கையில் பற்றிக்கொண்டு வீடுமன் உரைக்கின்றான் :

"மூங்கி லிடைப்பிறந்த மொய் எரித்தீத் தான்பிறந்த
தூங்கு படரதனைச் சுட்டாற்போல்—வீங்கெழிற்றோள்
என்மகன்அம் பென்னைப் படுக்குமே பாஞ்சாலன்
வன்மகன்அம் பேருதென் மார்பு" [647]

மூங்கிற் காட்டை அம்மூங்கிலில் தோன்றிய தீயே அழிக்கும்! என்னை என் மகன் அம்பே அழிக்கும்; என்னே சீரிய உவமை!

வீமன் பகைவரைச் சவட்டுகின்றான். அக்காட்சியை உருவகிக்கிறார் பெருந்தேவனார். போர்க்களம் அம்மி; தண்டு அம்மிக்குழவி; குருதி நீர்; களிறு அரைபொருள்; போர்ச் செயல் அரைவை!

"காலக் களமென்னும் அம்மிமேல் கைம்மகந்து
கோலத்தண் டென்னும் குழவியால்—மேலிட்
டரைத்தான் களிறெல்லா மாங்குருதி நீரா
விரைத்தானத் தேரோ டெடுத்து". [622]

மச்சவேந்தன் போரில் தன் மக்கள் இருவரையும் இழந்தான்; மயங்கி வீழ்ந்தான்; அஃதாற்றாமல் கதிரோனும் குடகடலில் கொதித்து வீழ்ந்தான். இஃதொரு தற்குறிப்பேற்றம் :

"மக்கள் இருவரையும் மச்சர்கோன் தானிழந்த
துக்க மதுகண்டு சோர்வான்போல்—மிக்க
தடவரைமேல் நின்ற தழற்கதிரோன் மன்னுங்
குடகடல்மேல் வீழ்ந்தான் கொதித்து." [512]

ஒன்பதாம் நாள் போருக்கு வீரர் புறப்படுகின்றனர். எப்படி ?

"வீரர் களிறேற வேந்தர்பொற் றேரேறப்
போர்கெழுமி வெஞ்சிலைநாண் பூட்டேற—வார்முரசம்
ஆர்ப்பேற வேயிளைஞர் அம்பும் அயில்வாளும்
கூர்ப்பேற வேறிஞர் கூர்ந்து." [620]

இது சொற்பொருட் பின்வரு நிலையணி. "மாலென்பதாம்" (3) என்னும் பாடல் சொற் பின்வரு நிலையணி. இவ்வாறே அணிபல திகழும் அழகுக் காட்சியை நூலினகத்துக் கண்டு இன்புறுக.

இவர்தம் சொல்நயங்களும் (91, 189, 197, 320, 387, 415; உரையாடல் நயங்களும் (41, 117, 118, 140) தருக்கத் திறமும் (33—35, 288, 506) எள்ளல் சுவையும் (159, 179, 192, 457) இவை போல்வன நயங்கள் பலவும் கற்பார்க்குக் கழிபெரு விருந்தாவன.

இன்னுங்கு (303) ஈண்டன், (58) கட்டாண்மை (57) முதலிய சொற்களைப் பல விடங்களில் பயன் படுத்துகின்றார். 'ஈண்டன்' என்பதும் 'கதும்' என்பதும் உரைநடையிற் பெருவரவிற்றாயுள. 'சாதாரணம்' என்னும் சொல்லையும் பயன்படுத்தியுள்ளார். (109) கழுத்தை மறைத்துத் துகில் அணிதல் (296) கையைப்பிடித்து உறுதிமொழிதல் (19) போரில் புறக்கவ்வுதல் (616) முதலிய வழக்கங்களைக் குறிக்கின்றார்.

அக்குரோணிக் கணக்கு (391, 399), பாண்டவர் வேண்டிய ஐந்தூர்ப் பெயர் (123), துரியோதனன் உடன்பிறந்தார்களுள் பெரும்பாலார் பெயர், (391) துணைக்கு வந்த அரசர் பட்டியல் (391, 396) முதலியவற்றை ஆங்காங்கு அறிகின்றோம். இவை பெரிதும் உரைநடையைச் சேர்ந்தவை.

பெருந்தேவனார் காலமுத்திரையும் சில இடங்களில் படிந்துள. [1]'பல்லவர்' முதலாய வேந்தரும் பாரதப் போருக்குத் துணை சென்றனர் ஆவரா? பல்லவர் காலம் எங்கே—பாரதப்போர்க் காலம் எங்கே? (பாடல் எண். 773)

'பெண்ணிற் பெருந்தக்க யாவுள? என வினவிப் 'பெண்ணிற் பெருந்தக்க தில்' என விடையருளியது வள்ளுவம். அதன் உரையிலேயே 'பெண்ணியல்பால் தானாக அறியாமையின் 'கேட்ட தாய்' எனவுங் கூறினார் (69) என்று 'காலகிலே' பதிந்து விட்டபோது, பெருந்தேவனார் வாக்கில் இடம் பெற்றதில் வியப்பில்லை!

கண்ணன் தூதுக்குச் செல்கின்றான்; அவனிடம் தன் கூந்தலை முடித்தற்கு வகைகாட்டுமாறு பாஞ்சாலி வேண்டுகின்றாள். அப்பொழுது தருமன் கூறுகிறான்:

"பெண்டுகளும் பிள்ளைகளும் பித்தர்களும் என்னறிவார்?" பெருந்தேவனார் என் செய்வார்? காலக்கோளாறு அது!

"தொன்மை தானே
உரையொடு புணர்ந்த பழமை மேற்றே"

—தொல். செய். 215

---

1. "இவர் பாரதப் போரில் பல்லவர் போரிட்டனர் எனக் கூறுதல் நகைப்பைத் தருகிறது, பல்லவர்மட்டும் இல்லை; குந்தளர் (கதம்பர்) சாளுக்கியர், கொங்கணர், கங்கர் முதலிய தம் கால அரசரையும் பாரதப்போரில் இழுத்துவிட்டனர்" பல்லவர் வரலாறு பக். 327.

என்பதன் உரைக்கண், "தொன்மை என்பது உரை விராஅய்ப் பழமையவாகிய கதைப் பொருளவாகச் செய்யப்படுவ தென்றவாறு அவை பெருந்தேவனாராற் பாடப்பட்ட பாரதமும், தகடூர் யாத்திரையும் போல்வன" என்று பேராசிரியர் குறித்துள்ளார். உரையிடை யிட்ட பாட்டுடைச் செய்யுளாக உரைசால் அடிகள் அருளிய சிலப்பதிகாரம் மலை விளக்கெனத் திகழ்கின்றது. பெருந்தேவனார் காலத்தில் கங்கநாட்டில் பாட்டும் உரையும் கலந்து கதை நூல்கள் இயற்றப் பெற்றன என்றும், அவை 'சம்பு' என அழைக்கப்பெற்றன என்றும் வரலாறு தெரிவிக்கின்றது (பல்லவர் வரலாறு பக். 396—7) இவ்வகையில் பாரத வெண்பா உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுளாக அமைகின்றது. ஆனால், அதன் உரைநடை பெருந்தேவனாரால் செய்யப் பெற்றது தானா என்னும் ஐயத்தை ஒவ்வோர் உரைநடைப் பகுதியும் எழுப்பிக் கொண்டே இருக்கின்றது.

'பாரத வெண்பா', வின் உரைநடை பற்றிச் சிறிது கருத்துச் செலுத்துவோம்.

"இப் பாரதப் பாட்டுக்கள் எல்லாம், தெள்ளிய இனிய தமிழ்ச் சொற்களால் அமைந்து, படிக்குந்தோறும் இன்பம் பயப்பனவாய் இருக்கின்றன. அவற்றை அறிவாளிகள் படித்தறிந்து பயன் துய்ப்பர். பாட்டுக்களின் இடை இடையே காணப்படும் வசனங்கள் கதைத்தொடர்ச்சிக்கு இன்றியமையாதனவாய் இருத்தலின் இப்பாரதத்தை, 'உரையிடை யிட்ட பாட்டுடைச் செய்யுள்' என ஆன்றோர் வழங்கி வருகின்றனர். ஆயினும், இதன்கணுள்ள வசனபாகம் செய்யுட் பாகத்தைப் போலன்றி வடமொழிப் பதங்களும் தொடர்களும் விரவின நடையில் அமைந்து கிடத்தலின், 'பாட்டுக்களெல்லாம் பழைய பாட்டுக்களே; வசன மட்டும் பிற்காலத்துப் புலவரொருவர் எழுதிச் சேர்த்தது' எனவும் மற்றும் பலவிதமாகவும் கூற இடந்தருகின்றது.

"பாட்டுக்கள் பழையன வாயின் இம்முகவுரையின் பின்னே காட்டப்பட்டிருக்கும் பழைய மேற்கோட் பாட்டுக்களிலே முதலிலுள்ள [1]'கங்கை சிறுவனும்' என்பது முதலிய சில, இப்பொழுது கிடைத்திருக்கிற பருவங்களில் அடங்கியிருத்தல் வேண்டும். அங்ஙனம் இன்மையின் இப்பாரதம் வேறு எனக் கொள்ளுதலே பொருத்தமாகின்றது. அக்காலத்துப் புலவர்கள் வடமொழி தென்மொழி என்னும் இரண்டிலும் வல்லவராய் இருந்ததனாலே பாட்டுக்களை நல்ல தமிழிலும் வசனத்தை மணிப்பிரவாள நடையிலும் இயற்றியிருத்தல் கூடும். அங்ஙனமே இப்பாரதம்

1. பின்னிணைப்பு 1. பாட்டு. 11.

ஒரு புலவரால் இயற்றப்பெற்றதென்று கொள்ளுதல் குற்ற மாகாது'' என முதற்கண் இந்நூலைப் பதிப்பித்த பண்டித அ. கோபாலையர் அவர்கள் முன்னுரையில் குறித்துள்ளார்கள்.

அவர்கள் கூறியவாறு, 'கங்கை சிறுவனும்' என்பது முதலிய சில பாடல்கள் இப்பகுதியுள் அடங்கத் தக்கனவே; ஆயினும், இந்நூலுள் இடம் பெற்றிலாமையால் பழைய உரை யாசிரியர்களால் காட்டப்பெறும் பாடல்கள் வேறொரு பாரத நூலைச் சார்ந்தனவாக இருத்தல் வேண்டும் என்று கருதுவது ஏற்கத் தக்கதே. ஆயினும், பெருந்தேவனார் பாரதம் 620 ஆம் பாடலான "வீரர் களிறேற" என்பது வீரசோழியம் 150 ஆம் காரிகை மேற்கோளாகவும், பெருந்தேவனார் பாரதம் 165 ஆம் பாடலான 'ஒருவரகத்தொருவர்' என்பது புறத்திரட்டு 770 ஆம் பாடலாகவும் இடம்பெற்றிருப்பது நோக்கத் தக்கது.

உரைநடை பற்றி அவர்கள் கூறிய கருத்து ஆராயத் தக்கதே யாம்.

உரைநடை, பாடல் நடையொடு தமிழ்நடை யுடையதாய் இல்லை என்பதை நன்கனம் குறித்துள்ளார்கள். இப் பாடலும் உரைநடையும் ஒருவரால் யாக்கப் பெற்றனவாகக் கருத இயல வில்லை என்பதற்குச் சில சான்றுகள் காணலாம் :

ஒரு பாடலில் வந்துள்ள தமிழ்ச் சொற்களும், அதே பாடல் உரைநடையில் வந்துள்ள வடசொற்களும் வருமாறு :

பாடல் எண்	தமிழ்ச்சொல்	வடசொல்
5.	ஆண்டு	—சம்வற்சரம்
9.	மன்னன், வேந்தன்	—ராசன்
18.	தவம்	— தபசு
29.	பார்வேந்தர் மன்னர் படை	—பராராஷ்ட்ரத்து க்ஷத்திரியர்
33.	முடிக்குரியான் தோன்றல்	—ஜ்யேஷ்டனாயினான் மகன்
34.	ஒருபால் கோடி	—பக்ஷபாதித்து
36.	துவரை	—ஸ்ரீமத்துவாரகாபதி
37.	செருவிளைத்துப் பார் கொள்ளல்	—யுத்தம் பண்ணி யாகிலும் பூமிபரிக்கிரகிக்கவேண்டும்.
40.	நாடுறையும் நாள் நண்ணிய	—விவஸ்தைநாள் சமாத்தி யாயிற்று.

கீழ்வரும் இரண்டு வெண்பாக்களையும் அவற்றின் உரைநடைகளையும் காண்க.

44. "காடுறைந்த பின்னைக் கரந்துறைந்தால் உங்கட்கு
நாடுதரு வேனென்ற நாப்புரண்டாற்—கோடுதியே
கொள்ளா துலகம் குயகாள் திருநம்மை
நல்கார் பெருந்தக்கோர் நன்கு.

எ - து. பன்னிரண்டு சம்வற்சரம் காடுறைந்து ஓராண்டு கரந்துறைந்து பின்பு வந்து உங்கள் இராச்சியங் கொள்ளக் கடவீரென்று விவஸ்தை செய்த நாண்முதல், தருமபுத்திரன் தம்பிமாரோடும்போய்ப் பலகாலம் காயக் கிலேசப்பட்டு வந்து தம்முரிமை வேண்டக் கொடாயாகில் உனக்கும் உன் மித்திர பாந்தவத்தார்க்கும் மரணமே நிச்சயங் கண்டாய் என்று விதுரன் சொல்லக் கேட்டும் உடன்படாதிருந்த துரியோதனனையும், திருதராஷ்டிரனையும் முகநோக்கி யாது சொன்னான் விதுரன் :

45. அன்றுன் சிறுவன் துணிந்தனவும் அவ்வவனே
இன்றேன் சொற் கேளாத ஏழைமையும்—நன்றேன்றே
ஞாலக்கோ ளாயுள்ள நல்வேந்தர் எல்லோர்க்குங்
காலக்கோ ளாகக் கருது.

எ - து துரியோதனன் முன்னம் துச்சாதனனை விடுத்துத் துரோபதியைக் கேசக்கிரகணஞ் செய்த ஞான்று தரும புத்திரன் க்ஷமித்ததனை எதுவென்று கருதுகின்றீர்? அவர்க்கு இராச்சியங் கொடுத்து அகற்றுவீராகில் அன்று நீர் செய்த அநாசாரமெல்லாம் ஆசாரமாங் கண்டீர் என்று விதுரன் சொல்லக் கேட்டும் உடன்படாதிருந்த திருதராஷ்டிரனையும் துரியோதனனையும் முகநோக்கி யாது சொன்னான் ஸ்ரீ பீஷ்மன் :"

பாரதப் போர்க்குப் படைத்துணை வந்தவர்களாகப் பலரைப் பாடல் குறிக்கிறது. அது குறிக்காத 'துருக்கரை' உரைநடை மட்டுமே இரண்டு இடங்களில் (391, 396) குறிக்கின்றது 'துருக்கர்' ஒன்பதாம் நூற்றாண்டளவில் இங்கு அறியப் பெற்றிருந்தனரா? அவர்கள் வருகை பன்னிரண்டாம் நூற்றாண்டென வரலாற்றுலகம் கூறும். அவ்வாறாயின் ஒன்பதாம் நூற்றாண்டுப் பெருந்தேவனாரே உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுளாக யாத்திருப்பின் 'துருக்கர்' இடம் பெற்றிருக்க இயலுமா? உரை நடை பின்னர் ஒருவரால் எழுதப் பெற்றதே என்க.

வடசொல் விரவிய - மணிப்பவழ நடை என்று கூறத்தக்க - உரைநடையே இஃது எனினும், பொருட் பொலிவு உடையது; சில இடங்களில் எதுகை மோனை நயங்களுடன் கூடியது; கதைத் தொடர்ச்சிக்கு இன்றியமையாதது; பாடலில் கிட்டாத அரிய பல செய்திகளை உள்ளடக்கி ஒருசீராகச் செல்வது; பாரதக் கதையில் ஊன்றிய புலமையும் உள்ளன்பும் மிக்க ஒருவரால் எழுதப் பெற்றது. அவர் தம் உரைநடைப் பகுதி இல்லையேல் பலவிடங் களில் கதைத் தொடர்ச்சியைக் காண்பது அரிது என்பது ஒருதலை.

இப்பதிப்பில் வடசொற்களைக் களைந்து அவ்விடங்களுக் கேற்ற தமிழ்ச் சொற்களைப் பெய்துள்ளமை ஒன்றே பழைய உரைநடைப் பகுதியில் செய்துள்ள மாற்றமாம். அதன் கருத்துக்களையோ, நடைப்போக்கையோ, அமைப்பையோ எவ்வகையாலும் சிதைத்துவிடவில்லை. ஆழ்வார் திருப்பாடல் களுக்கு 'மணிப்பவழ' நடையில் அமைந்த பேருரைகள், தமிழுருத் தாங்கி உலா வருகின்றதல்லவா! அது போல்வது என்று இலக்கிய உலகம் ஏற்குமாக!

தமிழ் மொழியில் உள்ள பாரத நூல்களுள் 'வில்லி பாரதமே' பட்டொளி வீசிப் பரந்து கொண்டிருக்கிறது. அந்நூல் பெருந் தேவனார் பாரதத்திற்கு ஐந்து நூற்றாண்டுகளுக்குப் பிற்பட்டது. அதன் அமைப்பு, கதைப்போக்கு ஆகியவை பெரும்பாலும் பெருந் தேவனார் பாரதம் போல்வதே. வடமொழி வியாச பாரதத்தை அடியாகக்கொண்டு பிறந்த நூல்கள் அவ்விரண்டுமே ஆதலின் பெருத்த மாற்றங்கள் பெற்றில. ஆயினும் குறிப்பிடத்தக்க சில மாற்றங்கள் உள. அவற்றைக் காண்போம் :

பெருந்தேவனார் பாரதம்	வில்லிபாரதம்
கிடைத்துள்ள பாடல்கள் 830	இக்கதைப் பகுதியில் அமைந்துள்ள பாடல்கள் 1046.
துரியோதனனிடம் முதற்கண் தூது செல்பவன் தௌமியன்	—உலூகன்.
திருதராட்டிரன் ஏவலைமேற்கொண்டு கண்ணனைப் படைத்துணை அழைக்கத் துரியோதனன் செல்லுதல்	—தானே செல்லுதல்.

பெருந்தேவனார் பாரதம்	வில்லிபாரதம்
படைத்துணை அழைக்கச் சென்ற அருச்சுனன் நோக்காலும் துரியோதனன் வாக்காலும் படைத் துணை வேண்டுதல்	—இருவரும் ஒரே வேளையில் கூறுதல்.
வாசுதேவன் தூது	—கிருட்டிணன் தூது சருக்கம்.
———	பாரதப்போர் வாரா திருக்க வழி என்ன எனச் சகாதேவனிடம் கண்ணன் வினவுதல்.
ஆயிரக்கால் மண்டபத்திலுள்ள தூண்களுள் மறைந்து, தன் ஆற்றல் படிந்த தூணைக் காட்டுமாறு சகாதேவனைக் கண்ணன் வினவுதல்	தன்னைக் கட்டுமாறு —கண்ணன் கூறுதல்.
———	கண்ணன் துரியோதனனிடம் தூது போவதைச் சாத்தகி கடிந்துரைத்தல்.
துரியோதனன், துச்சாதனன், கன்னன் சகுனி ஆகியோர் நள்ளிரவில் கண்ணனைப் படுகுழியில் வீழ்த்துதற்கு எண்ணுதல்	இவர்களுடன் திருதராட்டிரனும் விகனனனும் உடனிருத்தல்.
———	திருதராட்டிரன், கண்ணனைப் போரிட்டுக் கொல்லவும், துச்சாதனன், விதுரன் வீட்டைத் தீயிட்டுக் கொல்லவும், கன்னன், வில்வலியால் கொல்லவும், சகுனி, ஆழ்குழிதோண்டி வீழ்த்தி அழிக்கவும், கூறுதல். விகன்னன்,

பெருந்தேவனார் பாரதம்	வில்லிபாரதம்
	சூழ்ச்சியைக் கடிந் துரைத்தல்.
கண்ணனை மறுநாள் அவைக்கு அழைக்க வந்தவன் சஞ்சயன்	—ஒரு தூதன்.
கண்ணன் பேருருக் கொண்டதைத் தன் கண்களால் காண அருளுமாறு திருதராட்டிரன் வேண்டுதல்; அக் காட்சியைக் கண்ட கண் வேறொன்றையும் காணாதவாறு மீண்டும் ஒளியை வாங்கிக் கொள்ள வேண்டுதல்.	———
கண்ணன் இந்திரனைக் கன்னன் கவச குண்டலங்களை வாங்குதற்கு ஒருமுறையும், கைச்செம்மணியை வாங்குதற்கு மற்றொருமுறையும் அனுப்புதல்.	கவசகுண்டலங்களை வாங்கிவர ஒரே முறை அனுப்புதல்.
கவசகுண்டலங்களை இந்திரன் அறுத்து எடுத்துக் கொள்ளுமாறு கன்னன் கூற அவ்வாறே செய்தல்.	கன்னன் எடுத்துத் தருதல்.
கைம்மணி பெற்றபின் இந்திரன் கன்னனுக்கு வேல் அருள அதனை மறுத்துப் பின்னர்க் கொள்ளுதல்.	கவச குண்டலங்களைத் தந்தபின் இந்திரன் வேல் உதவ மருது கொள்ளுதல்.
வாசுதேவன் தூதுக்குப் பின்னே சஞ்சயன் தூது.	—கிருட்டிணன் தூதுக்கு முன்னே சஞ்சயன் தூது.
படைத்திரட்சி	—படை எழுச்சிச் சருக்கம்.
களப்பலி	முகூர்த்தம் கேள்விச் சருக்கம். களப்பலியூட்டுச் சருக்கம்
சகாதேவனிடம் நாள்கணிக்கத் துரியோதனன், விசுவகன்மாவின் வானவூர்தியில் செல்லல்.	—அன்ன ஊர்தி ஒன்றில் செல்லல்.

பெருந்தேவனார் பாரதம்	வில்லிபாரதம்
பத்தாம் நாட்போர் இறுதியில் வீழ்ந்த வீடுமன் தன் தலைக்கும் அணை வழங்குமாறு துரியோதனனை வேண்ட, அவன் பஞ்சணை உதவ, அதை மறுத்து அருச்சுனனிடம் அணை கேட்க, அவன் அம்பணை வழங்குதல்.	—வீடுமன் தன் தலையைத் தாங்க அருச்சுனனிடம் அம்பணை வேண்டல்.
அம்பணையில் கிடந்த வீடுமனை வியாதன் கண்டு உரையாடல்.	———

* * *

பல்லாண்டுகளுக்கு முன்னே, சென்னைப் பல்கலைக் கழகத்தார் உயர்பள்ளி இறுதித் தேர்வுக்குப் பாரத வெண்பாவில் நூறு நூறு பாக்களை ஆண்டு தோறும் பாடமாக வைத்து வந்தனர். அப்பாடத் திட்டத்திற்கு ஏற்ப அப்பகுதிகளைக் கோமளபுரம் இராசகோபாலபிள்ளை அவர்களும், தி. ஈ. சீனிவாச ராகவாச்சாரியார் அவர்களும், க. சுப்பராயச் செட்டியார் அவர்களும், சென்னைப் பல்கலைக் கழகத்தினரும் வெளியிட்டு வந்தனர். 1925 ஆம் ஆண்டில், தமக்குக் கிடைத்த அச்சுப்படி கையெழுத்துப் படிகளையெல்லாம் ஒப்பிட்டு ஆராய்ந்து ஒழுங்கு செய்து செவ்வையான பதிப்பாக மதுரைத் தமிழ்ச் சங்கத்து முதன் மாணவரும், சென்னை அடையாற்று நே. தி. கல்லூரித் தமிழாசிரியரும் ஆகிய **பண்டித அ. கோபாலையர் அவர்கள்** வெளியிட்டார்கள்.

டாக்டர் எஃச். கிருட்டிணசாமி ஐயங்கார் அவர்களின் ஆங்கில முன்னுரையுடன் கூடிய அந்நூலை, மதுரைத் தமிழ்ச் சங்கம் நிறுவிய வள்ளல் பொ. பாண்டித்துரைத் தேவரவர்களுக்கு உரிமைப் படுத்தியும், தாம் தமிழ்ச்சங்கத்தில் சேர்ந்து கற்றுத் தமிழ்ப்பணி புரிய உதவிய டாக்டர் உ. வே. சாமிநாதையர் அவர்கள் அன்புடைமைக்கு நன்றியுரைத்தும், பொருளடக்கம் பழைய பாரதப் பாடல்கள் ஆகியவற்றை எழுதி இணைத்தும் வெளியிட்டுள்ளார்கள். அவர்கள் செய்துள்ள அரிய தமிழ்ப் பணிக்கு நெஞ்சார்ந்த நன்றி செலுத்தக் கடப்பாடுடையோம்.

திரு. கோபாலையர் அவர்கள் பதிப்புக்கு நூற்படிகள் உதவிய பெருமக்கள் பலர்.

1\. சென்னைப் பச்சையப்பன் கலாசாலைத் தமிழாசிரியர் திரு. ஆ. சிங்காரவேலு முதலியார் அவர்கள்.

2. மயிலாப்பூர் தூயபேதுரு உயர்பள்ளித் தமிழாசிரியர்
திரு. சே. சோமசுந்தரம் பிள்ளை அவர்கள்.

3. திருவல்லிக்கேணி வித்துவான் திரு. உ. வே. சா.
கிருட்டிணமாச்சாரியார் அவர்கள்.

4. சென்னை மேரிராணியார் கல்லூரித் தமிழாசிரியர்
திரு. கா. நமச்சிவாய முதலியார் அவர்கள்.

5. சென்னைக் கோமளேசுவரன் பேட்டை இலக்கண இலக்கிய
வேதாந்த தருக்க வித்துவான் திரு. கோ. வடிவேலு
செட்டியார் அவர்கள்.

6. சென்னை 'லெக்சிகன்' குழு முதன்மைப் புலவர்
திரு. உ. வே. மு. இராகவ ஐயங்கார் அவர்கள்.

7. சென்னைக் கலாரத்நாகரம் அச்சுக் கூடத்தலைவர்
திரு. ஊ. கனகசபாபதி செட்டியார் அவர்கள்.

8. சென்னைப் புத்தகப் பதிவு சாலைத் தலைவரவர்கள்.

தம் கையில் இருந்த ஏடுகளைக் காலத்தால் உதவிய இப்பெரு மக்கள் நன்றியோடு நினைக்கத் தக்கவர்கள் ஆவர்.

எமது, இப்பதிப்பில் பாடல்களுக்குக் குறிப்புரையும் இன்றி யமையா இடங்களில் விளக்க வுரையும் எழுதிச் சேர்க்கப் பெற் றுள்ளன; உரைநடையில் விரவிக் கிடந்த வடசொற்களை விலக்கித் தமிழ்ச் சொற்களைப் பெய்து தனித்தமிழ் நடையாக்கப் பெற் றுள்ளது; பெருந்தேவனார், அவர் காலம் ஆகியன பற்றிய ஆராய்ச்சி மேற்கொள்ளப் பெற்றுள்ளன; பாரத வெண்பாக்களின் நயம், ஆசிரியர் உள்ளம், வில்லிபாரதத்திற்கும் பாரத வெண்பா விற்கும் உள்ள வேற்றுமை ஆகியவை ஆராயப் பெற்றுள்ளன. பெருந்தேவனார் எனனும் பெயருடன் விளங்கிய புலவர்களின் பாடல்கள் திரட்டி இணைக்கப்பெற்றுள்ளன; அவ்வாறே பாரதக் கதைத் தொடர்பான பழம்பாடல்கள் திரட்டி இணைக்கப் பெற் றுள்ளன; அச்சும் கட்டும் கவினுறச் செய்யப் பெற்றுள்ளன; இவை யனைத்தும் ஆர்வலர்க்கும் ஆராய்ச்சியாளர்க்கும் மகிழ் வூட்டுவனவாம்.

அல்லும் பகலும் அருந்தமிழ்த் தொண்டிலேயே செல்லும் வண்ணம் உள்ளார்ந்த அன்பால் ஊக்கியும் உதவியும் தண்டமிழால் எனனை ஆட்கொண்டு வரும் பெரியார், சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழக ஆட்சியாளர் தாமரைச் செல்வர் திருமிகு. வ. சுப்பையாபிள்ளை அவர்கள் ஆவர். தமிழுக்கு ஆக்கந் தரும் நூல்கள் தடையின்றி எங்கும் கிடைக்கும் வண்ணம் தேடித் தேடித் தேர்ந்து தேர்ந்து வெளியிட்டுவரும் அவர்கள்

ஆர்வமும் அசையா ஊற்றமுமே இத்தகு நூல்கள் எழிலோடு வெளிவந்துலவச் செய்கின்றன. அவர்கட்கும், சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தினர்க்கும் நெஞ்சார்ந்த நன்றி யுடையேன்.

'ஒரு புதிய வெளியீட்டில் ஓராயிரம் படிகளேனும் உடனே விலையாகிவிடும்' என்னும் ஒரு நிலையைத் தமிழகத்தில் தோற்று வித்தால்தான் புதிய படைப்புகள் வெளிவரமுடியும்; பழைய நூல்களின் மறு பதிப்புகளும் தலை காட்ட முடியும். இவ்வகையில் தமிழ் ஆர்வலர் அனைவரும் கருத்துச் செலுத்துதலும தத்தம் இல்லங்களில் நூலகந் தோற்றுவித்தலும் இன்றியமையாக் கடமைகளாம். தமிழ் வாழ்க!

"புத்தகம் ஏற்றுப் பொலிவதே புத்தகம்;
பித்தகம் ஆகும் பிற."

அருளகம்
28-12-'72

தமிழ்த்தொண்டன்,
இரா. இளங்குமரன்

பெருந்தேவனார் வரலாறு

1. சங்கச் சான்றோருள் பெருந்தேவனார் என்பார் ஒருவர் காணப் பெறுகின்றார். அவர் நற்றிணை 83 ஆம் பாடலையும் அகம் 51 ஆம் பாடலையும் பாடியுள்ளார்.

2. இப் பெருந்தேவனாரை அன்றி வேறொரு பெருந்தேவனாரும் சங்கச் சான்றோர் வரிசையுள் காணப்பெறுகின்றார். அவரை முன்னவரினின்று வேறு பிரித்தறியும் வண்ணம் 'கடுகு பெருந்தேவனார்' என வழங்கினர். அவர் பாடிய பாடல் குறுந்தொகை 255 ஆகும். அகம் 51 ஆம் பாடலைப் பாடிய 'பெருந்தேவ'னார்க்குப் பாட வேறுபாடாகக் 'கடுகு பெருந்தேவனார்' என்னும் பெயரும் உள்ளது.

3. அகநானூறு, ஐங்குறு நூறு, குறுந்தொகை, நற்றிணை, புறநானூறு ஆகிய தொகை நூல்களின் கடவுள் வாழ்த்துச் செய்யுள்களைப் பாடியவரும் ஒரு பெருந்தேவனாரே. அவர் பிறரினின்றும் வேறானவர் என்பதறிய அவர் இயற்றிய நூற்பெயரை அடைமொழியாக்கிப் 'பாரதம் பாடிய பெருந்தேவனார்' என்று அழைக்கப்பெற்றார். அவர் பெயரால் திருவள்ளுவ மாலையில் ஒரு வெண்பாவும் (30), இன்னிலை என்னும் நூலில் கடவுள் வாழ்த்தாக ஓர் அகவலும் காட்டப் பெறுகின்றன.

4. இனித் திருவள்ளுவமாலையில் வரும் 'பூவிற்குத் தாமரையே' (36) என்னும் வெண்பாவைப் பாடியவர் பெயரும் பெருந்தேவனார் என்பதே. அவர் 'கவிசாகரப் பெருந்தேவனார்' எனக் குறிக்கப் பெற்றுள்ளார்.

ஆசிரியர் நச்சினார்க்கினியர் தொல்காப்பியப் பொருளதிகார உரைக்கண் பாரதப் பாடல்கள் சிலவற்றை எடுத்துக் காட்டி யுள்ளார். அவை அகவல், வெண்பா என்னும் இருதிறத்தனவாம். 'இப் பாரதப்பாட்டு' என்றே பலவிடங்களிலும் சுட்டிச் செல்லும் அவர், தொல். புறத். 17 இல் 'கங்கை சிறுவனும்' என்னும் பாடலைக் காட்டி 'இது பெருந்தேவனார் பாட்டு; குருக்கள் தமக்குப் படைத்தலைவரை வகுத்தது' என்று குறிப்பெழுதியுள்ளார். இவர் காட்டும் பாக்களுள் எதுவும் பாரத வெண்பாவில் இடம் பெறவில்லை. இப்பாடல்கள் தொகை நூல்களுக்குக் கடவுள் வாழ்த்துப் பாடிய பாரதம் பாடிய பெருந்தேவனார் பாடல்களாக இருக்கலாம்.

5. பழைமையான தமிழ்ப் பாரதநூல் கால வெள்ளத்துள் சால மூழ்கிற்றாக, மற்றொரு பாரத நூல் தோன்றியது. அதனை இயற்றியவர் பெயரும் பெருந்தேவனார் ஆகலின், அவரும் 'பாரதம் பாடிய பெருந்தேவனார்' என்றே அழைக்கப் பெற்றார். ஆனால், முன்னவர் நூல் 'பாரதம்' என்று அழைக்கப் பெற, பின்னவர் நூல் 'பாரத வெண்பா' என்று அழைக்கப் பெற்றது. ஆக இவர் பாரதம் பாடிய பெருந்தேவனாருள் இரண்டாமவர் ஆவர்.

6. இனிப், பொன்பற்றி காவலர் புத்த மித்திரனார் இயற்றிய வீரசோழியத்திற்கு உரை கண்டவரும் பெருந்தேவனார் என்னும் பெயர் உடையவரே. அதனைத்,

"தடமார் தருபொழில் பொன்பற்றி காவலன் தான்மொழிந்த
படிவீர சோழியக் காரிகை நூற்றெண் பஃதொடொன்றின்
திடமார் பொழிப்புரை யைப்பெருந் தேவன் செகம்பழிச்சக்
கடனாக வேநவின் றான்தமிழ் காதலில் கற்பவர்க்கே"

என்னும் 'அந்தச் சிறப்பு'க் காரிகையால் அறியலாம்.

இப் பெருந்தேவனார் அறுவருள் ஐந்தாமவராக விளங்கும், பாரத வெண்பாப் பாடிய பெருந்தேவனாரே இவண் ஆராய்ச்சிக்கு மேற்கொள்ளப் பெற்றவராவர்.

சடையப்பர் கம்பரைப் புரந்து புகழ் கொண்டது போலவும், சந்திரன் சுவர்க்கி புகழேந்தியாரைப் புரந்து புகழேந்தியது போலவும், வக்கபாகை வரபதியாட் கொண்டான் வில்லியாரைப் புரந்து புகழ் ஆட் கொண்டது போலவும், தெள்ளாறு எறிந்த நந்திவர்மன் பெருந்தேவனாரைப் புரந்து பெரும் புகழ் கொண்டான். அப்புகழ்ச்சியால் புரவலன் புகழேயன்றித் தம் காலத்தையும் தகவுற அறிந்து கொள்ளும் வாய்ப்பை நமக்கு நல்கியுள்ளார் பெருந்தேவனார். செய்ந்நன்றி மறவாச் சீர்மை எத்தகைய எதிர் பாராத நலங்களை யெல்லாம் எளிதாகச் செய்து விடுகின்றது!

"வண்மையால் கல்வியால் மாபலத்தால் ஆள்வினையால்
உண்மையால் பாரான் உரிமையால்—திண்மையால்
தேர்வேந்தர் வானேறத் தெள்ளாற்றில் வென்றானோ(டு)
யார்வேந்தர் ஏற்பார் எதிர்" (4)

என்று புரவலர் புகழாகப் பாராட்டி மகிழ்கிறார் பாரதம் பாடிய பெருந்தேவனார்.

தெள்ளாற்றில் வென்றான் யாவன்? வரலாற்று உலகம் வளமாக அறிந்த செய்தி இது. தெள்ளாற்றில் நிகழ்ந்த போரில் வெற்றி கொண்டு 'தெள்ளாறு எறிந்த நந்தி வர்மன்' என்று விளங்கிய வேந்தன் மூன்றாம் நந்திவர்மன் என்பது வெளிப்படை.

தெள்ளாறு என்பது வடார்க்காட்டுக் கோட்டம் வந்தவாசி வட்டத்தில் உள்ள ஓர் ஊர். அவ்வூர்க்கண், தன்னை எதிரிட்ட பகைவர்களை அலறத் தாக்கி ஆடல் கொண்டான் நந்தி. அவனது தெள்ளாற்று வென்றியை அவனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்ட நந்திக் கலம்பகம் பயிலக் கூறுகின்றது. 27, 33, 40, 42, 53, 56, 57, 64, 68, 75, 79, 85, 90, 91 ஆகிய பாடல்களைக் காண்க.

பாரத வெண்பா இயற்றிய பெருந்தேவனாரைப் புரந்தவன் தெள்ளாறு எறிந்த நந்திவர்மன் ஆகலின் அவன் காலமே பெருந்தேவனார் காலமுமாம். அவன் காலத்தை கி. பி. 825-850 என்று ஆராய்ச்சியாளர் அறுதியிட்டுள்ளனர். ஆதலால், பெருந்தேவனார் ஒன்பதாம் நூற்றாண்டின் முற்பகுதி இடைப் பகுதிகளில் வாழ்ந்தவர் என்று கருதலாம்.

நந்திவர்மனின் பட்டயங்களுள் ஒன்று வேலூர்ப் பாளைய பட்டயமாகும். அதில் பொன்னேரிக் கூற்றம் திருக்காட்டுப் பள்ளிச் சிவன் கோயிலுக்கு ஓர் ஊரைத் தானமாக விடுத்த செய்தி கூறப்பெற்றுள்ளது. அப் பட்டயம் இவன் ஆட்சியின் ஆறாம் ஆண்டில் விடப்பெற்றதாகும். அதில் இவன் தெள்ளாறு எறிந்த செய்தி கூறப் பெறவில்லை. ஆனால், இவன் ஆட்சியின் பத்தாம் ஆண்டில் வெளியிடப் பெற்ற திருநெய்த்தானக் கல்வெட்டு இவனது தெள்ளாற்றுப் போர் வெற்றிச் செய்தியைக் குறிக்கின்றது. அன்றியும் அதற்குப் பின்னர்த் தோன்றிய செந்தலை, திருவல்லம், திருச்சன்னம் பூண்டி, திருப்பராய்த்துறை, குடிமல்லம் கல்வெட்டுக்கள் இவன் தெள்ளாறெறிந்த செய்தியைத் தவறாது தெரிவிக்கின்றன. ஆதலால், இவன் ஆட்சியின் ஆறாம் ஆண்டுக்கும் பத்தாம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில் தான் தெள்ளாற்றுப் போர் நிகழ்ந்திருக்க வேண்டும். அதற்குப் பின்னரே நந்திவர்மன் 'தெள்ளாறு எறிந்த நந்திவர்மன்' என்னும் புகழ்ப் பெயர் எய்தியிருக்கக் கூடும். இதனால் இவன் தெள்ளாற்று வெற்றிக்குப் பின்னரே பெருந்தேவனார் 'பாரத வெண்பா' இயற்றினார் என்பது தெள்ளிதின் விளங்குவதாம்.

நந்தி புலவர்களைப் போற்றிப் புரந்தான் என்பது,

"நந்தி, தடங்கைப்பூ பாலன்மேல் தண்கோவை பாடி
அடங்கப்பூ பாலரா னார்" (96)

"பைந்தமிழை ஆய்கின்ற கோன் நந்தி" (108)

"தண்ணுலா மாலைத் தமிழ்நந்தி" (111)

என்னும் நந்திக் கலம்பகத் தொடர்களால் நன்கு அறியக் கிடக்கின்றது.

"சிவனை முழுதும் மறவாத சிந்தையான்" (நந்திக்கலம்பகம். 101) ஆகிய நந்திவர்மன்,

"தேனேங்கு சோலைத் திருவேங் கடமென்றும்
வானோங்கு சோலை மலையென்றும்—தானோங்கு
தென்னரங்க மென்றும் திருவத்தி யூரென்றும்
சொன்னவர்க்கும் உண்டோ துயர்" (பாரதவெண்பா. 484)

என்று வாழ்ந்த பெருந்தேவனாரைப் புரந்தது, புரவலன் சால்பினையும் புலவர் சால்பினையும் நிறுவ வல்லதாம். பெருந்தேவனார் புலமை நலங்களை ஆராய்ச்சி முன்னுரைக்கண் காண்க.

பெருந்தேவனார் பன்னீராயிரம் பாடல் பாடினார் என்றும், அவர் தொண்டைமண்டலத்தைச் சேர்ந்தவர் என்றும் தொண்டைமண்டல சதகம் கூறுகின்றது.

"சீரும் பாடல்பன் னீராயிரமும் செழுந்தமிழ்க்கு
வீரர்தம் சங்கப் பலகையில் ஏற்றிய வித்தகனார்
பாரதம் பாடும் பெருந்தேவர் வாழும் பழம்பதிகாண்
மாருதம் பூவின் மணம்வீசிடுந்தொண்டை மண்டலமே."

பொருளடக்கம்

	பக்கம்
பதிப்புரை	3
ஆராய்ச்சி முன்னுரை	7
பெருந்தேவனார் வரலாறு	29
பொருட்குறிப்பு	35

க. உத்தியோக பருவம்

கடவுள் வணக்கம்	க
தௌமியன் தூது	ங
வாசுதேவனைப் படைத்துணை யழைத்தது	ஙO
வாசுதேவன் தூது	சஉ
சஞ்சயன் தூது	கஙசு
படைத்திரட்சி	கருக
களப்பலி	கசுச
அணி வகுப்பு	கஅக

உ. வீடும பருவம்

முதனாட் போர்	ககூகூ
இரண்டாநாட் போர்	உகஉ
மூன்றாநாட் போர்	உகஅ
நாலாநாட் போர்	உஉங
ஐந்தாநாட் போர்	உஉஎ
ஆறாநாட் போர்	உஙஉ
ஏழாநாட் போர்	உஙசு
எட்டாநாட் போர்	உஙகூ
ஒன்பதாநாட் போர்	உருக
பத்தாநாட் போர்	உருரு

ங

௩. துரோண பருவம்

பதினோராநாட் போர்	௨௭௫
பன்னிரண்டாநாட் போர்	௨௮௭
பதின்மூன்றாநாட் போர்	௩௦௭
பின்னிணைப்பு-1	௩௩௧
பின்னிணைப்பு-2	௩௩௮
செய்யுள் முதற்குறிப்பு அகரவரிசை	௩௫௧

பொருட்குறிப்பு

எண் — பாடலெண்

உத்தியோக பருவம்

வாழ்த்து	1–3
புரவலர் புகழ்	-4

1. தௌமியன் தூது

பாண்டவர் விராடபுரத்தில் வெளிப்பட்டிருத்தல்	5-7
வெளிப்பாடு குறித்து ஓலையும் தூதும் விடுத்தல்	8-10
கண்ணனைக் கண்டு வெளிப்பாடுரைத்தல்	11-13
கண்ணன் சுவேதனுடன் விராடபுரம் வருதல்	14–15
சுவேதனைக் கண்ட விராடன் மகிழ்ச்சி	16-17
சுவேதன் வரலாறு	-18
சல்லியன் பாண்டவரைக் காண வருதல்	–19
சல்லியனைத் துரியோதனன் விருந்தால் பிணைத்தல்	20-22
சல்லியன் பாண்டவரைக் கண்டு விடைபெறுதல்	23–28
பன்னாட்டு வேந்தரும் பாண்டவரிடை வருதல்	-29
அபிமன்னு உத்தரை திருமணம்	–30
பாண்டவர் நாட்டுரிமை பெறும் வகையை விராடன் வினவுதல்	-31
கண்ணன் பதிலுரை	-32
பலதேவன் பாண்டவர் நாடு கேட்பதை மறுத்தல்	-33
சாத்தகி பலதேவனைச் சினந்துரைத்தல்	–34
கண்ணன் பாண்டவர்க்கிட்ட கட்டளை	-35
தருமனும் விராடனும் தனித்து ஆராய்தல்	-36
தௌமியனைத் துரியோதனனிடம் தூது விடுதல்	-37
தூதுரை ...	-38
தௌமியன் திருதராட்டிரனையும், துரியோதனனையும் காணுதல்	-39
தௌமியன் துரியோதனன் உரையாடல்	40-43
விதுரன் அறமுரைத்தல் ...	44-45
வீடுமன் அறமுரைத்தல் ...	46–47
கன்னன் மறுப்பும் வீடுமன் பதிலும் ...	48–57
வீடுமன் துரியோதனனுக்குத் தெளிவுரைத்தல்	-58
துரியோதனன் முனிந்துரைத்தல்	-59
வீடுமன் வெளியேறல் ...	,,
துரோணன் அறமுரைத்தல்	-60
கிருபன் அறமுரைத்தல்	61-62
தௌமியன் உபலாவியம் வந்து நிகழ்ந்த துரைத்தல்	63-65
தூதுபோய் வந்த செய்தியைத் தௌமியன் துவாரகை சென்று கண்ணனுக்கு உரைத்தல்	-66
கண்ணன் அருளிச் செயல்	67-70

2. வாசுதேவனைப் படைத்துணை அழைத்தது

கண்ணனைப் படைத்துணை அழைக்குமாறு திருதராட்டிரன் துரியோதனனிடம் கூறுதல் -71
துரியோதனன் துவாரகை செல்லுதல் -72
வாயில் காவலரிடம் துரியோதனன் வருகையை அறிவியாது அழைக்கக் கண்ணன் கட்டளையிடல் -73
கண்ணன் அறிதுயில் கொள்ளல் 74-75
துரியோதனன் கண்ணன் முடிப்பக்கம் அமர்ந்திருத்தல் -76
தௌமியன் அருச்சுனனிடம் கண்ணன் வருமாறு அருளிடதைக் கூறுதல் -77
அருச்சுனன் தருமன் முதலானவரிடம் விடைகொண்டு துவாரகை வருதல் 78-83
அருச்சுனன் கண்ணனைக் கண்டு அவன் திருவடிப் பக்கலிருத்தல் -84
கண்ணன் துயிலொழிந்து காணுதல் -85
கண்ணன் இருவரையும் வினவுதல் -86
துரியோதனன் வேண்டுதல் 87-89
அருச்சுனன் வேண்டுதல் 90-91
இருவர் சொல் வகையும் கண்ணன் உரைத்தல் -92
படையேந்தா திருக்கத் துரியோதனன் கண்ணனை வேண்டுதல் -93
கண்ணன் படையேந்தா 'என்றால் ஆம் பயனென்ன' என அருச்சுனனை வினவுதல் -94
அருச்சுனன் விண்ணப்பம் 95-96
பாண்டவர்க்குத் துணையாகக் கண்ணன் ஒருப்படுதல் -97
துரியோதனனுக்குக் கண்ணன் படைத்துணை அருளல் 98-100
துரியோதனன் பலதேவனைக் கண்டு அத்தினபுரம் போதல் -101
திருதராட்டிரனிடம் துரியோதனன் நிகழ்ந்தது கூறுதல் -102
கண்ணனும் அருச்சுனனும் உபலாவியம் அடைதல் -103
பாண்டவர் மகிழ்ச்சி -104

3. வாசுதேவன் தூது

பாண்டவர் மனநிலை யாதெனக் கண்ணன் வினவுதல் துணையாவாரைத் திரட்டக் கூறுதல் -105
விதுரன் முதலியவரை வெல்லக் கூடுமோ எனத் தருமன் ஐயுற்று வினுதல் - கண்ணன் மறுமொழி 105-114
கண்ணனைத் தூது செல்லுமாறு தருமன் வேண்டுதல் -115
வீமன் சிற்றவுரை 116-118
தருமன் அறவுரை -119
வீமன் நொந்துரைத்தல் -120
தருமன் வீமனை அமைதிப்படுத்திக் கண்ணனிடம் தூதுப் பொருள் உரைத்தல் 121-123
தூதுக் குடன்பட்ட கண்ணனை நோக்கி அருச்சுனன் கழறல் 124-126
நகுலன் நவிலுதல் 127-128
சகாதேவன் சாற்றுதல் -129

கண்ணன் சகாதேவன் – உரையாடல் 130-133
கண்ணன் ஆற்றல் எழுந்தருளியுள்ள தூணைச் சகாதேவன் காட்டுதல் -134
சகாதேவனைக் கண்ணன் முக்கால முணர்ந்தானெனப் பாராட்டுதல் -135
சகாதேவன் வேண்டுகோள் ... -136
கண்ணன் உறுதிமொழி ... -137
பாஞ்சாலி பதைப்புரை ... 138-140
தூதுக்கு எழுந்தருளுமாறு தருமன் மீண்டும் வேண்டுதல் -141
குழலை நினைத்துக் கொண்டு தூது மொழியுமாறு பாஞ்சாலி கண்ணனிடம் கூறுதல் -142
கண்ணன் தூது செல்லுதல் 143-146
அத்தினபுரி அடைதல் -147
கண்ணனை வரவேற்கத் துரியோதனன் முனைதலும் சகுனி தடுத்து நிறுத்துதலும் 148-149
வீடுமன் முதலானோர் கண்ணனை வரவேற்றல் -150
கண்ணன் விதுரன் மாளிகை சேறலும் அவன் மகிழ்ச்சியும் 151-154
மறுநாள் துரியோதனன் அரண்மனைக்குக் கண்ணன் செல்லுதல் 155-156
கண்ணனை வரவேற்க எவரும் செல்லக் கூடாதெனத் துரியோதனன் கட்டளையிடுதல் 157-158
காந்தம் இழுக்கும் இரும்பென வேந்தரிருத்தல் -159
துரியோதனன் வீற்றிருக்கும் திறம் 160-161
கண்ணன் அரியணையில் அமர்தல் -162
வீடுமன் முதலானோர் வணங்குதல் -163
விதுரனகத்து உண்டதேன் எனத் துரியன் கண்ணனை வினவுதல் ... -164
கண்ணன் மறுமொழி ... 165-166
வந்த காரணம் என் எனத் துரியன் கண்ணனை வினுதல் -167
கண்ணன் தன் வரவின் வகை உரைத்தல் -168
துரியோதனன் பாண்டவர்க்கு உரிமை தர உடன்படாதுரைத்தல் 169-170
திருதராட்டிரனிடம் வீடுமன் பெருஞ் செயல் குறித்துக் கண்ணன் எடுத்துரைத்தல் -171
'வலியார் வலியாராய் மண்ணுள்வர்' எனத் துரியோதனன் உரைத்தல் -172
கண்ணன் ஐந்து ஊர் வேண்டுதல் 173-174
துரியோதனன் மறுத் துரைத்தல் -175
கண்ணன் அற முரைத்தல் ... -176
துரியோதனன் சினந்து தூணை அறைதல் -177
துரியோதனன் கண்ணனைக் 'கற்றுயன்' என இகழ்தல் -178
கண்ணன் துரியோதனனை எள்ளுதல் -179
துரியோதனன் விதுரனைப் பழித்தல் ,,
விதுரன் சீற்றத்துடன் 'அவை புகேன்' எனல் -180
விதுரன் தன் வில்லை இறுத்தல் 181-182
வீடுமன் துரியோதனன் தவறுரைத்தல் -183
துரியோதனன் செருக்குரை -184

வீடுமனும் துரியோதனனும் மறுத்துரையாடல் 185-189
கன்னன் வெடிப்புரை 190-191
வீடுமன் கன்னன் ஆண்மையை இகழ்தல் -192
கன்னன் அரசவையில் இருந்து வெளியேறிக் குந்தியைக் கண்டு நிகழ்ந்த துரைத்தல் 193-194
குந்திக்குக் கன்னன் வரலாற்றைக் கண்ணன் உரைத்தல் -195
கன்னனிடைச் செல்லுமாறு குந்தியை ஏவுதல் -196
கன்னனைத் தன் மகனென அறிந்த குந்தி அரற்றுதல் 197-200
குந்தியைத் தெருட்டிக் கன்னன்பாற் போக விடுத்தல் -201
விதுரன் கோயிலைக் கண்ணன் அடைதல் -202
நள்ளிரவில் துரியோதனன் துச்சாதனன் முதலியவர்களுடன் எண்ணியிருத்தல் -203
கண்ணனைச் சிறையிடச் சூழ்ச்சித் திட்டம் -204
சஞ்சயனைத் தூது போக்கிக் கண்ணனை அழைத்தல் 205-208
கண்ணன் எழுந்தருளல் ... -209
துரியோதனன் பொய்யாசனம் இடுதல் -210
கண்ணன் பேருருக் கொள்ளல் 211-214
திருதராட்டிரன் கண்ணன் உருவைக் காண அருள் செய்ய வேண்டியவாறு அருளல் -215
துரியோதனன் வீரமாண்பு ... 216-217
தான் பொறுத்த காரணத்தைக் கண்ணன் உரைத்தல் -218
கண்ணன் கன்னனைத் தனிக்கொண்டு உரையாடல் 219-225
கண்ணன் அசுவத்தாமனைத் தனிக்கொண்டு ஊர்கோள் காட்டி வஞ்சித்தல் 226-228
கண்ணன் விதுரன் மாளிகை சேறல் -229
அசுவத்தாமன் மேல் ஐயுறவுற்றுப் பழித்தல் 230-232
அசுவத்தாமன் தன் நிலையுரைத்தல் -233
கன்னன் கொடைச் சிறப்பு 234-236
தேவர்கோனை வருவித்துக் கன்னனிடம் கவச குண்டலம் பெற்றுவரக் கண்ணன் ஏவுதல் 237-241
தேவர்கோன் மறையோன் உருக்கொண்டு செல்லுதல் 242-246
மறையோனை வரவேற்றுக் கன்னன் ஓம்புதல் 247-250
தான் வேண்டுவதை மறுது கொடுக்கத் தேவர்கோன் வேண்டுதல் 251-252
வேண்டியது தருவேன் எனக் கன்னன் உறுதி கூறுதல் 253
தனக்குத் தரும் கொடைச் சிறப்பைத் தேவர்கோன் கூறுதல் 254-256
கேட்டது மறேன் எனக் கன்னன் நெடுமொழி கூறுதல் 257-259
கவசகுண்டலம் வேண்டல் -260
வேறு பொருள் வேண்டுமாறு தேவர்கோனைக் கன்னன் வேண்டல் -261
தேவர்கோன் மறுத்தல் 262-263
கவச குண்டலங்களை எடுத்துக்கொள் எனக் கன்னன் இசைதல் 264-267
கதிரோன் உருவிலியாய்த் 'தாராதே' எனத் தடுத்தல் 268-270
கதிரோன் தடுத்தலை மறுத்துரைத்துக் கன்னன் தருதல் 271-273

கவச குண்டலங்களுடன் வந்த தேவர்கோனைக் கைம்
மணியும் வாங்கிவரக் கண்ணன் ஏவுதல் ... 274-275
தேவர்கோன் வருந்தி மறுத்தல் ... -276
மக்கட்காகச் செய்தக்க கடனைக் கண்ணன் வலியுறுத்தல் -277
இசைந்து தேவர்கோன் கன்னனிடம் போதல் 278-280
தனக்குத் தரும் கொடைச் சிறப்பைத் தேவர்கோன்
கூறுதல் 281-282
கைம் மணியைக் கன்னன் வழங்குதல் ... 283-285
தேவர்கோன் தன்னுருக் காட்டித் தன் பரிசாக வேல்
தருதல் 286-287
கன்னன் தேவர்கோன் கொடையை மறுத்தலும்
பின்னர்ப் பெற்றுக்கோடலும் 288-291
மணியைக் கண்ணனிடம் வழங்கித் தேவர்கோன் மறைதல் -292
கண்ணன் குந்தியை அடைதல் -293
குந்திதேவி கன்னன் மாளிகை அடைதல் 294-300
குந்திதேவி வந்ததன் காரணத்தைக் கன்னன்
வினவுதல் 301-303
கன்னன் தன் மகனுதலைக் குந்திதேவி யுரைத்தல் -304
கண்ணன் தனக்கு முன்னே உரைத்ததைக் கன்னன்
கூறல் -305
அரவப் படாம் போர்த்து மெய்ப்பிக்க வேண்டல் 306-311
குந்தி கன்னனைத் தன்னொடு வருமாறு அழைத்தல் 312-314
துரியோதனன் உதவிப்பேற்றைக் கன்னன் உவந்
துரைத்தல் 315-322
தம்பியரைக் கொல்லல் தவிரெனக் குந்தி வேண்டுத
லும் கன்னன் இசைதலும் 323-324
அரவக் கணையை மறுமுறை ஏவாமை வேண்டலும்
கன்னன் இசைதலும் 325-333
குந்தியிடம் கன்னன் வரம் வேண்டலும் குந்தி
இசைதலும் 334-338
வருந்தி விடைபெற்றுக் கொண்டு குந்தி போதல் 339-341
கண்ணனைக் கண்டு நிகழ்ந்தது கூறுதல் -342
கண்ணன் உபலாவியம் எழுந்தருளல் 343-345
கண்ணன் அத்தினபுரியின் நிகழ்ந்தவற்றை அடைவே
கூறுதல் 346-349
பாண்டவர் கண்ணனை மகிழ்ந்து பாராட்டல் -350

4. சஞ்சயன் தூது

திருதராட்டிரனும் காந்தாரியும், துரியோதனனைக்
கண்ணன் தூதுரைக்கு இசைய வேண்டுதல் -351
துரியோதனன் மறுத்துரைத்தல் -352
பாண்டவர் நாட்டாசையை விடுமாறு திருத
ராட்டிரன் சஞ்சயனைத் தூது விடுத்தல் 353-355
சஞ்சயன் துவாரகை அடைதல் -356
கண்ணன் சஞ்சயன் வந்த காரணம் வினவி அறிதல் 357-360
தருமன் நின்னுரை ஏற்கமாட்டான் எனக் கண்ணன்
கூறுதல் 361-362

V7B98

சஞ்சயன் தருமன் முதலானவரைக்கண்டு உரையாடல் 363-368
தருமன் சஞ்சயன் உரை பொருது உரைத்தல் -369
வீமன் வீரவேள்வி செய்வேனென எதிர்த்துரையாடல் 370-372
தருமன் வீமனைக் கையமர்த்துதல் -373
சஞ்சயன் மீண்டு அத்தினபுரி வருதல் ... -374
நிகழ்ந்ததை மற்றைநாட் சொல்வதாகத் துரியோதனிடம் கூறிச் சஞ்சயன் தன்னில்லம் செல்லல் -375
மறுநாள் சஞ்சயன் துரியோதனனிடைச் சென்று நிகழ்ந்ததுரைத்தல் ... 376-386

5. படைத் திரட்சி

கடவுள் வாழ்த்து ... ... -387
துரியோதனன் தன் படைத்துணைக்கு ஓலையும் தூதும் போக்கல் 388-389
துரியோதனன் படைத் திரட்சி 390-391
படைத் தலைவன் வீடுமன் -392
தருமன் தன் படைத்துணைக்கு ஓலையும் தூதும் போக்குதல் 393-395
பாண்டவர் படைத் திரட்சி -396
படைத் தலைவன் சுவேதன் -397
படை வகுப்பு 398-399
விதுரன் முதலானவர் போர்க்களம் புகுவராயின் என்னும் எனத் தருமன் வினவுதலும் கண்ணன் விடையிறுத்தலும் 400-403
போருக்கு நாள் வரையறுத்துத் துரியோதனனுக்கு அறிவிக்கத் தருமன் கண்ணனிடம் வேண்டுதல் -404
'இற்றைக்குப் பன்னிரண்டாம் நாள்' என்று கூறிக் கடோற்கசனைத் தூதுவிடல் -405
துரியோதனன் கடோற்கசனைப் புறக்கணித்திருக்கக் கடோற்கசன் தூணை மோதுதல் 406-407
துரியோதனன் வினவும் கடோற்கசன் வரவுரைத்தலும் 408-411
'எட்டா நாள்' என்று துரியோதனன் கூறக் கடோற்கசன் மகிழ்ந்து மீளுதல் -412

6. களப்பலி

களப்பலிக்குக் கணியம் சொல்ல வல்லான் சகாதேவனே என வீடுமன் கூறல் 413
துரியோதனன் எமக்குச் சகாதேவன் கணியம் சொல்லுமோ எனல் 414
பாண்டவர் பண்பு நிலை வீடுமன் பகர்தல் 415
துரியோதனன் தேவதச்சனை வேண்டி ஊர்தி பெற்றுப் போய்ச் சகாதேவனைக் காணுதல் 416-420

சகாதேவன் துரியோதனனை வரவேற்று, வந்தது வினவுதல் 421-422
களப்பலி யூட்டத்தக்க நாள் கணித்துரைத்தல் 423-425
துரியோதனன் அராவானைக் காணுதல் 426
துரியோதனன் அராவானைக் களப்பலிக்கு வேண்டுதலும் அவன் இசைதலும் ... 427-431
துரியோதனன் மகிழ்ந்து செல்லுதலும் விடிதலும் -432
கண்ணன் சகாதேவனும் அராவானும் நிகழ்ந்தவற்றை உணர்தல் -433
தருமனிடம் அவர்கள் செயலைக் கண்ணன் கடிந்துரைத்தல் 434-436
தவற்றைப் பொறுத்துதவுமாறு தருமன் கண்ணனை வேண்டுதல் -437
14 ஆம் நாளைப் பதினைந்தாம் நாளாக்கிக் களப்பலி யூட்டக் கண்ணன் திட்டமுரைத்தல் -438
தன்னைக் களப்பலியிடுமாறு கண்ணன் உரைத்தல் -439
பாண்டவர் வருந்துதல் -440
அராவானை நோக்கிக் கண்ணன் களப்பலிக்கு உரைத்தல் -441
முன்னே பலியிட்டுக் கொள்ள அராவான் இசைதல் 442-443
மறையோரை அழைத்து மறை மொழியால் கதிரோனையும் மதியையும் ஒருங்குவரச் செய்தல் 444-447
அராவான் தானே தன்னைப் பலியிட்டுக் கொள்ள நேர்தல் -448
தான் இறவாதிருந்து வீரப் போராற்றி மடிய வரந் தருமாறு கண்ணனிடம் அராவான் வேண்டுதல் 449-450
அராவான் வேண்டுதலைக் கண்ணன் அருளல் -451
களப்பலி யூட்டல் 452-453

7. அணிவகுப்பு

தருமன் களப்பலி யூட்டியமை கேட்டுத் துரியோதனன் சினங் கொள்ளல் -454
துரியோதனர் அணிவகுப்பு 455-456
தன்னை அரைத்தேராளன் ஆக்கியதற்குக் கன்னன் வீடுமனை முனிந்து வாளுருவிச் செல்லல் -457
போரில் உன்றுண்மை காட்டு என வீடுமன் கூறுதல் 458-459
துரியோதனன் கன்னனைப் பொறுத்துக் கொள்ள வேண்டுதல் 460-461
பாண்டவர் அணிவகுப்பு -462
பலதேவன் கண்ணனுடன் எதிரெதிர் நிற்கவேண்டாவென எண்ணி நன்னீராடச் செல்லுதல் 463-464
களத்தில் படைகள் சேர்தல் 465-466
படைகளைக் கண்ட துரியோதனன் இப்படையை எவர் எவ்வாறு வெல்வார் என வீடுமனை வினவ அவன் கூறுதல் 467-471
வீடுமன் உரைகேட்டுப் பாண்டவர் திறத்தைச் சகுனி பழித்தல் -472
துரியோதனன் வீடுமனைப் புகழ்தல் -473

வீடுமன் முதலானவரைக் களத்தில் கண்ட அருச்சுனன் தளர்தல்	474-475
அருச்சுனனுக்குத் தன் பேருருவைக் காட்டிக் கண்ணன் மெய்யுரை யருளல்	476-477
அருச்சுனன் வீறு பெறுதல்	-478
தருமன் வீடுமன் துரோணன் ஆகியோரைக் கண்டு வணங்கி, அவர்கள் நல்லுரை பெறுதல்	479-482
கண்ணனை வீடுமன் தலைமையில் நீ செய்யும் செயல் அவன் செய்ததாம் என்று கண்ணன் கூறித் தகைதல்	-483

உத்தியோக பருவம் முற்றும்.

வீடும பருவம்

முதனாட் போர்

கடவுள் வாழ்த்து ...	-484
இருதிறப் படைகளும் பொரத் தொடங்குதல்	-485
வீடுமன் கொடி தேர் வில் ஆகியவற்றை வீமன் அழித்தல்	486-488
அபிமன்னு வீடுமன் தேர்க்குதிரைகளை அழித்தல்	-489
சல்லியனும் உத்தரனும் பொருதல்	490-491
சுவேதனும் சல்லியனும் பொருதல்	492-493
வீமனும் துரியோதனனும் பொருதல்	494-496
சுவேதன் வீடுமனுடன் பொருதல்	497-499
கண்ணன் உருவிலியாய்ச் சுவேதனைச் சூழ்ச்சியாற் கொல்லச் செய்தல்	500-502
வீடுமன் சுவேதனைப் பிரமாத்திரத்தாற் கொல்லுதல்	503-513

இரண்டாநாட் போர்

பாண்டவர் திட்டத்துய்மனைப் படைத்தலைவனாக்குதல்	-516
பாண்டவர் தம் படையைக் கிரௌஞ்ச அணியாக வகுத்தல்	-517
துரியோதனர் தம் படையை மகர அணியாக வகுத்தல்	,,
துரோணனும் திட்டத்துய்மனும் பொருதல்	518-520
கலிங்க வேந்தன் தன் தானையுடன் துரோணனுக்குத் துணை புகுதல்	-521
வீமன் கலிங்கரை அழித்து வீடுமனுடன் பொருதல்	522-527
அபிமன்னுவும் இலக்கண குமரனும் பொருதல்	528-530

மூன்றுநாட் போர்

வீடுமன் தன் படையைக் கலுழ அணியாக வகுத்தல் -534
அருச்சுனனும் வீடுமனும் பொருதல் 535-536
கடோற்கசன் துரியோதனனைத் தாக்குதல் -537
வீடுமன் துரியோதனனைக் காத்தல் ,,
வீமன், பாண்டியன் மகள் மந்தாரை மலரணியச் செய்த வரலாறு ,,
வீடுமன் பேராற்றல் கண்டு கண்ணன் ஆழிப்படை எடுத்தல் -538
அருச்சுனன் ஆழிப்படையைத் தடுத்தல் -539
வீடுமன் வெகுண்டு பொருதல் 540-543

நாலாநாட் போர்

வீமன் பொருதல் 547-548
கடோற்கசன் வீமனுக்குத் தேர் கொடுத்தல் -549
வீமனும் துரியோதனனும் பொருதல் 550-554
பகதத்தனும் கடோற்கசனும் பொருதல் 555-556
தம்பிமாரைப் பறிகொடுத்ததற்குத் துரியோதனன் அரற்றல் 557-558

ஐந்தாநாட் போர்

வீடுமன் 'கசேனு' அணி வகுத்தல் -561
திட்டத்துய்மன் 'வச்சிரநாப' அணி வகுத்தல் ,,
வீமன் கலிங்கர் முதலியவருடன் பொருதல் ,,
அருச்சுனன் போர் -561
வீமன் போர் 562-563
தருமன் அருச்சுனனுக்குத் துணையாகப் பாண்டியன் முதலியவரை அனுப்புதல் -565
அசுவத்தாமனும் கடோற்கசனும் பொருதல் -566
வீமனும் துரியோதனனும் பொருதல் -567
சாத்தகியும் பூரிசிரவாவும் பொருதல் -568

ஆறுநாட் போர்

வீடுமனும் திட்டத்துய்மனும் பொருதல் -572
வீமனும் துரோணனும் பொருதல் 573-575
வீமனுக்கு அபிமன்னு முதலோர் துணையாதல் -576
அபிமன்னுவும் விகன்னனும் பொருதல் 578-579
வீமனும் துரியோதனனும் பொருதல் -580
அபிமன்னுவால் விகன்னன் படுதல் (தோல்வி) -581

ஏழாநாட் போர்

திட்டத்துய்மன் வச்சிரநாப அணி வகுத்தல் -584
வீடுமன் மண்டல அணி வகுத்தல் ,,
வீடுமனோடு அருச்சுனன் பொருதல் 585-586
துரியோதனனோடு கடோற்கசன் பொருதல் -587
சல்லியனோடு பாஞ்சாலன் பொருதல் -588

எட்டாநாட் போர்

துரியோதனனும் வீமனும் போரிடல்	592-594
தருமனுக்கு வீமன் துணை புகுதல்	-595
துரியோதனன் தோற்று வீடுமனிடம் முறையிடல்	595-596
வீடுமன் இடித்துரைத்தல்	597-600
கடோற்கசன் மாயப் போர்	-600
அராவான் மாயப் போரால் அலம்புசன் தோல்வியுறுதல்	-601
அலம்புசன் கலுழ உருக்கொள்ள உருவிலி கூறுதல்	-602
அராவானை அலம்புசன் கொல்லல்	-603
துரோணனும் அசுவத்தாமனும் பாஞ்சாலர் படையை அழித்தல்	-604
அபிமன்னு துரியோதனன் படையை அழித்தல்	-605
துரியோதனன் வீமனொடு பொருதல்	606-607
தம்பிமார் எழுவரை இழந்து துரியோதனன் அரற்றல்	-609
திருதராட்டிரன் காந்தாரி முதலியோர் புலம்பல்	610-612
துரியோதனன் கன்னனை வீடுமனிடத்துள்ள சினந் தணிந்து போர்க்கு வர வேண்டுதல்	-613
வீடுமன் புற்கவ்வ வேண்டும் என்று கன்னன் உரைத்தல்	-614
வீடுமன் தன் கால எல்லையைத் துரியோதனனிடம் உரைத்தல்	615-617
பதினொன்றும் நாள்முதல் கன்னன் திறம் காட்டலாம் என வீடுமன் கூறுதல்	-617

ஒன்பதாநாட் போர்

அலம்புசன் வீமனொடு பொருது மாளல்	-621
வீமனும் துரியோதனனும் பொருதல்	-622
வீடுமனும் தருமனும் பொருதல்	-623
பாஞ்சாலர் முதலியோர் தருமனுக்குத் துணையாதல்	624-625
வீடுமன் பாஞ்சாலர் முதலியவரை அழித்தல்	-626
அருச்சுனன் புகுந்து போர் செய்தல்	-627

பத்தாநாட் போர்

வீடுமன் வழிபாடியற்றிப் போர்க்கெழுதல்	-631
வீடுமன் சருப்பதோபத்திர அணி வகுத்தல்	-631
திட்டத்துய்மன் பதுமராக அணி வகுத்தல்	,,
வீடுமன் பெருங்கொடை புரிதல்	-632
கண்ணன் சொற்படி அருச்சுனன் வீடுமனை முனைந்து தாக்குதல்	633-638
தீக்குறி பல தோன்றுதல்	-639
வீமன் கடும்போர் புரிதல்	,,
வீடுமனுக்குத் துணையாக வந்தவர்களை வீமன் தாக்கிப் புறகிடச் செய்தல்	-640
வீடுமனை எதிர்க்கச் சிகண்டியைத் தருமன் அனுப்புதல்	-643
வீடுமன் சிகண்டியைக் கண்டு படைக்கலம் விடுத்து நிற்றல்	-644

சிகண்டியுடன் சேர்ந்து அருச்சுனன் அம்பு விடுதல் -645
துச்சாதனன் புகுந்து சிகண்டியைப் புறகிடுவித்தல் -647
வீடுமன் படைக்கலம் ஏந்தித் தாக்குதல் -649
மீண்டும் சிகண்டி வந்து சேருதல் -651
வீடுமன் தளர்ந்து, வருவதுரைத்தல் -652
துரியோதனன் தம்பிமார் ஐவரைத் துரியோதனனிடம் விடுத்தல் ,,
வீடுமன் அருச்சுனன் கணையால் தளர்ந்து விழுதல் -654
வீடுமன் திருமால் அருள்வேண்டி உயிரை நிறுத்திக் கொள்ளுதல் -655
அம்பணைக் கிடந்த வீடுமனைப் பாண்டவர் வணங்குதல் ,,
துரியோதனன் வீடுமனைக் கண்டு புலம்புதல் 656-658
கன்னன் வீடுமனைப் பணிந்து பிழை பொறுக்க வேண்டுதல் 659-660
வீடுமன் கன்னனுக்கு அமைதி கூறுதல் -661
வீடுமன் தலையணை வேண்டத் துரியோதனன் பஞ்சணை தருதல் 662-663
அருச்சுனனிடம் தலையணை வேண்டல் -664
அருச்சுனன் அம்புத் தலையணை வழங்க மகிழ்தல் -665
வீடுமன் கன்னனுக்குப் படைத்தலைமை தரச்சொல்லல் 666
வீடுமன் வீடுபேறடைதல் -667
வீடுமன் வரலாற்றைக் கண்ணன் உரைத்தல் -668
வீடுமனை நினைந்து திருதராட்டிரன் புலம்பல் 669-671
வியாசனும் துரோணனும் திருதராட்டிரனைத் தேற்றுதல் -671
அவைக் களத்தில் படைத் தலைமைபற்றி ஆராய்தல் 672-674
துரியோதனன் துரோணனைப் படைத் தலைவனாக்குதல் -675
கன்னனைப் படைக்காப்பாளன் ஆக்குதல் -676

வீடும பருவம் முற்றும்.

துரோண பருவம்

பதினோராநாட் போர்

துரோணன் சகட அணி வகுத்தல் -679
திட்டத்துய்மன் கிரௌஞ்ச அணி வகுத்தல் -680
துரோணனைத் திட்டத்துய்மன் தாக்கிப் புறகிடல் 681-682
அசுவத்தாமன் சோமகரையும் சிஞ்சையரையும் அழித்தல் -683
சகுனியும் சகாதேவனும் பொருதல் 684-686
துரியோதனனும் தருமனும் பொருதல் 687-689
தருமன் துரியோதனனை அரவப் பிணைப்பால் கட்டுதல் -690
துரோணன் கலுழப் பிணைப்பால் விடுவித்தல் -691
வீமன் துரியோதனர் படையை புறகிடச் செய்தல் -692
நகுலனும் சல்லியனும் பொருதல் 693-695

பகதத்தனோடு கடோற்கசன் பொருதல் -696
இலக்கண குமரனோடு செயசேனன் பொருதல் -697
அபிமன்னு சயத்திரதனோடு பொருதல் -698
அபிமன்னு சல்லியனோடு பொருதல் 699-703
சல்லியன் வீமனுடன் பொருதல் 704-705
துரியோதனன் தன் படை அழிவுக்கு வருந்துதல் 706-707
தருமனைப் பிடித்துத் தருமாறு துர்யோதனன் வேண்டுதல் -708
அருச்சுனன் இருக்கும்போது தருமனைப் பிடிக்க இயலாது எனத் துரோணர் கூறுதல் -709
அருச்சுனனைப் பிரித்துச் செல்லச் சஞ்சத்தகர் ஆணை செய்தல் -710

பன்னிரண்டாநாட் போர்

சஞ்சத்தகர் அருச்சுனனை அறைகூவித் தனியே அழைத்தல் -714
தருமனிடம் அருச்சுனன் விடை கேட்டல் -715
தருமனும் வீமனும் மறுத்துரைக்க அமைதி கூறி அருச்சுனன் போதல் 716-719
அருச்சுனன் சஞ்சத்தகரைத் தாக்கச் செல்லுதல் 720-722
துரோணன் தருமனைப் பிடிக்க முயலுதல் -723
பாஞ்சால வேந்தன் முதலியவர்கள் துரோணனைத் தடுத்துத் தோற்றுப் போதல் 724-735
வீமன் துரியோதனனுடன் பொருது தளர்தல் -736
தருமனும் துரோணனும் பொருதல் -740
வீமன் துணை பெற்றுச் சென்று தருமன் தாக்குதல் 742-743
பகதத்தன் வரலாறு -744
பகதத்தனும் வீமனும் பொருதல் 744-748
சஞ்சத்தகரை வென்று அருச்சுனன் திரும்புதல் -749
பகதத்தன் வீமனை விடுத்து அருச்சுனனுடன் பொருதல் -750
பகதத்தன் கண்ணன்மேல் ஆற்றலை ஏவுதல் -751
அருச்சுனன் பகதத்தன் ஆற்றலை அழித்தல் -752
பகதத்தன் வைணவ அத்திரம் விடுதல் -756
கண்ணன் மாலையாக அதனை ஏற்றல் -757
கண்ணன் அருளிய நாராயண அத்திரத்தால் பகதத்தனை அருச்சுனன் கொல்லல் 758-760
அருச்சுனன் பகதத்தன் யானையை அழித்தல் -761
அருச்சுனன் காந்தாரரோடு பொருதல் 762-766
துரியோதனனும் வீமனும் பொருதல் 767-770

பதின்மூன்றுநாட் போர்

அருச்சுனனைச் சஞ்சத்தகர் ஒழிந்தார் அறைகூவி அழைத்துச் செல்லுதல் -772
துரோணன் சக்கர அணி வகுத்துத் தருமனைப் பிடிக்க முயலுதல் ,,
சல்லியன் துச்சாதனன் முதலியோர் வீமனை அறைகூவி அழைத்துச் செல்லுதல் -773

திட்டத் துய்மன் வகுத்த மண்டல அணியைத்
துரோணன் பிளந்து சென்று தருமனை வளைத்தல் -773
சக்கர அணியைப் பிளந்து உட்புகும்படி தருமன்
அபிமன்னுவை விடுத்தல் -774
அபிமன்னு சக்கர அணியைப் பிளந்துசென்று
பொருதல் 775-782
சல்லியன் முதலியவர்களை வென்று வந்த வீமனைத் தருமன்
அபிமன்னுவுக்குத் துணைபோகச் சொல்லுதல் -782
அபிமன்னுவைச் சக்கர அணியுள் விடுத்தமைக்கு வீமன்
வருந்துதல் -783
தண்டேந்திக் கொண்டு வீமன் செல்லுதல் 784-785
துரியோதனன் சயத்திரதனால் கொன்றை மாலை
கொண்டு வீமனைத் தடுப்பித்தல் 786-787
சயத்திரன் கொன்றைமாலை பெற்ற வரலாறு -787
வீமன் கொன்றமாலையைக் கண்டு உட்புகாது, தன்னுடன்
வந்தாரையும் தடுத்தல் 788-790
அபிமன்னு செய்த கடும்போர் 791-795
இலக்கண குமரன் அபிமன்னுவால் படுதல் -796
அபிமன்னு கன்னனைத் தாக்கி அலைக்கழித்தல் -797
கன்னன் அபிமன்னுவைத் தாக்கி அலைக்கழித்தல் 798-800
அபிமன்னு காலாளாய் நின்று வேலேந்திப் பொருதல் -801
துரோணன் ஒருமுறை தோற்றுப் பின்னர் வந்து
அபிமன்னுவின் வலக்கையை அறுத்தல் 805-806
அபிமன்னு இடக்கையால் தேராழி ஒன்றைப் பற்றிச்
சக்கரப்படையாக விடுத்தல் -808
அபிமன்னு விட்ட சக்கரத்தை அரசர் பலருங்கூடி
அழித்தல் -809
அபிமன்னு இடக்கையில் தண்டேந்திப் பொருதல் -810
துச்சாதனன் மகன் சயசேனன் அபிமன்னுவை
வீழ்த்துதல் -813
அபிமன்னு வீழ்ந்தது கண்டு இருதிறத்து வீரரும்
வருந்துதல் -814
தருமன் கவன்று புலம்புதல் 815-816
வியாசர் தருமனைத் தேற்றுதல் ,,
அருச்சுனன் சஞ்சத்தகரை வென்று மீளுதல் -817
வழியில் தீக்குறி கண்ட கண்ணன், அபிமன்னுவின் பாடு
அறிந்து தேவர்கோனை அழைத்தல் -818
தேவர்கோனால் அருச்சுனனை வஞ்சித்தல் 819-824
அருச்சுனன் அபிமன்னுவின்பாடு கேட்டுக் கவன்று
அரற்றல் -828
கடோற்கசன் அபிமன்னு பட்ட வகை கூறி அரற்றல் -830
அருச்சுனன் திப்புகத் துணிதல்

பெருந்தேவனார் பாரதம்

கடவுள் வணக்கம்

மூத்த பிள்ளையார் வணக்கம்

1. ஓத வினையகலு மோங்கு புகழ்[1]பெருகுங்
காதற் பொருளனைத்துங் [2]கைகூடுஞ்—சீதப்
பனிக்கோட்டு மால்வரைமேற் பாரதப்போர் தீட்டுந்
தனிக்கோட்டு வாரணத்தின் றாள். (௧)

கலைமகள் வணக்கம்

2. புத்தகமு ஞானத்து முத்திரையும் பொற்பளிங்கும்
வைத்த கமண்டலமும் வன்னிகையு—முத்து
வடங்கொண்ட பூண்முலையாள் வந்தென் மனத்தே
யிடங்கொண்டா ணீங்கிற் றிடர். (௨)

குறிப்புரை

(1) தாள் ஓத வினையகலும், புகழ்பெருகும், பொருள் கைகூடும் என இயைக்க. காதற் பொருள் - விரும்பிய பொருள். சீதப்பனிக்கோடு – குளிர்ந்த இமயக் குவடு. மால்வரை-பெரிய மலை. தனிக்கோடு - ஒற்றைக் கொம்பு. வாரணம் – யானை; மூத்த பிள்ளையார்.

"வாடாத தவவாய்மை முனிராசன் மாபாரதஞ் சொன்னநாள்
ஏடாக மாமேரு வெற்பாக அங்கூர் எழுத்தாணிதன்
கோடாக எழுதும் பிரான்"

என்று மூத்த பிள்ளையாரை வில்லியார் கூறுவது நோக்கத்தக்கது.

(2) ஞானத்து முத்திரை – சின்முத்திரை; ஆவது, பெரு விரலும் சுட்டுவிரலும் வளைந்து தொட்டு நிற்க, மூவிரலும் நேர்நிற்குநிலை. பொற்பளிங்கு, இருக்கை. வன்னிகை – கிளி. "இடங்கொண்டாள், நீங்கிற்று இடர்" (௨)

பாட வேறுபாடு: 1. பெருக்கும். 2. கைகூட்டும்.

க. உத்தியோக பருவம்

திருமால் வணக்கம்

3. மாலென்ப தாம்பின்னை மால்வரையான் மால்விசும்பின்
மாலின் புயல்காத்த மால்வண்ணன்—மாலரவப்
பேரோத மேனியான் பேரோத நீர்கடைந்தான்
பேரோத மேனியான் பேர்.

என்பது, *முதன் மறையும், பேருலகும், விண்ணும், மண்ணும், மறை விளக்கமுள்ளிட்ட நான்கு கலைகளும், நான்முகனொடும் தனது திருவுந்தித் தாமரையிற் பிறப்பித்த தாமரையுந்தியன், தூய தலைவன், அடியார்க் கருள்வோன், முதற்கடவுள், அரவணையன், நெடுமால், ஆழியங் கையன், தேவதேவன் நாராயணன் திருவடிகளை வணங்கினேம் என்றவாறு. (௩)

புரவலர் புகழ்

4. வண்மையாற் கல்வியான் மாபலத்தா லாள்வினையால்
உண்மையாற் பாரா ளுரிமையாற்—றிண்மையாற்

---

(3) "பேர், மாலென்பதாம்" என இயைக்க.

'கோவர்த்தனம்' என்னும் பெருமலையால், அகன்ற வானின் பெருமழையைத் தடுத்து ஆக்களையும் ஆயர்களையும் காத்த கரிய நிறத்தவன், பெரிய 'வாசுகி' என்னும் பாம்பின் மிகப் பருத்த உடலால் பேரொலியுடைய கடல்நீரைக் கடைந்தவன், பெரிய கடல் வண்ண உடலுடையவன் பேர் இலக்குமியின் கேள்வனாகிய திருமால் என்பதாம்.

'மால்' என்னுஞ் சொல் கரிய, பெரிய, முகில், திருமால் என்னும் பொருள்களிலும், 'ஓதம்' என்னுஞ் சொல் பருத்த, கடல் என்னும் பொருள்களிலும், 'ஓத' என்பது சொல்ல என்னும் பொருளிலும் வந்து சொல்லழகும் பொருளழகும் ஊட்டின. பின்னை - நப்பின்னை.

* இவ்விடத்தமைந்துள்ள பழைய உரைநடை வருமாறு:

"ஆதிவேதமும், மகாலோகமும், அண்டரண்டமும், அவனிதலமும், வேத வியாகரண முள்ளிட்ட நான்கு கலைகளும், நான்முகனொடுந் தனது திருநாபிக்கமலத்தே பிறப்பித்த பதுமநாபன், பவித்திரமூர்த்தி, பக்தவற்சலன், ஆதிமூர்த்தி, அநந்தசயனன், விக்கிரம மாயன், சக்கரபாணி, தேவதேவன், நாராயணசுவாமி ஸ்ரீபாதங்களை நமஸ்கரித்தோ மென்றவாறு."

மேல்வரும் உரைநடைப் பகுதிகள் அனைத்தும் வடசொற் களைந்து தமிழாக்கம் செய்தே அமைக்கப்பெறுகின்றன.

· றேர்வேந்தர் வானேறத் தெள்ளாற்றில் வென்றானோ
[1]டியார்வேந்த ரேற்பா ரெதிர்.

எ - து. எல்லையி னிறைந்த எண்டிசை யுலகத்து மலையு மலையும் உள்ளிட்ட மண்மிசை முழுதும் மறையது வளர்க்க அல்லி பீடத் தரிவைக்குத் தன் அழகமர் தோளை கோயில் ஆக்கிய பல்லவர் கோமானைப் பரவினேம்; இனி, ஈண்டிய தொல்புகழ் எழுமணி வரைத்தோள் பாண்டவர் நிலைமை யாதாயிற்றோ வெனில் : (௪)

தௌமியன் தூது

5. அரவுயர்த்தோன் சொன்ன அவதியாண் டெல்லாம்
புரவுயர்த்தோன் கானத்துள் நீக்கி—முரசுயர்த்த
வேல்வேந்தன் வந்து வெளிப்பட்டான் மற்றிளைய
கோல்வேந்த ரோடுங் குறித்து.

எ - து. தருமனும் தம்பிமாரும் துரியோதனனுடன் அரசவையில் இசைந்தபடி பன்னீராண்டு காடுறைந்து, ஓராண்டு கரந்துறைந்து தங்கள் சுற்றக் குழாத்தோடும் வந்து விராடபுரத்து வெளிப்பட்டார் என்றவாறு. (ரு)

6. ஒட்டிய பன்னீராண் டோராண்டு காடுறைந்து
விட்டிலங்கு தண்டார் விறல்வீரர்—வட்டப்
பணியகலப் பார்விளங்கப் பைந்தார் விராடன்
அணிநகருள் வீற்றிருந்தார் ஆங்கு.

அன்றியும், (சு)

---

(4) ஆள்வினை - முயற்சி. தேர்வேந்தர் - பகைத்து வந்த தேர்வேந்தர். தெள்ளாற்றில் வென்றான், தெள்ளாறு எறிந்த நந்திவர்மப் பல்லவன் என்பான். அல்லிபீடம் - தாமரையாகிய இருக்கை.

"வென்றானோடு எதிர் ஏற்பார் யார்" என இயைக்க.

(5) அரவுயர்த்தோன் – பாம்புக் கொடியுடைய துரியோதனன். அவதி – அளவு. புரவு உயர்த்தோன் - புரத்தலை மிகுத்துச் செய்யும் விராடவேந்தன். முரசு உயர்த்த வேந்தன் – முரசக்கொடியுடைய தருமன். இளையகோல் வேந்தர் – வீமன் முதலிய நால்வர். கரந்துறைந்து – மறைந்து வாழ்ந்து. கோல் - அழகு, செங்கோல், அம்பு.

(6) ஒட்டிய - உடன்படிக்கை செய்துகொண்ட. வட்டப்பணி அகல – அலைந்து திரியும் அல்லல் அகல; பாம்பு தாங்கும் அகன்ற பாரென்றுமாம்.

பா. வே : 1. டேர்வேந்த.

7. ஆண்டிரண்டு பத்தும்போய் ஆரணியத் துள்ளுறைந்து
மீண்டிரண்டு பத்து வியன்திங்கள்—ஈண்டி
ஒளிப்பட் டிருந்தங் குயர்நிரையை மீட்டு
வெளிப்பட் [1]டிருந்தார் வியந்து.

இவ்வகை விராடபுரத்து வெளிப்பட்டிருந்து யாது செய்தான் தருமன்? (எ)

8. தங்கள் வெளிப்பாடு சொல்லித் தமக்கினிய
வெங்கதிர்வேல் வேந்தர்க்கு வெவ்வேறு—[2]சங்கம்
பொருமுகப்ப வந்து புனலுடன் விட்டான்
திருமுகமும் தூதும் செல.

அன்றியும், (அ)

9. மற்றுள்ள மன்னவர்க்கும் [3]வாழ்வேந்தர் வாய்ப்புடைய
சுற்றத்தார் தங்கட்கும் தோழர்க்கும்—வெற்றித்
திருமால் தனக்கும் திறற்குருநா டாளும்
பெருமானும் விட்டான் பெயர்ந்து.

எ - து. கண்ணனுள்ளிட்ட யாதவ வேந்தர்க்கும் குந்திபோசன், பாஞ்சாலன், பாண்டியன், திரிகர்த்தன், கேகயன், சேதியன் ஆகிய வேந்தர்களுக்கும் தீதின்மையும் வெளிப்பாடும் சொல்லித் திருமுகமும் தூதும் போக்கினான். அது யாங்ஙனமோ எனில்: (கூ)

10. அன்று சபையுள் அரவுயர்த்தோன் ஒட்டியநாள்
சென்று கழிந்தன தீதின்மை—ஒன்றியநம்

---

(7) காட்டில் வாழ்ந்த காலம் பன்னீரியாண்டு; கரந்து வாழ்ந்த காலம் ஓரியாண்டு. நிரை - ஆநிரை; விராடவேந்தன் ஆநிரையை மீட்டி வெளிப்பட்டார் என்க. வியன் – அகன்ற. இவண் முழுமை சுட்டியது.

(8) இனிய வேந்தர் – உறவும் நட்பும் உடைய அரசர். பொருமுகப்ப - போர் எடுக்க. முகப்ப - எடுப்ப (சிந்தா. 323) புனலுடன் – புனல் நாடன்; நீர்வள நாட்டையுடைய தருமன். திருமுகமும் தூதும் வெவ்வேறு செலவிட்டான் என்க.

(9) திருமால் - கண்ணன். குருநாடாளும் பெருமான் - தருமன்.

பா. வே: *1. டிருந்தார்கள் வேந்து. 2. சங்கு. 3. வாள்வேந்தர்.*

பேராழி வைகும் பெருமாற்குச் சென்றிதனைச்
சோராமல் சொல்லென்றான் தூது.

என்று இவ்வகை சொல்லித் தூதரைப் போக்கிச் செல்லா நின்ற காளகத்து ஒருநாள் யாது செய்தார் தூதுவர் : (௰)

11. குன்றுங் குரைகடலும் கொய்பொழிலும் தான்கடந்து
சென்றங் கெழில்துவரை சேர்ந்ததற்பின்—வென்றி
முரசுயர்த்தான் தூதன் விரைந்தணைந்தான் வானோர்
அரசுயர்த்த வேந்தன்பால் ஆங்கு.

இவ்வகை தூதனும் போய்த் துவாரகை சென்று புக்குக் கண்ணன் அரண்மனை வாயிற்கண் நின்று, வாயில் காவலரைக் கண்டு தன்வரவு அறிவிப்ப, மற்றவரும் உள்புகுந்து கண்ணனுக்கு விண்ணப்பஞ் செய்ய, அருட்பாடு எனக் கேட்டுத் தூதனும் புகுந்து கண்ணனைக் கண்டு களிகூர்ந்து வணங்க, நின்ற தூதனை நோக்கி யாதருளிச் செய்தான் கண்ணன் : (௧௧)

12. எங்குநின் றெம்மிடைக்கு வந்தாய் எனவுரைத்த
கொங்கலர்தார் மாயனுக்குக் கூறுவான்—அங்குப்
பொருபடையில் வாய்வைக்கும் போர்வேந்தர் நின்பால்
வரவிடுத்தார் யான்வந்த வாறு.

அன்றியும், (௧௨)

13. எம்பெருமான் நின்மாமி யீன்றெடுத்த பஞ்சவர்கள்
வம்பவிழ்தார்ச் சோதி மணிவண்ணா—தங்கள்

---

(10) பேராழி வைகும் பெருமான் - பெரிய கடலில் தங்கும் பெருமானாகிய கண்ணன். பெருமைமிக்க சக்கரப்படை தாங்கியிருக்கும் பெருமானாகிய கண்ணனுமாம். தீதின்மை - கேடின்றி வெளிப்பட்டு இருத்தல்.

(11) குரைகடல் – ஒலிக்கும் கடல். பொழில் - சோலை. பூவும் காயும் கனியும் கொய்து பயன்கொள்ள இடமாக இருப்பதாகலின் கொய் பொழில் என்றார். துவரை - துவரையம்பதி. ஆவது கண்ணன் வீற்றிருக்கும் வடமதுரை. அருட்பாடு-இசைந்தமை அருளிச் செய்தல்.

(12) இடை - இடம். கொங்கு அலர் தார் – தேனொழுகும் மலர் மாலை. வாய் - இடம்; வாய்மையுமாம்.

வரவறிக என்றுரைத்தார் வானரத்தால் அன்றங்
கரணிலங்கை செற்றாய் அறி.

எனக் கேட்டுப் பேரன்பினனாய் மற்று அவனுக்குச் சிறப்புச் செய்து யாதவ வேந்தர்களோடும் யாங்ஙனம் படையெழுந்தான் கண்ணன். (கங)

14. அச்சஞ்சூழ் சாபம் அரசழிய வந்தவன்தண்
மச்சஞ்சூழ் நாடன் மகனோடும்—பிச்சஞ்சூழ்
மாச்சுற்றத் தேர்சுற்ற மாலவன்தான் வந்தான்தன்
கோச்சுற்றம் அத்தனையும் கொண்டு.

இவ்வகையே சுவேதனோடும், அபிமன்னு, துருபதன் ஆகியவரோடும், சாத்தகி உள்ளிட்ட தம்பிமாரோடும், சாம்பன் முதலாய முதன்மையான மக்களோடும் கண்ணன் பலதேவன் வந்து காண மனமகிழ்ந்து இனிதிருந்த இடத்துச் சுவேதனைக் கொண்டு சென்று மச்சவேந்தனுக்குக் காட்ட அவன் எத்தன்மையனாய் யாது செய்தானோ வெனில் : (கச)

15. செல்வனைப் புல்கித் திருநெடுங்கண் ணீர்சோர
வெல்ல விருந்த வினையேனை—அல்லற்
படவந்தாய் என்றும் படர்ந்தனையோ என்றும்
தடவந்தான் தன்மகனைத் தான்.

இவ்வகை, தன் செம்மலர்க் கண்ணீரருவி சோர விம்மி விம்மி வெய்துயிர்த்துச் சுவேதனைத் தழுவிக் கொண்டு சாலப்பொழுது எண்ணியிருந்து கண்ணனை நோக்கி யாது சொன்னான் விராட மன்னன் : (கரு)

---

(13) மாமி - குந்தி. வம்பு அவிழ் தார் - புதிதாய் மலர்ந்த மலரால் ஆகிய மாலை. மணிவண்ணன்–நீலமணி போலும் நிறமுடைய கண்ணன். வானரம் – குரக்குப்படை. செற்றாய் – அழித்தாய். கண்ணன் தோற்றரவுக்கு முன்னையது இராமன் தோற்றரவாகலின் 'வானரத்தால்...............செற்றாய்' என்றார்.

(14) 'அச்சஞ்சூழ் சாப' வரலாற்றைப் பதினெட்டாம் வெண்பா உரையிடைக் காண்க. 'மச்சஞ்சூழ் தண்நாடன்' என இயைக்க. பிச்சம் - இறகு, குஞ்சம். மா – குதிரை. மாலவன் – கண்ணன். கோச்சுற்றம் – அரச சுற்றத்தார்.

(15) புல்கி - தழுவி. 'வினை வெல்ல இருந்தேனை' என இயைக்க. தடவந்தான் – தடவினான். படர்தல் – அகலுதல்; நினைதலுமாம்.

16. வாழி திருவடியாய் மண்ணுலகை மூவடியால்
ஏழுலகுங் கொண்ட இணையடியாய்—சூழொளிசேர்
பொங்கிருந்தார் வேணி புனையும் திருவடியாய்
எங்கிருந்தான் சொல்லாய் இவன்.

அன்றியும், (கசு)

17. எங்குத் தலைப்பட்டாய் எங்கிவன்போய்த் தான்பயின்
அங்கிவனை யுற்றனவும் ஆழியாய்—இங்கிவனை [ருன்
யானிழந்த காரணமும் எல்லாம் எமக்கறிய
ஏனமாய் நின்ருய் இயம்பு.

எனக் கேட்டு யாதருளிச் செய்தான் கண்ணன் : (கஎ)

18. செற்றவனைக் காய்ந்த திறமும் சிவேதன்போய்
நற்றவங்கள் நாடினதும் நன்ருக—மற்றவன்தான்
தங்கட் குதவினதும் தார்வேந்தற் குற்றுரைத்தான்
வெங்கட் கடாயானை வேந்து.

எ - து : "இவன் பண்டு வானவனுக வாழுங்காலத்து எட்டு வசுக்கள் இவனை ஒருகாரணத்தாற் 'சாப' மிட, அச் 'சாபம்' இவன் பெயரெழுதிய ஓர் பகழியினுல் ஏவுண்டு மயிலுருவாய் நின் அருகு வீழ்தலும், நீ அஃதுணராது முனிய, ஒரு பரிசினுல் உய்ந்து போந்து சிவபெருமானை நோக்கிப் பலகாலந் தவஞ்செய்து ஆங்கு அவன் திருவருளால் சிறந்த மெய்ம்மறையும் கணைப்புட்டிலும் பெற்றுப் போந்து, வானுலகுக்கு ஒப்பான துவாரகையில், அசுரரோடு எங்களுக்கு அமர் விளைந்த விடத்துப பதிறுயிரம் அசுரரையும் அரன் அருளிய சீரிய அம்பால் கொன்று வீழ்த்து, யாதவர்க்குள்ள

(16) "மூவடியால்............இணையாய்" 'மாவலிபால் மண்ணிரந்து மூவடி நிலம் பெற்று நெடிது வளர்ந்து ஈரடியால் அளந்த கதையை உட்கொண்டது. வேணி – குழல், கூந்தல்.

(17) தலைப்படுதல் - காணப்படுதல். பயிலுதல் - தங்கியிருத்தல். உற்றன - நேர்ந்தன. ஆழி - சக்கரப்படை. ஏனம் - பன்றி; வராகத்தோற்றரவுச் செய்தியைக் கருதியது.

(18) காய்தல் – முனிதல். உதவுதல் – அசுரர்க்கும் யாதவர்க்கும் போர் நிகழ்ந்த காலையில் தான்பெற்ற அரும்படைக் கலங்களால் அசுரரை அழித்து யாதவர்க்கு உதவுதல். தார் - மாலை.

பகைகெடுத்துக் கொடுத்து வீற்றிருந்த விடத்துக் குருநாட்டின் கொற்றவன் தருமன் வெளிப்பாடு கேட்டு இங்கு வருகின்ற என்னோடும் வந்தான், எனக் கேட்டுப் பேரன்பினனாக 'இளவரசியற்ற நாள் வரைக' என்று மணியணியும், மன்னர் சின்னமும், ஆடை வகைகளும் அகமகிழ்ந்தருளி அளவளாவி இனிதாங்குச் செல்லா நின்ற நாளகத்து ஒருநாள் மத்திர வேந்தன் சல்லியன் யாது செய்தான் : (கஅ)

19. மத்திரத்தார் கோமான் மருமகன்றன் பாலணைய
இத்திரத்து மேல்வந்தான் என்றென்று—சித்திரத்து
மானாக முன்னுயர்த்த மன்னன் வழிவிருந்து
தானாகச் செய்தான் சமைத்து.

இவ்வகை மருமக்கள் வெளிப்பாடு கேட்டு வருகின்ற சல்லியனைத் துரியோதனன் கண்டு, 'இவன் பெருவீரன்; வாய்மையாளன்; இங்கு இவன் போவதன் முன்னம் இசைவுபண்ண வேண்டும்' என்று மற்று அவனுக்கும் அவன் பெரும் படைக்கும் தருமன் விருந்து செய்தானாகத் தன் நாடு முற்றும் விருந்து செய்வித்துச் செல்லா நிற்ப, அக்கணத்துச் சல்லியனும் அஃதறியாமல் விருந்து அருந்தி இருந்த விடத்துக் கதுமெனத் துரியோதனன் வெளிப்பட்டுத் தன் குறை வெறுப்பும், தன் சோறுண்டமையும் சொல்லித் தனக்குப் படைத்துணை செய்வானாக மற்று அவன் கைப்பிடித்து யாது சொன்னான் துரியோதனன் : (கக)

வேந்தன் – விராடன். வெங்கட்கடாயானை – சினத்தால் சிவந்த கண்களையுடைய மதயானை. பகழி – அம்பு. ஏவுண்டு - ஏவப்பெற்று. அரன் - சிவன். நாள் வரைக - நாள் திட்டப்படுத்தித் தருக.

(19) மத்திரத்தார் கோமான் – சல்லியன். மருமகன் - தருமன். இத்திரம் – இவ் வுறுதி. மேல்வந்தான் – மேற்கொண்டு வந்தான். மானாகம் – மாநாகம், அரவக்கொடி. மன்னன் - துரியோதனன். வழி விருந்து - வழிக்கண் விருந்து. சல்லியன் செல்லும் வழிகளில் எல்லாம் துரியோதனன் திட்டமிட்டு விருந்து செய்தான் என்க.

கதுமென - விரைந்து. குறை வெறுப்பு – குறைத் துன்பம். கைப்பிடித்துக் கூறுதல், உறுதிமொழிதற்கு அடையாளம் என்க. மத்திரநாட்டு வேந்தனாகிய சல்லியன் மத்திரைக்கு உடன்பிறந்தான். அவள் பெற்ற பிள்ளைகள் நகுல சகாதேவர் ஆதலால் பாண்டவர் பக்கல் சல்லியனுக்கு இருந்த உரிமை அறிக.

20\. முன்னொருவன் செய்யும் உபகாரம் மூவுலகம்
தன்னைக் கொடுத்தாலும் சாருமோ—என்னே
உயிர்க்குறுதி யாக ஒருவர்சோ றுண்டார்
பிறர்க்குரிய ராவரோ பேசு.

ஏ - து. "என்சோறுண்டு என்னுடன் இனிதுரைத்துப் புறமன்னர்க்குப் படைத்துணையாமது போர்வீரர்க்கு அறமன்று கண்டாய்" என வேண்டிக் கொண்டு மனத்தை மாற்ற, மாற்றுண்டு துரியோதனனுக்கு உடன்பட்டுப் பின்னை யாது செய்தான் சல்லியன் : (உ0)

21\. அரவுயர்த்தோன் சல்லியனுக் காங்குவழி தன்னில்
விரவுதரு மன்விருந் தென்று—கரவினிடும்
சோற்றின் வலியால் துவக்குண்டான்; ஈதன்றே
மாற்றரசர் வஞ்சித்த வாறு.

இவ்வகை துரியோதனன் வஞ்சனையாற் சல்லியன் துவக்குண்டு மற்று அவனுடன் அத்தினபுரம் நோக்கிப் போகின்ற

---

(20) முன் - முற்பட. சாருமோ - இணையாக நிற்குமோ. ஒருவர் செய்யும் உதவி உலகினும் விஞ்சுதலைக்,

"காலத்தி னாற்செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது" —திருக்குறள் 102

என்பதாலும், உணவு உயிர்க்குறுதி யாதலை,

"உண்டி கொடுத்தோர் உயிர்கொடுத் தோரே
உண்டி முதற்றே உணவின் பிண்டம்" —புறநானூறு 18.

என்றும்

"மண்டிணி ஞாலத்து வாழ்வோர்க் கெல்லாம்
உண்டி கொடுத்தோர் உயிர்கொடுத் தோரே"
—மணிமேகலை. 11 : 95 : 6.

என்றும்

"மக்கள் யாக்கை உணவின் பிண்டம்"—மணிமேகலை. 10:90.

என்றும் வருவனவற்றாலும் அறிக.

(21) விரவுதல் - கலத்தல்; அஃதாவது உள்ளக் கலப்பு. கரவு – வஞ்சம். சோற்றின் வலி - சோறுண்டதால் உண்டாகிய செய்ந்நன்றி மறவாமையின் வலிமை; துவக்குண்டான் – கட்டுண்டான்; வயப்பட்டான் என்க.

எல்லைக்கண் துரியோதனனை நோக்கிச் சல்லியன் சொல்லுவான், 'தருமனைக் கண்டு மற்று அவன் சந்து ஒழியாதவாறு சொல்லி வருவேன்' என்றானைத் தகைந்து, நீ அங்கு மாறுபட்டுவிடாமல் வருவாயாக எனக் கேட்டு யாது சொன்னான் சல்லியன் : (உக)

22. தஞ்சம் எனஒருவர் சோறுண்ட தாளாண்மை
வெஞ்சமரில் அன்றி விளிவரோ—தஞ்சம்
அவர்க்காக வந்தேன்; அரவுயர்த்தாய், மீட்டாய்;
எமக்காமா றீதோ இயம்பு.

என்று இவ்வகை சொல்லிப் பின் யாது செய்தான் சல்லியன்: (உஉ)

23. அத்திப் பதிக்கே அடிப்படையைத் தானேவி
மத்தக் களிறனையான் வந்தணைந்தான்—மொய்த்தமணிச்
சென்னியான் முன்வணங்கத் தேர்வேந்தர் மாமனும்
பன்னினான் எல்லாம் பரிந்து.

இவ்வகை தன் பெரும்படையைத் துரியோதனனுடன் அத்தினபுரத்து ஏறப்போகவிட்டு உபலாவிய நகரம் புகுந்து தருமனைக் கண்டு யாது சொன்னான் சல்லியன்: (உங)

24. அரவுயர்த்தோன் செய்தவினை ஆங்குவழி தன்னின்
முரசுயர்த்தோன் முண்டவிருந் தென்றே—கரவினிடும்
சோற்றின் வலியால் துவக்குண்டேன் கண்டாயே
மாற்றரசர் வஞ்சனைக்கே வந்து.

என்று இவ்வகை அறநெறியுடன் நின்ற மத்திர வேந்தன் சல்லியனை நோக்கி யாது சொன்னான் தருமன்: (உச)

சந்து - பொருந்துதல்; இவண், உறவுமுறை. தகைந்து-தடுத்து.

(22) தஞ்சம் - புகலிடம். தாளாண்மை-ஊக்கம். சமர் - போர். விளிதல் - இறத்தல். அவர்க்காகத் தஞ்சம் வந்தேன் - பாண்டவர்க்காகத் துணைக்கு வந்தேன். மீட்டாய்-திருப்பினாய். எமக்கு ஆம் ஆறு ஈதோ - எமக்கு ஆகிய வழி இதுதானோ ?

(23) அத்திப்பதி - அத்தினபுரம். அடிப்படை - மூலப்படை மத்தம் - மதம். மொய்த்தல் – செறிதல். சென்னி - தலை. பரிந்து - வருந்தி.

ஏறப்போக விட்டு - அடையப் போகவிட்டு.

25\. எங்கள் துணையாய் எமக்காய் அவர்க்கானாய்
கங்கைசூழ் நாட்டவர்தங் காவலனே—துங்கப்
படைக்கடைமுன் நீநிற்கப் பாரதப்போர் வெல்லக்
கடைப்படுமோ வென்றான் கலந்து.

எ - து: நின்னை உறுதி செய்து துரியோதனன் எங்கள் நாட்டைத் தாராத அளவில், போர் செய்தாகிலும் கொள்ளக் கடவோம் என்றிருக்க எமக்குத் துணையாகாதபடி வஞ்சனையால் துரியோதனன் சோறுண்டு மற்று அவனால் மாற்ற முற்று வந்தா யாகில் மற்று அவனுக்கு நீ துணையாய் நிற்க அவனை யாவராலும் வெல்லவரிது; அல்லால் நின்னை வெல்லும் வழியையாவது கூறு வாயாக எனக் கேட்டுக் கருமென உடன்பட்டு யாது சொன்னான் சல்லியன்: (உரு)

26\. முன்னை வினையான் முரசுயர்த்தாய் நின்னுடைய
கையி னெடுஞ்சரத்தால் கால்சாய்வேன்—என்னைக்
கொலப்படுவாய் என்றுசொல்லிக் கூறினான் மாற்றார்
வெலற்கரிய சல்லியன்றான் மீட்டு.

இவ்வகை மத்திர வேந்தன் சல்லியன் ஊழாலுள்ள பகையினால் வரலாறுரைத்துப் போரில் நான் கொலப்படுவேன் என்று குறித்துப் பேசி விடைவேண்டுகின்ற சல்லியனை நோக்கி யாது சொன்னான் தருமன்: (உசு)

27\. என்னே விதியின் வலியிருந்த வாறென்று
பொன்னேர் முகம்வாடிப் பொங்கழலான்—முன்னே
மற்றேதுஞ் சொல்லி மறித்திரா தாங்கவற்குக் [போய்
குற்றேவல் செய்நீ குறித்து.

என்றிவ்வகை தருமன் சொல்லி விடைகொடுப்ப யாது செய்தான் சல்லியன்: (உஎ)

---

(25) துங்கம் – உயர்ந்த. படைக்கடைமுன் – படையின் முன்னிடத்தில். கடைப்படுமோ – நிறைவேறுமோ.

(26) சரம் – அம்பு. கால்சாய்வேன் – வீழ்ந்து படுவேன். என்னைக் கொலப்படுவாய் – என்னைக் கொல்வாய்.

28. இன்னனவுங் கூறி யெறிபுனல்வாய் மத்திரத்தார்
மன்னவனு மீண்டு வழிக்கொண்டான்—பின்னைப்
பொருந்தாத மன்னவரைப் போர்வெல்ல [1]என்றிங்
கிருந்தான் இமையோர்க் கிறை.

இவ்வகை சல்லியன் மீண்டு போகத் தருமன் கவலையறுக வழிவிடா நின்றதனைக் கண்ணன் கண்டு முறுவலித்தருளி இனிது அங்குச் செல்லாநின்ற நாளகத்து ஒருநாள் யாது நிகழ்ந்ததோ வெனில் : (உஅ)

29. அங்கண் இருமருங்கு மன்னர் அயலார
எங்கும் இடமின்றி ஈண்டிற்றே—பொங்கொளிமான்
தேர்வேந்தர் ஐவரையும் தீதின்மை கேட்டுவந்த
பார்வேந்தர் மன்னர் படை.

இவ்வகை பிறநாட்டு வேந்தரும் நண்பரும் உறவினரும் வந்து எல்லாத் திசையும் நிறைய ஈண்டியிருந்தான் தருமன் என்றவாறு. அப்பொழுது விராடன் யாது செய்தான் : (உகூ)

30. வின்மருவுந் திண்டோள் விசயன் திருமகற்குத்
தன்மகள் உத்தரையைத் தான்கொடுத்தான்—நன்மகிழ
நல்லியாணர் நாடி நகரங் களிகூரக்
கல்லியாணஞ் செய்தான் கலந்து.

இவ்வகை உத்தரையை அபிமன்னுவுக்குக் கொடுத்து உலக மகிழத் திருமணஞ் செய்து, பாண்டவரும் மனமகிழ்ந் திருந்து அங்குச் செல்லாநின்ற நாளகத்து ஒருநாள், தருமனையும் நண்பர் களையும் உறவினர்களையும் கொண்டு சென்று உபலாவியம் என்னும்

---

(28) எறிபுனல் - அலைநீர். வாய் - இடம். இமையோர்க்கு இறை - கண்ணன்.

(29) அங்கண் – அவ்விடத்து. மருங்கு – பக்கம். அயலார அடுத்திருக்க. ஈண்டுதல் – நெருங்கிக் கூடுதல். மான் – குதிரை. தீதின்மை – நலம். "படை இடமின்றி ஈண்டிற்" றென்க.

(30) விசயன் திருமகன் – அருச்சுனன் திருமகனாகிய அபிமன்னு. நல் யாணர்; நல்லியாணர் – நல்ல புதிய வருவாயினர். "அருஅ யாணர்" (புறம். 375) கல்லியாணம் - திருமணம். நல்லியாணர் என்பதன் எதுகை நோக்கிக் கலியாணம் கல்லியாணமீ ஆயிற்று. யக்கிய சேனன் – துருபதன். உத்தரன் – விராடவேந்தன் மைந்தன்; இவன் உடன்பிறந்தாள் உத்தரை. இவனுக்கு மூத்தான் சுவேதன்.

பா. வே : 1. என்றே யிருந்தான்.

நகரம் நண்ணி, உத்தரனால் அமைக்கப் பெற்ற பாடிவீடுகளில் பார்வேந்தரை இருப்பாராக்கிச் செல்லாநின்ற நாளகத்து ஒருநாள், தருமன் அரசர் புடைசூழக் கண்கவரும் கழிவனப்பிற் கருங்குழலியர் வெண்சாமரை யிரட்ட அரியணைமிசை யிருந்த பொழுது கண்ணன் முகம் நோக்கி யாது விண்ணப்பஞ் செய்தான் யக்கிய சேனன் : (௩௦)

31. பட்ட நுதல்யானைப் பாண்டவரோ டாடவர்கள்
ஒட்டிய நாளே உறைந்தார்கள்—விட்ட
நறுமா மலர்ப்படப்பை நன்னாட்டில் தாயம்
பெறுமா றுலகளந்தாய் பேசு.

எ - து. "அத்தின புரத்துச் சூதாடிய ஞான்று துரியோதன னுடன் ஒட்டிய பரிசே பதின்மூன்று ஆண்டும் உறையப்பெற்றது. இனி இவர்கள் நாடாளும் உரிமை பெறுமாறு திட்டமிட்டுச் சொல்" என்ன யாதருளிச் செய்தான் கண்ணன் : (௩௧)

32. ஆண்டு பதின்மூன்றுஞ் சென்றன வென்றுரிமை
வேண்டி விடுக விறல்வேந்தீர்—வேண்டினாற்
பார்காட்டித் தந்தானேல் தந்தானும் தாரானேல்
போர்காட்டிற் றன்றே பொர.

எ - து. வாய்மை யுரை வழுவாமல் அத்தினபுரத்து ஒட்டிய பரிசே பதின்மூன்று ஆண்டளவும் காடுறைந்து வந்தார். இனி, தருமன் நாட்டைப் பெறுமாறு யாது? என்று வீடுமர் துரோணர் விதுரர் ஆகியோரைச் சான்றாக வைத்துத் துரியோதனனை நாடு வேண்டத் தாரானாகிற் போர் செய்தாகிலும் உரிமை கொள்ளக் கடவோம் என்று கண்ணன் அருளிச் செய்யக் கேட்டு அருகிருந்த பலதேவன் யாதருளிச் செய்தான் : (௩௨)

---

(31) பட்டநுதல்; நுதல்பட்டம் - நெற்றிப் பட்டம். ஒட்டிய நாள் - உடன்படிக்கை செய்து கொண்ட காலம். படப்பை - வயல் நிலம், தோட்டம். தாயம் - உரிமை. உலகளந்தான் - கண்ணன் ஒட்டிய பரிசு - ஒட்டியவாறு.

(32) விறல் - வலிமை. வேண்டினால் - தூது சென்று வேண்டினால். தந்தானேல் - தந்தான் என்றால். உங்களுக்குரிய பார் இது என்று காட்டித்தாரானாயின் அவன் குறிப்புப் போர் காட்டிற்றாகக் கொள்க என்றவாறாம்.

33. அவனு முடிக்குரியான் தோன்றல் அவனுக்
கிவனும் இடுகவற்றால் தோற்றான்—அவனும்
அரசிழவா வண்ணம் அறிந்துரைமின் என்றான்
வரைகெழுதோள் மன்னன் மதித்து.

எ - து. இக்குலத்தின் மூத்தவன் மகன் ஆதலிற் றுரியோதனன் தருமனைத் துன்புறுத்திக் கொண்டானும் அல்லன். வீடுமர் துரோணர் விதுரர் ஆகியோரைச் சான்றாக வைத்துத் தோற்றது என்றும், தொல்லுரிமை என்றும் இவ்விரண்டும் நினைத்துத் தருமனுக்கும் துரியோதனனுக்கும் சந்தாகுமாறும் இதமாமாறும் எண்ணித் துணிவீராமின் என்று பலதேவன் சொல்லக் கேட்டு யாது சொன்னான் சாத்தகி : (௩௩)

34. மான மணிவரைத்தோள் வாழ்வேந்தீர் மற்றிவன்றன்
மேனியிற் காட்டி வெளுத்ததே—தானோர்
அறத்தினால் அன்றியே அன்போருபால் ஓடி
மறத்தினால் கட்டுரைத்த வாக்கு.

எ - து. வாய்மை யுரையே நோன்பாகக் கொண்ட தருமன் வேள்வி செய்ததற்குப் பொறாது அரசநெறி துறந்து, ஆசான் உரை கடந்து, சகுனி வல்ல மாயச் சூதினால் அரசவையில் வஞ்சித்துச் சூதாடிப், பொருள்களும் ஊர்திகளும் வளநாடும் வரையூர் பதியும் கொண்டானை அறநெறி செய்தான் என்று துரியோதனனை ஒருபாற் கோடி அரசவையின்கட் பேசுகின்றாய்; 'உருவி னகத்தே உணர்' வென்பது பலதேவனிடத்தே காணப் பட்ட தென்று சாத்தகி முனிந்துரைப்ப, மற்று அவனைக் கைகவித்து யாதருளிச் செய்தான் கண்ணன் : (௩௪)

---

(33) அவன் - துரியோதனன். முடிக்குரியான் தோன்றல் - ஆட்சி செய்தற்குரிமையுடைய திருதராட்டிரன் மைந்தன். கவற்றால் தோற்றான் - சூதினால் தோற்றான். வரைகெழுதோள் - மலை போன்ற தோள். மன்னன் - பலதேவன். சந்து - பொருத்தம். இதம் - நன்மை. சாத்தகியாவான் சத்தியகன் என்பவனுடைய மைந்தன். கண்ணனுக்கு ஒன்று விட்ட தம்பியாக அமைந்தவன்.

(34) மானம் - பெருமை. மேனி - உடல் (நிறம்). ஓர் - ஒப்பற்ற. கட்டுரைத்த - கூறிய. அன்பொருபால் ஓடுதல் - துரியோதனன் பக்கம் சார்ந்துரைத்தல். உடலினும் வெள்ளையாக இருந்தது உரை என்று பழித்தான் சாத்தகி. பலதேவன் வெண்ணிற மாதல், "கடல்வளர் புரிவளை புரைய மேனி அடல்வெந் நாஞ்சிற் பனைக்கொடி யோனும்" என்பதால் (புறம். 56) அறிக. வெண்மை அறிவின்மை

35. மூத்தான் இருக்க இளையான் அரசாடல்
கோத்தருமம் என்கின்றாய் கொற்றவனே—மாத்தண்
செறிகுன்றத் தெள்ளருவி சேயலைக்கு நாடா
நெறிகுன்றச் சொல்லுவதோ நீ.

எ - து. ஆசான் உரையே அமைதியாகக் கொண்டு பற்றற்றிருந்த தருமனை இகழ்ந்து வஞ்சித்துச் சூதாடி மண் கொண்டது அரசமுறை அன்றுகாண் என்று அறிவழிந்து பின்னும் நாடு கொடாமல் இருப்பது கேட்டார்க்கு வழக்கன்றே என்று பலதேவனை நோக்கியுரைத்துப் பின்னும் தருமனை நோக்கி "ஈண்டளவுங்கள் உரிமை வேண்டி மதியாளனாக இருப்பவன் ஒரு மறையோனை அழைத்துத் துரியோதனனிடத்துப் போகவிடுத்து நாடுவேண்டி மற்று அவன்றன் உளமறிந்து, தாரானாகில் எமக்கு அறிவிப்பீராமின்" என்று அருளிச் செய்து கதுமென மற்று அவரைவிட்டு நீங்கியாது செய்தான் கண்ணன்: (நரு)

36. முன்னை முதற்பொருளாய் மூவுலகுந் தானாகிப்
பின்னை யமரர்களாம் பேற்றியான்—தன்னையே
எண்ணினார் உள்ளத் திடரகற்ற வல்லானும்
நண்ணினான் அத்துவரை நன்கு.

எ - து. தருமன் முதலானவர்களுக்கு விடைகொடுத்து உபலாவிய நகரம் விட்டு நீங்கிச் சாத்தகியையும் திட்டத்துய்மனையும் மற்றும் சுவேதனை ஒழிந்த மன்னர் மைந்தர்களையும் நாராயண கோபாலரையும் உடன் கொண்டு வெண்குடை மேல் நிழற்றக்

யாதலை, "வெண்மையெனப்படுவது" என்னுங் குறளான்(844) அறிக. வரையூர்பதி - கணக்கிடமுடியாத ஊர்கள். கோடுதல் – சாய்தல், வளைதல்.

(35) மூத்தான் - தருமன். அவன் துரியோதனனுக்கு அகவையால் முதிர்ந்தான் ஆதலால் அம்முறை கூறினான் கண்ணன். மூத்தவர்க்குரித்தரசெனும் முறைமை" என்பது கம்பன் வாக்கு. (அயோத். 168)

(36) பெற்றி - தன்மை. தன்னையே எண்ணினார் உள்ளத்து இடர் அகற்ற வல்லான், கண்ணன். துவரை - துவரையம்பதி. திட்டத்துய்மன் - துருபதன் மகன். பாஞ்சாலியின் உடன் பிறந்தான். துரோணனைக் கொல்வதற்காகவே துருபதன் செய்த வேள்வியில் பிறந்தவன். நாராயண கோபாலர், திருமால் வடிவினர். ஆயர்பாடியில் கண்ணனுடன் ஆடிய ஆயமகளிர் வழிவந்தவர். இரட்ட – அசைக்க, விசிற.

கலுழக் கொடி விசும்பணுவ எம்மருங்கும் எழில்பணிக்கவரி அருகிரட்ட எழுந்தருளித் துவரை மாநகர் புகுந்தருளினன் கண்ணன் என்றவாறு. இப்பால் சிறிது பொழுது கழித்துத் தருமனும் விராடவேந்தனும் ஒருதனி யிருந்து செய்பத்தக்கன குறித்து வீற்றிருந்த தருமனை நோக்கி யாது சொன்னன் விராட வேந்தன் : (௩௬)

37. உரிமைதனை வேண்டி ஒருவனைநாம் விட்டாற்
பெருமையர வக்கோடியோன் பேசில்—வெருவச்
செருவிளைத்துப் பார்கொள்ளச் செங்கணொடு மாறன்
அருவரைத்தோள் அன்றோ அரண்.

ஏ - து. சான்றோர் துணையாவது முன்புசென்று வேண்டி னார்க் கன்றோ என்றும், துரியோதனன் நாடு தாரானாகின் பின்னைப் போர் புரிந்தாயினும் நிலங்கைக்கொள்ள வேண்டுமென்றும் நிறையறிவால் கண்ணன் அருளிச் செய்தபடியை ஆசான் அருள் உரையாகக் கொண்டு துணிந்து நமக்குப் போர்க் களத்தில் வந்து துணைசெய்வார்க்கும் அரசர்களுக்கும் உங்கள் வெளிப்பாடும் தீதின் மையும் கூறிய உறுதிப்பாடு கெடாமல் வந்து நாடு வேண்டி விடுவதாகத் துணிந்தவாறும் பேசி ஈண்டன் விடுப்பாயாக என்று பாஞ்சால வேந்தன் சொல்லக் கேட்டுப் பல்வேறு வகைப்பட்ட தூதரையும் பல்வேறு நாடுகளுக்குப் போக்கித் துரியோதனனிடைப் போவார் யாவரோ வெனத் தெரிந்து தம்முடைய வேள்வியா சானாகிய தௌமியனை அழைத்து யாது சொல்லி விடுத்தான் தருமன் : (௩௭)

38. தந்தைக் குரியதுவும் தானாள நானாள
எந்தைக் குரியதோன் நீயுமே—வந்து

(37) அரவக்கொடியோன் பெருமை பேசில் என்றியைக்க. பெருமை யாவது நாடு தாரேன் எனச் செருக்கி யுரைத்தல். செரு - போர். மால்+தன்=மாறன். பார்கொள்ள மாறன் தோளே அரண் என்க. கண்ணன் அருளால் கைவரப்பெறும் என்பதாம்.

ஈண்டன் - விரைந்து. பாஞ்சால வேந்தன் - துருபதன். துரி யோதனனிடைத் தூது செல்வான் 'உலூகன்' என்பார் வில்லி. உலூகன் தூதுச் சருக்கம் காண்க.

(38) தந்தைக்குரிய தாயத்தைத் தானாள்வானாக. எந்தைக் குரிய தாயத்தை நானாள ஈவானாக என்று தூது விடுத்தான் தருமன். தந்தை - திருதராட்டிரன். எந்தை - பாண்டு. புனம் - காடு. புக்கு - புகுந்து. பட்டாங்கு - உண்மை.

புனத்தினைக்கே மான்புகுதும் பொன்வரைசூழ் நாடன்
மனத்தினைக்கண் டாய்வை அறிந்து.

எ - து. நீ சென்று அத்தினபுரம் புக்குத் திருதராட்டிரனை முன்னங்கண்டு எங்கள் தீதின்மையும் வெளிப்பாடும் பேசி மற்றவனை அனைவரும் வணங்கிய வணக்கத்தை யுரைத்து அவன் அருளால் வீடுமர், துரோணர், கிருபர், அசுவத்தாமன் உள்ளிட்ட நண்பர் உறவினரைச் சான்றாக வைத்துத் துரியோதனனைக் கண்டு முன்னம் ஒட்டிய காலம் கழிந்த பட்டாங்கு முரைத்து நாடு வேண்டினால் தாரானாகில் நாட்டில் பாதி தரினும் கொண்டு போதுக என்று வேள்வி ஆசானை விடுப்ப, அவனும் விடை கொண்டு புறப் பட்டு இரண்டு நாள் வழியிற்றங்கி மூன்றாம்நாள் அத்தினபுரம் புகுந்து திருதராட்டிரனைக் கண்டு தருமன் முதலானவர் வெளிப் பாடும் தீதின்மையும் மற்றவர் வணக்கமும் தெரிவித்து, ஆங்கவனை விட்டு நீங்கித் துங்கக் கருவிக் கடாக் களிற்றுத் துரியோதனனைக் காண்பானாக வேள்வி யாசான் சென்ற எல்லைக் கண் துரியோதனன் இருந்த திருக்கோலம் யாங்ஙனமோ எனில்: (௩௮)

39. சுற்றத் தவர்சூழத் தொல்லரசர் போற்றிசெய்யக்
கற்றை மணிக்கவரி காலசைப்ப—முற்றும்
பொருந்தாத பஞ்சவரைப் பொய்ச்சூதில் வென்றான்
இருந்தான் எழிலா சனத்து.

இவ்வகை யிருந்த துரியோதனனை வேள்வி யாசானுஞ் சென்று கண்டு வாழ்த்துரைத்து நிற்ப மற்றப் பார்வேந்தனும் இருக்கையும் இலைபாக்குங் கொடுத்து அளவளாவி இனிதிருந்த எல்லைக்கண் மன்னர் மன்னனாகிய துரியோதனனை நோக்கி யாது சொன்னான் வேள்வியாசான்: (௩௯)

40. காடுறையும் ஆண்டும் கரந்துறையும் ஆண்டும்போய்
நாடுறையும் பாண்டவர்நாள் நண்ணியவால்—நீடுறையிற்

(39) கற்றை - தொகுதி, திரட்சி. கால் - காற்று. பஞ்சவர் ஐவர்; அவராவார் பாண்டவர். முற்றும் பொருந்தாமை-எவ்வகைத் தன்மையாலும் தன் இயல்புக்குப் பொருந்திவாராமை. சூதாடுதலை அவரே விரும்பி ஏற்றுக்கொள்ளாமல் வலியுறுத்தலைக் கொண்டு ஏற்றமையால் அதனைக் குறித்ததுமாம். வென்றான் - துரியோதனன். சூதும் நேர்மையாய் ஆடினானில்லை என்பார் "பொய்ச்சூதில்" என்றார்.

(40) நண்ணியது - நெருங்கிவந்தது. நீள் + துறை. வாவி-குளம். புனல் - நீர். நன்றடா, கோவேந்தே என்பன துரியோதனனை நோக்கிய விளிகள்.

பூவேந்து வாவிப் புனலேந்து நன்னாடா
கோவேந்தே [1]யாதுன் குறிப்பு.

என - து. தருமனுக்கு நீ செய்த உறுதி நாள் நிறைவாயிற்று. இனி உன் கருத்து என்கொலோ எனப்பேசி வேள்வி யாசான் கேட்ப யாது சொன்னான் துரியோதனன் : (௪0)

41. நற்றேர் விராட நகரத் திருந்தவற்குக்
குற்றேவல் செய்து [2]குறைந்தாரேல்—மற்றினியோர்
நன்னாடு மன்னவனும் நாடுகபோய்க் காலத்தால்
என்னாடு கைவிடேன் யான்.

எனக் கேட்டு யாது சொன்னான் வேள்வி யாசான் : (௪௧)

42. தன்றாதை தன்னுரிமை தானாள நானாள
என்றாதை என்னுரிமை ஈயுமே—முன்றாதில்
வண்டிரங்குந் தாரான் மனமறிந்து மற்றிதனைக்
கண்டுரைத்து வாவென்றான் காண்.

என - து. முன்னம் ஒட்டிய பரிசே காடுறைந்து விராடபுரத்து வெளிப்பட்டிருந்தமையால் இனித் தந்தைக்குரியது தானாள, எந்தைக்குரியது யானாள, விடுவதுவே அரசநெறி என்று உரைத்தான் தருமன் என்று வேள்வியாசான் சொல்லக் கேட்டு யாது சொன்னான் துரியோதனன் : (௪௨)

---

(41) குறைந்தாரேல் – இழிவுற்றார்கள் என்றால். விராடநகரக் குற்றேவலில் வெறுப்புண்டாயிற்று என்றால். காலத்தால் வேறோர் நாட்டையும் மன்னனையும் தேடுவாராக என்றான் துரியோதனன். அவர்க்கு உரிமை சிறிதும் இல்லை என்றும் தான் தருவதாய் இல்லை என்றும் கூறுவானாக, "என்நாடு கைவிடேன் யான்" என்றான்.

(42) தாதை – தந்தை. முன் தாதில் – முன்னே விளங்கும் மலர்களில். தாது – பூவிதழ். வண்டு இரங்கும் – வண்டு ஒலிக்கும். தாரான் - மாலையை அணிந்தவன், துரியோதனன். மலரைப் பறித்து மார்பில் கொண்டமையால் வண்டே வந்து இரங்கும் நிலையாயிற்று என்பது செய்தியொடு பொருந்திய அடைமொழியாம். சொல்லியது சொல்லியவாறு சொல்லத்தக்கது தூது என்பதைத் "தந்தைக் குரியதுவும்" என்னும் வெண்பாவுடன் (38) இதனை ஒப்பிட்டுக் கண்டறிக.

பா. வே: 1. என்னுன். 2. வெறுத்தாரேல்.

43. எந்தைக் குரிய தெனதே இடுகவற்றால்
தந்தைக் குரியதுமுன் தான்றோற்றான்—முந்தி
வலனு ணெடுங்கொடிமேன் மாமுரசங் கொண்டான்
இகல்தாயம் என்னோ இனி.

இவ்வகை அறநெறி அழியப் பேசக் கேட்டுத் துரியோதனனை நோக்கி யாது சொன்னான் விதுரன் : (௪௩)

44. காடுறைந்த பின்னைக் கரந்துறைந்தா லுங்கட்கு
நாடுதரு வேனென்ற நாப்புரண்டால்—கோடுதியே
கொள்ளா துலகங் குமகாள் திருநம்மை
நல்கார் பெருந்தக்கோர் நன்கு.

ஏ - து. "பன்னீராண்டு காடுறைந்து ஓராண்டு கரந்துறைந்து பின்பு வந்து உங்கள் நாடு கொள்ளக் கடவீர் என்று உறுதி மொழிந்த நாள் முதல் தருமன் தம்பிமாரோடும் போய்ப் பல காலம் உடல் துயருற்று வந்து தம்முரிமை வேண்டக் கொடாய் ஆகில் உனக்கும் உறவினர்க்கும் இறப்பே உறுதி கண்டாய்" என்று விதுரன் சொல்லக் கேட்டும் உடன்படாதிருந்த துரியோதனனையும், திருதராட்டிரனையும் நோக்கி யாது சொன்னான் விதுரன் : (௪௪)

45. அன்றுன் சிறுவன் துணிந்தனவும் அவ்வவனே
யின்றென்சொற் கேளாத ஏழைமையும்—நன்றென்றே
ஞாலக்கோ ளாயுள்ள நல்வேந்தர் எல்லோர்க்குங்
காலக்கோ ளாகக் கருது.

---

(43) வலன் – வெற்றி. கொடிமேல் முரசங்கொண்டான் – முரசக் கொடியுடையான்; தருமன். இகல் – ஒப்பு. இகல் தாயம் – ஒப்பான உரிமை. இனி இகலும் (போரும்) தாயமும் (உரிமையும்) ஆம். தூதுவிட்டவனே தோற்றவன் ஆதலால் "தான் தோற்றான்" என்று சுட்டினான்.

(44) "காடுறைந்த...........நாடு தருவேன்" என்றது துரியோதனன் முன்னே கூறிய உறுதிமொழி சுட்டியது. நாப்புரண்டால் – சொல்லை மாற்றினால். கோடுதி – கொள்வாயாக. நீ கொள்ளலாம் உலகம் கொள்ளா *தென்க. திரு – திருமகள். நல்கார் - அருள் செய்யார்.

(45) அன்று - சூதாடி வெற்றிகொண்ட அன்று. உன் சிறுவன் – துரியோதனன். துணிந்தது - உறுதி மொழிந்தது. ஏழைமை – அறிவின்மை. நன்று, இகழ்ச்சிக்குறிப்பு. ஞாலம் - உலகம். கோள் –

எ - து. துரியோதனன் முன்னம் துச்சாதனனை விடுத்துப் பாஞ்சாலியைக் கூந்தலைப் பற்றிய ஞான்று தருமன் பொறுத்ததனை எதுவென்று கருதுகின்றீர்? அவர்க்கு நாடு கொடுத்து அகற்றுவீராகில் அன்று நீர் செய்த சீர்கேடெல்லாம் சீராம் கண்டீர் என்று விதுரன் சொல்லக் கேட்டும் உடன்படாதிருந்த திருதராட்டிரனையும் துரியோதனனையும் முகம் நோக்கி யாது சொன்னான் வீடுமன் : (௬௫)

46. ஏற்ற செருக்களத்தில் எல்லோமை யுங்குறித்த
கூற்ற மிரண்டினையுங் கோள்விலக்கி—யேற்றங்
குருநாடு பாகமே கொள்கிற்பார் கண்டாய்
ஒருநாடு வேந்தர்க் குரை.

என்று பின்னுஞ் சொல்லும் வீடுமன் : (௬௬)

47. மண்டபத்துக் கூவுவித்து மாமடிதன் வஞ்சனையாற்
கொண்டதனிப் பாகங் கொடாயாகி—லண்டர்
குலவேந்தர் தாங்களே கொள்விப்பார் கண்டாய்
நலவேந்தர் வேந்தாதந் நாடு.

எ - து. வீமன் தண்டு பிடித்துக் காலாளாய் வந்து இழியுமாகிலும், அருச்சுனன் காண்டிவங் கைப்பிடித்து அடல்நெடுந் தேரேறி வருமாகிலும், கண்ணனை முன்னீடாகக் கொண்டு மூவுலகங்கள் கூடிவரினும், காலன் தானே கயிறு பிடித்துத் தும்பை சூடிவந்து நிற்குமாகிலும் மற்று அவரைப் போர்க்களத்தில் வெற்றிகொள்ள யாவர்க்கும் அரிது கண்டாய்; ஆதலால்

கொள்கை; அறநெறி. காலக்கோள் - உலக அழிவு காலத்துத் தோன்றும் கோள். கோள் - மண்டலம், விண்மீன்.

(46) எல்லோமையும் - நம் எல்லோரையும். இரண்டினையும் கோள் விலக்கி - இரண்டு பங்கையும் கொள்வதை விலக்கி. வேந்தர் - பாண்டவர். போர்க்களம் புக்கால் அனைத்தும் போம். அதை விலக்கின் குருநாடு மட்டும் கொள்வார். ஆதலால் வேந்தர்க்கு ஒரு நாடு தருவதாக உரை என்றான் வீடுமன்.

(47) கூவுவித்து - அழைத்து. மாமடி - மாமனார். "திருமகள் எனப்பெற்ற மாமடிகள்" —முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ். 7. "மந்தண மிருந்துபுரி மாமடிதன் வேள்வி சிந்தவிளையாடுசிவ லோகன்" —தேவாரம். மாமடிகள் சகுனி. பாகங்கொடாய் ஆகில் தம் நாடு குலவேந்தர் கொள அண்டர் செய்விப்பார் என்க. தெய்வமே அவர்கள் பக்கல் நிற்கும் என்பதாம்.

அவருடனே எதிருமாகில் எரிசுடர் விளக்கில் விட்டில் பறந்தாற் போல் வீம அர்ச்சுனர் சினத் தீயில் இவ்வனைவோரும் புக்கு அவியின் அல்லது மற்று அவரைப் போர்க்களத்தில் வெற்றிகொள்ள அரிது கண்டாய் என்று வீடுமன் சொல்லக் கேட்டு யாது சொன்னான் கன்னன் : (சஎ)

48. அழித்தழித்தேன் கண்முகப்பே யர்ச்சுனன்ற னாண்மை
யிழித்தவரை நல்லாட்க ளென்றோய்—சுழித்தரங்கஞ்
சிந்தியோ டும்பழனச் சேனாடா பாண்டவர்க்கா
வந்தியோ கங்கை மகன்.

எ - து. வீடுமன் நின்றேத்துவார் இருந்தேத்துவார் போலப் பாண்டவரைப் புகழ்ந்து வாழ்கின்றான். பொய்யாயிற்றோர் சொல்லைப் பொறுத்துக் கொண்டு வாழ்கின்றோ மற்றல்ல; வேயொன்று எரிபரப்ப மூங்கிற்காடு கொளுத்தினாற் போல மற்றிவன் நிற்கவன்றோ நமக்கும் நம் பெரும் படைக்கும் வருத்தம் வருகிறது என்று கன்னன் சொல்லக் கேட்டு மற்றிவனைக் கைகவித்துத் துரியோதனனை நோக்கி யாது சொன்னான் வீடுமன் : (சஅ)

49. தையல் சுயம்வரத்துஞ் சாய்த்துன்னை யீர்த்தமரர்
பொய்கைக் கரைப்பிணித்த போதகத்து—மையா
நிரைதுரந்த வஞ்ஞான்று நின்றானே யன்றோ
வரைதிண்ட தோளான் மகன்.

இவ்வகை அங்கர் கோன் தோல்விகளை வீடுமன் சொல்லக் கேட்டு மிகவும் வெய்துயிர்த்து யாது சொன்னான் கன்னன் : (சகூ)

---

(48) அழித்தழித்து - மீண்டும் மீண்டும். கண்முகப்பே - கண்முன்னே. இழித்து - பொதியென இறக்கி. தரங்கம் - அலை. பழனம் - வயல். பாண்டுவின் மகன் அல்லாத, கங்கை மகனாகிய நீ பாண்டவர்க்காகப் பேசவே இவண் வந்தாயோ என எள்ளினான் என்க. வந்தியோ - வந்தாயோ. நின்றேத்துவார், இருந்தேத்துவார்- சூதர், மாகதர்.

(49) தையல் - பாஞ்சாலி. உன்னை - துரியோதனனாகிய உன்னை. நின்றானே அன்றோ - நின்றானோடு இருந்தானன்றோ கன்னன். பாஞ்சாலி திருமணத்தின் போதும், நின்னைக் கந்தருவன் கட்டிக்கொண்டு வானிடைப் போம்போதும், விராட நகரில், ஆநிரை துரந்தபோதும் இவன் நின்றானே இருந்தான் அன்றோ எனக் கன்னனை இகழ்ந்தான் வீடுமன்.

50. மூதாதை தன்னை முகநோக்கித் தான்முனிந்து
போதாருஞ் சோலைப் புனனாடா—னீதானும்
வாயறியாய் மன்னர் வலியறியாய் வன்செருவிற்
போயறியா யென்றே புகன்று.

எ - து. இவன் முதியன் ஆகையாலும் போர்த் தகுதியாளன் அல்லன் ஆகையாலும் குருமொழியே தீர்வாகக் கொண்டு குணமல்லாதன கூறுகின்றான் என்று பின்னுஞ் சொல்லுங் கன்னன் : (௫0)

51. அத்திரங்க ளீந்தானை யம்பை பொருட்டாக
வித்தகத்தாற் பண்டொருகால் வென்றான்போ—லித்தனை
கல்லாத புல்லறிவிற் காங்கேயன் றன்செய்த [யே
வல்லாண்மை சொல்லுதிரோ மற்று.

எ - து. வித்தைகளும், சீரிய அம்புகளும் வேண்டினார்க்கே அருளிப் படையற்றிருந்த பரசுராமனை அவன் கொடுத்த சீரிய அம்புகளால் மற்று அவனை வென்றதல்லது மற்றிவனாற் செய்யப் பட்ட வீரச்செயல்கள் உளவாகில் இன்னதென்று வேந்தர்கள் சொல்லுவீராமின் என்று கன்னன் சொல்லக் கேட்டு யாது சொன்னான் விடுமன் : (௫க)

52. காளையர்கள் வாழ்வுங் கதித்தவர்கள் வில்வலியு
நாளை யறியலா நல்வேந்தே—வாளை
மடைத்தலையிற் பாயும் வளநாடர் கோவே
முடித்தலைகண் முன்னுருளும் போது.

இவ்வகை பேசிப் பாண்டவர்க்கு நாடு கொடாத அளவில் மற்றவருடன் பெரும்போர் உண்டாதலான் அஞ்ஞான்று அருச்சுனன் தன் அணிநெடுந் தேரேறி அம்புக் கூட்டிற் கைவைத்த

---

(50) மூதாதை - பாட்டன். போது - பூ. வாய் - வாய்மை.

(51) அத்திரம் - படைக்கலங்கள். அம்பை - காசியரசன் மகள். அவளையும் அவள் உடன் பிறந்த அம்பிகை, அம்பாலிகை என்பாரையும் வலிந்து கைப்பற்றிவரத் துணிந்தபோது உண்டாய போரில் கொண்ட வெற்றி இவண் சுட்டப்பெற்றது. காங்கேயன் - கங்கை மைந்தன்; வீடுமன்.

(52) காளையர்கள் - கன்னன் முதலியவர். கதித்தவர் - வீரமிக்கோர்; பாண்டவர் முடித்தலைகள் முன்னுருளும்போது அறியலாம் என்க.

விடத்து அருந்தேர் வலவரையும் போர் வீரர் ஆறுரையும் அவ்விடத்துக் காண்பேம்; பூலேக்குள்ளிருந்து ஆள்வலியும் ஆண்மைகளும் பேசவேண்டுமோ என்று பின்னுஞ் சொல்லும் வீடுமன்: (ருஉ)

53. **சித்திரனுர் வந்துன்றன் றிண்டோ ளுறப்பிணித்து**
வித்தகவான் போகவே வில்விசய—ளுெத்தங்
கணிநெடுந்தே ரேறி யவனுடனே வென்றுன்
மணியணிதோட் கட்டறுத்தான் வந்து.

எ - து. சித்திர சேனன் என்னும் கந்தருவ வேந்தன் நின்னேக் கட்டிக்கொண்டு போகின்ற ஞான்று இந்தக் காளே மன்னரும் படைவேந்தரும் புறகிட்டோட, அப்பொழுது அருச்சுனன் ஒருவனும் வந்து சித்திரசேனனே வெற்றிகொண்டு உன்பெருவரை அகலத்துக் கட்டறுத்து விடுவித்து மற்றந்தக் கயிறு கொண்டு போய்த் தன் அடிகளேகளுக்குத் தூக்கிட்டு வைத்தான் ஆதலால் மற்றதனேச் சென்று பாருங்கள் என்று பின்னுஞ் சொல்லும் வீடுமன்: (ருங)

54. **பாலூன்று நீணிரையும் பார்கோளப்போய்ப் பார்வேந்தீர்**
வேலூன்றி நின்றீர் விராடனகர்—மாலூன்றும்
வாயம்பால் வாழ்விசயன் மற்றும்மை வென்றிலனே
காயம்பா லாரக் கடிது.

அன்றியும், (ருச)

55. **சரந்துரந்து பார்த்தன் றனித்தேரை [1]யோட்டி**
னிரந்தொருவர் நேர்வாரு மின்றிக்—குரங்கின்

---

(53) சித்திரனுர் - சித்திரசேனன். பாண்டவர் காடுறைந்த காலத்துத் துரியோதனன் தன் செருக்கு மிகுதியால் பாண்டவரை அழுங்கச்செய்யக் கருதி அணுக, அதை அறிந்த இந்திரன் சித்திர சேனன் என்பானே விடுத்தான். அவன் தேரோடு வந்து துரியோதனனேப் பற்றிப் பிடித்துத் தேரில் கட்டிக்கொண்டு செல்ல, துரியோதனனுடன் வந்த கன்னன் முதலானேர் மீட்டமுடியாமல் போகத் தருமன் ஏவலால் வீமனும் அருச்சுனனும் மீட்டுத் தந்தனர் என்னும் கதையை உள்ளடக்கியது இவ்வெண்பா.

54 பால் ஊன்றுதல் - பால் பொழிதல். நீள் நிரை - நீணிரை. பெரிய ஆநிரை. வேலூன்றி நிற்றல், போர் செய்தற் காற்றுமை குறித்தது. மால் - திருமால். மால் ஊன்றும் வாயம் பால் வாழ் விசயன் - கண்ணன் குறிக்கும் குறிப்பின் படிவாழும் அருச்சுனன். காய் அம்பால் - சுடு கணேயால். ஆர - மிக.

பா. வே: 1. ஓட்டி நிறைந்தொருவர்.

கொடித்தேரைக் காணக் குழாஞ்சிதறி யோடும்
படித்தேரை யன்றே படை.

என்று பின்னுஞ் சொல்லும் வீடுமன் : (௫௫)

56. நாடறிய நாட்டார் சபையகத்தே பாஞ்சாலி
நாடறியத் தூசுரிந்த நாசத்தா—னூடறியத்
தன்னெவ்வந் தீர்க்கத் தழற்பூங் குழல்விரித்த
பெண்ணேயவ் வண்ண மகள்.

அன்றியும், (௫௬)

57. கங்கை தரித்தா னுடன்மலைந்த கட்டாண்மை
யங்கவன்ற னெஞ்சகமே யாங்கறியும்—பொங்கி
யருவானி லேறி யசுரரைமுன் கொன்ற
செருபூமி காணீர் செயித்து.

இவ்வகை கன்னனையும் மற்றிருந்த அரசரையும் நோக்கித் தோல்வி கூறிப் பின்னும் அறநெறி வழுவாமல் துரியோதனனை நோக்கி யாது சொன்னான் வீடுமன் : (௫௭)

58. பாண்டவர்கள் காடுறைந்து பார்வேண்டப் பார்வேந்தே
யீண்ட னவர்க்குரிமை யீயாயேல்—மூண்டவர்கள்
தெய்வமே பற்றாச் செருவேன் றுரிமையினன்
மெய்வழியாக் கொள்வார் விரைந்து.

---

55. சரந் துரந்து - கணை விடுத்து. நேர்வார் - ஒப்பார், எதிர்த் தலைப்படுவார். குரங்குக்கொடி அருச்சுனனுக்குரியது. அவன் கொடித் தேரைக் காணவே பகை படித்தேரையாய்ச் சிதறியோடும். தேரை - தவளை. படி - நிலம்.

56. தூசு - துகில். நாசம் - அழிசெயல். எவ்வம் - துன்பம். தழல் பூங்குழல் விரித்தல் - தழல் போன்ற செந்நிறத்தோடு விளங்கத் தன் மெல்லிய கூந்தலை முடியாது விரித்தல். வண்ணம்-அழகு. வண்ண மகள் - பாஞ்சாலி.

57. கங்கை தரித்தான் - சிவபெருமான். மலைந்த - போரிட்ட. கட்டாண்மை - திண்ணியதிறம். பாசுபதம் பெறத் தவமிருந்த காலையில் தவங்கெடுக்க வந்த பன்றியை எய்தபோது சிவபெருமானும் வேடனாகத் தோன்றி அப்பன்றியை எய்ய நேரிட்ட போராட்டச் செய்தி இதிலடங்கியுள்ளது. செருபூமி - போர்க்களம்.

58. ஈண்டன் - விரைவில். தெய்வமே பற்றா - தெய்வமே துணையாக. மெய்வழியா - நேர்வழியாக. "உரிமை யீயாயேல்...மெய் வழியாக் கொள்வார்" என்க.

இவ்வகை சொன்ன வீடுமனையும் ஆங்கிருந்த வேந்தர் குழாத்தையும் நோக்கி நகை செய்து துரியோதனன் சொல்லுவான்: உன்னாலும் துரோணராலும் விதுரனாலும் கன்னனாலும் பிற நாட்டு வேந்தர்களாலும் மற்றுமுள்ள மன்னர் மக்களாலும் எண்ணிறந்த நாற்படைகளாலும் காக்கப்படுவேனை வீம அர்ச்சுனரால் அழிக்கப்படும் என்றாய்; அதனால்பாண்டவர்க்கே சார்ந்து சொன்னாய் மூதாதை என மூணிந்து துரியோதனன் உரைப்பக்கேட்டு யாது சொன்னான் வீடுமன்: (ருஅ)

59. வலிமிக்க வாள்வீமன் வாளமரிற் சீறிச்
சலிமிக்க தண்டேந்திச் சார்ந்தாற்—புலிபுக்க
வாடு படுவது போலும் படுவமுன்ன
நாடு விடுவதே நன்று.

என்றிவ்வகை யுரைத்து அறநெறி வழுவபபேசுகின்றானை விட்டு நீங்கித் தன் கோயில் நோக்கிப் போனான் வீடுமன். இப்பால் மற்று அங்கிருந்த வீரரில், துரோணன் துரியோதனனை நோக்கி யாது சொன்னான்: (ருகூ)

60. உன்னுடைய பாக முனக்கே நிலையாக
அன்னவர்கள் பாக மவர்க்காகப்—பன்னலையேன்
மண்ணாடு கைவிட்டு வாள்வீமன் றோள்வலியால்
விண்ணாடு வாழ்வீர் விரைந்து.

இவ்வாறு அறநெறி பேசிய துரோணனைப் பேசுவ தொன்றின்றி யிருந்த பார்வேந்தனை நோக்கி அவ்விடத்திருந்த கிருபன் யாது சொன்னான்: (கூ0)

61. தம்பியர்க டற்சூழத் தார்வேந்தர் போற்றிசைப்ப
வம்பவிழ்தார் [1]மன்னா மகிழ்ந்திருந்தாய்—வெம்பியிட

59. வாள் அமர் - கொடியபோர். சலிமிக்க – அலைத்துத் துயருட்டவல்ல. புலிபுக்க ஆடுபடுவதுபோல் - புலியிருக்கும் இடத்தைத் தேடியடைந்த ஆடுபட்டழிவதுபோல். இவ்வுமையை "இடையன், சிறுதலையாயமொடு குறுகல் செல்லாப் புலிதுஞ்சு வியன்புலம்" என்னும் மதுரைக்குமரனார் வாக்குடன் ஒப்பிட்டறிக. (புறம். 54)

60. பன்னலையேல் – கூறுவிட்டால். விண்ணாடு வாழ்தல் – போரில் இறந்து புகுதல்.

61. வம்பவிழ்தார்-புதிதாய் மலர்ந்த மலராலாய மாலை. வெம்பியிட - வெதும்ப. ஏதிலர் – பகைவர். ஏவுண்டு – அம்பால் தாக்குண்டு பொன்னாடு – வீட்டுலகம்.

பா. வே: 1. மார்ப.

விந்நாடு கைவிட்டிங் கேதிலரா லேவுண்டு
பொன்னாடு வாழ்வீர் புகுந்து.

அன்றியும், (சாக)

62. சொன்ன சவுதாயஞ் சோராமற் றாயவனே
மன்னவர்கள் பாகம் வழங்குதியேல்—ஒன்னலரை
வென்றாயு மாதி விறல்வீமன் றோள்வலியைக்
கொன்றாயு மாதி கொடு.

இவ்வகை கிருபன் சொல்லக்கேட்டு முடி துளக்கித் தானும் இருந்த இருக்கை விட்டு நீங்கி அரசர்கட்கு விடை கொடுத்து மற்று ஆங்கு நின்ற பாண்டவ தூதன் தௌமியனுக்கும் வெவ்வுரையால் விடை கொடுத்துத் தன் கோயில் புக்கான் மன்னர் மன்னன் துரியோதனன் என்றவாறு. இப்பால், (சாஉ)

63. மன்றலந்தார் மன்னவனு மாக்கோயிற் புக்கதற்பின்
சென்றரசு வேண்டுந் திருமுனியு—நன்றிவர்தங்
கோத்தரும மென்னுக் குருமணிசேர் பூணாரு
மாத்தருமன் பாலணைந்தான் மற்று.

துரியோதனன் உடன்படாமல் உரைத்த செருக்குரையுங் கேட்டுத் தௌமியன் மீண்டு போந்து உபலாவிய நகரம் புகுந்து தருமனைக் கண்டு யாது சொன்னான் வேள்வியாசான் : (சாங)

64. வேந்தன் மறுப்ப விதுர னுரைத்தனவுங்
காந்தாரி கங்கைமகன் கட்டுரையுஞ்—சேர்ந்த
வடிமலர்க்கா லங்கர்கோன் வாக்கு முரைத்தான்
முடிமலர்த்தார் வேந்தற்கு முன்.

---

62. சொன்ன சவுதாயம் - சொல்லி உடன்பட்ட பொருள். சோராமல் - தவறாமல். ஒன்னலர் - பகைவர். சொல்லிய பாகம் வழங்குவதே பகைவரை வெல்லும் வழியும், வீமன் தோள் வலிமையைக் கொல்லும் வழியுமாம் என்றான் என்க. போரிட வாய்ப்பின்றிச் செய்தலே வீரர்க்குத் தோல்வியாம் என்பது கருத்து.

63. மன்றல் அம் தார் - மணமிக்க அழகிய மாலை. மாக்கோயில்—பெரிய அரண்மனை. திருமுனி - தௌமியன். இவர்தம் கோத் தருமம் நன்று - இவர்களுடைய அரசியல் அறம் அழகிது. என்னு - என்று. குருமணி - ஒளிமணி. பூண் ஆரும் - அணிகலம் பூண்ட.

64. மகன் என்பதைக் காந்தாரி, கங்கை என்னும் ஈரிடத்தும் கூட்டுக. காந்தாரி மகன் துரியோதனன். கங்கைமகன் வீடுமன். அங்கர்கோன் - கன்னன். முடிமலர்த்தார்வேந்தர் - பாண்டவர்.

இவ்வகை துரியோதனன் இடையிற் போய் நாடு வேண்டின வாறும், அவன் பேசிய செருக்குரையும், கன்னன் பேசிய கட்டாண்மையும், வீடுமர், துரோணர் விதுரர் உரைத்த அறநெறியும் வழுவாமல் எல்லாம் உரைத்து நின்ற வேள்வியாசானை நோக்கி யாது சொன்னான் தருமன் : (சுச)

65. மன்னன் மறுத்தனவு மற்றோ ருரைத்தனவுங்
கன்ன னுரைத்தனவுங் கட்டுரைத்து—மன்னவனை
நிந்தித்துச் சொன்ன நெறியெல்லா மாயனுக்குச்
சந்தித் துரைத்துவா தான்.

எ - து. துரியோதனனிடையிற் பேசிய அறநெறிகளும், அதனை மறுத்துரைத்த மன்னருடைய உரைகளும், வீடுமர் துரோணர், விதுரர் உரைத்த அறநெறிகளும் அவ்விடத்துக் கன்னன் பேசிய கட்டாண்மையும் வழுவாமல், யாவரும் அறியாது போய்த் திருத்துவரையம்பதி புகுந்து தேவதேவன் கண்ணனுக்கு விண்ணப்பஞ் செய்து மற்று அவன் அருளினபடி கொண்டு ஈண்டு வருவாயாக என்று தருமன் விடைகொடுப்ப விடைகொண்டு யாது செய்தான் வேள்வியாசான் : (சுரு)

66. தூய புரோகிதனும் போந்துதுவ ராபதியின்
மாயன் மலரடியில் வந்திறைஞ்சித்—தாயங்
கோடேனென்றான் வேந்தனக் கோவேந்த ரெல்லா
மடாதேன்றா ராழியா யாங்கு.

வேள்வியாசானும் போய் இரண்டு நாள் வழியில் தங்கி மூன்றாநாள் துவரையம்பதி புகுந்து கண்ணனைக் கண்டு திருவடி தொழுது துரியோதனனிடையிற்றருமன் நாடு வேண்டி விடுத்த வாறும், மற்று அவன் மறுத்தவாறும் வீடுமர், துரோணர், விதுரர் உரைத்த அறநெறியும் மற்றும் உற்ற சொல்லெல்லாம் விண்ணப்பஞ் செய்து நின்ற வேள்வியாசானை நோக்கி யாதருளிச் செய்தான் கண்ணன் : (சுசு)

---

65. நிந்தித்து – பழித்து. மாயன் - கண்ணன். நிகழ்ந்ததைக் கண்ணனுக்கு உரைத்து வா என்று தௌமியனை ஏவினான் தருமன் என்க.

66. அடாது – தகாது. ஆழியாய் - ஆழிப்படையுடையாய். ஆழி - சக்கரம்.

67. காடுறைந்த பாண்டவர்தங் கட்டுரிமை வேண்டிவிட
நாடுவிடே னென்று நலவேந்த—னீடுமினி
யர்ச்சுனனைக் கொண்டாங் கரசு தரக்கடவோ
மற்றுனக்கு வேண்டா மதி.

எ - து. முன்னம் உரைத்த உறுதி வழுவாமற் காடுறைந்து வந்து தன் உரிமை வேண்டினால் கொடானாகில் தருமன் திருப்பேற்றாலும் உங்கள் உரிமையாலும் நாடுமுற்றும் நீங்களே கொள்ளத்தக்கன திறம் உண்டாம் ஆதலால் பாதிநாடு தரவொட்டுமோ எனப்பேசி, அதற்குக் காரணமாக அருச்சுனனை என்பக்கல் வரவிடுவாயாக என்று பின்னும் யாதருளிச் செய்தான் கண்ணன் : (சுஎ)

68. வண்டுவரை மன்னவனு மாயவனைத் தானணைந்து
கண்டு வணங்கக் களிகூர்ந்து—தண்டார்
விரவித்தேன் மொய்க்கும் விசயனையென் பானீ
வருவிக்க வேகென்றான் மால்.

என்று இவ்வகை அருளிச் செய்து பின்னும் யாதருளிச் செய்தான் கண்ணன். (சுஅ)

69. பன்மணித் துத்திப் பகுவாய் மன்னிய
பொன்னணி நெடுமுடிப் பெருந்தேர் மன்னவன்
வஞ்சக மில்லா வனப்புறும் வாய்மையர்
பஞ்சவர் தமக்குப் பார்கொடா தென்னையுங்

---

67. கட்டுரிமை - முடிவு கட்டிய உரிமை. நலவேந்தன் - நன்மையைத் தன்னகத்தே கொண்டிருக்கும் வேந்தன். நீடும் இனி - இச்செயல் இவ்வளவில் நில்லாது நீளும். அவன் தாரானேல் நாம் தரக்கடவோம் என்றான். வேண்டாமதி—என்னுமோ என எண்ணித்துயருற வேண்டா.

68. என்பானீ – நீ என் பால், நீ என்னிடத்து. ஏகு - செல்.

69. துத்தி - படம். பகுவாய் – பிளப்புடையவாய், காதிக் கடுத்து – நஞ்சென வெறுத்து. பீடார் - பெருமையமைந்த. கமலப் பெரியோன் - நான்முகன். ஒருபதுமுடியோன் - இராவணன். தோரணம் – வாயில். குரங்குதேர்மேல் உயர்த்த காளை - குரங்குக் கொடியைத் தேர்மேற்கொண்டவன். காளை, குரிசில், ஆண்மையன், வேந்தன் என்பன அருச்சுனனை. கோலம் – அழகு. மொய்ம்பு – தோள். ஒன்னார் - பகைவர். அஃகும் - குறையும். பாந்தள் - பாம்பு.

காதிக் கடுத்து வருகின்ற னாதலிற்
பீடார் கமலப் பெரியோ னருளினால்
வாடாக் கற்பின் வழியோடு வந்த
விருபது தடக்கை யொருபது முடியோ
னாழ்கடல் சூழ்ந்த வணிமதி லிலங்கையைச்
சீர்கலி மாநகர்ச் செறிபொழி லகத்துத்
தோரணப் போரிடை யதிர்த்துப் பின்னை
நெருப்பு வாலா னிமிர்வாய் சிவப்ப
வெரிகொளுத் தியற்றியவ் விலங்கையைச் சுட்ட
வீரக் குரங்குதேர் மேலுயர்த்த காளையைக்
கோல மொவ்வாக் குருகுலக் குரிசிலை
யூன்கொண் மொய்ம்பி னொன்னார் முடிகளை
யரன்கோல் வாளி யல்குமாண் மையனைக்
காண்டிபத் தடக்கைப் பூணியன் மார்பினல்
வேந்தனை யழைத்து விரைகென விடுத்தனன்
பாந்தளிற் பாற்கடற் பள்ளிகொண் டானே.

70. முன்ன மறையவனான் மூவா முடியானைச்
சொன்ன வரவுடனே சோர்வின்றி—யின்னேபோய்ப்
பார்த்தனையென் பக்கற் பதறிவரச் சொல்லென்று
னார்த்தரவிற் பள்ளிகொண்டா னாங்கு.

இவ்வகை கண்ணன் வேள்வியாசானுக்கு அருளிச்செய்து விடை கொடுப்ப விடை கொண்டு போந்து உபலாவிய நகரம் புக்குத் தருமனைக் கண்டான் வேள்வியாசான் என்றவாறு. இப்பால் துரியோதனன் நிலைமை யாதாயிற்றோ வெனில் : (எo)

---

70. இன்னே – இப்பொழுதே.

தௌமியன் தூது முற்றும்.

71. கஞ்சனைக் காய்ந்த கடல்வண்ணன் பாற்சென்று
வெஞ்சமத்து வேண்டுந் துணையாகச்—செஞ்சோலுடன்
சேராத பஞ்சவர்கள் சென்றிறைஞ்சு முன்னமே
சீராரு மன்னவனே செப்பு.

எ - து. துரியோதனனை நோக்கித் திருதராட்டிரன் சொல்லுவான் : தருமன் முன்னம்போய்த் தங்கள் தீதின்மையும் வெளிப்படும் உரைத்துக் கண்ணனைத் தங்களுக்குத் துணையாக்கிக் கொள்வதன் முன்னம் நீபோய்க் கண்ணனைக் கண்டு உற்றதை உரைத்து உனக்கு மற்றவனைப் படைத்துணை செய்வானாக வேண்டிக் கொண்டு வருவாயாக என்று சொல்லக் கேட்டு அளவளாவி இது ஒக்கு மெனத் துணிந்து யாது செய்தான் துரியோதனன் : (எக)

72. தாமரையாள் கோனைத் தனக்குத் துணைவேண்டிக்
கோமறுகக் கோணாக மேந்தினான்—மாமகரம்
வண்டுவரைக் கேதவழ மாலோத மூடாடுந்
தண்டுவரைக் கேகினான் றான்.

எ - து. முழுமுதல்வன் பாம்பணையான் மருவியுறையும் துவரையம்பதி நோக்கிப்போயினான் துரியோதனன். அது முன்னறிந்து தன் கோயில் வாயில் காக்கும் காவலரை அழைத்து விட்டு யாதருளிச் செய்தான் கண்ணன் : (எஉ)

73. மின்னுமணி நாக வெல்கொடிமேற் றானுயர்த்த
பொன்னங் கழற்காற் புரவலனை—முன்னே
வரவுணர்த்தா தென்பால் வரவிடுமி னென்றான்
கரவுசெய்யுங் கையான் கலந்து.

---

71. கஞ்சன் - கண்ணன் மாமனாகிய கம்சன். காய்ந்த – அழித்த. சமத்து – போரில். சேராதபஞ்சவர் – தம்மொடு கூடாத பாண்டவர். "மன்னவனே, பஞ்சவர்கள் சென்றிறைஞ்சுமுன்னமே கடல் வண்ணன் பாற்சென்று செஞ்சொலுடன் செப்பு" என இயைக்க.

72. கோ மறுக – பகைவேந்தர் குழம்ப. கோணாகம் - கோள் + நாகம்; கொடிய நஞ்சினைக் கொண்ட பாம்பு. மகரம் - மீன். மால் ஓதம் – பெரிய கடலலை. தண் + துவரை = தண்டுவரை. துவரையம்பதி.

73. புரவலன் - அரசன்; துரியோதனன்; கரவு செய்யும்– மாயம் செய்யும். கையான் - செயலுடைய கண்ணன்.

எனக்கேட்டுத் துரியோதனன் வந்தால் என்னை யறிவியாமல் வரவிடுவீராமின் என்று வாயில் காவலர்க் கருளிச் செய்து பின்னை யாது செய்தான் கண்ணன்: (எ௩)

74. சீரணிந்த செம்பொற்கா லூட்டித் திகழ்ந்திலங்கும்
பேரமளி தன்னிற் பிறழ்ந்திலங்கப்—போரியலும்
வெஞ்சினமால் யானை விசயன் வருமளவும்
[1]வஞ்சனையாற் கண்வளர்ந்தான் மால்.

அன்றியும், (எச)

75. வண்டுவரை மன்னன் மதுரேச னாகவணை
யோண்டியோளி ராசனத்தி னொன்றன்மே-லண்டர்தோழ
மின்னனைய நுண்ணிடையார் மெல்லடிக டாம்வருட
மன்னவனுங் கண்டுயின்றான் மற்று.

இவ்வகை ஒருதனி மண்டப மெய்தித் துரியோதனன் வரவு கேட்டு, அருச்சுனனையும் அழைத்துவிட்டுத் திருமுடிப்பக்கத்தே ஒரு செம்பொற் பீடமும் இடுவித்துத் தானும் பள்ளிகொண் டருளப் புக்கான் கண்ணன் என்றவாறு. அவ்விடத்துத் துரியோதனனும் வந்தெய்தி மணிநெடுங் கோயிற் புகுந்து பள்ளி கொண் டருளா நின்ற சீரிய தவத்தோனைக் கண்டு அளவளாவ யாது செய்தான் துரியோதனன். (எ௫)

76. அஞ்சன வண்ண னறிந்து துயிலுகக்க
வஞ்சனையோ னூன மணிமுடியா—னஞ்ச
வெழுந்தவிள நாக மெழிற்கொடிமேற் கொண்டான்
செழுந்தவிசின் மேலிருந்தான் சென்று.

---

74. அமளி - கட்டில். மால் - பெரிய; மால் திருமால்.

75. நாக அணை ஒண்டி ஒளிர் - பாம்பணையை ஒட்டி விளங்கும். ஒண்டி - ஒட்டி. ஒண்டி என்பது இவண் போல என்னும் பொருளில் வந்தது.

வருட - தடவ.

76. அஞ்சன வண்ணன் - அஞ்சனம் போலும் நிறமுடைய கண்ணன். உகக்க - விரும்ப. உவக்க என்றது உகக்க என ஆயது. தவிசு - இருக்கை.

பா. வே: 1. வஞ்சனையாக்.

எ - து. பள்ளி கொண்டருளிய மேலோன் நோக்கம் ஒன்றும் கருதாது தன் அரச ஆணவத்துடன் வந்து கண்ணன் திருமுடிப் பக்கத்திட்ட செம்பொற் பீடத்திருந்தான் மன்னர் மன்னன் துரியோதனன் என்றவாறு. இப்பால், கண்ணனை முன்னம் விடைகொண்டு போன வேள்வியாசானும் போய்த் தருமனைக் கண்டு உற்றதையெல்லாம் உரைத்துப் பின்னும் அருச்சுனனை நோக்கி யாது சொன்னான் வேள்வியாசான் : (எசு)

77. பாராளும் வேந்தன் பழிபாவ மென்றிவையோன்
றோரா துரைப்பானு மூற்றெழுந்தான்—சீராரும்
பாண்டவர்தங் கோவேசேள் பாம்பணையான்
னீண்டனுடன் போதா யிசைந்து. [றுனழைத்தா

எனக்கேட்டு அருச்சுனனும் மிகமகிழ்ந்து கதுமெனத் தருமனைப் பணிந்து யாது விண்ணப்பஞ் செய்தான் அருச்சுனன் : (எஎ)

78. என்ன குறையுடையே மெற்றைக்கு மெம்பெருமான்
றுன்னுந் துணைவனுமாய்த் தோழனுமாய்—முன்னிற்ப
தெல்லா மருளி யிடர்தீர்க்க வல்லான்பாற்
செல்லவோ வென்றான் றெளிந்து.

எ - து. கண்ணன் அருளிப்பாடு கேட்க வேண்டாவோ என்று அருச்சுனன் விண்ணப்பஞ் செய்யக் கேட்டு யாது சொன்னான் தருமன் : (எஅ)

79. எம்பெருமான் கேட்டா லிகல்வேந்த ரெண்ணமெலாந்
தம்பிநீ சென்றுற் றகவுரைத்து—வெம்பியிடில்
விண்ணவர்தங் கோமானை வெற்றித் துணையாக
[1]மண்ணவர்கண் முன்னே மதி.

---

77. ஓராது - எண்ணாது. வேந்தன் - துரியோதனன். கோ - தருமன். பாம்பணையான் - கண்ணன். ஈண்டன் - விரைவில். போதாய் - போவாயாக.

78. எற்றைக்கும் - எந்நாளும். துன்னும் - நெருங்கிய.

79. இகல் - பகை. தகவுரைத்து - தக்கவாறு உரைத்து. வெம்பியிடில் - அமையாது கொதித்துரைத்தால். விண்ணவர் கோமான் - கண்ணன். மதி - கருது.

பா. வே : 1. மன்னவர்கள்.

எ - து. கண்ணன் பக்கல் போனால் அவன் திருவுளம் அறிந்து உனக்குத்துணை செய்வானாக வேண்டிக் கொண்டு, மற்று அவன் முன்பெரிதும் உரையாடாதிருந்து மண் கொடா மறவேந்தன் கருத்து முற்றுமறிந்து, மற்றவ்விடத்து அத்துரியோதனன் போராளக் கருதிப் புகன்றுரைக்குமாகிற் சீராரும் ஆண்மையால் கண்ணனை உனக்குப் படைத்துணை செய்வானாக வேண்டிக் கொண்டு, மற்று அவன் திருவருள் ஆற்றலுடன் வருவாயாக என்று பேசித் தருமன் விடைகொடுப்ப விடைகொண்டு போய் வீமனைக் கண்டு யாது விண்ணப்பஞ் செய்தான் அருச்சுனன் : (எ௯)

80. கூராழி தானுடைய கோமா னமக்கிந்தப்
போராழ் வையம் பெரிதளிக்கச்—சீராரு
மாதுவரக் காட்டினான் [1]செல்லுமதோ வென்றுரைத்தான்
போதலர்தார் வேந்தன் புகழ்ந்து.

எனக்கேட்டு யாது சொன்னான் வீமன் : (அ0)

81. வில்லா லிலங்கை விறல்வேந்தை வேரறுத்த
வல்லாளன் முன்னே மறமுரைக்கி—லெல்லார்முன்
பாராளும் வேந்தனுடன் பாரதப்போர் யாஞ்செய்யும்
போராண்மை நீகுறித்துப் பேசு.

எ - து. கண்ணன் பக்கற் போனால், துரியோதனன் இருக்குமாகில், அவ்விடத்து நாடு கொடாது ஆள்வலியும் ஆண்மையும் பேசிப் போர் செய்யக் கருதுமாகில், கண்ணன் கேட்ப மற்று அவன் முன் யான் போர்க்களத்தில் செய்த உறுதியையும் ஒழியாமல் உரைத்துக் கதுமென வருவாயாக என்று வீமன் விடை கொடுப்ப விடை கொண்டு யாது செய்தான் அருச்சுனன் : (அக)

82. நாரணன்றன் பாத நினைந்தெழுந்து நல்வேந்தன்
காரணங்க ளாகப்போர் கண்டுகேட்பப்—போரணிந்த

80. ஆழி - சக்கரப்படை. ஆழிவையம் - கடல் சூழ்ந்த உலகம். செல்லுமதோ - செல்லவோ. போது - பூ. அலர் - மலர்.

81. இலங்கை வேந்து - இராவணன். வேரறுத்தல் - குலத்தோடழித்தல். வல்லாளன் - கண்ணன். மறமுரைக்கில் - துரியோதனன் போர்பற்றி யுரைத்தால். எல்லார்முன் - அனைவர் முன்னும்.

82. மஞ்சு அனையான் - முகில் வண்ணனாகிய கண்ணன். ஊர் - துவரை.

பா. வே: 1. சொல்லுமதோ.

வெஞ்சினமால் யானை விசயனுந்தான் போந்தந்த
மஞ்சனையா னூர்புகுந்தான் வந்து.

இவ்வகை அருச்சுனன் உபலாவிய நகரினின்று புறப்பட்டு, கண்ணன் திருவடித் தாமரைகளை நினைந்து கொண்டு காடும் மலையுங் கடந்து திருத்துவரையம்பதி புகுந்து கண்ணன் கோயில் வாயிற் கட்டு ஒழிந்து யாது செய்தான் அருச்சுனன்: (அஉ)

83. தொக்கிலங்கு துத்திச் சுடர்நாக மேந்திறன்
புக்கிருந்த வெல்லைக்கண் புக்கான்போய்—மிக்குயர்ந்த
வெம்மாப் பரிபூண்ட வெல்லுந்தேர் முன்னுலோர்
திண்மாக் குரங்குயர்த்த சேய்.

இவ்வகை, கண்ணன் கோயிலுட் புகுந்து, பள்ளி கொண் டருளா நின்ற கண்ணனைக் கண்டு, களிகூர்ந்து கண்களாலும் மனத்தாலும் திருவடியை வழிபட்டுக் கொண்டு திருவடிக்கு அரு கிருந்தான் அருச்சுனனுக் கருதுவது, அப்பொழுது, (அ௩)

84. கள்ளமரு வீசுங் கழற்று மரைமலர்க்கண்
வள்ளல் வரவறியக் காட்டிற்றே—கள்ளத்
துயிலெழுந்தான் வென்றி தொடர்ந்துலக முண்டா
னயிலெழுந்த வாழியா னங்கு.

அன்றியும், (அச)

85. பொய்யுறக்கங் கொண்டபிரான் போர்விசயன்
[றன்னுடைய
செய்ய திருவடிகள் சேர்தலுமே—மெய்யடிமை

---

83. தொக்கு இலங்கு துத்தி - செறிந்து விளங்கும் புள்ளி. வெம்மாப்பரி - கடுஞ்செலவுடைய குதிரை. சேய் - மைந்தன்; அருச்சுனன்.

84. கள்ளம் - பொய்மை. மரு - மணம். வள்ளல் - கண்ணன். அயில் எழுந்த - கூர்மையமைந்த. உலகம் உண்டான் என்றது கண்ணன் மண்ணுண்ட கதையைக் குறிப்பது.

85. பள்ளியுணர்ந்தான் - உறக்கம் நீங்கி எழுவதுபோல் எழுந்தான். தெள்ளி - தெளிந்து. அருச்சுனன் மெய்யடிமை பூண்டவன் ஆதலால் அவனை எதிர்நோக்கி இருந்த பொய்யுறக்கத்திற்கு அமை மொழியால் குறிப்பான விளக்கம் தந்தாராம்.

தெள்ளியுணர்ந் தாரவர்கள் சிந்தையுள்ளே வீற்றிருப்பான்
பள்ளியுணர்ந் தானவனைப் பார்த்து.

எ - து. அருச்சுனன் வந்து திருவடிக் கருகிருந்தமையும் மற்று அவன் மனக்கருத்தும் அறிந்தருளிச் சிறிது பொழுது கழிந்த பின்பு பள்ளியுணர்ந்து பார்த்தருளும் அளவில், முன்னிருந்த அருச்சுனனைக் காணாது போலக் கண்டருளிப் புரிந்து பார்த்துத் துரியோதனனையுங் கண்டு வினவி, பேரன்பினனாகக் கதுமென எழுந்தருளி யிருந்து யாதருளிச் செய்தான் கண்ணன் : (அரு)

86. செருவீரர் யானைத் திருநெடுந்தோள் மன்னர்
ரிருவீரு மெப்பொழுது வந்தீ—ரிருவீரு
மென்போந்த வாறென் றுரைத்தா னெழுசுடரின்
மின்போந்த வாழியான் மீட்டு.

எ - து. நீங்கள் இருவரும் எப்பொழுது வந்தீர் என்றும், உங்களில் நீங்கள் வேறுபாடு பண்ணாமல் என்பக்கல் வந்தது எனக்கு மிகவும் விருப்பம் சொல்லா நின்றது என்றும், இனி என் பக்கல் வந்ததென் கொலோ என்றும் இவ்வகை கண்ணன் அருளிச் செய்யக் கேட்டு, விண்ணப்பஞ் செய்யப் புகுந்த அருச்சுனனை விலக்கி முன்னம் வந்தேன் யான் எனப்பேசி யாது சொன்னான் துரியோதனன் : (அசு)

87. என்ன வினவுதியோ வெம்வரவு நீயறியச்
சொன்னாலுஞ் சொல்லிழப்ப தாகாதே—யுன்னைச்
செருமுனைக்கு வேண்டித் திருமாலே யென்றான்
பொருமுனைக்கு வேண்டிப் புகுந்து.

என்றிவ் வகை சொல்லிப் பின்னும் யாது சொன்னான் துரியோதனன் : (அஎ)

---

86. செரு - போர். எழு சுடரின் மின் போந்த ஆழி - எழுங் கதிரோனின் ஒளி புகுந்தாற் போன்ற சக்கரப்படை. வெளிப்படை வேற்றுமை காட்டாது, "இருவீரும்" "இருவீரும்" என்றான் மாயம் வல்லான் ஆகலின்.

87. சொல்லிழப்பதாகாதே - எண்ணுவார் எண்ணமெல்லாம் எளிதில் அறிய வல்ல நினக்கு எம் வரவு கூறுவது பயனற்றதாம் என்பவனாகச் 'சொல்லிழப்பதாகாதே' என்றான். 'ஆகும்' என்னும் பொருட்டு.

88. பாராளு மாசையாற் பாண்டவர்க ளெம்மோடு
போராளு மாறே புரிந்தார்கள்—[1]சீராளுஞ்
செங்கமல மங்கை திருமாலே [2]நீயெமக்காய்ப்
பொங்கமர்செய் யென்றான் புரிந்து.

அன்றியும், (அஅ)

89. முன்னே புகுந்தேன் முகில்வண்ணா வென்குறையுஞ்
சொன்னே னினி[3]யோர் சொலவுண்டோ—வென்னோடு
போர்புரிந்த பாண்டவர்கள் போராழிப் போர்க்களத்தென்
றேர்புரிந்து நில்லென்றான் சென்று.

எ - து. முன்னமே யான் வந்தமையால் எனக்குப் போர்க் களத்தில் தேராளாகிப் படைத்துணை செய்ய வேண்டுமென்று துரியோதனன் சொல்லக் கேட்டு மற்றவனைக் கைகவித்து அருச்சுனனை வினவுதலில் யாது விண்ணப்பஞ் செய்தான் அருச்சுனன்: (அகூ)

90. என்வரவு நீயறைதி யென்றுலு நீயதனை
முன்னுணர்தி கண்டாய் முகில்வண்ணா—நின்னைச்
செருவிற் படைத் [4]துணையா வேண்டியான் வந்தேன்
றிருவிற்கு நாயகனே செப்பு.

என்று பின்னும் யாது விண்ணப்பஞ் செய்தான் அருச்சுனன்: (கூ0)

91. வாக்கினாற் சொன்னான் மலரடிக்கீழ் யான்பணிந்து
நோக்கினாற் சொன்னவுரை நொய்தாமோ—தாக்கமருட்

88. போராளுதல் - போர்மேற் கொள்ளுதல். கமல மங்கை - திருமகள். பொங்கமர் - மிகுந்தெழுந்த போர்.

89. சொலவு - சொல். போராழிப் போர்க்களம் - அலைமோதும் கடலன்ன போர்க்களம். தேர்புரிதல் - தேர் நடத்துதல்.

91. நொய்தாமோ - மெலிதாமோ. பூமகளிதன் நாயகன் - திருமகள் கொழுநன்: கண்ணன்.

பா. வே: 1. சீராகும். 2. நீயெமக்காப். 3. யான் சொல. 4. துணையே.

போர்செய்வாய் நீயெமக்காய்ப் பூமகடன் னாயகனே
யார்செய்வார் மற்றிங் கமர்.

எ - து. சகுனி வல்ல மாயச் சூதினால் வஞ்சித்துக் கொண்ட மண்ணுரிமையிற் பாதி தாராமல் வலிமை பேசி மற்றவர் போராளக் கருதுவாராகில் நின்னுடைய திருவருள் ஆற்றல் உண்டாக எனக்கு நீ படைத்துணை செய்ய வேண்டுமென்று அருச்சுனனைக் கைகவித்து, துரியோதனனை நோக்கி யாதருளிச் செய்தான் கண்ணன் : (௯௧)

92. முன்னம் விசயனையான் கண்டனனா னின்னிருக்கை
பின்னை யறிந்தனனாற் பெய்கழலாய்—முன்னமே
நோக்கினாற் றன் கருமஞ் சொன்னா னதன்பின்னை
வாக்கினாற் சொன்னாய்நீ மற்று.

எ - து. இவன் பின்பு வந்தானாகிலும் முன்னம் என்னால் காணப்பட்டது இவனை யாதலால் அருச்சுனனுக்கு யான் படைத்துணை செய்ய வேண்டியிருக்கும்; நீயும் மற்றென்னால் வேண்டப்பட்டு என்னை வேண்டிக் கொள்வாய்; இஃது ஒழுங்கு எனக்கேட்டுச் சிறிது கவன்று பின்னையாது வேண்டிக்கொண்டான் துரியோதனன் : (௯௨)

93. யானு மிவனு மெதிரம்பு கோத்தேங்கள்
சேனை கலந்த செருக்களத்து—மானக்
குடையேந்து [1]வேந்தர் குலவேந்தே கொற்றப்
படையேந்த லென்றான் [2]பரிந்து.

எ - து. அருச்சுனனுக்குப் படைத்துணை செய்வையாகில் இரண்டு திறத்தோர்க்கும் போர் விளைந்த விடத்து நின்னுடைய சீரிய படை பிடியாதொழிவையாக வென்றும் நின்னையொழிந்தார் அனைவரும் எனக்குப் படைத்துணை விடுவிப்பாயாக வென்றும்

---

92. அருச்சுனன் மேலே கூறியதை உட்கொண்டு தன் கருத்தை வலியுறுத்திக் கூறினான் கண்ணன். நோக்கினால் கூறுதல் வாக்கினால் கூறுதலினும் முற்பட்டதும், விருப்புடையதும் ஆதல் நுண்ணிதின் அறிக.

93. கொற்றப்படை - வெற்றிதரும் படைக்கலம். ஏந்தல் — ஏந்தாதே. பரிந்து - விரும்பி.

பா. வே: 1. வேந்தர்க்கு வேந்தே நீ கொற்றப். 2. பணிந்து.

வேண்டிக் கொண்ட துரியோதனனுக்கு நினைவின்படி கொடுப்பானாக உடன் பட்டுப் பின்னை அருச்சுனனை நோக்கி யாதருளிச் செய்தான் கண்ணன் : (கூங)

94. கூருகிரும் வாளெயிறுந் தானிழந்த கோளரிபோ
லாரமரு ளாயுதமோன் [1]றின்றியே—போர்மருவிப்
பொன்செய்த மாவிலங்கற் போர்விசயா யானுனக்கின்
றென்செய்வேன் சொல்லா யினி.

எ - து. உகிரும் எயிறும் இழந்த அரிமாப்போல மிகு வீரத்திறங்களையுடைய போர் வீரர் முன்பு களத்தில் கருவி பிடியாது படையிலனாகி, என் கண்ணே போன்ற பதினாயிரம் நாராயண கோபாலரையும் மற்று அவற்குப் படைத் துணையர்கக் கொடுத்துத் தனியே நின்று உனக்கு யான் செய்யும் வெற்றி யுண்டோ என்று கண்ணன் அருளிச் செய்யக்கேட்டு, யாது விண்ணப்பஞ் செய்தான் அருச்சுனன் : (கூச)

95. இமைப்பளவின் மூன்றுலகுங் கொள்வதேன் கையி
லமைத்தனுவின் சந்தமையுங் கண்டாய்—சமைத்த
திருநெடுந்தேர் பூட்டழித்த சேவடியாய் [2]நீயென்
பெருநெடுந்தே ரூரப் பெறின்.

அன்றியும், (கூரு)

96. உறுதேர்மே லுன்னை யுளனாகி நிற்பப்
பெறுவனேல் யானும் பெறுவேன்—மறுசூது
விஞ்சவே தான்பொருத வேல்வேந்தர் தாமறிய
வஞ்சனையா லன்றிழந்த மண்.

---

94. உகிர் — நகம். வாள் எயிறு - கூர்மையானபல். கோளரி — அரிமா. போர்மருவி - போர்க்களம் அடைந்து. விலங்கல் — மலை.

95. தனு - வில். சந்தமை - (பணிசெய்யும்) அழகு. கஞ்சன் கண்ணனை அழிக்குமாறு ஏவிய அசுரர் சகடத்தின் வடிவு கொண்டுவர அதனைக் காலால் உதைத்து அசுரனைக் கொன்றான் என்பது "சமைத்த ......சேவடியாய்" என்பதிலுள்ள கதையாம்.

96. மறுசூது - பெருங்குற்றங்களுள் ஒன்றான சூது. "நீதேர் மேல் நிற்பப் பெறுவனேல் அன்றிழந்த மண் பெறுவேன்"

பா. வே: 1. றன்றியே. 2. என்றன்

எ - து. எம் பெருமான் எனக்குத் தேர்வலவன் ஆகி என் றேர்மேல் எழுந்தருளி நிற்குமாகில் இமைப்பளவிற் பகை வென்று மூவுலகுங் கொள்வதற்கு என் கையில் உண்டாகிய காண்டீவமே அமையும் என்று அருச்சுனன் சொன்ன உறுதிமொழி கேட்டு யாதருளிச் செய்தான் கண்ணன் : (௯௬)

97. முப்பொழுதாய் ஞான முனிவர்தங் நாயகமா
யெப்பொழுதுங் கோயிலிடங் கொண்டான்போ—யிப்
[பொழுதே
தேர்கொண்டு வாவென்று சிந்தித் துடன்பட்டான்
போர்கொண்ட வேந்தற்கப் போது.

எ - து. அருச்சுனன் பெரிய பரிவுந் துணிவுங் கண்டு மற்றந்த அருச்சுனனுக்கே வலவனாக மற்றவன் தேர் கொண்டு வரச்சொல்லித் தேர்தொட்டு வேறு மொழிபேசிப் பின்னைத் துரியோதனனை நோக்கி யாதருளிச் செய்தான் கண்ணன் : (௯௭)

98. என்னைப் படைத்துணைமை [1]வேண்டிப் பெருவீட்டான்
மன்னு புகழுக்கோர் மாசுண்டே—யுன்னி
யொருபதினா றுயிரவ ரேன்மக்க டம்மைப்
பொருபடையாத் தந்தேன் புகழ்ந்து.

எ - து. என்னைப் படைத்துணை வேண்டி இருவரும் உடன் வந்து ஒருவர் பெறாது போமது கேட்டார்க்கு அறமன்று என்றும், அறவோர் ஏற்க மாட்டார் என்றும், ஒருபால் கோடினன் என்றும், கருதப்படுமாதலால் யான் தரும் படைத்துணையைக் கொண்டு போவாயாக என்ன, துரியோதனனும் உடன்பட்டமையால் அவ்விடத்து அண்டர்மாமுனி வழிமுதலாகிய எண்டிசை நிறைந்த அருமரபில் யாதவ வீரர் உள்ளிட்ட பதினாறாயிரம் நாராயண கோபாலரையும் அருளிப்பாடென, அவரும் வந்து அடிபணிந்து வணங்க, கண்டு மனமகிழ்ந்து மற்று அவரைத் துரியோதன னுக்குக் காட்டி யாதருளிச் செய்தான் கண்ணன் : (௯௮)

98. உன்னி - நினைத்து. என்மக்கள் என்றது நாராயண கோபாலரை. மன்னுபுகழ் - நிலைபெற்ற புகழ்.

பா. வே : 1. வேண்டப்.

99. திருடக் கொடிகொண்ட திண்புயத்தோன் செய்ய
கருடக் கொடிகாவ லாக்கி—மருட
ரடற்றுணையா மன்னவரோ டாடமரு ணீர்போய்ப்
படைத்துணையா கென்றான் பரிந்து.

எ - து. என் கண்ணே போன்றவர் பதினாறாயிரவரையும் எனக்குக் கைம்மாறாக உனக்குத் துணை செய்வதாகத் தந்தேன் என்று கொடுத்து, அப்பதினாறாயிரவர்க்கும் தக்க வரமருளிக் கலுழக் கொடியும் குடையுங் கவரியும் அளித்து மற்றும் வேண்டத் தக்கனவுங் கொடுத்துப் பின்னை யாது செய்தான் கண்ணன் (௯௯)

100. ஒப்பரிய கோபால ரோர்பதினா றாயிரவர்
சொற்பெரிய வுள்ளார் கொடிசுழற்ற—வப்போர்ப்
படைகொடுத்துப் பாராளும் பாரதற்கு மாங்கே
விடைகொடுத்து வீற்றிருந்தான் வேறு.

இவ்வகை மன்னர் மன்னன் துரியோதனனுக்கும், மற்று அவனுக்குப் படைத்துணையான பதினாறாயிரவர் நாராயண கோபாலருக்கும் மற்று அவருள்ளிட்ட அனைத்துத் துணையாளர்க்கும் விடைகொடுப்ப நாற்படையொடும் ஓர் அக்குரோணி படை பெற்றுப்போய் யாது செய்தான் துரியோதனன் : (௧௦௦)

101. பார்மன்னன் மீண்டு பலதேவ னைக்கண்டு
கார்வண்ணன் செய்தியெல்லாங் கட்டுரைத்துப்-போரிற்
புறங்கொடா மன்னரொடும் போயினா னங்கே
யறங்கொடா வேந்த னவன்.

இவ்வகை துரியோதனனும் போய்ப் பலதேவனைக் கண்டு மற்று அவனுக்கு உற்றதுரைத்து, விருசிணி வீரன் இருதவன் மாவினையும் ஓர் அக்குரோணி படை வலியுடன் ஆங்கு அவனால்

---

99. திருடக்கொடி-காகம். சீதையைத் துன்புறுத்திய காகத்தின் ஒருகண் கொண்ட செய்தியைக் கருதியது "திருடக்......திண் புயத்தோன்" கருடக்கொடி கண்ணனுக்கு உரியது. மருடர் - மயக்கம் தீர்ந்த. அடல் - வலிமை. ஆடமர் - வெற்றி தரும்போர்.

100. சொல் - புகழ். வேறு - தனியிடத்து.

101. பார்மன்னன் - துரியோதனன். அறங்கொடா வேந்தன் - அறநெறிக்குச் செவிசாய்த்து அவ் வழியில் நில்லாத துரியோதனன்

படைத்துணை பெற்றுப்போய் அத்தினபுரம் புகுந்து திருதராட்டிரனைக் கண்டு அடிபணிந்து யாது சொன்னான் துரியோதனன் : (௧0௧)

102. தந்தை யடிபணிந்து தண்டுளவோன்செய்தி
சிந்தையுற வெல்லாந் தெரிந்துரைத்தான்—புந்தி
யசைந்தா னசைந்தவனு மண்டர்தொழு வான்றன்
மனந்தானங் கேதறியான் மற்று.

எ - து. கண்ணனும் பாண்டவர்க்காகப் பண்ணின ஒர வஞ்சமும் அருச்சுனனுக்குத் தான்தேரோட்டக் கடவதாகச் சொன்னபடியும் அது கண்டு கண்ணன் முன் அவன் பேசிய திருக்கும், மற்றும் உற்ற வெல்லாம் உரைப்பக் கேட்டு மிகவும் அச்சமும் இரக்கமும் எய்திப் பாண்டவர் வலிமையாலும் கண்ணன் உதவியாலும் இது இழிவன்றே என உணர்ந்து துரியோதனன் முதலானவர்களுக்குப் பழிபாவம் வருமென் றெண்ணிக் கவன்றிருந்தான் திருதராட்டிரன் என்றவாறு. இப்பால் அருச்சுனன் நிலைமை யாதாயிற்றோ வெனில் : (௧0௨)

103. ஆயனுடன் பார்த்த னணிநெடுந்தேர் மேற்கொண்டு
தூய தருமன்றன் றொன்னகர்க்குப்—போயவருங்
கானுறுங் குன்றுகளுங் கைகடந்து சென்றடைந்தார்
வானுறு மாமுகில்போன் மற்று.

திருத்துவரையம்பதி விட்டு நீங்கி, கண்ணனும் அருச்சுனனும் உபலாவிய நகரம் நோக்கிப் போந்து மற்றந்த எல்லை குறுகுமளவில் அருச்சுனனுடன் கண்ணன் தேர்வலவனாகத் துணிந்து வருகின்றமை தருமனும் மூத்தோர்களும் கேட்டு, குந்திபோசன் பாஞ்சாலன் விராடன் உள்ளிட்டார் எதிர் வந்து காண மனமகிழ்ந்து தன்னருகு நின்ற வேந்தரை நோக்கிக் கண்ணன் வரவு கண்டு எல்லையில்லாத தோர் ஆர்வமெய்தி யாது சொன்னான் தருமன் : (௧0௩)

---

102. தந்தை - திருதராட்டிரன். தண் துளவோன் - குளிர்ந்த துளவமாலையணிந்த கண்ணன். புந்தி - அறிவு, எண்ணம். அண்டர் தொழுவான் - கண்ணன். "அண்டர் தொழுவான் தன் மனம் தான் அங்கு ஏது அறிவான்" எனப் பிரித்துப் பொருள் காண்க.

103. ஆயன் - கண்ணன். தொன்னகர்-பழமையான உபலாவிய நகர். வான் வழியாகப் பரவிச் செல்லும் முகில்போல் கண்ணன் முதலாயோர் கானுறுங் குன்றுங் கடந்து உபலாவியம் போயினார் என்க.

104. எம்பி விசயனுட னெம்பெருமா னிங்குளனால்
வெம்பகைஞர் தஞ்சேனை விண்ணுலகா—மம்புவிமேற்
சீரார் குருநாடுஞ் செங்கோலுஞ் செம்மையுடன்
பாராள்வேன் கண்டீர் பரிந்து.

எ - து. கண்ணன் தேரோட்டியாகத் துணிந்து அருச்சுனனைக் காக்கும் பொருட்டாக எழுந்தருளினமையாலே, துரியோதனனும் அவன் பெரும்படையும் விண்ணுலகாள, வீம அர்ச்சுனர் உறுதிமொழியையும் முற்றுவித்துக் குருநாடு முழுதுங் குற்றமில்லாமற் காட்சிக் குடைநிழல் கவிப்பச் செற்றந் தீர்ந்து செங்கோல் ஓச்சுதற்கும் மற்றினியெமக்கு வருத்தமில்லையெனக் கொற்ற வேந்தன் குருகுல மன்னன் தருமன் மனமகிழ்ந்துரைத்துக் கண்ணன் எழுந்தருளக் கண்டு களிகூர்ந்து அனைத்து அரசர்களும் வழிபட வெண்கொற்றக் குடை மேல் நிழற்றக் கலுழக் கொடி விசும்பளாவ எம் மருங்கும் எழின் மணிக்கவரி அருகிரட்டச் சங்கு பேரி முதலாகிய இசைக்கலன்கள் ‘பஞ்சமா சத்தம்’ முழங்கப் போந்து உபலாவிய நகரம் புகுந்து தருமன் கோயில் சென்றெய்தி ஆங்கு ஒரு தனி மண்டபத்துத் தருமன் முதலானவர்களும், பாஞ்சாலனும் விராடனும் குந்திபோசனும் மற்றுமுள்ளிட்டாரும் புடைசூழ அரியணை மிசை வீற்றிருந்தான் கண்ணன் என்றவாறு. இவ்வகை இருந்த கண்ணன் பாண்டவரை நோக்கி யாதருளிச் செய்தான்: (கож)

வாசுதேவனைப் படைத்துணை அழைத்தது முற்றும்.

---

104. எம்பி - என் தம்பி. எம்பின் என்பதன் மரூஉவாம். பஞ்சமகா சத்தம் - கஞ்சம், கண்டம், துளை, தோல், நரம்பு இவற்றால் ஆகிய ஐவகை இசைக்கருவிகளின் ஒலி. காட்சி - அழகிய; கவர்ச்சியுடன் காணத்தக்க.

105. போர்வீரர் தம்மோடும் போந்தரசு கொள்வீரோ
பார்வீர [1]ரென்றும் பரிசயத்தா—லோர்வீர்நீ
ருய்வீராய் முன்னடைந்த வெங்கானம் போவீரோ
வைவீருஞ் சொல்லீ ரமர்ந்து.

எ - து. துரியோதனனுடன் போர்செய்து நாடு கொள்வீரோ என்றும், மற்று அது முடியாதாகில் முன்பு திரிந்த காடுபோவீரோ என்றும் அருளிச் செய்து நீங்கள் அந்த மற மன்னன் துரியோதன னுடன் வெகுண்டு எழுந்த காலத்து மற்று அதற்கு யாம் செய்யத் தக்கனவும் கேட்டறிந்து ஈண்டு நமக்குரைத்துப் போர்க்கு ஆகும்படி ஒருப்பட்டு மற்று அதற்கு விழைவுடையாரையும் அழைத்து வேண்டுவன துணிவீராமின் எனக்கேட்டுத் தருமன் சொல்லுவான்: வீடுமனும் விதுரனும் கன்னனும் அசுவத் தாமனும் முதலாகிய அருந்தேரர் பெருந்தேர ரான மற்றவரை நம்மால் வெல்லக் கூடுமோ அதற்கு என்னோ காரணம் எனில்; (௧0௫)

106. வெற்றி விதுரன்கை வில்லிருக்க மேதினியின்
மற்றவனை வெற்றிகொள்ளு மாறுண்டோ—பெற்றத்
தனிமுரசங் காத்தருளுந் தாமரையாள் கோனே
யினியவரை வெல்வாரை யெண்ணு.

அது கேட்டு யாதருளிச் செய்தான் கண்ணன். (௧0௬)

107. நகுலன் பரியேறி ஞலொன்று மூன்று
புவனங்க ளேழும் புடைபோ—யிகலு

---

105. போந்து - போய். பரிசயம் - பழக்கம். ஓர்வீர் - ஆராய்ந்து தெளிவீர். வெங்கானம் - கொடிய காடு. "அரசு கொள்வீரோ, கானம் போவீரோ சொல்வீர்"

106. மேதினி - உலகம். பெற்றம் - எருது. தனி - ஒப்பற்ற.

107. 'ஒன்று மூன்று புவனங்கள் ஏழும் - ஒன்று மூன்று அல்ல ஏழுலகங்களும். புடைபோய் - பக்கமெல்லாம் போய். இகலும் - தாக்கும்.

பா. வே: *1. என்று பரசியக்கா - லோரீர்நீர்.*

மவனுடைய வில்லு மதிரதரு மெல்லா
மிவனுடைய முன்னில்லா ரீங்கு.

அது கேட்டு யாது சொன்னான் தருமன் : (கOஎ)

108. ஆசா ரியன்புதல்வ னச்சுவத்தார் கோமாற்குச்
சேனா பதிப்பட்டஞ் சேர்த்தினான்—மீதவனை
வெல்லப்போர் செய்வகைக்கு வெண்டலையி லூணுகந்த
செல்வற்குந் தானரிதே செப்பு.

இவ்வகை அசுவத் தாமனைப் படைத் தலைவன் ஆக்கினால் மற்று அவனை வெல்லுவது சிவபெருமானுக்கும் அரிதாதலால் ஆங்கவனை வெல்லுமாறு அருளிச்செய்வாயாக எனக்கேட்டு யாதருளிச் செய்தான் கண்ணன் : (கOஅ)

109. சாதா ரணஞ்செய்யுஞ் சாதேவக் கோமானைச்
சேனா பதிப்பட்டஞ் சேர்த்தினான்—மீதோடி
யச்சுவத்தார் கோமா னடர்த்துவரும் வெம்போரைச்
சித்திரத்தே ரோட்டிச் செயித்து.

எனக்கேட்டு யாது சொன்னான் தருமன் : (கOகூ)

110. உய்ய வுடன்பிறந்த வொண்கவசங் கன்னனுடன்
செய்யுஞ் செருவிற் சிதைக்கவல்லா—னையனே
யிந்திரனே யன்றி யிணையாரு மில்லையே
வந்துபோர செய்வார்கண் மற்று.

இவ்வகை தருமன் சொல்லக் கேட்டு யாதருளிச் செய்தான் கண்ணன் : (ககO)

---

108. ஆசாரியன் - துரோணன். அச்சுவத்தார் கோமான் - அசுவத்தாமன். வெண்தலையில் ஊண் உகந்த செல்வன் - சிவன். நான்முகன் தலையோட்டுடன் இரந்து திரிந்த கதையை உட்கொண்டது "வெண்டலை......செல்வன்" என்பதாம்.

109. சாதாரணஞ் செய்யும் - அரியதையும் எளிதாகச் செய்து முடிக்கும். அடர்த்து வரும் - நெருக்கி வரும். சித்திரம் - அழகு. செயித்துச் சாதாரணஞ் செய்யும் — என முடிக்க.

110. உய்ய உடன்பிறந்த - கன்னன் உய்யுமாறு, அவன் பிறக்கும் போதே உடன் பிறந்த.

111. கொற்ற வரவுயர்த்த கோமான் றனித்துணைவன்
பெற்ற கவசம் பிளப்பதற்கு—வெற்றிகொள்ளு
மிந்திரனே யன்றி யிளையா னபிமன்கை
மந்திரவில் லேயதற்கு மாம.

அது கேட்டுப் பின்னை யாது சொன்னான் தருமன் : (கக௧)

112. மூதாதை கையின் முனிந்துவருஞ் சக்கரத்தை
வேதா திபனே விலக்குதற்கு—யார்தானு
மற்றுமொரு வீர ருளரோவிம் மண்ணுலகில்
[1]வெற்றிகொள்வார் தம்மை விளம்பு.

எ - து. முழுமுதல்வன் பாம்பணையிற் பள்ளி கொண்டவன் உலகின் தலைவன் காலசக்கரம் வீடுமன் கையிற் சக்கரம் வந்தால் யாவராலும் தாங்கரிது ; மற்றதற்குச் செயற்பாலது என் கொலோ என்று சொல்லக் கேட்டு யாதருளிச் செய்தான் கண்ணன்: (கக௨)

113. வந்தவா காண்குமது மன்னவனே மற்றுநீ
சிந்தைமீ தூர்ந்து சிதையாதே—யுந்தை
போகும்போது போர்க்களத்திற் போர்விசயன் றேரி
லிருந்தோமுக் கன்றே வியல்பு.

எனக்கேட்டுத் தருமன் சொல்லுவான் : எம்பெருமானே பெருந்தேர் வலவரையெல்லாம் வெல்லுமாறு அருளிச் செய்தாலும் நின் திருவுள்ளக் கருத்தை யாவராலும் வெல்ல வொண்ணா தென்று பின்னும் யாது சொன்னான் தருமன் : (ககங)

114. தந்தையா வானுந் தருமம் வளர்ப்பானு
மெந்தையா வானுநீ யெங்களுக்கு—முந்திலங்கை

---

112. வேதாதிபன் - வேதத்தின் தலைவன். விளம்பு - கூறு.

113. வந்தவா - வந்தவாறு. சிதையாதே - மனம் தளராதே. உந்தை - உம்தந்தை. இவண் வீடுமனைக் குறித்தது.

114. உரைத்தவர்கள்-மேலே கூறப் பெற்றவர்கள். எங்களுக்கு என்பதைத் தந்தையாவானும், தருமம் வளர்ப்பானும் எந்தையாவானும் என்னும் மூன்றிடத்தும் கூட்டுக. நீ என்பதைத் தருமம் வளர்ப்பானும் என்பதனோடும் கூட்டுக.

பா. வே: *1. வெற்றி செய்வார்.*

[1]யூரறுத்த வேந்தை யுரைத்தவர்க டம்முயிரை
வேரறுக்க லாமோ விளம்பு.

எ - து. வானவர் தலைவனே முன்னம் நீ முனிந்த இடங்கள் நின்றுற்செய்யப்பட்ட விரப்பாடுகள் எல்லாம் என்னுடல் விட்டு நீங்காது; அதுவுமின்றி நின்னோடெதிர் மலைந்த பேரரசர் மாளும் படிக்கு மதிமயக்கிட்ட முழுமாயை வல்லானே, ஈதோர் அறம் கேட்பாயாக என்று கண்ணனை நோக்கியாது சொன்னான் தருமன் : (ககச)

115. நின்னைச் செலவிட்டா னீர்நாடு தாரானேற்
பின்னைப் பொருகை பிழையன்றே—யுன்னைக்காண்
மாதவனே மாயவனே மாலவனே மற்றெமக்கோர்
தூதுவனே [2]யாக்கத் துணி.

எ - து. மற்றுங்கு முரைத்து வாழ்கின்ற மன்னவன் உள்ளிட்ட குருகுலத்தோரில் எங்கட்கு அயலாவாரும் இல்லை; தாய் தந்தை இறைவன் ஆவாரும் நட்புத் தொடக்கத்தாரும் அவரே கண்டாய்; ஆதலால் எத்தனையும் வெகுளி எய்தாது குரு நிலம் குன்றுமல் எங்கட்கு ஒரு தூதாமாறு துணிந்து துரியோதனன் அளவும் எம்பெருமானே எழுந்தருளி, பாதிநாடு பெறினும் வேண்டிக் கொண்டு போதுவாயாக என்று கண்ணனை விடுக்கலுற்ற பொழுது தருமனை நோக்கி யாது சொன்னான் வீமன் : (ககரு)

116. மன்னவையுட் பட்ட மறந்தனையோ மாதேவி
மின்னவிரு நுண்ணிடையாண் மென்கூந்தல்—பின்னி
யிருக்கவோ மண்ணுள வேண்ணியோ சொல்லாய்
குருக்களே றன்னார் குணம்.

எ - து. துச்சாதனன் பாஞ்சாலியை அவையகத்துக் கூந்தலைப் பற்றிய ஞான்று துரியோதனன் சொன்ன செருக்குரை

115. பொருகை - போரிடுதல். 'உன்னைத் தூதுவனுக்கத் துணி' என்க.

116. பட்ட - பட்டபாடுகள். மாதேவி - பாஞ்சாலி. மின் அவிரும் - மின்னென விளங்கும். குருக்கள் ஏறு அன்னார் குணம் சொல்லாய் - அறிவிற் சிறந்தோர் தன்மை இன்னதெனச் சொல்வாயாக.

பா. வே: 1. ஊரறுக்க வந்தாய். 2. யாகத் துணி.

நின் மனத்து வைக்கத் தக்கதில்லை, நின் முன்னாகப்பட்டாதன பட்ட, படைநெடுங்கட் பாஞ்சாலியும் சாந்தும் மணிப்பூணும் துறந்து *ஒற்றைக்குழலோடு அவளிருப்ப எம்பெருமானைத் தூது விடுவது கேட்டார்க்கு நகையன்றோ என்று பின்னுஞ் சொல்லும் வீமன் : (கக௬)

117. ஈன்றார்க்கோர் மாதுன்ப மின்னார்க்கோ ரின்னாச்சொல்
சான்றோர்கட் கெல்லாந் தலையிறக்கந்—தோன்றுங்
கொடுவிலாள் வாட்டானைக் கோற்றவனே பார்மேல்
வடுவிலாள் பட்ட வடு.

அன்றியும், (ககஎ)

118. ஆற்றுவரேற் றோள்வலியாற் கொள்வதுவு மாற்றாரேற்
றேற்பதுவும் வேந்தர்க்குச் சொல்லியதே—மேற்றானோர்
மன்னவரை மன்னவர்கண் மண்ணிரந்தா ரில்லைகா
ணென்னவர சாள்கை யிது.

எ-து. நீ பிறந்த நாட்டினை மாயச் சூதினால் வஞ்சித்துக் கொண்டு உறுதிமொழி அழிந்து பாதிப்பங்கு வேண்டி விடவும் தாராதானைத் தோள்வலியாற் கொள்வதன்றிப், போரின் கண் வலுவற்றார் போல மற்று அவனிடைக்கு மண்ணிரந்து போக விடுதல் வீரர் நெறியன்று கண்டாய்; ஒரு நாழிகை நின் அருள் ஒழிந்து அரச நெறி தலைநின்று போர்க்களத்தில் என் உயர்ச்சியை நோக்கியருளப் பெறுவேனாகில் கன்னனென்னும் பெயர் கெடுத்துக் காந்தார வேந்தனைக் கட்டழித்துச் சல்லியனை அமர் தொலைத்துச் சயத்திரதனை மட்படுத்தி வெற்றி கொள்வேன் என்ற வீமனை நோக்கி யாது சொன்னான் தருமன் : (கக அ)

119. உற்றாரை யெல்லா முடன்கொன் றரசாளப்
பெற்றா லதின்மிக்க பேறுண்டோ—வெற்பார்

* ஒற்றைக் குழலாவது பின்னி முடியாக் குழல்

117. மின்னார்க்கு-மின்னல் போலும் இடையுடைய மகளிர்க்கு, தலையிறக்கம் - தாழ்வு. வாள் + தானை = வாட்டானை. வடு - குற்றம். வடுவிலாள் — பாஞ்சாலி.

118. ஆற்றுவரேல் – ஆற்றலோடு போரிடத் தக்கவரானால். ஆற்றாரேல் - போரிட ஆற்றல் இலரானால். மேற்றானோர் - மேல் + தான் + ஓர்; மேல் - முன்னே. "மண்ணிரந்து ஆள்வது என்ன அரசு"

119. உற்றார் - உறவினர். வெற்பு – மலை. தொங்கல் – மாலை. பாழி - அகன்ற.

பணிமருவும் பூந்தொங்கற் பாழியந்தோள் வீமா
தனிமரமுந் தோப்பாமோ தான்.

என்றிவ்வகை தருமன் சொல்லக் கேட்டுப் பின்னும் யாது சொன்னான் வீமன் : (கக௯)

120. சூழ்சபையிற் சூளுற்ற சூளுறவு மஞ்ஞான்றேன்
பாழியந்தோள் பட்ட பரிபவமும்—வாழியாய்
நின்னோடே தோற்றுதற்கு நோற்றேனே பாவியே
[1]னென்னோ டெழுந்தோ விது.

எ - து. பகைவராற் செய்யப்பட்ட வஞ்சனை பழிபாவங்களை யுணராது நீ அறமே விரும்புகின்றாய்; நின் அருளை யொழிந்து நிற்பையாகில் என்தோள் வலியால் பகைவரை அழித்து என் மனக்கருத்து முடிப்பேன்; அஃது இல்லையெனப் பெருவீரமாண்பும் படைப் பயிற்சியும் மற்றதனுடனே விளங்கி நின்ற என் தோள் வலியும் பயனின்றி உலந்து ஒழிகின்றது என்றுங் கருதுகின்றிலை; நின்னோடே பிறந்தேனே பெரும் பாவியேன் எனக் கழறித் தான் பிடித்த தண்டத்தை நிலத்தின்மேல் எறிந்து வெகுளாநின்ற துங்கக் கருவிக் கடாக் களிற்றான் வீங்கெழிற்றோள் வீமன் மானவுணர்வு சினங்கன்றக் கண்டு மற்றவனைக் கைகவித்து யாது சொன்னான் தருமன் : (க௨0)

121. தாமானங் கூறப் பெறுவரே தம்பிமார்
தீமானஞ் செய்ததனாற் றீங்குண்டோ—வாமாகி

120. சூழ்சபை-வேந்தரும் வீரரும் பிறரும் சூழ்ந்த அவை. சூள் உற்ற சூளுறவு - எடுத்துரைத்த நெடுமொழி; வஞ்சினம். பரிபவம் - இழிவு. நோற்றேனே-நோன்பு செய்தேனே. இஃதிகழ்ச்சிக் குறிப்பு. இவண்,

"சொல்லுஞ் சொல் வல்லானெதிர் தம்பியும் தெவ்வர் சொல்லும்
சொல்லுஞ் சுமந்தேன் இருதோளெனச் சோம்பி யோங்கும்
கல்லுஞ் சுமந்தேன் கணைப்புட்டி லும்கட் டமைந்த
வில்லுஞ் சுமக்கப் பிறந்தேன் வெகுண்டென்னை யென்றான்"

என்னும் இலக்குவன் கூற்று நோக்கத் தக்கது. (அயோத். 437)

121. தாம்+மானம்=தாமானம். மானம் - பெருமை. தீ மானம் - தீமை தரும் செருக்கு. "ஆமாகில் ஆம் அளவும் நட்பு உகத்தல்; அன்று ஆகில் செரு நின்றதே" தேன் - வண்டு, தேன். மருவு - பொருந்து. ஆம் ஆகில் — கூடுமாகில். ஆகும் என்பது ஆம் எனத் தொகுத்து நின்றது.

பா. வே: 1. னென்னோட் டெழுந்தோ விவை.

லாமளவு நட்புகத்த லன்றாகி னின்றதே
தேமருவு தாரோய் செரு.

இவ்வகை சொல்லிக் கண்ணன் சான்றாகத் துரியோதனன் பாற் போய் அவன் மனக் கருத் தறிந்து வருமளவும் மானம் பேச வேண்டா என்று வீமனை விலக்கிக் கண்ணனை நோக்கி யாது சொன்னான் தருமன் : (கஉக)

122. கார்தோற்றப் போகத் தொடுக்குங் கரத்தானே
பார்வேண்டிற் பாம்புயர்த்தோன் றான்மறுத்தா—[வூர்வேண்ட
லாங்கவையுந் தான்மறுத்தா லைந்துமனை தாம்வேண்டிப்
[1]பாங்குடனே போதாய் பரிந்து.

அன்றியும், (கஉஉ)

123. மன்னவர்க ளெல்லாருந் தாமறியப் பார்வேண்டி
லன்னவனு மைந்தின் மறுத்தானேற்—பின்னைப்
பொருபடைக்கை மாலேநீ போர்வேண்டிப் போதா
யரவுயர்த்தோன் றன்பா லகன்று.

எ - து. துரியோதனன் பக்கல் போனால் ஊக்கமுடையான் உடனிருந்து அறநெறிகளும், உறுதியழியாமல் நின்றமையுந் தெளியவுரைத்துப் பின்னும் நாடுவேண்டிற் றாரானாகில் பாதிப் பாகந் தரினும் கொண்டு போதுக; அதுவுந் தாரானாகில் குசத்தலமும் மிருகத்தலமும் வருணாபதியும் வரசந்தியும் சயசந்தியும் என்பன ஐந்தூர் தரினும் கொண்டுபோதுக; அதுவுந் தாரானாகில் போர் செய்தாகிலும் கொள்ளக் கடவதென்று மற்றவன் அருகிருந்த விடுமர் துரோணர் விதுரரைச் சான்றாக வைத்து மற்றவன் உறுதிமொழி அழிந்தமையும் அறியவுரைத்துப் பிறநாட்டுவேந்தர் அனைவரும அறிய நாள் வரைந்து தூண்டுபரித்தேர்மன்ன ஈண்டனெழுந்தருளி வருவாயாக என்ன, கண்ணனுந் தூதாக உடன்பட்ட விடத்துத் தருமனையும் கண்ணனையும் நோக்கி யாது சொன்னான் அருச்சுனன் : (கஉங)

122. கார் – கருமுகில். "மாரியீகை" என்றார் புறத்திலும். "கைம்மாறு வேண்டாக் கடப்பாடு மாரி" என்றார் திருவள்ளுவரும். மனை - இல்லம்.

123. ஐந்து+இல்=ஐந்து இல்லம். இனி மைந்தின் என்று நிறுத்தி வலிமையால் எனப் பொருள்கொளினும் ஆம். போதாய் - வருவாயாக. தூண்டுபரி - விரைந்து செல்லும் குதிரை. ஈண்டன் - விரைந்து.

பா. வே: 1. பாங்குடனீ.

124. பரமன் றிருவருளாற் பாசுபதத் தோடு
விரவுதனுக் கொண்டியா னிருக்கக்—குருபதிக்கு
நாமிரந்து போனு னகையரசர் செய்யாரோ
தாமிருந்து வாழுந் தலத்து.

அன்றியும், (கஉச)

125. ஆரமருட் டேராழி யார்த்து வடிக்கயிறு
போர்மருவு [1]மாமேன்மால் பூட்டுவனேற்—கூடரம்பாற்
கூடலார் மன்னவரைக் கூற்றின் பகுவாயின்
பாடியிலே யுய்க்கும் படி.

எ - து. கண்ணன் எம்பெருமான் தேர்மிசை நின்று வடிக்கயிறும், முட்கோலும் பிடித்துப் பாங்கினுடன் வெண் குதிரைகளைத் தூண்டுமாகில் என்கையிற் காண்டிபம் நாணேற்றி அம்புக் கூட்டில் கைவைத்த விடத்துத் துரியோதனனையும் பார்மன்னரையும் அவன் எண்ணப்படாத நாற்படை வலுவொடும் அனைத்து வீரர்களையும் நொடிவரையிற் படமலைந்து கூற்றுவ னுலகங் குடியேற்ற வல்ல நான் சிலையுடனிருக்கக் குருநாட்டுக் கொற்றவன் தருமன் இரந்து சென்றால் பிறநாட்டுவேந்தர் நகை யாரோ என்று பின்னுஞ் சொல்லுவான் அருச்சுனன்: (கஉரு)

126. [2]ஊழி முதற் காலத் துருத்தெழுந்த தீப்போல
வாழும்வினை கொண்டாடி மற்றெம்மைத்—தீயி
லழுத்துவிக்கு மன்னவரை யாடமருள் வீழ்த்து
[3]முழுக்குவிப்பன் செங்குருதி முன்.

---

124. பரமன் – சிவபெருமான். பாசுபதம் - பசுபதியாகிய சிவ பெருமானிடமிருந்து பெற்ற படைக்கலம். தனுக்கொண்டு – காண் டிபம் என்னும் வில்லைக் கொண்டு. விரவுதனு – வெற்றியுடன் இணைந்து நிற்கும் வில். குரு பதிக்கு-குருநாட்டை ஆளும் உரிமைக்கு. அரசர் நகைசெய்யாரோ' என இயைக்க.

125. ஆர் அமர் - உய்தற்கு அரியபோர். கூடலார் – பகைவர். பகுவாய் - பிளந்தவாய். கூற்றுவன் பகுவாய் ஆகிய பாடியில் உய்க்கும் என்க. பாடி – ஊர். பட – இறக்க. மலைந்து - போரிட்டு.

126. உருத்தெழுந்த – சினந்தெழுந்த; மிகுந்தெழுந்த. ஊழி - உலக அழிவு காலம்.

பா வே: 1. மாவின் மேற் பூட்டுவையேற்
2. ஊழி முதற்காலத் துற்றெழுந்த.
3. முழுத்துவிப்பன்.

எ - து. வருணுபதியில் அயக்குமாளிகையில் அனலெழுப்பிய மன்னவனையும் உடன்பிறந்தார்களையும் கடுங்கணை பாய்ச்சி நடுங் கமருள் வீழ்த்துக் குருதிப்புனலிற் குளிப்பித்துக் கன்னனையுங் காண்டிபத்துக் கிரையாக்கிப் பிறநாட்டுவேந்தர் காணப் பகை ஒழிப்பேனென்று அருச்சுனன் பேசக்கேட்டு மற்றவனைக் கை கவித்துப் போகின்ற கண்ணனை நோக்கி யாது சொன்னான் நகுலன் : (கஉசு)

127. இந்திரன்சேய் போக வினிய விரட்டையரிற்
புந்தி நகுலன் புகன்றெழுந்து—வந்தித்தே
யந்நாண் முதலா வரிவைகுழல் கூடாமை
மன்னு மறந்தனையோ மற்று.

அன்றியும், (கஉஎ)

128. வேண்டி விடுப்ப வெறுத்த வெகுளியர்பாற்
பூண்ட செருவேண்டிப் போகாமன்—மீண்டுமினி
நாடாள வெண்ணுவதோ நல்வேந்தே யென்றுரைத்தான்
றுதாடு மார்பன் றளர்ந்து.

என்று இவ்வகை சொல்லி வெகுண்டுரைத்த நகுலனைக் கை கவித்துப் போக ஒருப்படுகின்ற கண்ணனை நோக்கி யாது சொன்னான் சகதேவன் : (கஉஅ)

129. மாயா மணிவண்ணு மண்ணுலகும் விண்ணுலகுந்
தாயாகி [1]நின்றதோரு தற்பரமே—நீயேகுங்
காரணங்க ளெல்லா மறிந்தேனே கஞ்சமலர்
வாரணங்காத் துய்த்தாய் மகிழ்ந்து.

---

127. இந்திரன் சேய் – அருச்சுனன். இனிய இரட்டையர் - நகுல சகாதேவர். வந்தித்து – வணங்கி. அரிவை – பாஞ்சாலி. குழல் கூடாமை – குழல் முடியாமை.

128. தாது ஆடு மார்பன் – மலர்மாலை அசையும் மார்பினன். வேண்டிவிடுப்ப - நாடுவேண்டித் தூது விடுப்ப.

129. தற்பரம் - கடவுள். கஞ்சமலர் - தாமரை மலர். வாரணம்- யானை. கசேந்திரன் என்னும் யானையை முதலை பற்றிக் கொள்ள ஆழிப்படை ஏவி உய்த்த வரலாற்றை உட்கொண்டது, "கஞ்ச மலர்......காத்துய்த்தாய்" என்பது.

பா. வே: 1. நின்றவொரு.

ஏ - து. தேவதேவனே, நீ அத்தின புரத்துக்குப் போகின்ற காரணமும், அக்காரணத்தின் குறிப்புக்களும், நீ செய்யத் தக்கனவும் செய்து முடிக்கத் தக்கனவும், நின் பெருமாயையும், மாயத்தின் சூழ்ச்சிகளும், நின் திருக்குறிப்பும், நின் திருவுள்ளத்தின் நினைவுகளும் மற்று முள்ளிட்ட மாலின் மாயையெல்லாம் எம் பெருமானே, என்றால் அறியப்பட்டது ஆதலால் இனி அதனால் பயன் என் என்றும் நின் திருவுள்ளக் கருத்தே முற்றுவிப்பா யாக என்றுஞ் சொல்லுகின்ற சகதேவனை நோக்கி யாதருளிச் செய்தான் கண்ணன் : (கஉகூ)

130. தூதாகப் போவேனைச் சொன்ன தகவின்மை
வேதா திபனே விளம்பிக்கா—ணேதோதான்
மன்னற்கு நேரிளைய மன்னவனே யென்னினைவை
யின்னதே யென்றுரையா யீங்கு.

ஏ - து. நான் உங்களுக்குத் தூதாளாகத் துரியோதனன் பக்கல் நாடு வேண்டிப் போவேனை ஈங்கொரு தகவின்மை உரைத்தாய் ஆதலால் மற்று அது ஏதோவென்று கண்ணன் அருளிச் செய்யக் கேட்டு யாது சொன்னான் சகதேவன் : (கங௦)

131. அந்தமற மன்னவர்க ளோடே யடியோமைச்
சிந்தப் புடைத்துத் திசையெங்கும்—வந்து
படைபொருத மன்னரையும் பாரதத்தாற் கொல்ல
வடைவுடனே தானினைந்தா யாங்கு.

ஏ - து. பெருமாயை வல்லானே, நின் திருவுள்ளக் கருத்து நினைவுகளை யான் சொல்லக் கேட்பாயாகில், துரியோதனன் நாடு தாராத போது மற்று அவனுடனே போர் விளைந்த விடத்து மற்று அவரையும் எங்களையும் மடிவித்து, எங்களுக்காகப் போர் புரிய வந்த வேந்தரையும் மற்றுமுள்ள நாற்படைகளையும் அழித்து நிலமகளின் பொறைதீர்த்து நீயும் ஒருருவனாக நிற்கவே எண்ணினாய் என்று சகதேவன் சொல்லக் கேட்டு வியப்புற்ற திருவுள்ளத்தனாய் யாதருளிச் செய்தான் கண்ணன் : (கங௧)

---

130. தகவின்மை - தகுதி இல்லாதசொல். வேதாதிபன் - வேதங்கள் கொண்டாடத் தக்க பெரியோன்; வேதம் அறிந்த வல்லோனுமாம்.

131. அந்தமற மன்னர் - துரியோதனர். மறம் - பாவம். அடியோமை - உனக்கு அடிமை பூண்ட எம்மையும். அடைவுடனே - முழுமையாக.

132. ஆயிரக்கா ருனுடைய மண்டபத்தில் யாம்புகுந்
தாயிரக்கா றன்னி லமருவோ—நீயெந்தஞ்
சத்திதா னிற்குந் தனித்தூ [1]ணறிந்தாயேற்
சத்தியவா னாக தலத்து.

எ - து. நாம் போகின்ற செயல்களும், செய்து முடிக்குஞ் செயல்களும் நீ அறிவோம் என்றுயாதலால், நீ அறிவையாகில் நாம் இந்த மண்டபத்திற் புகுந்து ஆயிரந் தூணிலும் மறைந்து நிற்போம்; நின்றக்கால் நம்முடைய ஆற்றல் நிற்கும் தூணை அறிந்தாயாகில் நாம் எண்ணியிருக்கின்ற செயல்களும் அறிவை என்றும், இப்பேருலகில் மெய்யுணர்வாளன் என்றும் கண்ணன் அருளிச் செய்யக்கேட்டுச் சகதேவனும் உடன்பட அப்பொழுது யாதருளினன் கண்ணன் : (௧௩௨)

133. சாதேவ னோடுந் தருக்கித் துடனெழுந்து
மாதேவன் மண்டபத்தி லேபுகுந்து—சாதேவன்
றானறியா வண்ணந் தனித்தனிதூ ணாயிரத்திற்
போயறியத் தானொளித்தான் புக்கு.

இவ்வகை சகதேவனுடன் தருக்கஞ் செய்து கண்ணனும் அந்த மணிமண்டபத்துட் புகுந்து மணித்தூண்கள் ஆயிரத்திலும் தன் வடிவத்தைக் கரந்து கொண்டு எழுந்தருளி நின்றான். அவ்விடத்துச் சகதேவனும் அந்த மண்டபத்திற் புகுந்து கண்ணன் ஆற்றல் எழுந்தருளியிருக்கும் தூணைச்சேர்ந்து மலர் வழிபாடு செய்து வணங்கி யாது விண்ணப்பஞ் செய்தான் சகதேவன் : (௧௩௩)

134. அன்றங் கிரணியனைக் கொல்லவே யத்தூணி
னின்றுபுறப் பட்ட நெடியோனே—யின்றென்முன்
போதாய்நீ யென்று புகழ்ந்தேத்தி நின்றானே
சாதேவ னாகுந் தலத்து.

---

132. கால் - தூண். அமருவோம் — தங்குவோம். எந்தம் - எம்முடைய. சத்தி - உண்மை உரு ஆற்றல்:

133. சாதேவன் - சகாதேவன். மாதேவன் - கண்ணன். புக்கு — புகுந்து.

134. போதாய் - வாராய். “தூணினும் உளன்” என்றான் பிரகலாதன். தூணம் பிளந்து வெளிப்பட்டது ‘நரசிங்கம்’. அதனை உள்ளடக்கியது “அன்றங்.........நெடியோனே”

பா. வே: 1. ணறிந்தாயாய்ச்.

என்றிவ்வகை விண்ணப்பஞ் செய்யக் கேட்டுக் கண்ணனும் விரும்பிய திருவுள்ளத்தனாய்த் தன் பேருருவை வெளிப்படுத்தி நின்றானைக் கண்டு பேரன்பினனாகிக் கீழே விழுந்து வணங்கிப் பின்னும் யாது விண்ணப்பஞ் செய்தான் சகதேவன் : (கஙௌச)

135. காற்றுங் கனலு மிடியும் கதிரோனுந்
தோற்றஞ் சுடருஞ் சுருதியுமாய்—நாற்றிசையோ
டேல்லா வுயிருமாய் [1] நின்ற யெனக்குறிப்பைச்
சோல்லாயென் றானே [2] தொகுத்து.

எ - து. நீ அனைத்துலகங்களுக்கும் முழுத்தலைவனாய் முக்காலமு முணர்ந்தோனாய் அனைத்துயிர்களுக்கும் படைப்பு, காப்பு, அழிப்பு நீயேயாய்ப் பின்னும் அருள்வோனாய் மாயை பண்ணுகின்ற நீ அறநெறிகளால் வெற்றியை வேண்டினும் வேண்டுக; சந்தினை வேண்டினும் வேண்டுக; செயற்படுகாலமும் செய்தியும் வெகுளியும் கூறவல்லார் யாவரோ; என்றும் நின் திருவுள்ள மல்லதில்லை யெனப் பேசிய சகதேவனை மகிழ்ந்து பாராட்டி மற்றவனை முக்காலம் உணர்ந்தோன் எனக்குறித்துத் தன்னருகணைத்து, உனக்கு வேண்டுவன உளவாகில் வேண்டிக் கொள்வாயாக எனக்கேட்டு யாது விண்ணப்பஞ் செய்தான் சகதேவன் : (கஙௌரு)

136. அரவுயர்த்தோன் றன்னு லருங்கான மெய்தி
முரசுயர்த்தோன் பட்டதுயர் தீர—வரவணைமேற்
கண்வளர்ந்தாய் நாங்கண்மிகக் காசினியை யாள்வதற்கு
மண்ணளந்தாய் நல்காய் வரம்.

எ - து. துரியோதனன் மாயச் சூதாடி மண்தோற்றுக் காடடைந்து தருமன் பட்ட துயர்களும், நாங்கள் பட்ட துயர்களும், பாஞ்சாலி பட்ட பருவரலும் எல்லாம் எம்பெருமானே அறிந்தருளும் ஆதலால், அது வொழிந்த முன்னம் இளம் பருவத்தில் நாங்கள் அன்னையொடு பட்ட அவலங்களும் அறிந்தருளுமாதலால்

---

135. சுடர் – கதிரோன் ஒழிந்த திங்கள், நாண்மீன் முதலிய ஒளிகள். சுருதி – மறை. 'எனக்குக் குறிப்பை' என்பது 'எனக் குறிப்பை' எனத் தொகுத்து நின்றது.

136. காசினி - உலகம். நல்காய் – அருள்வாய்.

பா. வே: 1. நின்றாயே நின்னறிவைச்
2. தொழுது.

இங்ஙனை யெல்லாம் தீரத் துரியோதனனையும் உடன்பிறந்தார் களையும் கொன்று நாங்களுஞ் சிறிது காலம் நாடாளும் படிக்குத் திருவுள்ளம் பற்றியருள்வாயாக எனக்கேட்டு விருப்ப மிக்க திருவுள்ளத்தனாய் யாதருளிச் செய்தான் கண்ணன் : (௧௩௬)

137. பாராளு [1]மன்னவனை யாமும் போய்ச் சந்தித்தால்
நேராக நாடு விடானாகிற்—சீராருங்
கொற்றக் குடையுங் குருநாடுங் கூடவருள்
வெற்றியுட னுந்தருவோ மிக்கு.

எ - று. துரியோதனன் பக்கல் யாம் போய் மற்று அவன் கருத்தறிந்து உங்கள் உரிமை வேண்டத் தாரானாகிற் போர்புரிந் தாயினும் உங்கட்கு நாடு தரக்கடவோம்; இதற்கு ஐயமில்லை என்று சகதேவனுடன் கண்ணன் அருளிச் செய்யுமிடத்துப் பாஞ்சாலி வந்து அடிபணிந்து யாது சொன்னாள் : (௧௩௭)

138. பங்கயக்கண் மாய னடிபணிந்து பாஞ்சாலி
செங்கயற்கண் முத்தந் திகழ்ந்தலைப்பச்—சங்க
வளைநிரைக்கை யாலெடுத்து வாசக் குழலைத்
துளைநிரைக்கைக் காட்டினாள் சோர்ந்து.

அன்றியும், (௧௩௮)

139. நீயேயோ தூதுக் கெழுந்தருள்வா யாங்கவற்கு
நீயேயோ சந்தாய் நெறிநிற்பாய்—நீயாகின்
முற்றுவிப்பான் றானோதா னஞ்சிடுவான் றந்தையோ
விற்றடக்கை மாலே விளம்பு.

---

137. "அரவுயர்த்தோன் நாடு விடானாகில் நாம் தருவோம்".

138. பங்கயம் – தாமரை. கயற்கண் முத்தம் என்றது கண்ணீரை. வளை – வளையல். நிரை – வரிசை. குழலைக் காட்டினாள் என்றது அதனை முடிக்க வழி செய் என்று குறித்திடற்காம்.

139. சந்து – ஒற்றுமை. ஓகாரம் அனைத்தும் எதிர்மறைப் பொருள. இவை நிகழா என்பதாம். நீ தூதுக்கெழுவையும் அல்லை ஒற்றுமை ஆக்குவையும் அல்லை. நீ அவ்வாறு செய்யினும் துரியோ தனன் அதனை நிறைவேற்றான். அவன் தந்தையோ சிறிதும் அஞ்சான். தான் – துரியோதனன். தந்தை – திருதராட்டிரன்.

பா. வே: 1. மன்னவன்றன் பால்யாம்போய்ச் சந்துரைத்தும்.

எ - து. பாஞ்சாலி பேசிய அறநெறிகளும், துரியோதனனிடையிற் பட்ட தீங்குகளினால் வீமன்பட்டு உலர்கின்றவாறும், தனக்குக் குழல் நெருங்கிய சடை காட்டி நீல நெடுங் கண் நீரருவி சோர விம்மி விம்மி வெய்துயிர்த்து நின்றமையும் தன் நெடுமொழியும் விண்ணப்பஞ் செய்து நின்றாளைக் கண்டு கை கவித்து யாதருளிச் செய்தான் கண்ணன் : (கங்க)

140. உன்கருத்தே முற்றுவிப்பே னொண்ணுதலா யோண்டிறலான்
றன்கருத்தை யான்சென்று சந்தித்தாற்—பின்சடையா
மிக்குழலை நீமுடிக்க வேந்தெழிலான் தேவிமா
ரக்குழல்க டாம்விரிப்பா ராங்கு.

எ - து. துரியோதனன் முதலானவர்களைச் சென்று கண்டு அவன் மனக்கருத் தறிந்து உன் குழல் முடிப்பித்தும் மற்றந்தப் பார்வேந்தர் மகிழ்ந்த மதர் விழியார் கூந்தல் விரிப்பார் என்றும். உன் கருத்தன்றோ முற்றுவிப்பேன் என்றும் இவ்வகை யருளிச் செய்து நின்ற விடத்துக் கண்ணனை நோக்கி யாது விண்ணப்பஞ் செய்தான் தருமன் : (கசo)

141. பேண்டுகளும் பிள்ளைகளும் பித்தர்களு மென்னறிவா
ரண்டர்தொழ நின்றருளு மச்சுதனே—மண்ட
வெழுந்தவிள நாகக் கொடியோன்பா லீண்ட
னெழுந்தருளா யென்று னெடுத்து.

எ - து. தருமன் கண்ணனைப் பார்த்து ஈண்டன் எழுந்தருளி மற்று அவன் கருத்தறிந்து வருவாயாக எனக்கேட்டு அத்தினபுரம் நோக்கிப் போகின்ற கண்ணனை நோக்கிப் பின்னும் யாது விண்ணப்பஞ் செய்தாள் பாஞ்சாலி : (கசக)

142. வெற்றிப் புகழ்த்தருமன் வீம னருச்சுனற்கா
[1]யத்திப் பதிக்கே யருள்செய்வோய்—மெத்த
வழல்புனையும் வாய்மை [2]யரசனைக்கண் டாலேன்
குழனினைவா யென்றாள் குறித்து.

140. ஏந்து எழிலான் தேவிமார் - துரியோதனர் மனைவியர். "நீ குழல் முடிக்க அவர்கள் குழல் விரிப்பார்" என்க. துரியோதனர் அழிதல் உறுதி உரைத்தது.

141. அச்சுதன் – அழிவில்லான்; கண்ணன். •மண்ட - செறிய.

142. அத்திப் பதி - அத்தினபுரம். அரசன் - துரியோதனன். வழல் – வழுவுதல். வழுவிப் பேசுதலே வாய்மையாகக் கொண்ட

பா. வே: 1. வத்தி 2. யரசனை நீ கண்டாலென்.

என்றிவ்வகை பாஞ்சாலி விண்ணப்பஞ் செய்யக் கேட்டு மற்றதுவே திருவுள்ளத்திற் கொண்டு ஆங்கு அவர்களுக்கு விடை கொடுத்துப் பின்னை யாது செய்தான் கண்ணன் : (கசஉ)

143. தூதுக் குடன்பட்டுச் சுற்றக் குழாத்தோடு
மேதுக்கள் பேசியே யேகினான்—சேதித்து
[1]மானாக மேந்தினான் மாநகர்க்கு வந்தானே
[2]கோனா கணைக்கிடந்த கோ.

அன்றியும், (கசங)

144. முரசொலியுஞ் சங்கொலியு மூரித்தேர்த் தானை
திரைசெய் கருங்கடல்போற் செல்ல—வுரையோடு
மானாமன் மண்வேண்டி மண்முழுது முண்டபிரான்
போனான் புவிமேற் புரிந்து.

அன்றியும், (கசச)

145. வான மலர்பொழிய மண்ணோர் தொழுதேத்த
ஞான முனிவரெல்லா நாவார—வேலை
மறைப்பொருளா னற்றிசையும் வாழ்த்தினா ராங்கே
யிறைப்பொழுதுந் தாழா தெடுத்து.

அன்றியும், (கசரு)

துரியோதனன் என்பானாய் 'வழுதல் புனையும் வாய்மை அரசன்' என்றான். 'வாய்மை அரசன்' என்றது வாய்மை போற்றாமையை எள்ளி யுரைத்தது.

143. ஏதுக்கள் - காரணங்கள். சேதித்து - செதுக்கப் பட்டு. இவன் வரையப் பெற்ற துரைத்தது. மா நாகம் ஏந்தினான் - துரியன். கோநாக அணை கிடந்தகோ - கண்ணன்.

144. மூரி - வலிமை. திரை - அலை. உரையோடு மானா மன் - சொல்லிய சொல்லோடு மாண்புச் செயல் அமையாத மன்னன். அவனானவான் துரியன். மண்முழுது முண்ட பிரான் மண் வேண்டிப் போனான் என்பதன் நயமறிக.

145. வானம் - வானோர்; இடவாகுபெயர். 'நாவார வாழ்த்தினார்' என இயைக்க. இறைப்பொழுது - நொடிப்பொழுது.

பா. வே: 1. மாநாக, மானாக. 2. கோநா கணைக், கோனா கணைக்

146. மன்னர் கழறொழுது மீளத்தன் மாபூண்ட
மின்னு மணிநெடுந்தேர் மேற்கொண்டான்—முன்னின்
றெழுந்தனவே மாமுரச மார்த்தனவே சங்கம்
பொழிந்தனவே பூமாரி தான்.

எ - து. தனது சிறந்த மணிநெடுந்தேர் மீதேறி அனைத்தணிகளும் பூண்டவனாய்த் தன் சுற்றக் குழாத்தோடும் முழுதுணர்ந்தோர் புடைசூழ உற்றதுரைத்து அனைத்திசையும் ஆர்ப்பெடுப்ப ஒலிக்குங் கடலெனச் சங்கு பேரிகை முதலான இசைக் கலன்கள், ஐங்கருவியொலி முழங்கக், கலுழக் கொடி விசும்பணுவ, குடையும சாமரையும் புடை தயங்க, எழில்மணிக் கவரி அருகிரட்டக், கொற்றக்குடை மேல் நிழற்ற வானத்திடையே எண்வசுக்களும் அருகணைந்துவர வானோர் படையும் தனியாக வீரத் திருப்பொலிந்து வழிபட்டுப் பூமழை பொழிய இனிதுடன் எழுந்தருளிப் பாண்டவர்க்குத் தூதாகிப் பார் வேண்டிப் பார் மிசைத் தூண்டு பரித்தேர் தாண்டத் துரியோதனன் பாற் போயினான் கண்ணனைக் கருதுவது. அது யாங்ஙனமோ வெனில் : (கசசு)

147. காடு மலையுங் கடும்புனல்சே றாறுகளு
நாடும் பலபொழிலு நண்ணிப்போய்ப்—பீடுடைய
முத்துநகை செய்யு முகில்வண்ணன் மூன்றுநா
ளத்திநக ரெய்தினா னாங்கு.

இவ்வகை எழுந்தருளிக் காடும் நாடும் மலையுங் கடந்து இரண்டு நாள் வழியிற்றங்கி மூன்றாநாள் அத்தினபுரம் புகுந்தான் கண்ணன் என்றவாறு. அப்பொழுது மற்றவன் வரவு கேட்டு யாது செய்தான் துரியோதனன் : (கசஎ)

148. தன்னகரி கோடித்துத் தண்டலைக ளெண்டிசையும்
பொன்னகரி போலப் பொலிந்திலங்கக்—கொன்னவிலுங்
கூராழி வேந்தனுக்குக் கோயி லிடங்குறித்தான்
பாராளு மன்னன் பரிந்து.

146. புடை தயங்க - பக்கங்களில் விளங்க. தாண்ட - தாவ.

147. நண்ணி - அடைந்து. நகை - புன்முறுவல். அத்திநகர் - அத்தினாபுரம்.

148. நகரி - நகர்; அத்தினாபுரம். கோடித்து - அழகுபடுத்தி. தண்டலை - தண்மை + தலை; குளிர்ந்த இடம், சோலை. பொன்னகர் - அளகையம்பதி. கொன்னவிலும் - அச்சுறுத்தும்.

எ - து. கண்ணன் எழுந்தருள்வது கேட்டுப் பெருவிருப் புடையனாய் வீதிகடோறும் பூவும் நீரும் பொழிந்து மாட மண்டபந் தோறும் வண்ணத் துகிலும் மணிமாலையும் அணிந்து கொண்டல் பொருந் தண்டலைகள் எண்டிசையும் நிறைத்து விளக்கு புகைகளால் அழகுறுத்திக் கதிரொளியை மறைத்த ஆடரங்கும் மாடவீதியும் பட்டுத்துகில் பொதிந்து ஆடலொலி பரப்பிச் செப்பங் கூர்ந்த மண்டபத்தே கண்ணனுக்கான கோயிலிடம் பண்ணி, அஞ்சனத் தால் அழகு செய்து பஞ்சணையும் மஞ்சனமும் பாரித்து, மற்றும் வேண்டின வெல்லாம் விளைப்பித்துத் தானும் அனைத்தணிகளும் பூண்டு பிறநாட்டு வேந்தர்கள் அனைவரும் புடைசூழ ஆனை தேர் குதிரை கருவி காலாட்களோடு எம்மருங்கும் புடைசூழ, எழில் மணிக்கவரி அருகிரட்ட வெண்குடை மேனிழற்றத் தனிவெண் கவரி புடைதயங்க, பாம்புக் கொடி விசும்பணுவ மாகடல் முழக் கெனச் சங்கு பேரிகை முதலாயுள்ள இசைக்கலன்கள் ஐங்கருவி ஒலி முழங்க, வீடுமர் துரோணர் விதுரர் கிருபர் கன்னன் அசுவத் தாமன் உள்ளிட்ட குருகுலவேந்தர் கூட்டமுடன் போந்து கண்ணனை யெதிர் கொண்டு வரப் போகா நின்ற மன்னர் மன்னன் துரியோதனனைத் தகைந்து யாது சொன்னான் சகுனி: (கசஅ)

149. ஆயனை மாலென் றறியார்போ [1]லாங்கவனுந்
தூய தருமன்றன் றூதுவனாய்த்—தாயங்
கொடுப்பிக்க வந்தானைக் கோவேநீ காண
[2]வடுக்குமோ வென்றா னழித்து.

எ - து. பாண்டவர்க்குத் தூதனாகி உரிமை வேண்டுதற்குக் காரணனாய் வருகின்ற கண்ணனை நீ பரிவினாற் சென்று கண்டா யானால் அச்சத்தினாற் சென்று கண்டான் என்று நாற்படைவீரரும் வேந்தரும் கருதப்படும் ஆதலால் நீ கண்ணனை எதிர் கொள்ளக் கடவையல்லலை யென்று சகுனி சொல்லக்கேட்டு மிகவும் அளவளா வியுடன் பட்டுக் கவலையோடு கதுமென மீண்டு போய்த் தன்

ஆழிவேந்தன்–கண்ணன். கோயில்–மாளிகை. பாராளுமன்னன் - துரியோதனன். பரிந்து – விரும்பி.

துகில் - ஆடை. பாரித்து – அமைத்து. செப்பங் கூர்ந்த – செம்மை யமைந்த. மஞ்சனம் - குளிப்பறை. மருங்கு – பக்கம். தகைந்து - தடுத்து.

149. தாயம் - உரிமை. அடுப்பிக்குமோ - தகுமோ. அழித்து - முறைமை கெடுத்து.

பா. வே: 1. லாங்கவனைத் 2. வடுப்பதோ.

கோயில் புக்கான் துரியோதனனுகக் கருதுவது. அப்பொழுது கண்ணனை எதிர்கொள்ளாமல் இருப்பது யாவர்க்கும் காப்பல்ல வெனக் கருதி வீடுமர் துரோணர், விதுரர் கிருபர் கன்னன் அசுவத்தாமன் உள்ளிட்ட எல்லா வீரர்களும் தம்மொடு தாம் புலம்பி எதிர் கொள்வாராகப் போயினர். அப்பொழுது : (கசசு)

150. காங்கேய னுள்ளிட்ட காவலர்க டற்சூழ்
வாங்கெதிர் கொண்ட வரசர்களைத்—[1]தேங்கோளுநீர்
மல்லமருந் தோளானை மன்னுவது நாளையென்று
வில்விதுரன் வீடணைந்தான் வேறு.

எ - று. கண்ணனை வீடுமர் துரோணர் விதுரர் தொடக்கத்தார் உள்ளிட்ட எல்லாவீரர்களும் சென்று எதிர் கொண்டு அடிபணிந்து எம்மருங்கும் சூழ்ந்து வழிபாடு செய்ய, எழின்மணிக்கவரி அருகிரட்ட வெண்குடை மேனிழற்றக் கலுழக் கொடி விசும்பணுவச் சங்கு பேரிகை முதலாயுள்ள இசைக் கலன்கள் ஐங்கருவி யொலி முழங்க எழுந்தருளி அத்தினபுரம் புகுந்து பார் வேந்தனைக் காண்பதற்கு நாள்குறித்து நாடி, விதுரன் கோயிலிடங் கொண்டான் கண்ணன் என்றவாறு. அப்பொழுது : (கருo)

151. தீப்பிறக்குஞ் சக்கரக்கைச் செங்கண்மா லென்னுடைய
நாய்க்குடிலி லேநுழைந்தா [2]னுயர்ந்தேன்—வாய்த்த
பிறப்பைக் கழித்தேன் பெரும்பதம்பெற் றேனென்
றிறப்பைப் பிரித்தா னெழுந்து.

அன்றியும், (கருக)

152 திருமா லரியோ தனனிடைக்குத் தூது
வருமாறு கண்டு மகிழ்ந்தே—பிரியா
வெறிமலர்த் தாரான்றன் மெய்ம்மறந் தாங்கே
குறை [3]பிரித்தா னுள்ளங் குளிர்ந்து.

---

150. காங்கேயன் - வீடுமன். தேம் — இனிமை. மல் அமரும் தோள் - வலிமை தங்கிய தோள். மன்னுவது - (கண்டு) தங்குவது வேறு — தனித்து.

151. பிறப்பைக் கழித்தேன் - பிறப்பை நீக்கினேன். பெரும் பதம் — வீடுபேறு. இறப்பைப் பிரித்தான் — இறவாப் பேறுபெற்ற விதுரன். பிறப்பு உண்டானுல் இறப்பு உண்டு. பிறப்பைக் கழித்தான் ஆதலால் 'இறப்பைப் பிரித்தான்' என்முர்.

152. வெறி - மணம். குறை பிரித்தான் - குறை நீக்கினன்.

பா. வே: 1. தேங்கொவிநீர். 2. னுய்ந்தேன். 3. பிரிந்தான்.

எ - று. தேவ தேவன் யாவர்க்கும் காண்டற் கரியான் கண்ணன், தருமன் பொருட்டுத் தூதாக மற்றிங் கெழுந்தருளினது அடியேன் நாய்க் கொட்டில் என்ன நல்வினை பண்ணிற்றோ, என்றும் முன்னைப் பிறவிகளில் செய்த நல்வினைப் பேற்றால் இப்பொழுது என் கொட்டில் கோயிலாகப் பெற்றதென்றும், யான் இனித் திருவுளத்தினால் இம்மை மறுமை இரண்டும் அறப் பெற்றேன் என்றும், இவ்வகை விண்ணப்பஞ் செய்து திருவடி தொழுது செய்வதொன்றறியாது விருப்புடையவனாய், ஒன்பான மணிகளால் அணிந்த தன் இறப்பையும் பிறப்பையும் பிரித்துத், திருவடிகளை நோக்கிமலர் வழிபாடு செய்து பேரன்பு செலுத்தினான் முழுதறிந்த விதுரனாகக் கருதுவது. அது கண்டு கண்ணனும் திருப்புன் முறுவல் கொண்டு மற்று அவனை நோக்கி யாதருளிச் செய்தான் : (௧௫௨)

153. இவ்வீ டுனதெனதே யென்றருளிப் போய்விதுரன்
மெய்வீட்டி லுண்ண மிகவிரும்பிப்—பொய்வீ
டினிதுசெயும் பாண்டவர்க்கா யெம்[1]பெருமா னாங்கே
யமுதுசெய்து கண்வளர்ந்தா னாங்கு.

அன்றியும், (௧௫௩)

154. விதுரனுடன் மேவி விருந்தமுது செய்து
மதுர மொழிபயின்றான் மாலோ—னதிபற்
கெதிரோ னிருந்தவிட மேந்தெழிலான் செல்லக்
கதிரோனுந் தோற்றினான் காய்ந்து.

இவ்வகை விதுரன் வீட்டில் எழுந்தருளி இனிய மொழி பயின்று மற்றங் கமுது செய்து பள்ளி கொண்டருளி நடுயாமத்தில் கண்ணகற்றி மற்றைநாள் துரியோதனனிடைக்குப் போவானாக நினைந்தருளும் எல்லைக்கண் கிழக்குத்திக்கில் கதிரோன் தோன்றக் கண்டு கண்ணன் எழுந்தருளுவானாக விதுரனை அழைத்துத் தேர் கொண்டுவா வென்ன, யாது செய்தான் விதுரன் : (௧௫௪)

---

153. இவ்வீடு உனது எனதே - உனது இவ்வீடு என் வீடே. பொய் விடு இனிது செயும் - பொய்மை விடுத்து இனியனவே செய்யும். பொய் - கரவு. பொய்வீடு - அழியும் வீடுமாம். அழியா வீடென 'இறைநிலை' உளதாகலின்.

154. மேவி - பொருந்தி. மதுரம் - இனிமை. காய்ந்து - சிவந்து. அதிபன் - அரசன். அதிபற் கெதிரோன் - துரியோதனன். ஏந்து எழிலான் - கண்ணன். செல்ல - செல்லும் பொருட்டு.

பா. வே: 1. பெருமா னாங்கே.

155. ஒற்றை மணித்துகிற் றொன்றுரிய வொன்றுதவிக்
கொற்றவேற் பாஞ்சாலன் கோமகளை—யற்ற
[1]மறைத்தவனே மாவலிபான் மண்ணெல்லாம் வாங்கிச்
சிறைத்தவனே போந்தேறு தேர்.

இவ்வகை விதுரன் விண்ணப்பஞ் செய்யக் கேட்டு யாது செய்தான் கண்ணன் : (௧௫௫)

156. என்றான் விதுர னெழிற்றேரின் மீதேறிக்
குன்றாங்கு கோயிற் குறுகினான்—நின்றார்போய்
மன்றார்தார் மன்னனுக்கு மாயன் வரவுரைப்பக்
குன்றா தணையிருந்தான் கோ.

அன்றியும், (௧௫௬)

157. வெற்றிப் பறவைக் கரசன் விரைந்தேன்பா
லுற்ற வளவி லொளிர்வேலீர்—மற்றவனைக்
கைதொழுது வாழ்த்தக் கடவீரேற் காசினிமே
லெய்துமிழி வென்றா னெடுத்து.

அன்றியும், (௧௫௭)

158. கோபால னிங்குக் குறுகி வருதலுமே
மேபால ரேத்தி வினவுதிரேற்—பூபாலீ

---

155. மணித்துகில் - அழகிய ஆடை. பாஞ்சாலன் கோமகள் - பாஞ்சாலி. அற்றம் - மானம்; மறைவிடம். சிறைத்தவன் - அடிப் படுத்தியவன். கோமகளை அற்றம் மறைத்தவனும், மாவலிபால் மண் வாங்கியவனும் கண்ணன். இனிச் சிதைத்தல் எதுகை நோக்கிச் சிறைத்தலாயிற்றுமாம்.

156. 'என்றான்' என்பதைத் 'தேர் ஏறு' என்னும் மேலைப்பாட லோடு இணைக்க. ஆங்கு - உவமை உருபு. குன்றாங்கு - குன்று போன்ற. நின்றார் - வாயிலாளர். மன்று ஆர் தார் - மணம் நிரம்பிய மாலை. அணை - அரியணை.

157. வெற்றிப் பறவை - கலுழன். கடவீரேல் - கடனாகக் கொள்வீராயின். காசினிமேல் - உலகில்.

158. மேபாலர் - மேன்மையுடைய காவலராய நீவிர். வினவு திரேல் - நலம் வினவுவீர் ஆயின். பூபாலீர் - அரசர்களே.

பா. வே: 1. மறுத்தவனே மாவலிபான் மண்ணனைத்தும் வாங்கச் சிறுத்தவனே.

ரும்முடைய மாநிதியங் கோள்வே னெனச்சொன்னான்
செம்முகம தாகச் சிவந்து.

அன்றியும், (கநிஅ)

159. ஒலிகடலு மோவ்வா வுயர்முழக்கஞ் செய்யும்
புலிதிரண்ட மன்னர்பொருங் கூடம்—வலிய
விரும்பிழக்கும் காந்தமென வெண்ணு மனங்கள்
விரும்புகைக்குச் சென்றார் விரைந்து.

ஏ - து. கண்ணன் என்பக்கல் வந்தால் நீங்கள் அவனைக் கண்டு வரவேற்றல் தொழுதல் செய்வீராகில் பாண்டவர்க்குத் தூதனாய் வந்தானை என்னருகு இருந்தார் ஏற்பது அச்சத்தால் செய்வித்தேன் என்று பிறநாட்டார் கருதி இகழப்படுங் கண்டீர் என்று பலபகர்ந்து மற்றந்த மன்னவர்களைக் கையமர்த்தி இவ்வகை பேசி இனிதிருந்த விடத்துக், கண்ணனை வரவிடச் சொல்லி வாயிற் காவலரைப் போகவிடுத்துத் தானும் அரசர்களும் யாங்ஙனம் வீற்றிருந்தாரோ வெனில்: (கநிகூ)

160. வெள்ளிக் குடைநிழற்ற வெண்சா மரமிரட்ட
வெள்ளிலைவேல் வேந்தருடன் வீற்றிருந்தான்—கள்ளக்
கவற்றால்வென் றுண்ணாடு கைக்கொண்டு பின்னுங்
குவற்று னிரைகவர்ந்த கோ.

ஏ - து. கண்ணன் எழுந்தருளி வருகின்றமை அறிந்து பிற நாட்டு அரசரும் சூழ்ந்து வழிபாடு செய்ய வீடுமர் துரோணர் விதுரர் கிருபர் கன்னன் அசுவத்தாமன் உள்ளிட்டாரும் சகுனியும்

செம்முகமதாகச் சிவந்து சொன்னான் - முகம் சிவக்கச் சினந்து சொன்னான். சிவத்தல் - சினங் கொள்ளல். "கறுப்பும் சிவப்பும் வெகுளிப் பொருள"—தொல். உரி. 74.

159. புலி திரண்ட மன்னர் - புலிக்கூட்டம் போன்ற மன்னர், பொருங்கூடம் - பொருவுங் கூடம் என்பதன் தொகுத்தல். பொருவுதல் – செறிதல். கண்ணன் வரவு கண்ட மன்னர் காந்தத்தால் ஈர்க்கப் பெற்ற இரும்பெனச் சென்றார் என்க.

160. வெள்ளிக்குடை – வெண்ணிறக்குடை. இரட்ட - வீசிற. வெள்ளிலைவேல்-ஒளிவிடும் இலைவடிவில் அமைந்த வேல். உண்ணாடு, உள் + நாடு. தன்னுட்டோடு இணைந்த நாடு. என்றது குருநாட்டை. ஆனிரை கவர்ந்தான்-விராடவேந்தன் ஆன் கூட்டத்தைக் கவர்ந்தவன். கோ - துரியோதனன்.

விருசசேனனும் பூரி பூரிசிரவாவும் சோமதத்தன் முதலாயுள்ள அருந்தேரும், துச்சாதனன் முதலாயுள்ள தொண்ணூற்றொன்பது தம்பிமாரும் புடைசூழ எம்மருங்கும் எழின்மணிக் கவரி அருகிரட்ட வெண்குடை மேல் நிழற்ற, வேல் வேந்தர் தொழு திறைஞ்சத் தானும் பல்வகை அணிபூண்டு நகைமுகமாக அரியணை மிசை அரிமாப்போலப் பொலிந்து தோன்றி வீற்றிருந்தான் மன்னர் மன்னன் துரியோதனன் என்றவாறு. அது யாங்ஙனமோ வெனில் : (கசுO)

161. அந்தணர்க ளுள்ளார்க ளாசிசொல்லி யேகொடுத்த
கந்தமலர்த் தாளிக் கறுகம்புல்—பந்திநிலை
யையா யிரங்குதிரைக் கற்றைப் படியாகும்
பையா டரவுயர்த்தோன் பால்.

எ - து. நாள்தோறுங் காலத்தே அந்தணர் வந்து மறைமொழிக் காவலிட்டுக் கொடுக்கும் தாளிப்புல் துரியோதனன் ஊர்தியாகிய நற்பரிகள் ஐயாயிரத்திற்கும் அற்றைப் படியாம்படி கொடுத்து, அந்தணர் குழாம் விளங்கித் தோன்றத் துரியோதனன் இருந்த அவையகத்துச் சென்று கண்ணனும் யாது செய்தானோ வெனில் : (கசுக)

162. விண்ணவர்கோன் றனையென்ன வீற்றிருந்த வேந்தன்பால்
மண்ணிரந்து மாயவனும் வந்திருந்தான்—வண்ணங்
கரியானைக் கண்டு கடனழியா வேந்த
னரியா சனமளித்தா னங்கு.

இவ்வகை கண்ணன் எழுந்தருளி அவைக்களம் சென்றெய்தக் கண்டு துரியோதனனும் எதிர் கொள்ளாது சிறிய அரியணை கொடுத்து நலம் வினவ இன்சொலுடன் அவையகத்து வீற்றிருந்தான் கண்ணனைக் கருதுவது. அப்பொழுது பார் மன்னர் அருகிருப்ப வேந்தர்கள் கண்ணனைக் கண்டு யாது செய்தாரோ வெனில் : (கசுஉ)

---

161. கந்தம் – மணம். தாளிக்கறுகம்புல் – தாளி என்னும் பெயருடைய கரியபுல். பந்தி - வரிசை. படி – உணவு. பை – படம். ஆசிசொல்லல் – வாழ்த்துதல்.

162. கடன் கழியா வேந்தன் - பிறவிக் கடனைக் கழிக்காத துரியோதனன்; வரவேற்கும் கடமை புரியாத வேந்தனுமாம்.

163. கங்கைமக னுங்கலச யோனியுமே கைமுகிழ்த்தா
ரங்கைவேல் வேந்த ரடிதொழுதார்—பொங்குகுடைக்
கன்னன் கவிழ்ந்திருந்தான் காற்சகுனி கைமறித்தான்
மன்ன னிடைபுகுந்தான் மால்.

எ - து. கண்ணன் [1]எழுந்தருளிப் புகுதக் கண்டு வீடுமன் துரோணர் உள்ளிட்ட அனைவரும் வணங்க, சகுனியுங் கன்னனும் துச்சாதனன உள்ளிட்ட தம்பிமாருங் கண்டுங் காணாதாரைப் போல இகழ்ச்சி பண்ணி இருந்தாராகக் கருதுவது. இவ்வகை இருந்தாரையும் முழுதறிவால் கழல் பணிந்தாரையும் கண்களாலும் மனங்களாலும் வணங்கி யிருந்தாரையும் அடைவு குலையாமல் கண்டருளி மற்று அவர் செய்தியெல்லாம் தன் திருவுள்ளத்தே கொண்டு இனிதுரைத் திருந்தான் கண்ணன் என்றவாறு. இவ்வகை இருந்த விடத்துக் கண்ணனை நோக்கி யாது சொன்னான் துரியோதனன் : (௧௬௩)

164. தொன்னகர்க்கு நின்வரவு கேட்டுச் சுவையமுத
மென்னகத்தி லேசமைக்க வென்கொலோ—வின்னகத்து
வானகங்கைக் கொண்ட வளரொளியாய் மற்றகத்துப்
போனகங்கைக் கொண்ட பொருள்.

எ - து. எம்பெருமான் நீ இங்கெழுந்தருளுமது கேட்டு என்னகத்திலே நினக்கான அடிசில் அமைக்க என்கொலோ விதுரன் அகத்தில் அமுது செய்தது என்று துரியோதனன் கேட்க யாதருளிச் செய்தான கண்ணன் : (௧௬௪)

---

163 கலசயோனி—குடமுனி; இவண் துரோணனைக் குறித்தது. கைமுகிழ்த்தல் - கைகூப்புதல். கால் - சூழ்ச்சி; வஞ்சமுமாம். கை மறித்தான் – கையாற்றடுத்தான். துரியோதனன், கன்னன், சகுனி ஒழிந்தவரெல்லாம் வரவேற்றார் என்க.

164. இன் அகத்து – இன்பத்துக்கு இருப்பிடமான. வானகம் - வானம். வளர்ஒளி – வளரும் ஒளி; பேரொளி. மற்றகம் - விதுரன் வீடு. போனகம் - உணவு. "என்னகத்துச் சமைக்க மற்றகத்துப் போனகம் கைக் கொண்டது என்கொலோ ?"

1. கண்ணன் எழுந்தருளக்கண்டு துரியோதனனும் "எதிர் கொண்டு அவைக்களம் சென்றெய்திச் சீரிய அரியணை கொடுத்து" என்பது கையெழுத்துப் படியிலுள்ள பாடம் என்பது முதற்பதிப்பின் குறிப்பு.

165. ஒருவ ரகத்தொருவ ருண்டுடுத்துத் தம்மின்
மருவி மனமகிழ்வா ராசிற்—பெருமுனையின்
மன்னப்போர் செய்யு மழகளிற்றாய் மாநிலத்துப்
[1]பின்னர்ப்போர் தகககதோ பேசு.

அன்றியும், (௧௬௫)

166. அன்பி னிடுஞ்சோறு மாபத் திடுஞ்சோறு
மின்ப முடன்சோ றிரண்டுண்டே—யன்பினிலை
யில்லாத வுன்னகத்தியா னுண்ணுமா றெங்ஙனே
மல்லார்தோண் மன்னா மதித்து.

ஏ - து. நீங்கள் அரச முறைமையே விரும்பி மிகு செருக்கோடு அறவோர்களையும, உறவினர்களையும் இகழ்ந்து வாழ்கையாலும், முன்னாள் வஞ்சமாய்ச் சூதாடிய ஞான்று தருமனுக்குப் "பன்னீராண்டு காடுறைந்து ஓராண்டு கரந்துறைந்து பதின் மூன்றாண்டுங் கழித்தால் உங்கள் நாடு வாங்கிக் கொள்ளக் கடவீர்" என்று பேசியபடியே தருமனும் உடன்பிறந்தவர்களும் அருங்கானம் உறைந்து பெருந் துயர்பட்டுக் காலக்கேடு செய்யாமல் ஒட்டின நாள் கழித்து வந்து வெளிப்பட்டுத் தங்களுரிமை வேண்டக் கொடாது அறிவழிந்து அறநெறி கெடப பேசுகையாலும், உங்களகத்து உண்ணுமது அறமன்று கண்டாய்; ஆதலால் விதுரனவான் முற்றறிவனாய் அறநெறி வழுவாமல் எவ்வுயிரையும் இகழாமல் இல்வாழ்க்கையும் அரசநெறியும் உடையவனாய் இருப்பான் ஆகையாலும தருமன்முதலானவர்க்குத் தூதாய் உன்பக்கல் நிலம் வேண்டி வருகையாலும், வந்த கடமை முற்றாமையாலும், விதுரன் உங்கட்கும் மற்றவர்கட்கும் சமனான தந்தை யாகையாலும் அவன் இல்லத்திலே உணவு கொள்ளுமது கேட்டார்க்கும் முறையாம் கண்டாய். அஃதல்லால் அங்கும் உன்னதன்றோ அடிசில் என்று இவ்வகை கண்ணன் அருளிச் செய்யக் கேட்டுப் பின்னும் யாது சொன்னான் துரியோதனன்: (௧௬௬)

---

165. மருவி – கலந்து. மன்ன - நிலைத்து. மழகளிறு – இளங் களிறு; மதயானையுமாம். பின்னம் – பிணக்கு.

166. மதித்து - பெரிதாய் நினைத்து. "மன்னா, மதித்து உள்ளகத்தில் உண்ணுமா றெங்ஙன்?" ஞான்று - பொழுது. அடிசில் - உணவு.

பா. வே: 1, பின்னைப்போர்; பின்னப்போர்.

167. ஆயனே யச்சுதனே யற்புதனே தற்பரனே
மாயனே வையகத்து மன்னுயிர்க்குத்—தாயனே
யென்போந்த வாறென் றுரைத்தா னெழிலுருவு
மின்போந்த வேலான் விரைந்து.

என்றிவ்வகை துரியோதனன் சொல்லக் கேட்டு யாதருளிச் செய்தான் கண்ணன்: (கசு௭)

168. ஒட்டிய காலங் கழிந்தனகாண் காவலன்ற
னொட்டிய வாட்ட [1]மொழியீரேற்—கட்ட
கரும்பழிசா ராலே கமழ்நாடா கேட்டாற்
பெரும்பழிதா னாகாதோ பேசு.

எ - று. உடன்பாடு மாறாமல் காலக்கேடு செய்யாமல் முன்னம் பேசிய பரிசே காடுறைந்து பெருந்துயர்ப்பட்டு வந்து தம் முரிமை வேண்டிய தருமனுக்கு நாடு கொடாமல் மறுத்துரைக்குமது கேட்டார்க்கு அறமாகாது. அது நிற்க, நாட்டிற் பாதிபேனும் கொடுத்து உன் பங்காளிகளான தருமன் முதலானவர்களை அழைத்துக் கொள்வாயாக எனக்கேட்டு உடன்படாது கதுமென யாது சொன்னான் துரியோதனன் : (கசுஅ)

169. கழிந்திடுக வாண்டெல்லாங் கட்டவதி யோட்ட
வொழிந்திடுக வாளமரே யாக—வொழிந்து
மயிர்முனைக்கு மண்கொடேன் மன்னவனே யென்றான்
செயிர்முனைக்க ணிற்பான் செயிர்த்து.

என்று பின்னுஞ் சொல்லுவான் துரியோதனன்: (கசுசு)

---

167. தற்பரன் – கடவுள். எழில் உருவு – அழகே வடிவான. மின்போந்த வேலான் - மின்னே வந்தாற்போன்ற வேலுடையான்.

168. ஒட்டிய காலம் – உடன்படிக்கை செய்து கொண்ட கால எல்லை ஒட்டிய வாட்டம் - ஒன்றிய துயர். கட்ட - வெட்டப்பெற்ற. கதுமென - விரைந்து.

169. கட்டு அவதி – கூறப்பெற்ற உறுதி மொழி. ஓட்ட – முற்றும். ஒழிந்து - மற்று. செயிர்முனை - போர்முனை. செயிர்த்து – சினந்து.

பா. வே: 1. மொழிந்தீரேற்

170. பொருள்கொடுப்ப ரேனும் புகுமிடம தாக
மருவலர்க்கு மண்கொடுப்பா ரில்லை—யொருகுடைக்கீழ்ப்
பாராளு மன்னர் பணிகின்ற பைங்கழலா
யோராது சொன்னா யுது.

இவ்வகை வெகுளியெய்தி மற்று அவர்க்கு நாடு கொடுப்பதற்கு ஒன்றும் கருதாது நீ உரைத்தமையால் யான் அவர்க்கு மயிர் நுனைக்கும் மண்கொடேன் என்று பார் வேந்தன் சொல்லைக் கேட்டு யாதருளிச் செய்தான் கண்ணன்: (கஎ0)

171. தன்னுரிமை யெல்லாந்தன் சிற்றவ்வை தான்பயந்த
மன்னவனுக் கீந்தானிவ் வாள்வேந்தன்—றன்னோ
டொருகுலத்திற் றோன்றினா னல்லனோ சொல்லாய்
குருகுலத்தார் கோவேநீ கூறு.

எ - று. திருதராட்டிரனை நோக்கிக் கண்ணன் சொல்லுவான்: நின்மரபில் மூத்தோன் ஆயினான் ஆதலால் அவனுரிமை முன்னம் பேசியபரிசே பெறுமாறு நின்மகனுக்குச் சொல்லி நின் தம்பி மகன் தருமன் முதலானோர் நீயும் உண்டாயிருக்க நாடு பெறாது போகாமல் அவனுரிமை பெறுமாறு மன்னவனே சொல்லுவாயாக என்றும், தன் சிறியதாய் மகனுக்குக் குருமரபு கெடாமல் நாடுமுழுவதும் கொடுத்து மணமில்லானாய் வாழ்கின்ற வீடுமன் மரபின் உள்ளாயிருந்து தருமன் முதலானவர்க்குத் தம்முரிமை கொடாது மறுத்துரைத்தால் உன்மக்கட்கும் உறவினர்கட்கும் உறுதியாக வீம அர்ச்சுனர் நெடுமொழியினாலும் தருமன் பொறையினாலும் பழிபாவம் விளையுங் கண்டாய் என்றும் கண்ணன் அருளிச் செய்யக் கேட்டுப் பேசுவதொன் றில்லாதிருந்த திருதராட்டிரனையும் கண்ணனையும் நோக்கி யாது சொன்னான் துரியோதனன்: (கஎக)

---

170. மருவலர் - மருவாதவர்; பகைவர். ஓராது - ஆராயாது. உது - சுட்டுப்பெயர். அண்மை சேய்மைகளுக்கு இடையே எதிர் முகத்துள்ளதனைச் சுட்டும்.

171. சிற்றவ்வை–சிற்றன்னை; சந்தனுவுக்குக் கங்கையின் வழிப்பிறந்தவன் வீடுமன். வீடுமனைப் பெற்ற பின்னரும் சந்தனு ஒரு நங்கையை விரும்பினான். அவள் தந்தை "நினக்கு மைந்தன் உளன். என் மகள் பெறும் மைந்தன் யாது செய்வன்" என்று கூறி மகட்கொடை மறுத்தான். தந்தைக்காகத் தன் காமம் துறந்து சிற்றன்னை மக்கட்கே அரசுகொடுத்தான். அவ் வரலாறு இவண் எடுத்துக்காட்டப் பெற்றது. பயந்த – பெற்ற. குருகுலத்தார்கோ - திருதராட்டிரன்.

172. உரிமை யிருவர்க்கு மொக்குநா டொன்றை
யிருவரு ளுண்டாரு மில்லை—செருவில்
வலியார் வலியாராய் மண்ணுள்வ தென்று
னொலியார்நன் னாட னுடன்று.

எ - து. இரண்டு திறத்தோர்க்கும் முன்னுரிமை யொக்கும்; அதனில் தருமன் உரிமை சூதாடித் தோற்ற ஞான்று தந்தான்; அது வேண்டு மிடத்துப் போர் புரிந்து கொள்ளக்கடவது என்று துரியோதனன் சொல்லக் கேட்டு யாதருளிச் செய்தான் கண்ணன்: (கஎஉ)

173. முழுதுடையான் பாகம் பெறுனாகின் முற்று
மொழிய வுகந்தனையே யாகிற்—பழுதி
லடிப்பாடு பைங்கழற்கா லைவர்க்கு மைந்து
குடிக்காடு நல்குதியோ கூறு.

எ - து. நாடு முழுதும் ஆளவுரியானுக்குத் தன்னுரிமையிற் பாதி கொடாயாகில் குசத்தலமும, மிருகத்தலமும், வருணாபதியும், வாரசந்தியும், சயசந்தியும் என்பன ஐந்தூர்களாயினும் கொடுத்து மற்றுன் உடன் பிறந்தார்களை அழைத்து நின்னாற் செய்யத்தக்கன வெல்லாம் பொறுத்தி எனப்பேசி மனமகிழ்ந்துரைத்து மற்று அவரையும் உடன்கொண்டு ஆட்சிசெய்யுங்கருத்துண்டோ பார் வேந்தே உனக்கு என்று கண்ணன் அருளிச்செய்யக் கேட்டு உடன் படாது வேறு பேசிய துரியோதனனை நோக்கி யாதருளிச் செய் தான் கண்ணன்: (கஎங)

174. ஐவர்க்கு மைந்தூர் கொடுத்தாங் [1]கவரொருமை
மெய்பெற்ற தாகின் மிகவினிதாம்—வையகத்தின்
மாறு மெனக்கருதின் மன்னவனே [2]மற்றவருன்
கூறுள்வார் கண்டாய் கோடு.

---

172. உடன்று - மறுத்து; சினந்து.

173. முற்றும் ஒழிய உகந்தனையே ஆகில் - முழுதும் அவனுக்கு இல்லாது ஒழிய நினக்கே விரும்பினை ஆனால். பழுதில் அடிப்பாடு ஐவர்க்கு - துன்பத்தில் பழக்கப்பட்டுப் போன பாண்டவர்க்கு.

174. ஒருமை - ஒற்றுமை. மெய்பெற்றதாயின் - நிலைத்தால். கூறு - பங்கு.

பா. வே: 1. கவருரிமை. 2. மற்றவர்கள்

என்று சொல்லக் கேட்டு யாது சொன்னான் துரியோதனன்: (௧௭௪

175. மாயவனே கேட்டருளாய் மற்றவர்க ளெம்மோடு
தாயங்கொண் டாடத் தரமல்லர்—தூய
மடலவிழுந் தாராய் [1]மறுத்துரைக்கி லின்றேம்
மடலரசர் கண்டா யவர்.

இவ்வகை மறுத்துரைத்த துரியோதனனை நோக்கிப் பின்னும் மீளத் திருவுளஞ் செய்தான் கண்ணன்: (௧௭௫)

176. மன்னர் சபையகத்து மற்றவர்க்கைந் தூர்வேண்டப்
பின்னுங் கொடாமைபல பேசினையே—நின்னிலைமை
மையறவே செய்து மறுத்தமையால் வாளமாக்கட்
கையறமா மன்றோ கருத்து.

து - எ. அறநெறி வழுவ உரைத்தமையால் உனக்கும் உன் வாயிலுரை பொறுத்தாற்கும் பாவமாங் கண்டாய்; உன் மரபினர்க்கும் உனக்கும் உறுதியாகப் பழிபாவம் விளையுங் கண்டாய் என்று கண்ணன் அருளிச் செய்யக் கேட்டு யாது செய்தான் துரியோதனன் : (௧௭௬)

177. கோற்றப் படைமன்னர் சூழக் கோதித்தெழுந்து
வெற்றிமணித் தூணை வெகுண்டடித்தான்—வெற்றிக்குப்
பூணு ரலங்கல் புனையும் பெருந்தேரிற்
கோணாக முன்னுயர்த்த கோ.

அன்றியும், (௧௭௭)

---

175. எம் அடல் அரசர் - எம் பகை வேந்தர். மறுத்துரைக்கில் - மேலும் சொன்னால்.

176. தானே வாக்குப்படி தரவேண்டியிருக்க வேண்டியுந் தாராமை கருதிப் 'பின்னுங் கொடாமை' என்றார். மையறவே செய்து— குற்றமானவையே செய்து. கையறமாம் - கெடும்படியாம். கருத்து— நினைவு.

177. கோணாகம் - கோள் + நாகம். நச்சினைக் கொண்ட பாம்பு. அலங்கல் - மாலை.

பா. வே: 1. மறுத்துரைக்கே

178. தன்னை யறிந்திலான் றன்பிறப்புத் தானறியா
னென்னை யறிந்திலனே சற்றுயன்—பின்னைத்தன்
மெய்யறியா தென்றே மிகைத்தெழுந்து தானென்னைக்
கையறமா மென்றான் கறுத்து.

இவ்வகை பழித்துரைக்கின்றானை நோக்கி யாதருளிச் செய்தான் கண்ணன்: *(கஎஅ)*

179. தானே யரசாள்வான் றானே யெனக்குநேர்
தானே யெனைப்பழிக்குந் தன்மையான்—மானக்
கரைகள்வாய் மீனுகளுங் கங்கைத் திருநாட்
டிருகரையு மாள்வா னினி.

இவ்வகை யருளிச்செய்து, துரியோதனன் பேசிய வெறுப்பொடு கூடிய செருக்கும் கண்டு மற்றவனுடன் சினந்து பின்னும் அருளிச் செய்வான. உனக்கு இதுவே கருத்தாகில் எங்களுக்குக் குருநிலத்திலே போர் ஒழியாமற் செய்யப்பெறும் போர்க்கு வேண்டிய உறுதிப்பாடெல்லாம் செய்து தருவாயாக என்று உறுதியெல்லாம செய்துகொண்டு அவைக்களம் விட்டு நீங்கி ஒருதனி மண்டபத்து விற்றிருந்தான் கணணனைக் கருதுவது. அவ்விடத்து விதுரனை நோக்கி யாது சொன்னன் துரியோதனன் [1]என் சோற்றை இவனுண்டு என்பகைவர்க்கே ஒருதலை அன்பு செய்து, பகைவர் தூதனுக்குத் தன் சோறுபோல இன்னடிசில் சமைத்து அவற்கினிமை செய்து வஞ்சித்து வாழ்கின்றான் பரத்தை புதல்வனுதற்கே தக்கான் என்று மன்னர்குழாத்தின முன் செருக்காய்ச் சொல்லக்கேட்டு மிகவும் மானத்துடன் சினத்தீபற்றிப்

---

178. கற்றுயன்: கன்று + ஆயன்; கன்று + ஆ: கற்று ஆவது போல. கன்று மேய்த்துத் திரியும் இடையன் எனக் கண்ணனை இகழ்ந்தானும். தன் பிறப்புத் தானறியான் என்றது ஒருத்தி மகனுகப் பிறந்து ஒருத்தி மகனுக வளர்ந்தமை கருதியது. கையறமாம் என்று கூறியது கண்ணன் முன்னே கூறியதை உட்கொண்டாம் (176) கறுத்து · வெகுண்டு.

179. கண்ணன் துரியோதனன் சொல்லையும் செயலையும் எண்ணி யுரைத்த இகழ்ச்சியுரை இது. அரசாள்வான், நேர் என்று படர்க்கையில் கூறியனவும், ஆள்வாய் இனி என முன்னிலையில் கூறியதுவும் எதிர்மறைப் பொருள் தருவனவாம். 'நீ ஆளாய்; அழிவாய்' என்னும் பொருள் தருவன. உருமேறு – இடி.

1. இவ்விடத்தில் இருந்த வெண்பா ஒன்று விடுபட்டிருக்க வேண்டும் எனத் தோன்றுகின்றது.

புகையெழ விம்மி விழித்து உருமேறென்ன உடன்றெழுந்து துரியோதனனை நோக்கி யாது சொன்னான் விதுரன் : (கஎசு

180. மூத்தான் மகனை மூனிந்திளையான் கொன்றானென்
றேத்தா வடுவுக் குலோவினேன்—[1]பூத்தாயஞ்
செய்தபோர் வேத்தவையுட் டோர்வேந்தே நீயென்னை
வைதும் புகுமோ மறித்து.

எ - து. திருதராட்டின் மகனை விதுரன் கொன்றான் என்றும், அவன் சோறுண்டு அவனை வெகுளியினாற் கொன்றான் என்றும் பிறநாட்டு வேந்தர் எல்லார்க்கும், கேட்டார்க்கும் அறநெறி மறுத்தமை ஆதலால் அது முறையன்று; அதுவுமன்றி வீம அர்ச்சுனருக்கு உறுதிமொழிக் கேடாகிய வாக்குப் பழிகொடுக்க வழக்குடையேன் ஆகேன் என்றிவ்வகை வெகுண்டுரைத்து அரசர்களுக்கும் பொருந்தவுரைத்து மற்றிவன் அவையின்கட் புகுதேன் என்று பின்னும் தன் கடவுட்சிலையினை யாது செய்தான் விதுரன் : (கஎ0)

181. கண்ணுதலான் றன்சிலைக்குங் காகுத்தன் றன்சிலைக்கு
மெண்ணுங்கா னேரா மெழிற்சிலையை—நண்ணி
வெறுத்தாங் குரைத்தான்முன் வெவ்வுரையே பேசி
யிறுத்தான் விதுரன்கை வில்.

அன்றியும், (கஎக)

182. இன்னாச்சொல் வந்து செவிசுடலும் வேர்த்தெழுந்து
மன்னாட் டவரேனக்கு மாறிலா—ரென்னாத்தன்
போர்க்களத்து விற்பிடியே னென்றாங் கிறுத்திட்டான்
கார்க்குழுதந் தானிடித்தாற் போன்று.

180. மூத்தான் - திருதராட்டிரன். இளையான் - விதுரன். ஏத்தா வடு - பிறரால் புகழ்ந்து கூறக் கூடாத பெரும்பழி. உலோவினேன் - நாணினேன்; கூசினேன். பூத்தாயம் - நிலவுரிமை. போர்வேத்தவையுள் - போர்செய்தற்கு வந்த அரசர் கூட்டத்துள்;

"நீவைதும் வேத்தவையுள் புகுமோ?"

181. கண்ணுதலான் - சிவபெருமான். காகுத்தன் - திருமால். சிலை - வில். நேராம் - ஒப்பாம். இறுத்தான் - ஒடித்தான்.

182 மாறிலார் - பகையிலார். என்னா - என்று. கார்க் குழுதம்- கருமுகிற் கூட்டம். குழுதம் - திரள், கூட்டம்.

1. பூத்தாமம் என்பது முதற்பதிப்பு.

எ - து. இத்தகைய சிறிய சிலையினைத் துரியோதனன் முன்னிருந்த மன்னர்கள் அனைவருங் காண வெகுளி பொங்கித் தன் கடவுட் சிலையினை முறித்து இரண்டு துண்டம்பட வெட்டி யான் இனிப் போர்க்களத்தில் புகுகேனென என்று ஆணைசெய்து மற்று அவணிருந்த அவைக்களம் விட்டு நீங்கித் தன் கோயில் நோக்கிப் போயினான் விதுரன் என்றவாறு. அப்பொழுது ஆங்கிருந்த அரசர்களில் வீடுமன் துரியோதனனை நோக்கியாது சொன்னான்: (க௮௨)

183. வில்லை யிறுத்து விதுரன்போய்த் தன்னுடைய
வில்லம் புகக்கண் டிருந்தமையால்—வில்லி
வெறுத்தால் விசயனுடன் வெல்வாரை நீதி
மறுத்தா யுரையாய் மதி.

எனக்கேட்டு வீடுமனை நோக்கி யாது சொன்னான் துரியோதனன்: (க௮௩)

184. கொன்னவிலுங் கூர்வேற் குருநாடர் தம்பதிக்கு
மன்னவனே யின்றென் மனங்கேட்கி—லுன்னி
யுருத்தெழுந்து சீற மூடயர்களிற்று யீண்டேன்
செருத்தருவே னென்றான் செயிர்த்து.

எனக் கேட்டுப் பார் வேந்தனை நோக்கி யாது சொன்னான் வீடுமன்: (க௮௪)

185. நன்றறி தேண்ணுதே நாக வரவுயர்த்தோய்
கன்றி யுரைக்கக் கடவையோ—வென்றி
விதுரன்கை வில்லிறுத்தான் வேல்விசயன் றன்னோ
டெதிரம்பு கோப்பா ரெவர்.

எ - து. அருந்தேர் வலவரில் முன்னோன்றலான விதுரன் தன் சிறியவில்லை இறுத்துப் பின்னையும் போர்க்களத்தில் புகுகேன் என்று ஆணைபண்ணிப் போயினான்; இனி அர்ச்சுனனை இன்று போர்க்களத்தில் வெற்றிகொள்ள வல்லார் யார்? என்று வீடுமன் சொல்லக் கேட்டு யாது சொன்னான் துரியோதனன்: (க௮௫)

---

183. வில்லி - விதுரன். "நீதிமறுத்தாய் விசயனுடன் வெல்வாரை மதி." மதி - எண்ணிப்பார்; ஏவல்.

184 உன்னி - நினைத்து. உருத்தெழுந்து - கொதித்தெழுந்து. மனம் - எண்ணம்.

185. கன்றி - கடுத்து, சினந்து. உரைக்கக் கடவையோ - உரைப்பாயோ.

186. விதுர னளவேயோ வில்லாட்கண் மற்றிங்
கதிரதரு மாரதரு மாவார்—விதுரன்றன்
வில்வலியோ தோள்வலியோ வேந்தர் சபைநடுங்கச்
சொல்வலியே தென்றான் சுளித்து.

இவ்வகை வேந்தன் உரைப்பக் கேட்டு யாது சொன்னான் விடுமன் : (௧௮௬)

187. சிலைத்தொழிலான் வெஞ்சமத்துச் செஞ்சரங்க ளொன்றிக்
கொலைத்தண்டு வீமனைக் கொண்டான்—மலைத்த [வரைத்
தாங்கு கணையுடையார் யாரோ தனிவரைபோல்
வீங்கும்போற் றோளாய் விளம்பு.

எ - து. வீமன் அர்ச்சுனர் என்னும் அருந்தேரர் வெகுண்டு வந்தகாலத்து மற்று அவரைப் போர்க்களத்தில் தடுக்க வல்லார் யாரோ? என்று விடுமன் உரைக்கக் கேட்டு யாது சொன்னான் துரியோதனன்: (௧௮௭)

188. தன்னை நயந்தொருவன் றான்செய் கருமங்க
ளென்ன பயந்தனவோ வென்றாதாய்—தன்னை
மதியா தவரோடு வாழ்வ [1]தென பின்னும்
விதியாகி வெய்தும் வினை.

என்றிவ்வகை சொல்லிப் பின்னும் யாது சொன்னான் துரியோதனன்: (௧௮௮)

189. கார்புரியும் வண்மையான் கன்னன் றனித்தேர்முன்
போர்புரியும் வெஞ்சிலைக்குப் போதுமோ—சோகமலை

186. சுளித்து - சினந்து. அதிரதர் - முழுத்தேர் அரசர் தம்மையும் தம்தேரையும் தேர் வலவனையும் தேர்க்குதிரைகளையும், படையையும் காத்துக்கொண்டு பகைவரை அழிவுகாண வல்லவர். மாரதர் - பதினோராயிரம் பேருக்குத் தலைவர்.

187. சமம் - போர். சரம் - அம்பு. தனிவரை - ஒப்பற்றமலை.

188. நயந்து - விரும்பி. தாதாய் - மாட்டனே,

பா. வே: 1. தென் கண்டாய்.

யஞ்சவரால் பாயு மணிவயல்சூழ் நன்னாடா
பஞ்சவரா லாய பகை.

இவ்வகை கன்னன் கையில் வில்லிருக்கக் காண்டீவத்துக்கும் அருச்சுனனுக்கும் வேறு மாறு தேட வேண்டுமோ என்று பேசிய துரியோதனனையும் இருந்த அரசர்களையும் வீடுமனையும் நோக்கி யாது சொன்னான்கன்னன் : (கஅகூ)

190. மண்ணாச ரெண்ண வரிசிலையின் வட்டத்து
நண்ணிப் பொருதகலு நல்லோரை—யெண்ணி
லொருவர்சோ றுண்டடங் கொருவர்க்காய்ப் பேசித்
திரிகுவரோ சொல்லாய் தெளிந்து.

அன்றியும், (ககூ0)

191. யானொருவ னிற்க வெழில்விசயன் றன்னோடு
மானெடும்போர் செய்து மலைவாரைத்—தானிருந்து
தேடுமா றெங்ஙனே தேர்வேந்தீர் மற்றவனை
நாடுமா றெண்ணீர் நயந்து.

எ - து. துரியோதனனையும் வீடுமனையும் நோக்கிக் கன்னனென்று யானிருக்க அருச்சுனனுக்கு மாறு தேடுவதோ என்று தேனிருக்கும் மலர்த்தாரான கன்னன் தன் அங்கையோடு அங்கை தாக்கி உயர்ந்த மாமுடி துளக்கி நகையரும்பக் கண்டு, துரியோதனனுக்குப் பெருவிருப்பாம் உரை சொல்லக் கேட்டு யாது சொன்னான் வீடுமன் : (ககூக)

192. தானோ விசய னெதிர்நிற்பான் றன்னுண்மை
யான்போ லறியே னியல்வேந்தீர்—வான்போர்

---

189. கார்புரியும் வண்மை - கருமுகில் தருவது போன்ற கொடை. கமலை - தாமரை. அஞ்ச - நடுங்க. "பஞ்சவரால் ஆய பகை கன்னன் வெஞ்சிலைக்குப் போதுமோ?"

190. வரிசிலை - கட்டமைந்த வில். "ஒருவர் சோறுண்டு...... திரிகுவரோ" என்றது விதுரனை இகழ்ந்தது.

191. மலைவாரை - போரிடுவாரை. அவனை - அருச்சுனனை. நாடுமாறு - தேடுமாறு.

192. தானோ - நீயோ என முன்னிலையில் வந்தது. யான் போல் அறியேன் - யான் அறியேன் போலும். அவுணர் - அசுரர்; நிவாதகவச காலகேயர் என்பார்.

போருதவுணர் சேனையெல்லாம் போன்றலித்தான்
டெதிர்போகுவா னீயோ வியம்பு. [றன்னே

இவ்வகை கன்னன் சொல்லிய கட்டாண்மையும் திறமும், அது கண்டு துரியோதனன் மகிழ்ந்திருப்ப அறநெறி மறுத்துரைக்கின்றதுங் கண்டு தரியாது அவைக்களம் விட்டு நீங்கித் தன் கோயில் நோக்கிப்போயினான் வீடுமன் என்றவாறு. இவ்வகை வீடுமன் உரைத்தது பொருது போயினானையும் வில்லைமுரித்துப் போயின விதுரனையுங் கண்டு மற்றிங்கினிப் பயனில்லை என்று யாது செய்தான் கண்ணன்: (௧௯௩)

193. அங்கர்கோன் சொல்ல வரவுயர்த்தோ னுண்மகிழ்ந்து
போங்கிருந்தார் வேந்தர் புடைசூழச்—செங்கண்மா
ருதாவா யுள்ள தருமன் றனைபபெற்ற
மாதாவின் பாலணைந்தான் வந்து.

இவ்வகை கண்ணன் எழுந்தருளிக் குந்திதேவியிருந்த கோயில் புகுந்தானாகக் கருதுவது. இப்பால் கண்ணன் குந்திதேவி கோயில் புகுந்து மற்றவளை வேறு கொண்டிருந்து யாதருளிச் செய்தான் கண்ணன்: (௧௯௪)

194. கோற்ற வரவுயர்த்தோன் கோயிற்க ணின்றுபோய்
வெற்றித்தேர் வேந்தன் மகளோடு—முற்றவெல்லா
மல்லாடுந் தோளானம் மாதினுக்கு மற்றதனை
யெல்லா மூரைத்தா னெடுத்து.

ஏ - து. துரியோதனனிடைக்குத் தான் தூதனாய் வந்தபடியும், தருமன் சொற்படி வழுவாமல் பாதிநாடு வேண்டிப் பெறுத வாறும், ஐந்தூர் வேண்டத் தராததும், மயிர்முனைகுத்த மண் கொடேன் என்றவாறும் அவன் வன்மையினாற் சிறிய தந்தையை இழிவுறுத்த முனிந்துபோய் அவன் மூரிவில்லை முரித்தவாறும், கன்னன் பேசிய கட்டாண்மையும மற்றும் உற்றவெல்லாம் உரைத்துப் பின்னும் யாதருளிச் செய்தான் கண்ணன்: (௧௯௫)

---

193. பொங்கு இரும் தார் - தேனொழுகும் பெரிய மாலை. தாதா - கொடையாளன். மாதா - குந்திமாதேவி.

194. வெற்றித்தேர் வேந்தன் - குந்திபோசன். மாது - குந்திதேவி. சிறிய தந்தை - விதுரன். மூரி - வலிமை.

195. எரிகதிரோ னல்கு மிளங்காத னின்றுற்
போருபுனலாற் போக்குண்டான் கண்டாய் — குருபதிக்கு
வெற்றியுமாய்த் தோழனுமாய் வீமற்கும் பார்த்தற்குந்
தெற்றியுமாய் நின்றான் றெரிந்து.

எ - து. நீகன்னியாய் இருந்த காலத்துக் கதிர்க்கடவுளாற் றாப்பட்ட புதல்வனை வடுவென் றஞ்சி நடு இரவிற் பேராற்றிடைமிதவைப் பேழையினிட்டு ஒழுக்கின இளங்குமாரனும் போய்க் கங்கைநீர் புகுபளவில் திருதராட்டிரன் தேர்ப்பாகன் பிரீதிகாமயன் எடுத்து வளர்த்துப் பெயர் சூட்டுகையில் கதிர்க்கடவுள் தந்த புதல்வன் ஆகையால் உருவிலியாகத் தோன்றிக் கூறியபடி கன்னன் என்று பெயரிட்டு வளர்கின்ற நாளகத்துப் பரசுராமனால் படைக்கலம் பயிற்றிச் சிறிய வில்வலி பெற்றவாறும், அது கண்டு துரியோதனன் தனக்குத் தோழனுக்கிக் கொண்டு திருமுழுக்காட்டி அங்கவளநாடு கொடுத்து அங்கர்கோன் என்று ஆனவாறும் துரியோதனனுக்கு உற்றதுணையாய்ப் பெருந்தேர் ஆட்களில் முன்றோன்றலாய்ப் பாண்டவர்க்குப் பழிபாவம் விளைக்கின்றான் கண்டாய் என்றும் சொல்லி, அவனை நீ அயலான் என்று கருதாது நின்புதல்வன் என்னுமது மிகத் தெளிந்து மற்று அவன்பாற் போயப பேசித் தம்பிமாருடன் கூடி உலகை ஆள்வதற்கு வம்பவிழ் தார் மன்னுவா என்று அழைத்துக் கொண்டு போது; வந்திலனுகில் இங்ஙனஞ் சொல்லுவாயாக என்று பின்னும் யாதருளிச் செய்தான் கண்ணன் : (௧௯௫)

196. ஆர்த்தபுக ழங்கர்கோன் றன்வளர்த்த மாநாகம்
பார்த்தன்மேற் பட்டாற் பரிசழிக்கும் — போய்த்தனையே
வெச்சிற் கணையேன் றிரண்டாவ தெய்யாம
லிச்சித்து வேண்டென்று னிங்கு.

எ - து. அவனை அழைக்க வந்திலனுகில் நினக்கொரு வரந் தருவாயாக என்று வேண்டிக் கொள்வாய். வரமாவது அருச்சுனன் காண்டவ வனத்தை எரிமூட்டிய ஞான்று தன் உடல் அறுப்புண்டு வல்லவாறு பிழைத்துப் போந்து கன்னன்றன் பக்கற்

---

195. தெற்றி - தடை. வம்பு - புதுமை. போது - வருவாயாக.

196. ஆர்த்த புகழ் - எங்கும் ஒலிக்கும் புகழ். புகழ் ஆர்த்த என்றுக்கின் புகழைத் தன்னிடத்தே பிணைத்துக் கொண்ட என்னும் பொருளாம். பரிசு - தன்மை, வலிமை. முதற்கண் எய்து அதனை மீண்டும் ஏவுதலாயின் அஃது எச்சிற் கணை என்றாம். இச்சித்து - விரும்பி.

சென்றடைந்து மற்றவனை அடைக்கலங் கொண்டு அருச்சுனனுக்குப் பகையாக வாழ்கின்றது அசுவசேனன் என்னும் பெரும்பாம்பினை இமையவராலும் வெல்லலரிது; மற்றதனை அருச்சுனன்மேல் இரண்டாவது எச்சிற் கணையாகத் தொடாதாக வேண்டிக்கொண்டு வருவாயாக என்று கண்ணன் அருளிச் செய்யக் கேட்டு வேல் நெடுங்கண் அருவிசோர விம்மிவிம்மி வெய்துயிர்த்து யாது சொல்லி யாது செய்தாள் குந்திதேவி : (கதக)

197. மாயனீ சேய்திட்ட வஞ்சனையின் மாயத்தை
யேதோ வறியே னெனக்குழைந்தாள்—சேயாறு
தேக்குந்திச் சந்திடறிச் சேயணைக்குந் தண்பணைசூழ்
மாக்குந்திக் கோமான் மகள்.

அன்றியும், (கதஎ)

198. என்னை யறிந்தாயே யென்மக னுமாறு
முன்ன முணராதே மூடினாய்—மன்னுங்
கடலைவல மாக்கடைந்த காரணனே யென்மூ
னுடலவலஞ் சோல்லா தொழி.

என்றிவ்வகை சொல்லிப் பின்னும் யாது சொல்லி ஆற்றினாள் குந்திதேவி : (கதஅ)

199. வைய மறியாமே மந்திரத்தின் வாய்ப்புக்கன்
டையா வுனைப்பெற்ற வப்போழுதே—பையவே
பேழையி னுட்சேறித்துப் போற்றிற் போக்கினேன்
வாழுங் குடிபழுதா மென்று.

அன்றியும், (கதக)

---

197. சேயாறு - மேலிருந்து வரும் ஆறு. தேக்கு உந்தி சந்து இடறி சேய் அணைக்கும் என்று பிரித்துப் பொருளறிக. சந்து - சந்தன மரம். சேய் - மக்கள். பணை - பண்ணை; வயல். மாக்குந்திக் கோமான் - குந்திபோசன்.

198. மூடினாய் - மறைத்தாய். உடல் அவலம் - வருத்தும் துன்பச்செய்தி.

199. குடிபழுதாம் - குடிக்குக் குற்றமாம்; குடிகேடாம்.

200\. போங்குழலைப் பாவூட்டிப் பூந்தடங்கண் மையெழுதி
மங்கையர்பா ராட்ட வளராதே—யெங்குநின்
பாலுறு மின்சொல் பவளவன்ன வாய்முத்தை
யாலுறப் பெற்றிலே னுங்கு.

என்றிவ்வகை சொல்லி அரற்றிப் பின்னும் கண்ணனை நோக்கிச் சொல்லுவாள்; இந்நெடு நாளும் என்னையும் அவனையும் தாய் மகன் என்று அறிந்த நீ முன்னம் உரையாது இன்று உரைத்தாய் எம்பெருமான், இனி அவன்பால் யான் போய் அவனை வேண்டிக்கொண்டு அசுவசேனனை விலக்கினல் அவன் படுமாதலால் எனக்கு அவனும் மகனன்றோ எனச் சொல்லி நின்றானை நோக்கி யாதருளிச் செய்தான் கண்ணன் : (உ00)

201\. ஐவர்க்கு மோருயிரே யைந்துமப்பா மாதலா
லைவருஞ் சாகை யழகிதோ—வைவே
லொருவனுமே சாகை யழகன்றோ வென்றான்
றிருமகள்சேர் மார்பன் சிறந்து.

எ - து. அருச்சுனனைக் கொல்லின் ஐவரும் அழிவராதலால் இவர்கட்குப் பகையாகிச் சமைகின்ற கன்னன் ஒருவனுமே சாகை நன்று என்றருளிச் செய்யக்கேட்டும் நின்றவளை முகநோக்கி யீண்டன் கன்னன் பாற் போவாயாக என்று தெருட்டி மற்று அவள்பால் விட்டு நீங்கி யாது செய்தான் கண்ணன் : (உ0க)

202\. கொண்ட லிறக்கோமான் குந்திக் குரைத்தருளி
விண்டவரை வெல்விதுரன் வீடணைந்தா—னெண்டிறல்
மையாரு நெஞ்சத்து வாளரவ முன்னுயர்த்தோன் [சேர்
போய்யா சனமிடமே போந்து.

இவ்வகை குந்திதேவி கோயில்விட்டு விதுரன் கோயில் புகுந்தான் கண்ணன் என்றவாறு இப்பால் : (உ0உ)

200\. பால்நாறும் இன்சொல் - பால்வழியும் இனியமழலை மொழி. வன்னம் – வண்ணம். முத்து - முத்தம். ஆர - நுகர.

201\. சாகை – சாவது. வைவேல் - கூரியவேல். தெருட்டி – தெளியச் செய்து.

202\. கொண்டல் – மழைமுகில். விண்டவரை - பகைத்தவரை. விண்டு – பிளந்து. மை – குற்றம்.

203. வையமிருள்பரந்து மாகதிரோன் போய்வீழ்ந்து
வெய்ய வொளிபோய் விளங்கொளியாய்த்—துய்யவரை
மின்னார்ந்த பைம்பூண் விறல்வேந்தர் தாஞ்சூழ
வின்னாங் கிருந்தா னிசைந்து.

க - து. நள்ளிரவின்கண் திறையோலக்க மிருந்து அனைத் தரசர்க்கும் விடை கொடுத்துத் துரியோதனனும் துச்சாதனனும் கன்னனும் சகுனியும் தம்மிற் கூடியிருந்து யாது எண்ணினாரோ வெனில் : (௨௦௩)

204. மதித்த வரக்கரையு மல்லரையு முள்ளாற்
பதித்த படுகுழியிற் பாய்ச்சிக்—கோதித்தார்
சூலங்கோடல் வல்லானைக் குங்குமத்தோள் பற்றி
விலங்கிடவே யெண்ணினான் வேந்து.

எ - து. கண்ணனை நிலவறையிலே வீழ்த்து வஞ்சனையால் வலைப்படுத்தி வலுவறச் செய்து சிறையில் வைத்தாற் பாண்டவர்க்கு வேறொரு களைகண் இல்லை என்றும், நாடு நமதாவதற்கு ஐயமில்லையென்றும், பாண்டவரைக் கொன்றபின்பு கண்ணனை விடுத்துப் போக்குமது கடமை என்றும், இதுவே செய்யத் தக்கது என்றும் துணிந்து நள்ளிரவில் யாவரும அறியாமல் அவைக் களத்தில் ஒரு நிலவறை பறித்துக் கண்ணனை வீழ விடுத்து விழுந்த பொழுதே எழுந்திராமல் வேண்டும் அரக்கரையும் அதனுள் நிறுத்தி, மண்டபம் முழுதும் அழகுறச் செய்து கண்ணனை அழைத்து வருவதாகச் சஞ்சயனைப் போக்கி விடுப்ப மறுநாள் அவனும் விடை கொண்டு செல்ல, வைகறைக் காலத்து யாது செய்தான் கண்ணன் : (௨௦௪)

205. போங்கோலிநீர் வண்ணனுமே போதவான் போற்படைமு
னேங்கு மெழுச்சிய பணைமுழங்க—செங்கதிரோன்

---

203. விளங்கொளி- விளக்கினால் விளங்கிய ஒளி. துய்ய வரை மின் ஆர்ந்த பைம்பூண் - உயர்ந்த மலையில் மின்னல் நிரம்ப எழுந்தாற் போன்ற ஒளியுடைய அணிகலம். இன்னாங்கு - துன்பம்.

204. உள்ளால் - உள்ளே. பாய்ச்சி - செலுத்தி. கோடல் - கொள்ளல். இவண் அழித்தல். "வேந்து வல்லானைப்பற்றி விலங்கிடவே எண்ணினான்."

205. பணை - இசைக்கருவிகள். நீர்வண்ணன் - கண்ணன்.

பொன்னெடுந்தே ரேருமுன் போந்தருளச் செங்கண்மா
றன்னெடுந்தே ரேறினான் றான்.

எ - து. கண்ணன் பாண்டவரிடத்துக்குப் போவானாகக் கதிரோன் எழுமுன்னமே தன் அணிநெடுந்தேர் ஏறியெழுந்தருளும் அளவில், சஞ்சயன் வந்து திருவடி தொழுது யாது விண்ணப்பஞ் செய்தான் : (உ0ரு)

206. வென்றி மதயானை வேல்வேந்தன் றூதனு
னென்று தொழுதா னெதிரேசென்—றன்றுலகை
[1]மூவடியாக் கொண்டளந்து மூவுலகு மூண்டுமிழ்ந்த
சேவடியான் பொற்பாதஞ் சேர்ந்து.

இவ்வகையே சென்று பணிந்து பின்னும் யாது விண்ணப்பஞ் செய்தான் சஞ்சயன் : (உ0சு)

207. மன்ன னுரைத்தபடி மாயனே நீமுனியாய்
முன்ன முரைத்த மொழிவழியே—சொன்னதொரு
காரியமே செய்யக் கருதி யெனைவிடுத்தான்
காரியமே தென்றறியேன்காண்.

அன்றியும், (உ0எ)

208. எம்பெருமான் பேசுமதோர் காரியமுண் டென்றரசர்
தம்பெருமா னென்னைத் தனிவிடுத்தா—னென்றுசொல
மன்னாகத் தண்டார் மணிவண்ணன் றன்றேரைப்
பின்னாக விட்டான் பெயர்ந்து.

இவ்வகை கண்ணனும் மனமகிழ்ந்து மற்றவன் கருத்தறிந்து போவானாகக் கவலை மிக்கோனாய்த் துரியோதனனிடைக் கெழுந்தருளக் கண்டு பார்வேந்தன் துரியோதனன் யாங்ஙனம் இருந்தானோ வெனில் : (உ0அ)

---

206. சேவடியான் - சிவந்த அடியுடைய கண்ணன்.

207. மன்னன் - துரியோதனன். முனியாய் - வெறுப்புக்கொள்ளாய். மொழிவழியே - நின்சொற்படியே.

208. ஆகம் - மார்பு. மணிவண்ணன் - நீலநிறக்கண்ணன்.

பா. வே : 1. மூவடியாற் கொண்டளந்து.

209. பாம்புயர்த்த வெல்கொடியான் பக்கம் பலநூற
காம்புயர்த்த வெண்கவரி காலசைப்பப்—பூம்புயத்துத்
தேட்டரசர் கூட்டந் திறைகொணர வீற்றிருந்தான்
கட்டரசர் கூட்டங் கலந்து.

எ - து. குருகுல வேந்தருங் கோவீரருள்ளாரும் புடைசூழ்ந்து வழிபடத் திசை தோறும் கற்றை மணிக்கவரி காலசைப்ப வெற்றியுடன் சகுனியும் துச்சாதனன் உள்ளிட்ட தொண்ணூற்றொன்பது தம்பிமாரும் கன்னனும் சிந்து நாடனும் மனமகிழ்ந்து வஞ்சத் தொழில் கருதியிருப்ப அரியணையில் வீற்றிருந்தான் மன்னர் மன்னன் துரியோதனன் என்றவாறு. அவ்வகையிருந்த துரியோதனன் கண்ணன் எழுந்தருளக் கண்டு யாது செய்தான்: (௨0௯)

210. தூண்டுபரித் தேரான் றவரா பதிக்கிறைவன்
மீண்டு மொருகால் விரும்பிவர—மூண்டவினை
மையா சனத்தேரில் வாளரவ முன்னுயர்த்தோன்
பொய்யா சனமிட்டான் போந்து.

எ - து. நிறையவையின்கண் கண்ணன் எழுந்தருளக் கண்டு வஞ்சிப்பான் வேண்டி முதிர்வினைச் சூழ்ச்சியில் இட்ட முதல் அரியணையெடுத்து நிலவறைமிசை மேலிட்டு நல்லுரை சொல்லி இனிது செய்யக்கண்டு கண்ணனும் அறிந்தெழுந் தருளியிருக்கு மளவில் வந்த செயல் முற்று மளவும் பூவில் வண்டுறைந்தாற் போலத் தன் பேராற்றலை மேலொடுக்கி மற்றவனிட்ட பொய் யிருக்கையிடை யெழுந்தருளி இருக்கு மளவில் இருந்த அரியணை கீழேதாழ்ந்து நெறுநெறென நிலனெளியப் புகுதல் கண்டு திருப் புன்முறுவல் செய்து யாது செய்தான் கண்ணன்: (௨௧0)

211. வஞ்சனை வேன்று மணியா சனந்தன்னை
யஞ்சன வண்ண னழிந்தருளிச்—செஞ்சுடரைப்

---

209. காம்பு - மூங்கில். கால் - காற்று. தேட்டு என்பது தெட்டெனக் குறுகி நின்றது. தேட்டு – செல்வம். கட்டரசர் - தன் செயலுக்குக் கட்டுப்பட்ட அரசர். கட்டு, கரவுமாம்.

210. மூண்ட வினை மை ஆசனத்தேரில் – மூண்டெழுந்த வல்வினை என்னும் குற்றமான இருக்கையையுடைய தேரில். வாள்— கொடிய. பொய்ஆசனம் – பொய்யான இருக்கை. நெறுநெறெனும் இரட்டைக்கிளவி, உரைநடையில் 'நிறநிறென' என்று ஆளப்பெற் றுள்ளது.

211. அண்டமுற – வானுற. பொறி பிதிர – பொறி சிதற.

பூண்டான் பொறிபிதிரப் பொன்முடிபோ யண்டமுற
நீண்டான் விழித்தா னெருப்பு. (உகக)

212. வஞ்சனை யறிந்து நெஞ்சழி வுற்ற
வூழியிற் காயெரி யுடன்றது கருங்கட
லோதமும் விசும்பு முடனுற நிமிர்ந்தது
வானுந் திசையு மாயிருள் பரந்தது
நீல மேனி நிமிர்ந்தெழுந் ததுவே
மறைத்தவ னிருத்திய மல்லரு மரக்கரு
மார்த்தபோற் பாத மெய்தவு மதனொடு
வியன்பா தலத்து வீழ்ந்தனர் பலரே
யருகணைந் துலகத்
தொல்பகை யழியப் பல்வகைப் பொருதிறற்
பரவைநீர் கெடுத்துப் பணிந்தனர் பலரே
பொடித்தன மயிரே பொங்கின புகையே
கடித்தன வெயிறே மடித்தன வாயே
நிமிர்ந்தன புருவ மலர்ந்தன நாட்ட
கேற்றித் தனிக்க ணெருப்பொடு பிறங்கிற்று
மற்றைச் செங்கண் மயங்கெரி யுமிழ்ந்தன
பாயிரு ணீக்கும் பல்கதிர்த் திரளென
வாயிரந் தடக்கை
திசைமுகம் பொதியச் செறிந்தன வவைதாங்
திண்சிலை குனிப்பன செஞ்சரந் தெரிவன
வெங்கணைத் தூணி வீக்குவன வெஞ்சுடர்
வாளுறை கழிப்பன கேடக மலைப்பன
சூல மேந்துவ தோமரஞ் சுழற்றுவ
கணிச்சி கொள்வன கப்பண மேடுப்பன
வணிச்சுடர் நெடுவா ளொடுவே லடுப்பன
மழுவொடு தண்டு வகைபெற நிமிர்ப்பன
சத்தி யோச்சுவ சங்கந் தொனிப்பன
பிண்டி பாலம் பெயர்ப்பன
வொண்டொ ழிற்கணை யோட்டி யதிர்ப்பன
வடிநுதிக் குந்தம் வலமிடம் வாங்குவ

---

212. பரவை - கடல். நாட்டம் - கண். பாயிருள் - பரவிய இருள். குனித்தல் - வளைத்தல். ஓச்சுதல் - எறிதல். வடிநுதி - கூர் நுனி.

முரண்வலி முன்கை
வளைய மோச்சுவ வச்சிர மேடுப்பன
திரளிருப் புலக்கை திண்ணென வோச்சுவ
சுடரோளி யாழி சுழற்றுவ வடன்முழங்கு
வலம்புரி யார்ப்பன வன்பிடி முழக்குவ
போலங்கழல் விரிப்பன போன்முடி திருத்துவ
வசையெழப் புகைப்பன புகையெழப் பிசைவன
பூங்கச்சு வரிப்பன பூங்கழ லேடுப்பன
தூங்கெழின் மணிவிரற் சுட்டிக் காட்டுவ
பூங்கழ லடிகோடு புரள மிதிப்பன
பிடிக்கலுற் றடர்ப்பன புடைக்கலுற் றேச்சுவ
தோளோடு தோள் கொட்டுவ தாளோடு[1] தா ளடிப்பன
வளைய வாங்கிய வாயிரந் தடக்கையும்
விண்கெழு படையோடு விசும்படைந் தனவே.
காள மாமுகி லிலங்கி மற்றவன்
றோளு மாகமுஞ் சூழ்ந்துநின் றனவே
நீலச் சோதி நிலையுற நிமிர்தலிற்
பகலொளி யிழந்தது பரிதிமண் டிலமே
முதலொரு விசும்பி னந்தரர் மயங்கிப்
புகலிட மிலையெனப் புலம்பிநின் றனரே
தோண்மிசை வீழ்ந்த சூறை மாருத
மீமிசை விசும்பின் மிசையெடுத் ததுவே.
முடுகலிற் றூரகை சுழன்றுதா மெரிந்தன
வானக் கங்கைநீர் சுழிதெரிந் ததுவே.
தேவர் கோமான் மாமுகிற் போன்னகர்க்
கற்பகச் சோலை போற்பழிந் [2]தனவே
பாதாள மஞ்சித் துண்ணென் றுதுளங்க
நாகந் துளக்குற
விசும்பிற் றேவருந் திகைப்ப
மேனிலை யழிந்து[3] பண்பெயர்ந் ததுவே
உம்ப ரிருக்கு முலக மயங்கப்

ஆகம் – மார்பு. சுழி – சுழல். துளங்க – நடுங்க. நாகம் – நாகருலகம். உம்பர் – தேவர்.

பா. வே: 1. தாளடிப்பன. 2. கனலியன். 3. மண்பெயர்ந்.

பம்பரம் போல வவனி நடுங்க
வூழியி னிறுதி யுடன்றது போலு
மதனப் புத்தேள் பொடிபட விழித்த
[1]நுதல்பெறு நயனத் தொருபெருங் கடவுளு
நான்முகத் தொருவனும் வானகத் தரசனு
மறுமுகத் தொருவனு முழுசுடர்ப் பரிதியுங்
குளிர்மதிச் செல்வனு மிருநிதிக் குபேரனும்
வானுறை தேவருங் காயெரிக் கடவுளு
மியமனும் வருணனு மெண்வகை வசுக்களும்
வீரப் பெண்மையின் மெல்லிய லெழுவரும்
போர்விறற் சிலைக்கைப் பொருகயற் கண்ணியு
மோடியு மக்களு மூவகை முனிவரும்
வானோ ரீட்டமு மன்னிய கின்னர
ரேனோர் விஞ்சையர் தம்முட னஞ்சலி
யவுணரு மரக்கரு மதிர்ந்த வுயர்நிலை
யண்ட கோளகை நிறையவந் தீண்டி
மாதவா முனியேன் மாயா முனியேன்
மூவகை யுலகின் முதல்வா முனியே
லிமையவர் மகிழ வீரடி தம்மான்
மூன்றுல குஞ் சுருக்கிய முதல்வா முனியேன்
மூவா மருந்து வானோர்க் கருளிய
தேவா முனியே றிருமான் முனியே
லென்றெத் திசையும் வணங்குமெல் லைக்கட்
பொருந்தா மன்னனோ டிருந்த வேந்தரிற்
கங்கை மகனு மம்பிகை சிறுவனு
மங்க நாடனு மடுபோர் விதுரனுந்
துரோணனு மகனுந் தோன்றன் மாமனுஞ்
சிந்து நாடனுந் திரிகத்த ராசனுங்
குருகுலக் கேண்மை கொண்டோர் கூட்டமு
முயர்நிலத் தரசர் வந்தோ ரீட்டமும்

மதனப்புத்தேள் - மன்மதன். நயனம் - கண். முனியேல் - சீற்றங்கொள்ளாதே. அம்பிகைசிறுவன் - திருதராட்டிரன். மகன் - அசுவத்தாமன். மாமன் - சகுனி.

பா. வே: 1. *நுதற்பெரு நயனத்.*

வாட்ட முற்ற மனத்தின ராக
நாட்ட மில்லா நலமிகு வேந்த
னையனை யழகனை யாயிரம் பெயரனைக்
கைகுவித் திறைஞ்சிக் காதன்மிக் குரைப்பான்
சேண்பரந் துயர்ந்தநின் றிருவுரு வடிவைக்
காண்புறு வண்ணங் கண்ணிணை யருளென
வாதி நாயகன் பேரரு ளாளக்
கதுமென விழித்தது காவலன் கண்ணே
மாதிர நெருக்கி வான்முக டுரிஞ்சிப்
பூதல நெருக்கிப் பொலிந்த மேனியைப்
பார்க்கும் பணியும் பரவச மாகி
வேர்க்குங் கண்ணீர் வீழ்த்துந் தானே
பாடு மன்னரைப் பரிவுடன் றழுவும்
வேந்தருந் தானும் வேதியர் குழாமுந்
தனித்தனி யெழுந்து தடக்கை கூப்பித்
தொழுத கையினர் துளங்கிய நெஞ்சினர்
முழுமெயுஞ் சிலிர்த்து முழுதாண் மயிரினர்
தலைமிசை யேறிய கையின ராகி
வளங்கெழு மாசனந் துளங்க வெழுந்துநின்
றெந்தாய் போற்றி யிறைவா போற்றி
மன்னு போற்றி மணாளா போற்றி
யஞ்சன வண்ணத் தரியே போற்றி
குஞ்சரங் காத்த கோவே போற்றி
கஞ்சனை யடர்த்த கண்ணா போற்றி
கருங்கடற் றுயின்ற காரே போற்றி
யாயிரந் தோளுடை யடுபோர் வாணனை
நேமியிற் றுணித்த நெடியாய் போற்றி
பேய்முலை யுண்ட பிரானே போற்றி
பேருல களந்த மாலே போற்றி
மருதிடைத் தவழ்ந்த மாயா போற்றி
மாக்கடல் கடைந்த மகேசா போற்றி
பெருவரை யெடுத்த பிரானே போற்றி
சங்கொடு சக்கரந் தரித்தாய் போற்றி
தண்டொடு [1]சார்ங்கமுந் தனிநாந் தகமும்

வாணன் - வாணாசுரன். நேமி - சக்கரம். பேய் - பூதகி,

பா. வே.: 1. மழுவமெடுத்தாய் போற்றி.

பிண்டி பாலமும் பெருவச் சிரமு
மெண்டிசை நிறைந்த வெம்மான் போற்றி
யண்டமும் விசும்பு மகலிட மெல்லா
முண்டுமிழ்ந் தவனே யொருவா போற்றி
கஙo. திருமறு [1]மார்பத் திருமால் போற்றி
தீவினை கெடுக்குஞ் செல்வா போற்றி
யருமறை தேடு மடியாய் போற்றி
யடியவர் வினைகெட வருள்வாய் போற்றி
சென்றொரு தூணிடை நின்றாய் போற்றி
கஙரு. சிறுவனை யுகந்த செல்வா போற்றி
யயனொடு தேவர்க் கரியாய் போற்றி
மலர்மகள் புணர்ந்த மணாளா போற்றி
நிலமக ளிடந்த நெடியாய் போற்றி
திருவரு டருவாய் திருவடி போற்றி
கசo. தேவ னுவதுந் திருமா லாவது
மூவுல களந்த முதல்வ னுவதுஞ்
சிறுகுறி யாள னறியாது செய்தன
பொறுகுறி [2]யன்றே பொறுத்தரு ளென்றென்
றேத்திசை யமரரு மினத்துட னேத்திப்
கசரு. [3]போற்றியே புகழச் சீற்றமு மாறி
யண்டமும் விசும்பு மகிலமு மனைத்தும்
போக்கற நிமிர்ந்த வாக்கையைச் சுருக்கினன்
மூரணியல் பெருவலி யிரணியன் றனது
கேழ்கிள ராகங் கிழியக்
கருo. கூருகிர் வாய்ந்த கொடுந்தொழி லோனே. (உகஉ)

213. கண்மூன்று தீப்பிறக்கக் கைகளோ ராயிரமாய்
விண்ணூர வெய்யோ னொளிமறைக்க—மண்வேண்டித்
தூதுவனாய்ப் போந்து துரியோ தனனிடைக்கே
மாதவனார் தாஞ்செய்த வாறு. (உகங)

அன்றியும்,

கேழ்கிளர் ஆகம் – உவமை கடந்த மார்பு.

பா. வே: 1. மார்ப. 2. யென்று.
3. போற்றிப் புகழச் சீற்ற மாறி.

214. நெருப்பெழுந்து நீறாக நின்றமரந் தீந்து
பொருப்பிடிந்து பார்பிளந்து பொங்கித்—திருப்பிசியாக்
கார்வண்ணன் சீறக் கனைகடலுங் கார்விசும்பு
நீர்வண்ண மற்றனவே நின்று.

இவ்வகை துரியோதனனிடத்துக் கண்ணன் வஞ்சவிருக்கை கண்டு மறுத்தெழுந்து நின்ற பேருருவங் கண்டு விண்ணவருந் தொழுத கையினர் துளங்கிய நெஞ்சினராய் வியந்து இப்பிறக்கக் கண்டருளித் தருமன் ஆணை வழுவாமலும் மற்றவ ரேத்திய மகிழ்ச்சியும் சிறிதருள் தோன்றித் திருவுடலிற் சிற்றத்தோ டெய்திய கூற்றமுஞ் சீற்றமு மாறி உலகங்காவலனாய் மாந்தர் உருவத்தனாய் வீற்றிருந்தான் தேவதேவன் கண்ணன் என்றவாறு. அப்பொழுது கண்ணனை நோக்கி யாது சொன்னான் திருதராட்டிரன்: (உகச)

215. உற்றேன் றறியே னுனதோளி கண்டகண்
மற்றேன் றுங் காணமல் வாங்கென்னக்—கொற்றவனும்
பாவொன்று நீண்ட பரஞ்சுடரோன் பார்த்தருளி
வாவென்று கொண்டான் மகிழ்ந்து.

இவ்வகை விண்ணப்பஞ் செய்த திருதராட்டிரனுக்குக் கண்போக அருளிச் செய்து நின்றான் கண்ணன். அப்பொழுது துரியோதனன் நிலைமை யாதாயிற்றோ வெனில்: (உகரு)

216. பேர்ந்தில னாசனத்துப் பேசிய பேராண்மை
சோர்ந்திலன் கையாற் றொழுதிலன்—வாய்ந்த
மதுவொன்று மாலை மணிநீண் [1]முடியா
னிதுவன்றோ வீரமா மாறு.

எ - து. கண்ணன் பேருருவங் கண்டு சிறிதும் மனந்துளங் காது விளங்கிருக்கைத் துரியோதனன் யாது சொன்னானோ வெனில்: (உகசு)

---

214. நீறாக – சாம்பராக. தீந்து - எரிந்து. பொருப்பு – மலை. கார்வண்ணக் கடலும், நீலவானுமே சிவந்தன எனின் பிறவற்றைக் கூற வேண்டா என்பதாம்.

215. உற்று ஒன்று அறியேன் – கண்ணில் தோன்றும் ஒன்றை அறியேன். வாங்கு – மீண்டும் கண்ணொளியை வாங்கிக்கொள். பாவொன்று நீண்ட-பரவி ஒப்பற்று நீண்ட. பரஞ்சுடர் - தன்னொளி.

216. பேர்ந்திலன் - அசைந்திலன். மது - தேன். ஒன்று - ஒன்றிய, அமைந்த.

பா. வே: 1. முடியாற் கிதுவன்றோ.

217. அண்ட முறங்கிர்ந்த வாயன் றிருமேனி
கண்டு வயவேந்தன் கைமறியா—வேண்டயிர்க
டோய்ந்திருந்த வாறே துவக்குண்டாற் கிம்மாய
மேய்ந்திருந்த தென்று னேடுத்து.

இவ்வகை புறக்கணித்து வேறு பேசியிருந்தான் துரியோதனன் : (உகஎ)

218. தோளாண்மைப் பாண்டவர்கள் சூளுற்ற சூளுறவு
வாளா தொழிகை வழக்கன்றே—கோளி
லெழுக்களைப்போ லேந்தியதோ ளெல்லீரை யும்யான்
புழுக்களைப்போற் றேய்த்த பொழுது.

எ - து. பாண்டவருடன் முன்னம் பேசிய ஞான்று துரியோதனனுடன் நாடு வேண்டினால் அவனால் வரும் ஒழுங்கன்மை முற்றும் எமக்காகப் பொறுத் தருள்வாயாக என்று வரங் கொண்டபடியாலும் இவ்விடத்து நிகழ்ந்தன வெல்லாம் பொறுத்தது என்றிவ்வகை யருளிச் செய்து தீவழிச் செல்லும் துரியோதனன் இருந்த அவைக்களம் விட்டு நீங்கிப் போதுமிடத்துப் பின்வந்த பிறநாட்டு வேந்தர்க்கும் விடைகொடுத்துக் கன்னனையும் அசுவத்தாமனையுங் கைப்பிடித்துச் சிறிதிடம் போந்து கன்னனைத் தனிக் கொண்டிருந்தருளி யாதருளிச் செய்தான் கண்ணன் : (உகஅ)

219. முன்னமற் றந்த முழுதுடையான் றன்பாகம்
பின்னுமவை யான்வேண்டப் பெற்றிலன்கா—ணன்னதி
தாரா தொழிந்ததற்குச் சான்றுநீ யென்றுரைத்தான் [றங்
காராரும் வண்ணன் கறுத்து.

என்றிவ்வகை சொல்லிப் பின்னுந் துரியோதனன் சொன்னது பாராமற் பலவுஞ் சொல்லிப் பின்பு உனக்கோர் உரை சொல்லக் கேட்பாயாக என்று யாதருளிச் செய்தான் கண்ணன் : (உகக)

---

217. வயம் - வீரம், வெற்றி. துவக்குண்ட - கட்டுண்ட. ஏய்ந்து - பொருந்தி. தயிருண்டு கட்டுண்டான்; ஈண்டு விண்முட்ட வளர்ந்த மாயமென் என வியந்தான்.

218. கோளில் – தன்மை இல்லாத. எழு - தூண். எல்லீர் – நுங்கள் அனைவரையும். வாளாது – பயனற்று.

219. அன்னதிறம் – அச்செயல்; அவ்வாறு. கார்ஆரும் – கருமை நிறைந்த. கறுத்து - சினந்து.

220. பௌவத் தொளிவிரிவான் றன்மகற்குப் பாண்டவர்க
ளவர்க்கு முன்றோன்ற [1]லாமாய—பௌவத்தைச்
சேறாக நீர்கலக்கித் தெள்ளமுதங் கொண்டபிரான்
வேறாகச் சொன்னான் விரைந்து.

ஏ - து. கன்னியாய் வளர்கின்ற காலத்து ஒரு காரணத்தினால் துருவாசமுனி ஆங்கு வந்தவாறும், அவனை அவள் வணங்கியவாறும், அவன் மகிழ்ந்து மெய்யுணர்வால் குந்திதேவியை நோக்கிச் சொல்லுவான்: "பேரரசன் பாண்டுவுக்குத் தேவியாக ஊழுண்டு. யானுனக்கு ஐந்து மறைமொழி ஓதிவிடுகிறேன்; நீ நினைந்த பொழுது ஐந்து தெய்வங்கள் காட்சி வழங்கும்" என்றறைந்து மறை மொழி ஓதி, "இந்த மறைமொழியிலே ஒன்றைக் கதிரோனை நோக்கிக்கூற அவனும் காட்சிவழங்கி உனக்கு நற்பேறருளும்" என்று மாமுனி போனவாறும் கூறிப் பின்னும் அருளிச் செய்வான்: மாமுனி சொன்னவுரை பிழையாது மறை மொழியின் ஆற்றல் காண்பாளாகிக் குந்திதேவியும் கதிர்க்கடவுளை நோக்கி வேண்டிக் கொள்ள யாது செய்தானோ வெனில்: (௨௨௦)

221. மாமறையோன் றானுரைத்த மந்திரத்தின் வாய்ப்பறிய
மாமறையோன் வாய்மை வழுவாதே—மாமறையோன்
சொல்வழியே [2]சிந்தித்தா ளப்பொழுதே சூரியனார்
நல்வழியாய்த் தோன்றினார் நன்கு.

அன்றியும், (௨௨௧)

222. குந்தி வளநாடர் கோமான் குலப்பாவை
முந்தியுனைப் பெற்ற முகம்வாடி—வந்தங்கோர்
பேழையி னுட்சேறித்துப் பேராற்றிற் போக்கினா
ளேழை வடுவுக் கிளைத்து.

---

220. பௌவம் - கடல். கடலில் ஒளிவிரித்து வெளிவருவான் கதிரோன். அவன் மைந்தன் கன்னன். முன்றோன்றல் - முன்னே தோன்றியவன்; மூத்தோன். வேறாக - தனித்து.

221. வாய்ப்பு - பயன். மாமறையோன் - துருவாசன்.

222. ஏழை - பெண். வடு - பழி. இளைத்து - தளர்ந்து. ஈண்டன் - விரைந்து.

பா. வே. 1. லாமாறும். 2. சிந்தித்தாள் சூரியனா ரப்பொழுதே.

இவ்வகை கதிரோன் காட்சி வழங்கித் தன்னை யொப்பதோர் ஒளியுடைய மகனைக் கொடுப்பக் கண்டு, மற்று அவளும் சீரிய அருள் பெற்றுக் கன்னப் பகுதியிற் பிறக்கப், புதல்வனைப் போலக் கொண்ட எல்லைக் கண் கன்னியளவாய் இருக்க இஃது ஆகாது என்று கூறிக் குந்திபோசன் உள்ளிட்டார் வந்து, நம்மைக் குருமரபார் பழிக்க மரபுப் பழியெனத் தெரிந்து, மற்று இம்மகனை ஒரு மிதவைப் பேழையிற் பெயர்த்தி வெள்ளமாய்ப் பெருகா நின்ற ஆற்றிடை மறைவாய்ப் போக்கினள். அதுவும் போய்க் கதிர்க் கடவுளால் அருள்பெற்று அலைக்கழியாமல் அலைகளால் மோதுண்டு கங்கையொடு புகுமதனைக் கண்டு திருதராட்டிரன் தேரோட்டி கதுமென அதனைப் பிடித்துக் குழவியெனத் தெளிந்து தனக்குப் புதல்வனாக வளர்த்தவாறும், பின் பெயர் சூட்டும் நாளகத்துக் கதிர்க்கடவுள் உருவிலியாய்க் கன்னன் என்று பெயர் சூட்டியவாறும், பின்பு பரசுராமனால் படைப்பயிற்சி பெற்றவாறும், அதுகண்டு துரியோதனன் தோழமை கொண்டு அங்கவள நாட்டுக்கு அரசன் ஆகியவாறும், அது கொண்டு பழைமையுரைத்து இனி உன் உடன்பிறந்தார் ஐவரையும் ஈண்டன் போய்க் காண்பா யாக என்றும், உன் தாய் குந்திதேவியும் நின்னைக் காணமாட்டாது புலம்பி நெடுங்காலம் மகக் கவலையாய் இருக்கின்றாள் என்றும் உணர்த்தி, நின் கண்ணாகிய தருமன் முதலானவர்களை ஈண்டன் போய்க் கண்டு மற்று அவரை வழிபாடு செய்வித்துக் கொள்வா யாக என்று கண்ணன் அருளிச் செய்யக் கேட்டு யாது சொன்னான் கன்னன் : (௨௨௨)

223. இன்று பிறப்பறிந்தே னென்னும் பிறந்தார்பாற்
சென்று தெரியிற் பிழையன்றே—வென்றிபுனை
தோழற்கே யென்னுயிரைத் தோற்பேன் செருக்[1]களத்தே
யாழித்தேர் வித்தகனே யான். (௨௨௩)

அன்றியும்,

224. யான்பிறந்து வந்து வளர்ந்தபி னேஞ்ஞான்றுந்
தேன்பிறங்குந் தாரான்சோ றுண்டறியே—னான்பிறங்க
வெல்லாதுஞ் சொல்லுஞ்சொ லென்செவியுங் கேட்குமோ
மல்லாடுந் திண்டோளாய் மற்று. (௨௨௪

அன்றியும்,

223. என்னும் - என்ன பயனும். தெரியில் – தெரிந்து சேர்ந்து கொண்டால்.

224. பிறங்கும் – விளங்கும்; ததும்பும். தாரான் - தருமன்.

பா. வே: 1. களத்தில் ஆழித்தேர்.

225. என்னை யறிந்ததற்பி னின்றெனக்குச் செய்தவற்றை
மன்னவனே மற்றறியா தாரில்லை—யென்னையோ
வென்பிறவி நீயுரைத்தா லேகுவனே வென்னுடலைச்
சின்புலங்க டின்னுமோ தேர்ந்து.

எ - து. துரியோதனன் எனக்குச் செய்த உதவிக்குக் குறியெதிர்ப்புச் செய்து ஆற்ற வொண்ணாது. நங்கு என் உயிரைக் கொடுக்க வேண்டு மென்று சொல்லிக் கண்ணனை விட்டு நீங்கி அளவிறந்த கவலையோடும் தன் கோயில் நோக்கிப் போயினான் கன்னன் என்றவாறு. இப்பால் அசுவத்தாமனை ஒரு தனி மண்டபங் கொண்டிருந்து யாதருளிச் செய்தான் கண்ணன்: (௨௨௫)

226. மூன்பிறந்தான் பாகம் பெறுகை மூன்பிரக்கப்
பின்பிறந்தா னைந்தூர் கொடாததுவு—நன்பிறங்க
னேராக விட்டதுவு நீயறிய வென்றுரைத்தான்
சாராகும் வண்ணன் கறுத்து.

இவ்வகை துரியோதனன் அறநெறி அழியப் பேசியதும் தருமன் நாடு பெறுதவாறும் உரைத்து இதற்கு நீயே சான்றெனப் பின்னும் யாதருளிச் செய்தான் கண்ணன்: (௨௨௬)

227. இறைவர் திருமூர்த்தி யெங்கட்கு வந்த
பொறைகள் பொறுப்பாய்நீ வேண்டி—லிறைவன்
படைத்தலைமை தானே பணிக்குமாற் கேண்மன்
படைத்தலைநீ கொள்ளேல் பரிந்து.

எ - து. துரியோதனன் படைக்கு நின்னைப் படைத் தலைமை தானே அழைத்துத் தருமாகில் பணியினல்லது நீதானே படைத் தலைமை விரும்பா தொழி என்றும் விரும்புவையாகில் நின் வீரத்திற்கு முறையன்று என்றும் தருமன் முதலானவர்

---

225. துரியோதனன் செய்தவை நண்புரிமை, நாட்டுரிமை முதலியன. சின்புலங்கள் - சிறிய நுண்ணிய உயிர்கள்; புழுக்கள். நன்றிமறந்த யாக்கை இழிவு உரைத்தவாறு.

226. முன்பு இரக்க – முன்னேவந்து வேண்டி நிற்க. நன்பு – நற்றன்மை. இறங்க - கீழேவிழ; தாழ.

227. பொறை - சுமை; இவண் துயரச் சுமை. பொறுப்பாய் - தாங்குவாய். இறைவன் - துரியோதனன். இறைவர் திருமூர்த்தி - விளித்தல். அவன் இறைவன் திருவடிவன் ஆகலின். தானே பணிக்கு மால் - துரியோதனனே ஆணையிட்டால். பரிந்து - (நீயே) விரும்பி.

உறுதிமொழியும் குருமொழியுமே துணையாக வாழ்கின்றவாறும் மற்றையவர் நன்மையும் அறியென்றும் இவ்வகை அசுவத்தாமனை வேறுபடுத்திப் பின்னும் யாது செய்தான் கண்ணன் : (உஉஎ)

228. ஆழி தனைவீழ்த்தி யாழியா னப்போழுதே
மீள விசும்பதனை மேனோக்கி—வாழி
பரிவேட [1]மிட்டதுகோல் பாரென்று காட்டத்
திருவாழி நீட்டினான் சென்று.

எ - து. கண்ணனும் ஒருப்பட்டு மீண்டும் எழுந்தருள்வானாகத் தன் திருத்தேர் மேற்கொண்டவிடத்துத் தன் திருக்கையில் மருவியிலங்கும் மணியாழியைக் கழற்றி யாவருமறியாது அசுவத்தாமன் முன்னே போட்டு, அசுவத்தாமனை நோக்கி ஆழி வீழ்ந்தது அதனை எடுத்துத்தாவென்று, கதிர்க் கடவுள் தன்னை ஒளிவட்டமிட்டது நீ பாராய் என்றும், இது தீக்குறியாவது கண்டாய் என்றும் அருளிச் செய்து, அசுவத்தாமனும் மாயை என்றுணராது திருவாழி யெடுத்துக் கொடுக்குமளவில் கதிர்க் கடவுளையும் நோக்குதலின் அவ்வளவில் கண்ணன் அசுவத்தாமன் கையிலே மணியாழியுடன் மற்றவன் கைப்பிடித்துக் கதிரோனை நோக்கி ஒளிவட்டங் காணாய் என்று மருட்டிக் கைப்பிடித்து நீ படைத்தலைமை கொள்ளா தொழி யென்றருளிச் செய்து மற்றவனை உறுதி கொண்டு மணியாழியினை வாங்கி அசுவத்தாமனுக்கும் மற்றுமுள்ள வீரர்க்கும் விடை கொடுத்துத் தானும் யாது செய்தான் கண்ணன் : (உஉஅ)

229. பார்வேண்டிச் சென்று பதயுகத்தாற் பண்பழிந்து
போர்வேண்டிப் பூமா மகள்வேண்டித்—தேர்தூண்டி
மண்ணுடர் போற்ற மறைபோற்ற வேகினான்
விண்ணுடர் போற்ற விரைந்து.

இவ்வகை கண்ணன் துரியோதனனையும் மற்றவராற் சூழப்பட்ட அரசர்களையும் விட்டு நீங்கி அறவோரும், அறநெறி மறுத்தான் என்று புவிமகளும் பொறை ஆற்றாது புலம்ப, திருமகளும் வாய்மையாளன் அல்லன் என்று பரிந்து புயல்

---

228. ஆழி - கணையாழி. பரிவேடம் — ஊர்கோள்; கதிரோனைச் சூழ்ந்த ஒளிவட்டம்.

229. பதயுகத்தால் - மண்ணால்; மண்ணாசையால். தேர் தூண்டி— தேரோட்டி.

பா. வே: 1. மிட்டதுகா ணென்றெடுத்துக் காட்ட.

வண்ணனுடன் போதப் போந்து, தூரியோதனன் எல்லை கடந்து விதுரன் எல்லை புகுந்து மற்றுங்கோர் பூங்காவில் இருந்து தேவர் கோனை அழைத்தருளி வீற்றிருந்தான் கண்ணனுகக் கருதுவது. இப்பால் துரியோதனனிடையிற் போய்க் கண்ணனை விடை கொண்ட அரசர் யாது சொன்னரோ வெனில் : (௨௨௯)

230. ஆழி யதுவீழ்த்த வந்தரத்தேர் வல்லானுஞ்
சூழுஞ் சபையறியச் சூளுற்றான்—வாழி
யினியரசர்க் குய்யுநா ளில்லையே யென்றார்
தனியரச ரெல்லாந் தளர்ந்து.

எ - து. அசுவத்தாமன் கண்ணனுடன் தனித்து மறை பல பேசிப் பின்னும் கண்ணன் மணியாழிபிடித்துக் கதிர்க் கடவுளை நோக்கிச் சூளுற்றுக் கொடுத்தான; அது யாங்ஙனமோ அறியோம் என்று பார்வேந்தர் சொல்லக் கேட்டு அசுவத்தாமனை முனிந்து வீடுமர், துரோணர், கிருபன், விதுரன், கன்னன் உள்ளிட்ட வேந்தர்களை நோக்கி யாது சொன்னன் துரியோதனன் : (௨௩௦)

231. மறையோன்சேய் சென்றந்த வஞ்சனையி னாலே
முறையாழி தொட்டுச்சூ ளுற்றா—னிறையோனைத்
தேறுமா றெங்ஙனே தேர்வேந்தீ ரென்றுரைத்தான்
சீறுமால் யானையான் றேர்ந்து.

எ - து. மாற்றலருடன் வஞ்சத் தொழில் புரிந்து அசுவத்தாமன் மற்று அதற்குத் தக்கன பேசிப் புகழ்ந்தான் என உரைத்து முனிவுற்றுத் துரோணரை இனித் தேறுமாறெதென்று கவலைப் பட்டு அரசர்க்குச் சான்றுவைத்து, அசுவத்தாமனை முனிந்து கன்னனைக் கைப்பிடித்துக் காட்டி, எல்லாவேந்தர்களையும் நோக்கி யாது சொன்னன் துரியோதனன் : (௨௩௧)

232. இவனொழிய வேறொருவ ரில்லையோ வங்கற்
கிவனு மிவனுமிங் கோவ்வா—ரிவனையினி

---

230. அந்தரத் தேர் வல்லான் – தெய்வத் தன்மை வாய்ந்த தேர் வல்லான். என்றது அசுவத்தாமனை. முன்னே இறைவர் திருமூர்த்தி என்றது அறிக. (227) சூளுற்றான் - சூள் உரைத்தான். இன்னது செய்வேன் என உறுதிகூறுதல் சூள் ஆகும்.

231. மறையோன் சேய் - அசுவத்தாமன். இறையோன் - துரோணன். தேறுமாறு – தெளியுமாறு.

232. இவன் - அசுவத்தாமன். 'இவனை இனி இன்றியே' என்பதைப் 'போர் வென்றியேது' என்பதனோடும் கூட்டுக.

யின்றியே யாளு மரசுதனைப் பாரீர்போர்
வென்றியே தென்றான் வெகுண்டு.

இவ்வகை மன்னர் மன்னன் துரியோதனன் வெகுண்டு அசுவத்தாமனைக் கொண்டு இதற்குமுன் பெற்ற நாடு இல்லை என்றும், இவனால் செய்யப்பட்ட வீரச்செயல் ஏதோ என்றும் கன்னன் ஒருவனுமே எனக்குத் துணையாவான் என்றும் இவனுக்குப் பிறநாட்டு வீரர் அனைவரும் ஒவ்வார் என்றும் இவ்வகையே வெகுண்டுரைப்பக் கேட்டு மற்றங்கு வழிபட்டு இருந்தார். அவ் விடத்துத் துரியோதனனை நோக்கி யாது சொன்னான் அசுவத்தாமன்: (உகஉ)

233. ஒருவர்சோ றுண்டடங் கோருவர்க்காய் நிற்பா
ரிருநரகில் வீழ்வார்போ யின்றே—திருவருளான்
மண்ணின்மேல் வீழ்ந்த மணியாழி தாவென்று
னெண்ணியவா றென்றறியேன் யான்.

எ - து. யாவராயினும் ஒருவன் சோற்றை யுண்டு மற்று அவனை வஞ்சிப்பானும், யாவன் ஒருவனுடன் பேசிய உறுதி வழுவுவானும், போர் முகத்துத் தன்னரசனைவிட்டுத் தன்னுயிரோம்பப் போவானும், வஞ்சத் தொழில் இயற்றுவானும் யாவராலும் தடுப்பரிய நிரயம் எய்துவார் கண்டாய், அது நிற்க யான் கண்ணனை விடை கொள்ளுமிடத்து மணியாழி வீழ்ந்ததனை எடுத்து நீட்டுவாயாக என்ன, யானெடுத்துக் கொடுக்கும் எல்லைக்கண் கதிரோனை ஒளிவட்டமிட்டதைக் காணாய், எனவருளிச் செய்து பின்னும் தன் மணியாழி கொடுப்ப வாங்கிக் கொண்டு விடைதந்தமையன்றி, மற்றவனாற் செய்யப்பட்ட பெருமாயை என்னால் அறியப்பட்டதில்லை என்றும், இது யாவரும் காணும் என்றும் இவ்வகை பேசித் தன்னுயிரைத் துறக்கப் புகுந்த அசுவத்தாமனை நோக்கிக் கைகவித்து முனிவு நீக்கி மற்றவனுக்கும் அனைத்து வேந்தர்க்கும் விடை கொடுத்துத் தானும் தன் கோயில் புகுந்தான் மன்னர் மன்னன் துரியோதனன் என்றவாறு. இப்பால் கன்னனுந் தன்

அங்கற்கு – அங்க நாடன் கன்னனுக்கு. இவனும் இவனும் என்றது துரோணனையும், அசுவத்தாமனையும். அரசர்கள் அவ்விருவரையும் மேலே சுட்டிக் கூறினர் ஆகலின் (231).

233. இரு - பெரிய. மணியாழிதா என்றான் கண்ணன். யான் அவன் எண்ணியவாறு ஒன்றும் அறியேன் என்று தன் நிலைமையை விளக்கினான் அசுவத்தாமன்.

படக் கடவோம் - அழிந்து படுவோம்.

கோயிற் புகுந்து ஒரு தனி மண்டபத்திருந்து கண்ணன் விதுரன் வீட்டில் உண்டமையும் விதுரனை [1]வில்முரிபபித்தமையும் அதன் பின்பு அசுவத்தாமனைப் படைத்தலைமை விலக்கினமையும் தன்னுடன் பேசிய பழஞ் செய்தியுமுணர்ந்து கண்ணன் வஞ்சத் தால் இனி மிகவும் பழிபாவமும் விளையத் தகும் என நினைந்து யாமும் இனிப் போர்க் களத்தில் படக் கடவோம் என்றும், அருச் சுனனைக் கொல்லக் கடவன் அல்லன் என்றும் உள்ளன வெல்லாம் வழங்கத் தொடங்கினான். அது யாங்ஙனமோ வெனில்: (உ௩௩)

234. **கற்றார்க்கு நான்மறைநூல் வல்லார்க்குங் கையலந்தோன்**
றற்றார்க்கு மில்லா திரப்பவர்க்கும்—போற்றாழ்
நிறைகூவித் தான்கொடுப்ப நீள்கதிரோன் மைந்த
னறை கூவித் தானளித்தா னங்கு.

இவ்வகை ஆக்கொடை, நிலக்கொடை முதலாயுள்ள பெருங் கொடையெல்லாம் செய்து பின்னும் யாது செய்தான் கன்னன்: (உ௩௪)

235. **ஆறுநூ றுயிரம்பேர்க் காறுநூ றுயிரம்பொன்**
வேறுவே றாக விரைந்தீந்து—மாறிலா
மாநிதியம் வேண்டி வருவார்க்கு மற்றோர்க்குந்
தானிதிய மீகின்றான் றான்.

அன்றியும், (உ௩௫)

236. **மின்பயிலு மாமணிப்பூண் வேல்வேந்தர் தந்திறையை**
முன்பொழுதே யந்தணர்க்கு முற்றுவித்துப்-பின்பொழுது
நேரிழையா ளன்னோடு நேயமுடன் மெய்ச்சூதின்
போரடையத் தானடைந்தான் புக்கு.

எ - து. எழின்மணி முடிவேந்தர் இடுதிறை எல்லாம் முன் பொழுதில் வழங்கிப் பின் பொழுதில் 'வறியன்' என்னும் பேரெய்தித்தன் நேரிழையாளொடும் சூது பொருகின்ற கன்னன் நிலையறிந்து யாது செய்தான் கண்ணன்: (உ௩௬)

---

234. கையலந்து - கைக்கண் இருந்ததை இழந்து.
கொடுப்ப — கொடுப்பதற்கு.

236. முற்றுவித்து - கொடுத்து முடித்து. நேரிழையாள் — மனைவி.

பா. வே: 1. ஒடித்தல் என்னும் பொருள் தரும் 'முரித்தல்' என்னும் சொல், உரைநடையில் 'முறித்தல்' என்றே எல்லா இடங்களிலும் ஆளப்பெற்றுள்ளது. முதற்பதிப்புக் காண்க.

237. வெற்றி விறல்விசயன் வெஞ்சமரில் வீழாம
லற்றவர்கட் கெல்லா மருநிதிய—மூற்றுதவுங்
கன்னன் றிறலழிக்கக் கண்ணு யிரமுடைய
மன்னன் றனையழைத்தான் மால்.

மறைவாக எழுந்தருளியிருந்து தேவர்கோனை நினைந்தருள, அப்பொழுதே கவலையோடும் வந்து 'அருளப்பாடு' என்று அடிபணிந்து 'அருளிச் செய்வாயாக' என்னத் தேவர்கோனைக் கண்டு யாதருளிச் செய்தான் கண்ணன் : (உ௩௭)

238. இந்திரனே யுன்மகனை வெல்விப்பான் வேண்டுதியே
லந்தணனு யங்கர்கோன் பாலனுகி—முந்தவற்குச்
சுந்தரமாய்க் கோண்டிலங்குந் தோல்கவச குண்டலங்கண்
மந்தரத்தா னீவேண்டி வா.

அன்றியும், (உ௩௮)

239. வேலற்கரிய வங்கர்கோன் வில்விசயன் றன்னுற்
கோலற்கெளிய னும்பரிசு கூறின்—மலர்க்கமல
மண்டலத்தி லேமலரு மாக்கதிரோன் மாமகன்றன்
குண்டலத்தை வாங்காய் குறித்து.

அன்றியும், (உ௩௯)

240. மண்டலத்தின் மன்னரேல்லாம் வந்து மலைந்தாலுங்
குண்டலமுண் டாகக் கோலப்படான்—விண்டலத்து
ளாதியாய் நீயலையே லாங்கதனை வாங்குதற்கு
[1]நீதியாய் போதுவாய் நின்று.

எனக் கேட்டு யாது சொன்னுன் தேவர்கோன் : (உ௪௦)

---

237. கண்ணுயிர முடைய மன்னன் - தேவர்கோன். திறல் - வலிமை.

238. உன்மகனை - அருச்சுனனை. சுந்தரம் – அழகு. அவனோடு பிறந்தமையால் 'தொல் கவசகுண்டலங்கள்' என்றார். மந்தரம் – மறைவு; கரவு.

239. மலரும் - விரியும்.

240. மலைந்தாலும்–போரிட்டாலும். விண்டலத்துள் ஆதியாய்- விண்ணின் முதல்வனே.

பா. வே: 1. நீதியார் போதுவார்.

241. துன்றுபுகழ்ப் பாண்டவர்கள் சோல்லழியச் சூதழிந்த
வன்றேருகா லென்னை நினையாது—மன்றலந்தார்
மன்னர் படுந்துயரங் காண்பதற்கோ மாயவனே
யென்னை நினைந்ததுதா னின்று.

இவ்வகை வேண்டி நின்ற தேவர்கோனை நோக்கிக் கண்ணன் அருளிச் செய்வான்: கன்னன் தன் 'கவச' குண்டலங்களை நின்னை ஒழிய யாவராயினும் காண்பதற்கும் வாங்குதற்கும் வல்ல பேரில்லை. அதன் ஆற்றலால் அவனை முக் கடவுளராலும் வெலற்கரிது; ஆதலால், உன் மகன் அருச்சுனனை வெல்விக்க வேண்டுமாகில் ஈண்டன் போய்க் கன்னன்றனைக் கண்டு மற்றவன் கருத்தறிந்து தக்கதைப்பேசி நின்னுல் வல்ல நூன்முறைகளாலும் வேறுபடுத்தி, எவ்வகையாலும் கவச குண்டலங்களைக் கொடையாக வேண்டி வாங்கிக் கொண்டு வருவாயாக என்று விடை கொடுப்பத் தேவர் கோன் பணிமருமலும், புதல்வன் கவலையாலும் உடன்பட்டுத் தன்னுடைய தேவவடிவு மாறி யாது செய்தான்: (உசக)

242. மூப்பும் பெரிதாகி முன்னின்றூர் தாமஞ்சப்
பாப்புப் பெருக்கம் பலபூண்டு—கோப்பமைந்த
கோற்றவே லந்தரர்தங் கோமானோ ரந்தணனு
யுற்றடைந்தா னங்கர்கோ னூர்.

அன்றியும், (உசஉ)

243. இந்திரன் றன்மகனை வெல்விப்பான் காரணமா
வங்கர்கோ மான்பா லணைவதற்கு—வந்தங்கோர்
வேதியனாய் வஞ்சித்து வேண்டுநிதி கோள்வானோ
ராதுலனாய் வந்தா னடைந்து.

எ - து. வில்லென வளைந்த யாக்கையுமாய்ப் புரிசடையுமாய்க் கோலும் ஊன்றி மெல்லென நடந்து செல்லா நின்ற விடத்து எதிர் வருகின்ற அந்தணரைக் கண்டு இன் சொற் கொடுத்து, வழியின் வருகின்ற அந்தணன் யாது சிந்தித்தானோ வெனில்: (உசா)

---

241. துன்று - செறிந்த. சூதாடத் தொடங்கிய நாளில் என்னை நினையாது இன்று நினைத்தது என்ன? அவர்கள் துயரம் காணவோ என்றான். அன்று என்னை அழைத்திருந்தால் இவ்வவலங்கள் நேர்ந்திரா என்பது கருத்தாம்.

242. பாப்பு – பாம்பு. கோப்பமைந்த – கட்டமைந்த.

243. அணைவதற்கு - சேர்வதற்கு. ஆதுலன் - வறியவன்; இரவலன்.

244. முன்போ திரவலருக் கீந்து முரசோலிப்பப்
பின்போ திலநாடன் போயினபின்—கண்போதின்
மற்றளிக்க வில்லை மணிக்கவச குண்டலங்க
ளூற்றளிப்ப னென்றே யுகந்து.

அன்றியும், (உ௪௪)

245. அப்போழுதே யான்சென்று லங்கர்கோன் றனளிக்கு
மிப்போழுதே யான்வேண்டிற் றீவனு—லெப்போழுது
முன்னவன்றன் செய்ததெல்லா முற்ற வகையுரைப்பே
னென்னவுடன் சென்று னெழுந்து.

எ - து. முன்பொழுது உள்ள பொருள் இரவலர்க்குக் கொடை செய்து பின்போதில் ஒன்றற்று வறியனாய் இருக்கின்ற கன்னன்றன் நிலையறிந்து, மற்று அவனுக்குக் கவச குண்டலங்களை யொழிய வேறில்லை யெனக் கருதிக் கவச குண்டலங்கள் வாங்கு வானாக விரைந்து சென்று, கோயில் வாயில் குறுகி யாது செய்தான்தேவர்கோன் : (உ௪௫)

246. விண்ணவர்கோன் றன்மகனை வீடாமற் காப்பதற்கு
விண்ணகத்தை யூடறுத்து வந்திழிந்து—மண்ணகத்தி
லங்கர்கோன் வாய்த லபிதா வெனவிட்டான்
பொங்கோளியோ னந்தணனாய்ப் போந்து.

எ - து. அந்தணனும் கன்னன்றன் கோயில் வாயிற் சென்று 'அருள்க' எனக் கூறி வாயிற் காவலரை நோக்கி மிகுதொலைவி னின்றும் வந்தேன் என்று விரைந்து அவற்கு அறிவிப்பீராமின் என்று அந்தணன் சொல்லக் கேட்டு வாயிற் காவலரும் கதுமெனப் போய் அங்கர்கோனைக் கண்டு யாது சொன்னாரோ வெனில் : (உ௪௬)

---

244. நாடன் – அங்கநாடன்; கன்னன். இலம் போயினபின் – இல்லம் சென்றபின். மற்று அளிக்க இல்லை – மேலும் கொடுக்கப் பொருளில்லை.

245. கைப்பொருள் அனைத்தும் தீர்ந்தமையால், "இப்பொழுதே யான் வேண்டிற்று ஈவன்" என எண்ணினான்.

246. வீடாமல் - இறவாமல். இழிந்து - இறங்கி. வாய்தல் – வாயில். அபிதம் – காத்தல். அபிதா – காத்தருள்வாயாக.

247. குடையொன்று கைப்பிடித்துக் கோற்றவனே வாயிற்
கடைவந் தடைந்தான்காண் கண்டாய்--குடைநிழற்கீழ்ப்
போதிலுயர் தண்டார் பொலிமுடியாய் காண்பதற்கோர்
வேதியனாய் நின்றான் விரைந்து.

மூப்பிலே வளைந்த யாக்கையுமாய் முதுமையுடன் சிறந்த அறிவுமாய்ப் பரப்பினாலே மிக்க திருமறையுமாய் வேறுபாட்டால் விளங்கும் உடலினையுடையாரோர் அந்தணனுமாய் மணிவாயிலில் வந்து நின்றான் என்று கடைகாவலர் சொல்லக் கேட்டுக் காவல் வேந்தனும் கதுமென அரியணையிலும் எழுந்திருந்து மறையவனை வரவிடுமின் என்று பின்னும் யாது சொன்னான் கன்னன் : (உ௪எ)

248. வந்தடைந்த வேதியனை வாய்மை யதுகேட்கச்
சுந்தரத்தோண் மன்னவனுஞ் சொல்லுவான்—முந்தச்
செருவடுதோ ளங்கர்கோன் சென்றவனை யீண்டு
வரவிடுமி னென்றான் மகிழ்ந்து.

எனக் கேட்டுக் காவலரும் கதுமெனச் சென்று மறையவனை நோக்கி யாது சொன்னார் : (உ௪அ)

249. வேதியனே யுன்றன் வரவுரைப்ப வேல்வேந்த
னீதியாற் கேட்டு நினையழைத்தான்—சோதிச்
செழுந்தரள வெண்குடையான் றேர்வேந்தன் றன்பா
லெழுந்தருளா யென்று ரிசைந்து.

இவ்வகை காவலர் சொல்லக் கேட்டு மிகவும் மகிழ்ந்து கதுமெனக் கோயிலுட் புகுந்து வில்லென வளைந்து விரிகுடையுங் கோலும் ஊன்றி மெல்லெனச் சென்ற மறையோனைக் கண்டு கன்னன் எதிர்சென்று திருவடிகழுவி வரவேற்று, அந்தண வடிவு கண்டு மிகமகிழ்ந்து, இன்சொலுடன் இருக்கைகொடுத்து, அந்தணன் திருமறையுடன் வியந்துரைப்பக் கண்டு பழவரலாறு பல கேட்டு மிக நல்லன் எனக்குறித்து மற்றவனை நோக்கி யாது சொன்னான் கன்னன் : (உ௪௯)

---

247. வாயில் கடை - தலைவாயில்.

248. "முந்தச் சென்று அவனை ஈண்டு வரவிடுமின்" என இயைக்க. முந்த - விரைய. செரு வடு தோள் - போர்த் தழும்புடைய தோள்.

249. தரளம் - முத்து. சோதி - ஒளி.

250. வாயிலபி தாவிட்ட மாமறையோ னுத்தனியே
யேய மறைநூ லதுகேட்டு—நேயமுட
னீவேண்டி வந்தபோது னீயுரைக்க வென்றுரைத்தான்
கார்வேண்டுங் கையான் கலந்து.

எனக்கேட்டு யாது சொன்னான் மறையோன்: (உருo)

251. வண்மை யுடையாய் மறுயென்பார் வையகத்தோ
ருண்மை யறியயான் வந்துற்றே—னன்மையின்கண்
[1]மேக்குயர்ந்த வெண்குடையாய் மிக்கா யெனவுரைத்
[2]மீக்குடைய வெண்குடையான் மீண்டு. [தான்

அன்றியும், (உருக)

252. நல்லார்க ளல்லாரு நன்கறிந்து வேண்டுவன
சொல்லாது கொண்டார்கள் சொன்னாலே—னெல்லா
மறநெறியே வந்திறைஞ்சு மங்கநாட் டேறே
முறைமுறையே தானீ முயன்று.

எ - து. நீ வள்ளல் என்றும் வையத்து வேண்டிற்று மறாய் என்றும், பிறநாடுகளில் பரவியுள்ள மெய்யுரை கேட்டு மிகு தொலைவினின்று வருகின்றேன்; முதியனாகையாலும் நடக்க மாட்டாமையாலும் முன்பொழுதில் வரப்பெற்றிலேன்; இனிப் பின்பொழுது ஆயிற்று. இப்பொழுது யான் வேண்டியது தரவல்லையோ? என்று கேட்கக் கன்னனும் முறுவலித்து யாது சொன்னானே வெனில்: (உருஉ)

250. ஏய - பொருந்திய, தக்க. கார்வேண்டுங் கை - கார் முகிலும் இவன் வண்மை நமக்கு வேண்டும் என இரந்து கிடக்கத் தக்க கை.

251. மேக்கு — மேலே. நன்மையின்கண் மிக்காய் என இயைக்க. மீ - மேல். தேவர் கோன் உருமாறிக் குடையொடு வருதலை 247 ஆம் வெண்பாவிற் காண்க.

252. பிறர்க்கு வழங்கியதற்கும் எனக்கு வழங்கவேண்டியதற்கும் வேறுபாடு உண்டென்பான், 'வேண்டுவன சொல்லாது கொண்டார்' என்றும், 'சொன்னால் என்' என்றும் கூறினான். முறை முறையேதான் - அவ்வவர்க்கு வேண்டும் முறைப் படியேதான் ஈ - கொடு.

பா - வே: 1. மிக்குயர்ந்த. 2. மிக்குடைய.

253. இன்றேயிம் மாற்ற முரைத்தா யிருபிறப்பா
[1]யின்றே யுயிர்தா னிறந்திடினு—நன்றேநீ
யேதேனும் வேண்டிற்றுப் பெற்று யெனவுரைத்தான்
மாதான மன்னன் மகிழ்ந்து.

இவ்வகை வேண்டிற்றுத் தரவல்லேயோ வென மறையோன் சொன்னவுரைகேட்டு, இன்றிற் பின்னை இந்தவுரை கேட்டிலேன், இதுவும் நீ சொல்லக் கேட்டமையன்றி யாதாயினும் நீ வேண்டினல் வேண்டிற்றுப் பெற்றுய் என்று கன்னன் சொல்லக் கேட்டு யாது சொன்னுன் மறையோன் : (உருங)

254. திருவுடைய வுள்ளத்தா யெய்ந்த பொருளை
யுருவுடைய [2]வந்தணற்கென் றீந்தாற்—பெருமை
யழியாது நல்கென்று ளுயிரங்கண் மன்னன்
வழிகாதற் பார்த்தற்கா வந்து.

(உருச)

அன்றியும்,

255. முன்னீந்த தெல்லா முழுப்பகைகாண் மொய்தாரா
[3]யென்னீந்த தொன்று முனக் காயிரங்காண்—மன்னுபுக
ழீண்டிவரு மன்னவனே யான்மகிழ வின்றெனக்கு
வேண்டுவதா னீயாய் விரைந்து.

எ - து. மறையோரால் விரும்பின தொன்றும் வேல் வேந்தற்காக மனம் மாருமல் தருதியாகில் உன் பெருமைக்குப் பிழையில்லை என்று சொல்லக் கேட்டுக் கன்னனும் சொல்லுவான். நீ யாதொன்று வேண்டினும் தருவேன் இப்போது என்ன மறையோனும் மனமகிழ்ந்து யாது சொன்னுனே வெனில் : (உருரு)

---

253. மாற்றம் - உரை. இருபிறப்பாய் - அந்தணனே. ஏதேனும் வேண்டிற்றுப் பெற்றுய் – யாதாக இருப்பினும் நீ வேண்டியதைப் பெற்றுய். உறுதி கருதிப் பெறுவாய் என்பதைப் பெற்றுய் என்றுன்: காலவழுவமைதி.

254. வழி காதல் – மிக்க அன்பு. பார்த்தன் – அருச்சுனன்.

255. என் ஈந்தது - எனக்குத் தருவது. முன்தந்தவை நல்வினையால் மீண்டும் பிறப்பைத் தருதலின் பகைகாண் என்றுன்.

வேல்வேந்தற்காக மனம் மாருமல் துரியோதனன் என்ன நினைவானே எனக் கருதி நின்மனம் மாறுபடாமல்.

பா - வே : 1. யின்றெ னுயிர்தா 2. வந்தணற்கொன்
3. யென்னீந்த தென்று

256. ஈங்கென் மனக்கருத்தை யெல்லா மியம்புவனு
லோங்கு புகழா யுடன்பட்டாற்—கோங்கு
சுரும்பவிழுந் தொங்கலாய் தொல்லுலகு தன்னிற்
பெரும்புகழீ தென்றான் பெயர்ந்து.

எ - து. யான் வேண்டப் புகுகின்ற துன்னால் வரைதரலாவ தொன்றன்று கண்டாய்; பெருது போ வெனில் கடிதாக உரையறும்; யானுன்னை நம்பி உரைசெய்ய எனக்கோர் உறுதி செய்வாயாக எனக்கேட்டு யாது சொன்னான் கன்னன் : (உருசு)

257. அழகியதே சொன்னாய்நீ யந்தணனே புந்தி
பழகியதே சொல்லின் மறைப் பேனோ—தழுவியபோர்த்
தன்னா யகன்படவே தான்சாவுக் கஞ்சிப்போ
மன்னாக வேண்ணாய் மதித்து.

அன்றியும், (உருஎ)

258. மன்றில் வலிந்தோனு மாதவரைச் செற்றேனு
நன்றி மறந்தோனு நானிலத்து—என்றியுந்தான்
பெற்றவரைத் தாணிகழும் பேதையு மென்றிவர்க
ளுற்றவிட மெய்துவனு னுற்று.

அன்றியும், (உருஅ)

259. ஆண்டவனை விட்டமரு ளாடவர்கள் பின்றோடர
நாண்டுறந்து போனவனு நல்லோர்கள்--வேண்டியதோன்
றீயா தவனு மியானாக விந்நிலத்து
நீயா தரித்துக்கொ ணின்று.

---

256. சுரும்பு - வண்டு. அவிழ்தல் - மலர்தல். பெயர்ந்து - மீண்டும். வரைதரலாவது - முடிவு செய்யத்தக்கது.

257. புந்தி - அறிவு; உள்ளம். தழுவிய போர்த்து - தழுவியனைத்து. அன்னாய் அகன் படவே - அன்னை பிறன் சிறைப்பட. மதித்து - நினைந்து

258. மன்று - அறமன்றம். வலிந்தோன் - மாறுபட்டு ஓரஞ் சாய்ந்தவன். உற்ற இடம் - அடையும் இடம்; அஃது அருநரகம் என்பது கருத்து.

259. ஆண்டவன் - அரசன். ஆடவர் - வீரர். நாண் துறந்து- நாணம் அகன்று. நீ ஆதரித்துக் கொள் - நீ உறுதியாகக் கொள்.

என்றிவ்வகை கன்னன் உறுதி செய்யக்கேட்டு மறையோனும் மகிழ்வுடன் யாது தான் வேண்டிக் கொண்டானோ வெனில் : (௨௫௯)

260. மற்றேதும் வேண்டேனின் வண்மை யழியாமற்
[1]பெற்றே னெனின்யானும் பெற்றியா—னுற்ற
பிறர்க்குரைப்ப னுற்றவெற்குப் பெய்கழலாய் [2]பானு
நிறக்கவச குண்டலங்க ணேர்.

எ - து. நின் புகழும் கொடைத்திறமும் வேண்டியது மறுமையும் கேட்டுவந்தேன். மற்றொன்றிலும் பற்றில்லை; மன்னவனே, எனக்குன்னுடன் மிக நட்பாயிருந்தது; நின் பாற் றிகழ்ந்திலங்கா நின்ற கவசகுண்டலங்களைத் தருவாயாக எனக் கேட்டு யாது சொன்னான் கன்னன் : (௨௬0)

261. என்னொ டுடற்பிறந்த குண்டலங்க ணீதியா
னின்றுற் கொளப்படா நீண்மறையோய்—மின்னாரப்
பூண்டமைந்த பொன்னும் புனைநீண்ட மாமுடியும்
வேண்டினவுங் கொண்ணீ விரைந்து.

இவ்வகை என்னுடன் பிறந்தமையால் யாவர்க்கும் வாங்க வொண்ணாதாதலால் மணிமுடியும், ஒன்பான் மணியும் வேண்டுவன வெல்லாங் கொண்டுபோவாயாக எனக்கேட்டு யாது சொன்னான் மறையோன் : (௨௬௧)

262. அணிகலனும் வேண்டே னருநிதியும் வேண்டேன்
புனைவதொகு பொன்முடியும் வேண்டே—னினையுங்காற்
கோதனமும் வேண்டேன் கோலக்களிறும் [3]யான்
காதணிசேர் குண்டலத்தைக் காட்டு. [வேண்டேன்

அன்றியும், (௨௬௨)

---

260. பானு - கதிரோன். நேர் - விருப்பு; தா என்றுமாம்.

261. நீதியால் - முறையாக. மின் ஆரப்பூண்டு - ஒளிமிகக் கொண்டு.

262. கோதனம் - பசுக்கொடை; தானம் தனமெனக் குறுகி நின்றது. இனிப் பசுவாகிய செல்வமுமாம்.

பா - வே : 1. பெற்றே னறிந்தேனுன் விறற்கவச குண்டலங்க ணல்கு. 2. நின்பொன், 3. வேண்டேனின்

263. சொன்ன விவையெல்லாம் வேண்டேன் சுடரொளிப்பூண்
மன்னவனே நீதருவை யாமாகி—லுன்னுடைய
காதணிந்த குண்டலங்கள் காதலித்தேன் றுவவற்றைப்
போதணிந்த தோளாய் புரிந்து.

என்றிவ்வகை யுரைத்து நின்ற மறையோன் விருப்பை நிறைவேற்ற வேண்டி அறத்தைத் தெளிந்து யாது சொன்னான் கன்னன்: (௨௬௩)

264. வாணுடா வென்றாலும் வேண்டின் மறுப்பனோ
பேணு மறைமுனியே பேசுங்கா—ணுணுது
கோண்டிடுதி யென்றான் குறையிரந்து சென்றார்க்கு
மோண்டிடுபோற் கையான் முயன்று.

இவ்வகை மறையோனே நீ வேண்டினது தந்தேன்: இந்தக் கவசகுண்டலங் கிடப்ப அம்பும் படைக்கலங்களும் என்மேல் உருவமாட்டா என்று அதன் வலிமை சொல்லுகின்ற கன்னனை நோக்கி யாது சொன்னான் மறையோன்: (௨௬௪)

265. உன்னுற் றரவேளிதா யுன்னிடையி லுள்ளதனை
மன்னு மறுத்தானீ வள்ளலோ—முன்னே
மருச்சபதங் கூறியவோர் மன்னவனே யீண்ட
னருக்கவசந் தாராய் நயந்து.

எனக்கேட்டு யாது சொன்னான் கன்னன்: (௨௬௫)

266. உய்ய வுடன்பிறந்த குண்டலங்கண் மண்டலத்தார்
செய்தனவு மல்ல [1]திருத் தேரா—மெய்யே

---

263. காதலித்தேன் - விரும்பினேன். புரிந்து-ஏற்றுக்கொண்டு

264. வாணுடா - வாழ் நாள் தா; உன் வாழும் நாள் அனைத்தும் எனக்குத் தா. பேணு - எதைக் கேட்க வேண்டும் என்பதைப் பேணிக் கேட்காத. நாணுது - கூசாது. மொண்டிடு - முகந்திடு.

265. மருச்சபதம் - மறுக்காத உறுதி. அருக்கவசம் - அகலாத மெய்ப் மறை.

266. மண்டலத்தார் - மண் + தலத்தார்; உலகோர். கொண் = ணீ கொள் + நீ. திருத்தேரா—நன்மையை ஆராயாது. மெய்யே—மெய்யை.

பா. வே.: *1. திருதரதேர்ய்.*

மறுத்திட்டே னென்று மயங்காதே காதை
யறுத்திட்டுக் கொண்ணீ யமர்ந்து.

எனக்கேட்டு நின்னுடைய தாமரைக் கையாலே வாங்கி நின்கை மேற்பட என்கை கீழ்ப்பட யானேற்கத் தருவாயாக என்ற மறை யோனை நோக்கி யாது சொன்னான் கன்னன் : (உ௬௬)

267. வாங்கப் படாதனகாண் மாமறையோய் மற்றவற்றைத்
தேங்காதே நீயறுத்துக் கொள்ளென்ன—வாங்கவனு
மெய்நீட்டிச் சென்று விரைந்தவன்றன் காதருகு
கைநீட்டி [1]னனவற்றைக் கண்டு.

எ - து. ஒருவராலுஞ் செய்யப்படாதது ஒன்று கண்டாய்; கதிர்க்கடவுள் அருளால் உய்ய உடன் பிறந்த குண்டலங்களை உயர் மறையோனே, வாங்கவொண்ணாது ஆதலால் நீயே அதனை வலித்து அறுத்துக் கொள்வாயாக எனக்கேட்டு மறையோனும் அவன் பெருநிலைகண்டு 'இவன் கொடைத்திறம் இருந்தபடியென்' என்று கன்னன் காதருகு கைநீட்டும் அளவில் ஆங்குக் கதிரோன், உலக முதல்வன், பேரொளியன் பணியினால் வானத்தே வந்து ஓரொலி அங்கநாடனை நோக்கி யாது சொல்லிற்றோ வெனில் : (உ௬எ)

268. [2]பார்த்தற்கா மாயன் பணியினா லப்பார்த்தன்
போர்த்தொழிலில் வெல்லும் பொருட்டாக—வேற்கின்று
ணிந்திரன்கா ணையா விவைகோடே லென்றுரைத்த
[3]தந்தரத்தே யோரசதி யாங்கு.

அன்றியும், (உ௬அ)

269. மருவிய வன்கவச குண்டலங்கண் மன்னு
வருவியலு மாருயிரே கண்டாய்—செருவி

267. வாங்கப் படாதன - கழற்றி எடுக்க முடியாதன. தேங்காது - தாழ்க்காது. மெய் நீட்டிச் சென்று - நடந்து சென்று.

268. அந்தரம் - விண். அசதி - அசரீரி; அஃதாவது உருவிலி.

பா. வே: 1. னனவனைக். 2. பார்த்தற்காய் மாயன் பணியாலும் பார்த்தனுக்குப் போர்த்தொழிலை வெல்லும்பொருட் டாலும்— 3. தந்தரமே லோரசதி.

லடையார்[1] புரங்கெடுக்கு மங்கவள நாட்டை
யுடையாய் கொடுக்கை யொழி.

அன்றியும், (உசுகூ)

270. வசையின் மணிக்கவச குண்டலங்கண் மற்று
மிசையினொடுங் கொள்ள விருந்தான்—விசயன்றன்
றந்தையா மிந்திரன்கா ணுன்னைத் தடுக்கின்றே
[2]னுந்தையா னென்று னுகந்து.

எ - து. திருமாலின் பணியினால் அருச்சுனனுக்கு வெற்றி யாக வேண்டுமென்று கவசகுண்டலங்கள் கொடையாக வாங்கு தற்கு மாயை பண்ணிக் கிழமறையோனாக வந்து வேண்டுகின்றவன் தேவர்கோன் கண்டாய்; நீ அவனுக்குக் கவச குண்டலம் கொடுக்கில் உன் உயிரைக் கொடுக்கின்றாய் என்று சொன்ன உருவிலியுரையை நோக்கி யாது சொன்னான் கன்னன் : (உஎ0)

271. தேவேந் திரன்வந்து தேகியெனக் கையேற்றால்
[3]யாவேனும் யான்கொடுக்க மாட்டேனோ—வாய்மை
மறுத்துரைக்கு மன்னோனா னென்னுவண் காதை
யறுத்திட் டவணளிப்பா னிங்கு.

எ - து. அனைத்துயிர்க்கும் காலந்தாழ்த்து இன்னாரென்னாமல் மறாது கொடுக்கும் என்பால் தேவர்கோன் வந்து அருள் என்று என்கை மேற்படச் செம்மலர்க்கை கீழ்ப்பட ஏற்குமாகில் எனக்கிது வொப்பப் பேறுண்டோ என்று பின்னும் யாது சொன்னான் கன்னன் : (உஎக)

272. நில்லா வுயிர்கொடுத்து நின்ற புகழ்படைக்கை
நல்லார் [4]கடனென்ற நன்குணத்தார்—சொல்லார

---

269. மருவிய-உடலோடு ஒன்றிய. வருவியனும்-வருமுறையும். அடையார் - பகைவர். புரம் - நகரம். கொடுக்கை - கொடுத்தல். ஒழி - தவிர்.

270. உந்தை - உன் தந்தை. யான் - கதிரோனாகிய யான்.

271. தேகி - இரவலன். அவண் - அவ்விடத்து.

272. சொல்லார - சொல்மிகுழ. எந்தை - எம் தந்தையே; விளி. உந்தை என்ற உருவிலி உரையை நோக்கி எந்தை என விளித்தான்.

பா. வே: 1. புறங்கொடுக்கு. 2. னுந்தைகா ணென்று னுவந்து. 3. வாழ்வேந்திர். 4. கடனென்றே நன்குணத்தாற் – சொல்வாருண் டுந்தியா மாகின்றேம்.

முந்தியா னாகின்றேன் மூவாத குண்டலத்தை
யெந்தை கொடுக்கின்றே னென்று.

ஏ - து. மன்னுந்தொழியும் உயிரை யொழிந்து புகழ்படைக்கை உலகில் உள்ளார்க்கு இயல்பாம். ஆதலால் அவனுக் கென் கவச குண்டலங்கள் கொடுக்க அருளிச் செய்வாயாக என்ற அங்கர் கோன் முகநோக்கி உருவிலி யாது சொல்லிற்றோ வெனில்: (உஎஉ)

273. குன்றாத வாய்மை கொடுந்தொழிலின் மேற்கொள்ளா
நின்றாய் நினைத்ததுவே செய்யென்று—சென்றான்
[1]மணியுருளித் திண்டேர்மேல் வந்திருளை மாற்றி
யணியருளுஞ் சோதி யவன்.

இவ்வகை பேசிய உருவிலியாய கதிர்க்கடவுளும் மறைந்த பின்பு கன்னனுடைய அருள்வலியின் பெருமை கண்டு தேவரினத் தவரும் வியப்புற்றுப் பூமழை பொழிந்தார்; அப்பொழுது மறை யோனும் எல்லையில்லாததோர் மகிழ்வெய்தி இருந்த விடத்துக் கன்னன் தன் கவச குண்டலங்களைத் தானே வாங்கு மளவில் தெய்வத்திருவருளால் அவை நெகிழ வாங்கித் தேவர்கோன் திருக்கை கீழ்ப்படத் தன் கை மேற்பட அகமலர்ந்து இன்சொலுடன் கொடுப்பத் தேவர்கோன் வாங்கிப் பெருமகிழ்வுடையவனாய் 'நின்னை யொக்கும் அருளாளரில்லை' என்று சொல்லி வாழ்த்துரைத்து, மற்றந்தக் கன்னனைவிட்டு நீங்கி, மீண்டுபோந்து கண்ணன் பக்கல் போய்த் திருவடிதொழுது கவச குண்டலங் காட்டி, கன்னனைக் கண்டவாறும் கவச குண்டலங் கொண்டவாறும் விண்ணப்பஞ் செய்து, தேவருலகுக்குப் போவானாக விடை வேண்டினானைத் தடுத்துப் பின்னும் யாதருளிச் செய்தான் கண்ணன். (உஎ௩)

274. தேவர்கோ னாலேன் பலத்தான் முடியாத
காவலர்கோன் றோழன் கதிர்மணியைப்— பாவலரோர்
நூலோதும் வேதியனாய்ச் சென்றிரந்து[2]கொண்டாண்ட
னீளாது வாவென்று னீங்கு.

273. கொண்ட வாய்மை தன்னைப் போற்றினானுக்கே அழிவு சூழ்தலின் வாய்மைக்கு நேர்ந்ததைக் 'கொடுந்தொழில்' என்றான் கதிரோன். சோதியவன் - கதிரோன். உருளி - சக்கரம். அணி-அழகு; நன்மை.

274. பலம் - வலி. காவலர் கோன் - துரியோதனன். தோழன் - கன்னன். பாவலரோர் - பாவலர். ஆண்டன் - ஆங்கு. நீளாது - விரைந்து.

பா. வே: 1. பணியருளித். 2. கொண்டீண்ட னில்லாது.

அன்றியும், (உஎச)

275. **வேலற்கரிய வங்கர்கோன் வில்விசயன் றன்னாற்**
கோலற்கெளிய னும்பரிசு கூறின்—[1]மலர்க்கமலம்
பூமலரப் பொன்னுதயஞ் செய்வான்றன் புத்திரன்பால்
மாமணியுங் கொண்டீண்டடன் வா.

எ - து. உன்மகன் அருச்சுனனை வெல்வித்தல் காரணமாக முன்னமே கவச குண்டலங்கள் வாங்கி வந்தாய். அதுவோ டொப்பதில்லை; இன்னமுஞ் சென்று அவன் வலக்கையில் இருக்கும் உயர்மணியையும் வேண்டி ஒரு மறையோன் வடிவுகொண்டு போய் வருவாயாக எனக் கேட்டு யாது விண்ணப்பஞ் செய்தான் தேவர் கோன் : (உஎரு)

276. **குருக்கை மதவேழக் கொம்பொசித்த மாலே**
யரக்கர்குல மெல்லா மடர்த்தாய்—நிரைத்த
கனவயிரக் குண்டலங்கள் காதரிந்து போந்தேற்
கெனவருளிச் செய்தா யிது.

எ - து. அவனுடன் பிறந்த கவசகுண்டலங்கள் அவனுருயி ரானவை வாங்கி அவனுயிர் பறித்தாற் போலக் கொண்டு வந்தேன்; இனி அவன்பாற் சென்று கண்டு உயர்மணி வேண்டுமது பெருந்திற லுலகத்துக்குத் தக்கதன்று என்று மறுத்துரைத்து, மற்றது அறமன்று என்கின்ற இந்திரனை நோக்கி யாதருளிச் செய்தான் கண்ணன் : (உஎசு)

277. **அருந்தவங்கள் செய்வா ரகூநிதிய மீவார்**
பெருந்தவங்கண் மேற்கொண்டு நிற்பார்—திருந்தியநன்

---

275. பரிசு - தன்மை; வகை. பொன் உதயம் செய்வான் - பொன்னிறத்தில் தோன்றும் கதிரோன். மாமணி – கையில் அணிந் துள்ள ஒப்பற்றமணி.

276. குருக்கை - வலிய கை; பெரிய கையுமாம். ஒசித்த-ஒடித்த. அடர்த்தாய் - அழித்தாய். நிரைத்த - ஒழுங்காய் அமைந்த. கனம் - பெரிய. என - என்ன. காதரிந்து குண்டலம் பெற்றுக் கொண்டு வந்த எனக்கு இன்னும் ஏன் இது கூறினை என்று தடங்கிக் கேட்டான் என்க. கஞ்சனால் ஏவப்பட்ட 'குவலயாபீடம்' என்னும் யானையைக் கண்ணன் அழித்த வரலாறு முதற்கண் சுட்டப் பெற்றது.

பா. வே: 1. மலர்க்கமலப் பூமகடன் பொன்னுதயஞ்.

மக்கட் [1]பேறவார் வருந்துயரந் தாந்தீர்ப்பார்
மக்கட் பேறும்பேற மன்.

எ - து. புதல்வரைப் பெறுவார்க்கும், அரியதொரு தவம் செய்வார்க்கும், அருளுருவாய் அறம் செய்வார்க்கும் உலகியற்படி இவையிற்றுக்கொரு கவலை வந்த விடத்துப் பொய்ம்மை சொல்லி யாயினும் அருளக் கடவர் என்று மறைநூல்களால் விளம்பப் பட்டது. இஃது உன்னளவே அல்லவென்று இவ்வகை உன் புதல்வனை அருளும் பொருட்டாக வஞ்சித்தாயினும் உயர்மணி வாங்க ஒருப்படுவாயாக என்று கண்ணன் அருளிச் செய்யக்கேட்டு யாது விண்ணப்பஞ் செய்தான் தேவர்கோன் : (உஎஎ)

278. நின்னருளை யான் [2]மறுத்தே னீதியாலென்றவன்றன்
பொன்னடியில் வீழ்ந்து பொறுவென்று—முன்னமே
மண்ணுலகோர் காணவே மாமறையோன் வேடமாய்
விண்ணவர்கோன் போனான் விரைந்து.

அன்றியும், (உஎஅ)

279. மருவண்ண மேற்கொண்டு மாநிதிய மீயுந்
தராதலத்தி லங்கர்கோன் றன்பாற்—சிகாமணியை
வேண்டிக்கொண்[3] டண்டிவரப் போயினான் விண்ணவர்
மீண்டுமொரு வேதியனாய் மீட்டு. [கோன்

இப்பால், (உஎகூ)

280. சாமரைகள் வீசத் தழைத்தொங்கன் முன்னிரட்டப்
பூமருவுங் கண்ணார் புடைசூழ—[4]வாமப்

279. தராதலம் - உலகம். சிகாமணி – உயர்ந்த மணி. மீண்டும் போனான்; வேறொரு மறையோன் உருவிலேயே போனான். ஆதலால் "மீண்டுமொரு வேதியனாய் மீட்டு" என்றார்.

280. தொங்கல் - மாலை. வாமப்பணி – அழகிய பாம்பு; வாமம், ஒளியுமாம். பணிக்கோயில் - அரவணை. பணி – கட்டளை, மணிக் கோயில் - அழகிய அரண்மனை. மணி, ஒளியுமாம்.

பா. வே: 1. பெறுவாரே வான்றுயரந் தான்றீர்ப்பார், மக்கள் பெறும் பேறு மண்.
2. மறுக்கே னீதியா யென்றவன்றன்.
3. டண்டன்வரப். 4. வாரிப்

பணிக்கோயி லான்பணியாற் பாராளும் வேந்தன்
மணிக்கோயி லேகினன் மற்று.

இவ்வகை தேவர்கோன் இரண்டாவதும் ஒரு மறையோனாக அங்கர்கோன்பாற் சென்று மற்றவன் மணிக் கோயில் புகுந்து அரியணையில் வீற்றிருந்த கன்னனைக் கண்டு வாழ்த்துரைத்து நின்ற மறையோனைக் கண்டு கதுமென எழுந்திருந்து இசைந்து மறையோனுக்கு இருக்கை கொடுத்து வந்ததென் கொலோ என்று வினவ, சொல்லுவான் : பிறநாட்டு நின்னுடைய கொடையாண்மை கேட்டு வந்தேன் என்று பின்னும் யாது சொன்னான், மறையோன் : (உஅ0)

281. **முன்னை யிரவலர்கட்[1]கீந்ததேலா முன்னினஃ**
தென்ன பயனுண் டிருநிலத்தி—லோன்னலரை
யாகந் துளைத்தவடி வேலா யெனக்களித்தான்
மாகந் தனைப்பெறலாம் வந்து.

அன்றியும், (உஅக)

282. **கோற்றவனே நின்னுடைய கோலமணிக் குண்டலத்தா**
லுற்றபலன் பெற்றேனுக் கோன்றுகுறை—யிற்றையதுன்
சிந்தைமகிழ்ந் தன்புடனே சேங்கைச் சிகாமணியைத்
தந்தருளா யென்றான் றளர்ந்து.

எ - து. *முன்பு நீ செய்த கொடைக்குப் பதிற்றிரு மடங்கு பயனுண்டு எனக்குத் தருவையாயின்; ஆதலால் உன் வலக் கையிற் கிடக்கும் உயர்மணியைத் தருவாயாக எனக் கேட்பக் கன்னனும் மகிழ்ந்து கதுமென உயர்மணியை வாங்கிக் கொடுப்பக் கொள்ளாது தவிர்ந்து யாது சொன்னான் மறையோன்:* (உஅஉ)

283. **[2]தூவு மலைக ளலைக்கும் புனற்கங்கைக்**
காவலனே கண்கழுவி வாய்பூசி—மேவிநீ
யின்னடிசி லுண்டாங் கியல்புடனே தாவென்றான்
மன்னுமறை வேதியன்றான் மற்று.

---

281. ஆகம் - மார்பு. மாகம் - வானம்.

282. கோலம் - அழகு.

283. அலைத்தல் - சிதைத்தல்; அலைக்கழித்தல்.

பா. வே : 1. *ஈந்தவெல்லா நின்பின்ன, வென்ன.*
2. *தூமலைகள் சிந்தி யலைக்கும்.*

எ - து. உன் வழிபாடு முதலான கடன் கழித்து உண்டு நிறைவாயிருந்து அகமலர்ந்த சொல்லுடன் தருவாயாக எனக் கேட்டு யாது சொன்னான் கன்னன்: (௨அ௩)

284. நினைவுக்கும் வாய்மைக் குயிர்க்கு நிலையில்லை
மனுவுக்கும் வாழ்வுக்கு மற்றே—நினைவிற்
கொடுத்தபோ தேகொண்டு கோதின் மறையோய்
[1]நடத்தியே யென்று னயந்து.

என்றிவ்வகை நினைவுக்கும் சொல்லுக்கும் வாழ்வுக்கும் அரசர்க்கும் செல்வத்திற்கும் நிலையில்லை கண்டாய்; மறையோனே, ஆதலால் யான் தந்தபொழுதே கொடை பெற்றுக் கொண்டு போவாயாக வென்று கொடுப்ப மறையோனும் மகிழ்வுடன் வாங்கிக்கொண்டு நின்று யாது சொன்னான்: (௨அ௪)

285. தேவ ருலகத்துங் கண்டறியோந் திண்டிறலா
யாவரு நின்போ லறம்புனைவார்—பூவிரிய
வண்டலம்பு தாராய் மணிமுடியாய் நீமகிழ்ந்து
தந்தருளா யென்றான்[2] றகைந்து.

என்றிவ்வகை சொல்லிப் போகவென்று புறப்பட்டுச் சிறிதிடஞ் சென்ற அளவில் பெரும்பாவம் செய்து போகின்றான் என்று அப்பாவம் பின் தொடர்ந்து சென்று இருள் கூர்ந்து மறைத்திடுதலும், அது கண்டு தேவர்கோனும் நடுங்கி மீண்டும் போந்து, கன்னனைக் கண்டு அன்புடன் 'நீ என் பக்கல் ஒரு சீரிய வேல் வாங்கிக் கொள்வாயாக' என்று கொடுக்க லுற்ற மறையோனைக் கண்டு, கன்னன் முனிந்து சொல்லுவான்: 'உன் பக்கல் மாற்றுதவி ஏற்பேனோ' என்று மறுத்திடுகின்ற கன்னனைக் கண்டு மிகமகிழ்வுடன் சிறந்த வடிவங் காட்டிப் பின்னும் யாது சொன்னான் தேவர்கோன்: (௨அ௫)

---

284. கோது இல் - குற்றம் இல்லாத.

285. அறம் புனைவார் - அறஞ் செய்வார். அலம்பும் - அசைக்கும்.

பா. வே: 1. நடத்தியே கென்று.
2. தளர்ந்து.

286. உன்னு ருயிரா மொளிர்கவச குண்டலமு
மன்னு மணியு மகிழ்ந்தீந்தா—யொன்னார்
குடறுணிக்கும் வேலதனைக் கொள்ளுநீ யென்று
னடல்வேந்தே யென்பா லணைந்து.

எ - து. யான் தேவர்கோன் கண்டாய்; நின்னுடைய வாய்மையையும் அருளையும் அறிய உன்பக்கல் வந்தேன். ஆதலால், உன் உடலை உரித்துக் கவச குண்டலமும் உயர்மணியும் வாங்கிக் கொண்டு போகப் பெரும் பாவம் ஒட்டாது. ஆதலின், என்பக்கல் ஒரு வேல் வாங்குவாயாக என்று பின்னும் யாது சொன்னான் தேவர்கோன்: (உஅசு)

287. இந்தவேல் கொள்ளுநீ யாவரே யாயிடினு
முய்ந்தொழியா வண்ண முயிர்கொள்ளு—மந்தமில்சீ
ரங்கத்தார் கோவே யமரர்கோ னுனக்குத்
தந்தவேல் கொள்ளாய் சமைந்து.

எ - து. நன்றியோடும் தருகின்ற வேல் கொள்வாயாகில் இந்த வேல் மூக்கடவுளராலும் வெல்ல வொண்ணாது; யாவராயினும் எதிர்ந்தார் ஒருவர் மேல் விட்டால் அவருயிர் உண்டல்லது மீளாது; ஆதலால் இந்த வேலை மறுது கொள்வாயாக எனக்கேட்டு யாது சொன்னான் கன்னன்: (உஅஎ)

288. என்னைக் கொலப்படா தென்றுநீ யென்கரத்தின்
மன்னு[1] மணியணியும் வாங்கினையே—யுன்னாற்
றரப்படுவ துண்டாகிற் றார்வேந்தே யென்பால்
வரப்படுமோ வென்றான் மகிழ்ந்து.

என்னை யாவராலும் போர்க்களத்து வெற்றி கொள்வது அரிதென்றெண்ணி என் காதிற் கவச குண்டலமும் கையில் உயர் மணியும் வஞ்சித்து வாங்கி அருச்சுனனைக் காப்பான் வேண்டி வந்தாய். அப்படிக்குக் குறித்தாரைக் கொன்று தருவதொரு

286. மன்னு — மன்னிய; நிலைத்திருந்த. குடறுணிக்கும் = குடல் + துணிக்கும். துணித்தல் - துண்டாக்குதல். அடல் - வலிமை.

288. வரப்படுமோ - வருவாயோ. தருதற்குரிய நீ பெறுதற்கு வருவாயோ என்றான் என்க. இவை என்னிடம் இருப்பின் சாகேன் என்பதால் அவற்றை வாங்கிக் கொண்ட நீ தரப்படுவதுண்டோ என்று நயத்துடன் மறுத்தானும்.

பா. வே: 1. மணிகுண்டலங்கள்.

வேலுண்டாகில் இதனை அருச்சுனனுக்குக் கொடுத்து அவனைக் கொண்டென்மேல் விடத்தகாதோ? இவ்வகை சீரிய ஆற்றல் உண்டாகில் நீ என்பால் வந்து இரவலனாய்க் கொடை ஏற்கப் படுமோ? என்று அங்கையோ டங்கை தாக்கி மன்னர்களை நோக்கிப் பல பகர்ந்து நகையரும்பி மறுத்துரைத்த கன்னனை நோக்கி யாது சொன்னான் தேவர் கோன்: (உஅஅ)

289. உற்ற விடத்துதவு மூண்மை யோளிநேடுவேற்
கோற்றவனே கோண்ணீ யெனக்கோடுத்தான்—வேற்றி
தானவரை வென்றடக்குந் தண்டார் மதக்களிற்று [மிகு
வானவர்கோ னுள்ள மகிழ்ந்து.

ஏ - து. இந்த வேலின் சீரிய ஆற்றலைப் போர்க்களத்தில் கண்டு கொள்வாயாக என யாவராலும் தடுக்க வரிது கண்டாய் என்று குறித்துப் பேசிப் பின்னும் யாது சொன்னான் தேவர் கோன்: (உஅகூ)

290. [1]மன்ற வமர்க்களத்துண் மாற்றார் தனக்கஞ்சக்
கோன்று தருமிதனைக் கோள்ளென்று —வென்றிபுனை
யங்கர்கோன் றன்கைக் கோடுத்தானே யாங்கவனும்
வெங்கணேடு வெள்வேல் விரைந்து.

என்றிவ்வகை பல பரிசினாலும் தெருட்டி அன்புடன் பேசி மறுத்துரைத்த கன்னனுக்குத் தன் சீரிய வடிவங் காட்டித் திருவுடல் ஒளிசெய்ய ஆயிரங் கண்ணும் குவளைக் காடு போல மலர்ந்து தோன்றிக் கன்னனுக்குச் சிறந்த வேல் கொடுப்ப அவனும் ஏற்றுக் கொண்டு அவன் பணி தலைமேற்கொண் டிடன்பட்டுக் கன்னன் யாது சொல்லி வாங்கத் தேவர்கோன் யாது சொல்லிக் கொடுத்தானோ வெனில்: (உகூ0)

291. [2]பார்த்தன்மேற் பட்டுருவப் பாம்பா மேனமதியாய்
மூர்த்தி யிதுவோப்ப தில்லையென்றான் —பேர்த்து

289. தானவர் - அசுரர்.
290. மன்ற – உறுதியாக. 'விரைந்து கொடுத்தானே' என இயைக்க.
291. மதியாய் – நினையாய். மூர்த்தி: விளி. வீமன்மகன் – கடோற்கசன். படுக – படுவதாக.

பா. வே: 1. அன்றி யமர்க்களத்துண்.
2. பார்த்தனைப் பட்டுருவப் பாராவே நன்மதியோய்.

[1]விடுகின்றவேதியனும் வீமன்மகன் றன்மேற்
படுகென்று கைவிட்டான் பார்த்து.

அன்றியும், (உசுக)

292. வண்டமர்தார் வானவர்கோ னங்கர்கோன் றன்னுடைய
குண்டலங்கைக் கொண்டவன்கை வேல்கொடுத்தே—[யிண்ட
ஞெருவரைக் கொல்லேன் [2]றுரைத்துரைத்துப் போனு
னிருவிசும்பிற் றேவர்கோ னேர்ந்து.

இவ்வகை வீமன் புதல்வன் ஆகிய கடோற்கசனைக் கொன்று வருவாயாக என்று கன்னனுக்குக் கொடுத்து, ஆங்கவனை விட்டுக் கதுமென மீண்டு தேவர்கோன் கண்ணனைத் திருவடி தொழுது உயர்மணி கொடுத்து விண்ணுலகு நோக்கிப் போயினுன் என்றவாறு. இப்பால்: (உசுஉ)

293 இந்திரன் போக வெழிற்குந் தியையழைத்துச்
சுந்தரத்தோண் மாயோனுஞ் சொல்லுவான்—மைந்த
மங்கர்கோன் பாற்சென் றரவிருகா லெய்யாமன் [னேனு
மங்கைநீ வேண்டாய் வரம்.

இவ்வகை கண்ணன் அருளிச் செய்யக் கேட்டு யாது செய்தாள் குந்திதேவி: (உசுங)

294. விண்ணவர்கோன் வேல்கொடுத்துப் போக வியன்குந்தி
மண்ணகத்தை யாள்வான் வரம்வேண்டித்—திண்ணம்
வரங்கொள்வா னங்கர்கோன் மாளிகைவாய்ச் சென்று
டருங்கண்ணீர் மூன்சோரத் தான்.

இ - ள். குந்திதேவியும் உடன்பட்டுக் கண்ணன் பணியினுல் விடை கொண்டு புதல்வன் என்னும் சொல் கேட்டுப் பொருக்கென மகிழ்ந்து தளர்ந்த மனத்தளாய்ப் போய் அங்கர்கோன் கன்னன் கோயில் வாயிற் குறுகி வாயிற் காவலரை நோக்கி யாது சொன்னுன் குந்திதேவி: (உசுச)

---

293. அரவு – பாம்புக்கணை. இரு கால் - இரண்டுமுறை.

பா. வே: 1. விடுகென்ற.
2. றுணர்ந்துணர்ந்து.

295. அண்டத் தலர்கதிரோன் புத்திரனு யாடரவத்
துண்டத் துகிற்கொடியோன் றேழனுமா-யெண்டிசையும்
வண்மையான் மிக்குயர்ந்த மன்னவனுக் கேன்வரவு
[1]திண்மையாற் சென்றறியச் செப்பு.

என்று இவ்வகை குந்திதேவி சொல்லக் கேட்டுக் கதுமெனக் கோயில் வாயில்காவலருங் கோயிலுட் புகுந்து குலவேந்தன் அங்கர் கோனைக் கண்டு யாது சொன்னரோ வெனில்: (உகூரு)

296. கண்டத்தி லிட்ட கலிங்கத்தாள் கால்வருந்த
மண்ட நடந்து மனம்வாடிக்—கொண்டனிகர்
கையானே யுன்றன் கடைத்தலைநின் றுளென்றார்
மெய்யானைக் கண்டு விரைந்து.

அன்றியும், (உகூகூ)

297. சந்தார் திரடோட் டருமற்குந் தம்பியர்க்குங்
கோந்தார் விசயற்குங் கோமாதா—வந்தா
டிருமக டான்புல்குந் திண்ணியபோற் றேளாய்
வருமாறு செப்பாய் மகிழ்ந்து.

எ - து. தருமன் முதலானவர் தாய் எழுந்தருளி வாயிற் கடையின்கண் நின்றுள்; மற்று அவள் வருவதென் கொலோ? என வாயிற் காவலர் சொல்லக் கேட்டுக் கதுமென எழுந்திருந்து இருக்கை விட்டு நீங்கி யாது சொன்னன் கன்னன்: (உகூஎ)

298. [2]மன்னர் குருநாடர் மாதாவின் றேன்பக்க
லென்ன வெழுந்தருளி [3]வந்தாராற்—சென்னி
செருப்படுதோ [4]ளார்பணிந்த சேவடியைக் காண
வொருப்படுவே மென்று னெழுந்து.

---

296. கண்டம் - கழுத்து. கலிங்கம் - ஆடை. மண்ட நடந்து - மிக நடந்து. கொண்டனிகர் - கொண்டல் + நிகர்.

297. சந்து - சந்தனம். ஆர் - நிரம்பிய. கொந்து - பூங்கொத்து. புல்கும் - தழுவும்.

298. சென்னி செருப்படு தோளார் - பகைவர் தலைகளைப் போரில் பட வீழ்த்தும் தோளுடைய பாண்டவர். ஒருப்படுவேன் - உடன்பட்டேன்.

பா. வே: 1. திண்மையாச்.
2. மன்னு குருநாடர் மாதா வெனதுபக்கல்.
3. வந்தாரேற். 4. ளாற் பயந்தார்.

இவ்வகை கன்னன் குந்திதேவி வரவு கேட்டு மகிழ்ந்து 'பாண்டவர் தாய், எமக்கும் அவர்க்கும் உலகத்திற்கும் தாய் அன்றோ' என்று உலகியல்பு கூறி, எதிர்சென்று காண்பானாகச் சிறிதிடஞ் சென்று ஒரு தனி மண்டபம் எய்தி இனிதிருந்து வாயிற் காவலரை நோக்கி யாது சொன்னான் கன்னன் : (உகஅ)

299. வருக வரவிடுமின் வந்தேன்னைக் காண
[1]வோருதனிக்கோ யிற்புறத்தே யென்று—திருவணையக்
குந்திதனைக் காண வெதிரேழுந்து கைதொழுதான்
மூந்தியவள் காண்பதற்கு முன்.

எ - து. கடிதாக எழுந்தருள விடும் எனக் காவலரைப் பேர்க்கித் தானும் எதிர் செல்லும் அளவில் வாய்மை நோன்பினராய் உள்ள ஐவரையும் மற்று அங்கர் கோனையும் புதல்வனாகப்பெற்ற உலக அன்னை குந்திதேவியை எதிர்வரக் கண்டு அருள் கூர்ந்து ஏற்று எதிர் செல்லும் எல்லைக்கண் யாது நிகழ்ந்ததோவெனில் : (உகக)

300. [2]குறைந்தாழ்ந்த சிந்தையளாய்க் குந்திசென் றெய்த
விறைஞ்சா முடியா னிறைஞ்சச்—சிறந்த
முலைக்கண்கள் பாலரும்ப நின்றாண் முகத்து
மலர்க்கண்க ணீரரும்ப வந்து.

இவ்வகை மகனைக் கண்டு மகக்கவலை யெய்தி மனந்தளர்ந்து கண்ணீர் பாய வணங்குகின்ற உடலோடும் முலைக்கண்கள் பால் பாயக் கவன்று நின்றாளைக் கண்டு, கன்னனும் வணங்கி அவளைத் தன் கோயிலுட் கொண்டுபோய் மணியிருக்கையில் இருத்தி ஆலவட்டம் புடையிரட்டத் திருவடி கழுவி அரிவையரால் திருவடி வருடுவித்து வழிவருத்தந் தீர்த்துச் சிறிது பொழுது எண்ணியிருந்து பின்னை யாது சொன்னான் கன்னன் : (௩௦௦)

301. செம்மையான் மண்ணாண்ட தேர்வேந்தன் மாதேவி
வண்மை யுடைத்தருமன் மாதாவே—யம்மே

---

299. "அக்குந்தி தனை எதிர் காணத் திருவணை எழுந்து" என்றியைக்க. திருவணை – அரியணை.

300. இறைஞ்சா – வணங்காத.

பா. வே: 1. ஒரு தனியிற் கோயிற் புறத்துத் - திருவனைய.
2. குறைதாழ்ந்த.

திருந்தியநின்[1] பொற்கமலச் சேவடிக ளேவ
வருந்திமிக வந்தவா மற்று.

(௩௦௧)

அன்றியும்,

302. சீரடிக ளேவச் சிவந்து மிகத்துவண்டு
போரடருஞ் சோலைப் புனலூடர்—மாதாவே
[2]யென்னடந்த வாறின் றெனக்குரைமி னென்றுரைத்
மின்னடைந்த வேலான் வியந்து. [தான்

(௩௦௨)

அன்றியும்,

303. ஆராத வன்பி னடிக ளடியேன்பால்
வாராதீர் வந்தவா றென்கொலோ—சீராரும்
பாண்டவர்க ளேவலோ பாரளந்தா னேவலோ
[3]வாண்டகையாய்ப் போந்த தருகு.

இவ்வகை யேத்தி இன் சொற் பல கொடுத்து எம்பெருமாட்டி நீர் என்பக்கல் எழுந்தருளி யறியாதீர் இன்று எழுந்தருளியது என் என்று பலபடியாலும் கன்னன் வினவக் கண்டு விம்மி விம்மி வெய்துயிர்த்து யாது சொன்னாள் குந்திதேவி : (௩௦௩)

304. ஒற்றைத் திகிரி யோளியோற்குத் தான்பயந்த
கோற்றக்[4] குமரனிவ னுமாறு—மற்றவடான்
மாலுரைத்த வண்ணமெலா மைந்தற் கெடுத்துரைத்தாள்
பாலுரைத்த சொல்லாள் பரிந்து.

---

301. தேர்வேந்தன் - பாண்டு. மாதேவி, மாதாவே, அம்மே என்பன விளிகள்.

302. போரடருஞ்சோலை - ஒன்றையொன்று போரிட்டுக் கொண்டு வளர்ந்து செறிந்த சோலை. "என் நடந்தவாறு; உரைமின்".

303. வாராதீர் - முன்னென்றும் வாராதீர். ஏவல் - கட்டளை. பாரளந்தான் - கண்ணன். ஆண்டகையாய் - துணிந்து. தன்பால் வந்தது அன்பால் அன்று என்பானாய் "ஏவலோ? ஏவலோ?" என்று வினாவினான்.

304. திகிரி - சக்கரம். பால் உரைத்த சொல்லாள் - பாலே உரைத்தாற்போன்ற சொல்லுடைய குந்தி.

பா. வே: 1. பொற்பான சேவடிக. 2. யென்னடைந்த.
3. வாண்டகையாய். 4. குருக்குமர.

எ - து. தான் கன்னியாயிருக்கின்ற காலத்துத் துருவாச மாமுனி வந்தவாறும் அவனைத் தான் வழிபட்டவாறும், அவன் விரும்பி ஐந்து மறைமொழி அருளியவாறும், அம்மொழியின் ஆற்றல் காண்பதற்குக் கதிரோனை நோக்கி மறைமொழி உரைத்த வாறும், அவன் அப்படியே தோன்றித் தன்னை ஒக்கும் ஒளி யுடையான் ஒரு புதல்வனைக் கவச குண்டலங்களோடு தந்தவாறும் தான் மறித்து நின்றவாறு கண்டு குந்திபோசன் தொடக்கத் தார்க்கு வடுவாம் என்று தன் தாய் தந்தையர் இகழ்ந்து 'மரபுப் பழி இது; கன்னியாயிருந்த காலத்துக்கு இஃது ஏலாது' என்று பழித்துரைக்கையில் ஒரு மிதவைப் பேழையினுட் செறித்து நடு யாமத்தில் பேராற்றிடை ஒழுக்குவித்தவாறும் இவ்வகை முன்னே நிகழ்ந்தனவெல்லாம் எடுத்துரைத்துப் பின்னும் யாது சொன்னாள் குந்திதேவி : (௩0௪)

305. உன்னை வருவித் துணரா வகைதேரிந்திட்
டின்ன பிறப் [1]புணர்தி யேந்திழையா—யென்ன
விதுவேலா மாய னெனக்குரைத்தான் கண்டாய்
மதுவுலாந் தாரினாய் வந்து.

என்றிவ்வகை குந்திதேவி கூறக்கேட்டுக் கன்னனும் மகிழ்ந்து முறுவலித்து யாது சொன்னானோ வெனில் : (௩0௫)

306. பொய்யுரைத்தே னல்லேன் புவிபுரந்த பாண்டுவின்றன்
செய்ய திருத்தேவி செப்பக்கே—ளைவர்
தமக்குத்தா யானாற் றடங்கண்ணாய் மற்று
மெமக்குத் தாய் வேறுண்டோ வின்று.

அன்றியும், (௩0௬)

307. அன்னையென வந்தென்னை யைவர்க்கு முன்றோன்ற
லென்னுமிது மெய்யாக வெண்ணுவரோ—மின்னுந்
துடியிடையாய் வேண்டுவது சொல்லிக்கே ளென்றான்
படிபுகழு மங்கர்கோன் பார்த்து.

---

305. மதுவுலாம் - தேன் ததும்பும்.
306. இன்று - இல்லை.
307. துடி - உடுக்கை. படி - உலகம்.

பா. வே : 1. புணர்த்தி.

எ - று. பாண்டவர் ஐவர்க்கு அன்னையானவர், எமக்கும் எல்லோர்க்கும் அன்னை அன்றோ; இது பொய்மையன்று; வாய்மை சொன்னேன்; இதுவன்றி; எமக்குத் தாய் என்று பேசி இன்று வந்து சொன்னால் இது மெய்யாக யானும் கொள்ளேன்: கேட்டார்க்கும் முறையன்று; ஆதலால் அன்னை என்ன வேண்டுவ தில்லை; யாதாயினும் வேண்டுவது வேண்டிக் கொண்டு போவிராமின் என்று கன்னன் சொன்ன கடுமொழி கேட்டுக் கதுமெனக் கண்ணீர் பாயக் குந்திதேவியும் அவனை நோக்கி 'யான் உன் தாய்; நீ என் மகன்; இஃதுண்மை' என்று கூறக் கேட்டு யாது சொன்னான் கன்னன்: (ங0எ)

308. என்னுடைய தாய்மா ரெனச்சொல்லி வந்தவர்க
டம்மெலும்பு தாங்கினார் தாமில்லை—யெம்முடைய
தாயே படாம்போர்க்கின் மற்றென்னைப் பெற்றெடுத்த
தாயே யெனவுரைத்தான் றான்.

எ - று. இந்தப் படாம் தேவர்களாலே வழிபடப்பட்டது. இது பொய்யன்று; வாய்மையே கண்டீர்; ஈங்குக் கிடக்கப்பட்ட வெள்ளெலும் பெல்லாம் முன்னம் எனக்குத் தாய்மார் என்று வந்த பெண்கள் பலர்க்கும் 'இந்தப் படாம் போர்த்து வெளிப்பட்டு அறிவிப்பீரா' மென்று படாம்கொடுப்ப அவரும் இப்படாத்தின் ஆற்றல் அறியாது போர்த்துக்கொள்ள அதுவும் எரித்து உடல் இழந்து வெள்ளெலும் பானார்கள்; ஆதலால், அவர்களைப்போல நீரும் படாம் போர்த்து உம்முடைய சீரிய ஆற்றலால் பின்பு உடல் பெற்றீராகில் எமக்கு அன்னை என்று சொல்லிக், கதுமெனப் 'படாம் கொண்டு வா' வென்று கையில் வாங்கிக்கொண்டு, பின்னும் யாது சொன்னான் கன்னன்: (ங0அ)

309. இக்கிடந்த மாதரைப் போனீரு மிதுபோர்த்துத்
தோக்க வுடம்பிழந்து சோராதே—மிக்கதுதான்
வேண்டிக்கொண் டும்முடைய [1]வீடே நடவுமென்றான்
றூண்டித்தேர் வல்லான் றேடர்ந்து.

---

308. படாம் - போர்வை.

309. இக்கிடந்த - இங்கே ஊன் ஒழிந்து எலும்பாய்க்கிடந்த. தொக்க - வனப்பெலாம் திரண்ட. மிக்கது - உள்ளத்தில் மிக்குத் தோன்றும் பொருள்களெல்லாம். நடவும் - செல்லும். தூண்டி - விரைந்து. 'வீடே தூண்டி நடவும்' என்றியைக்க.

பா. வே: 1. வீடு நடவுமென்றான்.

இவ்வகை இந்தப் படாம் போர்த்த மாதர்கள் பலரும் தம் உயிர் கொண்டு தம் பதி புக்காரில்லை; நீரும் இது செய்யாமல் வேண்டும் நிறையணிகலன்களும் நிறைமாநிதியும் ஒன்பான் மணிகளும் ஈண்டன் வாங்கிக்கொண்டு எழுந்தருளுமின் எனக் கேட்டுத் தெய்வப் படாத்தை எடுத்துக் கொண்டு யாது சொல்லி யாது செய்தாள் குந்தி தேவி : (௩0௯)

310. பெற்றவுடம் பன்றாகி லென்னுடலைத் [1]தின்னீயென்
றற்ற படாத்துக் குறவுரைத்து—மற்றதனைச்
சென்றெடுத்துப் போர்த்திருந்தா டேர்வேந்தன் றன்மூன்
நன்றெடுத்த சொல்லா ணயந்து. [னே

எ - து. நான் கதிரோனுற் பெற்ற புதல்வன் அல்லாத பொழுது என்னுடம்பை அரிந்து தின்னென்று படாத்துடன் வாய்மையுரை பேசிப் படாம் போர்த்துத் திட்டத்தாலுள்ள மூன்றே முக்கால் நாழிகையும் பொறுத்து நாலா நாழிகையிற் படாம் நீக்கிப் பார்வேந்தன் முன்பாகப் பத்துப் படியாலும் உருகோடிய பொன் போலும், கதிரொளிபோலவும் ஒளிவிட்டெறிந்து விளங்கா நின்ற குந்திதேவியைக் கண்டு வியப்புற்றுத் தன் அருகிருந்த அனைத்து அரசரும் தானும் எழுந்திருந்து நின்று எல்லையில்லாததோர் மகிழ் வெய்தி யாது செய்தான் கன்னன் : (௩க0)

311. தன்னுடைய முன்னே படாம்போர்க்கத் தார்வேந்த
னென்னுடைய மாதா விவளென்று—நன்னுதலாள்
பொன்னடிமேல் வீழ்ந்தானைப் பொற்றடக்கை
தன்மடிமேல் வைத்தா டளர்ந்து. [யாற்றழுவித்

இவ்வகை கண்டு எல்லையில்லாததோர் மகிழ்வெய்தி மலரிட்டு வணங்கியது கண்டு கருத்துற்றுத் தன் திருக்கைகளால் தழுவிக் கொண்டு மடிமிசை வைத்து உச்சி மோந்து தன் செம்மலர்க் கண் நீர்பாய விம்மிவிம்மி வெய்துயிர்த்து மிக்க அறிவாலும் வேல் வேந்தர் காண வெளிப்படக்கண்டு பிறப்புணர்ந்த அன்பாலும் விருப்பமுடன் வீற்றிருந்த கன்னனை நோக்கி யாது சொன்னாள் குந்திதேவி : (௩கக)

---

310. தின்னீ-நீ தின்பாயாக. உருகோடிய பொன் - மாற்றுயர்ந்த பொன்.

பா. வே : 1. தின்னுகவென்.

312. உனக்கினிய தம்பிமா ரைவரையு மொன்றி
வனக்கிரிசூழ் மண்ணுள வெண்ணி—யுனக்கிதனைச்
சொல்லுவான் வந்தேன் சுடர்வேலாய் போதென்றாள்
வில்லுலாம் வாணுதலாண் மீட்டு.

அன்றியும், (நகஉ)

313. மண்ணெலாங் காத்தளித்து மன்னரெலாம் வந்திறைஞ்
கண்ணெலாங் காதற் களிகூரப்—பண்ணுலாம் [சக்
பொற்றேரிற் போந்தேறிப் போர்வேந்த ரைவரையுங்
குற்றேவல் கோள்ளாய் குறித்து.

எ - து. மண் மக்கள் மகிழ்ந்துரைப்ப என் கண்ணெல்லாங் களிகூர நின் இளங் குமரரை யேவல் கொண்டு விளங்கு மணி யணையில் துளங்கா முடிவேந்தனாய் வீற்றிருப்பதற்கு நின்னை வேண்டிக்கொண்டு போக வந்தேன் என்று குந்திதேவி கூறக்கேட்டு முடிவில்லாததோர் மகிழ்வுடன் யாது சொன்னான் கன்னன் : (நகந)

314. ஆவி யனையார்க ளைவர்க்கு முன்றோன்றன்
மேவி யனைய வினையேனைப்—பாவியேன்
முன்செய்த தீவினையான் முன்புரையா தின்றுரைத்தீ
ரென்செய்வேன் சொல்லீ ரினி.

எ - து. பாண்டவர்க்கு முன்றோன்றலாய்ப் பாண்டு மக்கள் என்னும்படி ஆண்டகையாயது அறிந்திலேன்; என்பால் அருவினை நின்று அகற்றுகையால் நீரும் முன்னமே அறிவித்திலீர்; முடிவிற் காலத்தறிய வுரைத்தீர்; இதற்கு என்ன வண்ணஞ் செய்வேன் என்று இருநிலத்து மிசைமயங்கி வீழ்ந்து, பின்னும் யாது சொன்னான் கன்னன் : (நகச)

315. இன்று னெனவறியா வென்னை முடிகவித்து
மன்னர் வணங்க வரசியற்றிப்—பின்னையுந்

---

312. ஒன்றி - கூடி. வனம் கிரிசூழ் - காடும் மலையும் சூழ்ந்த. போது - வருக. வில்லுலாம் - வில்லெழுந்தது போன்ற. என்றது புருவத்தை. வாள் நுதல் - ஒளியுடைய நெற்றி.

313. பண்ணுலாம் – சிறந்த வேலைப் பாடமைந்த; இசைகனிந்த என்றுமாம்.

314. ஆவி - உயிர். தோன்றன்மேவி - தோன்றி.

தன்னெச்சி லுண்ணாத் தகைமையான் றானுண்டா
னென்னெச்சி லென்றோ டினிது.

அன்றியும், (௩௧௫)

316. கோன்னவிலுந் தேர்ப்பாக னென்று குலம்பேசி
யென்னைப் பலரு மிகழ்ந்துரைப்பப்—பின்னையுந்தா
னென்னெச்சி லென்றோடு முண்டானை யெங்ஙனே
யுன்னச் சிழப்பே னுரை.

எ - று. தேர்வல்வன் மகனென்று என்னை மன்னர் பலரும் இகழ்ந்துரைப்ப மற்று அவரை முனிந்து என்னுடன் இன்னடிசில் உண்டு என்னை மன்னர் வணங்க முடிகவித்த மன்னர் மன்னனை எங்ஙனே நான் விடுவேன் என்று பின்னுஞ் சொல்லுவான் கன்னன் : (௩௧௬)

317. மருவார்வண் டாரான் மணிமுடியான் செய்த
வருடா னறியாதா ரில்லை—தெருளா
வழிகோடா வாறே யடு[1]களிற்றாற் காகிற்
பழிகடாஞ் சாலப் பல.

என்று பின்னுஞ் சொல்லுவான் கன்னன் : (௩௧௭)

318. மதமா மழகளிற்றான் மற்றெனக்குச் செய்த
வுதவி யுலகறியு மன்றே—யுதவிதனை
நன்றுசெய்தோர் தங்களுக்கு நானிலத்தி னல்லோர்கள்
குன்றுவதோ செய்ந்நன்றி கூறு.

என்றிவ்வகை சொல்லிப் பின்னுஞ் சொல்லுவான் கன்னன் : (௩௧௮)

---

315. முடிகவித்து - முடிசூட்டி. துரியோதனன் நட்பின் மாண்பைத் "தன்னெச்சில்.....இனிது" என்றான்.

316. கோன்னவிலும் - தற்பெருமை பேசித்திரியும். உன்னச்சு இழப்பேன்; 'உன்னைச்சு இழப்பேன்' என்பது இவ்வாறு திரிந்து நின்றதாதல் வேண்டும்; உள் விருப்பம் எவ்வாறு இழப்பேன்.

317. மரு - மணம். அருள் + தான் - அருடான். தெருளா - தெளிந்து. வழி கோடாவாறு - உதவாவண்ணம். அடுகளிற்றாற் காகில் - துரியோதனனுக்கு ஆகி விடுவேன் ஆனால். பழிகடாம் = பழிகள் + தாம். சால - மிக.

318. "நன்றி செய்தோர்க்கு நன்றி குன்றுவதோ கூறு"

பா. வே: 1. களிற்றார்க்.

319. பன்மணிகள் சிந்திப் பரந்து கிடந்ததுகண்
டின்மணிக் கேன்புகுந்த தென்னும—னன்மணியைக்
கோக்கோ [1]பொறுக்கவோ வென்றானுக் கென்னுயிரைப்
போக்கா தொழிவேனோ புக்கு.

அன்றியும், (௩௧௯)

320. மைத்தடங்கண் மாதேவி வார்துகிலை யான்பிடிக்க
வற்று விழுந்த வருமணிகண்—மற்றவற்றைக்
கோக்கேனோ வென்றுரைத்த கோற்றவற்கெ னாருயிரைப்
போக்கேனோ வெஞ்சமத்துப் புக்கு.

எ - து. மன்னர் மன்னன் தேவி இலக்கணையும் யானும் ஒரு தனிமண்டபத்து இருந்து சூதாடி நிற்ப, மன்னர் மன்னன் துரியோதனன் விலங்கு வேட்டைபோய்க் கதுமென வந்தது கண்டு மற்று அவளும் போகவென்று எழுந்திருப்பப் போகாமல் தடுக்க வென்று அவள் பூந்துகிலைப் பற்றி யான் பிடித்திட மேகலையணி அற்று மணிகள் நாற்றிசையும் சிந்தியிட்ட வெல்லைக்கண் அடல் வேந்தனும் வந்து என்னை அருகு அணைந்து மற்று இதற்குக் காரணம் என் என்றது அருளுடன் அகமலர்ந்து நகை யரும்பி 'யானும் கோப்பேனோ பொறுக்குவேனோ' வென்ற வேந்தனுக்கு என் நல்லுயிரைப் போர்க்களத்துத் துறப்பேன் என்று பின்னுஞ் சொல்லுவான் கன்னன் : (௩உ0)

321. உந்தமது புத்திரர்க்கா நல்லீராய் வந்தீர்நீ
ரின்றேன்மே லாசை யிலையுமக்—கன்று
வடுவேஞ்சிப் போவிட்டீர் மாண்டேனே லின்று
நடவேன்பீ ராரை நயந்து.

எ - து. உம் புதல்வர்க்கு நல்லீராய் ஒரு காரணத்தாற் போந்தீர் அல்லது, மற்று எனக்கு நல்லீராகில் முன்னமே வந்து என்பால் மருவீரோ என்னுமது நிற்க, அன்று குழவிக்காலத்தே

319. இன்மணி - இல்மணி; மனைவி. நன்மணியை - சிதறிய நல்ல மணிகளை. கோக்கோ - கோக்கவே. புக்கு - போர்க்களம் புகுந்து.

320. வெஞ்சமத்து - கொடிய போர்க்களத்து.

321. புத்திரர்க்கா - புத்திரர்க்காக. நல்லீராய் - நன்மைசெய்வீராய். வடு - பழி. போவிட்டீர் - போகவிட்டீர். "அன்று மாண்டேனேல் ஆரை நயந்து நடவென்பீர்" என்றியைக்க.

பா. வே: 1. பொறுக்குகோ.

வடுவஞ்சிப் போராற்றிடை யொழுக்கிய ஞான்று புதல்வன் என் றுணராது பகைமை கருதினீர்; அன்று மற்று அந்த ஆற்றிடையின் மாண்டவனன்றோ யான்? அஃது ஊழால் வாழ்வேந்தன் திருதராட்டிரன் தேரோட்டி எடுத்து இனிதுடன் வளர்க்க, வண்மையுடன் மன்னர் மன்னன் துரியோதனனும் தோழனுகக் கொண்டு அங்கவள நாட்டுக்கு அரசாக்கிப் பிறநாட்டு வேந்தரும் வணங்கப் பண்ணி என்னையும் இவ்வகை புகழுடையச் செய்தான்; இல்லையாகில் நீரும் வந்து அழைப்பீர் யாரை என்று எடுத்துரைத்துப் பின்னும் சொல்லுவான் கன்னன்: (௩உ௧)

322. நன்றாக மன்ன னெனக்கிந்த நாடறியக்
குன்றாத நன்மை பலகொடுத்தா—[1]னென்றாலு
மீண்டவன் செய்த வுதவியினை யான்மறந்தாற்
றீண்டுவளோ தாமரையாள் சேர்ந்து.

எ - து. மன்னர் மன்னன் துரியோதனன் என்னை இன்னான் என்று அறியாதே இன்னடிசில் உடன் ஊட்டி, மன்னர் இகழாது நிற்க அங்கர்கோன் என்று திருமுடி சூட்டி அங்கநாட்டை எனக் களித்துத் தன் உடன்பிறந்தார் தொண்ணூற்றொன்பதின்மரும் எல்லா வேந்தர்களும் தொழுது இறைஞ்சிக் கீழிருப்பதற்குத் தொலைவிலாத இருக்கை அளித்து, தனிமையில் ஈருடலும் ஓருடலாய் இனிதிருந்தோனுக்கு எப்படியாயினும் பழிபாவம் விளையாமல் காத்து நாடு கொடுத்துப் பின்பு வந்து பாண்டவரை உடன் பிறந்தாரெனக் காண்பேன்: ஆதலால், அதுவன்றித் துரியோதனனுக்கு அலக்கண் விளைந்தவிடத்து மற்று அவனால் முன்னம் செய்யப்பட்ட உதவிக்கு யானும் சிறிது பதிலுதவியாக அவனுக்குப் போர் விளைந்த களத்தில் நிகழப்பட்ட நாற்படைகளோடும் எல்லாப் படைக்கலங்களோடும் அவன்மேல் வரப்பட்ட வினைகளையும் அழித்து, என் ஆற்றலெல்லாம் வஞ்சியாமற் காத்துக்கொண்டு, போர்க்களத்திலுள்ள பகைவரும் பிறநாட்டு வீரருங் காணப் போர்மலைந்து போர்க்களம் விட்டு நீங்காது துரியோதனன் கண்டு களிகூரப் படைக்கலங்களாற் சலிப்புண்டு குருதிப்புனற் குளித்து, யானைக் கோடுகளாற் குத்துண்டு வீர விடுதலை பெறுவதன்றி, மற்று என்னாற் பேசத்தக்கதில்லை யென்று பலசொல்லிக் குந்திதேவியை நோக்கி வணங்கி, உமக்கு வேண்டுவன வேண்டி என்பக்கல் வாங்கிக் கொண்டு ஈண்டன்

---

322. மன்னன் - துரியோதனன். தாமரையாள் - இலக்குமி. என்றாலும் — என்றாயினும்.

பா. வே: 1. னென்றாலு.

எழுந்தருள்வீராக என்று கன்னன் சொல்லக் கேட்டுப் பொறியற்ற கருவிபோல அறிவற்று மயங்கிக் கண்ணீர் மல்கி யாது சொன்னாள் குந்திதேவி : (௩உஉ)

323. [1]உம்பரிக லேறுபோ லுற்றெழுந்த வஞ்ஞான்று
தம்பியரைக் கொல்கை தவிரென்று—னம்பி
யியலாரும் வே[2]லங்க நீயுடன் றன்னைக்
குயிலாரு மென்மொழியாள் கூர்ந்து.

எ - து. நீ உற்றெழுந்த போர்க்களத்தில் வெற்றிகொள்ளு மிடத்து மற்று உன் உடன் பிறந்தார் ஐவரையும் காத்துக் கொள்வாயாக வென்று குந்திதேவி கூறக் கேட்டு யாது சொன்னான் கன்னன் : (௩உ௩)

324. பார்த்தனையான் கோற லவன்கைப் படுதலெனும்
வார்த்தை யுரைசெய்தேன் மனமகிழ—வேற்கும்
பொருவெஞ் சமர்தன்னிற் போந்தெதிர்ந்தான் மற்றுங்
கொருவருந்தா மில்லை யெதிர்.

என்றிவ்வகை அருச்சுனனை யான் கொல்லல், மற்று அவன் கையில் யான் படுதல் இரண்டில் ஒன்று ஆமென்று பிறநாட்டு வேந்தர் பலருங் கேட்கச் சொன்னேன்; இது தவிராது; யானும் அவனுமொழியத் தீங்கு ஒருவர்க்குஞ் செய்யேன் என்று சொல்லப் பொறியற்ற பாவைபோல் அறிவற்று அகங்குழைந்து யாது வேண்டிக் கொண்டாள் குந்திதேவி : (௩உ௪)

325. வெஞ்சரங்கோத் தெய்து விறலழிக்கு நன்மகனே
பஞ்சவரிற் பார்த்த னுடன்மலைந்தா—லஞ்சுதலை
நாக மிருகாற் றொடாதொழிக வென்றுரைத்தா
ளாக முறத்தழுவி யாங்கு.

அன்றியும், (௩உ௫)

---

323. *உம்பர் இகல் ஏறுபோல் மேனாள் நடைபெறும் போரில் வலிய சிங்க வேறுபோல் நீ தோற்றுங்கால் உற்றெழுந்த அஞ்ஞான்று. குயிலாரும் – குயில் போன்ற.*

324. *கோறல் - கொல்லல். படுதல் – இறத்தல். "மற்று எதிர் ஒருவருந் தாம் இல்லை". எதிர் - பகை.*

325. *விறல் - வலிமை. ஆகம் – மார்பு.*

பா: வே: 1. *உம்பரிகல் போலநீ யுற்றெதிர்ந்த.*
2. *லங்கர் நீயுடன்.*

326. வம்பவிழ்தார் மன்னு மணிநெடுந்தேர் மேலேறி
யும்பியரைக் கொண்டுநீ நில்லாயே—லம்பொன்
றிருகாற் றொடாயாக வேண்டுவேனு னென்றாள்
செருகாற் றடங்கண்ணு டேர்ந்து.

அன்றியும், (௩உ௬)

327. என்மக்க ளைவர்க்கு மூத்தா யெழிலுறையு
மின்னுக்கும் மைம்பூண் விறல்வீரா—வன்மைக்கண்
வேந்திறன்மா நாக மிரண்டாவ [1]தெய்யாதி
யிந்தவரம் வேண்டுவேனு னின்று.

அசுவசேனன் என்னும் பெரும்பாம்பு போர்க்களத்தில் அருச்சுனன்மேல் இரண்டாவது எச்சிற் கணையாகத் தொடா தொழிவாயாக என்றுவேண்டிக் கொள்ளக் கேட்டுக் கவலையெய்திப் பின்னும் யாது சொன்னான் கன்னன் : (௩உ௭)

328. இரவலர்க்கு மந்தணர்க்கும் வேண்டுவ[2] தீவே
னரவிருகா லெய்யாமை வேண்டிற்—குரவர்
பணிமாறு [3]கொள்வேனோ கோவேந்தன் பாரி
தணியாது சொல்லென்றான் றன்.

அன்றியும், (௩உ௮)

329. காக மிருகாற் றொடாதொழிய வேண்டுமென்
றாக வுரைத்தீ ரதுகேண்மின்—[4]வேக
மொருகாற் றொடுத்தா லுதுபிழைத்தாற் பின்னை
யிருகாற் றொடா[5]தொழிந்தேன் யான்.

326. உம்பியர் – உன்தம்பியர். கொண்டு – எதிர்கொண்டு. செருகால் – போரிடும்போது. "செருகால் அம்பொன்று இருகால் தொடாயாக வேண்டுவெனால் என்றாள்" என இயைக்க.

327. குரவர் - பெற்றோர். பாரி – மனைவி.

329. வேகம் - நஞ்சு; இவண் நஞ்சுடைய பாம்பைக் குறித்தது. உது பிழைத்தால் - அக்குறிதவறினால்.

பா. வே: 1. தெய்யாமை. 2. தீவோ. 3. கொள்வனோ. 4. வேகத், தொருகாற் 5. தொழிவேன்.

இ - ள். அருச்சுனன்மேல் இரண்டாவது பாம்புக்கணை தொடாது உமக்காகத் தவிர்ந்தேன் அன்னையே யெனக்கேட்டு விரும்பிப் பின்னும் யாது வேண்டிக் கொண்டாள் குந்தி தேவி : (௩உ௯)

330. தருமனொடு வீமன் றனஞ்சயனு மல்லா
லிருவரும்வந் தாங்குன்னோ டேன்று—[1]போருகளத்து
மூட்டிநேர் வந்தாலும் புத்திரனே கொல்லேனென்
[2]றொட்டியான் வேண்டுவேனு லுற்று.

இ - ள். தருமன் வீமன் நகுல சகதேவர் வந்து போர்க் களத்தில் எதிர்த்தாலும் அவரைக் கொல்லாமல் ஒரு வரந் தருவாயாக என்று குந்திதேவி கூறக் கேட்டு நகையரும்பி யாது சொன்னான் கன்னன் : (௩௩௦)

331. பொன்னே யெனைப்பயந்த பொற்கொடியே யின்றுனக்கு
மின்னே ரிடையாய் மறுப்பேனோ—பொன்னுமுன்
பெற்றதாய் வேண்ட மறுத்தா னெனும்வார்த்தை
[3]யுற்றறியாய் நிற்கு முலகு.

அன்றியும், (௩௩௧)

332. பெற்ற வுனக்கரிதோ பேராழி வையகத்து
மற்றொருவர் வேண்ட மருதகான்—கொற்றக்
குடையா லுலகாண்ட கொற்றவன்றன் றேவி
படையான போதின்கட் பார்.

அன்றியும், (௩௩௨)

---

330. தனஞ்சயன் - அருச்சுனன். ஏன்று - எதிரேற்று. ஒட்டி - உறுதிமொழி.

331. எனைப் பயந்த – என்னைப்பெற்ற. ஆய் – தாய். உற்றறியாய் – கேட்டறியாய். "யான் மறுத்தால் அவ்வொன்றே உலகில் நிற்கும்" என்க.

332. ஆழி – கடல். கொற்றவன் - பாண்டு. படையான போதின் - படைகள் எதிரிட்ட பொழுதில்.

1. பொருகளத்துப், பூட்டிநேர் 2. றொட்டியான்.
பா. வே: 3. யுற்றறியா.

333. மற்றவர்க் கெல்லா மறுதேன்னை வாய்த்தவரம்
பெற்ருய் பெறப்பேசல் வேண்டுமோ—கற்றபோர்
வெல்லுங் கணையொருகாற் றொட்டாலு நால்வரையுங்
கொல்லேன் படியொருகாற் கூர்ந்து.

என்றிவ்வகை யெல்லாம் வேண்ட வரங் கொடுத்துக் குந்தி தேவியை நோக்கி யாது சொன்ஞன் கன்னன் : (ஙஙங)

334. அம்மேநீர் வேண்டிற்றுப் பெற்றீ ரதுவீந்தே
னும்மைநான் வேண்டுவதிங் கொன்றுண்டு—செம்மை
யலர்கதிர்வேற் கையா னருச்சுனன்கைப் பட்டான்
முலைதருவீர் பல்லரசர் முன்.

அன்றியும், (ஙஙச)

335. தார்ப்பொலியுந் தோளான் றடஞ்சிலைக்கைப் பார்த்தனுற்
போர்க்களத்தில் யான்மாண்ட போதகத்துத்-தாக்கமருட்
டேர்வேந்தர் காணச் செருக்களத்தே நீர்பருவந்
தார முலைதருவீ ராங்கு.

அன்றியும், (ஙஙரு)

336. போர்க்களத்தில் யான்பொருது பொன்றினு லெம்பியரா
னீர்க்கடனுந் தீக்கடனுஞ் செய்விப்பீர்—[1]சேர்க்கு
மருமலருந் தாரார் மணி[2]முடியார் காண
வுரிமையுடன் செய்ம்மி னுகந்து.

என்றிவ்வகை பேசி, முற்றிய போரில் அருச்சுனன் கையிற் பட்டேனுகில் பிறநாட்டு வேந்தரும் தானைத் தலைவரும் என்னை முன்னஞ் சொல்லும் தேரோட்டி மகனென்று சிதைய உரையாமல் செருக்களத்து வந்து என்னையெடுத்தும் திருவடியில் வைத்துப்

---

333. கணை – பாம்புக்கணை. படி ஒரு கால் கூர்ந்து - நாடு கொள்ளுதலை ஒருவேளை நினைந்து.

334. வேண்டிற்று - வேண்டியதை. தன் மகன் என்பதை உலகறியக் காட்டுமாறு "பட்டால்......முன்" என்ருன்.

335. போதகத்து – போது. பருவந்து – பரிவு கொண்டு.

336. பொன்றினுல் – இறந்தால்.

பா வே : 1. பார்க்குள்.
2. முடியார்க் கான, உரிமையுடன் சேர வுகந்து.

பார்வேந்தரும் படைத்தலைவருங் காணப் பரிந்து உம்பொங்கு முலைப்பாலூட்டி உம் பூந்தடங் கையால் தழுவி அணைத்திருந்து உம் மக்கள் இளங்குமரரால் கடன் கழித்துப் பிறந்த நாளிற் செய்யாதவை யெல்லாம் இறந்த நாளில் யான் பெற்றேனாக வேண்டும் என்று மற்று அந்த அன்னையை மருது வரங்கொண்டு மனமகிழ்ந்த அங்கர்கோனை நோக்கி அகங்குழைந்து மகிழ்ந்து நின்ற குந்திதேவியை நோக்கி மன்றலந்தார் மன்னவன் கன்னன் பின்னையுமொரு வரம் யாது வேண்டினானோ வெனில்: (௩௩௬)

337. **உன்னுடைய மைந்தர்க்கிவ் வுண்மை தனையுரைக்கி**
[1]லன்னவர்கள் பாக மெனக்களிப்பர்—பின்னதனை
யீங்கெனது தோழற்கே யான்கொடுப்பே னாதலா
லாங்கவர்கட் கில்லை யரசு.

என்று இவ்வகை நீர் இந்த உண்மை யெல்லாம் தருமனுக்கு உரைத்தால், அவன் அறிந்தால் பலர் அறியும்; பலர் அறிந்தால் துரியோதனன் அறிவன்; *அவன் உரிமை பிறந்தால் எனக்கு அளிப்பன்; அதனை யான் அவனுக்குக் கொடுப்பேன்; ஆதலால் அவர்க்குப் பின்னை நாடு இல்லை; இது கண்ணன் கேட்டாலும் இஃது உமக்கு நன்மையன்று என்றும் உரைத்து மற்று இஃது அறிவிக்கும் பொழுது யான் பட்டால் அறிவித்துப் பட்டன வெல்லாம் உரைப்பீராக என்றும் விண்ணப்பஞ் செய்து திருவருள் பெற்று அன்னை திருவடி தொழுது விடைகொண்டு மற்று அவன் வாய்மை தலைமேற் கொண்டு போமளவில் மிகக் கவலை யெய்தி அகங் குழைந்து கன்னனை நோக்கி யாது சொன்னாள் குந்திதேவி: (௩௩௭)

338. **முன்செய்த பாவத்தான் [2]மூத்தா யுனைப்பிரித்தே**
னென்செய்தா லிப்பிழைதான் றீருமெனப்—பொன்செய்த
மட்டவிழுந் தாரானை மார்புறவே தானணைத்து
விட்டவளு மீண்டாள் விரைந்து.

இவ்வகை யுரைத்துத் தன் புதல்வனைத் தழுவிக் கொண்டு விட்ட பின்பு, பின்னும் யாது சொன்னாள் குந்திதேவி: (௩௩௮)

---

338. பொன் - அழகு. மட்டு அவிழும் - தேன்வழியும்.

* அவன் என்றது தருமனை.

பா. வே: 1. லென்னவர்கள். 2. மூதா.

339. பாராளும் பாண்டவர்க்காய்ப் பாவியே னென்மகனைக்
கோனாகம் வேண்டிக் கொலைநேர்ந்தே—னானலுந்
தேவர்க்காங் கொல்லோ திரிவில்லா தாங்கொல்லோ
யாவர்க்காம் பாவ மிது.

என்று உரைப்பக் கேட்டு யாது சொன்னான் கன்னன்:(௩௩௯)

340. பாரதத்துட் பட்டேன் படேனாகிற் பாண்டவர்பா
[1]லாதரித்து நான்வருவே னாரணங்கே—சீர்மிகுத்துன்
பொற்கமல பாதம் புரிகின்றேன் போவென்று
னற்றவத்தின் மிக்கோ னயந்து.

எ - து. துரியோதனனோடும் உங்கட்கு மூண்ட பெரும் போரில் மாண்டேனில்லை யாகில் எனக்கு இளைய இளங்குமாரரை வந்து கண்டு மனமகிழ்வேன்; அஃது இல்லையாகில் போர்க்களத்து மாண்டேனாகில் செய்யத் தக்கன இல்லை என்றும் இதற்கெல்லாம் இப்பொழுதே உம் திருவடிகளைப் பணிந்தேன் என்று திருவடியில் வீழ்ந்து வணங்கிக் குந்திதேவியை எழுந்தருளுவித்துக் கன்னனும் எல்லையில்லதோர் மகிழ்வுடன் விடைகொண்டு தன் கோயில் நோக்கிப் புக்கான் என்றவாறு. இப்பால் குந்திதேவியும் யாது நினைந்து போயினாளோ? வெனில் : (௩௪0)

341. மல்லுயர் தோட்பார்த்தன் மாய னுடனிற்கக்
கொல்லு மிவனை யெனக்குலையா—நல்ல[2]மழைக்
காராரும் பூங்குழலாள் காதலோடு கண்ணிணைக
ணீராரப் போனா ணினைந்து.

அன்றியும், (௩௪௧)

339. கொலைநேர்ந்தேன் – கொல்ல உடன்பட்டேன். தேவர்க்காம் கொல்லோ - தெய்வத்திற்கு அடுக்குமோ? திரிவு இல்லாது ஆங்கொல்லோ – இந்நிலையில் மாறுதல் இல்லாதே அமைந்து விடுமோ?

340. பாரதம் - போர். ஆதரித்து – அன்புடன்.

341. குலையா – குலைந்து. நீராா – நீர்வழிய.

பா. வே: 1. லார்வமொடு. 2. மலர்க்.

342. வென்றிநெடு வேல்விசயன் [1]வெங்கணைகள் வேறாக
வென்று மிகுகாற் றேடானுக்கிச்—சென்றங்கோர்
கோயிற் குறுகிக் குலமாலுக் குற்றுரைத்தாள்
வேயனைய தோளாள் விரைந்து.

எ - து. கன்னன் பக்கற் போய்ப் பிறப்புணர்த்தி மாமாயன் சொற்படியே மகனை வஞ்சித்துப் பாம்புக்கணையும் தடுத்துத் தன் மனக்கருத்தினால் வேண்டிக் கொண்டவாறெல்லாம் கண்ணனை வந்து கண்டு மனக்கருத்து முற்றுவித்தேன் என்று விண்ணப்பஞ் செய்து தேவதேவன் மாமாயை வல்லான் கண்ணனை விடை கொண்டு தன் மலர்க்கண் மழையரும்பப் போந்தாள் குந்திதேவி என்றவாறு. இப்பால் கண்ணன் நிலைமை யாதாயிற்றேவெனில்: (ஙசஉ)

343. ஏனைநடு வாக வெழின்மணித்தேர் பின்னாகச்
சேனையை முன்னே செலப்பண்ணி—வானவர்முற்
றன்னெடுந்தே ரேறினான் றாரணிமேன் முன்னொருகால்
வன்னெடும்புள் வாய்பிளந்த மால்.

அன்றியும், (ஙசங)

344 [2]வரியரவிற் றிண்கோடியான் வஞ்சனையை வென்று
பரிவாரப் பார்வேந்தர் சூழ—முரிப ணையின்
முரிக் கோடியான் முழங்கோலிமா நாடனைந்தான்
மாரிக் கொடிதடுத்த மால்.

அன்றியும், (ஙசச)

345. நாடு பலகடந்து நன்னெறிக ணீங்கீப்போய்க்
காடு மலையாறுங் கைகடந்து—கோடாத
செங்கோ னடத்துந் தருமனகர் சென்றடைந்தா
னங்கோத வண்ணன்போ யாங்கு.

---

342. வேய் – மூங்கில்.

343. புள்—பறவை. ஏனை – மற்றைத் தேர்கள்.

344. பரிவாரம்—படை. முரிபணை – வளைந்த முரசு. முரசக் கொடியான் - தருமன். மாரிக்கொடி - மழையின் ஒழுக்கு.

345. கோடாத—வளையாத. ஓதம்—கடல்.

பா. வே: 1. மேற்கணைகள். 2. வரியரவத் திண் கொடியான்.

எ - து. விதுரன் எல்லையில் தான் எழுந்தருளியிருந்த பூங்காவிட்டு நீங்கி இரண்டு நாள் தங்கி மூன்றும் நாள் உபலாவிய நகரம் சென்று சேர்ந்து மருவுமளவில், கண்ணன் எழுந்தருளுமது கண்டு தருமனும் உடன்பிறந்தார்களும் விராடனும் பாஞ்சாலனும் மற்றுமுள்ளாரும் எதிர்கொண் டடிபணிய எம்மருங்கும் படை புடை சூழ, வெண்குடை மேனிழற்ற, எழின் மணிக்கவரி அருகிரட்ட, கலுழக்கொடி விசும்பணுவ சங்குபேரிகை முதலாயுள்ள இசைக் கலன்களும் ஐம்பேரொலிகளும் முழங்கத் தருமன் முதலானவர்க ளுடன் மிக விருப்பான இனிமைபேசி மற்றுங்கவரு மதற்கிரட்டி புடைசூழ உபலாவிய நகருள் எழுந்தருளித் தன் மணி நெடுங் கோயில் சென்றெய்தி அவைக்களத்து அனைத்து வேந்தரும் புடை சூழ அரியணைமிசை வீற்றிருந்தான் கண்ணன் என்றவாறு. இவ்வகை பாண்டவரும் பிறநாட்டவரும் வழிபாடு செய்து கவலை தீர்ந்து தெளிவுற்றினிதிருந்த விடத்துச் சிறிது பொழுது கழித்து அத்தினபுரத்துப் பிறந்த செய்தி கேட்டு வினவக் கண்டு திருப் புன்முறுவல் செய்து தருமனை நோக்கி யாதருளிச் செய்தான் கண்ணன் : (௩௪௫)

346. நாகக் கொடியானைக் கண்டதுவு நன்னெடுந்தேர்
மேகக் கொடியான்றன் வில்லிறப்பும்—பாகத்தா
[1]லைந்தூர்கள் வேண்டினதும் வேண்ட மறுத்ததுவு
நஞ்சூரச் சொன்னு னயர்ந்து.

அன்றியும், (௩௪௬)

347. கொற்ற வரவுயர்த்தோன் கோயிற்க ணின்றுபோய்
வெற்றி விதுரனகத் துண்டமையும்—பெற்றிமிகு
மாதாவைக் கண்டுமனந் தேற்றியது [2]மற்றதுவும்
வேதா திபனுரைத்தான் மிக்கு.

அன்றியும், (௩௪௭)

348. வாளிரவி மைந்தன் மணிக்கவச குண்டலங்கள்
கோளறவே [3]தானேவக் கொண்டமையு-மாமறையோன்
செம்மை யுரைத்ததுவுந் தேர்வேந்தற் குற்றுரைத்தா
னுண்மகிழ் வாழியா[4]னுற்று.

346. மேகக் கொடியன்—விதுரன். நஞ்சு + ஊர = நஞ்சூர.
347. வேத அதிபன்—வேதத்தின் தலைவன்; கண்ணன்.
348. கோள் அற – வலியழிய. ஆழி – சக்கரம்.

பா. வே: 1. லஞ்சூர்கள் 2. மற்றவற்றை, வேதாதியன்.
3. தானேவிக் 4. னோர்ந்து.

(௩௪௮)

அன்றியும்,

349. கொன்னவில்வே ணாகக் கணைதடுப்பக் குந்திதனைக்
கன்னனிடை விட்டதோகு காரணமு—முன்னி
வருவார் தமக்கருள வத்திகிரி மன்னும்
பெருமா னுரைத்தான் பெயர்ந்து.

எ - து. தேவதேவன் பாண்டவர்க்குத் தூதாகத் துரியோதனன் இடைக்குப்போய் மற்றவனை யற்றைக்குக் காணாது விதுரனகத்து விருந்துண்டமையும், மற்றை நாட்காலத்தாலே துரியோதனனைச் சென்று கண்டவாறும், பாதிநாடு வேண்ட உடன்படாதிருந்தானை ஐந்தூர் வேண்ட மறுத்தவாறும், மற்று ஆங்கிருந்த வீடுமர் துரோணர் விதுரரும் உரைத்த அறநெறியும், அதுகண்டு தன் சிறிய தந்தையாகிய விதுரனைப் பார்வேந்தன் துரியோதனன் முனிந்து செருக்குரைத்தவாறும், அதுகண்டு விதுரன் தன் சீரிய வீரவில்லை முரித்துப் போர் புகுதாமற் போனவாறும், அது கண்டு வீடுமன் நடுவுரைத்த நன்மொழியும், அவ்விடத்துக் கன்னன் பேசிய திறவுரையும், அதுகண்டு துரியோதனனும் துச்சாதனனும் சகுனியும் இருந்த வெறுப்பு நிலையும், அதுகண்டு கதுமெனப் போய்க் குந்தி தேவி கோயிற் சென்று மற்றவனுக் குற்றுரைத்தபட்டாங்கும், பின்னுமொருபரிசு துரியோதனன் அழைத்து வஞ்சங் கருதி மணியிருக்கை இட்டவாறும், அதனுண் மல்லரும் அரக்கரும் வைத்தவாறும், அதுகண்டு தருமன் உரைத்து விட்ட உதவி நினைந்து மற்றவன் செய்யப்பட்ட பெருமாயையும், கொடுமையும் பொறுத்துப் பிற நாட்டவர்க்குச் சான்றுரைத்த வாறும், அவ் விடத்திற் றோன்றிய தீக்குறி கண்டு கதுமெனப் போர் வேண்டிப் புரிந்தவக் கோயில் விட்டு நீங்கிப் போந்து கன்னன் கருத்தறிந்தவாறும், துரோணர் மைந்தன் அசுவத்தாமனைப் படைத்தலைமை தடுத்தவாறும், சிறிதிடம் போந்து கன்னன் இறலழிக்கக் கண்ணாயிரமுடையான் தேவர்கோனை விடுத்துக் கவச குண்டலம் வாங்கினவாறும், அதன்பின்பு உயர்மணியும் அவனைக் கொண்டே யகற்றியவாறும், அதன்பின்பு கொற்றவேந்தன் அன்னை குந்திதேவி பணியினால் வெற்றி புரிந்த பாம்புக்கணை தடுத்து உறுதி கொண்ட வாறும், மற்றுமுள்ள செய்திகளும் தருமனுக்கு அமைதி தோன்ற எடுத்துப் பேசி எல்லையில்லதோர் மகிழ்வெய்தி இனிதிருந்த கண்ணனை நோக்கித் தருமனும் வீமன் அருச்சுனன் நகுலன் சகதேவன் விராடன் பாஞ்சாலன் ஆகியோரும் எல்லையில்லதோர் மகிழ்வெய்தி நின்று யாது விண்ணப்பஞ் செய்தாரோவெனில்: (௩௪௯)

349. முன்னி—நினைத்து. திகிரி—சக்கரம்.

350. உலகத் திரு[1]ணீங்க வுன்போகுட்டே யன்றே
நிலனும் விசும்புமாய் நின்று—யுலகுக்
குருவோன்றே யானுய்நீ யுன்னுலே வந்த
திருவன்றே வெங்க டிரு.

என்றுரைத் தினிது பேசிய தருமனைக் கைகவித்து மற்று மேல் வந்த வினைகளெல்லாம் பொறுத்துக் காப்போம் என்றும், இதற்கு ஐயம் வேண்டா வென்றும் அருளிச் செய்து, துரியோதனனோடு உங்கட்கு உறுதியாகப் போர்விளையா நின்றது; இனியுங்களாற் செய்யத்தக்க மகிழ்ச்சிகளை யீண்டன் ஒருப்படுமின் என்றருளிச் செய்திருந்தான் கண்ணனுகக் கருதுவது : (௩௫0)

* 350. எங்கடிரு=எங்கள்+திரு.

பா. வே: 1. ணீங்க லுன்பொருட்டே

வாசுதேவன் தூது முற்றும்.

இப்பால் கண்ணன் போயின பின்பு திருதராட்டிரனுங் காந்தாரியும் ஒரு தனி மண்டபத்து இருந்து கண்ணன் வந்தவாறும், மற்றவன் செய்த இடையூறும் பெருமாயையும், ஆங்கவன் உதவியும் அறிந்து அஞ்சிய மனத்தராய்த் துரியோதனனை அழைத்துவிட்டு யாது சொன்னாள் காந்தாரி :

351. மாய னெழுந்தருளி வந்தக்கால் மற்றவர்க்குத்
தாயங் கொடுக்கை தரமன்றே—நீயா
யொருகுலத்தார் கூடி யுலகாள்வ தன்றே
குருகுலத்தார் கோவே குணம்.

எ - து. தருமனுக்கு உரிமை வேண்டிப் பெருமாயனாகிய கண்ணன் எழுந்தருளினால் மற்றவர்க்கு நாடு கொடாது மறுத்துரைக்குமது குருகுல மரபார்க்கு இயல்பன்று கண்டாய் என்று காந்தாரி சொல்லக் கேட்டு யாது சொன்னான் துரியோதனன் : (௩௫௧)

352. எல்லா மிழந்திடினு மின்றேன் னுயிர்விடினு
மல்லார்தோண் மன்னரெலா மாண்டிடினு—நல்லாளே
பண்விடா மென்மொழியாய் [1]பாண்டவர்க்கியா னுள்
மண்விடே னென்றான் மறுத்து. [ளளவு

என்றிவ்வகை துரியோதனன் சொல்லக் கேட்டு யாது சொன்னான் திருதராட்டிரன் : (௩௫௨)

353. பஞ்சவர்கள் பாகங் கொடாயாகிற் பார்வேந்தே
விஞ்சவே மாய னுடன்விசயன்—செஞ்சமத்துப்
பொன்றிவிழச் செற்றிந்தப் பூமியிடை மாளாதே
நன்றியுட னல்காய் நயந்து.

எ - து. பாண்டவர்கட் குண்டான பங்குரிமை கேட்டுக் கண்ணன் எழுந்தருளவும் கொடுத்தாயில்லை; ஐந்தூர் தனையாகிலும் கொடுத்து ஆங்கவரோடும் உடன் கூடி இனிதுடன் ஆள்வது

352. பண்விடா - பண்ணிசையில் சிறிதும் தாழாத.
353. விஞ்சவே - மிகவே. செற்று - அழித்து.
பா. வே: 1. பாண்டவர்கட் கியானுள.

கடனாகக் கருதினேன்; மற்று அப்படிச் செய்யா யாகில், மாயவனை முன்னிட்டுக்கொண்டு அருச்சுனன் ஆண்மையாலும் வீமன் தோள் வலியாலும் தருமன் பொறையினாலும் நாடுமுழுதும் ஆங்கவர்களே ஆள்வர்; முன்னவன் சொற்படியே ஐந்தூர்தனைக் கொடுப்பாயாக என்று திருதராட்டிரன் சொல்லக் கேட்டு மறுத்திட்டான் துரியோதனன். மறுத்திடுதலும் மிகவும் அச்சமும் இரக்கமும் எய்திப் பாண்டவர் வலுவாலும் கண்ணன் துணையாலும் இஃது இழிவல்ல; என்றும் துரியோதனன் முதலானவர்களுக்குப் பழிபாவம் வரும் என்றெண்ணிச் சஞ்சயனை அழைத்துத் தருமன் பக்கற் போவாயாக என்று யாது சொன்னான் திருதராட்டிரன் : (௩௫௩)

354. **தருமற்குந் தம்பியர்க்குந் தாமரையாள் கோக்கும்**
வருவதுதான் காப்பரிதா மென்று—குருபதியைக்
கோனாக வேந்தன்மேற் [1]கோபம்விட்டுப் போகச்சோல்
கானாத காட்டிற் கடிது.

என்றிவ்வகை சொல்லி வருவாயாக என்று சொல்லிப் பின்னும் யாது சொன்னான் திருதராட்டிரன் : (௩௫௪)

355. **ஓதத் தரவணைமே லாழி பலகிடந்த**
வேதத் தருமணியை வேறிறைஞ்சிப்—பேதத்தா
லத்தரும னம்மோ டமர்புரியா வண்ண[2]மவன்
சித்தமது தேறநீ செப்பு.

எ - து. பாண்டவரைக் கண்டு, பின்னைப் பாரடங்கலும் ஓரடியால் அளந்து நீண்டவனைச் சென்று கண்டு நினைவுகளெல்லாம் இயம்பிப் பாண்டவரை வேறுபடுத்திப் 'படர் கானத்து ஏறவிடத் தூண்டுபரித்தேர் மன்னன் தனக்கே பொறுப்பென்று சொல்' என்று சொல்லி, எப்படியாகிலும் பாண்டவர்களை அருங்கானம் பசைப்பித்துப் படர்கானத் தேறத் தப்பிலாவகை செய்யென்று சஞ்சயனைப் போக்கினான் திருதராட்டிரன் என்றவாறு. அப்பொது யாது செய்தான் சஞ்சயன் : (௩௫௫)

---

354. தாமரையாள் கோ – கண்ணன். காணாத காடு - துரியோதனன் கண்ணிற் காணாத காடு. கடிது - விரைந்து.

355. வேறு இறைஞ்சி – தனியே மன்றுடி வேண்டிக் கொண்டு. சித்தமது தேற - உள்ளம் தெளிய. பசைப்பித்து – விரும்பச்செய்து. ஏற - போக.

பா. வே: 1. கோபம்விடப்; கோபம்விடஇப். 2. மவர்.

356. [1]என்று னெழின்மன் னிருஞ்சேனை தற்சூழ
நன்றாக வென்றுரைத்து நான்மறையோன்—சென்றான்
படந்தா ழரவின்மிசைப் பாரடங்கக் கோட்டா
லிடந்தா னிருந்த விடத்து.

இவ்வகை சஞ்சயனுந் திருதராட்டிரனை விடைகொண்டு ஓராயிரம் விடைமணிக் களிறும், ஈராயிர மணிநெடுந்தேரும், நல்லின வயப்பரி ஐயாயிரமும் நூறாயிரம் விறலுடை வீரரும் உடன்வரப் புறப்பட்டு இரண்டு நாள் வழியிற்றங்கி மூன்றாநாள் உபலாவிய நகரம் புகுந்தான் சஞ்சயனைக் கருதுவது. இவ்வகை சஞ்சயன் வருகின்றதனைக் கண்ணன் கண்டு அருச்சுனனையும் பாஞ்சாலியையும் அருகு கொண்டு ஒரு தனி மண்டபத்துப் பள்ளி கொண்டருளினான் கண்ணன். அவ்விடத்து வந்து யாது செய்தான் சஞ்சயன் : (ஙுசு)

357. கோவத் தனமெடுத்த [2]கோளரியைச் சென்றிறைஞ்சி
யாவத் துயர மகற்றினான்—மேவிமிக
வாழ்ந்தான் மகிழ்ந்தான் மனங்கூர வைப்புற்றான்
வீழ்ந்தா னெழுந்தான் விரைந்து.

இவ்வகை சஞ்சயனும் வந்து திருவடி தொழுது நிற்ப மற்றவனை அறியாது போலப் பள்ளியுணர்ந் தருளி, அருகிருந்த மகளிரையும், உற்ற அன்பர்களையும் நோக்கிக் கண்டதொரு காட்சியழகு யாதருளிச் செய்தான் கண்ணன் : (ஙுஎ)

358. பங்கயமும் பல்கோடியும் பார்த்தன்றன் பாதத்திற்
செங்கரமுங் கண்டு தெளிந்திருந்தே—னிங்கினியோர்

---

356. அரவின்மிசைப்பார்—அரவத்தின் தலைமேலே அமைந்துள்ள உலகம். கோடு – கொம்பு வராகமாக வந்து கொம்பால் தோண்டிய கதை "படந்தாழ்......இடந்தான்" என்பதில் சுட்டப்பெற்றது. இடந்தான் - தோண்டினான்.

357. கோவத்தனம் - கோவர்த்தனம் என்னும் மலை. கோளரி – அரிமா. ஆவத் துயரம் - துன்பம்; ஆவம் - துன்பம்; ஒருபொருட் பன்மொழி.

358. பங்கயம் – தாமரை.

பா. வே: 1. என்று வெழின்மன்.
2. கோளரியைக் கண்டிறைஞ்சி.

பார்த்தனே பாராளப் பார்வேந்த ரேல்லாம்
[1]மாய்த்திடுவ னேன்றிருந்தேன் மற்று.

எ - து. யான் துயில் கொண்டவிடத்து ஓரழகு கண்டபடி கேண்மின் என்றருளிச் செய்வான் : "அருச்சுனன் காலிற்றாமரைப் பூவுங் கொடியுங் கண்டேன்; கையிலொரு சங்கமும் கயலுங் கண்டேன்; மற்றும் பல அரச இலக்கணங்களும் உண்டாயிருந்தன; இதனல் அருச்சுனனுக்கு வீரப்பெருமகிழ்ச்சியுண்டாம்; துரியோதனன் அரசவைக்குக் கேடாய் அவன் பெரும்படைக்கும் உறுதியாய் அழிவாம்" என்று இவ்வகை கண்டதோர் அழகு குறித்திடுங்கள் என்று அருச்சுனனுக்கும் பாஞ்சாலிக்கும் அருளிச் செய்து இனிதிருந்தவிடத்துச் சஞ்சயன் வந்தமை யறியாதானைப் போலப் பள்ளியுணர்ந் தெழுந்தருளியிருக்கும் அளவில் வணங்கி நின்ற சஞ்சயனை நோக்கித் திருப்புன் முறுவல் செய்து நீ எப்பொழுது வந்தாய் என்று அருளிச் செய்யக் கேட்டுக் கவலை யெய்தி யாது விண்ணப்பஞ் செய்தான் சஞ்சயன் : (ஙடுஅ)

359. கோல்வா ளரவங் கோடிமேல் வலனுயர்த்தா
[2]னில்வாழ்வார் சோற்கேளா தீங்கிருந்தா—னேல்லாங்
கருதி யதுமுடிக்குங் கார்வண்ணா யாங்கள்
சேருவின் மடியுமதோ சேப்பு.

என்றிவ்வகை விண்ணப்பஞ் செய்து பின்னும் யாது விண்ணப்பஞ் செய்தான் சஞ்சயன் : (ஙடுகு)

360. ஓதத் தரவணைமே லூழிநாட் கண்வளர்ந்த
வேதத் தருமணியே மெய்ச்சுடரே—[3]பேதத்தா
லத்தரும னேம்மோ டமர்புரியா வண்ணமவன்
சித்தமது தேறநீ சேப்பு.

எனக்கேட்டு யாதருளிச் செய்தான் கண்ணன் : (ஙகூ0)

---

359. வலன் – வெற்றி. செருவில்—போரில். இல்வாழ்வார்—குடியுடன் சிறக்கவாழும் நல்லோர்.

360. பேதத்தால்—அவன் எண்ணத்தை மாற்றித் தெளிவித்தலால். தேற – தெளிய.

பா. வே: 1. மாய்ந்திடுமே வென்றிருந்தேன்.
மாய்ந்திடுமோ வென்றிருந்தேன்.
2. யின்னுச் சொல் கேளாமல் யானிருந்தேன்,
3. பேதத்தோ டத்தருமன்.

361. அறந்தெரியுந் தன்ம னடலமரே யன்றி
[1]மறந்தெரியு மற்றோர்சொற் கேளான்—புறந்தெரியும்
வல்லானீ தூதா வழக்கொழிய யாமொருநாள்
வெல்லாது சொல்லோம் விடு.

எ - து. சஞ்சயன் வந்து திருதராட்டிரன் பொய்யுணர்வால் வேண்டத்தக்கன விண்ணப்பஞ்செய்து, துரியோதனனுக்கும் தருமனுக்கும் வேறுபாடு விளையாவாறும், சந்தாமாறும் அருளிச் செய்வாயாக என்று விண்ணப்பஞ் செய்ததனை நோக்கிக் கண்ணன் அருளிச் செய்வான்: தருமன் முன்னமுள்ள அமைதி நெறி கைவிட்டு அரசநெறியே துணையாகக் கொண்டு விரும்பினான்போற் றோன்றியிருந்தது. இவ்வகை எக்காலமும் அறமே துணையாக விரும்பி வாழ்கின்றான் இன்று நாடு மூலமாக அறந்தெரிந்தானுக்கு யாம் இனி என்ன ஒழுங்கு எடுத்துக் காட்டித் தணிப்போம்? அது நிற்க; துச்சாதனன் பாஞ்சாலி கூந்தல் பற்றிய ஞான்று மற்று அவர் பட்ட துயரும், வீமன் செய்த உறுதி மொழியும், முன்னம் அவைக்களத்துப் பேசிய உறுதியழிந்து அறநெறி கெட உரைத்தமையும் இனித் திருதராட்டிரன் உரைத்தபடி யாம் உரைத்தாலும் இனி அவர் காடுறைவான் கருத்தல்லர் போலத் தோன்றி யிருந்தார் ஆதலால் இனி அவர்க்கு மற்றுரிமை கொடாமற் கூட்டலரிது என்றிவ்வகையுரைத்துப் பின்னும் யாதருளிச் செய்தான் கண்ணன்: (௩௬௧)

362. தருமன் றனைக்கண்டு தாதைதான் சொன்ன
வொருவசனந் தன்னை யுரைத்துக்—குருபதியி
லிற்றைக்குத் தங்கி[2]யிசைத்த பொருள்கேட்டு
மற்றைநாட் செல்கென்றான் மால்.

இவ்வகை யருளிச் செய்து சஞ்சயனுக்கும் பெரும்படைக்கும் விடுதலைகாட்டி உதவி இனிதிருந்த அளவில் கண்ணனைக் கண்டு வீம அர்ச்சுனர் சொல்லுவார்: எம்பெருமானே, சஞ்சயனைத்

---

361. அடல் அமர் - வலிய போர். மறம் தெரியும் - பாவம் செய்யும். புறம் தெரியும்-திசையெல்லாம் தெரியும். தூதா-தூதாகி. வழக்கொழிய - முறைகெட.

362. தாதை - தந்தை; திருதராட்டிரன். இசைத்த - சொன்ன. பொருள் - செய்தி. மற்றைநாள் - மறுநாள்.

பா. வே: 1. மறந்தெரிய, 2. யிசைந்த.

தருமன் காணில் இங்கு இவன் சொன்ன படியே இசையவன்றே போகின்றான்; இங்கிதற்குச் செயலாவதென் கொலோ என அவற்றிற்கு மறுமாற்றங் கண்ணன் அருளிச் செய்வான். போர்க் களத்தில் வந்து போர் ஒழியாமற் செய்யப்பெறும்; போர்க்குத் துரியோதனனுடன் அத்தினபுரத்திற் செய்து கொண்ட உறுதிகள் எல்லாம் உளதாயிருக்க, இப்பொழுது சஞ்சயனுடன் சந்தாகுமாறு ஆராய்ந்தீரோ? என்று ஆங்கவர்களை வற்புறுத்திக் கண்ணனுந் தன் கோயிற் புக்கானாகக் கருதுவது. இப்பால், (௩௬௨)

363. பஞ்சவர்க ளெண்ணத்தாற் பாம்புயர்த்தோன் சீரழியக்
கஞ்ச மலர்முளரி காதலிப்பத்—துஞ்சுமவர்
தாமெழுந்து போற்றத் தனித்தேரின் மீதெழுந்தார்
சூரியனார் தாழுந் தொகுத்து.

இவ்வகை கதிரோன் எழுதலும் அதுகண்டு அவைக்களத்தில் அனைத்து வேந்தரும் கண்ணனும் புடைசூழ விருக்கின்ற தருமனிடைக்கே சஞ்சயன் வாராநிற்ப ஆங்கவன் வருகின்றது கண்டு யாது செய்தான் தருமன்: (௩௬௩)

364. நான்முகனே டொத்தவனை நால்வேதம் வல்லானைத்
தானெதிர்கோண் டன்பாற் றலைவணங்கி—ஞானவனுக்
காதனமே நல்கி யருமறைசேர் சஞ்சயனைப்
[1]போதனவே தென்றான் புரிந்து.

இவ்வகை சஞ்சயனைக் கண்டெதிர்கொண்டு தன் கோயிலிடம் புகுந்து மற்றவனுக்கு இருக்கையும் அடைக்காயும் கொடுத்து இனிதிருந்து மனமகிழ்ந்து பின்னை யாது சொன்னான் தருமன்: (௩௬௪)

365. தனியே முதலாய்[2] தந்தவெலா முண்டு
தனியே தளர்ந்தவரைத் தேடு—முனியே

---

363. கஞ்சமலர் முளரி – தாமரை, காதலிப்ப–விரும்ப; என்றது மலர. துஞ்சுமவர் – உறங்குவார். தொகுத்து – கதிர்களை ஒருங்கு கூட்டி.

364. ஞானவன் – அறிஞன். ஆதனம் – ஆசனம்; இருக்கை. போதன ஏது என்றான் – வந்தது என்ன என்றான்.

365. முதல் – கிழங்கு, கிரை. காடுறைந்த காலத்து வாராது நாடு வேண்டுங் காலத்துத் தேடிவந்ததைச் சுட்டியுரைத்தது. அவாப்

பா. வே: 1. போதனவென்னென்றான். 2. தந்தமெலா.

படர்ந்தவாப் பின்றொடரப் பாதங்க ளேவ
நடந்தவா [1]றென்று னயந்து.

எனக் கேட்டு யாது சொன்னான் சஞ்சயன் : (௩௬௫)

366. **வேதியன் சோல்லும் விதுரன் பெருஞ்சோல்லுங்**
கோதில் குருகுலத்தார் கோன்சோல்லு—மாதா
பெருஞ்சோல்லுங் கேளாது பின்னிகழ்ந்தான் [2]மாம
னருஞ்சோல்லே சோல்லாக வாங்கு.

இவ்வகை மெய்யுரை கேளாதிருந்த துரியோதனனை அறிவித்து ஈங்கிதற்குச் செயற்பால தென்கொலோ வென்று திருதராட்டிரன் அருளிச் செய்தான் என்று பின்னும் யாது சொன்னான் சஞ்சயன் : (௩௬௬)

367. **தம்பியரு நீயுந் தழைக்காடு கானகம்புக்**
கின்ப முடனிருக்க[3] வேகீரேல்—வம்பவிழ்தார்
மன்னவர்க ளைவரையு மாளுவிப்ப னென்றுரைத்திங்
கேண்ணைவர விட்டா னிசைந்து.

எ - து. இன்னங் கானத்துறை கண்டாய் என்றும் நால் வேதம் சமைத்துச் சொன்ன வேள்வி யியற்றி இகல் வேந்தனாய் இனிது இருந்து இன்பநுகர்கை துயரே காண்; பெரியதொரு பாவத்தினை விட்டு நீங்கி உன் இளங் குமரருடன் கொடிய கானிடையிற் போவாயாக; அன்னதற்குக் காரணம் வீடுமர் துரோணர் விதுரர் கன்னன் என்னும் நான்கு கரையாலும் காக்கப் படுவன துரியோதனன் நாற்படையாகிய கடலொடு பகை கொண்டு மடியிற்பின் பார்வேந்தன் உனக்குத் தந்தையாகவும், சார்ந்தவர்களைக் கொன்றான் என்றும், தன் மக்களால் கொல்லுவித்தான் என்றுங் கொடும்பழி தாராதே வெல்விற்கைத் தம்பியருடன் வெங்கானிற் போவது என்றும், குருமொழி தவிர்தல் நலமல்ல தனக்கென்றும் உரை செய்தான் உன் தந்தையாகிய திருத

பின்தொடர· அவா முன் வர அதனைப் பின் தொடர்ந்து வந்த முனியே. ‘அவா வறுத்தவனே முனிவன் ஆகச் சஞ்சயன் அவாத் தொடர வருதல் அழகோ’ என்னும் குறிப்பொடுபட்ட விளி.

366. கோதில் குற்றம் இல்லாத. வேதியன் – துரோணன். கோன் – திருதராட்டிரன். மாதா - காந்தாரி. மாமன் – சகுனி.

367. தழைக்காடு - தழைசெறிந்த. வற்புற்று - உறுதியுற்று.

பா. வே: *1 றென்னென்று னன்கு. 2. மாமன் றருஞ்சொல்லே. 3. வேகாயேல்.*

ராட்டிரன் என்றுரைப்பக்கேட்டு மறுமாற்றஞ் சொல்லாது வற்புற்றிருந்த தருமனை நோக்கி யாது அருளிச் செய்தான் கண்ணன்: (ரு.சுஎ)

368. தானங்கள் செய்தாய் தலைவேள்வி தான்முடித்தாய்
மான முடையாய்நீ மன்னவனே—ஞானத்தால்
வாழ்வேந்தர் சூழ வழக்கறு மாமுனியாய்ப்
போர்வேந்தே சென்றான் புரிந்து.

'பிறநாட்டு வேந்தர்க்கெல்லாம் அழிவாகிய காரணமே தான் துணிகின்றது ஆதலால் தனக்குக் கடனன்று; தானும் தம்பிமாரும் காடுறைவோராய்த் தவம் செய்கை அறம்' என்று சொன்னான் உங்கள் தந்தை என்று கண்ணன் அருளிச் செய்யக் கேட்டு அங்கையோடு அங்கை தாக்கி உயர்மா முடி துளக்கிச் சஞ்சயனை நோக்கி யாது சொன்னான் தருமன்: (ரு.சுஅ)

369. மாயத்தாற் சூதாடி மண்கொண்ட மன்னவன்று
னேயத்தாற் றூரானே னீண்மறையோய்—தாயங்
[1]கோடாதானைக் கொன்றெங் குருநாடு [2]கொள்கைக்
கடாதனவோ வெங்கட் கமர்.

மாயச் சூதாடி மண்கொண்ட துரியோதனன் முன்னஞ் சொன்ன வெல்லைக்கண் காடுறைந்து வந்தோமுக்கு உறுதி மொழி வழுவி நாடு தாராமல் இப்பொழுது திருதராட்டிரன் சொன்னான் என்று ஆள்வலியும் வீரமும் பேசி எம்மைக் காடுறைக வென்று நீ சொன்ன சொல் அறநெறியன்று கண்டாய்; அது நிற்க, முறையல்லாதன செய்யில் பாதியாயினும் மண்கொள்கை காவல் அரசற்குக் கடன்; என்றும் நேரிய வழியினர் ஆகையாலே எங்கட்கும் போர்க்களத்தில் படுகை கடனென்று தருமன் சொன்ன மகிழ்ச்சி கண்டு பகை முற்றும் அழித்து நாடு கொண்டாற்போலப் பெருமகிழ்வுடையனாய்ச் சஞ்சயனை நோக்கி யாது சொன்னான் வீமன்: (ரு.சுகூ)

370. அரவக் கொடியோனு மாடேழிற்றோண் மன்னுங்
குரவிக் குருநாடு தாராரே—[3]னிரவியெழுங்

368. வேழ்வி - இராசசூயவேள்வி. வழக்கு - முறைமை.

369. மாயம் - வஞ்சம்; கரவு. நேயம் - அன்பு. கொள்கைக்கு - கொள்வதற்கு. அடாதனவோ - தகாதனவோ.

பா. வே: 1. கொடாதாரைக்.
2. கொள்கை, யடாதனவோ.
3. னுரவினெழும்; விரவியெழும்.

காற்றுக் கிசைந்த கடுங்கனலுங் காடும்போற்
கூற்றுக் களிப்பேன் கோதித்து.

இவ்வகை பேசிய வீமனை நோக்கி யாது சொன்னான் சஞ்சயன் : (௩எ0)

371. [1]பாராள ரெண்ணும் பகடும் பரிமாவுங்
காராருங் கன்னனுடன் காங்கெயனுந்—தேராளர்
நூறுநா றுயிரம்பேர் நூற்றுவரோ டேற்றெழுந்தால்
வேறுமா [2]ருரோ விளம்பு.

எனக்கேட்டு யாது சொன்னான் வீமன் : (௩எக)

372. ஆற்றலுடை யங்க ராசன்[3] முதலாயோர்
நூற்றுவ ரென்னும் பகடுழக்கிச்—சீற்றமுடன்
பாராள வின்னம் பெறுதொழிந்த பார்த்திபனை
வீராகம் பண்ணுவிப்பேன் மிக்கு.

எ - து. கேளாய் சஞ்சயனே, தருமனை வீர வேள்வி செய்விக்கக் கடவேன்; அந்த வேள்வி செய்யும்படி கேளாய், குரு நிலம் என்ற போர்க்களமே வேள்விச் சாலையாகச் சினம் என்னும் தீ மூட்டிக் கொடித்தேர் என்னும் விறகு அடுக்கிக் குருதானை யென்னும் நெய்சொரிந்து தருமன் வேள்வித்தலைவனாகவும் பாஞ்சாலி வேள்வித் தலைவியாகவும் நாங்கள் நால்வரும் வேள்வி யாசிரியர்களாகவும் என் கையிற் றண்டம் வேள்வித் தூணமாகவும் அறத்தின் பகைவராயுள்ள துரியோதனன் முதலான நூற்றுவர் என்னும் ஆப் படுத்துக் குறைபடாமல் பேய்க்கும் பறவை இனத் திற்கும் பிணம் என்னும் பொற்கொடை புரிந்து தட்டுப்படாமல் வீரவேள்வி செய்வித்து வேள்வி செய்வோனுக்கும் பூதங்களுக்கும்

---

370. ஆடு - வெற்றி; போர். குரவி - கலந்து பேசி. கிரவி எழும் - கலந்தெழும். "காற்றோடு கூடிய கனல் காட்டைச் சுடுவது போல் அவரை அழிப்பேன்"

371. பகடு - யானை. பரிமா - குதிரை. வேறு+மாறு+ஆரோ - வேறுமாருரோ; வேறு எதிரிடுவார் எவர் ?

372. நூற்றுவர் என்னும் பகடு உருவகம். வீராகம் - வீரயாகம். பார்த்திபன் - தருமன். நூற்றுவரைப் பலியிட்டு வீரவேள்வி செய்து தருமனுக்கு முடிசூட்டுவேன்.

பா. வே: 1. பாராள்வா. 2. ருமே. 3. முதலாக.

பிறநாட்டுவேந்தர் உயிர் என்னும் காணிக்கை கொடுத்து நிறைவேற்றலாம். இவ்வேள்விக்குப் பயன் யாதெனில் பாஞ்சாலி குழல் முடித்தலும் என் மனக் கருத்து முடித்தலும். இதற்குக் கண்ணனே மறைமொழிக் குற்றமோ, செயற்குற்றமோ வாராத படிக்குச் சடங்கு காட்டி, இப்படித் தருமனைக் கொண்டு வீர வேள்வி செய்விக்கக் கடவேன் என்றும் இந்தப் படிக்கு வீடுமர் துரோணர் விதுரனுக்குந் துரியோதனன் முதலானவர்களுக்குங் கன்னனுக்குஞ் சொல்லுவாயாக என்றும் வீமன் சொல்லக் கேட்டுச் சஞ்சயனும் மிகவும் அச்சமும் இரக்கமும் எய்திப் பேசுவதொன் றில்லாதிருந்த விடத்து வீமனை முனிந்து யாது சொன்னான் தருமன் : (௩௭௨)

373\. பற்று ருடன்பகரும் பாரதப்போர் பண்பிலா
வுற்ரு ருடனுரைக்க வேண்டிஞன்—மற்றுரை
யன்றியே யாடாமற் றூதருடன் [1]வன்மொழிகள்
வென்றியோ வீமா விளம்பு.

எ - து. பண்பில்லாத வுற்றாருடன் போர்புரிய வேண்டி யுரைக்கும் காலத்து மற்றவர் முன்னம் பேசுவதன்றி அவர் விடுத்த தூதருடன் வெவ்வுரையும் வேறுபாடும் பேசுவது வீரர்க்கு அழகல்ல வென்றும், இவ்வகை மறையோனுடன் உரைக்குமது வீரமாண்புக்குக் குறைவாம் என்றும் தருமன் உரைப்ப வீமன் மற்றந்தச் சஞ்சயனுக்கு முகமன் செய்து இன் சொலுடன் 'போவாயாக' என்று விடைகொடுப்பக் கவலை யெய்தி, வந்த கடமை முற்றப் பெருமையாற் றளர் வெய்திச் சஞ்சயன் யாது உன்னினனோ வெனில் : (௩௭௩)

374\. மன்னவன்பாற் றனணைந்து மன்னர் மொழிமாற்றம்
பன்னுவநா மென்றந்தப் பண்ணவனே—துன்னிப்
பலவேந்தர் சூழப் பனிக்குடைக்கீழ் வாழு
நிலவேந்த னைக்கண்டா னின்று.

373\. பற்றார் – பகைவர். பண்பிலா வுற்றார் - துரியோதனன் முதலானோர். ஆடாமல் – உரையாடாமல். விளம்பு வென்றியோ – விளம்புதல் வீரமோ.

374\. பன்னுவம் - பேசுவம். பண்ணவன் - பெரியோன்; சஞ்சயன். பனி – தண்மை.

பா. வே: 1. துன்மொழிகள்.

இவ்வகை கண்ணனையும் தருமனையும் விடைகொண்டு மறுப் புடனும் புறப்பட்டு இரண்டு நாள் வழியிற் றங்கி மூன்று நாள் அத்தினபுரம் புகுந்து துரியோதனனைக் காணும் அளவில் அவன் தருமன் முதலானவர்கள் பக்கற் பிறந்த சிறப்புச் சொல்வாயாக என்ன யாது சொன்னான் சஞ்சயன் : (ந௩எச)

375. ஆதியா னுங்குரைத்த மாற்ற முரைசெய்யப்
போதுதா னில்லை புரவலனே—சோதிச்
சுடரோனும் போய்மறைந்தான் சொற்பிழைக்கு மன்னா
[1]வெடிவே யதுகேள் விரைந்து.

கதிர்க் கடவுள் மறைந்ததாலும் வழிவந்த வருத்தத்தாலும் காலமே கேட்பாயாக என்ன, சஞ்சயனுக்கும் விடைகொடுத்துத் தானும் பெருக ஐயமெய்திக் கவலை மிக்கோனாய்த் தன் கோயிற் புகுந்தான் துரியோதனன் என்றவாறு. இவ்வகை திருதராட்டிரன் கேட்டு விதுரனுடன் அளவளாவித் தருமன் முதலானவர் களுக்கும் நட்புரிமையாளர்க்கும் பழிபாவம் வருமெனக் கருதிக் கவன்ற உள்ளத்தனாய்ச் சிறிது நாழிகை பள்ளி கொண்டானாகக் கருதுவது. அப்பொழுது, (ந௩எரு)

376. வைய மிருளகல மன்ன ருயிர்போகச்
செய்யதிரு மாலென்னைச் சென்றேங்க—வெய்யதனித்
தேரோனும் வந்துதித்தான் செம்மையுடைப்
பாராளு மாறே பரிந்து. [பாண்டவர்கள்

இவ்வகை கதிர்க் கடவுள் தோன்றலும் துரியோதனனும், திருதராட்டிரனும் பள்ளியுணர்ந்து அவைக்களம் புகுந்து விதுரனை அழைத்து விட்டு யாது சொன்னார் : (ந௩எசு)

377. ஆண்டகைவேற் பாண்டவர்பா லாய்ந்த மொழிகேட்க
மீண்டுவரு மந்தணனை ரைத்தனியே—யீண்டன்வர

375. ஆதியான் - கண்ணன். போது - பொழுது. வெடிவே - விடியலில்.

376. மன்னர் - துரியோதனன் முதலானோர். விடிவோரை - விடிபொழுது. தற்குறிப்பேற்ற அணி.

377. நிகர் - ஒப்பு. அன்றே - அப்பொழுதே.

பா. வே : 1. விடிவோரை கேண்மின் விரைந்து.

நீயழையா யென்ன நிகரேது மோவ்வாதான்
போயழைத்தா னன்றோ புரிந்து.

இவ்வகை சொல்லக் கேட்டு விதுரனுஞ் சென்றழைப்ப யாது செய்தான் சஞ்சயன் : (கூஎஎ)

378\. மேவலரை வெல்லும் விதுரன் குரல்கேட்டுக்
காவலருங் கங்குல் கழிந்ததற்பி—னேவலரும்
பூமறைய வண்டிருக்கும் போய்கைசூழ் நாடன்பான்
மாமறையோன் சென்றான் மதித்து.

வி - து. சஞ்சயனும் விதுரன் அழைப்பக் கேட்டுக் கதுமெனப் பள்ளியுணர்ந்து கதிரோன் எழலும் கடன்முறை முடித்து விதுரனுடன் போந்து அவைக்களத்திருந்த துரியோதனனையும் திருதராட்டிரனையுங் கண்டு மங்கலஞ் சொல்லிப் பின்னும் யாது சொன்னான் சஞ்சயன் : (கூஎஅ)

379\. [1]ஆயனும் பார்த்தனு மாயிழையார் கால்வருடத்
தூயமணிப் பள்ளிச் சுடரொளிசேர்—பாயலுடன்
சிங்கா தனத்திருந்தார் தேர்வேந்தர் தேவியுட
னங்கே [2]யருகிருந்தா ளாங்கு.

எ - து. அருச்சுனனும் பாஞ்சாலியும் அருகிருக்கத் தேவ மகளிர் அடிவருடப் பள்ளி கொண்டருளினான் கண்ணன் அப் பொழுது நானுஞ் சென்று காண அறியாதானைப் போலப் பள்ளி யுணர்ந்தருளி அவன் அருளிச் செய்த அரச இலக்கணமும் திறமும், கண்டு மற்றும் உற்றதை விண்ணப்பஞ் செய்யக் கேட்டு அவன் அருளிச் செய்த உரையும் அங்கு நின்று விடை கொண்டு போந்து மற்றை நாட் காலமே சென்று தருமனைக் கண்டவிடத்து மற்றவன் பேசிய துணிவும் சொல்லுவேன் என்று யாது சொன்னானே வெனில் : (கூஎகூ)

378\. மேவலர் – பகைவர். கங்குல் - இரவு. காவலரும் - சோலையில் உள்ள மலர்கள் எல்லாம் மலரும். கழிந்ததற்பினே, அலரும் பூ மறைய வண்டிருக்கும் பொய்கை.

379\. தேவி - பாஞ்சாலி.

பா. வே : 1. ஆயனையும் பார்த்தனையு மாயிழையார் தங்களையும்
2\. யருகிருந்தா ராங்கு.

380. தருமனுந் தம்பியுந் தாமரையாள் கோனு
முரிமையுடன் கட்டுரைத்த வூக்கங்—கருதிமிக
[1]மல்லாடு திண்ணியதோண் மன்னனுக்கு மற்றவர்க்கு
மெல்லா முரைத்தா னெடுத்து.

எ - து. தருமனைக் கண்டு திருதராட்டிரன் சொன்னதும் மற்றும் உரைத்த அளவில் அவன் முன் போலன்றித் தருமன் அமைதி நெறி கைவிட்டு அரச நெறியே துணையாக விரும்பியிருந் தமையும் அதுகண்டு வீமன் சொன்ன வீரமும் தப்பின்றி உரைத்துப் பின்னும் யாது சொன்னான் சஞ்சயன் : (௩௮௦)

381. குரவனையும் பார்த்தனையுங் கூட்டுவையா கென்ன
வுருவுடையோ னுள்ளத் துரைப்பான்—வருமறைக்கு
முத்தாணி யென்றுரைத்த முதுரைகள் யான்சொல்லிப்
[2]பார்த்தாலு மேகூடாப் பண்பு.

அன்றியும், (௩௮௧)

382. அரவணையான் றனுரைத்த தெல்லா முரைக்கி
னிருநிலமு மிங்கிவருக் கில்லை—[3]குருபதியைக்
கொன்னவிலுங் கூராழிக் கொற்றவன்பால் வேறுரைத்த
மன்னவனே வேண்டா மதித்து.

எ - து. கண்ணன் பக்கல் யான் போய்க் கேட்ட அளவில் நாடு முற்றும் தருமனே ஆள்வானாக நினைந்து மற்றதற்கு வேண்டும் மகிழ்ச்சியும் திறமும் தோன்ற வுரைத்து இனி இரண்டு திறத்

---

381. குரவன் - பெரியோன் ; தருமன். 'கூட்டுவை யாகு' இது கண்ணனிடம் சஞ்சயன் வேண்டிய உரை. உருவுடையோன் – ஒளி யுடையோன் ; கண்ணன். வருமறை – தோன்றிய மறைகள். ஆணி என்று - அச்சாணி போன்று. "உருள் பெருந்தேர்க்கு அச்சாணி அன்னார்"—திருக்குறள். கூடாப்பண்பு - இயலாதது ஆகும். இனிக் குரவன் திருதராட்டிரனும் ஆம்.

382. இவருக்கு – துரியோதனருக்கு. வேறு உரைத்த-தனித்து உரைத்த. வேண்டா மதித்து – எண்ணியது பயன் பெறும் எனக் கருத வேண்டா.

பா. வே: 1. மல்லாடுந் திண்டிறற்றோள்.
2. பார்த்தலுமே கூடாத பண்பு.
3. குருபதியே.

தாரும் போர் செய்து கொள்ளக் கடவர் என்றும் தருமன் இனிக் காடுறைவான் கருத்தல்லன் என்றும் கண்ணன் அருளிச் செய்தமை யால் உறுதியாய்ப் போர் விளையா நின்றது. ஆதலால் நீயும் இனிப் போர்க்காம்படி மற்றுனக்கு விருப்புடையார்க்கும் நட்புரிமை யாளர்க்கும் இருக்கையும் திருமுழுக்கும் கொடுத்து, குருக்களுக்கும் மறையோர்க்கும் பெருங்கொடை அளித்துப் போர்க்காம்படி ஒருப்பட்டு வாழ்வாயாக என்று சஞ்சயன் சொல்லக் கேட்டு மற்றவனை முனிந்து யாது சொன்னான் துரியோதனன்: (௩அ௨)

383. பாண்டவரை வெல்வதற்குப் பாரதப்போர் வேண்டுமோ
தூண்டுபரி மன்னவர்முன் சொல்லுங்கான்—மூண்டகயல்
வாளைப்போர் செய்யும் வளநாட ரெண்ணமெல்லா
நாளைப்பா ரென்று நகைத்து.

எ - து. துரியோதனனும் சினந்து பாண்டவரை வெல் வதற்கு நாடெல்லாம் கூட்டிப் பெருந்திறம் காட்ட வேண்டுமோ என்று அவையின்கட் பேசித் தனக்கருகிருந்த எல்லா அரசர் கட்கும் விடை கொடுத்துத் தானும் தன் கோயிலுட் புகுந்து திருத ராட்டிரனுந் தானும் ஒருதனி அவைக்களத்திருந்து அளவளாவித் தருமனையும் தம்பிமாரையும் போர்க்களத்தில் வெல்வதற்கு வேண்டுவன நினைந்து மறைவு பலபேசி ஆராயா நின்றாராகக் கருதுவது. இங்கிது இவர் நிலைமை. இப்பால் சஞ்சயன் போயின பின்னைத் தருமனை நோக்கி யாதருளிச் செய்தான் கண்ணன்: (௩அ௩)

384. பாரான வல்லீரோ பாம்புயர்த்தோன் சொற்படியே
நேராக நாடு தனைவிட்டுச்—சீராருந்
தம்பியரு நீயுந் தழைக்காடு கானகம்போய்
வெம்பவல் லீரோ விளம்பு.

என்றிவ்வகை கண்ணன் அருளிச் செய்யக்கேட்டு யாது விண்ணப்பஞ் செய்தான் தருமன்: (௩அச)

---

383. பாரதப் போர் - நாட்டாரெல்லாம் கூடிச் செய்யும் போர். வாளை-ஒருவகை மீன். கயல் வாளையொடு போர் செய்யும் வளநாடர் என்றது பாண்டவரைக் கயலாகவும், தன்னை வாளையாக வும் கொண்டு உரைத்தது. வாளையில் சிறியது வலுவற்றது கயல் மீன் என்க. மின்னுவது கயல், துன்னி அறைவது வாளை என்னும் தன்மை யறிக.

384. வெம்ப - வெதும்ப; துயரெய்க.

385. எம்பெருமா னெம்பி விசயன்றேர் மேனிற்க
[1]வும்ப ருடன்றெழினு மூடறுத்துத்—தம்பியரோ
டாள்வே னிராச்சியத்தை யாரணியந் தானேக்கிப்
போகேனென் றுனே புகழ்ந்து.

எ - து. உறுதி யழியாமல் காடுறைந்து மீண்டு வந்தே னுக்கு நாட்டிற் பாதி வேண்டித் தேவதேவனுயுள்ள நின்னைப் போகவிடவும் தாரா மறமன்னவற்காகத் தேவதேவனேடும் தேவர்கள் கூடிப் போர்புரிய வந்தாலும், எம்பெருமான் அருச்சுன னுக்குத் தேரோட்டியாக மற்றவன் தேர்மிசை எழுந்தருளி நிற்க ஆங்கவரைப் போர்க்களத்தில் படமலைந்து நாடுகொள்வதன்றி இனி எம்பிமாருடன் காடு போகேன் என, விரும்பிய உளத்தனுய் யாதருளிச் செய்தான் கண்ணன் : (௩௮௫)

386. பல்வே றரசர்க்கும் பல்வேறு தூதரைவிட்
டிவ்வாறு செய்கென் றெடுத்துரைத்தா—னல்வேந்தன்
றுனுகி யேற்றத் தடங்கடல்வா யெந்நாளு
மாஞக மேற்றுயிலு மால்.

இவ்வகை பிறநாட்டு வேந்தரும் வருகவென்று ஓலையும். தூதரும் போக்கென்றருளிச் செய்தான் கண்ணன் அவ்விடத்து. இப்பால் துரியோதனன் நிலைமை யாதாயிற்றோ வெனில் : (௩௮௬)

---

385. உம்பர் - தேவர். உடன்றெழினும் - பகைத்து வந்தாலும்.

386. செய்க+என்று=செய்கென்று; தொகுத்தல். தடங்கடல் - விரிந்த கடல். மாநாகம் - பெரும் பாம்பு.

பா. வே: 1. வும்பருட னென்றுலு.

சஞ்சயன் தூது முற்றும்.

படைத்திரட்சி

கடவுள் வாழ்த்து

387. பொருப்படைந்து தங்கள் புலனைந்துஞ் செற்று
நெருப்படைந்து நீரடைய வேண்டாம்—விருப்படைந்து
வைகுந்தஞ் சிந்தையிலே வைப்பார்க்கு மாதவனும்
வைகுந்தஞ் சிந்தையுளே வந்து.

இப்பால் கன்னனை நோக்கி யாது சொன்னான் துரியோ தனன் : *(௩௮௭)*

388. அரவுயர்த்தோ னோலை யகலிடத்தார் [1]காண்க
முரசுயர்த்தோ னோடும்போர் மூண்டோம்—வரவியற்று
தங்கிருந்தார் நாடு மணிநகரு மானைகளு
மிங்கிருந்தார்க் கென்றே யெழுது.

இவ்வகை கன்னனை நோக்கி யுரைத்துத் தன் பெரும் படைத் தலைவர்க்கும் பிறநாட்டார்க்கும் ஓலையும் தூதரும் போக்கி யீண்டன் படை வரச் சொன்மின் எனக் கேட்டு யாது சொல்லி ஓலை போக்கினன் அங்கராசன் : *(௩௮௮)*

389. வேந்தர் பெருமான்றன் வெங்கண் மிகச்சிவந்தான்
பூந்தண் முடியார்தாம் போற்றிசெயத்—[2]தாந்தஞ்
செருவிலங்கு வேந்தர் திறைகொணரா மன்னர்
கருவிலங்கி னுள்வைப்பர் கால்.

---

387. பொருப்பு - மலை. செற்று – அவித்து; அடக்கி. தவஞ் செய்தல் கருதி மலையென, நீரென, நெருப்பெனத் தேடியலைய வேண்டா. வைகுந்தத்தை நினைப்பின் மாதவன் தம் சிந்தையுளே வைகும். வைகுந்தஞ் சிந்தையுளே, தம் சிந்தையுள்ளே வைகும். வைகும் - தங்கும்.

388. இங்கிருந்தார்க்கு - எங்களுக்கு.

389. பூ - மென்மை. செருவிலங்கு வேந்தர் - போர்க்குத் துணை வாராது ஒதுங்கும் அரசர். திறை-வரி; கப்பம். கருவிலங்கினுள்-வலிய தளையுள். 'கால் விலங்கிடப் பெறுவர்' பண்டாரம் – நிதியறை; கருவூலம். கடம் - மதம்.

பா. வே : *1. காண.*

2. தான்றன், செருவிலங்கு வேந்தைத் திறை கொணரா மன்னன் கருவிலங்கி னுள்வைப்பன் காண்.

இவ்வகை பேசிக் கடலுக்கு அப்பாலை யாவரும் இப்பாலை யாவரும் ஈண்டன் வாராத அரசர் நாடும் நகரும் படையும் பண்டாரமும் ஈங்கிருந்தார்க்குக் கொடுப்பர்; அதுவுமன்றித் திறை கொணராத அரசர்கள் பூண்ட விலங்கு பூட்டுவேன் என்று வெகுண்டுரைத்து மன்னர் மன்னர் ஓலையும் தூதரும் வேறு வேறு போக்கித் திசைதோறும் ஏவிவிட்டுக் கடங்கொண்ட மால்யானை போலக் காவல் வேந்தன் கன்னனும் தானும் வீற்றிருந்தான் மன்னர் மன்னன் துரியோதனன் என்றவாறு. அப்பொழுது யாது நிகழ்ந்ததோவெனில்: (௩௮௯)

390. தன்னொத்த சுற்றத்தா ரெல்லோர்க்குந் தன்னோலை
பொன்னொத்த பூண்மார்பன் போக்கவே—மின்னொத்த
தம்படையுந் தாமுந் தனித்தனிவந் தெய்தினார்
வம்படையு மன்னரெல்லாம் வந்து.

அது யாங்ஙனமோவெனில், (௩௯௦)

391. ஓரிரண்டு கூடி யோரோவொன்றா யாங்கோத
மீரிரண்டு வேலை யெதிர்ந்தாற்போற்—போர்திரண்டு
பாரின்மே லுள்ள படையோடு மீண்டினரே
வாரிசூழ் மன்னரெல்லாம் வந்து.

இவ்வாறு பிற நாட்டரசர்கள் வருகின்றதன்மை, பலதிக்கும் கூடிய பெருவெள்ளம் கடலை நோக்கிச் செல்வதனைப்போலத் துரியோதனன் இருந்த அத்தினபுரம் நோக்கி வருகின்ற பெரும் படையும் மற்றந்த வீரர்களும் வந்து அடிபணியக் கண்டு மனமகிழ்ந்து வீற்றிருந்தான் மன்னர் மன்னன் துரியோதனன், என்றவாறு.*

---

390. மின் - ஒளி. வம்பு அடையும் - புதுமை பொருந்திய.

391. ஓதம் - கடல். வேலை - கடல். எதிர்தல்-எதிரிடுதல்; எதிர்நிற்றல். வாரி - கடல். ஒன்றிரண்டு ஆகக் கூடிய ஆறுகள் ஓரே கடலாக, அக்கடல்கள் நான்கு எதிர்ந்தாற் போன்ற படை என்றது நாற்படைகளையும். ஈர் இரண்டு - நான்கு.

* இவ்விடத்தில் படைத்தலைவர் இவரிவர் என உரைநடை விரிந்து செல்கின்றது. அது வருமாறு:

மத்திரராசன் சல்லியனும், மகதராசன் சகதேவனும், விருசினி வீரன் கிருதவன்மாவும், கெவுசிலேசுவரன் பிரகரமவேலனும், விந்தனும், காலிங்க ராசன் சகதேவனும், பிராக்சோதிசபதி பகதத்தனும்,

இருபத்து நாலு இலக்கத்து அறுபதினாயிரத்து ஒரு நூற்றெழுபது தேரும், எண்பத்திரண்டு இலக்கத்து இருபத்தோராயிரத்து அறுநூற்றுத் தொண்ணூற்றொன்பது யானையும், எட்டுக்கோடியே இருபது இலக்கத்து அறுபத்தையாயிரத்து அறுநூற்றெழுபது குதிரையும், எண்பத்திரண்டு கோடியே நாலாயிரத்து ஒன்பதினாயிரத்து மூந்நூற்றைம்பது காலாளும் கொண்டது ஓரக்குரோணியாக இப்படிப் பதினோரக்குரோணிப் படையானது மன்னர் மன்னன் துரியோதனன் படை. இதற்குப் படைத்தலைவராவார் யாவரோவெனில்: (௩௬க)

காந்தார ராசன் சகுனியும், சிந்துநாடன் செயத்திரதனும், குண்டலபோசி காம்போத ராசனும், சூரசேனாதிபதி கவுசிகராசனும், காம்போதராசன் சுதக்கிணனும், திரிகர்த்தராசன் சுசர்மாவும், கைகயரும், கேயூரரும், சவ்வீரரும், மாளுவரும், சவுமியரும், பரமகரும், வங்காளரும், வசுகரும், தக்கிணரும், மல்லவரும், அசுவகரும், சிஞ்சகரும், சேதிகரும், குலிந்தரும், யாதவரும், மகாதுங்கரும், மகாதும்முகரும், இலட்சகரும், கலிங்கரும், காசேகரும், சோமதத்தனும் உள்ளிட்ட அனேகஞ் சாமந்தராலும் அக்குரோணி பதிகளாலும்.

மதங்கரும், சௌபகரும், கைகயரும், மரோவுணிமரும், கவுசுகரும், மாளுவரும், வங்காளரும், அவந்திகரும், அபங்கரும், பஞ்சப் பிரகரரும், சாதிகரும், சங்கரரும், தாசரதரும், அங்கணரும், ஆரியரும், கொங்கணரும், குலிந்தரும், கௌசலுவரும், குந்தளரும், பங்காளரும், மிலேச்சரும், சித்திரரும், காகுத்தரும், காழிகைகடங்கரும், இலாடரும், இராட்சதரும், சிசுராசனும், துருக்கரும், ஒட்டியரும், பூசுரரும், பூபலரும், பார்மன்னரும், விராடரும், மகதரும், சோனகரும், சோமகரும், பாவலரும், சேனகரும், சேதிபரும், கிராதரும், இங்கிலியரும், தெலுங்கரும், கலிங்கரும், கன்னடரும், கார்த்திகரும், காசிபராசனும், கவுசிகரும், இருபகரும், கேயூரரும், அந்திகரும், சந்திகரும், பத்திரகரும், பார்த்திபரும் உள்ளிட்ட சருவ சத்திரியராலும்,-

பூரியும், பூரிச்சிரவாவும், கௌரிமாவும், பவனரரும், அசுவத்தாமாவும், விருசசேனனும் உள்ளிட்ட சத்திரிய குமாரராலும்,-

விருசிணி வீரர் நாராயண கோபாலரும் உள்ளிட்ட அக்குரோணி பதிகளாலும்,

இராசராசன் துரியோதனனும், அவன் பிராதாக்கள் - துச்சாதனனும், விகன்னனும், துட்கருணனும், உக்கிராயுதனும், துர்மருடனனும், பிராகிதனும், சித்திரனும், சயசேனனும், சயசாமந்தனும், சித்திராயுதனும், சித்திராட்சகனும், சோத்திரதனும் அத்திரனும், ஆகாசபலனும், மகாமயந்தனும், விசசேனனும் போகபாலனும், சுராசத்தியும், சுதக்கிணனும், சக்கிரவாக்கும், சித்திரசேனனும், சித்திரவர்மாவும், சித்திரசிந்துவும், மித்திரநாதனும், குண்டபோகியும், தீர்க்கபோதனும், திகல்வியனும், தீர்க்கபோகியும், தீர்க்கபாகுவும், சலசந்தனும், மத்திரவத்தியும், சூரகுதனும், சரீகுதனும், பர்வதமல்லனும், பிரதகுண்டலனும், திவ்வியகேதுவும், பாகுவிந்துவும், மண்டல

392. இருபத் தோருகா லிருநிலத்து வேந்தர்
குருதிப் புனற்கு ளித்த கோவை—செருவழிய
வெற்றிச் சிலைவென்றான் வேல்வேந்தன் மூதாதை
கொற்றக் குருகுலத்தார் கோ.

என்றிவ்வகை சொல்லப்பட்ட அருந்தேர் வலவரில் முன்னேன்றல் முக்காலமும் உணர்ந்தோனாகிய வீடுமனைக் கருதுவது. இது துரியோதனன் நிலைமை. இப்பால் வாய்மையாளன் அறவோன் மன்னர்மன்னன் தருமன் படை யாங்ஙனங் கூடிற்றென்னில் : (௩௯௨)

393. குருநாட னோலை குவலயத்தார் காண்க
[1]வருவீர் படையோடு மன்ன—ரிருகாலு
மால்வண்ணன் வேண்ட மயிர்முனைக்கு மண்கொடாப்
போர்மன்ன னோடே பொர.

அன்றியும், (௩௯௩)

394. மாய னெழுந்தருளிக் கேட்கவு மண்ணீயாத்
தாயாதி யோடுயுத்தந் தான்மூண்டோ—[2]மாயதனு
லங்கிருந்தீ ரெங்கட் கமர்செய்ய [3]வாரீரேன்
மங்குவகை செய்தறப்போ மற்று.

---

392. குருதிப்புனல் குளித்த கோ – பரசுராமன். மூதாதை, கோ - வீடுமன்.

393. குவலயம் – உலகம். இருகாலும் – இருமுறை.

பா. வே: 1. வருக. 2. நியாயத்தா, லங்கிருந்தார் 3. வாராரேல்

வாகியும், தண்டதாரனும், சுபகனும், வீமவாகுவும், வியோமனும், வீமசேனனும், அபயனும், சோத்திரசிரவாவும், விசதரனும், சகலகனும், சக்கிரவாகுவும், பரமசினனும், மகரகுண்டலனும், குண்டலவாகுவும், தீர்க்கசூரனும், மண்டலவாகுவும், இரதிபொரனும், மகாசத்திகனும், மகாவீரனும், குமுந்திரனும், சர்வசோகனும், சித்திரத்துருமனும், மகாரட்சகனும், சத்திராசிரயனும், அமித்திரசிந்துவும், சித்திரவர்மாவும், சித்திராக்கனும், விக்கிரமவேகனும், நாகதந்தனும், துட்டபந்துவும், அங்கிராபுவும், இராசேந்திரனும், சர்வபுருடனும், சர்வகேகவிக்கினேசுவரனும், இலக்குமணனும், ஆதிநாதனும், நபோகதனும், என்றிவ்வகை யெண்ணப்பட்ட தொண்ணூற்றொன்பதின்மரும், வீடுமர், துரோணர், விதுரன், கிருபன் கன்னன் அவசுவத்தாமாவும் உள்ளிட்ட சருவ சத்திரியராலும்,—

மூன்று நூறாயிரத்து அறுபதினாயிரம் மகுட வர்த்தனராலும், ஆறு நூறாயிரத்து அறுபதினாயிரம் பட்டவர்த்தனராலும், அவர்களாற் கொணரப்பட்ட கசதுரகபதாதிகளாலும் இதற்கடைந்த பல பதினாயிரஞ் சேனாதிபதிகளாலும் வந்தீண்டப்பட்டது சாதுரங்கம்.

எ - து. தேவதேவன் எழுந்தருளி மைந்தூர் கேட்கவும் தாராத மறமன்னன் துரியோதனனோடு போர் கொண்ட எங்கட்கு அங்கிருந்த அரசர்களும் படைமன்னரும் படைத்துணையாக வரவும். வாராதளவில் அரசரில் சராசந்தனைப் போலவும் இராக்கதரில் இடும்பனைப் போலவும் அழிவு செய்வேன் என்று ஓலையும் தூதரும் போக்கிப் போகவிட்டான் தருமன். அப்பொழுது யாது நிகழ்ந்ததோ வெனில்: (௩௯௪)

395. மன்றலர்தார் மன்னவர்க்கு மாய னுடனிருந்து
போன்றியிடாத் தன்னோலை போக்குதலால்—வென்றி [தருங்
குஞ்சரமுந் தம்படையுங் கொண்டுடனே வந்தார்கள்
வெஞ்சிலைவேன் மன்னரேலா மிக்கு.

எ - து. தருமன் அறநெறியின் உறுதி வழுவாமல், கண்ணன் சென்றுரைந்து வேண்டப் பெருதவாறும் அதனால் அரசநெறி விரும்பிப் போர் செய்யத் துணிந்து படை குவியா நின்ற வாறும் மற்றும் உற்றவையெல்லாம் உரைத்து ஈண்டன் வருவீர் எனத் தன் திருமுகமும் தூதரும் தனித் தனியே திசைதோறும் போக்கி வாராநின்ற பலவேறு வகைப்பட்ட அரசர்களும் நாற் படைகளும் வந்து உபலாவிய நகரம் புகுதக் கண்டு மனமகிழ்ந்து வீற்றிருந்தான் மன்னர் மன்னர் வாய்மையாளன் தருமனைக் கருதுவது. இவ்வகை வந்து கூடின பெரும்படை யாது போன்றதோ வெனின்: (௩௯௫)

396. வாரிதனைச்[1] சென்றநந்த வாரி கலந்தாற்போல்
வாரி யடைய வருவனபோல்—வாரிதா
னோங்கூழி நாளி லொலிகடலே போன்றதே
பாங்காழி [2]வேந்தர் படை.

394. ஆயதனால்-ஆதலால். மங்குய ... ஒட்டழியும் வகை. சராசந்தன் – இவன் மகத நாட்டு மன்னன் பிருகத்ரதன் மைந்தன்; வீமனால் கொல்லப்பெற்றவன். இடும்பன் - அசுரர் குலத் தலைவன்; வீமனால் அழிக்கப் பெற்றவன்.

395. பொன்றியிடா–அழியாத; என்றது மெய்யான. குஞ்சரம்- யானை.

396. வாரி - கடல். ஒரு கடலுடன் பல கடல்கள் கலப்பது போல். வாரி - படை. பாங்கு - உயர்ந்த தன்மை.

பா. வே: 1. சென்றந்த; சென்றணைந்த. 2 வேந்தன் படை.

இவ்வகை ஏழுகடல்கள் தம்மிற் கலந்தாற்போல வந்து கூடியது படை.* இருபத்து நான்கு இலக்கத்து அறுபதி ஞயிரத்து ஒரு நூற்றெழுபது தேரும், எண்பத்திரண்டு இலக்கத்து இருபத்தோராயிரத்து அறுநூற்றுத் தொண்ணூற் றொன்பது யானையும், எட்டுக் கோடியே இருபது இலக்கத்து அறுபத்தையாயிரத்து அறுநூற்றெழுபது குதிரையும், எண்பத் திரண்டு கோடியே நூறாயிரத்து ஒன்பதிஞயிரத்து மூந்நூற் றைம்பது காலாளுங் கொண்டது ஓரக்குரோணியாக இப்படி ஏழக்குரோணிப் படை வந்தீண்டப்பட்டது வாய்மையாளன் பண்பாளன் மன்னர் மன்னன் தருமன் படை. (ந_சுசு)

---

* கூடிய படைகளைப் பற்றிய பழைய உரைநடைப் பகுதி வருமாறு :

படை. மன்னரிற் பாஞ்சால ராசன் அஞ்சனசேனனும், திட்டத் துய்மனும், சிகண்டியும், உத்தமோசாவும், உதாமனு முள்ளிட்ட பல்லாயிரம் பாஞ்சாலரும்,

மத்திரராசன் விராடராசனும், சதானிகனும், சுவேதனும் உத்தர னும் சேதிதரனுமுள்ளிட்ட வெத்தனையோ ராயிர மச்ச நாட்டரசரும்,

சூரசேனாதிபதிகளும் சாமந்தரும் கைகயராசனும் குந்திபோசனும் சத்திரதேவனும், சோமுகரு முள்ளிட்ட வக்குரோணி பதிகளும், கடோற்கசனும், அராவானும், அபிமன்னுவும், விந்தனும், சுகமோச னும், செரியசெந்தனும், மதங்கனும், மகாமாந்தனும், திரிதரனும், சத்திரதரரும், சவுராஷ்டிரரும், சோமகரும், கேதாரரும், திரிகர்த்தரும், மல்லரும், விதேகரும், தேசிகரும், தட்சகரும், பத்திரகரும், மித்திரரும், அவிந்தகனும், சுரதெணனும், பூதகி சத்தியும், சத்தியவானும், சாத்தகியும், அண்டலனும், அஞ்சனபர்வாவும், பிரத்த பண்டிதனும், சேர சோழ பாண்டியத் தொடக்கத்தாரும், பஞ்சத்துரோபதியரும் உள்ளிட்ட மகாரதராயினரும்,

மக்கள் நூறாயிரங் குமாரரும், விருசிணிவீரரும், சங்கபரும், சகோட்டிதரும், மகாசந்தனும், மகாவீரனும். குமுந்திரனும், பர்வத வேசங்கனும், மித்திரகுங்குவும், சத்திராஞ்சியனும். சுமித்திர சிந்து வும், விசித்திரவர்மாவும், ...தராட்சதனும், விக்கிரமதேவனும், நாக தந்தனும், மதங்கரும், அபங்கரும், கூபகரும், பர்வதலட்சகரும், விடங்கரும், சனமகரும், மாளுவரும், பரமகரும், பஞ்சவரும், சரா சந்தரும், கேதகரும், குண்டலரும், புண்டரீகரும், வங்காளரும், கொங்கணரும், விங்களரும், சீனகரும், சோமகரும், துருக்கரும், அசனிகரும், சூதமாக்களும், காகுத்தரும், திரிகத்தரும், சோனகரும், கந்தடரும், காலிங்கரும், விகவீரரும், அசுகரும், சமுத்திர குட்சியில் வாழ்வாரும், பர்வத வாசிகளும் உள்ளிட்ட அனேகராட்டிரத் தவனி பாலரும் அவர்களாற் கொணரப்பட்ட மகாசேனையும்,

அறுவகைப்பட்ட வணிகத்தோடு கூடத் தேவதேவ னுள்ளிட்ட தருமவீம தனஞ்சய நகுல சகாதேவரும் வந்தீண்டப்பட்ட தொகை.

397. வரிசிலையும் பல்படையு மாதவஞ்செய் தீசன்
றிருவருளாற் பெற்ற சிவேதன்—[1] குருபதியர்க்
கச்சஞ்சூழ் வேல னறற்பணைசூழ் தண்கிடங்கின்
மச்சஞ்சூழ் நாடன் மகன்.

இவ்வகை பெருவலி வீரன் அருந்தேரரிற் சூரன், அழிவல்லான் மத்திரவேந்தன், விராடன் புதல்வன் சுவேதனைக் கருதுவது. இவ்வகையினால் இரண்டுபடையும் வந்தீண்டப்பட்டது. பெருந் தானை பதினெட்டு அக்குரோணியாக வகுக்கப்பட்டது. அஃதெவ் வகையோ வெனில்: (கூகஎ)

398. [2] கரிபத்துத் தேர்மூன்று காலா யிரமாம்
பரிநூற தாகும் பதாதி—[3] வருதொகைதா
னைண்பத் திருமடங்கு தண்டா மிதுநூறு
[4] கொண்டதக்கு ரோணியின் கூறு.

அன்றியும், (கூகஅ)

399. ஒன்பதி னாயிரம் யானையோ டியானையாற்
பொன்பொதிந்த தேர்மூன்று [5] தேரொன்றுற்—கண்
[பொதிந்த
காண்டகைய வக்குதிரை யோன்றினாற் காலாளா
றுண்டகைய [6] வக்கோணி யாங்கு.

---

397. ஈசன் – சிவபெருமான். சிவேதன் – சுவேதன்; விராடன் மகன். மச்சம் – மீன். அறல் – கருமணல்; நீர். பணை – பண்ணை. "மச்சம் சூழ் நாடன்மகன் அச்சம் சூழ் வேலன் சிவேதன்."

398. பதாதி, தண்டு, அக்குரோணி இவற்றின் கணக்கு இத் துணை எனக் குறித்தது இவ்வெண்பா.

399. அக்கோணி – அக்குரோணி.

பா. வே: 1. குருபதிக்குக், கச்சஞ்சூழ் வேலன் கரும்பணையின் றண்கிழங்கின்.
2. கரிமூன்று தேர்பத்துக் காலாளோ ரைந்து.
3. வருதொகையி, லெண்பத் தொருமடங்கு.
4. கொண்டதோ ரக்குரோணிக் கூற்று.
5. தேரொன்றுய்க் - கண்புதைந்த
6. வக்குரோணி.

அஃதெவ்வகைத்தோ வெனில்,

"ஒருபெருந்தேரும் இருபெருங்களிறும்,
துரகம் நான்கும் படைஞர் ஐவரும்,
கொண்டது பதாதி யென்பதாகும்,
பதாதி முறைவழு வாமன்மும் மடங்கு,
கொண்டது சேனை யென்ப தாமே,
ஆங்கது மும்முறை கொண்டது குன்மம்,
குன்மம் மும்முறை கொண்ட தனீகினி,
அனீகினி ஐம்பதிற் றிரட்டியோ டாயிரம்,
கொண்டதக் குரோணி யென்ன மொழிந்தான்,
மூவகை யுலகமு முறைபட வேத,
பாரதம் பகர்ந்த பராசரன் மகனே"

என்றிவ்வகை சொல்லப்பட்ட* அக்குரோணியால் வந்த தொகை யினை இவ்வாசிரியத்துக் கண்டுகொள்வது. இவ்வகை பெருஞ் சேனை கூடியபொழுது கண்ணனை நோக்கி மகிழ்ந்து உளத்துடன் போற்றி யாது விண்ணப்பஞ் செய்தான் தருமன் : (கூ௯௯)

400. வெஞ்சமத்து வந்து விதுரன் பொருமாகி
லஞ்சனத்து மாலே யரணில்லை—தஞ்சமிதற்
காமாறு நாடி யறிந்தருள்செய் யென்றுரைத்தான்
கோமான் குருகுலத்தார் கோ.

வெற்றி கொள்ள வெஞ்சமரில் உற்ற காலத்துப் பின்னும் விதுரன் ஏன்று வருமாகில் முக் கடவுளராலும் வெல்ல வொண்ணா தென்னும்படி எம்பெருமானே யறிந்தருளியது. அதற்குத்தக்க விலக்கும் உண்டோ என்று தருமன் சொல்லக் கேட்டு யாதருளிச் செய்தான் கண்ணன் : (௪00)

401. மாறில்லை யென்றுரைத்த மன்னற் கெதிராகக்
கூறு முரகுயர்த்தாய் கூறக்கேள்—வேறின்றி

---

400. அரண் – பாதுகாப்பு. தஞ்சம் – எளிமை; எளியதோர் வகை. நாடி – ஆராய்ந்து.

*"முன்னே உரைநடையிலும் இரண்டு வெண்பாக்களிலும் இங்கே இவ்வாசிரியத்திலும் கூறப்பட்ட அக்குரோணி எண்ணிக்கை ஒன்றுக் கொன்று வேறுபடுகின்றன. இவை ஆராயத்தக்கன. இவையன்றி வேறு வகையாகக் கணக்கிடுதலும் உண்டு" என்பது முதற்பதிப்பின் குறிப்புரை.

வெம்பரியின் மேனகுலன் மேற்கொண்ட போதெல்லா
மம்பரமே கண்டா யரண்.

இ - து. துரியோதனனுக்காக மீண்டுவந்து விதுரன் போர் செய்யுமாகில் நம்முடைய நகுலன் பரிமேற் கொண்ட பொழுது விதுரனும் மற்றுமுள்ள போர் வீரரும் கூற்றுவனுலகில் வீற்றிருப்பதல்லால், நகுலனுக்கு மீண்டும் மிகுதியுண்டோ வென்று கண்ணன் அருளிச் செய்யக் கேட்டு மனமகிழ்ந்து பின்னு மொருகால் ஐயமாய் யாது சொன்னான் தருமன் : (௪0௧)

402. அண்ண லெமக்குரிய வாசா ரியன்புதல்வன்
றன்னைப் படைத்தலைமை செய்யுமேல்—வண்ணங்
கரியாய் கடல்வண்ணா கஞ்சனைமுன் செற்ற
பெரியா யிதற் குறுதி பேசு.

எனக்கேட்டு யாதருளிச் செய்தான் கண்ணன் : (௪0௨)

403. அவனுக் கிளையாக வண்ணற் கிளைய
விவனைப் படைத்தலைமை கட்டச்—சிவனுக்கு
மாலுக்கு மற்றை மலரோற்கு மிந்திரற்கு
மேலுக்கு மேலுளதோ யிக்கு.

இவ்வகையே கண்ணன் அருளிச் செய்து இவ்வகை யெல்லா முன்னமே சொல்லப்பட்டது கேட்டு நாம் துரியோதனன் பக்கல் தூதாக அத்தின புரத்துக்குப் போயின போது அவையிற்றுக்குத் தக்கன வினைகள் அடைத்துப் போந்தோம். ஆதலால், இனி உன்னுடைய மனத்திலுள்ள ஐயந் தவிர்ந்து கதுமெனப் போர்க் காம்படி ஒருப்படுவாயாக வென்றும் கண்ணன் அருளிச் செய்யக் கேட்டு எல்லை யில்லாத இன்ப மெய்திப் பின்னும் யாது சொன்னான் தருமன் : (௪0௩)

404. நாக வரவுயர்த்தோ னேங்கட் கரசுரிமை
பாக மளியாத பான்மையனை—வேகத்தாற்

---

401. மாறு இல்லை - தருதற்கு மற்று எதுவும் இல்லை, மன்னன்- துரியோதனன். அம்பரம் - வானம்.

402. ஆசாரியன் புதல்வன் — அசுவத்தாமன். அண்ணற்கு இளையான் — நகுலனுக்கு இளையசகாதேவன். மலரோன் - நான்முகன்.

சேதியர்கோன் வீழத் திறலாழி முன்னுயர்த்தா
யாதினிநாஞ் செய்வ தியம்பு.

எ - து. துரியோதனன் பால் நாடு வேண்டி வேள்வியாசானை விட்டதுவு மன்றித் தேவதேவனுயுள்ள எம்பெருமான் எழுந்தருளவும் சிறிதும் உணராது செற்றமே மனத்துள் வைத்துத் திண்மையே முயன்ற திருவிலோனைச் செங்களத்துத் திறலழியப் படையொடும் போர் செய்வதற்கு நாள் வரைந்து மற்றவனிடைக்குச் சொல்லிவிடுமாறும் அவன்பாற் செல்வானையும் செப்புவாயாக எனக்கேட்டுக் கடோற்கசனை அழைத்து யாது சொல்லிவிட்டானோ வெனில்: (சா0சு)

405. **தூண்டுபரித் தேரான் றுரியோ தனனறிய**
வீண்ட னவனிடைக்கு நீசென்று—மூண்டதோர்
பாரதந்தா னிற்றைக்குப் பன்னிரண்டா நாளென்று
மாரதற்குச் சொல்லிநீ வா.

எ - து. நீ சென்று துரியோதனனைக்கண்டு இற்றைக்குப் பன்னிரண்டா நாள் குருநிலவெளி போர்க்களமாகக் குறித்துப் போர்க்கொருப்பட்டுன் பெரும்படையோடும் வருவாயாக என்று சொல்லி மீண்டன் வருவாயாக என்று கண்ணன் அருளிச் செய்யக்கேட்டுக் கடோற்கசனும் விடை கொண்டுபோய் அத்தினபுரம் புகுந்து துரியோதனனைக் கண்டு வணங்கி நின்ற கடோற்கசனைக் கண்டு காணாது போல யாது செய்தான் துரியோதனன்: (சா0ரு)

406. **காய்ந்த கடோற்கசன் றன்னைக் கடைக்கணித்தும்**
வாய்ந்தவேன் மன்னவர்க்கு வாய்மாற்றந்—[1]தோய்ந்து
[சோலி
யப்பரிசி லாங்கவனைக் [2]காணானைக் காண்பரிய
வெப்பாகி யுள்ளம் வெகுண்டு

404. திறல் ஆழி-வலிய சக்கரம். ஆழி உயர்த்தான்-கண்ணன். சேதியர்கோன் - சிசுபாலன். இராச சூய வேள்வயில் சிசுபாலன் கண்ணனை மிக இகழ்ந்து பேச ஆழிப்படையால் கண்ணன் அவனை அழித்தான். இக்கதை இவ்வெண்பாவில் சுட்டப் பெற்றது.

405. காய்ந்த - சினந்த. தோய்ந்து-பணிவமைந்து. அப்பரிசில்-அத்தன்மையை. காண்பரிய - முன்னைக் கண்டறியாத. காழ் - வைரம்.

பா. வே: 1. தோர்ந்து சொலு மப்பரிசி.
2. காணாது.

எ - து. அருகிருந்த வேல்வேந்தர் தம்மை நோக்கி வினைத் தொழில் விளம்பிப் பணிந்தெழுந்து நின்ற கடோற்கசனைக் கண்டுங் கண்டிலான் போல் இருந்த துரியோதனனை நோக்கிப் பெருவிரைவாற் சினங்கன்றிக் காழ்த் திண்டோள் புடைபரப்பி யாது செய்தான் கடோற்கசன் : (௪௦௬)

407. மன்ன னினி திருந்த மண்டபத்துப் பொற்றூணைத்
தன்னெடுந்தோ ளான்மிகவுந் தாக்கினான்—முன்னிருந்தா
ரொன்றொருவ ரொன்றொருவ ரோடவுடைந் துக்கதே
[1]பொன்றிணிந்த மாடப் பொருப்பு.

எ - து. மன்னர் மன்னன் துரியோதனன் பொருட்டாக எண்ணாது இனிதிருந்த இலங்குமணி அவைக்களத்து எழில்மணிப் பொற்றூண் பொடியாக மண்டபம் இடிந்து வீழ அரசர்குழாம் இரிந்தோட அங்கிருந்து புறப்பட்டு மிகுவிரைவுடன் நின்ற கடோற்கசனை நோக்கி யாது சொன்னான் துரியோதனன் : (௪௦௭)

408. நேர்நின்று [2]யுன்பேர் நிகழ்த்துதிநீ யெங்குறைவை
யாரோதா னென்முன்பு நீவந்த—காரணமென்
மண்டபந்தான் றூணைகீழ வந்துற்ற [3]தேதென்றான்
கொண்டகுற்றங் கொண்டிருந்த கோ.

என்றிவ்வகை துரியோதனன் வினவ யாது சொன்னான் கடோற்கசன் : (௪௦௮)

409. பாண்டவரும் பாம்பணையான் றானும் பணித்தவுரை
யீண்டனுனக் கெல்லா மியம்புவன்கேள்—பூண்ட
மணியினாற் பூணாரும் [4]வாழ்வீமன் றன்சே
யணியினா னீயறிய வாங்கு.

என்று பின்னுஞ் சொல்லுங் கடோற்கசன் : (௪௦௯)

---

407. உக்கது - உதிர்ந்தது; பொடியாயது. பொருப்பு - மலை.

408. நிகழ்த்துதி - கூறுவாயாக. எங்குறைவை - எங்குள்ளாய்; எங்கு வந்தாயுமாம்.

409. சேய் - மைந்தன். அறிய - அறிவாயாக.

பா. வே: 1. பொன்றில் சூழும்.
2. யுன்பேரென் னீயெங் குறைகின்றாய்.
3. தேனென்றான்; தென்னென்றான்.
4. வாள்வீமன்.

410. மண்டபத்தில் வீற்றிருந்த மன்னர் தமக்கெல்லாங்
கண்டிகை யன்னதிறற் காவலன்கேள்—விண்டார்
வெருவத்தண் டேந்தும் விறல்வீமன் மைந்தன்
பெருகடோற்க சன்காண் பெயர்.

எ - து. "பாண்டவரில் ஏறனையான் தூண்டு சினத்து அரிவீரன் வீமன் புதல்வன் கடோற்கசன் காண்யான்; தருமனும் கண்ணனும் விட்ட பணியினாலுன் பக்கலில் வந்தேன்; இனி முன்னம் வேண்டிய நாடு இன்னந் தருவையாகில் நின்பணி தலைமேற் கொள்வோம். அதன்றி மறுத்துரைக்கின் மறமன்னா, துரியோதனா, இனிப் பாரதப்போர் இற்றைக்குப் பன்னிரண்டாம் நாள்" எனச்சொன்ன கடோற்கசனை நோக்கி யாது சொன்னான் துரியோதனன் : (௪கo)

411. உன்னளவோ முன்ன முரைத்துப் பெருந்தோழிந்தார்
மன்னவர்கோன் றன்னை மறந்தனையோ—வின்ன
[முந்தான்
பாராளு மாசையோ வேன்று னரவுயர்த்தோன்
போராளு மாறே புரிந்து.

எனக்கேட்டு யாது சொன்னான் கடோற்கசன் : (௪கக)

412. மாலை முடிபுனைந்த மன்னவனைத் தானிறைஞ்சிச்
சீல மவையறிந்து செப்பினான்—கோலத்தாற்
பார்தருவை[1] யல்லையேற் பாண்டவர்க்கீ ராறுநாட்
போர்தருவா யீண்டநீ போந்து.

என்று கடோற்கசன் வெகுண்டுரைத்தது கேட்டு நீயுரைத்த பாரத நாள் பன்னிரண்டாவது சாலத் தொலைவுண்டாதலால்

---

410. கண்டிகை - பதக்கம்; நடுமணி. விண்டார் - கூறியவர்.

411. உன்னளவோ - உன்னை மட்டுமோ? 'யான் மன்னன் என்பதை மறந்து விட்டாயோ' என்றது கடோற்கசன் செயலையும் உரையையும் நோக்கி.

412. சீலம் - ஒழுங்கு; முறைமை. ஈராறும் நாள் - இற்றைக்குப் பன்னிரண்டாம் நாள்.

பா. வே : 1. யல்லையோ பாண்டவர்கள் பேசாதே.

இற்றைக் கெட்டா நாள் குருநில வெளியில் வந்து போர்க்காம்படி நிற்பீர் என்று துரியோதனன் சொல்லக் கேட்டுக் கதுமென மற்றவனை முன்கை சாற்றி அரியெனச் சிதற நோக்கி யான் வேண்டிய திதுவன்றோ எனப்பேசி, நீயு மீண்டெனை வந்தெமக்குப் போர் தருவாயாக என்று கடுத்துரைத்து மற்றந்தத் துரியோதனனை விட்டு நீங்கி உபலாவிய நகரம் புகுந்து தருமனைக் கண்டு உற்றதெல்லாம் உரைத்தது கேட்டுப் போர்க் கொருப்பட்டார் பாண்டவர்கள் என்றவாறு. (சகஉ)

படைத்திரட்சி முற்றும்.

களப்பலி

இப்பால் கடோற்கசன் வந்து சொல்லிப் போனபின்பு எல்லை யில்லாததோர் கவலை யெய்தித் தன் தானைக்குத் தலைவனாகிய வீடுமனையழைத்துத் துரியோதனன் சொல்லுவான்; பாரதப்போர் வெல்லக் களப்பலி யூட்டுதற்கு நமக்கான நாளும் முழுத்தமும், மயிரிலக்கணமும் உடையார் யாரோ என்றும் இதற்குச் சொல்லத் தக்க முக்காலமும் உணர்ந்தாரை உரைப்பாயாக என்று பார் வேந்தன் வினவக் கேட்டு யாது சொன்னான் வீடுமன் :

413. திருவொப்பார் நின்னுடைய செஞ்சோ திடத்தி
லுருவொப்பா ராரோன் றுரைக்கின் —[1] மருவொப்பார்
மாதேவ ரல்லரேன் மன்னு மிரட்டையரிற்
சாதேவற் குண்டோ தரம்.

எ - து. மூவுலகிலுள்ள எல்லா உயிர்கட்கும் செல்காலம் வருங்காலம் இவையறிந்து வாய்மையாளனுமாய்ப் பெரியோனுமாய் உள்ள சகாதேவனை அன்றிக் கணியத்தில் யாவருமில்லை; ஆதலால், சகாதேவன் போர்க்குத் தக்க நாளும் முழுத்தமும் சொல்லுமாகில் மூவுலகுங் கூடிவரினும் முக்கடவுளராலும போரில் வெற்றிகொள்ள அரிது கண்டாய்; ஆதலால் கணியம் சொல்லவல்ல முக்காலமும் உணர்ந்தோர் இல்லை; அவனைப் பகைவரைச் சேர்ந்தான் என்று கருதாது கடிதுபோய் நாளும் முழுத்தமும் வேண்டி வருவாயாக என்று வீடுமன் சொல்லக் கேட்டு யாது சொன்னான் துரியோ தனனை : (சகங)

414. முகூர்த்தமிட நாங்கண் முனியாது [2]சொன்னாற்
செருத்து நினைவறிந்து [3]சொன்மோ —பகுத்தருளாய்

---

413. உருவொப்பார் — சோதிடத்தில் களப்பலிக்குக் கூறப் பெற்றுள்ள உருவ ஒப்புடையார். மரு — மணம். மருவு ஒப்பார் — இணை பொருந்துவதற்கு எவரும் ஒப்பாகாத. மாதேவர் — சிவ பெருமான். இரட்டையர் — நகுல சகாதேவர்; மத்திரையினிடத்து இரட்டையராகப் பிறந்தவர் அவர்களாகலின்.

414. முகூர்த்தம் - முழுத்தம்; நல்லபொழுது. சொன்மோ — சொல்லுவாயே. பகுத்தருளாய் — ஆராய்ந்து கூறாய், பற்றலர் — பகைவர்.

பா. வே : 1. மருவொப்பான் மாதேவ னல்லனே.
2. சென்றால்.
3. சொல்லல்.

பற்றலரைக் கண்டாலும் பாங்குரைத்தாற் பாண்டவர்க்கு
முற்றுமதோ வென்றான் முயன்று.

எ - து. சகாதேவன்பால் யான் போனால் மாற்றலன் எனக்கருதாது மகிழ்ச்சியுடன் உற்றது கேட்டுப் போர்க்குத் தக்க நாளும் முழுத்தமும் சொல்லுமோ வென்று துரியோதனன் ஐயுற்றுக் கேட்க யாது சொன்னான் வீடுமன் : (சகச)

415. வைதவங்கள் செய்தாலு மன்னவனே பஞ்சவரிற்
கைதவங்கள் செய்வாரைக் கண்டறியோம்—பையவே
யேதேனும் வேண்டிக்கொண் டிங்குவர [1]வேகுதிநீ
சாதேவன் றன்பாற் சமைந்து.

எ - து தருமன் முதலாயுள்ள ஐவர்க்கும் வாய்மையுரையுளது கண்டாய்; அதன்றிச் சகாதேவனுவான் முழுதுணர்ந்தோனுமாய், வாய்மை நோன்பாளனுமாய் இருக்கும் ஆதலால், நீயும் உன் மனத்துள்ள ஐயந்தீர்ந்து ஈண்டன் மற்றவன்பால் போவாயாக என்ன உடன்பட்டு யாது செய்தான் துரியோதனன் : (சக௫)

416. வேகத்தா னுண்முகுர்த்தம் வேண்டி விரைவிரைந்து
நாகத்தா னற்கோடியோ னன்றியுடன்—பாகோத்த
சொல்லான் விசுவகன்மாத் [2]தோன்றுயே யென்றுசொல்ல
நல்லானுந் தானினைந்தா னுங்கு.

(எ - து.) இவ்வகை யாவரும் அறியாமல் உபலாவிய நகரம் புகுந்து சகாதேவனைக் கண்டு பாரதப்போர் வெல்வதற்கு நன் முழுத்தமும் நாளும் கேட்டு இற்றை இரவின் கண்ணே மீள வேண்டும் ஆதலால், அதற்கு விண்ணில் ஓடத்தக்க தோாக வேண்டு மென்றும் மற்றதற்குத் தேவதச்சனை வெளிப்படுத்திக் கொண்டு மற்று அவன் பக்கல் மாயத் தேர்வேண்டிக் கொள்வேன் என்றும் நினைந்து, தேவதச்சனை நினைக்க அவனும் அப்பொழுதே யாது செய்தான் : (சகசு)

---

415. வைது அவங்கள் செய்தாலும் - வைது அடாச் செயல்கள் செய்தாலும். கைதவம் – கரவு, வஞ்சம். சமைந்து - ஒருப்பட்டு.

416. விரைவிரைந்து - மிக விரைந்து. பாகு + ஒத்த + சொல் = பாகொத்த சொல். நல்லான் - தேவதச்சன்; விசுவகன்மா.

பா. வே; 1. வேகுதியாற்.
2. தோன்றுயெனச் சொல்லி.

417. வேந்தர் பெருமா னழைத்தா னெனவிரைந்து
சார்ந்து தவமுனியைத் தான்கண்டு—பூந்தார்
விசுவகன்மாத் [1]தோன்ற மிகவிரும்பிப் பாரா
ணசையினாற் சென்றணைந்தா னாங்கு.

இவ்வகை துரியோதனன் நினைத்தலும் தேவருலகத்தில் ஒரு பூங்காவில் இருக்கின்ற தேவதச்சனும் வந்து தோன்ற, மற்றவனை யெதிர் கொண்டு மற்றவனுடன் அளவளாவிச் சிறிது பொழுது இருந்த பின்பு யாது சொல்லி வேண்டிக் கொண்டான் துரியோதனன் : (சுகஎ)

418. பாண்டவர்கள் தம்பதிக்குப் பாயிருளிற் போய்மீளக்
காண்டகுசீர் மாயத்தேர் காதலித்தேன்—மீண்டுமது
வாகாயத் தோடி யரைநா ழிகையில்வரும்
வாகாய தேர்தா மகிழ்ந்து.

எ - து.) பாண்டவர்கள் படைவீடாகிய உபலாவிய நகரத்திற்கு இற்றை இரவின் கண்ணேபோய் யாவரும் அறியாமல் மீள வேண்டும் ஆதலால், மற்றதற்குப் பெருமாயையான தேருமாய் யாவரொருவர் கண்டால் மற்றவர்க்குத் தெரியாத வண்ணமாய் ஒரு தேர் சமைத்துக் காட்டி மற்றதனை யாது சொல்லிக் கொடுத்துப் போயினனோ வெனில் : (சுகஅ)

419. ஈங்கிவன்றன் சொற்படியே யிற்றையிரா விங்கியங்கிப்
பாங்குடனே வான்போம் படிபணித்—தாங்கண்
விசுவகன்மாப் போயினன் வேல்வேந்தன் பாரா
ணசையினாற் றேர்புகுந்தா னன்கு.

இவ்வகை துரியோதனனுக்குத் தேவதச்சனும் தேர் கொடுத்து, இற்றை இரவு இங்கு நின்று துரியோதனன் மனத்தின்படி இயங்கி இரவு கழிந்தால் வானுலகம் போம்படி

---

417. பாரான் நசை – பாராளும் விருப்பு.

418. பாண்டவர்கள் தம் பதி - உபலாவியம். பாயிருள் - பரவிய இருள். வாகு + ஆய = வாகாய. வாகு – அழகு; ஒழுங்கு.

419. ஆங்கண் - அவ்விடத்து. நசை - விருப்பு.

பா. வே : 1. தோன்றி விரும்பிப்பா ராளு.

பணித்துத் தேவருலகு போயினன். பின்னைத் துரியோதனன் மற்றந்தத் தேரேறித் துணிவுடைய நெஞ்சத்தனாய் யாது செய்தான் : (சகக)

420. பாண்டவரை வெல்வதற்குப் பாரதப்போர் செய்யுநாள்
வேண்ட விரைந்தேகி வேல்வேந்தன்—மூண்டதோ
ராரிருளிற் சென்றங் கவர்க் [1]கிளைய னென்கோவைப்
பேரிருளிற் கண்டான் பெயர்ந்து.

எ - து. தேவ தச்சனாற் சமைக்கப் பட்டதோர் சிரிய தேர் ஏறி நள்ளிரவில் யாவரும் அறியாமல் உபலாவிய நகரம் புகுந்து சகாதேவன் கோயிற் சென்றணையும் அளவில் வானகத்தே வருகின்ற சிரிய தேர் யாதோவென்று தன் மணிக்கோயிற்றலத்து நின்று சகாதேவனும் முன்னறிந்து எதிர்கொண்டு தன் கோயிலுட் புகுந்து மணியணையில் வைத்து நின்று யாது சொன்னான் சகாதேவன் : (சஉ0)

421. எம்பெருமா னென்பா லெழுந்தருளி வந்ததுநீ
யம்போன் முடியா யருளென்றான்—வம்பின்
வளங்கோக்குந் தாரலங்கன் மன்னவர்கட் கெல்லாம்
இளங்கோவாய் வீற்றிருந்த வேறு.

இவ்வகை எம்பெருமான் எழுந்தருளின பணி என்கொலோ என்று சகாதேவன் வினவக் கண்டு யாது சொன்னான் துரியோதனன் : (சஉக)

422. வண்மை[2] யுடையாய் மறுயென்ப ராதலா
லுண்மை யுனக்குரைத்தே னுங்களுடன்—[3]றிண்மைப்
படைகருதி மூண்டாற் பலிக்குநாட் சொல்லி
விடைதருவா யென்றான் விரைந்து.

---

420. ஆர் இருள் - எதனையும் காணுதற்கு அரிய இருள். இளையகோ - சகாதேவன். என் - என்கின்ற.

421. அலங்கல் - மாலை. ஏறு - அரிமா.

422. படை கருதி மூண்டால் - வீரர் போர் கருதி முன்னிட்டால்.

பா. வே : 1. இளைய வெங்கோவை.
2. யுடைமை. 3. திண்ணம்.

எ - து. நீ வாய்மை நோன்பினன் என்றும் முக்காலமும் உணர்ந்தோனென்று முன்பக்கல் ஒரு வரம் வேண்டி வந்தேன், இது நீ தருவாயாகில் உங்களுடன் உண்டான பாரதப் போர் வெல்வதற்குத் தக்க நாளும் முகூர்த்தமும் எனக்கு உரைத்துக் களப்பலிக்கு ஆவார் இவரென்றும் உரைத்து இளங்கோவே யீண்டன் விடுப்பாயாக எனக்கேட்டு உடன்பட்டு மருது அவன் பணி தலைமேற் கொண்டு யாது சொன்னான் சகாதேவன் : (௪௨௨)

423. பைம்போற் றனுவிற் பருவத் திளைப்பெற்ற
[1]வம்போன்சே யங்குர வாரத்து—வம்பு
கோளப்போலியுந் தார்வேந்தே குன்றுமற் சென்று
களப்பலியூட் டென்றான் கடிது.

எ - து. வில் ஞாயிற்றுமுதற் காலில் வியாழன் எழும் சீரிய நாளில் அருச்சுனன் மகன் அராவான் பாலுள்ள செந்நீரும் ஊனும் கொண்டுபோய் ஈண்டன் களப்படையல் ஊட்டினால் முக்கடவுளராலும் வெல்ல வொண்ணாதென்று சகாதேவன் கணியஞ் சொல்லக்கேட்டு விரும்பிய மனத்தனாகி யாது சொன்னான் துரியோதனன் : (௪௨௩)

424. பாராள வேண்டியே பாண்டவர்க ளெம்மோடு
நேராகப் பாரதப்போர் நேர்ந்தக்காற்—சீராரும்
வேந்தனே யுங்களைநான் வெல்வேனோ வென்றுரைத்தான்
சாந்தமோன் றில்லான் றரித்து.

எ - து. அரசு செய்ய வேண்டி யுங்களுடன் பாரதப் போர் பொருத காலத்து வெல்வேனோ தோற்பேனோ சொல்லுவாயாக என்று துரியோதனன் கேட்ப மணிமுறுவல் அரும்பநின்று யாது சொன்னான் சகாதேவன் : (௪௨௪)

---

423. "தனுநாயிற்றுப் பூருவ பருவத்துப் பிரகஸ்பதி யுதயத்துத் திவ்வியமான திவசத்து அருச்சுனன் மகன் அராவான் பாலுள்ள சுரோணிதமு மாங்கிசமும் கொண்டு போயீண்டன் களப்பலி யூட்டினானுன்னைத் திரிமூர்த்திகளாலும் வெல்ல வொண்ணா தென்று சகாதேவன் சோதிட சாத்திரஞ் சொல்லக் கேட்டுப் பிரியப்பட்ட மனத்தனாகி யாது சொன்னான் துரியோதனன்" என்பது இதன் பழைய உரைநடை

424. சாந்தம் – பொறுமை. தரித்து - அமைந்து.

பா. வே : 1. வம்பொற்சே யங்கார.

425. பாராளு மன்னர் படைவேண்டிப் பாரதப்போர்
நேராக நீமலைந்து நின்றக்கால்—சீராரு
மன்னவனே கேட்டருள்வாய் வன்செருவிற்
[1]மன்னவன்றே வெல்வர்காண் மற்று. [ரும்பெரியோர்

எ - து. எம்பெருமான் எங்களுடன் பாரதப் போர் வேண்டி எதிர்மலைந்த காலத்துப் போர்க்களத்தில் யாவரொருவர் பெரியார் ஆங்கவரே வெல்வதற்கு ஐயமில்லை என்றும் யாவரொருவர் இம் முழுத்தத்திற் களப்படையலிட்டார் ஆங்கவரே வெல்வர் என்றும் சொல்லக் கேட்டு மகிழ்ந்த மனத்தனாகி மற்றவனைவிட்டு நீங்கி யாது செய்தான் பார்வேந்தன் : (௪௨௫)

426. தானாக யாரிடைக்குஞ் சென்றறியாத் தார்வேந்தன்
[2]வானா ரிருள்சேர்ந்த மாக்கங்குன்—மான
வாராவானை வேண்டும் பலியதற்கு [3]நல்கி
யிராவகத்தே சென்றா னெதிர்ந்து.

இவ்வகை துரியோதனனும் போந்து யாவரும் அறியாது சகாதேவன் சொற்படி கிணைந்து அராவான் கோயிற் புகுந்தாராவானைக் கண்டவிடத்து மற்றவனுங் கதுமென வெழுந்திருந்து வணங்கி அடியேன் பால் எழுந்தருளும் அதென் கொலோ வெனக் கருதிக் கவலை யெய்தி யாது சொன்னான் துரியோதனன் : (௪௨௬)

427. இவ்வளவும் யார்பாலுஞ் சென்றேன் றிரந்தறியே
னெவ்வளவும் வந்தறியே னென்மகனீ—செவ்வி
வரந்தருவா யாகென்று வாழ்த்தினான் செம்மை
நிரந்தரமாக் கொண்டான்பா லின்று.

இவ்வகை சொல்லி இரப்பக் கண்டு மருது, பணி தலைமேற் கொண்டு யாது சொன்னான் அராவான் : (௪௨௭)

---

425. மன்ன - விளி ; நிலைபெற என்றுமாம். அன்றே - அப்பொழுதே.

426. இடைக்கும் - இடத்திற்கும். மாக்கங்குல் - பேரிரவில். மானம் - பெருமை. இராவகத்து - இரவு.

பா. பே : 1. மன்னவரே. 2. வானா ரொளி சேர்ந்த மாக்கோல — மான. 3. நல்க.

428. பாண்டவரி லேறனையான் பார்த்தனோ வென்றதனை
நீண்ட புகழ் மன்னவனே நீயன்றோ—வேண்டுவது
வேண்டிக்கோள் ளென்றான் விறல்வேந்த ரைவரைப்போ
ரீண்டுவிக்கு மன்ன னிசைந்து.

எனக்கேட்டு யாது சொல்லி வேண்டிக் கொண்டான் துரியோதனன் : (சஉஅ)

429. தாரகஞ் சேருந் தலையுவாச் [1]சந்தித்தால்
வீரமுறு நின்னுடைய மேனிமேற்—சீருறுப்பா
மூப்பத் திரண்டு [2]முகுசேங் குருதியையுந்
தப்பின்றி யேயெனக்குத் தா.

எனக்கேட்டு யாது சொன்னான் அராவான் : (சஉகூ)

430. இப்போழுதே வேண்டினுங் கோண்டுபோ வில்லையே
லப்போழுதே வந்திட் டறுத்துக்கோ—ளெப்போழுதும்
வேண்டினாய் வேண்டிற்றைப் பெற்று யெனவுரைத்தான்
காண்டகைய செல்வன் கலந்து.

எ - து. இறமும், முப்பத்திரண்டு உறுப்பிலுங் கலந்துள்ள செந்நீரும் ஊனும் இப்பொழுதே யாகிலும் உனக்கு வேண்டின பொழுதாயினும் வாங்கிக்கொண்டு போவாயாக என்று தன் உடலை மறுவண்ண மேற்கொண்டு துரியோதனனுக்குக் கொடை கொடுத்து, அராவானுடைய வாய்மையும் வேண்ட மருத பெருஞ் சிறப்புங்கண்டு வியந்து 'இப்பொழுது வேண்டா; வருகின்ற காருவா நாளுக்குத் தருவாயாக' என்று சிறிது எண்ணி மகிழ்ந்து நின்ற பார்வேந்தனைக் கண்டு பின்னும் யாது சொன்னான் அராவான் : (சங0)

---

428. போர் ஈண்டுவிக்கும் - போர்க்கு இழுக்கும்.

429. உவா - மதிமறைநாள். தலையுவா - மதிமறைந்து வளர் பிறையாகிய முதல் நாள். தாரகம் — உச்சி விசை. உகுதல் — ஒழுகுதல்.

430. வேண்டிற்று — வேண்டியதை. காண்டகைய - காண்பார் விரும்பிக் காணத்தக்க.

பா. வே : 1. சிந்தித்தா லீருறுப்பு. 2. முகுதற்.

431. உன்கருத்தே போலப் பிறரை யுணராதி
நன்குரைத்த கட்டுரைநீ நாணுதி—யென்கருத்தா
லீண்டநீ பெற்று யிரண்டுரைப்பா ரீங்கில்லை
மூண்டசின மன்னரைப்போன் மூன்.

எ - து. நீ வேண்டிற்றுத் தந்தேன்; இதற்குக் கவலைப் படாமற் போய் உனக்கு வேண்டின நாளில் வந்தாலுந் தருவன் கண்டாய்; அது நிற்க, எங்களில் உங்களைப்போல மறுத்து இரண்டு உரைப்பாரில்லை கண்டாய்; ஆதலால், ஈண்டன் நீ போவா யாக என்று அராவான் உரைப்பக்கேட்டு எல்லையில்லாததோர் மகிழ்வெய்தித் தன் மனக் கருத்தின்படி முற்றுவித்து அராவானை விட்டு நீங்கி நாடு இனி யென்னதென்று கதுமென மீண்டுபோந்து இரவின்கண் அத்தினபுரம் எய்தித் தன் கோயிற் புகுந்து பள்ளி கொள்ளப் புக்கான் துரியோதனன் என்றவாறு. அப்பொழுது : (சங்க)

432. வைய மிருள்பறப்ப மாக்கமலம் வாய்திறப்பப்
போய்கைகளும் வாவிகளும் புட்சிலம்பச்—செய்யகதிர்
மன்னவர்க ளெண்ணமது மாய்த்திடவே தான்கருதி
யன்னகடன் மீதெழுந்தா னங்கு.

எ - து. கதிரோன் எழுதலும் பார்வேந்தனும் பள்ளி யுணர்ந்து அவைக்களம் புகுந்து வீடுமனையும் திருதராட்டிரனையும் அழைத்துக் கொண்டினிது இருக்கு மளவில் யாது நிகழ்ந்ததோ வெனில் : (சஙஉ)

433. பாயிருளிற் போய்மீண்ட பைம்பொ னெடுந்தேரு
மாயமென விண்ணின் மறைந்தபின்னைத்—தாயமினி
யென்னதே யாமென் றுரைத்தானே யெல்லோர்க்கு
மன்னர்கோ னுள்ள மகிழ்ந்து.

இவ்வகை தேவதச்சனால் கொடுக்கப்பட்ட தேரு மற்றவன் சொற்படியே கதிரோன் எழுங்காலங் கண்டு விண்ணுலகம் போன பின்னை, துரியோதனனுந் தான் அந்த இரவில் உபலாவிய நகரம்

431. நாணுதி - வெட்கமுறுதே. இரண்டுரைத்தல் - சொல்லை மாற்றிக் கூறுதல்.

432. பறப்ப-பறந்தோட; ஒழிய. புட்சிலம்ப - பறவை ஒலிக்க.

433. பாயிருள் - பரவிய இருள். தாயம் - நாட்டுரிமை.

புகுந்து சகாதேவனைக் கண்டவாறும், மற்றவன் சொற்படியே அராவான் பக்கற்போய் அங்கவனைக் கண்டு களப்படையலுக்குத் தக்க செந்நீரும், உறுப்பும் பெற்றவாறும் சொல்லி 'நாடு இனி என்னதே' என்று மனமகிழ்ந்து இனிதிருந்தான் என்றவாறு. இப்பால் இரவு நீங்கித் தேவதேவன் கண்ணன் பள்ளியுணர்ந்தருளி இரவின்கண் துரியோதனன் வந்து சகாதேவனால் வரைந்து கொண்ட நாளும், அராவான் களப்படையலுக்கு இசைந்தவாறும் திருவுளத்தே நினைந்தருளித் தருமனையும் தம்பிமாரையும் அழைத்து அருகிருத்தி, மற்றவர் உறவினர்களான விராட வேந்தன் தொடக்கத்தாரையும் பாஞ்சால வேந்தனையும் அருகு கொண்டு ஊழிக்காலத்துச் சினத்தீ உடன்று எழுந்தாற்போலச் சீற்றம் எய்தித் தருமனை நோக்கி யாதருளிச் செய்தான் கண்ணன் : (சங௩)

434. எத்திசைக்கு மிங்கிருந்தே யேதிலர்க ளெண்ணாதே
சத்தியமே சொல்வ தேனச்சமைந்து—புத்திகெடப்
பாங்குரைப்பீ ராயினீர் பார்கோடா மன்னவற்கா
யீங்கெமதாற் [1]செப்புவதே யின்று.

எ - து. நீங்கள் வாய்மை நோன்பி என்று அனைத்துலகங் களுக்கும் ஒளிகளாய்ப் பகைவர்கள் நண்பர்கள் என்று உரையாது வாய்மையுடனிற்றலால் இரவின்கண் துரியோதனன் வஞ்சனை களால் வந்து வேண்ட வரம்மறுது பணி தலைமேற்கொண்டு தனக்குப் போர்க்கு வெற்றி புரியத்தக்க நாளும் முழுத்தமும் அவனுக்கு ஆயிற்று ; மற்றினி அவரை யாவராலும் வெல்லல் அரிது கண்டீர் ; இதற்கும் இனி என்னுற் சொல்லத் தக்கன செய்யத் தக்கன இல்லையென்று தருமன் முதலானவர்களையும் அவர்க்கு அருகிருந்த அரசர்களையும் நோக்கி உரைத்து முனிவுற்று மிகு சினமாகிய கண்ணனை நோக்கி யாது விண்ணப்பஞ் செய்தான் தருமன் : (சங௪)

435. சேரார் தமக்குவரஞ் செய்தேமக்குத் தீங்குரைத்தா
ராரா ரேனவாங் கடிதொழுது—கூராழிக்

434. ஏதிலர் - பகைவர். சமைந்து – உறுதிகொண்டு. பாங்கு ரைப்பீர் – உள்ளவாறு கூறுவீர். எமதால் - எம்மால். செப்புவதே இன்று - சொல்வதற்கு ஒன்றும் இல்லை.

435. சேரார் - பகைவர். ஆரார் - அடுக்கு ; ஆர் ஆர் என்பது. அரவான் உறுதியுரைத்ததை அறியார் ஆகலின் ஆர் ஆர் என்றனர். பாண்டவர் கோன் – தருமன்.

பா. வே : 1. செப்புவதெனின்று.

கோற்றவனே யெங்கள் குலவேந்தே கூறென்றான்
வெற்றிதரு பாண்டவர்கோன் மிக்கு.

என்று இவ்வகை தருமன் சொல்லக் கேட்டு யாதருளிச் செய்தான் கண்ணன்: (சஙரு)

436. பாரதத்தை வெல்வதற்குப் பாங்காக நன்முகூர்த்தங்
காருறைத்த பூகங் கழுத்தொடிய—[1]வாரல்
குதித்தேறு கங்கைக் குருநாடா வும்பி
மதித்தாற்கு மீந்தான்காண் மற்று.

எ - து. வீமன் அருச்சுனன் இருவரும் ஒழிய மற்றவர் வாய்மை கோன்பினர் என இருந்து பகைவளுகிய துரியோதனனுக்கான நாளும் முழுத்தமும் சகாதேவன் வரைந்து கொடுப்பக் களப்படையல் ஊட்டுதற்கு அராவான் செந்நீரும் ஊனுங் கொடுப்ப வகைபுரிந்து வாழ்கின்றார் உன் தமபியும் உன்மகனும் என உரைத்து மிகவும் முனிந்தருளி, எம்மாற் போர்க்குத் தக்க வெற்றியுள நாளும் முழுததமும் வரைய அரிதென்று அருளிச்செய்து கதுமென அரியணை விட்டு நீங்கித் திருத்துவரையம்பதிக்கேற எழுந்தருளுவதாகத் தன் மணித்தேரைப் புரவிபூட்டென அருளிச் செய்து சாத்தகியும் மக்கள் எல்லாரும் புடைசூழ அவைக்களம் விட்டுப் போதும் எல்லைக்கண் பாண்டவரும் உடனெழுந்து மிகவும் அச்சமும் கவலையும் எய்திக் கண்ணனை நோக்கி வணங்கி யாது விண்ணப்பஞ் செய்தான் தருமன்: (சஙசு)

437. என்னுடைய பேதைமையு மெம்பிமார் பாலிதையு
மன்னிடைமுன் மண்ணிழந்த மாட்டாங்கு-முன்னுடைய
பொற்பாத மேயடையப் போமன்றே போங்கோள்சேர்
புட்கரசா வென்றான் புகழ்ந்து.

எ - து. என்னுடைய பேதைமைகளாலும் என்னுடைய உடன்பிறந்தார் அறியாத தன்மைகளாலும் வந்துண்டான

436. காருறைத்த - மேகத்தைப் பொழியவைத்த. பூகம் - கமுகு. கழுத்து – உச்சி. ஆரல் – ஆரல்மீன். உம்பி - உன்தம்பி; சகாதேவன்

437. பாலிதை - அருள்; பால்போன்ற வெள்ளைத்தன்மையுமாம். அஃதாவது கரவில்லாமை. மாட்டாங்கு - ஊழின் மாட்டுதலும். புள்– பறவை. என்றது கலுழன்

பா. வே: 1. வாளை.

தீமைகளும் நாடு இழந்து திரிகின்ற துன்பமும் உன்னுடைய திருவடிகளை வழிபட்டு நிற்கும் எமக்கு நிற்குமோ என்றும், அது நிற்க, மற்றென்னால் வீம அர்ச்சுனரால் விளையப்பட்டன சொல்லப் பட்டன அனைத்தும் உண்டாகிற் பொறுத்தருளி எங்களைக் காப்பாயாக என்றும் தருமன் விண்ணப்பஞ் செய்து வணங்கக் கண்டு யாதருளிச் செய்தான் கண்ணன் : (சஙஎ)

438. [1]நீதியா னின்ற பதினாலா நாடன்னை
யாதி யமாவாசை யாக்கலாஞ்—சோதிமதி
யாதித்த னோடே யமர்ந்திருக்க வேதியராற்
சாதித்துக் கோள்வதுகாண் [2]சார்பு.

எ - து. பதினான்காம் நாளைப் பதினைந்தாம் நாளாகப் பணித்துக் கொள்வதாக உறுதிப் படுத்திப் பாரதப் போர் வெல்வதற்கு ஒரு வழியுண்டென்று கண்ணன் அருளிச் செய்யக் கேட்டுப் பாண்டவரும் விரும்பி அருளிச் செய்வாயாக என மற்றவரைக் கைகவித்து அராவானை நோக்கி யாதருளிச் செய்தான் கண்ணன் : (சஙஅ)

439. வண்மை வரிசிலைநூல் வல்லாண்மை சீர்மேன்மை
திண்மை திருவுடைமை தீதின்மை—யுண்மை
யுருவஞ் சுடருலக முன்னுடனே யென்னை
மருவும் படி [3]மதிக்கு மற்று.

எ - து. மயிரும் செந்நீரும் அனைத்தரச இலக்கணங்களும் என்னோடு ஒப்பை; நம் மிருவரில் ஒருவர் களப்படையலாக வேண்டும்; ஆதலால், இனி இவனை யொழிய என்னுடைய செந்நீரும் ஊனும் வாங்கிக்கொண்டு நீங்கள் களப்படையல் ஊட்டுவீராமின் என்று அருளிச் செய்யக் கேட்டு மிகவும் அச்சமும் கவலையும் எய்தி யாது சொன்னான் தருமன் : (சஙகூ)

---

438. நாள் + தன்னை = நாடன்னை. மதியும் ஞாயிறும் கூடுவது காரிருள் நாளிலென்க. அந்நாள் நிறைமதியிலிருந்து பதினைந்தாம்நாள் ஆகும். ஆகலான் கண்ணன் பதினான்காம் நாளே களப்பலியிட உன்னினான், பதினைந்தாம் நாளைத் துரியோதனன் திட்டமிட்டிருந்தான் ஆதலின்.

439. சிலை நூல்வல்லாண்மை - விற்கலைத்தேர்ச்சி. தீதின்மை- உறுப்புக்குறையின்மை. உருவம் - தோற்றம். மருவும்படிக்கு - பொருந்துமாறு.

பா. வே : 1. நீதியாய். 2. சால்பு. 3. மதித்தாய்.

440. இச்சொற் பணித்தனை நீ யெம்பெருமா னெங்கட்கு
நச்சுச்சொல் லென்று நடுநடுங்கி—யிச்செல்வம்
வேண்டோம்யா மென்று விழுந்தழுதான் றம்முடைய
வாண்டான்றன் பாதத்தே யாங்கு.

எ - து. ஏழுலகுக்கும் எழுகடலுக்கும் அழிவு வந்த காலத்தும் நின் திருவுடற்கொரு தீங்கில்லை; எங்களைக் காத்தற்காக இவ்வகை தீங்கு அருளிச் செய்யுமதோ எமபெருமான் எனப்பேசி அஞ்சி, எங்கட்கு நாடு வேண்டோம்; இன்னமும் முன்னம் திரிந்து உறைந்த அருங் கானமே போவோம் என்று பற்றெய்தி உரைப்பக் கண்டு, கண்ணனை நோக்கி வணங்கி விண்ணப்பஞ் செய்வான் அராவான்; 'அடியேன் இருக்க ஒரு தீங்கு திருவுடற்கு நினைந் தருளுமதோ' என்று விண்ணப்பஞ் செய்து வணங்கி நின்ற அராவானைக் கண்டு, பாண்டவர் அனைவரும் இவனைகிற் கொண் டருளவும்; இவனாகாதாகில் எங்களில் ஒருவர் ஆ மாயினும் கொண் டருளி எங்கள் நெடுமொழியை முற்றுவித்து அருள்வாயாக என்று விண்ணப்பஞ்செய்து நிற்ப, மற்றவர்க்கு வேண்டத்தக்க செய்தி யருளிச்செய்து, வீமன் அர்ச்சுனன் ஆகியவரைக் கொன்றால் துரியோதனன் முதலானவர்க்கும் கன்னனுக்கும் எதிரில்லை என்று பின்னும் அராவானை நோக்கி யாதருளிச் செய்தான் கண்ணன் : (௪௪௦)

441. உந்தைமார் சாக வுனக்குப் பகையான
தந்தைமார் வாழத் தகுமுறையால்—முந்த
வரங்கொடுத்தாய் நீயன்றே யென்றுரைத்தான் மாற்ரு
ருரங்கெடுக்கு மாலோ னுடன்று.

எ - து. பாண்டவர் இறப்பாராகவும் துரியோதனன் வெல்வ தாகவும் கருதி அவற்கு வெற்றி கொள்ள உன் உடலில் உண்டான செந்நீரும் ஊனும் களப்பலியற்குக் கொடுத்தாய் ஆதலால் உன் உடல் இனி எச்சில் அன்றோ என்று அருளிச் செய்த முனிவு கண்டு நடுக்கத்தோர் டிடுக்கண் எய்தி யாது விண்ணப்பஞ் செய்தான் அராவான் : (௪௪௧)

---

440. நச்சுச்சொல் – நஞ்சன்னசொல்; கொல்லுஞ்சொல்.
ஆண்டான் - தலைவன்.

441. உந்தை - உன் தந்தை. முந்த – முன்னே. உரம் – வலிமை.

442. என்னை முனிந்தருளே லெம்பெருமான் என்னுடம்பிற்
றேன்மைத் தசையுஞ் சுரோணிதமு—நன்முறையான்
முன்புநீர் கொண்டு முனைசெய்யு மற்றவற்குப்
பின்பியா னீவேன் பெயர்ந்து.

எ - து. துரியோதனனுக்கு யான் ஆ மென்றதற்கு ஒரு காரண முண்டு. மற்று அவன் வேண்டி வந்தபோது மருந்து கொடுப்பேன் என்றதன்றிப் பின்னை முன்னையென்று அவனுடன் பேசியவாறு அறிந்ததில்லை. வருகின்ற காருவா வந்தாற் கொடுப்பதாக வினைத்ததன்றி, மற்றவனால் இற்றைக்குக் கொடுபோவேன் என்றதில்லை எனப் பேசி அஃதொழிய நீ அதற்கு முன்னம் வேண்டுகையால் உனக்குத் தருவேன் என்று அராவான் சொல்லக் கேட்டுத் திருப் புன்முறுவல் கொண்டருளி யாதருளிச் செய்தான் கண்ணன் : (சசஉ)

443. தூண்டேரித் தோரான் றுரியோ தனன்றன்பால்
வேண்டியநாள் வேண்டும் வரங்[1] கொடுத்தா—யீண்டவே
யுந்தைமார் பாரான வுன்னுவைநீ [2] தான்காக்க
சிந்தைதா னேகாது சேர்ந்து.

எ - து. துரியோதனன் வேண்டிய நாள் களையுவா வந்நாட் டருவாயாக என்றருளிச் செய்யக் கேட்டு அராவான் விண்ணப்பஞ் செய்வான்: என்னுறுப்பை யீண்டெனப் படையல் கொண்டருளி எந்தைமார் ஐவரையும் காத்துப் பகைவரை வென்று நாடு முழுமையும் ஆளும்படிக்கு அருளிச் செய்வாயாக எனக் கேட்டுத் திருப் புன்முறுவல் கொண்டருளி அவ்விடத்தே தானே மாலை சூட்டிக் கதுமெனக் களப்படையலுக்குக் காப்புக் கட்டி மற்றதற் கந்தள்ள ஐயந் தீர்ந்து தருமனை நோக்கிப் பன்னீராயிரம் மறையோர்க்குப் பெருங் கொடை வழங்கச் செய்து மறையோரை வரவழைத்துப் பதினென்காம் நாளைக் காருவாவாக்கித் தரவேண்டும் என்று கண்ணன் அருளிச் செய்யக் கேட்டு மற்றதற்கு யாது சொன்னார் மறையோர் : (சசங)

---

442. சுரோணிதம் – குருதி: செந்நீர். முனை – களம்.

443. உன்னுவை - நினைப்பாய்.

பா. வே: 1. கொடுப்பா - யீண்டனீ. 2. யான்காக்கச்.

444. எம்பெருமா னின்னேவல் செய்யுமே யெங்களுக்குத்
தம்பமாஞ் சந்திரா தித்தர்களை—யெம்பெருமை
கூட்டலா குங்கொல்லோ கூடுமோ கூட்டுதற்கு
வேட்டதுவேன் னென்றார் விரைந்து.

எ - து. திங்களும் ஞாயிறும் இதற்கு முன்னர்க் காருவா ஒழியக் கூடியறியார்; அவர்களை யெங்களாற் கூட்ட ஆற்ற லுண்டோ வென்று விண்ணப்பஞ் செய்ய மறையோரை நோக்கி யாதருளிச் செய்தான் கண்ணன்: (௪௪௪)

445. தேவரா வாருந் திசைப்பால ராவாரு
மூவராய் நிற்கின்ற மூர்த்தியரும்—யாவருந்தான்
கோந்தலருஞ் சோலைக் குருநாட்டுப் பூசுரர்கா
ளந்தணரா லன்றேவா வார்.

எ - து. தேவர்கள் ஆவாரும் முனிவர்கள் ஆவாரும் முக் கடவுளர் ஆவாரும் மறையோருடைய ஆற்றல் கொண்டன்றோ என்றும், மறையோர் கூறிய மறைமொழியன்றோ தெய்வம் என்றும், உங்கள் பணி மறுக்கும் தன்மையுடையார் யாவரும் உண்டோ என்றும் இவ்வகை யுரைத்து நீங்கள் ஈண்டு இனிது துணிந்து காருவாவாக்கித் தருவீர் என்று தேவதேவன் அருளிச் செய்யக்கேட்டு மருது பணித்தலை மேற்கொண்டு கண்ணன் அருள் வலி பெற்று யாது செய்தார் மறையோர்: (௪௪௫)

446. வேதியர்க டம்மை யுளத்தெண்ணி வேதத்தி
னோம மருத்தி யுளதென்னுஞ்—சோதி
யணிந்தா ரமாவாசை யாகென்று பேசிப்
பணிந்தார்கள் சாலப் பரிந்து.

அப்பொழுது, (௪௪௬)

---

444. தம்பம் – நிலை. கூட்ட லாகுங்கொல்லோ - கூட்டுதற்குக் கூடுமோ? வேட்டது - விரும்பியது.

445. பூசுரர்காள் – அந்தணர்களே.

446. ஓமம் அருத்தி - வேள்வித் தீக்கு ஊட்டி.

447. மாமறையோர் வாக்குப் பழுதாமோ மண்ணின்மேல்
யாமறியோ மிவ்வார்த்தை நன்றேன்னாச்—சோமன்
சுடர்நாயிற் றேள்ளோளிக்கே தோன்றினான் கோல்லோ
வுடனாயிற் றன்றே யுவா.

இவ்வகை பழங்கதை, திருமறை, வரலாறுகளாலும் கண்ணன் பெருமாயை யாலும் மறையோர் சடங்குடன் வழிபடும் அளவில் ஞாயிறும் திங்களும் தம்மிற் கூடி இஃதென்கொலோ என்னும் அளவில் பதினான்காம் நாள் காருவா ஆயிற்று. அதுகண்டருளி இது வியப்பெனக் கண்ணன் முழுத்தம் வழுவாது அராவானை நோக்கிக் களப்படையலுக்குச் செந்நீரும் ஊனும் தருவாயாக எனக் கேட்க யாது சொன்னான் அராவான் : (சுசஎ)

448. என்னுடம்பை யானே யறுத்திட் டிழிகுருதி
முன்னரியற்ற வல்லேன் முகில்வண்ணா—வேன்னுடம்பைக்
காட்டப் பெறாத விதியோன் றிலாதோற்குப்
பூட்டப் பெறவேண்டும் போர்.

எ - து. துரியோதனன் முதலானவருடன் பாரதம் எல்லாம் என் கையில் அழியும்படிக்கு யான் படைப்பயிற்சி செய்ததற்குத் தக்க படைக்கருவிகளைத் தேடினேன். என் தீயூழால் எனக்குக் களப்படையலாய் முடிந்தது. இதற்கும் பெருகென மகிழ்வாய் இருந்தது. அது நிற்க, எம்பெருமானே அடியேனுக்கு ஒரு வரம் அருள்வாயாக எனக் கண்ணனும் உடன்பட யாது வேண்டிக் கொண்டான் அராவான் : (சசஅ)

449. பாரதப்போர் தான்போருது போமளவும் பாரின்மேல்
வீரசத்தி யுள்ளாரை யான்வினவிப்—போர்புக்குப்
பின்னையே சாவப் பேறுவரந்தா வேன்றுரைத்தான்
றன்னோர் பிறரோவ்வான் றாழ்ந்து.

---

447. சோமன் – திங்கள். நாயிறு - ஞாயிறு; கதிரோன். ஒள்ளொளி – பேரொளி. உவா - இவண் காருவா.

448. இலாதோற்கு – இல்லாத எனக்கு. இவண் உறுப்பைக் காட்டுதல் உறுப்புக்களின் வலிமை காட்டுதல். போர்-போரணிகள்.

449. வினவுதல் - ஆராய்ந்து. போர்புக்கு – வீரரோடு போர்க் களம் புகுந்து. தாழ்ந்து - பணிந்து.

இவ்வகை விண்ணப்பஞ் செய்த அரவானைக் கண்டு விரும்பிய திருவுளத்தனாய் மற்றவன் வேண்டிய வண்ணமே அருள்வான் கருதி யாதருளிச் செய்தான் கண்ணன்: (௪௪௯)

450. பாரதப் போர்பொருது போமளவும் போர்கண்டு
வீரருட னெட்டாநாண் மேற்சென்று—போர்பொருது
மற்றவர்கள் கையாலே வானுலகம் போவாயென்
றுற்றுமிக நேர்ந்தா னுகந்து.

அன்றியும், (௪௫௦)

451. மைந்த னினைவின் படியே வரங்கொடுத்துச்
சிந்தைமகிழ்ந் தெட்டாநாட் சென்றுபுக்—குந்தைமார்
தம்முடனே நீபொருது சாகென் றருள்செய்தான்
வெம்முனைவேல் லாழியான் மிக்கு.

இவ்வகை பாரதப்போர் விளைந்தவிடத்து எட்டாம் நாளைப் போரில் உன் பங்காளிகளாகிய துரியோதனன் முதலானவருடன் போர் செய்து மற்றந்த அருந்தேரர் கையிற் படைகளாற் புண் பட்டுக் கூற்றுல கெய்துவாயாக என்றருளிச் செய்து பின்னர் அவன்பாற் குருதியும் ஊனும் வாங்கிக் கொண்டு மணம் மலர் புகை ஒளி ஆகியவற்றால் அணிசெய்துகொண்டு சகாதேவன் கணியஞ்சொல்லி வரையப்பட்ட முழுத்தத்திலே குருநிலமென்னும் போர்க்களம் புகுந்து கண்ணனை முன்னீடாகக் கொண்டு யாது செய்தார் பாண்டவர்: (௪௫௧)

452. [1]பகைவன் கருத்தழியப் பார்வேந்தன் வெல்லக்
குகுவன்று மாமுகுர்த்தங் கொண்டு—மிகவுங்
களப்பலியை யூட்டினார் கார்முரசங் கொட்ட
வளப்புலிகள் போலெங்கும் வந்து.

அன்றியும், (௪௫௨)

---

450. நேர்ந்தான் - அருளினான்.

452. கார் முரசங் கொட்ட - கருமுகிலே முரசுபோல் ஒலிக்க.

பா. வே: 1. பகைவான் கருத்தழிக்கப் பார்வேந்தன் வெல்லச் சிகை யென்னும் மாமுகுத்தஞ் சென்று.

453. **தோல்லரச ரீண்டப்போய்ச் சோதிப் புனல்சிந்தி**
யேல்லேயில்சீர் மாகாளிக் கேய்தோழிலார்—நல்ல
மணிசரோடு மாவு மதகளிறு மற்றுங்
குனிசிலேயா [1]ரோட்டினார் கூர்ந்து.

இவ்வகை அரவானைப் படையலிட்டுக் குருநிலம் என்னும் போர்க்களம் முழுதும் குருதியும் ஊனும் சிந்தி வீரமகளுக்குத் துரியோதனனையும் உடன் பிறந்தார் தொண்ணூற்றொன்பதின்மர்களையும் படையலாக்கிப், பேய்க்கும் பறவை இனத்திற்கும் குருதியும் ஊனும் வழங்கித், தங்கள் படை நிலையும் குறித்து, உறுதிமொழி முற்றும் வகை கருதி முழக்கஞ் செய்து, தங்கள் தங்களுக்கான படைக்கருவிகள் அனைத்தும் அழகுறுத்திக், கண்ணன் திருக்கையாற்றொழுது வாங்கித் தோள் விம்மி ஊர்திகள் மேற்கொண்டு நாற்படைசெறியப் போர்க்களம் முழுதுங் காற்றென்னக் கடுவிசைத் தேரோட்டி அரிமாமுழக்கஞ் செய்து, தருமனை வணங்கி வீரமகள் பொலிந்து தோன்ற வளரா நின்ற தோளினராய் மன மகிழ்ந்து, போர்க்களம் விட்டு நீங்கிக் கவரி வட்டம் புடைதயங்க வெண்குடை மேனிழற்றக் கலுழக் கொடியும் முரசக் கொடியும் விசும்பணுவ, வீரக் கொடிகள் கலந்திலங்க எம்மருங்கும் எழின் மணிக் கவரி அருகிரட்ட நாற்படைகள் புடைசூழப் பிறநாட்டு வேந்தரும் வீரரும் சூழ்ந்து பணி செய்ய வகை வகையாய்க் களி கூர்ந்து போர் வீரருடன் வெற்றிப் படையலூட்டித் தாந்தாம் பாடிவீடுபுக்கார் தருமனும் கண்ணனும் என்றவாறு. (சுருங)

---

453. சோதிப் புனல் – குருதி; தூயநீருமாம். ஏய் – பொருந்திய. குனிசிலை – வளைந்த வில். ஓட்டினார் என்பதை மனிதர், மா, களிறு இவற்றொடும் ஓட்டுக. குகு – காருவா (அமாவாசை)

பா. வே: 1. ரொட்டினார்.

களப்பலி முற்றும்.

அணிவகுப்பு

இப்பால் துரியோதனன் போர்க்கு ஒருப்படும் அளவில் தருமன் களப் படையலிட்ட செய்திகேட்டு அளவில்லாததோர் சினத் தீ யெய்தி வீடுமனை அழைத்து யாது சொன்னான் துரியோதனன்:

454. **பலியூட்ட வேண்டுமோ பாரதப்போர் வெல்ல**
வலிகெட்டார் போலநீர் மன்னீர்—கலிநாட்டித்
தேர்க்கோலஞ் செய்ம்மின் சிறுகாலே நீரெல்லாம்
போர்க்கோலஞ் செய்ம்மின் போர.

. எ - து. முன்வந் தெமக்குப் படையல் தருவான் அராவானைக் கண்ணன் முன்னறிந்து வஞ்சனையால் மாற்றிப் படையல் கொண்டான்; இனி யெமக்குப் படையலாவார் பாண்டவரே எனக் கருதிப் பொங்கிய சினத்தீயால் வழிமறந்து வெகுளியுடன் படையலிடுதல் தவிர்ந்து பாண்டவரை வெல்வதற்கு ஆற்றலில்லார்போல் நாளும் முழுத்தமும் வேண்டுமோ வென வெகுண்டு வீடுமனைநோக்கித் தன் பெரும் படையினை அணி வகுப்பாயாக என்றலும் வீடுமனும் தன் பெரும் படையினை யாங்ஙனம் அணிவகுத்தானே வெனில்: (௪௫௪)

455. **அதிரதரே மாரதரே யாண்டகைமை மிக்க**
[1]சதிரர் சமரதரே தக்க—சதுரதரி
லத்தரத ரென்றங் கரசர்களைத் தான்றெரிந்தான்
[2]மற்றிரத கங்கை மகன்.

எ - து. தன்னையும், துரோணனையும் அசுவத்தாமனையும் பூரிச்சிரவாவினையும் அருந்தேரரில் முதல்வராக வகுத்து, பகதத்தனையும், சத்திரதேயுவினையும் சகுனியையும் துன்மருடணனையும் பெருந்தேரரில் முதல்வராக வகுத்து, கிருபனையும், கிருதவன்மாவினையும், சல்லியனையும் செயச்சேனனையும் சமன் தேரரில் முதல்வராக வகுத்து, துச்சாதனனையும் கன்னனையும் விடசேனனையும்

---

454. மன்னீர் - அரசர்காள். கலிநாட்டி - முழக்கமிட்டு. சிறுகாலே — விரைவில்.

455. சதிரம் - (சதுரம்) கட்டாண்மை. சதுரதர் - நால்வகை ரதர். அவர் அதிரதர் (அருந்தேரர்) மாரதர் (பெருந்தேரர்) சமரதர் (சமன் தேரர்) அர்த்தரதர் (அரைத்தேரர்) எனப்படுவர்.

பா. வே: 1. சமரதரே சாமந்தர். 2. மத்தரத.

பூரியையும் அரைத் தேரரில் முதல்வராக வகுத்துப் பின்னும் அக்குரோணியில் அகப்படாத பெருவலி யுடையன யாங்ஙனம் வகுத்தானோ வெனில் : (சருரு)

456. எண்ணிற் படாத வெழிற்சிங்கம் போனின்ற
வண்ண வகுப்[1] புடையார் வாரணங்க—டிண்ண
மருகோடி மன்னர் மதித்தேறி வந்த
வொருகோடி யான [2]வுள.

எ - து. சுப்பிரதீபமும், சித்திரனும், மகாதேவனும், அசுவத்தாமாவும் உள்ளிட்ட பல பதினாயிரம் வலிய யானையின் வலுவுடையன ஒருகோடி யானையும், சோமதத்தனும், சித்திர சிந்தனும், புகவிச்சுதனும், வாயுசெகந்தனும் உள்ளிட்ட முப்பது இலக்கந் தேரும், குலசீலனும் குலவானுவும் மகாவீரனும் மகாவேகனும் உள்ளிட்ட பல உறுப்பிலக்கணம் உடையன பத்திலக்கம் குதிரையும், அறுபதினாயிரம் அரசகுமாரும், பன்னூறாயிரங் காலாளுங் கட்டுப்படத் தெரிந்து அருந்தேரர், பெருந்தேரர், சமன்தேரர் அரைத்தேரர் என்கின்ற நாலணியாக வகுத்து இவ்வகையே பதினோரக்குரோணி பெரும்படையையும் வகை வகையாகக்கொண்டு வகுப்ப, அதுகண்டு நின்ற அங்கர்கோன் முனிந்து வீடுமனை நோக்கி யாது சொல்லி யாது செய்தான் : (சருசு)

457. தான்போ லதிரதனு மாரதனு மாகுவான்
யான்போலு மத்தரத னாகுவே—னூன்பாயு
மின்னுங்கு செய்தா னுயிர்செகுப்பே னென்றுரையா
மின்னும் வாளேடுத்தான் மிக்கு.

எ - து. அருந்தேரரில் முதல்வராகவும், சமன்தேரரில் வளஞ்சிறக்கவும் யானுதல் தேவர்கோன் ஆதலன்றி உலகில் பிறரில்லாமை அறிந்திருந்தும் என்னைத் தாங்காமல் பிறநாட்டு

---

456. எண்ணிற் படாத - கணக்கில் அடங்காத. போல் + நின்ற —போனின்ற. வகுப்பு - அணிவகுப்பு. திண்ணம் – உறுதியமைந்த. மரு - மணம். கோடி - புத்துடை. 'ஏறிவந்த வாரணம் கோடி யுள.'

457. போலும் என்பது ஒப்பில் போலி. தான் - வீடுமன். ஊன் பாயும் – உடலை உருவுவது போன்ற. இன்னுங்கு – கொடுமை. செகுப்பேன் – அழிப்பேன். யான் என்றது கன்னன் தன்னைக் குறித்தது.

பா. வே: 1. புடைய வாரணங்க.
2. 'முள' வென்பது முதற்பதிப்பு.

வேந்தர் காண அரைத்தேரனென்று சொன்ன வீடுமனைத் தலைபுரள எறிவேன் என்று கதுமென வாளுருவிக் கொண்டு கன்னன் வெகுண்டெழுதலும், அதுகண்டு வீடுமனும் தன் தேரினின்றிழியப் பாய்ந்து நிலத்தின்மிசை எதிர் சென்று வாளுருவிக் கொண்டு கன்னனைத் தடுத்து யாது சொன்னான் வீடுமன் : (சுருஎ)

458. உன்னுண்மை யாவுரைத்த வூக்கமுடன் கட்டுரைக்கி
லென்னுண்மை பேச வெளிதன்றே—யொன்னார்முன்
[1]ஆரானும் வென்று ரதிரத ரென்றுரைத்தான்
போராரு மன்னவன்முன் புக்கு.

அன்றியும், (சுருஅ)

459. மன்னர் சபைநடுங்க மாற்றலர்[2]மேல் யாமிருவ
ரின்னநெறி செய்வே மெனச்சீறி—யிந்நெடுநாட்
சோறிட்டான் வென்றித் துரியோ தனன்காண
வேறிட்டான் றேர்மேல் விரைந்து.

எ - து. நின்னை அரைத்தேர் வலவரில் வைத்தமைக்கு நாணினையாகில் உன்னையும் என்னையும் காத்தருள்கின்ற மன்னர் மன்னன் துரியோதனனுக்கு விளைந்து நின்ற போர்க்கு மாறுபட்டு வருகின்ற அருந்தேரரில் முன்றோன்றலான அருச்சுனனையாதல் வீமனையாதல் மற்றவர்க்குப் படைத்தலைவனாய் நின்ற சுவேதனை யாதல், எதிர்மலைந்து தடுத்து அவரை வென்றோம் ஒருவரே அருந்தேரராகக் கடவம்; அதுவன்றி இருவேமும் வாளுருவித் தனித்தனி நின்றெம்மில் இகலுற்றால் உட்கோள் அறாது. அது வொழிந்து இந்நெடுநாள் இருவோமுக்கும் சோறிட்டுக் காத்த பார்வேந்தனுக்கு வினைவிளைந்த விடத்து மற்றவற்கு உதவி செய்து அவன்மேல் வந்த வினை துரந்து செஞ்சோற்றுக் கடனும் தீர்த்துக் கொள்வதல்லால் வீடுமனும் கன்னனும் தம்மில் உடன்று தங்கள் உட்கோளால் எதிர்மலைந்து பட்டார் என்று பிறநாட்டு வீரரும் தேவரினத்தாரும் இகழப்படுவங்கண்டாய்; ஆதலால், இருவோமும் உண்ட செஞ்சோற்றுக் கடன் தீரப் பார்வேந்தன் எதிர்ப்பட்ட பகையும் தணித்துக் கொடுத்து அவர்

---

458. ஆரானும் – யாராயினும். மன்னவன் - துரியோதனன்.

459. மாற்றலர் - பகைவர்.

பா. வே: 1. ஆராலும் 2. முன் யாமிருவ, ரெஞ்சநெறி.

தமக்கும் இருவேமுக்கும் உண்டாகிய செயல்களுங் காண்பதாகப் போர் முனையில் நின்ற வீரர்மேற் சென்று செருச்செய்து இரண்டு திறத்துப் போர்வீரருங் கண்டு களிகூரப் போர் புரிந்தால் நின்னை அருந்தோனைக் கட்டுகின்றேன். அல்லாத பொழுது நின்னை அரைத்தேரரில் முதல்வனாக வகுத்து நிறுத்தக் கடவேன் என்று வீடுமன் உரைக்கும் அளவில் அதுகண்டு யாது செய்தான் துரியோதனன் : (சுஙகூ)

460. கன்ன பெருமானுங் காங்கெயனுந் தம்வீர
முன்னி யுரைத்த வுரைகேட்டு—மன்னர்
வெறுத்தார் தமைவிலக்க வெற்றித்தே ரோட்டிக்
குறித்தான் குருகுலத்தார் கோ.

இவ்வகை யுடன்று தம்மில் எழுந்து போர்முனைக்குச் செல்லா நின்ற வீடுமனையுங் கன்னனையுங் கண்டு கதுமெனத் தன்றேர் கடாவிச் சென்று இருவர்க்கும் இடைபுகுந்து, எமக்கு அலக்கண் வந்த காலத்தேயோ வுங்கள் உட்கோள் கொண்டாடுவீர்? இஃதுங்கட்கு முறையன்று என்று இவ்வகை யுரைத்து விலக்க லுற்றுனை நோக்கி யாது சொன்னான் கன்னன் : (சகூ0)

461. உன்னை யுடையேனு னென்னாத முன்னிலையி
லின்ன மதுகேட் டிருப்பேனோ—வன்னவன்றன்
போர்மாளு மவ்வளவும் போர்போரே னென்றுரைத்தான்
கார்மாளுங் கையான் கறுத்து.

எ - து. பிறநாட்டு வேந்தர் முன் என்னை அரைத்தேரரில் வகுத்துத் துயரூட்டிய வீடுமன் படைக்குள் நில்லேன் என்றும், நின்னையுடைய நான் இப்படி வீரமாண்பில் இழிவுறுவதோ என்றும், இவன் போர் ஒழியுமளவும் போர்க்களத்தில் புகுதேன் என்றும் இவ்வகையுரைத்து என் நலங்களையும் வீர ஆற்றல் களையும் தனிக் காண்பாய் ஆகில் பகைவரை வென்று தருவேன் என்றுஞ் சொல்லித் தன் கோயிற் புகுந்தான் அங்கர்கோன் என்றவாறு. இப்பால் பாண்டவர் படைக்குத் தலைவனாகிய சுவேதன் தங்கள் பெருந்தானையை யாங்ஙனம் வகுத்தானோ வெனில் : (சகூக)

---

460. உன்னி - நினைந்து, முனைந்துமாம்.

461. உன்னை உடையேன் - உன்னை உயிராக உடையேன். அன்னவன் - வீடுமன். போர்மாளும் அளவும் - போர் ஒழியும் அளவும்.

462. மன்னவர்கண் மண்டலிகர் வன்குறும்பர் சாமந்த
[1]ரின்னவரிக் கோடியரென் றெண்ணுங்கான்-மன்னவரை
வெவ்வேறு தானிறுத்தி வெற்றி யணிவகுத்தான்
செவ்வேறு போல்வான் றெரிந்து

இவ்வகை மச்சர்கோன் சுவேதன் தன்னைத் தானைத் தலைமை கட்டுகையில் தன்னையும் அருச்சுனனையும் அபிமன்னுவையும் புண்டலனையும் அருந்தேரரில் முதல்வராக வகுத்து, சிகண்டியை யும் திட்டத் துய்மனையும் விராடனையும் வீமனையும் பெருந்தேரரில் முதல்வராக வகுத்து, சாத்தகியையும் பாஞ்சால வேந்தனையும் உத்தமோசாவையும் உதார்மனையும் சமன்தேரரில் முதல்வராக வகுத்து, கடோற்கசனையும், அஞ்சனவர்மனையும் நகுல சகாதேவரை யும் அரைத்தேரரில் முதல்வராக வகுத்துப் பல பதினுயிரம் வீரரை யும் தெரிந்துகொண்டு இவ்வகை யானைதேர் குதிரை கருவி காலாட்களையும் கலந்து உடனிறுத்திப் பல பதினுயிரம் முடி வேந்தரையும் தெரிந்து, நூறுயிரம் யானையும் இருபதினுயிரம் தேரும் நூறுயிரத்து அறுபதினுயிரம் புரவியும் தெரிந்துகொண்டு கலந்துடனிறுத்தி அருந்தேரர், பெருந்தேரர், சமன்தேரர், அரைத்தேரர் என்கின்ற நால்வகைப்பட்ட போர் வீரரையும் நாலணியாக வகுத்துக்கொண்டு நிற்கும் அளவில் கண்ணனை நோக்கி யாதருளிச் செய்தான் பலதேவன் : (௪௬௨)

463. இங்கிவர்க்காய் நீநிற்க யானவர்க்காய்ப் போர்மலைதல்
நங்குடிக்குச் சாலா தெனநாணிக்—கோங்கசைய
வண்டாடுங் கண்ணி வளைவண்ணன் போயினுன்
கொண்டாடுந் தீர்த்தங் குறித்து.

எ - து. தேவர் குறை முடிக்கவும், உலகின் பாரம் தீர்க்கும் பொருட்டாகவும் மனித உருக் கொண்டு திருமால் தோற்றரவாய்த் தோன்றினுய் ஆதலால் யாம் இருவோமும் போர்க்களத்தில் எதிர்

---

462. மண்டலிகர்-மண்டலத்தின் அரசர்; அவராவார் சிற்றரசர். குறும்பர் - மலைநாட்டுவேந்தர். சாமந்தர் - தானைத்தலைவர். இக் கோடியர் - இத்துணைக் கோடியினர். செவ்வேறு-செவ்விய அரியேறு.

463. சாலாது - சால்பு ஆகாது. கொங்கு - பூந்தாது. வண்டாடும் - வண்டு தேனுண்ணும். வளைவண்ணன்-சங்கவண்ணன். தீர்த்தம் - புனிதநீர்; நன்னீர்.

பா. வே: 1. இன்ன கொடியாரென்; இன்னர் கொடியாரென் .

நிற்குமது நம் மரபுக்கு முறைமையன்று: தருமனுக்குரிய நாடு கொடாது, மனிதன் பொருட்டாக நீபோய் வேண்டவும் பாதிநாடு கொடாததாலும் ஐந்தூர் வேண்ட விடாததாலும் கெடுமதியாகிய துரியோதனனும் தம்பிமாரும் நுகரும் திங்கு நின்று காண மாட்டேனென்று தூநீர் ஆடச் செலவு மேற்கொண்டான் பல தேவன்; அது யாங்ஙனமோ வெனில்: (௪௬௩)

464. மிக்கசிலை சீறி யோடித்த விதுரனையு
மோக்க வுடன்கோண் டுயர்நிலத்து—மிக்கபெருந்
தீர்த்தங்க ளாடிவரச் சேன்ருன் சேழுமுனிவ
ரேத்தியேதிர் [1]கோள்வா னிசைந்து.

இவ்வகை விதுரனையும் உடன்கொண்டு தூநீர் ஆடச் சென்ருன் பலதேவன் என்றவாறு. இப்பால், அன்று கழிந்த மற்றை ஞான்று, (௪௬௪)

465. பனியகலப் [2]பாரிடத்தோ ரேல்லாருந் தந்தம்
வினையகலப் போற்றிமிக வாழ்த்தத்—தனியோருதேர்
மேல்கோண்டான் வேய்யோனும் வேல்வேந்தர் தாமும்
கால்கோண்டார் தங்கள் களம். [போய்க்

இவ்வகை கதிரோன் எழுதலும் இரண்டு திறத்துப் படையும் சென்று குருநிலம் நாற்பத்தெட்டு யோசனையும் நிறையப்பட்டது. அது யாங்ஙனமோ வெனில்: (௪௬௫)

466. குருகுலத் தரசர் போருகளங் குறித்தங்
கிருபதிற் றிரட்டி யிருநான் கியோசனை
விசிவோடு நின்ற வியன்பேருந் தேரில்
யானையின் மாவி லமர்போரு நாளிற்
பாந்தோங்கு கோடியிற் பிணங்குதிறற் பதாகையோடு

465. வெய்யோன் - கதிரோன்.

466. வியன் - அகன்ற. பதாகை — கொடி. நீள் + திரை - நீடிரை. உகள - அசைய. கிம்புரி - பூண். பொர — போல. பிச்சம் - இறகு; தோகை. நிவந்த — மேலெழுந்த. நளிர்தர - நெருங்க. கொட்கும் - சுழலும். எல்லை — பொழுது. திமில் - படகு. வலையம் - உலகம். நரலும் — ஒலிக்கும்.

பா. வே: 1. கொள்வாரினிது. 2. பாரிடந்தோ ரெல்லாருந் தத்தம்.

நீடிரை யுகளத்
தாக்கிய தானத் தலைமைசிறந் தீண்டிப்
பொருமதப் பகட்டினிரு வெண்கோட்டுக் கிம்புரி
மகர வேலை புடைபெயர்ந் ததுபோரக்
கொற்றவர் நின்ற குழாந்தோறுங் குழாந்தோறும்
வெண்குடை பிச்ச நிழல்படப் பரப்ப
நிவந்த நீழ லகலப் பெருந்திசையிற்
பகலவன் றன்றொளி பயின்றுநனி காட்டி
மன்னவ ரங்கையின் மின்றொளி படைக்குஞ்
சூலமுங் கணிச்சியுஞ் சுடர்த்தோ மரமும்
வேலும் வாளும் வெங்கப் பணமு
முசலமுங் குந்தமு முசுண்டியு நேமியுங்
[1]கனகப் பணமும் வெங்கர வாளமுஞ்
சத்தியு மழுவுந் தண்டு நாஞ்சிலு
மத்திர குந்தமு மல்ல வாயமும்
பிண்டி பாலமும் பெருவச் சிரமு
மென்பன முதலாப் பல்படை [2]நளிர்தர
மின்னித் தோன்றி யொழுகுநிரைத் தார்த்துக்
கொட்கு மிடையிடை மிடைந்த[3] வெல்லையுட்
பவளச் செங்காடு பரப்பி
முரசி னல்லொலி முகிலென முழங்கப்
பலபறை கறங்கிப் பணைமுக டதிர
விசும்புச் சுடரினை வெல்வதா முரலப்
பல்சுட ரன்ன பருமணி விம்ம
வகலிரு விசும்புந் துகளிருள் படைப்ப
நெடுந்தேர் திமிலி னிலைதடு மாறப்
பாய்பரி நெடுந்தேர்ப் பார்த்திபர் விளைக்கும்
போர்த்தொழி லதனி னுரை வார
மந்தர நிறைய வமரரோ டரம்பைய
ரேறிய விமானம்வான் மீதுறத் தியங்கலிற்
கரைகா ணொண்ணாப் பெருமை யாலு
மொருபால், மாயோன் மகிழ்ந்த விளையாட் டாலும்

பா. வே: 1. கலைகால பாசமும் 2. நளிர்தரு மின்னிற் றோன்றி.
3. வேலையுட்.

வீரப் போற்றிரு விளைத்த லாலு
மாப்போற், கடலிடை வலைய மலைபட நாலுங்
திரைநெடுங் கடலெதிர் மலைவ தாமென
வந்துதலைப் பெய்தன மன்றே
வெந்திறல் வேந்தர் வியன்பெரும் படையே.

இவ்வகை எழுகடலுங் கிளர்ந்ததென்ன எல்லா உயிர்களும் திரண்டது என்ன மத்தமாவும் பரிமாவும் மறமன்னருங் கொடுந் தேருமாய்த் திரண்டு நிற்பப் பண்ணும் வகுப்பும் பாங்குடன் காண வேண்டிப் பார்வேந்தன் துரியோதனன் ஒரு யானையின் மேற் கொண் டிரண்டு திறத்துப் பெரும்படையும், பெரும்படையின் அருந்தேரரையும் ஊடுருவக் கண்டு தன் படைக்குத் தலைவனாகிய வீடுமனை நோக்கி யாது சொன்னான் துரியோதனன் : (சசுசு)

467. கங்கை பெருமகனே கண்ணுதலே காசினியி
லெங்கள் குலத்துக் கெழில்வீரா—வங்கவர்கள்
தம்படையு மெம்படையுந் தார்வேந்தற் கோன்றானால்
வெம்படைவேல் வாரை விளம்பு.

அன்றியும், (சசுஎ)

468. நம்படையோ டிப்படைநா ளோடாமற் கொல்வாரை
யெம்பெருமான் யாரோ வியம்புகென—வம்பரத்து
மீதா டரவுயர்த்தோன் கேட்டான் விறல்விளங்கு
மூதாதை யைநோக்கி முன்பு.

எ-து. குருநிலம் நிறையப்பட்ட இரண்டு திறத்தின் பெரும்படையில் நாற்படைக்குந் தலைவன் ஒருவனால் இந்தப் பெரும்படையை வெல்வார் உளரோவென்று வினவக் கேட்டு யாது சொன்னான் வீடுமன் : (சசுஅ)

469. வணங்கா முடியுடைய மன்னவனே கேண்மோ
பணந்தாங்கும் பார்நெளிய வீண்டி—யிணங்கு
கடல்போல நிற்குங் கடும்படைகொல் வாரை
யடல்வேந்தே கேளா யமர்ந்து.

என்றிவ்வகை சொல்லிப் பின்னும் யாது சொன்னான் வீடுமன் : (சசுகூ)

---

468. அம்பரம் - வானம்; மேல்.

470. திருமிக விளங்கிய துரியோ தனற்குக்
குருகுலக் கிழவன் கொற்றவன் கூறு
மரிதிறன் மொய்ம்பி னெரிகொளப் புடைக்கு
மிருவகைப் படையிற் பதினோரக் குரோணி
யேழுடன் மிடைந்த விப்படை மடியக்
கேழ்கிளர் சிலையைக் கீற்றென வளைத்து
நாழிகை முப்பதி னான்கோல் லுவனே
யந்தணன் றுரோணா சாரிய னாகிய
வெந்தொழின் மறையோன் வேதியர் தலைவன்
றானுங் கூற்றெனச் சுடுகணை யேவி
மூன்று நாளையின் முடித்திடு மவனே
யரசரின் றோழ னங்க ராச
னிரவிதன் புத்திர னில்லையேன் றுதவ
னிந்திரன் கையி லிகல்வேல் பெற்றவ
னங்கவில் லதனை யழகுடன் வளைத்தங்
கைந்து நாளி லடுவனிப் படையே
யாங்கது வன்றியும்
பிறையுட னரவை முடிமிசை வைத்த
கறைமிடற் றண்ணல் கருதல ரோடுங்குறப்
புவனியிற் றுரோணன் புத்திர னாகிய
வந்தணர் கோமா னசுவத் தாமா
நாழிகை யொன்றி னெளிகடற் சேனையை
யூழியி லெரியென யுயிர்கவர்ந் திடுமே
யீங்கிது நிற்க வாங்கு நின்ற
நீல மேனி[1] நெடுமுகில் வண்ணன்
[2]சகாய னசைவி றனஞ்சயன் விசயன்
சுவேத வாகனன் சொற்றிறம் பாத
தருமன் றம்பி தழலெழும் வில்லன்
போருகள மதனிற் புறகிடா வீரன்
செஞ்சடை யுடைய [3]நஞ்சடை கடவு

---

470. புடைக்கும் - தாக்கும். கேழ்கிளர் – ஒப்பற்று விளங்கும். கீற்று - மின்கீற்று. கருதலர் - பகைவர். புவனி–உலகம். சுவேதம்-வெண்குதிரை.

பா. வே: *1. மாமுகில் 2. சகாயன் சைவன் 3. நஞ்சுடைக் கடவு.*

டன்றிருச் சடையிற் றனுவோன் றதனால்
வெம்புறப் புடைப்ப வேயுறு தோளி
வில்லது தன்னை விரைவினிற் கையிற்
காமுற வாங்கக் கண்ணுத றன்னுடன்
போர்செய் யாயுதம் புண்ணியன் காணுத்
தாழ்சடை யோனைத் தடக்கைப் பற்றிக்
காலது வளைத்துக் கருத்துடன் மல்லிற்
றீங்குவிட் டகலச் செருச்செயு மாண்மையன்
கோடிமே னின்ற குரக்குடை யுரவோ
னேடிவரை யதனி லடுவனிப் படையே.

(௪௭௦)

அதுவன்றியும்,

471. பூருவர்கள் சொல்லும் படியிவைகாண் போர்வேந்தே
மாறுபடும் பூபார மாற்றுகைக்குச்—சீறித்
திருமாலுங் கார்விசயன் றேரேறி நின்றால்
வருமாறு தானறியேன் மற்று.

என்றிவ்வகை தன் சீரிய அறிவை உருவ நோக்கி உள்ளபடி சொல்லிப் பின்னும் திருமால் புவிப்பொறை தீர்க்கை பொருட்டாகப் பேருருக் கரந்து வெற்றி விசயன் தேர்மிசை நின்றான்: மற்றவன் பெருமாயை யாவர்க்கும் தெரியாது என்று வீடுமன் சொல்லக் கேட்டு யாது சொன்னான் சகுனி : (௪௭௧)

472. மந்திரத்தின் வாய்மையான் மாதவங்கள் செய்துமையாள்
[1]பந்த முடையான் பதமலர்கள்—சிந்திக்குஞ்
சேவகனார் பாண்டவர்கள் செய்த தவமொழிய
யாவதவர் செய்தா ரியம்பு.

இவ்வகை துரோணன் கிருபன் கன்னன் அசுவத்தாமன் இவர்கள் ஆற்றலிலும் அருச்சுனன் ஆற்றல் மிகவும் கேட்டுச் சகுனி அளவில்லாததோர் பொறாமை தோன்றிச் சொல்லுவான்:

---

471. பூருவர் - முன்னையோர். பூபாரம் - நிலச்சுமை.

472. உமையாள் பந்தமுடையான்—உமையொரு பாகன்; சிவன். 'தவம் செய்ததன்றி அவம் செய்தாரிலர்' என்பதாம்.

பா. வே *1. பங்கன் துணைப்பொற் பதமலர்கள்.*

மறைமொழிகளாலும், வேள்விகளாலும் பெரியராய்க் காட்டாள ராய்த் திரிந்ததன்றி இப்பொழுது எல்லா உயிர்களுக்கும் அழிக்கக் காரணராய்த் தம் எல்லாப் படைகளும் படக்கொடுத்து மீண்டும் காட்டாளராவர்; அதுவன்றி நம் பெரும்படையை வெல்லக் கூடுமோ வென்று சகுனி சொல்லக் கேட்டு வீடுமனை நோக்கி யாது சொன்னன் துரியோதனன் : (௪எ௨)

473. எங்கள் குலமுதலே யென்னுடைய மூதாதா
யிங்குநீ நிற்க விகலமரூட்—சங்கர்
தரித்தான் வருமேனினுந் தாங்குமே யுன்றன்
கரத்தா லெடுக்குங் கணை.

இவ்வகை கண்ணன் காலசக்கரம் எங்கள் மேல்வரினும் நின் வில் நிழற்கீழ் வாழ்வோமுக்குத் தோல்வியுண்டோ என்று வீடுமனை வணங்கிப் பெரும்படையைச் செலுத்துக என்று, படை நடுவில் நின்ற துரோணன் கிருபன் கன்னன் அசுவத்தாமன் பூரி பூரிச்சிரவா ஆகியவர்களும், பாகுலிக சோமதத்தர் தொடக்கத் தாரும் உள்ளிட்ட பன்னூருயிரம் அரசர்களொடும் துச்சாதனன் உள்ளிட்ட தொண்ணூற்றென்பதின்மர் தம்பிமாரோடும் பிற நாட்டு வேந்தரும் புடைசூழத் தனிவெண்கவரி புடை இரட்ட வெண்குடை மேனிழற்றத் தடவரை முகட்டிற் பாம்பு போல எழிலுடன் நின்ருன் துரியோதனன் என்றவாறு. இவ்வகை நின்ற படைமுன்னே அளவிறந்த யானைப் படையோடும், அறுபதி னுயிரம் தேர்க் குழாத்தோடும் வெள்ளிக் கவசமும் வெள்ளி வெண் குடையும் விட்டுவிளங்கத் தடங்கடல் நடுவுள் நிலவு தோன்றி ஒளிகாட்ட வரும் பனைக்கொடி விசும்பணுவப் பிற வேந்தர்க்கு அரியெனப் பொலிந்து தோன்றினன் வீடுமன், அவ்விடத்து, (௪எ௩)

474. கூர்முகத்து வாளமரர் கோமான் கோடிநகரிற்
போர்முகத்த[1] கோபுரம் போன்றதே—பார்நிழற்றும்
பைம்போற் குடையான் படைச்சேனை முன்னின்ற
செம்போற் பனைக்கொடியான் றேர்.

---

474. அமரர் கோமான் நகர் - அமராவதி. பனைக் கொடியான்- வீடுமன்.

பா. வே: 1. கோபுரமே போன்றதாம்.

இவ்வகை நின்ற வீடுமனையும் அவற்கருகாக இருபதினாயிரம் தேர்க்குழாஞ்சூழ நின்ற துரோணனையும், அவற்கருகாக நின்ற கிருபனையும், கிருதவன்மாவினையும் அவர்க்கருகாக நின்ற அசுவத்தாமனையும் அவற்கருகாகப் பதினாயிரந் தேர் புடைசூழ நின்ற மத்திர வேந்தன் சல்லியனையும், அவற்கருகாக நின்ற சகுனியையும், ஆங்கவற்கருகாக நின்ற துரியோதனன் தம்பிமார் தொண்ணூற்றொன்பதின்மரையும், பன்னூறாயிரந் தேர்புடைசூழ நின்ற துரியோதனனையும் உள்ளிட்ட உறவினர்களையும் அனைத்து அரசர்களையும் கண்டு மகிழ்ந்து எல்லையில்லாததோர் அருள் தோன்றி யாது செய்தான் அருச்சுனன். (௪௭௪)

475. உற்றாரை யெல்லா முடன்கொன் றரசாளப்
பெற்றாலும் வேண்டேன் பெருஞ்செல்வஞ்-[1]சோற்றாழ்ந்து
வாட்டடக்கை வின்னெகிழ வாளா விருந்திட்டான்
றேர்த்தட்டின் மீதே திகைத்து.

எ - து. பாட்டனாகிய வீடுமனையும், அந்தணனாகிய துரோணனையும் உடன்பிறந்தார்களையும் மற்றுமுள்ள உறவினர்களையும் காலாள்களையும் கண்டு, போர்க்களத்தில் இவ்வனைவோரையும் கொன்று தருமனுக்குச் சிறிதளவாகிய நாடு கொடுப்பதில் காட்டிற்போமது அறமென்று எல்லையில்லாததோர் அருள் தோன்றிக் கவலையுளத்தனாய்த் தளர்ந்து வில் கைசோரத் தன் அணிநெடுந்தேர்மேல் ஆண்டொழின் மறந்திட்டிருந்தான் அருச்சுனன். அப்பொழுது கண்ணன் அவன் கருத்தறிந்து உடற்றோற்றத்தால் மயக்குற்றான் என்றும் அவனைக் கொண்டே மறைந்து நின்று புவிப் பாரந் தீர்க்க வேண்டுகையாலும் இவையிரண்டும் திருவுளத்தே கொண்டருளி யாது செய்தான் கண்ணன் : (௪௭௫)

476. பிறப்பு நிலைகே டிவையாவான் பாவ
மறத்தினோ டைம்பூத மாவா—னுறற்கரிய
வானாவான் மண்ணாவான் மன்னுயிர்க ளித்தனையுந்
[2]தானாதல் காட்டினான் றான்.

---

475. வாள் + தட + கை - ஒளியுடைய நீண்ட கை. வாளா - செயலற்று.

476. கேடு - இறப்பு. ஐம்பூதம் - மண் விண் தீ நீர் காற்று.

பா. வே: 1. சுற்றார்த்த. 2. தானாவான்,

ஏ - து. பிறப்பேனும் யான், இறப்பேனும் யான், காத்தளிப்பேனும் யான், முடிவு காலத்து வந்து ஏழுகடல்களுங் கிளர்ந்து ஊழியாவேனும் யான், அவையுட்டிரியும் அனைத்து மீன் வகையாவேனும் யான், உலக ஊழித்தீயாய் அழிப்பேனும் யான், மண், விண், வீடு ஆகின்றேனும் யான், அனைத்தும் ஆகின்றேனும் ஒலியாகின்றேனும் யான், அறமாகின்றேனும யான்,வினையாகின்றேனும் யான், இரவாகின்றேனும் பகலாகினறேனும் யான், மாலை மயக்கம் ஆகின்றேனும் யான், மண், விண், தீ, நீர், காற்று ஆகின்றேனும் யான் கண்டாய்; என்னையொழிந்துண்டாவன வொன்றுமில்லை கண்டாய்; அனைத்துப் பொருளும் யானாகி நிற்கின்ற தன்மைதனைக் காண்பாயாக வென்றும், உனக்குச் சீரிய விழிதந்தேன் என்றும் அருளிச் செய்து தன் சிறந்த பேருருவை வெளிப் படுத்திக் காட்டுதலும், அதுகண் டருச்சுனனும் மிக வஞ்சிச் செய்வதொன் றறியாது யாது சொல்லி யாது செய்தான்: (சஎசு)

477. ஆயாவென் மைத்துனனே யாழித்தேர்ப் பாகாநான்
[1]பேயா னுரைத்த பெரும்பிழைகண்—மாயா
பொருபடைக்கை மாலே பொறுத்தருள்வா யென்று
திருவடிக்கே வீழ்ந்தான் றெளிந்து.

ஏ - து. எம் பெருமான் என்று அறியாமையினாற் செய்தனவும் சொல்லியனவும் உளவாயிற் பொறுத்தருளவேண்டு மென்று திருவடித் தாமரைமேற் பணிந்து கிடந்தானைத் தடவரைத் தோள் பற்றியெடுத்து நிறுத்திச் சொல்லுவான்: கிருத ஊழியின்கண் அசுரர் அழிவு காரணமாக நான் நாராயணனாய்த் தோன்ற நீ நரனாய்த் தோன்றினை; அதன்பின் திரேதா ஊழியின்கண் அரக்கர் அழிவு காரணமாக நான் இராமனாய்த் தோன்ற நீ இலக்குவனாய்த் தோன்றினை; அதன் பின் துவாபரஊழியின்கண் மனிதர் அழிவு காரணமாக நான் கண்ணனாய்த் தோன்ற நீ அருச்சுனனாய்த் தோன்றினை; அதுவும் உயிரழிவு செய்து புவிப்பாரம் தீர்ப்பதன் பொருட்டாகத் தோன்றின உருவங் கண்டாய்; ஆதலால் உனக்கிங்குப் புவிப்பாரம் தீர்ப்பது ஐயமில்லை; மற்றிவர்களாற் பயனில்லை; இங்கு நிற்கின்ற வீரர்களும் அனைத்து உயிர்களும் நொடிவரையில் என்கையில் மாண்டொழியும்; புவியின்கண் அறம் வினை என்கின்றவை இரண்டு நிலைபெறற்காகவும், யாவர்பாலும், வாய்மை என்கின்ற மொழிக்கு ஒளி வேண்டும் என்றும்

---

477. திருவடிக்கே - திருவடிக்கண்: உருபுமயக்கம். ஆயா - ஆயனே. தெருட்டி - தெளிவித்து.

பா. வே: 1. பேயேன்.

தருமனுடன் முன்னம் உரைத்த மொழி மறுத்த துரியோதனன் தானையை உங்கள் ஆணை அழிந்துபடாமல் நினைக்கொண்டு பழிதீர்த்துத் தரவேண்டியும் இது நின்னாலே துணியப்பட்டது கண்டாய்; நீ கொல்லாமல் ஒழிந்தாய் ஆயினும் யானிந்தப் படைத் தொகுதியை அழித்து விடுகை தவிரேன் ஆதலின் உங்கள் ஆணை அழிந்து படாமல் யான் நிற்க வீண்டே நீ இந்த வீரர்களைக்கொல் வதற்குக் காரணமாய்த் துணிந்து நிற்பாயாக என்றும் யானும் நீயும் நரநாராயணர் அன்றோ என்றும், இவ்வகை தெருட்டியருளிச் செய்யக் கேட்டு மனந்தெளிந்து தக்க அறிவால் யாது விண்ணப்பஞ் செய்தான் அருச்சுனன்: (௪௭௭)

478. தாயாகித் தந்தையாய்த் தத்துவமாய் மெய்த்தவமாய்
மாயாநீ மண்ணுலகும் வானுலகுந் தானாகி
யெங்குமாய் நின்றானே யெங்களைமுன் கொண்டவரை
மங்குமா செய்யாய் மகிழ்ந்து.

இவ்வகை விண்ணப்பஞ் செய்து நின்ற அருச்சுனனைக் கைகவித்து மற்றிந்தப் போர்க்களத்தில் வந்தீண்டி நிறையப்பட்ட தானை வெள்ளத்தை மடித்து உங்கள் ஆணையை முற்றுவிப்பான் உன்னை உடன்கொண்டு நின்றேன்; மற்று யானிற்கின்றபொழுதே உங்கள் ஆணையை நிறைவேற்றிக் கொள்ளீராகில் மற்றந்தப் பகைவரை யாவராலும் வெற்றி கொள்ள அரிது கண்டாய்; ஆதலால் என்னுடன் போர்க்கு ஒருப்படுவாயாக என்று தக்கவற்றுரைத்துச் சினத்தீ எழுப்பி ஒருப்படுத்திப் பின்னைத் தருமனைக் கண்டு போர்க்கு ஒருப்படுக என்றலும், கண்ணனை நோக்கித் தருமன் விண்ணப்பஞ் செய்வான: வீடுமர் துரோணர் இசைவு வேண்டுமே என்று உரைத்திடுதலும், ஆங்கவர்களைக் கண்டு குறைவு பேசி வாருங்கள் என்று கண்ணன் விடுப்ப அவர்களுஞ் சென்று பகைவரிடத்து நின்ற வீடுமனைக் கண்டு வணங்கத் தருமனை நோக்கி வீடுமன் சொல்வான: உனக்கும் உன் உடன் பிறந்தார்க்கும் நட்பு உடையேன் ஆகிலும் துரியோதனன சோறு பலகாலும் உண்டமையால் அவனுக்கு அலக்கண் விளைந்தவிடத்துப் போர் முனையில் என் உயிரைத் துறப்பேனாக வீரர்நெறி விரும்பினேன்; எத்தனையும் நீயும் உன் உடன் பிறந்தார்களும் வாய்மை ஒழியாது அறவோராய் நெறிப்படி நின்றீர்; இதுவுமன்றித் தேவதேவன் கண்ணனை வலவனாகப் பெற்றுடையீருக்கு மற்றவனால் செய்யப்பட்ட

---

478. முன் கொண்டவரை – போர்க்களத்தில் முன்னே நிற்கக் கொண்ட துரியோதனரை. மங்குமா - அழிந்து படுமாறு. அலக்கண் - அல்லல்.

ஒழுங்கின்மை அனைத்தும் கண்டும் நீங்கள் பொறுத்திருந்த புகழினால் நும் வாய்மையும் அறத்தின் சிறப்பும் பகைவர்க்கு அழிவாங் கண்டாய்; அதனால் நாடு முற்றும் கண்ணன் உங்கட்கே தருங்கண்டாய்; யான் உனக்குச் செய்யத்தக்கன என் கொலோ? எனக்கேட்டு யாது சொன்னான் தருமன்: (௪௭௮)

479. வேலற்கரிய வாட்டானை நீநிற்க வெம்மால்
வேலற்கரிய வாழ்விளம்ப வேண்டு—மலர்க்கமலச்
செந்தாது [1]மீன்கதுவத் தேனுகரு நன்னாடா
வெந்தாதை தாதா [2]வெமக்கு.

எ - து. எம்பெருமான் நீ இப்பெரும் படைக்குத் தலைவனாய்க் காத்துநிற்க இப்பெரும்படை இமையவர்க்கும் வெலற்கரிது ஆதலால் நின்னை நாங்கள் வெல்லும்வகை அருளிச் செய்வாயாக என்று தருமன் சொல்லக் கேட்டு, வீடுமன் சொல்லுவான்: பண்டென்னால் மறுக்கப்பட்டாள் அம்பை என்பாளோர் கன்னி போய் வீடுமனுக்குப் பகையாவேன் என்று நெடுங்காலந் தவஞ் செய்து துருபதன் மகளாய்த் தோன்றி ஆண் ஆனாள்; சிகண்டிப் பேருடையான் ஆங்கவனை இற்றைக்குப் பத்தாம் நாள் போர்க் களத்தில் கொண்டுவந்து என்முன்பு காட்டின் அப்பொழுது அவனைக்கண்டு படைக்கலம் போட்டுக் கருவியின்றி நிற்பேன்; நின்ற பொழுது அருச்சுனன் கையில் அடு கணைகளாற் றளர்ந்து விழுந்து அவ்வுலகத்துக்குப் போவேன். அதுவுமன்றிப் போர்பொருந் தோராட்களில் நானும் துரோணரும் அசுவத்தாமனும் கன்னனும் வியத்தகு திறங்காட்ட வல்லோமாகிலும் அருச்சுனன் செய்யும் திறங்கள எம்மாற் செய்ய வொண்ணாவென்று வீடுமன் சொல்லக் கேட்டுத் தருமன் செவிபுதைத்து உனைக் கொன்று வாழும் நாட்டினாற் பயனில்லை என்று மயங்க, அவனைநோக்கி வீடுமன் பலவும் எடுத்துரைத்து அருச்சுனனாவான் கண்ணன் கூறுடையன் ஆதலால் அவன் கையில் படுகை எமக்கு வீடுபேறு கண்டாய். நீங்கள் அனைவரும் அதற்கு விலகாது உடன்படும் என்று உடன்படுத்தித் தருமனுக்கு விடைகொடுப்ப அவனும் போய்த் துரோணனைக் கண்டு வணங்கத்தருமனைக் கண்டு துரோணன் சொல்லுவான்: திருதராட்டிரன் மக்களால் விளைந்த

479. வாள் + தானை - வாட்டானை; வாட்படை. தாது - தேன். கதுவ – பற்ற. தேன் - வண்டு. எம் தாதை தாதா – எம் தந்தைக்குத் தந்தையே. எமக்கு விளம்ப வேண்டும் என இயைக்க. விரகு–சூழ்ச்சி அறிவு.

பா. வே: 1. மீன் கதுவித் 2. விரகு.

மறநெறியோடே முடியாநின்றது இந்த நாடு முற்றும் உங்கட்கே யாவதற்கு ஐயமில்லை என்றுரைப்பக் கேட்டு யாது சொன்னான் தருமன் : (௪எ௯)

480. தக்க சரத்தாலுஞ் சாபத்தா லுங்கோல்லு
மிக்க திறலுடைய வேதியனே—தொக்கபுக
ழெம்பெருமா னிற்கவே யின்றிப் பெரும்படையை
யும்பர்தமால் வெல்லலாணுமோ வுற்று.

எ - து. எம்பெருமான் நின்றவிடத்து முக்கடவுளராலும் வெல்லவொண்ணாது ஆதலால் தங்கள் சீரிய படைக்கலங்களுக்குப் பின்னை வெல்லும் வலியுடையார் எங்களில் உண்டோ என்றும், எங்களால் வெல்லற்காகாது என்றும் தருமன் இன்சொல்லுடன் உரைப்பக் கேட்டு யாது சொன்னான் துரோணன் : (௪அ0)

481. என்மக னென்மு னிறந்தா னெனுமாற்ற
மன்னவையுட் கேட்பிக்க வல்லையேற்—பின்னை
யடலுகவா வென்றிண்டோ ளம்புகவா வென்கை
யுடலுகவா வென்ற னுயிர்.

எ - து. என்மகன் அசுவத்தாமன் என்னின் முன்னம் போர்க்களத்துப் பட்டான் என்னும் சொல் அரசர்கள் முன்னர் தருமன் வந்து சொல்லுமாகில் அப்பொழுதே யான் படைக்கலம் போட்டுவிட்டு நிற்பேன் என்று பின்னும் யாது சொன்னான் துரோணன்: (௪அக)

482. இற்றைக்கு மூவைந்தா நாளி லிகலமருட்
கோற்றப்போர் மன்னவனே கூசாதே—வெற்றிகொளும்
பாஞ்சாலன் புத்திரன் கைப்படுவே னென்றுரைத்தான்
முன்சாயு மாறே தரித்து.

என்றிவ்வகை இற்றைக்குப் பதினைந்தாம் நாளில் நீ அந்தச் சொல் சொன்னால் படைக்கலம் ஒழிந்து நிற்பேன்; அவ்விடத்தில்

---

480. சரம்-அம்பு சாபம்-வில். உம்பர் தமால்-உம்பர்தம்மால், வானோராலும். வெல்லலாணுமோ – வெல்ல ஒண்ணுமோ,

481. மாற்றம் – சொல். அடல்உகவா - போரை விரும்பா. பாஞ்சாலன் புத்திரன்- திட்டத்துய்மன். சாய்தல்-இறத்தல். தரித்து— ஏற்று.

எனக்குப் பகைவனாகிய பாஞ்சாலன் மகன் திட்டத்துய்மன் கையிற் படுவேன் என்று சொல்லிப் பின்னும் விருப்புரை பலவும் விளம்பித் தருமனுக்கு விடைகொடுப்ப, அவனை விடைகொண்டு போந்து தங்கள் பெரும்படை புக்கார் தருமனும் அருச்சுனனும் என்றவாறு. இப்பால் கண்ணன் கன்னனிடைக்கே மறைவாக எழுந்தருளி அருளிச் செய்வான்: வீடுமன் படைக்குத் தானைத்தலைவனாய் நிற்க உன்னாற் செய்யப்பட்ட வீரப்பாடுகள் எல்லாம் அவனாற் செய்யப் பட்டனவாம்என்று பின்னும் யாதருளிச் செய்தான் கண்ணன் : (சஅஉ)

483. வன்றறுகண் வீரரையாம் வாளமருட் காணலா
மென்றவன்று னென்றுரைத்த வின்னுச்சோ— [[1]லோன்றலுமே
வில்லாண்மை காட்டுவாள் [2]வேத்தவையு ணன்றேநின்
வல்லாண்மை [3]காட்டும் வழக்கு.

எ - து. நீ அருந்தேரரில் முன்றோன்றலாய் அரும்படைக்கலம் உடைய உன்னை அரைத்தேரரில் வைத்த வீடுமன் படைத் தலைமைக் கண் நின்றுஉன் நலங்களும் திறங்களும் காட்டினாய் ஆயினும் அதுவும் வீடுமனாற் செய்யப்பட்டதாங் கண்டாய்; ஆதலால் வீடுமன் படையின்பின் நீ படைத்தலைவனாய்ப் பெரும் படையையும் காத்து நின்னுடைய வீரச்செயல்களும் திறங்களும் தனிநின்று உன்காதல் தோழன் துரியாதனனுக்குக் காட்டுவதே முறையென எமக்குத் தோன்றிற்று என்றும் அது நிற்க, உன்னை வீடுமன் அரைத்தேரரில் வகுக்கப்பட்டது பிறநாட்டு வீரரெல்லாரும் அறநெறி அன்றென்றும், வீரத்திற்கு இழிவு என்றும் இகழாநின்றார் இது நீ சிறிதும் உணர்ந்திலை என்றும் இதுவுனக்குத் தக்கதன்று என்றும் இவ்வகை யெல்லாம் சொல்லி மயக்கிப் பின்னும் மறைவான பலவும் அருளிச் செய்து ஆங்கவனைப் பாடிவீட்டே விடுத்துப்போக்கி மீண்டும்போந்து அருச்சுனனைக் கண்டு கதிர்மணி நெடுந்தேர் ஏறிப் போர்க்கு ஒருப்படுவாயாக

---

483. தறுகண் - பேராண்மை. வேத்தவை - வேந்தன் அவை. இவண் வீடுமனுக்கு உட்பட்ட போரவை. நின் வல்லாண்மை காட்டும் வழக்கு நன்றே என்று கன்னனை மாறுபடச் சொன்னானும்.

பா. வே: 1. லென்றலுமே. 2. வேந்தவையு ளன்றேநின். 3. காட்டல் வழக்கு.

என்று தரும் வீமநகுல சகாதேவரையும் உடன்கொண்டு விற்படையைக் கைகவித்து வச்சிரநாபம் என்னும் படைவகுப்புச் செய்து துரியோதனன் தானையைச் சென்று தாக்கினராகக் கருதுவது.

(௪௮௩)

அணிவகுப்பு முற்றும்.

உத்தியோக பருவம் முற்றுப் பெற்றது.

முதனாட் போர்

484. தேனோங்கு சோலைத் திருவேங் கடமென்றும்
வானோங்கு சோலை மலையென்றுந்—தானோங்கு
தென்னரங்க மென்றுந் திருவத்தி யூரென்றுஞ்
சொன்னவர்க்கு முண்டோ துயர்.

இவ்வகை முழுதுணர்வாளனாய் உள்ள சகாதேவன் கடவுளை வாழ்த்திக் கண்ணனை வணங்கப் பாண்டவர் அனைவரும் வணங்கிப் படைக்கலங்களைத் தொழுதெடுத்து எல்லையில்லாத தோர் இன்பமெய்தி ஆர்த்திட்டார்; அப்பொழுது இரண்டு திறத்துப் பெரும்படையும் யாங்ஙனம் போர்புரிந்தனவோ வெனில் : **(க)**

485. எண்டிசை [1]மன்ன வெழில்வா ளிளங்கதிரோன்
[2]கொண்டல் பொழிலேழ் குலவரையோ—டண்டர்பதி
முட்டப் பரந்ததே வின்னா ணொலிமுற்றும்
வட்டத் திகிரிசூழ் மண்.

இவ்வகை எட்டுத் திசையும் தலைபனிப்ப இருதிறத்துப் போர்வீரரும தம் சிறு நாணெறிந்து போர்முழக்கஞ் செய்தார். அவ்விடத்திரண்டு படைக்கடலும் தம்மொடு தாக்கி ஒன் றொருவர்மே லொருவருடன் றெழுந்தார். அப்பொழுது கண்ணன் வடிக்கயிறு முட்கோலும் பிடித்து வெண்குதிரைகளைத் தூண்டிக் கடுவிசையாற் றேரோட்டா நின்றான். அவ்வளவில் பெருஞ்சின மெய்திக் கூற்றிரண்டு குறித்தெழுந்தாற்போல அருச்சுனனும் வீடுமனும் தலைப்பெய்தார்; வீமனும் துரியோதனனும் தலைப் பெய்தார்; தருமனும் சல்லியனும் தலைப்பெய்தார்; திட்டத்

---

484. சோலை மலை - அழகர்கோவில். தென்னரங்கம் – திருவரங்கம். தென் – அழகு; திரு.

485. வாள் - ஒளி. இளங்கதிர் - எழும் ஞாயிறு. பொழில் - நாடு. ஏழ் என்பதைக் கொண்டல், பொழில், வரை என்பவற்றோடும் கூட்டுக. திகிரி - கடல். வில் நாண் ஒலி – வின்னாணொலி. தலைப் பெய்தல் – எதிரிடுதல்.

பா. வே: *1. மன்னுமெழில். 2. கொண்ட.*

துய்மனும் துரோணனும் தலைப்பெய்தார்; சகாதேவனும் சகுனியும் தலைப்பெய்தார்; அபிமன்னுவும் இலக்கணகுமாரனும் தலைப்பெய்தார்; விராடனும் பகதத்தனும் தலைப்பெய்தார்; நகுலனும் துச்சாதனனும் தலைப்பெய்தார்; சயத்திரதனும் சுவேதனும் தலைப்பெய்தார்;

குந்திபோசனும் அசுவத்தாமனும் தலைப்பெய்தார்: பாலசேனும திட்ட கேதுவும் தலைப்பெய்தார்; விகர்னனும் உத்தமோசாவும் தலைப்பெய்தார்: விகந்தரனும் விடசேனனும் தலைப்பெய்தார், சாத்தகியும் பூரிச்சிரவாவும் தலைப்பெய்தார்; துருபதனும் அலம்புதனும் தலைப்பெய்தார்; கைகயனும் கிருபனும் தலைப்பெய்தார்; உத்தரனும் கிருதவன்மாவும் தலைப்பெய்தார்; கடோற்கசனும் வச்சிர சேனனும் தலைப்பெய்தார்; காம்போசனும் சோமதத்தனும் தலைப்பெய்தார்; சிகண்டியும் திரிகர்த்தனும் தலைப்பெய்தார்; பாண்டியனும் கிருதவன்மாவும் தலைப்பெய்தார்; சத்திரதேவனும் மகதவேந்தனும் தலைபபெய்தார்; அலாயுதனும் புண்டரீகனும் தலைப்பெய்தார்.

இவ்வகை மற்றொழிந்த அரசர்களோடு அரசர்களும், காலிங்கரோடு காலிங்கரும், குண்டலரோடு குண்டலரும், மாளுவரோடு மாளுவரும், குலிந்தரோடு குலிந்தரும், சுரசேனரோடு சுரசேனரும், சுராராட்டிதரோடு சுராராட்டிதரும், மேகலரோடு மேகலரும், மகதரோடு மகதரும், பத்திரரோடு பத்திரரும், மீனவரோடு மீனவரும், பறமகரோடு பறமகரும், அளகரோடு அளகரும், பஞ்சகரோடு பஞ்சகரும், காந்தாரரோடு காந்தாரரும், கெதகரோடு கெதகரும், கருடரோடு கருடரும், இளவன்னரோடு இளவன்னரும், குச்சரரோடு குச்சரரும், நாராயண கோபாலரோடு நாராயண கோபாலரும், மிலேச்சரோடு மிலேச்சரும, காந்தாரரோடு காந்தாரரும், கவுசிகரோடு கவுசிகரும், விராடரோடு விராடரும், தசாதரோடு தசாதரும். சேதிபரோடு சேதிபரும், மகாமாநதரோடு மகாமாநதரும், துருக்கரோடு துருக்கரும், கன்னடரோடு கன்னடரும், ஒட்டியரோடு ஒட்டியரும், மற்று ஒழிந்தாரோடு ஒழிந்தாரும் ஒன்றொருவரோடு ஒன்றொருவர் சென்று தாக்கி நெருக்க லுற்றனர்.

அப்பொழுது தேரும் தேரும் எதிர் இளைத்தன. மாவும் மாவும் மயக்குற்றன. களிறும் களிறும் கையுறுத்தன. வாளும் வாளும் வயவுற்றன. வேலும் வேலும் வேய்ப்புற்றன. சிலையும் சிலையும் சிதைவுற்றன. மழைபொழிந்தன அம்புப்படலங்கள். மற்றுமுள்ள படைக்கலங்களால் இருவிசும்பும் பொறியெழுந்தன.

இவ்வகை இருதிறத்துப் போர்வீரரும் எய்தும், எறிந்தும், ஆர்த்திடுதலினால் வானும் அம்புப் படலத்தான் மறைப்புண்டது. திரண்டெழுந்தது தூளிப்படலம். சிறுநாணொலி திசைகள் செவிடுபடச் சிலம்பின. அப்பொழுது சத்திகளும் விட்டேறுகளும் தண்டு பிண்டி பாலகங்களும் பெருவச்சிரங்களும் தோமரங்களும் வேலும் வாளும் வில்லும் குந்தமும் பாராவளையமும் முசுண்டியும் சூலமும் கணிச்சியும் தொல்படை யாவும் எதிரெதிர் இளைத்தன. விசும்பெரி பரந்தன. படைமுழுதும் போர்மலைந்தன. பொறிபறந்தது. அமரர் கூட்டங்களும் வியப்புற்றன. கதிரோனும் தூளிப்படலத்தால் மறைக்கப்பட்டான். ஆர்ப்பரவம் எழுந்தது. தாளமும் முரசும் பேரிகையும் மத்தளமும் சல்லிகையும் குடமுழாவும் குலுங்க ஆர்த்து எம்மருங்கும் பேரொலி முழங்கப் பெரும் போர் விளைந்திட்டது. தீக்குறி பல தோன்றின. இவ்வகை பெருமுழக்கத்துடன் போர் விளைந்திட்டது. அப்பொழுது : (உ)

486. கங்கை[1] பெறுமகனைக் காமி னெனப்படைமுன்
வெங்கண் விடநாக மேந்தினான்—பொங்கொளித்தேர்
மாமானைத் தம்பியரை யுள்ளிட்ட மத்திரத்தார்
கோமானைச் சொன்னான் குறித்து.

எ - து. அருச்சுனனொடும் பொருகின்ற வீடுமனுக்குத் துணை செய்யென்று துச்சாதனனையும் துன்முகனையும் சித்திராங்கனையும் சித்திரசேனனையும் உள்ளிட்டார் நாற்பத்தொன்பதின்மர் தம்பிமாரையும் சல்லியனையும் சகுனியையும் அதற்குத் தக்க எத்தனையோர் ஆயிரம் யானை குதிரை காலாட்களோடும் போக விடுத்தான் துரியோதனன். அதுகண்டு தருமன் யாது செய்தான் : (ங)

487. அங்கோ ரிளங்குமர ரைவரையு மாடோலிநீர்க்
கங்கை மகனோடுங் காசினிப்போர்—பொங்கித்
தொடுத்தான் மணிநெடுந்தேர் சூழ்காமி னென்று
விடுத்தான் முரசுயர்த்த வேந்து.

---

486. மத்திரத்தார் கோமான் - சல்லியன். மாமன் — சகுனி. கங்கைபெறுமகன் - வீடுமன்.

487. ஆடுதல் - அசைதல். சூழ்காமின் — சூழ்ந்து காக்க. முரசுயர்த்தான் — தருமன்.

பா. வே: 1. பெருமகனைக் காரார் கடந்படைமுன்.

எ - து. வீடுமனுக்குத் துணைபுகுந்தமை கண்டு, தருமனும் அருச்சுனனுக்குத் துணையாகத் திட்டத் துய்மனையும், சாத்தகியை யும், பூதிகந்தனையும், அபிமன்னுவையும், வீமனையும் எத்தனையோ ராயிரம் ஆனை தேர் குதிரை காலாட்களையும் அனுப்ப வந்து அருச்சுனனுக்கு முன்புகுந்து வீடுமன்மேற் சீறியெழுந்து யாது செய்தான் வீமன் : (ஏ)

488. நினைப்பரிய கூர்வாளி நீள்வரைத்தோள் வேந்தன்
பனைக்கொடிமேற் பன்னிரண்டு பாய்ச்சி—நுனைப்பகழி
யொன்பதுகோண் டாங்கவன்ற னெண் [1] கவசத்
முன்பதிர வெய்தான் முனிந்து. [திற்புகுத்தி

இவ்வகை அவன் பனைக் கொடிமேற் பன்னிரண்டும் கவசத்தின்மேல் ஒன்பதும் கணைபாய்ச்சி நான்கு அம்பால் காய்ந்தாரைக் கலக்குறுத்தித் தேருஞ்சிலையும் அழித்து அரிமா முழக்கம் செய்தான் காற்றின் செல்வன் வீமன் என்றவாறு. அப்பொழுது அபிமன்னு யாது செய்தான் : (ஒ)

489. பேரொலிநீர்க் கங்கை பெறுஞ்சிறுவன் றேர்பூண்ட
போரொலிமா நான்கினையும் பொன்றுவித்தான்—கூரிய
வேல்வண்ணன் போர்முகத்து வெவ்வாளி நான்கினான்
மால்வண்ணன் றங்கை மகன்.

இவ்வகை வீடுமன் தேர்பூண்ட புரவி நான்கினையும் அயில்வாய் அம்பினால் உயிர் வவ்வினான் அபிமன்னு என்றவாறு. ஒருபால் : (௯)

490. மத்திரத்தார் கோமானு மச்சத்தார் கோன்மதலை
யுத்திரனுந் தம்மி லுடன்றெழுந்தா—ரத்திரங்க
ளொன்றொருவர் [2] விட்டாலவ் வொன்றொருவர்
சென்றறுவும் வண்ணஞ் செயிர்த்து. [மேனியின்மேற்

---

488. நுனைப்பகழி - கூரிய நுனையுடைய அம்பு. அதிர - அதிர்ச்சி யடைய.

489. பொன்றுவித்தான் - கொன்றான். வாளி – அம்பு. மால் வண்ணன் தங்கை – கண்ணன் தங்கை; சுபத்திரை. அவள் மகன் அபிமன்னு.

490. உடன்று - மாறுகொண்டு. அத்திரம் – அம்பு. செயிர்த்து- சினந்து.

பா. வே: 1. கவசந் திண்புறுத்தி.
2. விட்டாலு மொன்றொருவர்.

எ - து. மத்திரத்தார் கோமான் சல்லியனுக்கும் மச்சர் கோன் உத்தரனுக்கும் பெரும்போர் விளைந்திட்டது. அப்பொழுது மத்திரவேந்தன் படைமுழுதும் உத்தரனால் கொல்லப்பட, சல்லியனையும் வில்லறுத்து மற்றவன் தேர்ப்புரவி நான்கினையும் வலவனையும் உயிரகற்றித் துரியோதனன் படை முழுதும் துரத்திக் கொண்டு திரிகின்றான் விராடவேந்தன் மகனைக் கருதுவது. அப்பொழுது மிக நாணி யாது செய்தான் சல்லியன். (எ)

491. மெய்கொண் டெழுந்த வெகுளிக் கடுங்கூற்றைக்
கைகொண்டு சென்றவனைக் காயென்று—மெய்கொண்டு
விட்டானோர் வெள்வேல் விராடன் குலமதலை
பட்டானவ் வெள்வேல் பட.

எ - து. முன்னம் அழிந்து போன சல்லியன் பின்னும் ஒருகால் வந்து தாக்கி ஒரு சிறந்த வேலை உத்தரன்மேல் விட, அதுவும் உத்தரன் மார்பகலம் பிளக்க நிலத்தின்மேல் விழுந்தான் உத்தரனைக் கருதுவது. அதுகண்டு பாண்டவர் படை இரிந்தோடிற்று அவ்வளவில் அது கண்டு அவன் மூத்தோனாயினான் சுவேதன் தன் உடன் பிறந்தானைக் கொன்று வீழ்த்த சல்லியன் மேற்றிசை நடுங்கத் தேர்கடாவிச் சென்று யாது செய்தான் சுவேதன் : (அ)

492. செம்பொனேடுந் தேரிற் சிவேதன் செருக்களத்துத்
தம்பி யவியத் தரியாதே—தம்பியைத்தான்
கொன்றான்மே [1]னாட்செய்தான் கூற்றுவனைக் காலினால்
வென்றான்முன் னாட்[2]கொடுத்த வில்.

இவ்வகை சுவேதன் சென்று சல்லியனோடுந் தாக்கி மற்றவனைக் காத்தவரை யெல்லாம் கொன்றுழக்கா நின்றான்; அது கண்டு துரியோதனனும் அஞ்சிச் செயசேனனையும்

---

491. விராடன் - மச்ச நாட்டு வேந்தன். அவன் குலமதலை உத்தரன். பட்டான் - இறந்தான்.

492. தம்பி - உத்தரன். அவிய - அழிய. தரியாது - தாங்காது. நாட்செய்தான் - கொல்லுதற்குப் பொழுது குறித்தான். கூற்றுவனைக் காலினால் வென்றான் - சிவபெருமான். மார்க்கண்டேயனுக்காகக் கூற்றம் உதைத்த கதை இவண் சுட்டப்பெற்றது.

பா. வே: 1. நாட் செய்து கூற்றுவனுக் காக்கினான்.
2. கெடுத்து.

செயத்திரதனையும் உள்ளிட்டார் அறுபதினாயிரந் தோராட்களையும் விடுத்துச் சல்லியனுக்குத் துணையாமின் என்ன அவர்களும் போய்ச் சல்லியனுக்கு முன்புகுந்து சுவேதன்மேற் சென்றார். அது கண்டு யாது செய்தான் சுவேதன் : (௯)

493. அறுவர் சிலையினையு மாறிருகூ றாக்கிச்
சிறுபொழுதிற் சின்னங்கள் செய்தாங்—குறுபொழுதிற்
போர்வீரர் மாளப் பொருகணையாற் பொன்றுவித்தான்
றேர்வீரன் [1]மச்சர்கோன் சேய்.

இவ்வகை மூடிக் கொண்ட தேரும் மாவும் மூரிவேழமும் காலாளும் நொடிவரையிற்பட மலைந்து, மற்றந்த மறமன்னரைத் தேருஞ்சிலையும் அழித்து அறுபதினாயிரம் தோராட்களையுங் கொன்று குவித்துச் சல்லியனையும் தேருஞ்சிலையும் அழித்துக் காலாளாக்கிப் புறகிடுவித்து முரசுமுழக்கி ஆர்த்திட்டான் சுவேதன் என்றவாறு. ஒருபால்; (௧0)

494. கூரெயிற்று நாகக் கொடிகொண்ட கோமானைத்
தேரழித்த வீமன்மேற் சென்றான்றிப்—பேரமரிற்
பல்படைநா றாயிரவர் சூழ்ந்தார் பகட்டினமும்
வேல்படையுந் தேரும் விரைந்து.

எ - து. முன்னமொரு தேரழிந்து போன துரியோதனன் வந்து வீமனுடனே தாக்கப் பன்னூறாயிரம் தேரும் பன்னூறாயிரம் யானையும் பத்து நூறாயிரம் புரவியும் உடன் சூழ்ந்து கொண்டு அம்புப் படலஞ் சிந்தி வளைத்து மூடி ஆர்த்திட்டான். அப்பொழுது, (௧௧)

495. மாவல்ல பாஞ்சாலன் மக்களுடன் மச்சத்தார்
காவலனுங் கார்வண்ணன் றம்பியரு—மேவலரு
மொய்த்து நுனைப்பகழி மூழ்கச் [2]செருவிளையா
மைத்துனனைத் தாக்கினார் வந்து.

எ - து. தருமனால் விடுக்கப்பட்ட திட்டத்துய்மனும் சிகண்டியும் சாத்தகியும் உள்ளிட்ட தேராட்களும் வந்து வீமனைச்

---

493. சின்னம் – சிதைவு.

494. பகடு - யானை.

495. கார் வண்ணன் தம்பி - சாத்தகி.

பா. வே : 1. மச்சத்தார் சேய். 2. சிலைவளையா.

சூழ்ந்து நின்றாரைத் தருக்குவித்துப் போர் மலைந்தார். அப்பொழுது யாது செய்தான் வீமன் : (கஉ)

496. **போர்வயிரத் திண்டேரிற் போந்து பொருதடக்கைக்**
கூர்வயிரத் தண்டேந்திக் கொண்டெழுந்து—தேரி
னுகம்பிளந்து தேர்பூண்ட நண்பரிமாச் சாய
முகம்பிளந்தான் வீமன் முனிந்து.

ஏ - து. முன்னம் மூடிக்கொண்ட பெரும்படையைக் கை துரந்து துரியோதனனைத் தாக்கித் தேரும் சிலையும் அழித்து மற்றவனைக் காத்தாரைக் கொன்றுழக்கி உருமேறெனத் திரிகின்ற வீமனுக்கு ஆற்றாது நிலைகலங்கி அமர்மலை நெறிவிட்டு வீடுமர் துரோணர் நின்றார் இடைக்கே புகவிழுந்தது படையாகக் கருதுவது ஒருபால், சல்லியனுக்குத் துணைபுகுந்த வீடுமனும் சுவேதனும் தம்மில் உடன்று தாக்கி யாது செய்தாரோ வெனில் : (கங)

497. **பன்னொன்று கூறுகப் பத்து [1]வடிக்கணையால்**
வென்னின்ற தோளானை வில்லறுத்தான்—மன்னர்
வெருவத்தேர் [2]புற்கொடியும் வெண்டுகிலும் வீழ்த்தா
னிருபத்தே ழம்பினா லெய்து.

ஏ - து. வீடுமனைத் தேருஞ் சிலையும் கொடியும் அறுத்து மற்றவனைக் காத்தாரையெல்லாம் கொன்று வீழ்த்து உருமே றென்னத் திரிந்தார்த்துக் கொண்டான் சுவேதன். அப்பொழுது யாவரும் செய்வதறியாது ஒரு திறஞ்செய்தான் சுவேதன் எனப் பேசித் தேவர்களும் வியப்புற்றாராகக் கருதுவது. இவ்வகைப் பட்டு மிகவும் நாணிப் பின்னும் யாது செய்தான் வீடுமன் : (கச)

498. **அற்ற [3]சிலையானு மவ்வளவி லாங்கேயோர்**
வெற்றிச் சிலையை வெகுண்டெடுத்தான்—மற்றதனை

---

496. நுகம் - நுகக்கோல். முகம் – பரியின்முகம்; படைமுகமுமாம்.

497. வடிக்கணை – கூர்ங்கணை. வென் - வெற்றி. புற்கொடி – பனைக்கொடி. பனை, புல்லினத்தைச் சார்ந்தது ஆதலால் புற்கொடி என்றார்.

பா. வே: 1. வடிகணை. 2. வெல்கொடியும்.
3. சிலையாள னவ்வளவி.

யிளைந்து கூறாக வெய்தா னெழிற்பகழி
யோரைந்து நான்கு முடன்று.

எ - து. விடுமன் விளிந்தெழுந் திரண்டாவது போர்மலைந்து தேருஞ் சிலையும் அழிந்து ஏழும் ஒறால் எட்டுத்துண்டாக்கிக் கொடியுமற்று நிலத்து வீழத் தேரோட்டியையும் தேர்ப்புரவி நான்கினையும் வீழ்த்திப் புறகிட்டான் என்றவாறு. அப்பொழுது வீடுமனுக்குத் துணை செய்வதாக விகன்னனையும் செயசேனனையும் உள்ளிட்டார் முப்பத்தொன்பதின்மர் தம்பிமாரைத் துரியோதனன் விடுப்ப மற்றவரும் வந்து சுவேதனை வளைத்து மூடித் திளைத்துரபபிக் கணைமழை பொழிந்து போர்மலையா நின்றார். அப்பொழுது பெருவிரை வெய்திப் பின்னும் யாது செய்தான் சுவேதன் : (கரு)

499. தேரிழந்து மாவிழந்து செம்பொற் [1]சிலையிழந்து
போரிழந்து நாணிப் புறகிட்டான்—மூரிப்
படுகணைகள் சிந்தப் படருநீர் நாடன்
சுடுகணைக ளோப்பச் சுளித்து.

எ - து. துரியோதனனால் விடுக்கப்பட்ட தோராட்களும் தம்பிமாரும் யானை குதிரை காலாள் வலியோரும் சென்று சேர வீடுமன் சுவேதனோடே தாக்கிப் பெரும் போர் விளைத்த விடத்துச் சுவேதன் தோற்று யானை குதிரை காலாள்களோடும் பார்மன்னர் களத்தவியத் தாங்கற்கரிய வீடுமனை மூன்றாவது தேரும் சிலையும் அழிக்க அழிப்புண்டுபட்டுப் படாத படையுடன் புறகிட்டு நிலையாற்றாது தளர்கின்றானைக் கண்டு துரியோதனன் பின்னையுஞ் சில தோராட்களை விடுப்ப மற்றவரும் வீடுமனுக்குத் துணைபுகுந்து சுவேதனோடும் வந்து தாக்கிப் பெருமுழக்கஞ் செய்து கொடிய போர் விளைத்திட்டார். அப்பொழுது, (கசு)

* * *

---

498. கூறாக — துண்டாக.

499. படரும் - செல்லும். சுடுகணை - வெய்ய கணை. தூர்ப்ப - நிரப்ப. சுளித்து - சினந்து.

பா. வே: 1. கொடியிழந்து.

* இவ்விடத்தில் ஒரு வெண்பா விடுபெற்றிருக்கலாம்.

இவ்வகை வீடுமரும் துரோணருங் கண்டு நிற்கவே ஆங்கவர்களுடன் வந்த பெரும் படையைப் போரமலைந்து, போகத் துரத்தித், தேர்வேந்தர் இருவர் சிலையினையும் அறுத்து, ஆங்கவரைக் கைவிட்டுத் துரியோதனன் முதலானவர் மேலே போயினான் வீமன் என்றவாறு. ஒருபால் யாது செய்தான் சுவேதன் :

500. அமரவர் சிலைதுணித்தாங் காரமருள் வீழ்த்திட்
டமரவ ருடறலைவே ருக்கி—யமரவ
ருதிரக் குருதியா றுண்கடல்போன் மண்ட
வதிரப்போர் செய்தா னவன்.

இவ்வகை பொருது குருதிப் புனல் பெருகிட நிணம் வீழப் பிணம் மிதப்பப் போர்க்களம் முழுதும் பரந்து நின்ற வீரர் கூட்டத்தினையும் யானை தேர் குதிரைகளையும் காலாட்களையும் நொடி வரையிற் படமலைந்து பெருந்தே ராட்களில் படைத் தலைவனாகி நின்ற வீடுமனையுந் தேருஞ் சிலையும் கொடியும் அறுத்துப் பெரும் படையைக் கைதுரந்து உருமேறென்ன உடன்று அரிமா முழக்க மிட்டு எதிர்மலைவாரை இன்றிக் களமுழுதுந் தேர்கடாவித் திரியா நின்றான் மச்சர் கோன் சுவேதன். இவனைக் கண்டு ஆற்றாது பெரும்படை உடைந்துபோகப் போகாது நாணிப் பெருங் காற்றுள் அகப்பட்ட பெருமரம் போல நிலையாற்றாது கலங்கி நின்று சுவேதனை மாளப் பொருமாறு கருதிக் கவலையோடு நின்றான் வீடுமன் என்றவாறு. இவ்வகை யாவராலும் செயற்கரியதோர் திறத்தினால் நான்குமுறை சுவேதனால் தோல்விகண்டு சினங்கன்றி நின்ற வீடுமனைக்கண்டு தேவர்களும் வியப்புற்றுத் தேவர்கோனை நோக்கிச் சொல்லுவார் ; இவன் முன்னம் தேவனாய் வாழும் காலத்து வசுக்கள் எண்மர் இட்ட தீமொழியால் மண்ணகத்து விராடர்கோன் மகனாய்த் தோன்றிச் சுவேதன் என்று பெயர் பெற்றான், இவனும் இனி வானுலகெய்துகைக்கு நாளாயிற்று. இவனை இனிக் கொல்லும்வழி அருளிச் செய்ய வேண்டும் என்று சொல்லத் தேவர்கோனும் அங்ஙனமே நினைத்திருக்க அக்காலத்துத் தானல்லாதுபோலத் தன்சீரிய ஆற்றலால் உருவிலியாகச் சென்று யாதருளிச் செய்தான் கண்ணன் : (௧௭)

500. உடறலை - உடல்+தலை. உதிரக் குருதி : ஒருபொருட் பன்மொழி. மண்ட - திரள.

501. ஆடரவம் பூண்ட வரனார்தம் பாற்பெற்றக்
கூடமருள் வேல்லுங் கோடுஞ்சிலையா—னேடேநீ
வல்லாண்மை செய்யில் வலிதோலையான் வஞ்சனையால்
வில்லாண்மை யோடோழிய வேல்.

ஏ - து. சிவபெருமானால் வரப்பேறு பெற்று வில்லும் சீரிய படைக்கலங்களும் உடையவனை யாவராலும் வெல்ல வொண்ணாது ஆதலால் அவனை வில்லொழிய வேறு கருவிகளால் மலைந்து கொல்லுவீர்; இதுவே வழியென்று அருளிச் செய்யக் கேட்டுத் தேவர்கோன் உருவிலியாகச் சென்று போர்க்களத்தில் நின்ற விடுமனுக்கு யாது சொன்னானோ வெனில் : (கஅ)

502. வஞ்சனையாற் கோல்லிவனை [1]வாள்வேந்தே மற்றிவன் கை
வெஞ்சிலையுண் டாக வேலப்படா—னஞ்[2]சுடர்கண்
மின்னுயிர்க்கும் வெவ்வேல் விராடன் குலமதலை
யின்[3]னுயிர்க்குங் கால மிது.

ஏ - து. சுவேதன் இனி ஒரு நாழிகை சிலைகொண்டு போர் புரியுமாகில் உங்கள் பெரும்படை முழுதுங் கொன்றுவிடுங் கண்டாய். ஆதலால் இவனை வஞ்சத்தால் சிலை போடுவித்து வேறொரு கருவி பிடிக்கப் பண்ணிக் கொல்லுவீராமின் என்று அமரர்கோன் உருவிலியாய்ச் சொல்லக் கேட்டு யாது சொல்லி யாது செய்தான் விடுமன் : (கக)

503. அப்படியே செய்வேனேன் றங்கே சிலைவைத்துச்
செப்பரிய மன்னன் [4]றிறமழிக்க—வோப்பிலாக்
கங்கைமகன் வாள்கோண்டு கட்டாண்மை செய்தானே
போங்கமரு ளாங்கே புகுந்து.

ஏ - து. தேவர்கள் சொன்னது கேட்டுச் சுவேதனோடும் பொருகின்ற விடுமன் கதுமெனத் தன் சிலையினை வைத்து வாளும் வேலும் தண்டும் பிண்டிபாலந் தொடக்கத்துப் படைக்கலங்களும் வழங்கா நிற்ப ஆங்கதற்குத் துளங்காது நின்ற சுவேதனை நோக்கி யாது சொன்னான் விடுமன் : (உ௦)

---

501. வல்லாண்மை செய்யில் - வன்மையைக் காட்டினால். வில்லாண்மையோடொழிய - விற்போர் புரிதலை விடுக. இறைவன் அருளிய வில் அவனிடத்துளதாதலை முன்னுங் கூறினர். (492)

502. இன்னுயிர்க்கும் - இனிய உயிர் துறக்கும்.

பா. வே: 1. வாழ்வேந்தே. 2. சுடரின். 3. னுயிர்க்குக் 4. றிறலழிப்ப.

504. வேற்றிச் சிலையல்லா னின்னை விறற்படைகண்
மற்றும் பயிற்றி வளர்த்திலனே—கோற்றப்
படைவேந்த னுன்றாதை பைந்தார் விராடன்
குடைவேந்தன் மச்சத்தார் கோ.

வ. - து. நின்னை யுன்றாதை விராடர்கோன் விற்படையொழிய வேறு படையொன்றும் கற்பித்திலனோ என்று வீடுமன் வினவக்கேட்டு யாது சொல்லி யாது செய்தான் சுவேதன்: (உக)

505. வெஞ்சிலையே யன்று விராடன் பயிற்றியதென்
றஞ்சுரிகை வாங்கி யதிர்த்துரப்பி—வெஞ்சமத்துப்
பல்லா யுதமும் பயின்றேன் பனைக்கொடியாய்
சொல்லாயென் றானே சுளித்து.

அன்றியும், (உஉ)

506. கையாற் சிலையெறிந்து காலாளாய்த் தேரிழிந்து
மெய்யாற் செயிர்த்து மிகநோக்கி—வையாப்போய்
வாள்வலக் கைக்கொண்டான் வந்தெதிர்ந்தான்
ளுலக்கப் புக்கா னடந்து. [மன்னவன்மூன்

இவ்வகை தன் கடவுட் சிலையினைத் தேர்த்தட்டின்மேல் எறிந்து வெவ்வுரைகள் பலபேசிப் பல படையும் பயின்றேன் என வாளெடுத்துத் தேரினின்றிழியப் பாய்ந்து வருகின்ற சுவேதனைக் கண்டு யாது செய்தான் வீடுமன் : (உங)

507. மன்னர் நிலைகலங்க வாளேந்திச் சென்றானைச்
சின்னஞ் சிலபடுத்திச் சென்றெய்தித்—துன்னியதோர்
தோளுங் கடகுந் துணியச் [1]சுரந்தொட்டான்
வாளொண்கைக் கங்கை மகன்.

அன்றியும், (உச)

504. அல்லால்-அல்லாமல். "மச்சத்தார் கோவிராடன் நின்னை மற்றும் பயிற்றி வளர்த்திலனோ."

505. சுரிகை - வாள். உரப்பி - கூவி.

506. வையாப்போய் - நிலத்தில் நடந்துபோய். நாள் உலக்க-நாள் அற்றுப்போக.

507. கடகு - கேடயம்; மெய்மறை. சுரம் – சுரிகை.

பா. வே: 1. சரந்தொட்டான்.

508. வானவர்கோன் சொற்படியே வாள்கொண் டெதிர்போரு
சேனை கலங்கத் திசைநடுங்கத்—தானவனாய் [தான்
வாளேந்தி வந்தான் வலக்கையற வெய்தானே
கோளேந்து மன்னன் கோதித்து.

ஏ - து. இவ்வகை வாள்கொண்ட வலக்கையினைக் கூர் நுனைப் பகழி ஒன்றினாலே கூறு செய்த வீடுமனைக் கண்டு இடக் கையில் வாள் வாங்கி யாது செய்தான் சுவேதன் : (உரு)

509. சென்று நடுங்கியிடத் தெய்வப் படைதெரிந்து
நின்றவனை நோக்கி நெடுவரையிற்—சென்றவனைக்
கோல்லென் றுயிர்நோக்கி விட்டான் கொடுஞ்சுடர்வா
ணில்லென்று சென்றதே நேர்ந்து.

இவ்வகை வெகுண்டெறிந்த வாள் கண்டு யாது செய்தான் வீடுமன் : (உசு)

510. சென்று திசைவணங்கத் தெய்வப் படைநினைந்து
துன்று நெடுஞ்சிலைகாண் டோளலைப்ப—நன்றுலகின்
மன்னுயிரைத் தான்படைத்தான் மந்திரத்தான்
னின்னுயிரைப் போக்கினா னெய்து. (உஎ) [மற்றவன்ற

511. திசைநடுங்கத் தெய்வப் படைதெரிந்து சென்றிங்
கிகலவனைக் கோல்லென் றுரைக்கும்—வகை[1]தெரிந்து
சென்றுய்ப்பான் போலச் செழுஞ்சுடர்வே லொன்றினாற்
கொன்றடர்த்தா னப்பொழுதே கூர்ந்து.

இவ்வகையினால் பெருநெடுந் தேர்மேனின்றிழியப் பாய்ந்து கூற்றே போல வாளுருவிக்கொண்டு வாரா நின்ற சுவேதனைத் தன்னுடைய பிரமாத்திரத்தால் கொன்றான் வீடுமன் என்றவாறு. இவ்வகை பட்டுச் சுவேதன் வீழ்தலும் திருதராட்டிரன் தானை யென்னும் பெருவெள்ளம் ஆர்த்தெழுந்தது. அழிந்திட்டது பாண்டவர் படை. அவ்விடத்து : (உஅ)

---

508. தானவன் – அசுரன். அற – துண்டாக.

509. நெடுவரையில் சென்று • ஆழப்பதிந்து சென்று.

510. மன்னுயிரைப் படைத்தான் – நான்முகன்.

511. திகை – திசை. இகலவன் – எதிரிட்டோன்.

பா. வே : 1. செறிந்து.

512. மக்க ளிருவரையு மச்சர்கோன் ருணிழந்த
துக்க மதுகண்டு சோர்வான்போன்—மிக்க
தடவரைமே[1] னின்ற தழற்கதிரோன் மன்னுங்
குடகடன்மேல் வீழ்ந்தான் கோதித்து.

இவ்வகை கதிரோன் மறையும் மலை சேரப் படையிரண்டுங் கை வாங்கித் தம் பாடிவீடு புக்காராகக் கருதுவது. (உகூ)

513. பொங்கமர்செய் தாங்கமரர் போயினார் பொன்னுலகத்
தெங்கு மிருக்க விடம்பெறுர்—தங்கள்
[2]கருத்தமர மூற்றிக் கலிவானஞ் சேர்ந்தார்
விருத்தரச ரேல்லா மிடைந்து.

இது கூற்றுலகத்தில் சிறப்பு. (௩0)

512. மக்கள் இருவர் – உத்தரன், சுவேதன். குடகடல் – மேல் கடல்.

513. அமரர் போயினார் – அமரராகப் போயினார். கலி - ஒலி. கருத்தமரம் – கருதிய போர். விருத்து - விருந்து.

பா. வே: 1. நின்று தழற் கதிரோன்றானுங். 2. கருத்தமரின்.

முதனாட் போர் முற்றும்.

அன்று கழித்த மற்றை ஞான்று யாது நிகழ்ந்ததோ வெனில்:

514. நீலமே காரின் நிழலே நெடுங்கடலின்
கோலமே யத்திகிரிக் கோமானே—மூலமேனா
[1]மாத்தா மரைமடுவின் மால்யானை யோலமிடக்
காத்தாய் கடைபோகக் கா.

என்றிவ்வகை கடவுளை வாழ்த்தி யாது செய்தார் பார்
வேந்தர்: (௯க)

515. குடகடலிற் பாய்ந்தொளித்த வெய்யோன் குணபா
லிடையிடையே செம்பொன்செய் தென்னப்—புடை
[விரவும்
பொன்னெடுந்தே ரேறினு னவ்வளவிற் போர்மன்னர்
தந்நெடுந்தே ரேறினார் தாம்.

இவ்வகை கதிரோன் தோன்றுமளவில் யாது செய்தருளினான்
கண்ணன். (௯உ)

516. பால்வளைக்கு மின்சொற் பவளவாய்ப் பாஞ்சாலி
கோல்வளைக்கு முன்பிறந்த கோமானை—மேவிக்
கதிர்ப்பட்ட வாட்டானைக் காவலர்க்குச் சேனா
பதிப்பட்டஞ் சேர்த்தினான் பார்த்து.

அன்றியும், (௯௩)

517. பாண்டவர்கண் மைத்துனனைப் பாஞ்சாலர் கோமானை
யாண்டகைமைச் சேனா பதியாக்கி—மூண்டெழுந்த
போர்வீர ராங்ஙன் பொருபடையுங் கொண்டணைந்தான்
கார்மேக வண்ணன் கலந்து.

---

514. மா + தாமரை + மடு = பெரிய தாமரைக் குளம். யானை - கசேந்திரன்.

516. பால் வளைக்கும் இன்சொல் - பாலையும் சுவை பயிலுமாறு வளைத்துக்கொள்ளும் இனிய சொல். கோல் வளை - திரண்ட வளையலை யுடையாள். முன் பிறந்தான் - திட்டத்துய்மன்.

517. ஆங்ஙன் - (ஆங்கண்) அங்கு. அணைந்தான் - சேர்ந்தான்.

பா வே: 1. மாத்தா மடுவின் மதயானை.

எ - று. இட்டத் துய்மனைப் படைத்தலைவனுக்கித் தருமன் படையைக் காப்பவனுகக்கொண்டு போர்க்களம் புகுந்து அணி வகுப்புச் செய்யா நின்ருர். அப்பொழுது தங்கள் படைநிலை புகுந்து சஞ்சயனும் சோமகரும் சிகண்டியும் உத்தமோசாவும் உதார்மனும் சேதிகரனும் உள்ளிட்ட எத்தனையோராயிரம் பாஞ்சாலரோடும் பதினுயிரந் தேர்கொண்டு துருபத வேந்தன் தலையாகவும், தசாதரும் குந்திபோசனும் தூமகரும் சீனகரும் சோனகரும் உள்ளிட்டாரோடும் எண்பதினுயிரம் தேர்கொண்டு நகுலன் அதற்குக் கழுத்தாகவும், விராடனும் சதாநிகனும் இட்டகேதுவும் சலந்திரனும் சேர சோழ பாண்டியர் தொடக்கத்தாரும் உள்ளிட்ட பல பதினுயிரம் அரசர்களோடும் எழுபதினுயிரம் தேரும் இருபதி னுயிரம் மதகரியும் பன்னூருயிரம் புரவியும் உடன்கொண்டு வீமன் வலப்பக்கமாகவும், அத்திரகரும் மதங்கரும் மாளுவரும் குச்சரரும் முடி மன்னரும் உள்ளிட்ட எத்தனையோராயிரம் அரசர்களொடு மூப்பதினுயிரந் தேரும், பதினையாயிரம் யானையும் அறுபதினுயிரம் புரவியும் உடன்கொண்டு நூருயிரந் தேராட்களுடன் சகாதேவன் இடப்பக்கமாகவும், கேகயரும் மாகதரும் மாமாநதரும் தசார்ணரும் இலாடரும் உள்ளிட்ட எல்லா அரசர்களும் நூருயிரந் தேராட்க ளுடன் கொண்டு தருமன் வயிருகவும், சோமகரும் காம்போச வேந்தரும் கலிங்கரும் திரிகர்த்த அரசனும் சேதியரும் செயவீரரும் உள்ளிட்ட அரசரும் நூருயிரம் யானையும் எழுபதினுயிரம் புரவி யும் இருபதினுயிரம் தேரும் இரண்டு நூருயிரம் காலாள்களும் உடன்கொண்டு கடோற்கசன் வாலாகவும் அருச்சுனனும் அபிமன்னுவும் அஞ்சனவர்மாவும் மற்றுமுள்ள போர்வீரரும் அதற்குத் துண்டமாகவும் இவ்வகை யானை தேர் குதிரை காலாளுடன் கலந்து நிறுத்திச் சங்கபடலம் கடல்முழங்க எம் மருங்கும் தானை யிரைந்தார்ப்ப அன்றில் என்னும் அணிவகுத்து நின்ருர் கண்ணனும் இட்டத் துய்மனுமாகக் கருதுவது. இப்பால் துரியோதனன் பெரும்படையைச் சுரு என்னும் அணிவகுத்து நின்ருன் வீடுமனுகக் கருதுவது. இவ்வகை நின்றவிடத்து இரண்டு படையும் ஆர்த்தெழுந்து தம்மொடு தாம் தலைப் பெய்து நிற்க யாது நிகழ்ந்ததோ வெனில் : (கூச)

518. **குடகடன்மிக் கோடிக் குணகடன்மேற் பாய்ந்தங்**
கடல்கருதி யார்த்ததெழுந்த தென்னப்—புடைகமழும்
வார்கடா யானையான் மன்னர்மேற் சென்றதே
பார்கொடா வேந்தன் படை.

518. அடல் – போர். புடை – பக்கம். வார் – மிக்க.

இவ்வகை இரண்டு படையும் தலைப்பெய்து மிக்கெழுந்த சினத்தியுடன் ஒருவரோடு ஒருவர் தாக்கினர்; காலாளொடு காலாள் தாக்கினர்; தேரொடு தேர் இளைத்தன; மாவொடு மா மயக்குற்றன; வாளொடு வாள் வகை திரிந்தன; அப்பொழுது தீக்குறி பல வெழுந்தன; காலொடு கால் துணிந்தன; தோளொடு தோள் துணிந்தன; முடியொடு முடி புரண்டன; குடலொடு கிணம் விழுந்தன; குடையொடு குடை சாய்ந்தன; பரியொடு பரி புரண்டன; தேரோடு தேர் சிதைந்தன; குறைத் தலைகள் கூத்தாடின; காகங்கள் கலந்தார்த்தன; ஓரிக்குரல் பெருகிவிட்டது; குருதிப் புனல் குமுழிவிட்டது; வீரமகள் பொலிந்து தோன்றினள்; படைக் கலங்களால் திசை மறைந்தது; பெருங்காற்றுச் சுழித்தடித்தது. (௫௫)

ஆங்கு,

519\. மாரியது கூந்தல் மறித்தடிக்க மாமழையின்
றாரை தடுமாறிச் சாய்வதுபோற்—பாரி
னொதிரேதிரின் விண்புதைய வோடிற்றே யெங்கு
மதிரதரின் வில்லுதைத்த வம்பு. (௫௬)

ஒருபால்,

520\. வேதியரின் மிக்கானும் வீங்கோலிநீர்ப் பாஞ்சாலர்
காதலனு மேர்கண்ணி கட்டினார்—மீதிட்
டொலிபரவ மாக்களத்தி லோரிரண்டு தம்மிற்
புலிபோ லெதிர்மலைந்தார் போர்ந்து. (௫௭)

521\. ஒண்சிலையு நான்மறையும் வல்லா னுடனெய்யத்
திண்சிலையுந் தேருஞ் சிதைப்புண்டான்—றிண்சிலையைக்
கால்வளைத்த மன்னவரைக் கைச்சிலையின் மோதுவித்த
கோல்வளைக்கு முன்பிறந்த கோ.

இவ்வகை துரோணன் திட்டத் துய்மன் தேரும் சிலையும் அழிப்புண்டு தளர்ந்து போகலும், அதுகண்டு வீமன் இடை

519\. மாரியது கூந்தல் – மேகமுகடு. மறித்து அடிக்க – சுழித் தடிக்க. தாரை – மழைத்துளி. புதைய – மறைய.

520\. வேதியரில் மிக்கான் – துரோணன். ஏர் கண்ணி – அழகிய போர்ப் பூ.

521\. கோல்வளை – பாஞ்சாலி. கோ – திட்டத் துய்மன். சிலையைக் கால் வளைத்தல் – நாணேற்றல். "திண் சிலையை...மோது வித்த" து பாஞ்சாலியின் திருமணத்தில் நிகழ்ந்தது.

புகுந்து துரோணனை எதிர்மலையக் கண்டு மற்று அவற்குத் துணையாகக் காலிங்க வேந்தனும் பல பதினாயிரம் யானையும் வந்து வீமனைச் சூழ்ந்துகொண்டு கணைமழை சொரிந்திட்டார். அது கண்டு வீமன் யாது செய்தான் : (௩அ)

522. கன்றி யுடன்றெழுந்த காலிங்கன் மால்யானை
யொன்றுகொண் டோன்றி னுடன்புடையா—வென்றி
புரிந்தார் படையிரியப் போர்க்களத்தை முற்றுந்
திரிந்தான் வெறுங்கையே சென்று. (௩௯)

523. மல்ல னெடும்பெண்ணை மாக்கொடியான் முனின்ற
வெல்லை யளவு மிரிந்ததே—தொல்லைமிக
வாலிங் கவன்செய்ய வஞ்சிப் புறகிட்ட
காலிங்கர் சேனைக் கடல்.

ஏ - து. முன்னம் பட்டுப் படாத காலிங்கர் சென்று வீடுமனிடைக்குச் சேருதலும் அதுகண்டு வீடுமன் தன்மேற் செல்லப் பின்னும் வெகுண்டு யாது செய்தான் வீமன் : (சo)

524. விசையநெடுந் தேரான் வெகுண்டெழுந்த வெவ்வே
றிசைநடுங்கச் செல்வதனைக் கண்டு—நசையினாற்
சுந்தரத்தேர் வல்லானோர் தோமரத்தா லங்கதனை
யந்தரத்தே வீழ்த்தா னமைத்து. (சக)

525. பனைக்கொடியின் மேலும் பரிக்குலத்தின் மேலும்
வெலற்கரிய வின்னாணின் மேலு—மலர்க்கரத்தாற்
பொன்மாரி யன்ன பொருகணைகள் சிந்தினான்
வின்மாரி யன்னான் வெகுண்டு.

அப்போது வீடுமன் செய்தது : (சஉ)

---

522. கன்றி - கொதித்து. மால்யானை - பெரிய யானை. படை இரிய - படை தோற்றோட.

523. மல்லல் - வளம். தான் - வீமன். 'தொல்லை மிகவால் இங்கு அவன் செய்ய' - இங்கு அவன் தொல்லை மிகுதியாகச் செய்ய. புறகிட்ட - புறமுதுகிட்டோடிய.

524. விசையம் - வெற்றி. வெவ்வேறிசை நடுங்க – வெவ்வேல் திசை நடுங்க. நசை - ஆசை. சுந்தரம் - அழகு.

525. வின்மாரி - வில் மாரி.

526. குணவாரி யன்னான் கோதித்தெழுந்து வெய்ய
கணைமாரி சிந்தினான் கார்போற்—கணைமாரி
யொன்பதுகொண் டெய்தா னுயர்தேர் பரியதனை
யொன்பதுகொண் டெய்தா னுடன்று. (௪௩)

527. அழிப்புண்ட தேர்மிசைநின் றுடேழிற்றேள் வீம
னெழிற்றண்டு கொண்டிழியப் பாய்ந்து—வழித்தந்தை
வெற்றித்தே ரூர்வானை வீழப் புடைத்தார்த்தான்
மற்றத்தேர் சிந்த மலைந்து. (௪௪)

ஒருபால்,

528. அரவக் கொடியான் மகனை யபிமன்
விரவிச் சிலையறுத்து வீழ்வித்—திரியச்
சரமாரி தூவித் தளர்வித்தான் வானில்
வருமாரி மேகம்போல் வந்து.

அதுகண்டு துரியோதனனால் ஏவப்பட்டு நால்வகைப் படையுமுடன் கொண்டு விகன்னனும் விருடசேனனும் அசுவத்தாமனும் சென்று இலக்கண குமரனைத்தாங்கி அவற்கு முன் புகுந்து விரைந்து தேர்கடாவி அபிமன்னுவைச் சூழ்ந்து கொண்டு கணை மழை பொழிய அபிமன்னு யாது செய்தானோ வெனில்: (௪௫)

529. சென்றேன்ற பார்வேந்தர் தேர்மேலு மாமேலுந்
தன்றேருந் தன்சரமுந் தாக்கின—னின்ற
விறற்களிறே யன்னான் விரைந்தவர்க ளெல்லாம்
பகற்கணமே மாளும் படி.

எ - து. திருதராட்டிரப் பெரும்படையெல்லாம் இற்றைப் பொழுதெல்லையில் மாண்டது கொல் என்று வானோர் வியப்புறப் பலபதினாயிரங் களிறும் தேரும் பாய்மாவும் களத்தவியக் கொன்று போர்க்களத்தில் பெருங் காற்றுத் திரிவதாம் எனத் தேரோட்ட

526. குணவாரி – குணக்கடல்.

527. இழிய - இறங்க. வழித்தந்தை - பாட்டன். புடைத்து - தாக்கி.

528. அரவக் கொடியான்மகன் - துரியோதனன் மகனாகிய இலக்கணகுமரன்.

529. ஏன்ற - போர் ஏற்ற. பகற்கணமே - அற்றைப் பகற் பொழுதே.

நின்ற அபிமன்னுவின் போர் காணும் அவாவினால் அருச்சுனன்தேர் கதுமென வருதலும் அதுகண்டு துரியோதனன் பெரும்படை யாது செய்ததோ வெனில்: (சகூ)

530. கார்வரையைச் சூழ்ந்த பனிமேகங் காய்கதிரோன்
நேர்வரவு கண்டங்கு சிந்தினபோல்—மூரி
வரிசிலைக்கைப் பார்த்தன் மணிநெடுந்தேர் காணக்
குருசிலைக்கைக் கொண்டார் குழாம். (சஎ)

531. காய்பரித்தேர் மன்னர் களிறுபிளிறிவரப்
போர்பரித்தே ரானைப் புறகிட்டார்—மீத்திரையிற்
பாயுங் கடற்சென் றழுங்கப் பகலவன்போய்
மாயுங் கடற்சென்றான் மற்று. (சஅ)

---

530. சிந்துதல் - அகன்றோடல். குருசிலை - வலிய வில்.

531. மன்னர் - துரியோதனன் பக்கத்தார். பரித்தேரான் - அருச்சுனன். மீ-மேல். அழுங்க - மூழ்க. மாயும் - மறையும்.

இரண்டாநாட் போர் முற்றும்.

கடவுள் வாழ்த்து

532. மாண்ட பொழுதுன் மலரடிகள் வந்தடியேன்
றீண்டும் படியுன் றிருவருளான்—மூண்டமரி
லொன்னா ருடைய வொளிவளைவாய் வைத்தூத
மன்னா தருவாய் வரம். (௪௯)

533. காரிருளு மெய்யன்பாற் கைதவம்போற் கட்டிரியப்
போர்புரிந்த மன்னர் புலர்ந்தார்ப்பத்—தேரின்மிசை
யேறினான் வெய்யோ னிளங்கதிர்கள் விட்டுத்தே
ரேறினார் மன்னரெல்லாந் தேர்ந்து.

அப்போது, (௫௦)

534. பார்குறித்த மன்னர் படையிரண்டு மூன்றாநாட்
போர்குறித்து வந்து புகுந்தனவே—வீரர்
கணக்கிறந்த மால்யானைக் காவலர்க ளெல்லா
நிணக்குழம்பாய் வீழ்ந்த நிலத்து.

எ - து. *மூன்றா நாள் இரண்டு படையும் பள்ளி யெழுந்து போர்க்களம் புகுந்தபொழுது துரியோதனன் படையைக் கலுழ அணியாக வகுத்து நின்றான் வீடுமன். அப்பொழுது இரண்டு படையும் வந்து தம்மொடு தாம் தலைப்பெய்ய எழுந்தியம்பின சங்க படலம். திரண்டெழுந்தது தேரொலி; கணைமழையால் திசை மறைந்தது; வானதிர்ந்தது; தூளிப்படலம் இரண்டு தானைகளையும் மறைத்திட்டது; அவ்விடத்துத் துரோணனும் பல பதினாயிரம் வீரரோடும் ஆர்த்தெழுந்து அருச்சுனனை வளைத்து மூடிக் கொண்டான். அப்பொழுது,* (௫௧)

535. கோனுந்தன் றம்பியருங் கோளரியே றேந்தினான்
றானின்ற கைமேலே தாக்கினான்—வானஞ்ச

---

532. ஒன்னார் உடைய. பகைவர் தோற்றோட. வளை - சங்கு. "அடிகள் அடியேன் தீண்டும்படி மன்னா, வரம் தருவாய்"

533. கைதவம் - கரவு; வஞ்சம். மெய்யன் — வாய்மையாளன். "மெய்யன்பால் கரவுபோல் காரிருள் இரிய" என்றியைக்க. கட்டு — செறிவு. புலர்ந்து - விடிந்து. "இளங்கதிர்கள் விட்டு வெய்யோன் தேர்ஏறினான்" "மன்னரெலாந்தேர் ஏறினார்"

534. நிணம் - கொழுப்பு.

535. கை - பக்கம்; பகுதி.

நீடு சிலைவளையா வெய்தா னெடும்பகழி
கூடும் படையைக் குறித்து.

ஒருபால், (௫௨)

536. கடும்பகழி யொன்று கருத்தமைய வாங்கி
யிடும்பி குலமதலை யெய்தான்—கொடுந்தகைமைக்
கோணுகந் தேர்மேற் கொடிகொண்ட கோமானைப்
பூணுகத் துள்ளழுந்தப் புக்கு. (௫௩)

537. போர்வாளி மற்றவன்மேற் பாயப் புனைநெடுந்தே
ரூர்வானை வேலா லுயிர்வவ்வி—சீர்மதுரைத்
தென்னற்கை மந்தாரை தானணிதற் காரணமாய்
மன்னர்க்கை வென்றான் மகன்.

எ - து. முன்னமொரு கணையால் மெய்ம்மறை பிளப்புண்டு மயங்கி வீழ்ந்தான். அவன் தேர் வலவனையும் கொன்று புரவி நான்கினையும் உயிர் வவ்வி, அத் துரியோதனனையும் கைப்பிடியே பிடிக்கக் கருதுகின்ற கடோற்கசனைக் கண்டு விரைவாற் றேரோட்டி வீடுமன் சென்றக் கடோற்கசனைத் துரந்து துரியோதனனை யெடுத்துத் தன் தேர்மிசை யிட்டுக்கொண்டு போந்து மிகவும் மயங்கா நின்றானை 'முயத்தி' என்பதொரு மருந்து கொடுத்து அவனைத் தேற்றிப் போகவிடுத்துத் தானும் மூண்டெழுந்த சினத்தியால் பகைவர்மேல் தேர் கடாவிச் சென்று யாது செய்தான் எனில் : (௫௪)

538. பொங்கெழிற்றே ரான்மன்னர் போர்க்களத்தே மூற்றிவிடச்
செங்களத்தை முற்றுந் திரிகின்றான்—வெங்களத்து
வேட்டங்கொள் வார்களிற்றின் மீதுபோ யவ்வேந்தர்
கூட்டங்க ளத்தனையுங் கொன்று.

---

536. இடும்பி குலமதலை - கடோற்கசன்.

537. வவ்வி - கவர்ந்து. மதுரைத் தென்னன் – பாண்டியன். பாண்டியன் மகள் மந்தாரை மலரணிய வானுலகஞ் சென்று அசுரர், வானவர் ஆற்றலை அழித்து மலர்பறித்து வெற்றியோடு மீண்டான் வீமன். இவ்வரலாற்றைப் புட்பயாத்திரைச் சருக்கத்திற் காண்க. (வில்லி. ஆரணிய பருவம்) மகன் - கடோற்கசன்.

538. வேட்டம் – வேட்டை. செங்களத்தை – போர்க்களத்தில்: உருபுமயக்கம்.

எ - து. வீடுமன் என்னும் ஊழித் தீயால் தருமன்படை என்னும் பெருங்கடல் வற்றா நின்றது. அதுகண்டு கண்ணன் அருச்சுனனை வெறுத்து, இது நின்னால் தாங்கப்படாது என்று முனிந்து தன் திருக்கையில் சக்கரம் வாங்குவானாக ஓங்குதலும் அதுகண்டு அளவிலாததோர் அச்சம் எய்திக் கண்ணனைத் தொழுது யாது விண்ணப்பஞ் செய்தான் அருச்சுனன்: (௫௫)

539. எம்பெருமான் பேராழி யென்கொலோ வெங்கண்மே
லும்ப ருடன்றெழுந்த போதன்றே—லெம்பெருமான்
றேரின்மே னிற்கவே யின்றென் சிலைதனக்குப்
போதுவரோ மன்னர் போர.

எ - து. அரியேறு ஓர் எருமைமேல் வெகுண்டெழுந்தாற் போல இவ்வரசர் வலிமையை மெய்யென்று நின்னுடைய சக்கரம் வாங்குமது எம்பெருமானுக்குத் தக்கதன்று. இப்படி முனியுமிடத்து உன்னுடைய திருவுள்ளக் கருத்திலே கறுத்த என்னுடைய காண்டீவம் என்னும் ஊழிக் காற்றின் கடுவிசையான் மலைந்து துரியோதனன் தானை என்னும் பெருங்காட்டின் பெருமலையென நின்ற பாட்டனையும் நொடிவரையில் வீழ்த்துமாறு கண்டருள்வாயாக என்று அருச்சுனன் வெகுண்டு சொல்லுமது கண்டு கண்ணனும் களிப்புற்றுச் சக்கரம் வாங்க நினைந்த சின மொழிந்து தேர்கடாவும் அளவில் வீடுமனும் தேரிழிந்து கவலை யெய்தியவனாய்க் கண்ணனை நினைந்து வணங்கிப் படைக்கலம் இலனாய் நின்று பேரறிவால் யாது விண்ணப்பஞ் செய்தானோ வெனில்: (௫௬)

540. நின்னாற்றன் னுலைத்த னீட்பத்தில் வீடதுமற்
றென்னாற் பெறலாமோ வெம்பெருமா—னின்னாற்
கோலப்படுவ ரல்லரோ கோவாரா லென்று
சோலப்படுவ ரென்றான் றொழுது.

எ - து. அடியேன்மேல் நின்னுடைய சக்கரப்படை வாங்கி விடாமல் வஞ்சித்தவாறு என்னாற் றாங்கப்படாது. நின்னாற் கொலப்படுவேன் என்று மிகக் களித்திருந்தேன்; நின்னால் முன்னங் கொல்லப்பட்டார் அன்றோ புத்தேளிர் உலகுபுக்கு இனி திருக்கின்றார் என்று சொல்லிப் பின்னும் யாது விண்ணப்பஞ் செய்தான் வீடுமன்: (௫௭)

---

539. என்கொலோ - எடுத்தது எதனாலோ? போதுவரோ - இரையாகக் காணுவரோ.

540. நாள் உலத்தல் - வாழ் நாள் முடிதல். நீட்பம் - நீளம்; எட்டாதது. கோவார்+ஆல்; கோவார் - வானோர்.

541. பொன்னிறத்தோன் பொற்கண்ணன் கஞ்சன் பொருதிறல்
தென்னிலங்கை மன்னன் சிசுபாலன் — மின்னுபுக [சேர்
ழாயிரந்தோள் வீரனுட னன்றுநீ கொன்றருளத்
தாமிருந்து செய்தார் தவம்.

ஏ - து. இரணியன், இரணியாக்கன், இராவணன், கும்ப கன்னன், கஞ்சன், சிசுபாலன், வாணாசுரன் இவ்வனைவரு மன்றோ நல்வினை புரிந்து நின்று நின் ஆழிப்படையால் பட்டுப்போய் வீடெய்தினார்; மற்றவரைப்போல் யானும் வீடெய்த நின் ஆழிப் படை படவேண்டும் என்று விரும்பினேன். அஃதின்றெனக்குப் பேறில்லாமல் அருச்சுனனால் தடுக்கப்பட்டதன்றோ எனக் கழறிக் கதுமெனத் தன் தேர் மீதேறி வெகுண்டு அருச்சுனன்மேல் தேர் கடாயினான் வீடுமன். அதுகண்டு யாது செய்தான் அருச்சுனன்: (௫௮)

542. சிலைமேவுங் கையான் றிருநெடுந்தேர்ப் பார்த்த
னிலைவேந்த ரீட்டங்க ளெல்லா — முனையிற்
கடும்படைஞ ராய்வந்த காவலர்க டம்மைக்
கொடும்படையாற் கொன்றான் கொதித்து.

ஏ - து. கண்ணன் முனிந்து தன் சக்கரம் வாங்கப் புக்கது என்னை வலுவற்றவனாகக் கருதியன்றோ என்றும், இது வீடுமனால் விளைந்த பெருந்திறத்தால் அன்றோ என்றும், இற்றைப் பகலில் என்னுடன் எதிர்மலைந்தானைத் தேருஞ் சிலையும் அழித்து மற்றந்தப் பெரும்படையையும் கூற்றுலகுக் கேற்றி வருவேன் என்றும, வெகுண்டெழுந்து முடுகச் சென்று வீடுமன் என்னும் கொடுமுடி யழித்துக் கலுழன் என்னும் அணி பிளந்து புகுந்து துரியோதனன் பெரும்படையைக் கொல்லா நின்றான் அருச்சுனன் என்றவாறு; அதுகண்டு வீடுமனும் துரோணனும் அசுவத்தாமனும உள்ளிட்ட பல பிறநாட்டு வேந்தரும் நாற்படை யுடன் வந்து அருச்சுனனை வளைத்து மூடிக்கொண்டனர். அப் பொழுது யாது செய்தான் அருச்சுனன்: (௫௯)

---

541. பொன்னிறத்தோன் - இரணியன். பொன் - இரணியம். பொற்கண்ணன் — இரணியாக்கன். அக்கம் — கண். ஆயிரந்தோள் வீரன் - வாணாசுரன்.

542. முனை — போர்க்களம். ஈட்டம் - கூட்டம்.

543. தொடுத்த கொடுஞ்சிலைநாண் டோள்புரள வாங்கி
யெடுத்த திசையனைத்து மெய்ய—நொடிக்கணத்தில்
வில்லிழந்து தேரிழந்து வீரக் கொடியிழந்து
சொல்லிழந்து போனார் சுளித்து.

இவ்வகை எல்லா அரசரும் தேருஞ் சிலையும் அழிந்து புற இட்டனர். அப்பொழுது பலருந் தாளற்றனர், தோளற்றனர், வில்லற்றனர், வாளற்றனர், குடலற்றனர், தலையற்றனர், கொடியற்றனர். குறைத்தலைகள் கூத்தாடின, வீரப்பெண்கள் மெல்லியர் எழுவரும் கைமிசையாடும் பந்து போன்றனர்; காகமும் நரியுங் கழறியிட்டன; கழுகும் பருந்தும் கலந்தார்த்தன; குருதிவெள்ளம் பெருகியிட்டதாங்கு. அவ்வளவில், (கூ0)

544. பூதலத்து மன்னர் பொருதழிந்த போர்க்களத்து
மீதெழுந்த வெங்குருதி வெள்ளத்துச்—சோதி
புகச்சிவந்து காட்டிற்றே பொற்போது சாய
மிகச்சிவந்து காட்டிற்றே மேற்கு. (கூக)

545. மட்டவிழ்தார் மன்னர் மடிந்த வமர்க்களத்துப்
பட்டனவும் பார்த்தற்காய்ப் பேராழி—தொட்டருளிச்
செங்கண்மால் செய்தனவுந் தேர்வேந்தற் குற்றுரைத்தான்
வெங்கண்மா வல்லான் வெகுண்டு. (கூஉ)

---

543. கொடுஞ்சிலை – வளைந்தவில்.

544. பொற்போது - பொன்னிறப் பொழுது.

545. தேர்வேந்தன் - துரியோதனன்; திருதராட்டிரற்குமாம்.

மூன்றுநாட்போர் முற்றும்.

நாலாம்நாட் போர்

கடவுள் வாழ்த்து

546. எந்தையாய்த் தாயா யிறைவனா யெவ்வுயிர்க்கு
முந்தி மடுவுதவு மூலமா—யந்தமிலாப்
பூதமாய் வேதமாய் நின்ற புராதனனை
யோதவா நெஞ்சே யுணர்ந்து. (௬௩)

547. வெங்கண் மதயானை வெவ்வேல் விறல்வீரர்
திங்க ளனையகுடைத் தேர்வேந்தர்—வெங்களத்தி
லூன்றினார் சேனை யிரண்டுந் தலைப்பெய்யத்
தோன்றினான் வெய்யோன் றொடர்ந்து. (௬௪)

548. தானைத் தலைமை தலைப்பெய்யத் தானவர்கள்
யானைக் குழாத்திடைய னாயினான்—றேர்மொய்த்த
வீரத்தண் டேந்துவித்த வேந்தற் கிளங்கோமான்
மூரித்தண் டேந்தி முனிந்து.

இவ்வகை போர் வீரர் மேற்கொள்ளப் பெற்ற மதயானைகள் மேற் சென்று தாக்கித் தேவர்கோன் வச்சிரப்படையால் மலைகளைச் சிறகறுத்தாற்போலத் தானும் தன் வயிரத் தண்டினால் மோதி முருக்குகின்ற வீமனைக் கண்டு துரியோதனனும் அவன் உடன் பிறந்தார்களும் வந்து தலைப்பெய்து சுற்றுமுற்றும் சூழ்ந்து கொண்டார். அப்பொழுது யாது செய்தான் வீமன் : (௬௫)

549. போர்வல் லவன்வீமன் போராம் பொழுதின்கட்
டேர்வல்லான் மேற்கொண்டு சென்றணுகப்—போர்வல்லா
னேறினா னேற வெதிர்ந்தா ரினவேந்தர்
பாறினா ரெங்கும் பறந்து.

---

546. மடு - நீர் நிலை. மூலம் - ஆதிமூலம். கசேந்திரன் ஆதி மூலமே என அழைக்க வந்தோன் என்ற வரலாற்றைக் குறிப்பது. 'எவ்வுயிர்க்கும்......மூலமாய்' என்பது. அந்தம் - முடிவு.

548. இடையன் - இடையே நிற்பவன். தண்டு-படை. தண்டு ஏந்துவித்த வேந்தன் - தருமன். மூரி - வலிமை.

549. பாறினார் - ஓடினார்.

ஏ - று. காலாளாய்க் களிற்றீட்டங்களை முறித்து மோதுகின்ற வீமனுக்குக் கடோற்கசன் தேர் கொடுவந்து கொடுப்பத் தேரின் மீதேறிக் கதுமெனச் சிலை வாங்கிக் கணைமழை சிந்திச் சங்கம் ஊதித் தெழித்து உரப்பிக் கூரம்பு நூறு கொண்டு உரத்தோடு துரியோதனன் மார்பில் பட்டுருவ எய்து ஆர்த்தான வீமன் என்றவாறு. அதுகண்டு மிகவிரைவெய்தி வீமனை யாது செய்தான் துரியோதனன் : (௬௬)

550. மீளி வயமாமே லோநான்கும் வேந்தனுக
னாளி நெடுங்கொடிமே லையிரண்டும்—வாளி
யொருமுப்ப தெய்தா னொளிக்கவசத் தின்மே
லிருமுப்ப தெய்தா னெடுத்து.

அப்போது யாது செய்தான் வீமன் : (௬௭)

551. கொடுஞ் சிலையை நான்கினா லைந்துகூ றாக்கி
நெடுங்கொடியை யைந்தினா னீக்கிக்—கடும்பரியை
மூன்றினா லெய்தவன்றன் மொய்கவசத் திற்புகுத்தி
யூன்றினா னெண்பகழி யொன்று.

அப்பொழுது துரியோதனன் பட்டது : (௬௮)

552. வைய முழுதாளும் வாள்வேந்தர் கோன்மார்பிற்
செய்ய குருதி சிவந்தலைப்பச்—செய்யமலை
வார்த்தட்டு நாடும் வளநாடன் றான்மயங்கித்
தேர்த்தட்டில் வீழ்ந்தான் றிகைத்து.

இவ்வகை துரியோதனன் மார்பு பிளப்புண்டு மதிமயங்கித் தேர்த்தட்டில் விழுந்தமை கண்டு அனைத்து வீரரும் இரிந்தோட, மற்றந்தப் பார்வேந்தன் உடன்பிறந்தார் தொண்ணூற்றொன்பதின்மரும் கண்டு மிக சினமெய்தி விரைந்து சென்று வீமனை வளைத்து மூடித் திளைத்தார்த்துக் கணைமழை பொழியா நின்றார். அப்பொழுது யாது செய்தான் வீமன் : (௬௯)

---

550. மீளி வயம் - பெருவலிமை. ஒருபொருட் பன்மொழி: ஆளி - அரிமா. வாளி - அம்பு.

552. செய்ய மலை—வளமான மலை. வார் - நீர். தட்டு - முற்றம். மலையிற் பொழிந்த நீர் மனைமுன்றிலில் ஓடும் என்றது நாட்டின் வளமை.

553. மத்திரத்தார் வேந்தனையும் வாள்வேந்தன் மாமனையுஞ்
சித்திரத்தே ரோடுஞ் சிலையழித்து—மெய்த்திறத்த
நூற்றுவரு ளவரையு நுண்கணையா லட்டெய்து
கூற்றுவனுக் காக்கினான் கொன்று. (எ0)

554. ஒருபா லிடும்பிசே யோட்ட வொருபாற்
றிருமா றிருமருகன் செல்ல—வொருபா
லிடை மிடைந்த சோமகரும் வீமனுநன் றுட
வுடைந்தழிந்தார் மன்னரெல்லா முற்று.

அப்பொழுது யாது செய்தான் பகதத்தன்: (எக)

555. அட்டிலங்கு வேல்வேந்த ரந்தரத்தி னின்றரசர்
கட்டிலங்கு பல்படையைக் கைகவியா—விட்டெழுந்த
மாக்களிறந் தானு மருவரைபோல் வந்தரசர்
கோக்களின்மேற் சென்றான் கொதித்து.

இப்படிப் பகதத்தன் செய்ததுமன்றிச் சுப்பிரதீகம் என்னும் அவன் யானையானது பாண்டவர் படையில் இருக்கும் யானை முதலியவற்றைத் துவைத்து மடித்து அழிவு செய்வதைக் கண்டு யாது செய்தான் கடோற்கசன்: (எஉ)

556. பல்களிற்றை வெல்களிற்றைப் பாவடியின் கீழ்ப்படுத்திக்
கோல்களிற்றைச் சற்றுமுற்றுங் குத்துவித்தா—னல்ல
விடுமாய மவ்வில் விறலிடும்பி சூதன்
கோடுமாய வேழங் கோணர்ந்து.

அப்போது: (எங)

557. கடலுடைந்த தாமென்னக் காய்பரித்தேர்த் தானை
யுடலுடைத்தங் கோடுவா ரோட—வடலுடைந்த

---

554. திருமால் திருமருகன் - அபிமன்னு. நன்றுட-நன்றாகத் தாக்க.

555. கட்டு - அணிவகுப்பு.

556. பாவடி - பரவிய அடி. சூதன் - மகன். சுதன், சூதனையது.

வார்கடல்போற் றோன்றியதே வாட்டிகிரிக் கோமானும்
போர்கடற்கே சென்றான் புரிந்து.

இவ்வகை துரியோதனன் தன் தம்பிமார் முதலானவர்களைப் பறிகொடுத்துக் கவலையுற்றுப் பாடிவீடு புகுந்து வருந்தியிருப்பதைக் கண்டு அந்தப்புர மடந்தையர் வந்து அவன் அடியில் வீழ்ந்து அரற்றியது யாங்ஙனமோ வெனில்: (எசு)

558. காவு மடலனைய காளையர்க ளேல்லீருந்
தேவர் தலைபனிப்பச் சென்றீர்கள்—யாவ
ரோழியப் புகுந்தீர்க ளையாவேன் றுள்ள
மழியப் புகுந்தழுதா ராங்கு. (எரு)

---

557. அடல் உடைந்த – கரையுடைந்த. திகிரிக்கோமான் – கதிரோன். போர்கடல் – மறையுங் கடல்.

558. மடல் - கண்ணிமை. காவு மடல் - கண்ணைக் காக்கும் இமை. "கண்ணினைக் காக்கின்ற இமையிற் காத்தனர்" என இராமலக்குவர் காவல் திறம் குறித்தார் கம்பர். பால. 458. இனிக் காவு மடல் என்பது மழை உறைக்காமல் தலைக்கு மூடும் மடற் குடையுமாம். "உறைப்புழி யோலை போல மறைக்குவன்" என்பது புறப்பாட்டு. (290) பனிப்ப—நடுங்க.

நாளைநாட்போர் முற்றும்.

கடவுள் வாழ்த்து

559. மூலமெனு மோலமிடு மூத்திப் பரம்பொருளின்
சீலமருஞ் சேவடியைச் சிந்தியாய்—ஞாலத்து
நெஞ்சே நிலைதளர்ந்து நீதடுமா றுமல்வந்
தஞ்சே லெனுங்கா ணவன்.

இப்பால், (எசு)

560. அத்த மலையடைந்த வத்திசையி னில்லாதே
மத்தக் கதிர்கண் மலர்பரப்பித்—தத்தஞ்
சலந்திரிவ வந்துறங் குந் தாழ்வரையி னுச்சி
வலந்திரிவான் றேன்றினன் வந்து.

கதிர் எழுந்த பின்பு இரண்டு படையுஞ் சேர யாது நிகழ்ந்ததோ வெனில் : (எஎ)

561. மால்களிறும் பாய்மாவு மன்னவர் மேற்கொண்டு [துங்
கோல்கெழுவும் வெஞ்சிலையுங் கூர்வாளும்—வேன்முழு
தங்களங்கைக் கொண்டார்க டார்வேந்த ரெல்லாரும்
வெங்களங்கைக் கொண்டார் வெடிந்து.

இவ்வகை படை இரண்டும் ஆர்த்து வந்து போர்க்களம் புகுதக் 'கசேனு' என்னும் அணி வகுத்து நின்றான் வீடுமன். அப்பொழுது பாண்டவர் படையை 'வச்சிரநாபம்' என்னும் அணி வகுத்து நின்றான் திட்டத்துய்மன். அவ்வளவில் அருச்சுனனைக் கொண்டு விரை மணித்தேரை முடுக விட்டு வீடுமன்பாற் சென்று கணைமழை சொரிந்து மூடிக்கொண்டு போர் விளைவித்தான் கண்ண னுகக் கருதுவது. அப்பொழுது யவனரையும் காலிங்கர் கூட்டத் தினையும் இக்கபானு குலத்து அரசர்களையும் சல்லியன் சகுனி

---

560. அத்தமலை – கதிரோன் மறையும் மேற்குமலை. மத்தம் – களிப்பு. சலந்திரிவ – நீர் வாழ்வன. தாழ்வரை – சாரல்.

561. கோல் கெழுவும் – அம்புபாய்ச்சும். தங்கள்+அங்கை – தங்களங்கை. வெம் + களம் + கைக் கொண்டார் – வெதும்பும் போர்க்களத்தைக் கைப்பற்றினர்.

ஆகியவர்களையும் சௌராட்டிரரையும் சயத்திரதனையும் மற்று முள்ளிட்ட எல்லா வீரர்களையும நாற்படைகளோடும் துரியோதனன் விடுத்து விடுமனைக் காத்து நிற்பீராமின் என மற்றவரும் போய் விடுமனைக் காதத்துத் துணை செய்யுமிடத்து யாது செய்தான் வீமன் : (எஅ)

562. வெங்கலிங்கர் கூட்டமும் வேல்வேந்தர் தம்படையுஞ்
செங்கலங்க லாய்மிதப்பச் சீறினன்—கங்கை
வளை[1]வரைத்தன் சாரன் மணிகோணரு நன்ளுட்
டிளவரசன் பாண்டவர்க ளேறு.

எ - து. பதினாயிரம் கலிங்கரையும் ஐயாயிரம் யவனரையும் மூவாயிரம் அரசகுமரரையும் நொடியிற் படமலைந்து சல்லிய சகுனி யரைக் கைதுரந்து சயத்திரதனைத் தேருஞ்சிலையும் அழித்துச் செல்லா நின்ற வீமனுக்கு நிலையாற்ருது உடைந்திட்டது பெரும் படை. அப்பொழுது : (எகூ)

563. மாமானு மத்திரனு மான்றேர்த் திரிகத்தர்
கோமானுங் கோவேந்தன் றம்பியரும்—[2]போமாறில்
பார்த்தனைத்தாஞ் சூழ்ந்து பரிபவங்கள் [3]பட்டுடைந்து
கோற்றெழிலுந் தாமறந்தார் கூர்ந்து.

இவ்வகை துரியோதனனால் விடுக்கப்பட்ட பெரும்படை யுடைந்து பின்னும் யாங்ஙனம் கூடிற்றெனில் : (அ0)

564. [4]தாங்கு புனற்கங்கைத் தார்வேந்த ரெண்மரையு
மீங்கு விடுத்தா னிகல்வேந்த—னோங்கு
விடநாகங் கொண்ட விறல்வேந்தன் விட்டான்
படநாகம் போலும் படை.

---

562. செங்கலங்கல் - செவல் நிலத்துக் கலங்கல் நீர். வளை - வளைந்து, சுழித்து. 'கங்கை மணி கோணரும்' என்றியைக்க.

563 போமாறில் - போகும் வழியில். பரிபவம் - இழிவு. கோற்றொழில் - அம்பு விடுதல். மாமான் - அசுவத்தாமன்.

பா. வே: 1. வரைதன் 2. போமமரில் 3. பட்டுடைந்தார்.
4. தாங்குதிறற் காங்கேயன் சார்வேந்த ரெண்மர்களை யீங்கு

எ - து. துரியோதனனால் விடுக்கப்பட்ட துரோணனும் அசுவத்தாமனும் கிருதவர்மனும் களிற்றீட்டமும் வந்து தாக்க அதுகண்டு யாது செய்தான் தருமன் : (அக)

565. கோற்ற முரசுயர்த்த கோவேந்த [1]னெண்மருடன்
மற்ற விடுத்தான் வழுதியையு—முற்றந்
திசையனைத்து மோடத் தெரிசரங்கள் சிந்தி
விசைடனைப்போய்க் காமின் விரைந்து.

எ - து. நகுல சகாதேவரையும் சிகண்டியையும் இட்டத்துய்மனையும் கடோற்கசனையும் அபிமன்னுவையும் அஞ்சனவர்மனையும் சித்திரசேனனையும் பாண்டிய மன்னனையும் அருச்சுனனுக்குத் துணையாவீர் என்று விடுத்தான் தருமனெனக் கருதுவது. இவ்வகை இரண்டு திறத்துப் படை மன்னரும் தலைப்பெய்து பெரும் போர் விளைந்திட்டது ஆங்கு. ஒருபால் : (அஉ)

566 வில்வல்லான் றன்மகனும் வீமன் பெருமகனுஞ்
சொல்வல்ல வம்பு சொரிந்தார்கள்—கொல்வல்ல
நேரே கரியிரண்டு நேரே [2]யுடன்றுதமிழ்
போரே புரிவனவே போன்று.

எ - து. அசுவத்தாமனுக்கும் கடோற்கசனுக்கும் கடும்போர் விளைந்திட்டது; அப்பொழுது இருபத்தோரம்பு கொண்டு அசுவத்தாமன் எய்து ஆர்த்தலும், அதனை வானத்தெய்து அறுத்து வீழ்த்து ஒரு வாள்வாயம்பினால் மற்றவன் சிலையினை அறுத்து வீழ்த்தான் கடோற்கசன் என்றவாறு. ஒருபால் : (அந)

567. போர்வென்ற வீமன் பொலன்கவசத் துள்கிழிய
வீரைந்து வெங்கணைகொண் டெய்தார்த்தான்—கார்
காந்தட் கடிமலர்க்கைக் காந்தாரி நாட்பயந்த [கண்ட
வேந்தர்க்கு முன்பிறந்த வேந்து.

---

565. தெரிசரம் - தேர்ந்தெடுத்த அம்பு.

566. சொல்வல்ல அம்பு - சொல்போல் செல்லவல்ல அம்பு. தமில் - தம்மில்.

567. பொலன் - பொன். கடி - மணம். வேந்தர் - நூற்றுவர். வேந்து - துரியோதனன்.

பா. வே : 1. னெண்மருடன்.
2. உடன் நம்பிற், போரே பொருவனவே.

எ - து. துரியோதனன் வீமனைக் கவசம் கிழிய வெய்து ஆர்த்திடுதலும் அதுகண்டு சத்தியசாத்தகி வந்து ஏன்றுகொண்டு துரியோதனன் மேல் இரண்டு வெங்கணையும், துச்சாதனன் மேற் பத்தும், சகுனிமேற் பதினைந்தும் இவ்வகை பகழி பாய்ச்சித் தேருஞ் சிலையும் அழித்து இலக்கணகுமரன் வந்தானை ஆறம்பினால் தேரழித்து ஐந்தம்பினால் வில்லறுத்து, யவனரையும் காலிங்கரையும் துணித்தடுக்கி மலர்வெண்பூளையைக் கடுவளி தூர்ந்தாற் போலப் பெரும்படையைக் கலக்குறுத்திக் கொல்லா நின்றானைக் கண்டு மற்றவனுடன் வெகுண்டெழுந்து பூரிசிரவாவந்து ஏன்று கொண்டு தலைப்பெய்தான். அப்பொழுது : (அச)

568. ஒருகுலத்துக் காளையரோ டோள்ளமர ரேத்தக்
குருகுலத்துக் கோளரிமாத் தன்னோ—டொருகுலத்துத்
தோன்றாளாய் நிற்கின்ற தோன்றற் கிளங்கோமா
னேன்று னெரிசரங்க ளெய்து.

இவ்வகை இருவரும் பொருகின்ற பொழுது சாத்தகி வெஞ்சிலையை யொரு வாள்வாய் அம்புகொண்டு துணிய வீழ்த்தலும் வெற்றிச் சிலையொன்று கொண்டு பூரிச்சிரவாவைத் தேரழித்து இருவரும் காலாளாய் நின்று யாது செய்தாரோ வெனில் : (அரு)

569. ஓடிய ஞாயி றுவாமதியோ டொத்தாற்போற்
கேடகங்க ளோரிரண்டுங் கேழ்கிளர—வாடமரிற்
றுக்கினார் சாரிகைகள் சந்தித்தா ராயுதங்க
ளுக்கினார் தம்மி லுடன்று.

இவ்வகை இருவருந் தாக்கினர். அப்பொழுது இரண்டு படையும் வந்து ஈண்டி இருவரையுங் கைக்கொண்டு பெரும்போர் விளைந்திட்டது. அப்பொழுது ஒருவரை ஒருவர் சாயாது காற்படைகளும் பார் மன்னரும் பட்டு வீழ்ந்து நிணக் குழம்பிற் றேர் தாழ்ந்து காகத் தொழுதி கலந்தார்த்தன. தங்களில் வெற்றியாகாமல் நின்றனராகக் கருதுவது. அவ்வளவில் : (அசு)

---

569. இருபடையும் கூடல் ஞாயிறும்—மதியும் கூடல். சாரிகை—வட்டமாக ஓடல்.

570. ஒற்றைத் திகிரி யொளிமணித்தே ரூர்வானும்
வெற்றிக் கடற்றானை வேல்வேந்தி—ரிற்றைக்
கமையும்போ ரென்பான்போ லவ்வரையி னுச்சிக்
கிமையவரை புக்கா னிசைந்து.

இவ்வகை கதிரோன் மறையும் மலைசேரக்கண்டு இரண்டு படையும் கைவாங்கித் தம் பாடிவீடு புக்காராகக் கருதுவது. (அள)

---

570. அமையும் - அமைதி கொள்ளும்; போரொழியும். இமைய வரை - இமைப்பொழு தெல்லை.

ஐந்தாநாட் போர் முற்றும்.

கடவுள் வாழ்த்து

571. ஊன்கிடந்த விவ்வுடல்விட் [1]டோடுவதன் முன்னமே
காண்கடந்த காலாற் கடல்கடந்து—வான்கடந்த
மாதவனே பாண்டவர்க்கா மண்வேண்டிச் சென்றிரந்த
தூதவனே யென்றென்றே சொல்.

இப்பால், (அஅ)

572. மாலைக் குழல்சரியம் மாதரார் தங்களுடன்
காலைக் கவியென்னுங் கள்ளுண்டு—வேலை
கதையத்தேர் [2]வந்துபோர் காண்பானுய் வெய்யோ
னுதையத்தே வந்தா னுகந்து.

எ-து. அன்று கழித்த மற்றை ஞான்று கதிரோன் எழக்கண்டு இரண்டுடையும் பள்ளியெழுந்து போர்க்களம் புகுந்து தம்மொடு தாம் தலைப்பெய்தார். அப்பொழுது வீடுமனும் திட்டத்துய்மனும் உடன்று தாக்கி உலகந் தலைபனிப்ப அமரர் வியக்கப் பெரும்போர் விளைந்திட்டது. அப்பொழுது, (அகூ)

573. வெங்கண் மதயானை வீமன்மே லோடிற்றே
யங்கத் துரோண னணிநெடுந்தேர்—செங்கைக்
கொலையாருஞ் சிங்கக் கொடிப்படையான் றன்மேற்
சிலையார மாக்கினுன் சென்று.

எ-து. துரோணன் வீமனுடனே தாக்கிக் கடும்போர் நிகழாநின்றது. அப்பொழுது, (கூ0)

---

572. காலைக்கவி – பள்ளி எழுச்சிப்பாடல். வேலை கதைய – கடல் ஒலிக்க.

573. சிங்கக் கொடிப்படையான் – வீமன். ஆரமாக்கினுன் – மிகுதியாக ஏவுதல்.

பா. வே: 1. ஓடுவதன்முன்னே, கானடைந்த காலாற்கடலடைந்து.
2. வந்து பொரு.

574. தேருருவ வோரேன் சினப்புரவி நான்கினையு
மீரிரண்டு வெங்கணைகோண் டெய்தார்த்தா—னேரிரண்டு
சாரதிமே லெய்யத் தடுத்தவன் றன்னுடைய
தேரழிய வெய்தான் செயிர்த்து.

ஏ - து. துரோணனைக் காலாளாக்கித் தேரினின்றிழியப் பாய்ந்து, தண்டேந்திய கையனாய்க் கடற்படையைக் கொல்லாநின்ற வீமனுடனே யொருபாற் சல்லியனும் வந்து தாக்க அவனையும் தேருடனே யெடுத்தெறியும் அளவில் துரோணன் பின்னும் ஒருபால் மேற்சென்று வீமனைச் சூழ்ந்துகொள்ள இருகாலாவதும் அவனைத், தேரழித்துக் காலாளாக்கித் தூரத்தத் துரப்புண்டுபோக, மற்றவனுடன் வந்த தேராட்களையும் நாற்படைகளையும் கொன்றுழக்கிப் பார்மன்னரைப் பொடியாக்கிப் பெரும்படையை அழித்து விலக்குவாரைப் பெறாது போர்க்களமுழுதும் வேட்டந்திரியும் மதகரியாய் நின்றான் காற்றின் செல்வன் வீமன் என்றவாறு. இவ்வகை திரிகின்றானைக் கண்டு துரியோதனனும் தம்பிமாரும் வந்து வளைத்து மூடித்திளைத்து ஆர்த்தார். அப்பொழுது பின்னும் யாது செய்தான வீமன் : (௬௬)

575. புண்ணூறு செங்குருதி போற்கவசத் துள்ளிழியத்
தோண்ணூறு வீரச் சுடுசரத்தாற்—றேண்ணீர்க்
கனவரைமே னின்றிழியுங் கங்கைசூழ் நாட
ரனைவரையு மெய்தா னழித்து.

இவ்வகை தொண்ணூறு சுடுகணையாற் றுரியோதனன் தம்பிமாரையும் வலியழித்து மற்றுங்கு நின்ற வீரர் மேற்சென்று அவர்களால் துன்புற்று வளைப்புண்ட வீமனுக்குத் துணையாவாரைத் தெரிந்து யாது செய்தான் தருமன் : (௬௭)

576. வீமன்றே ராழிதமைக் காக்க விறலாழி
மாயன் மருகனொடு மற்றங்கோர்—வெமுனையிற்
போராட் களைகழிக்கும் போர்வல்லார் பன்னிருவர்
தேராட் களைவிடுத்தான் சென்று.

---

575. புண் ஊறு - புண்ணூற்று ஊற்றாய் எழுந்த.

576. மருகன் - அபிமன்னு. வெமுனை - வெதும்புதல் மிக்க போர் முனை.

இவ்வகை தருமனால் விடுக்கப்பட்ட அபிமன்னுவினொடு விகன்னன் வந்து, தாக்கித் தேருஞ்சிலையும் அழிப்புண்டு புப்பத் தெட்டடி விரைந்தோடிச் சித்திரசேனன் தேர்புகப் பாய்ந்தானெனக் கருதுவது. ஒருபால், (௬௩)

577 கல்லணி திண்டோளார் காவலர்கண் முன்னபிமன்
வில்லைப் பொடிகண்டான் வேல்விகன்னன்—வில் [லொன்று
மாண்டதேர்ப்[1] பார்த்து வளைத்தெய்தான் மற்றிவன்மேற்
பாண்டவர் [2]கோ மைந்தன் பகைத்து.

இவ்வகை விகன்னன் சிலையறுத்து வீழ்த்திப் பின்னும் யாது செய்தான் அபிமன்னு: (௬௪)

578. வெற்றிச் சிலையொன்றும் வீரத் தனிக்கொடியு
மற்றைப் படைவம்பி னுங்கழன்று—முற்றுந்
திசையதிரச் செல்லுஞ் சினவயிரத் தண்டை
விசையன்சேய் விட்டான் வெகுண்டு.

இவ்வகை அபிமன் விட்ட தண்டினை விலக்கி இடிமுழக்க மென ஆர்த்துக் கணைமழையெனப் பொழிந்தான் விகன்னன். அப்பொழுது அது கண்டாற்றாது யாது செய்தான் அபிமன்னு: (௬௫)

579. சாரதியுந் தேருந் தடஞ்சிலையும் வெண்குடையும்
போர்ப்பரியும் வீழப் புரட்டினான்—மாபெரிது
முட்கினா னுட்கி யுடைந்த பெருங்களத்து
வெட்கினான் போந்தான் விரைந்து.

577. கல்லணி திண்டோள் - கல்லையே பூண்டாற் போன்ற வலிய தோள்.

578. அற்றுப்பட - அறுந்தொழிய. அம்பின் ஆங்கு அழன்று- அம்பினுங் கழன்று. அழன்று - கொதித்து. விசையன் - விசயன்.

579. போர்ப்பரி - பொருகின்ற பரி; தேர்ப்பரி அன்றென்பார் போர்ப்பரி என்றார். மாபெரிதும் - மிகப் பெரிதும். உட்குதல் - அஞ்சி ஒடுங்குதல். இருகாலாவது - இரண்டாவது.

பா. வே: 1. பார்த்தன்; பார்த்தி. 2. கோன்மைந்தன்.

இவ்வகை அபிமன்னு இருகாலாவது தன்தேரும் சிலையும் அழிப்புண்ண நாணிப் போயினன் விகன்னனாகக் கருதுவது. ஒருபால் வீமனுந் துரியோதனனும் தலைப்பெய்து யாது செய்தாரோ வெனில் : (சுசு)

580. ஒன்றினால் வெஞ்சிலையை வீழ்த்தங் குறுபகழி
யொன்றினான் மல்லகலத் துள்ளழுத்தி—யொன்று
விடுகணையாற் றேரழித்து வெல்கொடியை நான்கு
சுடுகணையா லெய்தான் றொகுத்து.

இவ்வகை வில்லுந் தேருங் கொடியும் அழிந்து மல்லகலத்துப் புண்கூரத் துரியோதனன் தளர்ந்து போகலும் அதுகண்டு பகதத்தனும் சயத்திரதனும் உள்ளிட்டார் பல நாட்டு வேந்தரும் வந்து வீமனைச் சூழ்ந்து கொண்டு சுடு கணைமாரி சொரிந்திடுதலும் அது கண்டு யாது செய்தான் அபிமன்னு : (சுஎ)

581. அந்தார வார்பகழி யைந்தா லமர்கருதி
வந்தார் சிரங்கோண் மணிமுடிமேல்—வேந்தார்
வருந்தவே வில்வளைத்து மாமேகம் போலத்
திரிந்தானவ் வாள்விசயன் சேய்.

எ - து வீமனைச் சூழ்ந்து கொண்ட எல்லா வேந்தர்களையும் படைகளையும் பட மோதிப் பொருகின்ற அபிமன்னுவினுடன் பின்னும் மூன்றுவது விகன்னன் வந்து தாக்கினனை இருப்பாணி யொன்று கொண்டு அவன் மார்பகலத்துள் அழுத்திப் பெருமுழக்கஞ் செய்தான் அபிமன்னுவாகக் கருதுவது. அப்பொழுது வாயாறு குருதி சோரத் தேர்த்தட்டின்மேல் விழுந்திட்டான் விகன்னன் என்றவாறு. அவ்வளவில். (சுஅ)

582. மேற்குலவுந் தெய்வத்தேர் வெய்யோனு மென்மாலை
மாற்கடல்வாய் வீழ [1]மறிந்ததே—தாக்கியதோர்
போர்வேந்தர் போன்றப் பொருகளந்தான் [2]விட்டகன்ற
டார்வேந்தர் தங்கள் படை.

(எ - து.) கதிரோன் மறைகின்ற மலை சென்று சேரக்கண்டு இரண்டு படையுங் கைவாங்கித் தம் பாடிவீடு புக்காராகக் கருதுவது. (சுசு)

---

580. உறுபகழி – வலிய அம்பு.

581. அம் தாரம் – அந்தாரம்: அரும்பொருள் போன்ற. வார் பகழி - நெடுங்கணை.

582. குலவுதல் - வளைதல்; சூழ்தல். மறிதல் - திரும்புதல். "வெய்யோன் வீழ படை மறிந்தது"

பா. வே: 1. மறிந்தனவே. விட்டகன்றார்.

ஆருநாட் போர் முற்றும்

கடவுள் வாழ்த்து

583. ஏனமா யாமையாய் வெண்கோட்டு மண்கொண்ட
ஏனமாய் நல்ல வெழிலரியாய்த்—தானமா
மண்வேண்டு வாமனனு மாலை மறவாம
லெண்வேண்டு நெஞ்சே யிருந்து. (௬௦௦)

584. பண்ணமர்ந்த தேரும் பகடும் பரிமாவும்
புண்ணமர்ந்த செங்களமே போதுகைக்கு—விண்ணமர்ந்த
மைமேசி ருளகல மாணிக்கக் கீழ்வரைக்கே
வெய்யோ னுதித்தான் [1]வெடிந்து.

இவ்வகை அன்று கழித்த மற்றைநாள் கதிரோன் எழக்கண்டு இரண்டு படையும் பள்ளி யெழுந்து பெருமுழக்கத்துடனே யானை குதிரைகள் மேற்கொண்டு விரைந்துடன் சென்று போர்க்களம் புகுந்து படைநிலை குறித்தார். அப்பொழுது பாண்டவர் படையை வச்சிரநாபம் என்னும் அணி வகுத்துத் தூசிமுகத்து நின்றான் பாஞ்சாலன் மைந்தன் திட்டத் துய்மனைக் கருதுவது. அப்பொழுது துரியோதனன் படையை மண்டலம் என்னும் அணி வகுத்துப் படைமுகத்தில் நின்றான் வீடுமனைக் கருதுவது. அப்பொழுது, (௬0௧)

585. [2]வீங்கோத வண்ணன் விசயனும் வெஞ்சிலைக்கைக்
[3]காங்கே யனுமே கலந்தார்த்தா—ரோங்கூழிற்

---

583. 'மண்கொண்ட வெண்கோட்டு ஏனம்' என இயைக்க. அரி – நரசிம்மம். தானம் – மாவலியிடம் மூன்றடி மண் வேண்டிப் பெற்றது. எண்வேண்டும் – எண்ணவேண்டும்.

584. பண்ணமர்ந்த – வேலைப்பாடு அமைந்த. புண்–புண்பாடு; துன்பம். புண்ணமர்ந்த – துயரே உருவெடுத்துத் தங்கிய. போதுகைக்கு – போவதற்கு. மை – கருமை. மாணிக்கம் – செம்மணி. கீழ்வரை – கதிரோன் எழுமலை. வரைக்கே – வரைக்கண்.

585. கடவி – செலுத்தி. தாரை – மழைபொழிதல் போல்.

பா. வே: 1 விடிந்து. 2. வீங்குததி. 3. காங்கெயனும் தம்மிற் கலந்தார்த்தா.

சென்றநாட் போலத் திசையதிர விண்ணதிர
வன்றைநாட் செய்தா ரமர்.

இவ்வகை தேவர் அசுரர் போரிலும் கொடிய போராக விண்ணும் மண்ணும் தலைபனிப்ப இருவரன்ன தேரொலியாலும், இருவரன்ன அம்பு படலங்களாலும் திசையனைத்தும் செவிடுபட்ட தென்றவாறு. ஒருபால், (௧௦௨)

586. மன்னர் பெருமானு மத்திரத்தார் கோமானு
மென்னு மிருவருமே தேர்கடவி—முன்னின்று
தாக்கினார் சாரிகைகள் சந்தித்தார் தாரைவே
லோச்சினார் தம்மி னுடன்று.

ஒருபால், (௧௦௩)

587. அரவக் கொடியோனு மாடேழிற்றோள் வீமன்
[1]மரபிற் கடோற்கசனும் வந்து—விரவிக்
கருமேகம் பெய்கின்ற கார்மழைபோல் வாளி
பொருததிகம் பெய்கின்றார் போந்து.

இவ்வகை துரியோதனனும் கடோற்கசனும் தாக்கி எண்டிசையும் தலைபனிப்பச் சரந்தூரந்து சிறு நாண் எறிந்தாராகக் கருதுவது. ஒருபால், (௧௦௪)

588. பாஞ்சாலர் கோமானும் பல்லா யிரந்தேரும்
பூஞ்சாலி மத்திரனும் புக்கார்த்துக்—காய்ந்தார்
கறுத்தார்கள் கைத்தார் களம்விட்டு வீழ்ந்து
தெறித்தார்க டம்மிற் சிதைந்து.

எ - து. சல்லிய னோடும் பாஞ்சாலன் தலைப்பெய்து பொருகின்ற அப்பொழுது பரியுங் களிறும பட்டழிந்தன; தேரொடு தேர் தாக்கின; வாளும வாளும் வயக்குற்றன; தோளும் தோளும் துணிந்திட்டன அரசர் வீழ்ந்துபட்டனர்; குருதி வெள்ளம் பெருகி

587. விரவி - கலந்து.

588. சாலி - நெல். கைத்தார் - வெறுத்தார்.

பா. வே: 1. மரபுக்.

விட்டது. காலனும் உயிர் திரட்டியிட்டனன் அப்பொழுது. அவ்வளவில், (கoஇ)

589. போங்கு புனற்குருதி போர்க்களத்தின் மீதோட
வேங்கும் பெருஞ்சேனை யிற்றதே—போங்குகடற்
காலைக்கே வந்த கதிரவனும் போய்ச்சிவந்து
மாலைக்கே புக்கான் மதர்த்து.

இவ்வகை கதிரோன் மறையும் மலை சென்று சேரக் கண்டு இரண்டு படையுங் கைவாங்கித் தம் பாடிவீடு புக்காராகக் கருதுவது. (கoகூ)

589. இற்றது - அழிந்தது. மதர்த்து - களித்து.

ஏழாநாட் போர் முற்றும்.

கடவுள் வாழ்த்து

590. படர்ந்தனவும் பார்புதைப்பப் பஞ்சவர்க்காத் தூது
கடந்தனவு நச்சரவி னுச்சிக்—கிடந்தனவும்
[1]மான்றொடர்ந்த தாமரைதா மல்லவோ கானத்தின்
மான்றொடர்ந்த செந்தா மரை. (௧௦௭)

591. மாலை மதியடைய வையமிருண் மூடக்
கால மறிந்தகனற் காய்கதிரோன்—மேலைச்
சிலம்பிலே புக்கோன் றிரைகடலின் கீழைச்
சிலம்பிலே வந்தான் சிவந்து.

எ - து. அன்று கழித்த மற்றை நாள் கதிரோன் எழக் கண்டு இரண்டு படையும் பள்ளி யெழுந்து போர்க்களம் புகுந்து யாது செய்தனவோ வெனில்: (௧௦௮)

592. வெம்பு மதயானை வீமற் கெதிராகித்
தம்பியரும் தானுமே தாக்கினா—னும்பர்
சிலையரவஞ் சென்றிசைப்பச் செல்படைமுன் செங்கட்
கோலையரவ முன்னுயர்த்த கோ.

எ - து. துரியோதனனும் உடன்பிறந்தார்களும் முதலில் வெகுண்டெழுந்து வீமன் மேற்போய் வளைத்து மூடித் திளைத்து உரப்பித் தேருஞ் சிலையும் அழித்துப் பாண்டவர் படையைத் துரந்து முருக்கிக் களித்த மனத்தராய் மேன்மேலும் அடர்ந்து செல்கின்றமை கண்டு பின்னும் வீமன் ஒருபால் எரியெழ விழித்துப் புகையெழ வுயிர்த்துச் சேமத் தேரும் சிலையும் பெற்று மற்றவருடன் மலைந்து யாது செய்தான் வீமன்: (௧௦௯)

---

590. படர்தல் - நடத்தல். காடு சென்றது கருதியது; இஃதிராமாயணச் செய்தி. பார் புதைப்ப - நிலம்பட. நச்சரவு - காளிந்தியன். இடந்தன - அழித்தன. ஆன் தொடர்ந்த தாமரை யடிகளே, மான் தொடர்ந்த செந்தாமரை அடிகள்.

591. சிலம்பு - மலை. சிலை அரவம் - வில் நாண் ஒலி.

பா. வே: *1. கான் றொடர்ந்த தாமரைதா னல்லவோ.*

593. கோட்டிய வில்லினராய்க் கொற்றவரின் முன்னந்தே
சோட்டினா ரோரெண்மர் காளையரை—வீட்டினான்
பார்மேன் முடிகிடப்பப் பாடே படைகிடப்பத்
தேர்மே லுடல்கிடப்பச் சென்று.

இ - ள். துரியோதனருள் முன்னம் வந்து தலைப்பெய்து எதிர்விலக்கினாரில் விகபெக்கணனும் பாண்டிய தேவனும் உள்ளிட்டார் ஓரெண்மர் காளையரை ஒரு தொடையினால் எட்டு வாள் வாயம்பு கொண்டு தலைதுமித்து நிலத்திடை வீழ்த்து மன்னரெல்லாம் காண மனமகிழ்ந்து ஆர்த்துக் கொண்டான் வீமன். (௧௧௦)
அப்பொழுது,

594. தம்பிமார் பட்டவியத் தார்வேந்தர் கோமானும்
வெம்பியே வெல்வேந் தரைநோவ—வும்பர்
கடலரவஞ் செய்வித்த கார்வரைபோல் வீம
னுடலரவஞ் செய்தா னுடன்று.

இ - ள். தம்பிமார் எண்மர் காளையர் படக் கண்டு தன் படைவேந்தரை நோக்கி முனிவெய்தி அரற்றும் அளவில் வீமன் பின்னும் தோள் தடித்து மேல் வரக்கண்டு மற்றவனைத் தகைவாராகத் துரோணனையும அசுவத்தாமனையும் கிருதவர்மாவையும் பகதத்தனையும் சல்லியன் சகுனி உள்ளிட்ட எல்லாத் தேராட்களையும் உடன்கொண்டு மேற்சென்று வீமனை வளைத்து மூடித் திளைத்து உரப்பிச் சுடுகணைமாரி சொரிந்து அவன மல்லகலத்துப் புண்கூர ஒரு வாள்வாய் அம்பு கொண்டெய்து மிகவும் நெருக்காநின்றான் துரியோதனன். அது கண்டு யாது செய்தான் தருமன்: (௧௧௧)

595. பைங்கதிரைச் சூழ்ந்த பனிமேகம் பாய்கதிரோன்
வெங்கதிரைக் கண்டாங்கு விட்டாற்போற்—பொங்கி

---

593. கோட்டிய - வளைத்த. வீட்டுதல் - கொல்லுதல். பாடு - அரற்றலொலி.

594. கடலரவஞ் செய்வித்த கார்வரை - மந்தரமலை. பாற்கடல் கடைய மந்தரம் மத்தாகப் பயன்பட்டது என்பது பழங்கதை. படைக்கடலை வீமன் கலக்கியது மந்தரம் கடலைக் கலக்கியது போன்றதாம்.

595. கண்டாங்கு - கண்டதும்.

முரசுயர்த்தோ னேடிவர மொய்கடற்றேர்த் தானை
யரவுயர்த்தோ னேடினு னங்கு.

ஏ-து. தருமன் கடுவிசையால் நெடுந்தேர் கடாவிப் பெருவிரைவுடன் வருகின்ற வெகுட்சி கண்டு வீமனை வளைத்து மூடிக் கொண்ட எல்லா வீரரும் அஞ்சி ஞாயிற்றின் கதிர்கண்டு ஆற்றாது உடைந்திட்ட பனிபோல விட்டு நீங்கிப் புறகிட்டவராகக் கருதுவது. அப்பொழுது இரண்டாவது மூன்றாவது முறை தாக்கின படையெல்லாம் கால் தளர்ந்து தேருஞ்சிலையும் அழியக் கடிகை தோறும் கனன்றெழுந்த கனலே போல வீமன்மேற் சென்ற எல்லாப் படைகளையும் களத்தவிக்கப் பலகாலும் தூரப் புண்டு அவை நிலையாற்றாது உடைந்து துரியோதனன் தேர்க் காலில் விழ, மற்றவனாலும் தாங்கற் கரிதாய வீமன் சினத்தீயால் வெந்து நிலையாற்றாது பெரும்படையுடன் புறகிட்டு வீடும னிடைக்கே சென்று மற்றவன் அடியிலே வீழ்ந்து யாது சொல்லி அரற்றினன் துரியோதனன்: (௧௧௨)

596. எம்பெருமான் கண்ணுளதா நிற்கவே யெம்பிமார்
வெம்[1]பகைஞர் கோல்ல விளிவதோ—வெம்பெருமான்
றாளிணைக்கீழ் வாழ்வோமுந் தோற்பதோ வென்றுரைத்
றாளிணைக்கீழ் நீர்மல்கத் தாழ்ந்து. [தான்

ஏ-து. எம்பெருமான் நினக்குக் கண்ணாக நிற்கவே என் உடன் பிறந்தார்கள் நாள்தோறும் வீமன் என்கின்ற ஊழித் தீயிலே புக்கு அவியா நின்றார்; இது நீ கண்டு நிற்கத் தக்கதோ வென்று கழறி அவலக் கவலையெய்திப் பேசுகின்ற துரியோதனனை நோக்கி யாது சொன்னான் வீடுமன்; (௧௧௩)

597. நின்றுணைவ னங்கர்கோன் சோல்லினவு நின்மாமன்
றன்றுமலர்த் தாரோன் றுணிந்தனவு—மோன்றுங்
கடைபோகக் கண்டிலையோ காவலனே யின்னங்
கடைபோகக் கண்டே கவல்.

அன்றியும், (௧௧௪)

---

596. கண்ணுளதா - கண்முன்னாக. விளிதல் - சாதல்.

597. கடைபோக - முழுமையாக; கடைசி வரை.

பா. வே: 1. பகையார்.

598. தலைவகுவ வெல்லாஞ் சவையகத்தே யுங்கட்
குலகழிய வன்றே யுரைத்தேன்—சிலபகலின்
மாள்கின்றோ மெல்லோமு மாளாமல் வெங்களத்தின்
மீள்கின்றா ராரோ விளம்பு.

(கக௫)

அன்றியும்,

599. வில்லிகளிற் பாண்டவரை வெல்கிற்பா ராரென்று
சொல்லிய வென்னைச் சுளித்துரைத்தா—யொல்லொலிநீ
ரங்கத்தார் கோமா னதிரதரின் மூன்றேன்ற
லிங்குத்தா னல்லனோ வின்று.

(கககூ)

அன்றியும்,

600. வெற்றி விதுரன்கை வின்முரிந்த வப்பொழுது
மற்றந்த வீமன் விசயனையுஞ்—செற்றமரில்
வெல்வாரை யெண்ணு யெனவுரைப்ப நின்முன்னே
[1]வைவானே கன்னன மறுத்து.

ஏ - து. அவைக்களத்து வீற்றிருந்த நாளகத்துப் பாண்டவர் உரிமை கொடேன் என்றவிடத்து, மற்று அது தகாதென்றும் வீம அருச்சுனர்களை வெல்லும் ஆற்றல் உடையார் யாவரும் இல்லை என்றும், அவரைத் தகையும் வலியுடைய விதுரனை வின் முரித்துப்போகக் கண்டிருந்தாய் என்றும் யான் கட்டுரைத்த காலையில் அவைக்களத்துத் துச்சாதனனும் சகுனியும் மிகச் செருக்கியுரைத்துப் பாண்டவரை வெறுத்து இகழக் கேட்டு மனமகிழ்ந்திருந்தாய்; அஞ்ஞான்று நின்காதல் தோழன் கன்னன் பேசிய ஆணவ வுரைகளும் நீ அறிவை; அவ்விடத்து ஆணவம் உரைத்தமையும், அவன் வீரமும் இன்று காட்டி வீம அருச்சுனர் முன் காட்டி அவரைத் தடுத்திலனே என்றும் இவ்வகையெல்லாம் வருவதெண்ணி முன்னமே உரைத்தேனை நீ அன்று முனிந்தனை;

598. சவை - அவை.

599. சுளித்து - சடிந்து. இங்குத்தான் அல்லனோ - இங்கே தான் இருக்கின்றான் அல்லனோ.

600. எண்ணாய் - எண்ணுதே; என்றது எவருமிலர் என்னும் பொருட்டு. செற்று - அழித்து.

பா. வே: 1. வைதானே.

இன்று உனக்குக் கவலையாய் நின்றது என்றும் இவ்வகை நலந் தீங்கு கலந்துரைத்து, வீம அருச்சுனர் சினத்தீயால் அவியப் படுவாரை நீ இன்னுங் கண்டு கொள்வாய்; நீ அதற்குத் தவிரு வாயாக என்று யானும் என் ஆற்றலெல்லாங் கொண்டு தகையா நின்றேன் என்றும், கண்ணன் அருகு நிற்க இனி அவரை யாவராலும் போர்க்களத்தில் வெற்றி கொள்வது அரிதே என்றும் இவ்வகை துரியோதனனைத் தேற்றிச் சினத்தீயால் மிக்கெழுந்து வருகின்ற அருச்சுனன் மேலே போயினன் வீடுமனாகக் கருதுவது. அப்பொழுது முன்னை ஞான்று பகதத்தனோடே அமர்மூட்டி அழிந்துபோயின கடோற்கசன் பொய்ம்மையாக நூறுயிரம் யானையும் நூறுயிரம் கடோற்கசரும் நூறுயிரம் பேய்க் கணங்களும் ஒருகையிற் சூலமும் ஒருகையிற் கொள்ளியுமாய்ப் போர்க்களத்தில் தோன்றிக் கண்விளக்குப் பட்ட எல்லாப் படை களையும் அழியா நின்றான். ஒருபால், (கசுஎ)

601. பல்லா யிரம்பணத்தார் பல்லா யிரவராய்ப்
பல்லா யிரங்களிறும் பாய்மாவுங் — கோல்லு
மினமாயம் வல்ல விராவான் புகுந்து
சினமாயப் போரே சிறந்து.

எ - து. முன்னாட் களப்பலியாயின அராவான் கண்ணன் திருவருளால் பெற்றுக் கொண்ட எட்டாநாட் போர் பெற்று, ஆங்கவன் திருவருளால் அஞ்ஞான்று போர்க்களம் புகுந்து பல்லாயிரம் பணத்தலை குலவ மணி வெயில் எறிப்பப் பெரும்படை இத்தனையும் வேறுபடும்படி வெள்ளெயிற்றினர், செங்கண்ணினர், கருமேனியர், கருமனத்தினர், பலகறையன்ன பகுவாயினர், கவை நாவினர், பல வாளினர்; பல சிலையினர், பல வேலினர், கோற் படையினர், மணி முடியினராயினர் எத்தனையோராயிரம் அரவ குமரராய்த் தோன்றிப் படைமுற்றும் அழிக்க எத்திசையில் உள்ளாரும் இரிந்திட்டனர் ; அதுகண்டு துரியோதனன் அவ்வளவில் இவ்வகை செய்வான் அராவான் என முன்னுணர்ந்து முன்னம் பகனைக் கொன்ற கலக்கத்தால் வீமனுக்குப் பகைவனாவான் அலம்புசன் என்பானோர் அரக்கனை அழைத்து வீமனை யாதல் அவன் மரபினரை யாதல் கொன்று உன்பகை தணித்துக் கொள்வாயாக என்றும் அருச்சுனன் மகன் அராவானைக் கொன்று என் கவலையைத் தீர்ப்பாயாக என்றும் யானுன் பகைவரான

601 பணத்தார் - படத்தையுடையவர். இன - இன்ன. சினம் மாய - சினம் அழிய.

குலவ - விளங்க. கவை - பிளவு.

பாண்டவரைக் கொன்று தருவேன் என்றும் இவ்வகை, தெருட்டி விடுத்து மற்று அவனுக்குத் துணையாக நூறு நூறாயிரம் அரக்கர்களையும் படைகளையும் போக்க அலம்புசனும் மகிழ்ந்து என் வஞ்சினம் முடிக்கப் பெற்றேன் என்று மிகவும் செருக்குற்று விரைந்துடன்போய்ப் போர்க்களத்தில் நின்ற அராவான் மேற்சென்று தன்னால் அவனைத் தொலைக்கப் பெறாது தேருஞ் சிலையும் அழிந்து புறகிட்டுப் போந்து தங்கள் படைநிலையிற் சென்றடைந்தான் என்றவாறு. அப்பொழுது கண்ணன் உருவிலியாக அலம்புசனிடைச் சென்று யாதருளிச் செய்தானோ வெனில்: (௧௧௮)

602. விசயன்றன் சீர்மகனை வெல்லமன [1] துண்டா
லசைவற் றரக்களுடைக் கோவை—வசையற்ற
புள்ளரசா யோடிநீ பொன்றுவியா யென்றுரைத்தான்
கள்ளரச னாய்ப்பிறந்தான் கண்டு.

இவ்வகை கண்ணன் உருவிலியாய் நின்று இவன் அரமங்கையின் மகன் ஆதலால் இவனைக் கொல்லும் பொழுது நீ கலுழவுருக் கொண்டு வஞ்சித்துக் கொல்வாயாக என அருளிச் செய்யக் கேட்டு யாது செய்தான் அலம்புசன்: (௧௧௯)

603. மாயப் பெருவிறற்போர் மைந்தனைத்தான் வல்லமையான்
மாயத்தி னல்வெல்ல மாட்டாது—பாயத்தாற்
புள்ளரச னாய்வந்து தோன்றினான் போர்க்களத்தி
லோள்ளரசர் காண வுடன்று.

இவ்வகை அலம்புசன் கலுழனாக ஓடுதலும் அதுகண் டரா வானும் தான் கொண்ட அரவவுருத் தவிர்ந்து நடுக்கத்தோடு இடுக்கண் எய்தி ஓர் உடலாய் நின்றானைக் கண்டு தன் இலங்கு வாளால் தலைபுரள வெறிந்து கொன்றான் அலம்புசன் என்றவாறு. அப்பொழுது திரிந்திட்டது பாண்டவர் படை. ஒருபால், (௧௨௦)

---

602. அரக்கள் - அராக்கள் என்பது குறுகிநின்றது. கோ - அராவான். புள்ளரசு - கலுழன். பொன்றுவியாய் - சாகப் பண்ணுய். கள்ள அரசன் - மாயன்; தொகுத்தல்.

603. உபாயத்தால் - தந்திரத்தால். ஒள் - ஒளியுடைய.

பா. வே: 1. துண்டா யசைவுற் றரக்கருடை கோவை.

604. வீரத் தனிக்கோடிமேல் [1]வேதம் வலனுயர்த்த
போர்வித் தகனும் [2]புதல்வனும்—போரிற்
பலரோழியச் [3]சென்றூர்த்த பாஞ்சால ரேல்லாஞ்
சிலரோழியக் கோன்றூர் செயிர்த்து.

எ - து. *துரோணனாலும், அசுவத்தாமனாலும் பாஞ்சாலர் படை வீழ்ந்துபட்டது என்றவாறு. ஒருபால்,* (கஉக)

605. வெற்றித் தனிக்களத்தின் வேல்வேந்தர் பட்டவியக்
கோற்றத் தனிவில் குனித்திட்டு—முற்றுந்
திசையஞ்சி யோடத் தெரிசரங்கள் சிந்தி
விசையன்சேய் சென்றான் விரைந்து.

எ - து. *அபிமன்னுவின் சினத் தீயாற் றுரியோதனன் படைவெள்ளம் வற்று கின்ற தென்றவாறு. அப்பொழுது,* (கஉஉ)

606. மன்னவனுந் தம்பியரு மாமனு மைத்துனனுங்
கன்மதிலைச் சூழ்ந்தார்த்த கார்முகில்போல்—முன்ன
முடைந்தார்க ளேல்லா மோருங்குடனே கூடி
யடைந்தார்கள் வீமன்மே லார்த்து.

எ - து. *துரியோதனனும் உடன்பிறந்தார்களும் செயத்திரதனும் சகுனியும் உள்ளிட்டார் எழுபதினாயிரம் தேராட்களுடன் சென்று வீமனைச் சூழ்ந்துகொண்டு கணைமழைசொரிந்து வியப்புறுத்தும் அளவில் தேரும் அழித்து மற்றவன் அரிமாக் கொடியும் இலத்து வீழ்த்துத் தேர்ப்புரவி மேலும் தேரோட்டி மேலும் பொற்பகழி பாய்ச்சி மேன்மேலுந்தாக்கினார். அப்பொழுது யாது செய்தான் வீமன் :* (கஉங)

607. அலைப்பட்ட வேலுழுவை [4]யாடவர்மேல் வீமன்
சிலைப்பட்ட வெஞ்சரங்கள் சிந்தித்—தலைப்பட்

---

604. வித்தகன் – துரோணன்.

605. குனித்திட்டு - வளைத்து. தெரிசரம் - தேர்ந்த அம்பு.

606. உடைந்தார் - புறமுதுகிட்டு ஓடினார்.

607. வேல் அலைப்பட்ட - வேலால் துன்புறுத்தப் பெற்ற. உழுவை - புலி. ஆடவர் - வீரர். கதித்து - விரைந்து.

பா. வே : 1. *வேதி.* 2. *புரவலனும்.*
3. *சென்றூர்த்தார்.* 4. *யாடரவின் வீமன்.*

டோருங்குடனே வீழ்ந்தா ரொளிவனுஞ் சென்று
கருங்கடலின் வீழ்ந்தான் கதித்து.

இரண்டாவது போர் மலைந்த பார் வேந்தன் உடன் பிறந்தார்களில் ஏழு தேராட்களைக் கவசங்கிழியக் கலக்குறுத்துவ தோர் பகழிபாய்ச்சி நிலத்து வீழ்த்து மற்றவருடன் வந்த வீரரையும் அவிய நூறி அரிமுழக்கம் செய்தான் வீமனைக் கருதுவது. அவ்வளவில், (கஉச)

608. நாழிகையிற் காற்கூறு தாழாது நாயிறுபோய்
வீழ விதியுடைய வேல்வேந்தே—வாழியரோ
[1]டோகாதே பையவே யிற்றைக் குளையாகிற்
போகாயோ வென்றான் புரிந்து.

கதிர் மறைவுகண்டு துரியோதனன் பட்டுப் படாத தம்பி மாருடனே பெரும் படையோடும் கைவாங்கித் தன் பாடிவீடு நோக்கிப் போவானைக் கண்டு வீமன் சொல்லுவான்: நின்னையும் நின் உடன் பிறந்தார்களையும் ஒரு நாழிகையில் வீழ்த்துவதாகக் கருதினேன்; என்னைப் பிழைத்துக் கதிரோன் ஈண்டன் போய் மறைந்தான். ஆதலால் உனக்கு அவன் உதவிசெய்தான். ஆதலால் இனி உன்மேல் தேர்விடுகிலேன்; நீ உன்படை புடைசூழ மெல்லப் போவாயாக என்று உரைத்துமீண்டும் போய்த் தன் படைநிலை புக்கான் வீமன் என்றவாறு. அதுகண்டு தருமன் தானை ஆர்த்தெழுந்து வீரமுரசு முழக்கியிட வீரத் திரு பொலிந் திலங்கத் தோள் தடித்துக் கண்ணன் இனிமை பேசப் படைநிலை கைவாங்கித் தம் பாடிவீடு புக்காராகக் கருதுவது இப்பால் துரியோதனன் யாது சொல்லி அரற்றினானோ வெனில்: (கஉரு)

609. என்னெஞ்சம்[2] விட்டழுங்க வேதிலரால் வானடைந்தீ
ரின்னஞ் சிலரோடும் யானிருப்ப—மன்னர்
[3]பெருமானுந் தம்பியரே யென்றழுதான் பின்னைக்
குருநாடர் கோமான் குலைந்து.

---

608. நாழிகை – 24 நிமிடங்கொண்ட கால அளவு. காற்கூறு - கால்பங்கு. வாழியரோடு ஏகாதே - தப்பிப் பிழைத்தவரோடும் ஓடாதே. "ஞாயிறு வீழ்தலால் இன்று உய்யும் விதியுடையன் ஆயினை; ஆதலால் பையவே போகாயோ"

609. அழுங்க - அழ.

பா. வே: 1. டேகாயே. 2. விட்டலங்க.
3. பெருமான்றன் றம்பியரே.

என்றிவ்வகை சொல்லி அரற்றக் கேட்டு யாது சொல்லி அரற்றினன் திருதராட்டிரன் : (கஉசூ)

610. மின்னாரம் பூண்ட விரைமார்பி லம்புவேல்
புண்வாய் திறக்கப் புரண்டீர்கண்—மன்னாந்த
பாண்டவரை யன்றி மறுத்தேன் செவிசுடா
வாண்டகைகாள் [1]பட்டீரே யாங்கு.

இவ்வகை கேட்டுக் காந்தாரி யாது சொல்லி அரற்றினளோ வெனில் : (கஉஎ)

611. மல்லுக் குயர்ந்த மணிவயிரத் திண்டோள்கள்
வில்லுக் குடைந்தாங்கு வீழ்ந்தவெனச்—சொல்லுக்கே
[2]யீயோளித்த வாயா ளெழுந்து விழுந்தழுதாள்
வாயடித்துக் கைதலைமேல் வைத்து.

என்றிவ்வகை அரற்றுவாளைக் கண்டு மற்றந்த அரசகுமரர் தேவிமார் யாது சொல்லி அரற்றினரோ வெனில் : (கஉஅ)

612. ஆவா வெனவே யழுதாங் கலமந்து
போதாப் புவிமேற் புரண்டிட்டார்—தேவராற்
றைத்தடங்கும் வெள்வேற் றடங்கண்ணார் மாமிமேன்
மைத்தடங்க ணீர்சோரிந்தார் வந்து.

இவ்வகை பலவகைப்படக் கோயிலிற் கிடந்து புலம்புவாரை வீடுமனுந் துரோணனும் புகுந்து குருமொழி யுரைத்து உலகியல்பு கூறித் தேற்றத்தேறினர் துரியோதனனும் மற்றுங் குள்ளாருமாகக் கருதுவது. இப்பாற் சிறிது பொழுது எண்ணியிருந்து அற்றை

---

610. விரை – மணம். மன்னார்ந்த – நிலைபேறமைந்த. பாண்டவரை அன்றிப் புரண்டீர்கள் என்று தன் மைந்தர் அழிவுக்கே அழுங்கினன். அவர்க்கு அழிவில்லையே என்று. மறுத்தேன் - உங்கள் எண்ணத்தை மறுத்தேன். செவிசுடா – செவியில் வெதுப்பாத. பட்டீர் – இறந்துபட்டீர்.

611. சொல்லுக்கே ஈயொளித்த வாயாள் - சொல்லில் வழியும் தேனை நுகர வரும் ஈக்காக மறைத்த வாயை யுடையவள்.

612. அலமந்து - சுழன்று. போதா - போய். தைத்தல் - செய்தல்.

பா. வே : 1. பட்டீரோ வாங்கு, 2, யீன்றெழித்த,

இரவின்கண் பட்டுப்படாத படைமன்னரும் மீந்த தம்பிமாரும் புடை சூழப் பல பதினாயிரங் கைவிளக்குக் கலந்தெரிய விட்டு விளங்கா நின்ற அவைக் களத்திருந்து கன்னனை அழைத்துவிட்டு யாது சொன்னான் துரியோதனன் : (கஉகூ)

613. கங்கைமகன் றன்பாற் கதந்தணிந்து வில்லேந்திப்
போங்கு செருவிற் புகுதாயே—[1]லங்கண்
புடையெல்லாஞ் சூழ்ந்த புனாடா மற்றேன்
படையெல்லா நாளைப் படும்.

ஏ - து. வீமன் என்னும் காற்றினாலும் அருச்சுனன் என்னும் தீயாலும் என் பெரும்படை என்னும் பெருங்காடு நாள்தோறும் வெந்துபோகாநின்றது. என் உடன்பிறந்தார்களும் இற்றைவரையில் இருபதின்மர் வீமனால் கொல்லப்பட்டார்கள். இவ்வகை தளர்ந்து நிற்றேனுக்கு நீ வீடுமனிடையுள்ள காரியத்தினை யெமக்காகத் தவிர்ந்து நின் தடக்கையில் வில்லேந்தித் திண்டேர் ஏறிப் போர்க்களம் புகுந்து ஏகாநின்ற படையை அஞ்சல் என்று சிறந்த அம்பென்னும் நீர் முகந்து தடிகை முகில் பொழிந்து அவியாய் ஆகில் நானும் என் பெரும்படையும் நாளைப் பகற் பொழுதில் படுகின்றோம் எனக் கேட்டு யாது சொன்னான் கன்னன் : (கஙo)

614. கமரழிந்த நீர்நாடன் காங்கேயன்வந் திங்க
ணமரொழிந்து புற்கவ்வு மாகி—லுமதுரிமை
மண்ணகமாய்ச் செய்தந்த [2]வாள்வேந்தர் தம்முரிமை
விண்ணகமாய்ச் செய்வேன் விடிந்து.

ஏ - து. நான் பின்னைப் படைக்கலம் பிடித்துப் போர்க்களத்தில் புகுதேன் என்று பிறநாட்டு வேந்தர் அனைவருங் காண வீடுமன் புற்கவ்வு மாகிற் பாண்டவர் அனைவரையுங் கொன்று பகைவென்று முடித்து மூவுலகும் உன்னதேயாகத் தப்பின்றியே நாளைத் தருவேன் ; இதற்கு ஐயமில்லை என மிக மகிழ்வுடன்

---

613. கதம் - சினம். அங்கண் – அழகிய இடம். புடை - பக்கம். காரியம் - பகையுணர்வு.

614. கமர் - வெடிப்பு. நீர்வளம் உடைய நிலத்து வெடிப்புத் தோன்றாது. புற்கவ்வுதல் - தோல்விக்கு அடையாளமாகப் புல்லைக் கவ்வுதல் என்பதொரு வழக்கு.

பா. வே : 1. லங்கை. 2. வாழ் வேந்தர்.

கன்னன் பேசிய கட்டுரைகேட்டு மிகவும் விருப்பம் எய்திச் சிறிது பொழுது சிந்தித் திருந்து பின்னைத் தன் தம்பிமார்களில் துச்சாதனனை யழைத்து யாது சொன்னான் துரியோதனன் : (கநுக)

615. மல்லிற் பொருதிண்டோள் வாள்வேந்த னங்கர்கோன்
சொல்லிற் படுஞ்சொற்கள் சோராதே—வில்லின்
மருவித்த திண்டோளான் வாழ்வேந்தன் மூதாதைக்
கறிவித்து வாவென்று ளுங்கு.

ஏ - து. பாட்டனாகிய வீடுமனுக்கு அங்கர் கோன் கன்னன் பேசிய ஊக்கமும் கட்டுரையும் அறிவித்து வருவாயாக என்று சொல்லக் கேட்டுத் துச்சாதனன் போய் வீடுமன் கோயிற் புகுந்து மற்றவனைக் கண்டு வணங்கி யாது சொன்னானே வெனில் : (கநுஉ)

616. கொற்றவநின் பாதம் பணிந்தேயான் கூறுகின்றேன்
வெற்றி தருவதொரு விண்ணப்ப—மற்றெமக்கு
நற்செய்ய வேண்டுதியே னுனது நாளையொரு
புற்கவ்வ வேண்டும் புரிந்து.

ஏ - து. கன்னனை நாளையளவுக்குப் போர்க்களத்தில் புகுத விட்டு மற்றவனால் செய்யப்பட்ட வீரச் செயல்களைக் காண்பான் வேண்டிப் பார்வேந்தன் எல்லாவேந்தர் முன்பாக நின்னையொரு புற்கவ்வவேண்டும் என்றுரைத்து வாவென்று வேந்தன் விடுப்ப விடை பெற்று வந்தேன் என்று துச்சாதனன் சொல்லக் கேட்டு அளவில்லாததோர் சினத்தீயெய்திப் பின்னும் அதனை அவித் தடக்கி முறுவல் செய்து யாது சொன்னான் வீடுமன் : (கநுநு)

617. நாளை யளவேன்போர் நாளை கழிந்ததற்பின்
காளை விசயன் கடுங்கணையால்—வாளமருண்
மாள்விக்க மாள்கின்றேன் மாண்டக்கா லங்கர்கோ
னாள்விக்க வாண்மி னரசு.

---

615. சோராது - ஒன்றையும் விடாது. மருவித்த - தோய்வித்த.

616. நற்செய்ய – நன்மை செய்ய.

617. நாளை என்றது ஒன்பதா நாட் போரை. நாளை கழிந்து மாள்வேன் என்றது பத்தா நாட் போரை. அதன்பின் ஆள்விப்பானுக. நீவிர் ஆள்வீராக.

எ - து. வீம அருச்சுனர் முன் போர்க்களத்தில் நிற்கவல்ல ஆற்றலுடையார் இல்லை; மற்றவரை யாவராலும் வெல்ல வொண்ணாது என்னுமிது தனக்குப் பலநாளும் அவையகத்து உரைத்துப் போதுவேன்; இன்று மிஃதுரைத்தேன்; இது நிற்க, வீம அருச்சுனர் கண்டு நிற்க எண்ணற்கரிய அருந்தேரரில் சுவேதனையும் அவனுள்ளிட்ட அறுபதினாயிரம் தேராட்களையும் கொன்று தந்தேன். நாளை கழித்துப் பகற்பொழுதில் நடுவேளை அளவில் இருபதினாயிரம் தேராட்கள் என்னாற் கொல்லப்படுவர். நாள்தோறும் அறுபதினாயிரம் முடிமன்னரையும் கொன்று தந்தேன். அதுவுமன்றி யாவராலும் தாங்கரிய கண்ணன் ஆணை அழிந்து சக்கரம் வாங்கும்படி வலிமை காட்டினேன். இது போர்க்களத்தில் நின்ற வீரர் அனைவரும் அறிவர். இன்னமுந் தன் சோறுண்ட கடன்கழிய நாளைப் பகற்பொழுதில் ஏனை வேந்தர் இருபதினாயிரவரைக் கொன்று குவித்துப் பத்தாநாளில் பகல் நாழிகை நண்பகல் அளவும் போர்க்களத்துள் நின்று என்னாற் செய்யத் தக்கன ஆற்றல் அனைத்தும் கொண்டு பகைவரைத் தகைந்து கணைமழை சொரிந்து அருச்சுனன் கையில் அடுசரங்களால் ஏவுண்டு மாள்கின்றேன். ஆதலால், நீங்கள் நாளையளவும் எனக்காகப் பொறுத் தாற்றி நாளை கழிந்தபின் கன்னனாற் பகை வென்று மற்றவன் தருகின்ற நாட்டினையும் இனிது உடனிருந்து ஆண்மின் என்று வீடுமன் உரைத்துத் துச்சாதனனுக்கு விடை கொடுப்ப மற்றவனும் போய்த் துரியோதனனைக் கண்டு வீடுமன் உரைத்த வெவ்வுரையும் வீரமும் அவனாற் செய்யப்பட்ட செயல்களும் மற்றும் உற்றனவும் அனைத்தும் உரைப்பக் கேட்டுக் கவன்று அற்றை இரவின்கண் துயில்துறந்தான் மன்னர் மன்னன் துரியோதனன் என்றவாறு. இப்பால் வீடுமனும் விடிவளவு ஒரு யாமம் எனத் தொலையா ஊக்கத்துடன் கொலை யானை என்னப் பள்ளிகொள்ளப் புக்கானாகக் கருதுவது. (௧௩௪)

எட்டாநாட் போர் முற்றும்.

ஒன்பதாநாட் போர்

கடவுள் வாழ்த்து

618. அரிநாம மாதரியா [1]வாதர்காண் முன்ன
மொருநாம நீர்வேண்டிற் [2]றேருதிர்—வருநாள்கள்
வாக்கினால் வைத்துரைக்க [3]வல்லீரேல் வான்பிறவி
போக்குவான் றாளே புணை. (௧௬௫)

619. பைய விருளோடிப் பாய்கதிரோன் பொற்கடலில்
[4]வெய்ய கதிர்தோன்றி விட்டெறிப்ப—வெய்யமுனைப்
போர்வேந்த ரார்த்துப் பொருகளங்கைக் கொண்டார்கள்
பார்வேந்த ரெல்லாம் பரந்து.

இவ்வகை அன்று கழித்த மற்றை நாள் கதிரோன் எழும் பொழுது கண்டு களித்தெழுந் திரண்டுபடையும் பள்ளியெழுந்து வந்து போர்க்களத்தை நோக்கி யாது செய்தாரோ வெனில்: (௧௬௬)

620. வீரர் களிறேற வேந்தர்கள்பொற் றேரேறப்
போர்கெழுமி வெஞ்சிலைநாண் பூட்டேற—வார்முரச
மார்ப்பேற வெயிளைஞ ரம்பு மயில்வாளுங்
கூர்ப்பேற வெறிஞர் கூர்ந்து.

இவ்வகை இரண்டுபடையும் படைக்கலங்கள் அணிசெய்து யானை குதிரைமேற் கொண்டு விரைந்துடன் போய்ப் போர்க்களம் புகுந்து தலைப்பெய்து தம்மொடு தாம் தாக்கினர். அவ்வளவில், (௧௬௭)

---

618. ஆதரியா - ஏற்றுக்கொள்ளாத. ஆதர்காள் - அறிவிலிகளே. நாமம் - பெயர். வைத்துரைக்க - அரிபெயரை நெஞ்சில் வைத்து வாயால் சொல்ல. வான் பிறவி - எண்ணற்று வரும் பல பிறவிகள். புணை - மிதப்பு. 'பிறவிக்கடல் நீந்த மிதப்பு தாள்' என்க.

619. எறிப்ப - சுடர்விட.

620. வார் முரசம் - கட்டமைந்த முரசம்; அயில் - கூர்மை. கூர்ப்பு - உள்ளது சிறத்தல்.

பா. வே: 1. வாதுலர்கண் முன்ன. 2. றேருதி. 3. வல்லீரோ. 4. செய்ய.

621. வெற்றித்தேர் வீமன்றன் மேலே விறலரக்கர்
கொற்றத் தரசன் கொதித்தெழுந்து—பற்றிச்
சிலம்பதனைக் கொண்டேறியச் சேண்விசும்பி லாற்றி
யலம்புதனைக் கொன்று னழித்து.

எ - து. தடவரையில் ஒருமுகடு முரித்தெறிய வந்தான் அலம்புதனைக் கண்டு ஒரு சீரிய அம்பு கொண்டு வானத்தே தூளியாக வெய்து தலைதுமித்து வீழ்த்துப் போர்முழக்கம் செய்தான் வீமன் என்றவாறு. அப்பொழுது அலம்புதன் பட்டமை கண்டு கனலெழ விழித்துத் துரியோதனன் வெகுளி யெய்தி மற்றவன் மேல் எத்தனையோ ராயிரம் யானைகளைக் கொண்டு நூறுயிரம் தேராட்களுடன் வீமனை நெருக்கலுற்றான். அப்பொழுது யாது செய்தான் வீமன் : (௬௨அ)

622. காலக் களமென்னு மம்மிமேற் கைம்முகந்து
கோலத்தண் டென்னுங் குழவியான்—மேலிட்
டரைத்தான் களிறெல்லா மாங்குருதி நீரா
விரைத்தானத் தேரோ டெடுத்து.

எ - து. துரியோதனன் பெரும்படையும் அவர்களாற் கொணரப்பட்ட களிற்றீட்டத்தினையுங் கண்டு களித்துத் தோள் தடித்துத் தண்டினால் யானைக்குழாங்களைச் சிதறுவித்து நிலமே அம்மியாகத் தன் கையிற் கோற்றண்டு குழவியாகக் குருதி நீர் கொண்டரைத்துப் போர்க்களமுழுதும் உருமேறெனத் திரிந்தான் வீமன் என்றவாறு. (௬௨௯)

623. கைபோற் சிலைகுனியக் கங்கைதரு காவலன்முன்
மெய்போற் றருமன் வெளிப்பட்டான்—மைசே
ரருவரைமேற் கொள்கின்ற வாளரிபோற் றேர்க
ளிருவருமேற் கொண்டா ரெதிர்ந்து.

---

621. சிலம்பு – மலை. ஆற்றி – நிறுத்தி;

622. காலக் களம் - காலனுக்குக் களமான போர்க்களம்; அதுவே அம்மி. தண்டு, அம்மிக் குழவி, குருதி, நீர். ஆகும் என்பது ஆம் என நின்றது.

623. வரைமேல் வரும் அரி; தேர்மேல் வரும், வீடுமனும் வீமனும். மை – முகில்.

இப்பால் தருமனும் வீடுமனும் ஒருபால் தலைப்பெய்து தாக்கினர். அப்பொழுது அருவரைமேல் இரண்டு அரிமா வெதிர்ந்தாற்போலத் தாக்கி ஒன்றிரண்டு இரும்பாணியால் தருமன் மார்பில் வீடுமன் எய்யக்கண்டு தருமன் யாது செய்தான். (கசo)

624. கோற்றக் கொடிமுரசங் கோண்டான் கொடுஞ்சிலைநா
[1]ணற்றப் படும்வண்ண மாங்கெய்ய—வெற்றிவேல்
விட்டெறிந்தான் காங்கெயனை வெய்ய செருக்களத்தே
விட்டெறிந்தா னுங்கே வெகுண்டு.

எ - து. முன்னம் வீடுமனால் வில்லறுப்புண்டு இரிந்து போன் தருமன் வீடுமன் மார்பில் ஒரு வேலிட்டெறிந்து குருதி நீர் சோரக் கண்டு வெறுங்கையே நின்றானைக் கருதுவது. அவ்வளவில், (கசக)

625. பல்லா யிரம்பரித்தேர்ப் பாஞ்சால ருள்ளிட்டா
ரெல்லாருஞ் சென்றங் கெதிர்ந்தார்கள்—வில்லால்
வருகதிர்மேற் சென்றுலு மாமேகம் போலக்
குருபதிமேற் சென்றார் கோதித்து.

இவ்வகை தருமனுக்குத் துணை செய்வாராகப் பாஞ்சாலர் கூட்டமும் திட்டத் துய்மனும் சத்திர தேவனும் சேதிதானனும் சிகண்டியுமாகச் சென்று பெரும்படையைக் கைதுரந்து கணைமழை சொரிந்தார். அப்பொழுது யாது செய்தான் வீடுமன் : (கசஉ)

626. பூஞ்சாலி மச்சத்தார் போர்வேந்தன் றம்பியையும்
பாஞ்சாலர் பல்லா யிரவரையுந்—[2]தேஞ்சாலி
பொன்றேடுக்குஞ் சோலைப் புனனாடர் காணவே
[3]கோன்றழக்கி நின்றான் கோதித்து.

---

624. அற்றப்படும் வண்ணம் - அழிபடுமாறு.

625. ஆலும் - வட்ட மிடும்.

626. தேஞ்சாலி-இனிய தேன். பொன்தொடுக்கும்·பொன்னுருக் கென ஒழுகவிடும்.

பா. வே: 1. ணற்றுப் படுவண்ண. 2. பூஞ்சாலி.
3. கொன்றொடுக்கி.

எ - து. பாஞ்சாலரையும் விராடன் தம்பி சதானிகனையும் உள்ளிட்ட போர்வீரரையும் கொன்றுழக்கி வீமன் அருச்சுனன் இருவருங் கண்டு நிற்க வெம் பெரும்படையைக் கொன்று குவித்தான் வீடுமன் என்றவாறு. அப்பொழுது யாது செய்தான் அருச்சுனன் : (கசஙூ)

627. தொடுத்த கணைமாரி தூவினு னெங்கு
மடுத்த பிணக்குவையாய் வீழ—மடுத்த
கடற்போற் பசுங்குருதி காளுரு யோட
வடற்போர் விசய னமர்ந்து.

எ - து. வீடுமனைச் சூழ்ந்து நின்ற எல்லாவீரரையும் சரபடலங்களால் சிதறுவித்துக் களிறுந்தேருங் களத்தவியக் கலக்குறுத்தி யோமுகனையும், யூபலாட்சனையும் இழி குருதியில் ஒழுக்குவித்துத் திசைகளைச் செவிடுபடுத்தி விண்ணும் மண்ணும் தோன்ருவகை கணைமழை பொழிந்தார்க்கின்ற அருச்சுனனல் நிலையாற்ருது புறகிட்டது துரியோதனன் படை என்றவாறு. அவ்வளவில், (கசச)

628. ஆனையோடு தேர்மா வரசர் பலரவியச்
சேனை யுடைந்து செலக்கண்டே—யேனைப்
போருங்கடலில் வந்துதித்த பொற்கதிரோன் மேலைக்
கருங்கடலில் வீழ்ந்தான் கலந்து.

இவ்வகை கதிரோன் மறையும் மலை சேரக்கண்டு படையிரண்டும் கைவாங்கித் தம் பாடிவீடு புக்காராக் கருதுவது. (கசரு)

---

627. குவை - குவியல். காளுரு - காட்டாருக.
628. அவிய - அழிய.

ஒன்பதாநாட்போர் முற்றும்.

பத்தாநாட் போர்

கடவுள் வாழ்த்து

629. மூப்பொழுதாய் மூன்றுலகாய் மூவுருவாய் நின்றானைச்
சொற்பழுது சொல்லாமற் சொல்லுதியே—யெப்பொழுது
மாதவன்றா ளேத்தி மறவாம னீமனமே
[1]யோதவந்தேன் னுள்ளே யுறும். (௧௬௬)

630. மாக்களிறும் பாய்மாவு மான்றேருந் தாஞ்சூழப்
போர்க்கெழுந்து வெஞ்சிலைநாண் பூட்டேற்றி—
[வேற்களுமே
தங்களங்கைக் கொண்டடன்று தார்வேந்த ரெல்லாரும்
வெங்களங்கைக் கொண்டார் வெடிந்து.

அன்று கழித்த மற்றைநாள் கதிரோன் எழும் பொழுது கண்டு இரண்டு படையும் பள்ளி யெழுந்து போர்க்களம் புகுந்தன. அப்பொழுது யாது செய்தான் வீடுமன்: பெரியோனாய் முக்காலம் உணர்ந்தோனாய்ச் செல்காலம் வருங்காலம் அறிந்து வாழ்கின்றான் ஆதலால் அன்று தனக்கு வீடுபேற்று நாள் எனக் குறித்துத் தன் கோயிலுள்ளிருந்து தனியனாய்த் தன் கடன்கள் எவையும் முடித்துப் போந்து ஒருதனி அவைக்களத் தினிதிருந்து எத்தனையோராயிரம் மறையோரை அழைத்து மறை வழியாற் சடங்குசெய்து தடக்கை நீர்கொண்டு வடக்கு நோக்கி மலர் பொழிந்து ஐம்புலன்களை யொருக்கி யாது சொல்லி உண்ணோக்கி னானே வெனில் : (௧௬௭)

631. ஆக்கை [2]குலைந்திட் டனைத்தேலும்புங் கைவிட்டுக்
காக்கை பருந்து கலவாமுன்—னோக்கிக்

---

629. மூவுருவு - படைப்பு, காப்பு, அழிப்புக்கு ஏற்ப முக் கடவுளர் உருவு.

630. இவ்வெண்பா 561 ஆம் வெண்பாவைப் பெரிதும் ஒத்துள்ளதாதல் அறிக.

631. கலவாமுன் – தின்னுதற்குக் கூடாமுன்.

கரு மாலை - பிறவித் தொடர்ச்சி.

பா. வே: 1. யோதவந்துன். 2. குலைந்தே யனைத்.

கருமாலை மாற்றிக் கருதிமட நெஞ்சே
திருமாலை யேத்தாய் தெளிந்து.

இவ்வகை தேவதேவன் திருமால் திருவடிகளை நினைத்துத்தன் உளத்தை வேண்டிக் கொண்டொருப்பட்டு எத்தனையோர் ஆயிரம் மறையோர்க்கு ஆக்கொடையும் பூக்கொடையும் அருளி இன்சொலுடன் மறையோரைக் கைதொழுது விடைகொண்டு படைக்கலக்கொட்டில் புகுந்து படைக்கலங்களைக் கைதொழுதெடுத்து அணிசெய்து தன் மணி நெடுந்தேரேறித் தலையுறையும், வீரப் புட்டிலும் புனைந்து எம்மருங்கும் கவசப் பேரொளி கலந்தெறிப்ப வீர அணிகலங்கள் வெயிலெறிப்ப அனைத்து வீரருஞ் சூழ்ந்து வழிபட, வெண்குடை மேல் நிழற்றத் தடக்கைவேல் நின்று இலங்க, எழில்மணிக் கவரி காலசைப்ப வெழும் பனைக்கொடி விசும்பணுவ, இமையோர் கூட்டம் எதிர்நோக்கி நாற்படை நெருக்கலுறச் சங்கு பேரிகை முதலாகிய முழங்கத் தாளுந்தோளும் இடந்துடிப்பத் தடந்தேர் மிசை அரிமாப் போலப் போர் வீரருடன் வந்து போர்க்களம் புகுந்து தன்பெரும்படையைச் [1]சருப்பதோபத்திரம் என்னும் அணிவகுத்துத் தூசிமுகத்தின்கண் மாமேருவைப் போல நின்றான் அருந்தேரரில் முன்றோன்றல் வீடுமன் என்றவாறு. அதுகண்டு தருமன் தானையைப் [2]பதுமராகம் என்னும் அணி வகுத்து நின்றான் திட்டத் துய்மனைக் கருதுவது. இவ்வகை இரண்டு படையும் போர்க்களம் புகுந்து பண்ணும் வகுப்புமாக நின்றவளவில் யாது நிகழ்ந்ததோ வெனில்: (கச௮)

632. பொன்னுந் துகிலும் புனைமணியும் பொற்பூணு
மின்னும் பிறவெண் ணிவையெல்லா—மன்னு
மறையவர்க்குச் செய்கின்ற மாதானஞ் செய்தா
னறையுலக மாள்வா னமர்ந்து.

இவ்வகை பெருங்கொடை புரிந்து நாற்படை புடை சூழநின்ற வீடுமனைக் கண்டு விருப்பமெய்தி அருச்சுனனுக்குக் காட்டியாதருளிச் செய்தான் கண்ணன் : (கசக)

633. நின்ற குலமதலை நின்னுடைய மூதாதை
வென்றி விசயாநின் வெங்கணையா—லின்று

632. அறை – அறுக்கப்பட்டது. அறை உலகம் – வீட்டுலகம். வீடுமன் வீடுபேறு எய்துவது இந்நாட்போரில் ஆதலறிக.

பா. வே : 1. பதும ராக மென்னும். 2. கிரவுஞ்ச மென்னும்.

கோலப்படா ளுகிலிக் கோமதலை [1]நம்மால்
வேலப்படா னென்றான் விரைந்து.

தூசிமுகத்தின்கண் உருமேறென நின்ற வீடுமனை இன்று மாலை அந்தி அளவில் சீரிய படைக்கலங்களால் வீட்டுலகுக்குப் போகவிடாயாகில் பெரும்படைக்கும் நமக்கும் இவனே கூற்றமாங் கண்டாய் என்றும் மூதாதை என்று அருளெய்தாதே சண்டன் இவனைப் போர்மலைந்து போக்குமது வல்லாது யாவராலுமின்றிற் பின்னை வெற்றி கொள்ள வரிது கண்டாய் என்றும் இவ்வகை கண்ணன் அருளிச் செய்யக்கேட்டு யாது விண்ணப்பஞ் செய்தான் அருச்சுனன் : (க௫0)

634: மாக்கொடியுந் தேரும் வளைசிலையுந் தூணியுந்
தீக்கடவு ளீந்தானீ தேர்ப்பாகன்—றுக்குவனேல்
விண்ணரச ரோடே வெகுள்வன் றிருமாலே
மண்ணரச ரோவெனக்கு மாறு.

எ - று. தேவர்கோன் காண்டவனத்தைத் தீத்தேவனுக்கு இரையூட்டுகின்ற நாளில் அவனால் தரப்பட்ட தேருங் கொடியும் தூணியும் காண்டீபம் என்னும் வில்லும் இவை முக்கடவுளராலும் அழிக்கப்படா; எல்லா உயிர்களுக்கும் தேவர்க்கும் அசுரர்க்கும் கடவுளாய் உள்ள எம்பெருமானே, நின்னை வலவனாக வுடையேன்; இப்படிக்கொத்த எனக்கு இயக்கர் அரக்கர் கந்தருவர் சித்தர் கருடர் கின்னரர் கிம்புருடர் என்கின்றாரும் எதிரல்லார் ஆதலால் மனிதர் ஒருபொருளாக விவ்வகை யெல்லாம் மருளுவதோ வென்று மிகவெகுண்டு தன் கடவுட் சிலையினைக் கைக்கொண்டு கதுமெனத் தேரோட்டி வீடுமன்மேற் சென்று தாக்கினான் அருச்சுனன். அப்பொழுது, (க௫க)

635. குரக்குக் கொடியின்மேற் கூவியம்பா லெய்து
சரத்துக் குழுவுபல தாக்கி—யரக்கரைமுன்
முக்கோடி வென்றான்மேன் மூடும் படிபொழிந்தான்
மிக்கோடி வீரன் வெகுண்டு.

அன்றியும், (க௫உ)

634. தூணி - கணைப்புட்டில்; அம்புக்கூடு. மாறு - எதிர்.

வே : 1. எம்மால்.

636. தெய்வப் படையாலுஞ் செஞ்சரங்க டம்மாலுங்
கவ்வைக் கலிவிசும்பு காட்டினான்—பவ்வ
மூலையா வெதிரெழுந்த மூரித்தேர் மன்ன
ரேலையா யிரவரையு மின்று.

இவ்வகை வீடுமனால் விடப்பட்ட கணைமழைகளையும் சீரிய அம்புகளையும் தன் அயில்வாய் அம்பு கொண்டு வானத்தே அறுத்து மாற்றிப் பின்னும் யாது செய்தான் அருச்சுனன்: (கருங)

637. சிலையுங் கொடியுஞ் சினமாவுந் தேரு
மலையுங் கணைமாரி பெய்தான்—கோலைவிற்
கடுஞ்சின மால்யானைக் காவலர்கோன் மேலு
நெடுஞ்சிலை நாண் [1]காலலைப்ப நின்று.

எ - து. வீடுமன் மேலும் வெஞ்சிலையின் மேலும் கொடி மேலும் புனைமணி நெடுந்தேர் மேலும் சரபடலம் பொழிந்து எண்டிசையும் தலைபனிப்பப் பெரும்போர் விளைத்திட்டான் அருச்சுனனுக்கு கருதுவது. ஒருபால், (கருச)

638. வாங்கு திரைப்பரவை வாள்வேந்தர் தாமெண்மர்
வீங்கு புயல்போல வில்வளையா—வோங்கு
பலவேந்தர் தம்மோடு பாஞ்சாலர் வெள்ளங்
குலவேந்தைச் சூழ்ந்தார் கோதித்து.

எ - து. குந்திபோசனும், பாஞ்சால வேந்தனும் கைகய வேந்தனும் கடோற்கசனும் அஞ்சன வர்மாவும் சத்திய சாத்தகியும் பஞ்சத் துரோபதியரும் சோமகரும் சிஞ்சையரும் திட்டத்துய்மனும் துட்டகேதுவும் அபிமன்னுவும் பாண்டிவேந்தனும் உள்ளிட்ட பலநாட்டு வேந்தரோடும் சிறந்த படையோடும் சென்று நெருக்கியழித்து மண்டித் துரப்பி இருவிசும்பும் திசையும் மறைப்பக் கணைமழை சொரிந்து மூடித் திளைத்துக் கொண்டார். அப்பொழுது, (கருரு)

---

636. கவ்வைக் கலி விசும்பு - பேரொலியுடைய வான். பவ்வம் - கடல்.

638. வாங்கு - வளைந்த. பரவை - கடல்.

பா. வே: 1. காதலைப்ப.

639. கடகிடிந்து மீன்விழுந்து கண்சுழன்று மின்னிச்
சுடரு மொளிமழுங்கித் தோன்றிக்—கொடுநிமித்தம்
விண்ணகத்துத் தோன்றினவே வேல்வேந்தர்க் கெத்தனை
கண்ணகத்த வாகக் கலந்து. [யுங்

இவ்வகை வீடுமனுக்குத் தீக்குறிகள் பல தோன்றின, ஒண்சுடரை ஊர் வளைந்தது; உருமுக் குரல் பல அதிர்ந்தது; கணைமழை பொழிந்திட்டது; சூறைக்காற்று சுழித் தெறிந்தது; பருதி மண்டலம் இருளாய்த் தோன்றிற்று: மத்தமாவும், பரிமாவும் தேர்மாவும் குருதிசோருங் கண்ணினவாயின. கண்ணுந் தோளும் இடந்துடித்தன. கூகைக்குரல் குழறியிட்டது. ஓரிக் குரல் பெருகியிட்டது. வில்லுங் கணையும் விழுந்து காட்டின. செம்முக மெல்லாம் சுளிமுகமாய் மண்ணகத்தும் விண்ணகத்தும் தீக்குறி பல தோன்றின என்றவாறு. இவ்வகை தோன்றின தீக்குறிகள் பலவுங் கண்டு இனிப் படுகை உறுதியாம் என்று கருதிச் சூழ்ந்துகொண்ட பெரும்படையை நேராக நின்று உயிர் பருகுங் கூற்றே போலவும் பல்லுலகையும் எரிக்கலுற்ற ஊழித் தீப்போலவும் அழித்தான். அன்றி நடுப்பகலில் வானின்கண் கதிர்மண்டலம் காண்டற்கரிதாகியவாறே போல யாவர்க்குங் காண்டற் கரிதாகின்ற வீடுமனுக்குத் துணையாக யாது செய்தான் துரியோதனன் : (௬௩௬)

640. காங்கேயன் றன்றனிமை கண்டு படைத்தலைவீர்
பாங்கோடும் [1]போரேன்ற பார்வேந்தீர்—நீங்களெலா
மாங்கவனைக் கால்காப்ப வாடமருட் செல்கென்றான்
வீங்கெழிற்றோள் வேந்தன் விரைந்து.

எ - து. வீடுமன் தனிமை கண்டு சத்திய விரனையும் சல்லியனையும் கிருபனையும் கிருதவர்மாவையும் சயத்திரதனையும் முப்பத்தொன்பதின்மர் தம்பிமாரையும் எத்தனையோ ராயிரம் காலாள்களையும் துரியோதனன் ஏவ மற்றவர்களும் வந்து வீடுமன் முன் புகுந்து அருச்சுனனுடனே தாக்கினர். அப்பொழுது யாது செய்தான் வீமன் : (௬௩௭)

---

639. நிமித்தம் – குறி. கடகு - மலை; கடகம் என்பதும் அது. கண்ணகத்த வாக - கண்காண.

640. கால்காப்ப - காலன் வாயினின்று காக்குமாறு.

பா. வே: 1. போர் வென்ற.

641. மொய்தா ரொலிப்ப முரட்டண்டு கொண்டிழிந்து
செய்தார் கடாக்களிற்றுத் தேர்வேந்த—ரெய்தார்த்து
முன்பிலா ராஞரை முதாரைக் கெத்தனையும்
பின்பிலா ராக்குவித்தான் பேர்ந்து.

எ - து. அருச்சுனனுக்குத் துணையாகக் கதிர்முனை வயிரத் தண்டு கைக்கொண்டு அதிர்குரல் எழுப்பி மணித்தேரினின்றிழியப் பாய்ந்து (வீமன்) சென்றெய்தி வீடுமனைக் காத்தாரை யெல்லாம் கலக்குறுத்தி முகிற் படலங்களைக் கடுவளி துரந்தாற் போலப் பெரும்படையைத் துரந்து (கொல்லாநிற்ப) நிலையாற்றாது புறகிடு வித்துப் போர் மலைந்து வீடுமனைத் தனியாக்கினான் வீமன் என்றவாறு. அதுகண்டு, (கடுஅ)

642. தோடலரிய நாகந் துகிற்கொடிமேற் கொண்ட
வடலரசன் றம்பிமா ரைவர்—கடல்வலயம்
வென்றானை வென்றானை வீரக் கடன்கழிப்ப
நின்றானை நீங்கிற் றிலர்.

எ - து. துரியோதனன் தம்பிமாரில் துச்சாதனனுந் துன்முகனுஞ் சித்திரசேனனும் சித்திராயுதனும் விவிம்சதியும் என்பார் ஐவர் தோராட்கள், பெரும்படை இரிந்தோடவும் வீடுமனைக் கைகலந்து காத்தார் என்றவாறு. அது கண்டு யாது செய்தான் தருமன் : (கடுகூ)

643. ஆய்ந்து பணித்தான் றமரை யரவுயர்த்த
வேந்தன் றனிவிடுக்கும் வில்லாட்க—ளேந்தியதோர்
[1]மொய்தாற்றுப் பூம்பெண்ணை முன்னுயர்த்த கோமானோ
[2]டெய்தாமற் காமின்க ளென்று.

---

641. தார்-படை. முரட்டண்டு = முரண் + தண்டு; வலிய தண்டு. முன்பு - வலிமை. முன்பு இலார் ஆயினாரைப் பின்பு இலார் ஆக்குவித்தான்; கொன்றான். பேர்ந்து – பெயர்ந்து.

642. கடல் வலயம் - கடல் சூழ்ந்த உலகம். கடல் வலயம் வென்றான் - பரசுராமன். அவனை வென்றான் வீடுமன். வீரக் கடன் கழிப்ப நின்றான் வீமன் என்பதும் அவ்வீடுமனையே குறித்தது. வென்றானும் நின்றானுமாகிய வீடுமன் என்க.

643. மொய் தாற்றுப் பூம்பெண்ணை – நிறைந்த குலைகளை யுடைய அழகிய பனை. பனைக் கொடியோன் – வீடுமன்.

பா. வே : 1. மொய்யாரும். 2. டெய்தாமுன்.

எ - து. துரியோதனனால் விடுக்கப்பட்ட பலபடைகளும் வந்து வீடுமனுக்கு உதவாமுன்னம் போய்க் காப்பீர் என்று சுதக்கிணனையும் சாத்தகியையும் திட்டத்துய்மனையும் அபிமன்னுவையும் சத்திரதேவனையும் கடோற்கசனையும் விராடவேந்தனையும் திருட்டகேதுவையும் நகுல சகாதேவரையும் கைகய வேந்தனையும் காலிங்கவேந்தனையும், சுராட்டிரரையும் சேர சோழ பாண்டியரையும் உள்ளிட்ட அரசர்களையும் வீமனையும் பண்டு வீடுமனாற் பட்டுலர்கின்ற சிகண்டியை முன்னீடாகக் கொண்டு போமின் என்று விடுக்க, கண்ணனும் வடிக் கயிறும் முட்கோலும் வழுவாமற் பிடித்துச் செறி குளம்பின் வெண்குதிரைகளை முடுக ஏவிப் பரிச்செலவு குறிக் கொடுத்துப் பொன் மணித் தேரை முடுகவிட்டுச் சேருமளவில் சிகண்டி சென்று யாது செய்ய வீடுமன் யாது செய்தானோ வெனில் : (கசு௦)

644. திண்ணேன் சிலைகுனித்துச் சென்ற சிகண்டியுமே
[1]யெண்ணேன் றெதிர்வாளி யேவுதலும்—கன்னலெலாம்
வண்டருந்தும் [2]பூம்போதும்பர் வைகுந் திருநாடன்
[3]கண்டறிந்து வைத்தான் கணை.

இவ்வகை சென்று தாக்கின சிகண்டியைக் கண்டு முறுவலித்துத் தன் படைக்கருவி போட்டுப் படைக்கலம் இலனாய் நின்றான் வீடுமன் : அப்பொழுது, (கசுக)

645. நிகரடும்போர் மீளி நிராயுதனாய் நிற்பப்
புகரடும்போர் போர்க்கோல வேங்கை—யுகிரோடிந்து
பல்லின்றி நின்றதன்மேற் பாய்ந்தனபோற் பட்டனவே
வில்லின்றி நின்றான் மிசை.

எ - து. வீடுமன் மேற் சில கணைத்துளிகளை விட்டான் சிகண்டி. அவ்வளவில் அருச்சுனன் காண்டீபஞ் சால வளைய யாது நிகழ்ந்ததோ வெனில் : (கசுஉ)

---

644. பொதும்பர் – சோலை.

645. மீளி – வீரன். நிகர் - ஒப்பு
புகர் - குற்றம். உகிர் - நகம். மிசை - மேல்.

பா. வே : 1. யெண்ணின். 2. பூம்பொதும்பின்.
3. கண்டனுங்கி.

646. திகழு மொளிமான்மேற் சென்று சிகண்டி
பகழி யொடுவிரவிப் பாயப்—பகழியினுற்
றீயெரியா விண்ணெரியாத் தேவர்கோன் காவெல்லாங்
காயெரியா வீழ்த்தான் கணை.

இவ்வகை சிகண்டியால் விடப்பட்ட சரபடலங்களுடன் அருச்சுனன் சிறிய கணைகள் விரவிப் பாய்தலின் உருவிப்போகின்ற அம்பைப் பிடித்துப் பார்த்துச் சிகண்டியை நோக்கி யாது சொன்னான் வீடுமன் : (கசுங)

647. மூங்கி லிடைப்பிறந்த மொய்யெரித்தீத் தான்பிறந்த
தூங்கு படரதனைச் சுட்டாற்போல்—வீங்கெழிற்றே
ளென்மகனம் [1]பேன்னைப் படுக்குமே பாஞ்சாலன்
வன்மகனம் பேறுதேன் மார்பு.

எ - து. மூங்கிலிடைப்பிறந்த தீ மூங்கிலைத் தானே சுட்டாற் போல என் மகன் காண்டீபத்தால் கடாவப்பட்ட சரபடலங்கள் என்னைச் சுடுகின்றனவே யொழிய சிகண்டி நின்றால் விடப்பட்ட சரங்கள் என்னைச் சிறிதும் செய்யவொண்ணுமோ வென்று சொல்லுமளவில் மலையைச் சூழ்ந்துகொண்டு மைம்முகில்கள் பொழிந்தாற்போல எல்லாவீரர்களும் சூழ்ந்து கணை மழை சொரிய லுற்றார் அப்பொழுது படை வளைந்து சூழ்தலையும் வீடுமன் படைக்கலன் இலனாயிருத்தலையுங் கண்டு துச்சாதனன் யாது செய்தானோ வெனில்; (கசுச)

648. சென்றேன்று சிகண்டி தேர்மேலு மார்மேலுங்
குன்றேந்து சோலைத் குருநாட—னின்றேந்து
வில்லரசின் வன்னாணின் வெவ்வாளி மேற்கொண்டு
துல்லரச னெய்தான் சுளிந்து.

துச்சாதனன் முனிந்து சிகண்டி மார்பில் உருவ ஒரு சிறிய கணை தொடுத்துவிட்டு ஆங்கவன் வில்லும் தேரும் கொடியும்

---

646. எரியா - எரிய.

647. தூங்கு படர் - வாடிய பண்ணை. படுக்கும் - தைக்கும்.

648. வல் + நாண் = வன்னாண். வெவ்வாளி - சுடுகணை. துல்லரசன் - துச்சாதனன்.

பா. வே: 1. பென்னை யடுகின்ற; பென்னைப் படுக்கிற்கும்,

அழிய எய்து அவன் தளர்ந்து போமளவில் வீடுமன் பெருமானத்தனாய் யாது செய்தான் ; (கசுரு)

649. குலக்குதிரை மேலுங் கொடிக்குரங்கின் மேலும்
வேலற்கரிய தேர்ப்பாகன் மேலு—மலேத்த
கடுஞ்சிலையான் றன்மேலுங் காய்கணைக ளேர்த்தா
னெடுஞ்சிலைநாண் [1]காலலேப்ப நின்று.

எ - து. சிகண்டி புறகிட்டோடுதலும் வீடுமனும் கதுமெனத் தன்னுடைய வெஞ்சிலையை எடுத்துக்கொண்டு குரக்குக் கொடி மேலும், வெண்குதிரைகள் மேலும், கண்ணன் மேலும் அருச்சுனன் மேலும் அவனைச் சூழ்ந்து நின்ற வீரர்கள் மேலும் அம்பு மழை பொழியக் காண்டீவத்தால் கடாவப்பட்ட கணைகளாலும் காவல் நில்லாது கவசம் பிளப்புண்டுருவிப் போகலின் இது கண்டு யாது செய்தான் அருச்சுனன் : (கசுசு)

650. பரிகடவிப் போர்நின்ற பன்மணித்தேர்ப் பாகன்
[2]றிருவுடலிற் செஞ்சோரி நோக்கிப்—புருவக்
கருங்கடையும் [3]வில்லு மறவளைத்தான் றூதை
யருங்கொடியும் வில்லு மற.

வீமன் சினத் தீயால் சிலைவட்டங் கடந்து புக்கு வீடுமனைக் காக்கமாட்டாது நின்ற துரியோதனனும் துரோணனும் அசுவத்தாமனும் கிருதவர்மனும் கண்டு நிற்கவே, தேர்பூண்ட புரவிகளை நிலத்து வீழ்த்துத் தலைமறையும் போர்வெஞ் சிலையும் அறுத்து வீழ்த்துப் பெருமுழக்கஞ் செய்தான் அருச்சுனன். அப்பொழுது, (கசுஎ)

651. வெவ்வாளி யைஞ்நூற [4]விண்ணுடன் சேய்கோண்டு
நெய்வாளி தானெங்கு நேர்நிறுத்திச்—[5]சேவ்வாளிச்

649. தூர்த்தான் – ஏவினான்

650. அற - முழுமையாக. சோரி – குருதி.

651. விண்ணுடன் - தேவர்கோன். நெய்வாளி – நெய்தடவப் பெற்ற அம்பு. 'சேகண்டி' என்பது சிகண்டியின்விற்பெயர்.

பா. வே : 1. காதலேப்ப. 2. றிருவுடம்பிற்.
3. வில்லும் வளைத்தான்றூ தாதை.
4. வில்லாளன்றான் கண்டு.
5. செவ்வாளி, சேகண்டி யென்னச் சிலேக்குச்.

சேய்கண்டி யென்னுஞ் சிலைக்குச் சரங்கொண்டு
சீகண்டி வந்தான் றெளிந்து.

எ - து. சிகண்டி மெய்தெளிந்து அடற்றேர் ஓட்டி வந்து வீடுமனைப் படைக்கலம் இலனாக்கினான். அவ்வளவில் அருச்சுனன் கணைமழை பொழிய வீடுமனும் ஆங்கதனை வெல்லவொண்ணாமை அறிந்து தன்னருகு பிரியாமல் நின்ற துரியோதனன் உடன் பிறந்தாருள் துச்சாதனனை நோக்கி யாது சொன்னான் வீடுமன்: (கசுஅ)

652. இதுவேனக்குக் கால மிருவரையும் வெல்லு
மதுவேனக்கிங் காவதோன் றில்லை—விதிநினைக்கி
லாந்தனைப்போ துண்டாகி லைவீருஞ் சென்றுங்கள்
வேந்தனைப்போர் காமின் விரைந்து.

எ - து. கண்ணன் அருச்சுனராவார் நர நாராயணர் ஆதலால் இருவரையும் மூவுலகுங் கூடிவரினும், காலன் கயிறு சூடி வரினும் யாவராலும் வெல்ல அரிதென்றும், எனக்கின்று அருச்சுனன் கையில் அடுசரங்களால் இறப்புக் கண்டீர்; இதற்கு ஐயமில்லை என்றும் இதற்கு இறையுஞ் சோராது துரியோதனனுக்குப் பெருந்தீமை புகுந்து நின்ற அதனைச் சென்று காப்பீர் என்றும் மற்றவரையும் விடுத்துப் போக்கி, கண்ணன் திருவடிகளை உளங்கொண்டு முண்முருங்கை மலர்ந்தாற் போலப் பல விடங்களும் குருதி பொழிய அதற்குச் சிறிதும் துளங்காது சீற்ற மெய்தி அருச்சுனன் மேற் சென்று யாது செய்தான் வீடுமன்: (கசுகூ)

653. குயில்பாயுஞ் சோலைக் குருநாட னெய்த
வயில்வாயம் பாங்கழிய [1]வெய்தப்—புயல்பாயும்
பொற்குன்ற நின்றதுபோ னின்று னதற்கிறையு
[2]முட்குன்று மன்ன னுடன்று.

---

652. ஆந்தனைப்போது - ஆகும் பொழுது. ஐவீர் என்றது வீடுமனைக் காத்து நின்ற துச்சாதனன் முதலிய ஐந்து பேர்களை. வேந்தன் - துரியோதனன்.

653. செறிவும் தண்மையும் அமைந்த சோலையில் தான் 'குயில் தங்கும் ஆதலால் 'குயில் பாயும் சோலை' என்றது சோலைவளம் கூறிய வாறு. "வெயில் நுழைபறியாக் குயில் நுழை பொதும்பர்" மணிமேகலை. அயில்+வாய்+அம்பு+ஆங்கு+அழிய - அயில்வாயம் பாங்கழிய. அயில் - கூர்மை. இறையும் - சிறிதும். உட்குன்று-அசையாத.

பா. வே: 1. வெய்து. 2. முற்குன்ற மன்னனுடன்று.

ஏ - து. அருச்சுனனால் விடப்பட்ட அம்புகள் உடலெங்கும் உருவிப் போதலும் அறிவும் நினைவுங் கெடாது நின்ற கங்கை மகனைக் கண்டு களித்து மலர் மழை பொழிந்திட்டார்கள் தேவர்கள். அவ்விடத்து, (கஎ0)

654. சென்றன புண்டிறந்து சென்றன செல்லாது
[1]நின்ற சரமென்னு நீடணைமேற்—[2]சென்றோர்
வெரிநோந்த யானை யது வீழ்வதுபோல் வீழ்ந்தா
னிரிதந்த வேந்த ரினம்.

ஏ - து. அருச்சுனன் எய்த வெஞ்சரங்கள் மார்பு கிழித்து உட்புக மயங்கி ஆற்றல் அழிந்து மதயானை விழுந்தாற்போல விழுந்தான் அருந்தேரரில் முன்றோன்றல் வீடுமன் என்றவாறு. இவ்வாறு ஆற்றல் அழிந்து விழுமளவில் பெருவிரைவுடன் போகின்ற உயிர் வளியைப் பிடித்து யாது சொன்னான் வீடுமன் : (கஎக)

655. ஒற்றைத் திகிரி யோளியோன் வடக்கெய்தி
மற்றை யுதையம் வருமளவுஞ்—சுற்றித்
[3]துயிலொழிய வென்றே னுயிர்துறவே னென்றம்
பயிலணைமேல் வீழ்ந்தா னலந்து.

ஞாயிறு வடதிசைச் செலவு வருமளவும் உறக்கமும் வாராமல் உயிரையும் நிலைபெறுத்தித் தருவாயாக என்று கண்ணன் திருவடிகளை நினைந்து அம்புப் படுக்கையில் கிடந்தான் பெருந் தேராட்களில் முன்றோன்றல் வீடுமனைக் கருதுவது. இவ்வகை வீடுமன் ஆற்றல் அழிந்து வீழ்ந்தமை கண்டு பாண்டவர் படை ஆர்த்து எழுந்தது. அதிர்ந்திட்டது சங்க படலம். வீரத்திரு பொலிந்து தோன்றினள் ஆங்கு. அப்பொழுது துரியோதனன் படை அவிந்து அடங்கிற்று அது கண்டு அமரர் திரளும்

---

654. நீடு அணை – உயர்ந்த படுக்கை. திறந்து சென்றன - உருவிச்சென்றன. வெரிநொந்த - வெரிந்+நொந்த. வெரிந் - முதுகு.

655. பயில் அணை - அம்புகள் செறிந்த அணை; அம்புப்படுக்கை.

பா. வே : 1. நின்றன வாளியெனும். 2. சென்று, வெருவிலா யாளியது வீழ்வதுபோல் வீழ்ந்தா னெரிந்ததே வேந்தர்குழாம்.

3. துயில்வொழிய வேன்றென் னுயிர்.

வியப்புற்றுத் துரியோதனன் இனி நாடும் இழந்தான். வாய்மையாளன் தருமன் ஆட்சி தலைக்கொண்டான் எனக் கழறி உண்மகிழ்ந்தனர். அவ்வளவில் கதிரோன் மறையும் மலையின் கட்சேறும் அளவில் வீடுமன் ஒளியெல்லாம் ஓரொளியாய் மன்னர் கண்டு நிற்கவே வானத் தெழுந்து போகாநின்றது. அவ்வளவில் ஆண்டொழில் மறந்த வீடுமனைப் பாண்டவர் சென்று கைக் கொண்டு அடிமலர் தொழுது நீங்கித் தங்கள் படையைச் சுருக்குவித்து நின்றார். அவ்வளவில் துரியோதனன் முதலானவர் யாது செய்தாரோ வெனில் : (௧௭௨)

656. தம்பியருந் தானும் புகுந்து தலைப்பெய்திங்
கம்பி னணைமேற் கிடந்தானைச்—செம்போ
னடிமேலே வீழ்ந்தழுதா னுயிரவாய் நாகங்
கொடிமேல் வலனுயர்த்த கோ.

அன்றியும், (௧௭௩)

657. என்னுடைய முதாதா யெம்பிமார் தந்துணைவா
மண்ணிடையின் மன்னவர்கள் வாழ்வேந்தே— [[1]மின்னிடையிற்
பொன்னொடு கொள்ளப் புரிந்தனையோ போற்றலரா
வென்னொடு [2]மெங்களையும் விட்டு.

அன்றியும், (௧௭௪)

658. பாண்டவர்தஞ் சேனையெனுங் [3]காடு பரிவுடனே
மூண்டமரில் வீழ முனைசெய்து—மாண்டனையோ
மாயத்தான் மாலோன் மதியினாற் போர்புரிந்த
தாயத்தார் முன்னே தளர்ந்து.

என்றிவ்வகையால் அரற்றா நின்றார் துரியோதனனும் தம்பிமார்களுமாகக் கருதுவது. அப்பொழுது வீடுமன் பாடுந் தங்கள்படை புறகிட்டமையுங் கேட்டுக் கதுமென வெழுந்து வீழ்ந்து காலாளாய்ப் போந்து தன்முடிமேன் மலர்க்கை வைத்து அப்பணையிற் கிடந்த வீடுமனைக் கண்டு மற்றவன் அடியில் வீழ்ந்து யாது சொல்லி அரற்றினன் கன்னன் : (௧௭௫)

---

657. புரிந்தனையோ - கருதினையோ. போற்றலர் - பகைவர்.

பா. வே : 1. விண்ணிடையிற். 2. மெங்களையு மிட்டு.
3. காட்டைப் பரிவுடனே.

659. தேன்ருெடையல் சோரத்தன் ருேமலர்க்க ணீர்சோர
வேந்த னடிமேல் விழுந்தழுதான்—சார்ந்துடையான்
ருேர்வேந்த ரஞ்சச் சினநாக முன்னுயர்த்த
போர்வேந்தன் ருேழன் புகுந்து.

எ - து. கன்னன் புகுந்து அப்பணையிற் கிடந்த பாட்டன் திருவடிகளைத் தன் கண்ணீராற் கழுவி, எம்பெருமானே யென்னால் முன்னஞ் சொல்லப்பட்ட தகவில்லாச் சொல்லெல்லாம் பொறுத் தருள்வாயாக என்று புகழ்ந்துரைத்துப் பின்னும் யாது சொன்னான் கன்னன் : (௬௭௬)

660. வேர்த்து நடுங்கி விரைவெய்திச் சேங்கமலம்
பூத்த திருவடிமேற் புக்கிறைஞ்சிப்—பேர்த்து
மடியேனன் செய்த வனுசார மெல்லாம்
[1]போடியாமே கோவே போறு.

இவ்வகை பேசிக் கன்னன் அரற்றக் கண்டு சிறிதுணர் வெய்தி அருள் தோன்றி யாது சொன்னான் வீடுமன் : (௬௭௭)

661. உன்னு லோகுகுற் றமுமில்லை யுண்டேபோ
லேன்னாலே வந்தனவேன் றெண்ணேண்ணு—கன்னு
வதுசோல்லத் தக்கனையா லாதியான் செய்த
விதி [2]கண்டா யென்முன் விரைந்து.

எ - து. கன்னன் மேல் அருள் எய்தி அவன் தலைமேல் தன் கைவைத்து மற்றவனைத் தழுவிக்கொண்டு உன்னாலும் என்னாலும் வந்த தொன்றில்லை கண்டாய், பாரதமெல்லாம் கண்ணன் பெருமாயையால் செய்யப்பட்ட தொழில் கண்டாய் என்றும், உன்னையும் என்னையும் பகைபண்ணிச் செய்தானும் அவனே கண்டாய் அல்லது நீ என் கன்றே போன்றாய்; அது நிற்க, நின்கையில் பெரும்பாம்பின் மிகு கொடுமையான விரைவாலும் அதன் செயல்திறத்தாலும் நின்னுடைய பேராற்றலாலும்

---

660. அனுசாரம் - முறையிலாச்செயல். பொடியாமே – நினையாமல்.

661. அண் ஒண்ணு - பகைவர் நெருங்க மாட்டாத. "நின் குற்ற மன்று; என் விதிக்குற்றம்."

பா. வே : 1. பொடியாதே. 2 காணு.

உண்டாகிய மகிழ்ச்சிகளை மூவுலகில் யாவரும் தகைய வல்ல ஆற்றலுடையாரில்லை; நின்னை யான் அருந்தேரரில் நிறுத்தாமல் அரைத்தேரரில் நிறுத்தினமையும் நீ பொறுத்தி என்றும் நின்னாற் செய்யத் தக்கன சொல்லத் தக்கன வெல்லாம் யான் மனத்திற் கொள்ளேன் என்றும் இவ்வகை யெல்லாம் பேசி இனியுன் ஆற்றலெல்லாங் கொண்டு பகைவென்று துரியோதன னுக்கு நாடு கொடுப்பாயாக என்றுரைத்துப் பின்னுந் துரியோ தனனை நோக்கி யாது சொன்னான் வீடுமன்: (௧எஅ)

662. அந்தார் விசய னமர்க்களத்தில் யான்கிடப்பத்
தந்தா னெனக்கோர் சரசயன—முந்து
கோலைக்கணையா மால்யானைக் கோற்றவனே மற்றென்
றலைக்கணையாய் நிற்பதுநீ தா.

எ - து. அருச்சுனனால் தரப்பட்ட சரவணைமேல் கிடக்கின் றேனுக்குத் தலைக்கணை யொன்றில்லாது நிலைதளர்ந்து உறக்க மில்லாதேனுக்கு நீயொரு தலைக்கணை தருவாயாக என்னக் கேட்டு யாது செய்தான் துரியோதனன்: (௧எ௯)

663. மூவே ழிருபத் தோருகா [1]லரசரேலா
மோவாது கொன்றேமஞ் செய்தானை—மேவார்
பணைதோளார் தாளாண்மை பட்டதே யென்று
வணைகொண்டு காட்டினா னங்கு.

இவ்வகை சொல்லி மிகமிக மெதுவாய் இருப்பதொரு பஞ்சணை கொண்டுவந்து துரியோதனன் கொடுப்பக் கண்டு துளங்கா மணிமுடி துளக்கி முறுவலித்து மற்றதனைப் பழித்துத் துரியோதனனை நோக்கி யாது சொன்னான் வீடுமன்: (௧அ0)

664. மங்குன் மதிதழுவம் வானுடர் கோமானே
யிங்கு நமக்கீ தியல்பல்ல—விங்குத்
தலைக்கணையுந் தார்விசயன் றன்றருமே யென்றான்
கோலைக்களிறே றன்னான் குறித்து.

---

662. சரசயனம்–அம்புப்படுக்கை. கொற்றவன்–துரியோதனன்.

663. கொன்றேன் - பரசுராமன். ஓமம் – வேள்வி. மேவார் - பகைவர். ஓவாது - ஒழியாது. பணை - திரண்ட.

பா. வே: 1. லரசையெலா.

எ - து. நீ தந்த பஞ்சணை போர்க்களத்தில் அப்பணைக் கிடக்கின்றேமுக்கு முறையல்ல கண்டாய் என்று, அதனைத் தவிர்த்துத் துரியோதனனை நோக்கிப் பலகாலும் நகையரும்பி எமக்குடற்கணை தந்த அருச்சுனன் தானே தலைக்கணையுந் தெரிந்து தருங்காண் என்று எல்லா வீரரையும் கன்னனையும் அகற்றிப் போர் வீரரைப் பெறாது தன்னினம் பிரிந்த வீர அரிமாப் போலத் தென்பக்கத்து நின்ற அருச்சுனனை நோக்குதலின், மற்றவன் கருத்தறிந்து யாது செய்தான் அருச்சுனன் : (௧௮௩)

665 வாங்கு புனற்கங்கை வாழ்வேந்தர் கோமானே
யீங்கிதுகொள் கென்றங் கிருவாளி—யோங்கி
வடித்தாரை வாள்விசயன் மார்புறவே வாங்கி
விடுத்தான் சிரமேல் விசைத்து.

எ - து. அருச்சுனன் மிகுவிரைவுடன் எழுந்து காண்டீவத்தை வன்மையோடும் வளைத்துச் சிறிய அம்பினைத் தொடுத்து நிற்றலும் அதுகண்டு வீடுமன் பெருந்துயர் தீர்ந்து துரியோதனனையும் உடன்பிறந்தார்களையும் அங்கநாடன் கன்னனையும் நோக்கி யாது சொன்னான் வீடுமன் : (௧௮௨)

666. வெங்கண் விடநாக மேலுயர்த்த கோமானே
யங்கர் பிரானுக் களிவாழி—கங்கை
புடையெல்லாஞ் சூழ்ந்த புனனாடா மற்றுன்
படையெல்லாங் காப்பன் பரிந்து.

எ - து. கன்னனைப் படைத்தலைமை யாக்கி உன் பெரும் படையையும் உன் தம்பிமார்களையும் உன்னையும் காத்துக்கொண்டு பகைவென்று தருவனாகப் பணித்து மற்றவனாற் றரப்பட்ட நாட்டையும் ஆள்வாயாக என்று கூறிக் கன்னனைக் கைப் பிடித்துத் துரியோதனனுக்குத் துயர் புகுதாமல் காத்து நாட்டினைக் கொடுப்பாயாக என்று மற்று அவனையும் உடன்படு வித்துத் துரியோதனன் முதலானவர்களுக்கும் கன்னன் உள் ளிட்ட எல்லா வீரருக்கும் விடை கொடுத்துப் போக்கித் தருமனை அழைத்து நீ செய்த அறத்தால் உனக்குக் கண்ணனை வலவனாகப் பெற்றாய். அவனால் இன்னம் உங்கட்கு வெற்றியும் ஆட்சிப் பேறுந் தரப்படுங் கண்டாய், என்றுரைத்துப் பின்னும் இனி நீ

---

666. அளி வாழி - படைத்தலைவனுக்கு வழங்கும் தானைத் விரலாழியைக் கன்னனுக்கு வழங்கு.

கதிரோன் எழும்பொழுது வந்து வடசெலவு பற்றுமளவும் உடனின்று காத்துப் பின்பு விடை கொள்வாயாக என்று மற்றவனுக்கு விடைகொடுத்து அம்புகளால் மயக்குற்று மயங்கும் அளவில், எல்லா உயிர்களுக்கும் படைப்பு காப்பு அழிப்பும் அசைவன அசையாதனவும் தானாகிப் பெருமாயை பண்ணுகின்ற கண்ணன் திருவடித்தாமரைகளை நினைந்து கிடந்தான். அவ் வளவில் சகாதேவனால் சமைக்கப்பட்ட தொரு பெருங்கோயில். அவ்விடத்து, (கஅ௩)

667. வெற்றிக் களம்பட்ட வேல்வேந்தர் மூதாதை
யப்புச் [1]சயனத் தசைந்தானால்—வெற்பி
லிருந்தான் சுடரோ னொளியிரண்டா மென்றே
[2]புரிந்தான்றண் ணங்கதிரப் போது.

எ - து. மாயிரு சுடரை மலைமறைத்திடுதலின் எத்திசையும் இருள் படைத்து மத்தளம் குழல் யாழ் தாள ஒலிகளோடு வாயரற்றாமல் மனமருட்டிப் பல்கோடி அப்பணைக் கிடந்த வீடுமனைக் கண்டு அகத்தியன், புலத்தியன், காசிபன், கௌதமன், விசுவாமித்திரன், வசிட்டன், நாரதன் உள்ளிட்ட தேவரினங்கள் வந்து மலர்மழை பொழிந்தார் என்றவாறு. அவ்வளவில் சீரிய வானூர்திகொண்டு தேவகன்னிகளும் தேவர்களும் எதிர்கொள்ள இரவின் எஞ்சியபொழுது நீங்கிக் கதிரோன் எழும் காலம் கண்ட அளவில் சீரிய ஆற்றலால் உண்ணின்ற உயிர்க்காற்றும் போய்த் தேவர்களோடும் விண்ணுலகம் புறப்பட்டான் வீடுமன் என்றவாறு. அப்பொழுது தேவர்களுடன் யாதருளிச் செய்தான் கண்ணன் : (கஅச)

668. மாமுனிவன் சாபத்தால் வாளமரிற் பட்டதனைக்
கோமுனிவர்க் குற்றுரைத்தான் கோற்பாகன்—நாமலரின்
மட்டுவாழ் பூந்தெரியல் வாழ்வேந்தர் மூதாதை
பட்டவா றெல்லாம் பரிந்து.

எ - து. முற்பிறப்பில் இவன் எண்மர் வசுக்களிலே யாதலால் வசிட்ட மாமுனியொரு காரணத்தினால் மாணியாய்ப்

667. அப்பு – அம்பு.

668. மாமுனிவர் – வசிட்டர். கோமுனிவர் – வானோர். மட்டு - தேன்.

பா. வே : 1. சரத்தங் கசைந்தானை.
2. புரிந்தான் கதிரோனப்போது.

பிறப்பாயாக என்று தீமொழியுரைத்தான் ஆதலால் அவன் தீமொழி பெற்றுத் தப்பாமல் ஆயிரம் ஆண்டும் மணஞ்செய்தலின்றிப் போயினான் வீடுமன் என்று பாண்டவர்களுக்கும் தேவர்களுக்கும் அருளிச் செய்தலும், கவலும் அளவில் இரண்டு படையும் கைவாங்கித் தம் பாடிவீடு புக்காராகக் கருதுவது. இப்பால், பட்டுப் படாத படையுடன் போய்த் துரியோதனனும் தன் கோயில் புகுந்த பின்பு வீடுமன் பாடும் மற்றுங்குப்பட்ட படைவெள்ளமும் சஞ்சயன் சொல்லக்கேட்டு மிகத் துயரெய்தி யாது சொல்லி அரற்றினான் திருதராட்டிரன் : (கஅ௫)

669. யாயாகி யெங்ஙையுமா யென்னையு மென்
மக்களையு மெடுத்துநாட்டி
யோயாது நீநிற்க வுரியதோ ரிவ்விடத்தே
யுலந்தா யம்மா
தீயானை யென்மகனைச் செருக்களத்தே யின்றுநீ
தமிய னாக்கி
மீகாம னில்லாத மரக்கலந்தா னாக்கினாய்
வேந்த ரேறே.

அன்றியும், (கஅ௬)

670. மண்ணெல்லா முலேழுகான் மன்களைகட் டரசாண்ட
[1]மன்னர் கோவை
விண்ணுள்ளார் வியந்தேத்த மெய்விரதங் குன்றமல்
வென்ற கோவே
யெண்ணில்லா வன்னெஞ்சத் தென்மகனுந் தம்பியரு
மென்னைப் போலக்
கண்ணில்லா ராக்குவித்தா யென் [2]செய்கேனினி நானுங்
கடைப்பட் டேனே.

அன்றியும், (கஅஎ)

669. யாய் - தாய். மீகாமன் – மாலுமி.

பா. வே: 1. மறையோற் செற்றாய், விண்ணுளார் மனமகிழ மெய்.
2. செய்கேமினி.

671. ஆடகப் பொருப்பு விற்கை யந்தமில் பவளக் குன்றிற்
பாடகப் பாதப் பச்சைப் பசுங்கொடி படர வெய்தா
னேடகப் பகழி தீண்டா யாக்கையெங் கோவே பேடி
சூடகச் செங்கை யம்பிற் றுயில்வதோன் றறிந்தி லேனே.

ஏ - து. ஆயிரம் ஆண்டு மாணி நிலை கொண்டு தேவர் முனிவரால் வணங்கப்பட்டு ஆங்கு அவராலும் மறையோராலும் வீடுமன் என்று திருப்பெயர் பூண்டு வீற்றிருந்து அரசாண்டு என் மக்கள் நூற்றுவரையும் பதினறியாண்டு நிரம்புமளவும் மார்பகத்தே வளர்த்தாய். எழுநூற்றெண்பத்து மூன்று யாண்டும் உனைப்பிரிந்தறியாத என்மக்கள் இன்று பிரிந்தார்கள்; அது நல்ல பருவத்தில் தாவக் கொழு கொம்பில்லாத கொடி போலவும் தலைவன் இல்லாத படைபோலவும் ஆம். என்னைப் போல் என்மக்களையும் கண்ணில்லாதாராக்கிப போயினுய் என்றிவ்வகை, அரற்று நின்றானைக் கண்டு வேதவியாதப் பெருமுனியு மற்றுமுள்ள பெரறிஞரில் துரோணனும் புகுந்து பல வரலாறும் எடுத்துரைத்துத் தேற்றத் தேறினன் திருத ராட்டிரன் என்றவாறு. அப்பொழுது துரியோதனன் யாது செய்தானே வெனில்: (௬௭௧)

672. நெய்விளக்கு முன்னேறிய [1]நேர்வேந்தர் தம்முன்னே
கைவிளக்கு மெங்கும் கலந்தெரிய—மெய்விளக்கு
மாமண் டபமடைந்தார் மன்னரெல்லா மப்போது
[2]போர்மண் டபம்புரிந்து போந்து.

இவ்வகை இருந்து மற்றை நாளைக்குத் தன்படைக்குத் தலைவராவார் யாவரோவெனத் தெரிந்து இருபக்கமும் பதினையிரம் விளக்குடன் விளங்காநின்ற குருகுலச் சுற்றமும் கோவீரரும் புடைசூழ அவைக்களத்திருந்து பதினேரா நாளைக்கு நம் பெரும் படையை நடத்தவல்ல தலைவர் யாவர் யாவரோவென வினவி யினிதிருந்த விடத்துத் துரியோதனனை நோக்கி யாது சொன்னான் கன்னன்: (௬௭௨)

---

671. ஆடகம் – பொன். பொருப்பு – மலை. பாடகம் - காலணி. ஏடகம் - பூவிதழ். பேடி – சிகண்டி. சூடகம் - கையணி.

672. போர் மண்டு அபம் - போரினால் உண்டாகிய கேடு.

பா. வே.: 1. நேர் வேந்தன் றன்முன்னே.
2. 'போர்மண் டபப்புரிந்து' என்பது முதற்பதிப்பு.

673\. காவலனே நின்சேனை காக்கக் கடற்கங்கைப்
பாவை மகனும் பணித்தமையாற்—றேவி
தனக்கருள்செய் பாகத்தாய் தாழாமற் காப்பே
னெனக்கருள்செய் யென்று னிசைந்து.

எனக் கேட்டு யாது சொன்னான் துரியோதனன்: (கசுO)

674\. யானாகி நிற்கு மதுவொழிய நீயின்று
சேனா பதிப்பட்டஞ் சேர்த்தினா—லானாக்
கோடைக்கரச னுயுள்ள கொற்றவனே மற்றேன்
படைக் கரச [1]ராரோ பகர்.

இவ்வகை உன்னைப் படைத்தலைவன் ஆக்கினால் அப்பெரும் படைக்குக் காவல் தலைவன் யாரோ வென்று மற்றவனைத் தவிர்த்துப் பின்னும் யாது சொன்னான் துரியோதனன்: (கசுக)

675\. தெய்வப் படையான் சிலைத்தொழிற்கு மூன்றோன்றல்
கவ்வைச் செருக்களத்துக் காறளரான்—[2]றெவ்வுட்கும்
விற்றுனை வேதினை வேத மொருநான்குங்
கற்றனை யேயணிமின் காப்பு.

குடத்துப் பிறந்தான் விற்கலை வல்லான் எல்லாக் கலைகளுக்கும் உரியான் பேரறிஞன் துரோணன் தேவர் அசுரர்க்கும் வெலற் கரியான்: வீர ஆண்டகை; வாய்மையாளன்; அவனைப் படைத் தலைவன் ஆக்கினால் நமக்கும் நம் படைக்கும் ஒரு தீங்கும் வாரா தென்று பின்னும் யாது சொன்னான் துரியோதனன்: (கசுஉ)

676\. கால விறுதிக் கடுங்கதிர்தான் காயெரிதான்
மாலைக் கருங்கடலான் மாருதந்தான்—வேலை
நிலையிறக்க நிற்குமோ நீள்சரங்கோத் தண்ணல்
றலையிறக்கஞ் செய்த பொழுது.

---

675. காறளரான்-கால்+தளரான். தெவ்வுட்கும்-பகையஞ்சும். வேதினை - வேதியனை; துரோணனை.

676. கால இறுதி - ஊழி.

பா. வே: *1. ஞரோ 2. றெவ்வுக்க; றெவ்வுக்கு.*

ஏ - து. ஊழிக் காலத் தீயொடும் ஊழிக் காற்றுக் கிளர்ந்து எல்லாக் கடல்களும் முழங்கி வரம்பிகந்து நிலமுழுதும் செல்லு மளவிலும் குடமுனி கவசம் புகுந்து தூணி யாத்து அடுசிலை வாங்கித் தன் மணி நெடுந் தேர் ஏறி நிற்குமாகில் அவையுந் தடுப் புண்ணும்; அதற் கையமில்லை; அதுவுமன்றி வீம அருச்சுனர் ஆற்றல்களும் அறிந்து மற்றவர்க்குத் தக்க போர் செய்யும். ஆதலால் குருவே நம் பெரும்படையைக் காத்தருளி நமக்குக் கேடு வாராமல் காத்து நாடும் தருமென நினைந்து மற்றுங்கிருந்த எல்லா வீரர்க்கும் பொருந்த உரைத்துக் கதுமென அப்பொழுது யாது செய்தான் துரியோதனன்: (௧௬௩)

677. [1]தேவா சுரர்போர்க்குத் தேவர்தஞ் சேனைக்குக்
காவல் குமரனைமுன் கட்டுவபோற்—றேவர்
மதிப்பட்ட வாட்டானை வாழ்வேந்தன் சேனா
பதிப்பட்டங் கட்டினான் பார்த்து.

ஏ - து. தேவர் அசுரர் போருக்குத் திருமுருகன் படைத் தலைமை கொண்டாற்போல் தன் பெரும்படைக்குத் தலைவனாகத் துரோணனைக் கட்டினான் துரியோதனன் என்றவாறு. இவ்வகை படைத்தலைமை கட்டி, அற்றை இரவின்கண் கவன்ற உளத் தனாய்ப் படைமன்னரைத் தெரிந்து படைகாவல் அடைத்து மற்றவர்க்கு விடைகொடுத்துப் போக்கித் தானும் கோயிலுட் புகுந்து பத்து நாழிகை பள்ளிகொண்டான் மன்னர் மன்னன் துரியோதனன் என்றவாறு. (௧௬௪)

---

677. குமரன் - முருகன். தேவர் மதிப்பட்ட - தேவர்களாலும் மதிக்கப்பட்ட. வாள் + தானை - வாட்டானை.

பா. வே: 1. தேவசுரர் போருக்குத் தேவர்கடற் சேனைக்குக் காவற் குமரனை.

பத்தாநாட் போர் முற்றும்.

வீடும பருவம் முற்றுப்பெற்றது.

௯. துரோண பருவம்

பதினோராநாட் போர்

கடவுள் வாழ்த்து

678. அண்ட முறநிமிர்ந்த வாமன்றன் சீர்பாதங்
கண்டு தொழுவார் [1]கருத்ததனின்—மிண்டி
யடர்ந்தவினை தீர்த்தங் கதன்பின்னே சொர்க்கந்
[2]தொடர்ந்தடைவார் நெஞ்சே தொழு.

அவ்வளவில், (௧)

679. வேலை [3]யொலியே முழவாக வெண்டிரைகள்
சால வெறிந்தோங்கு [4]சாமரமா—வேலையென
வாதித்த மன்னரெலாம் வாரீ ரெனவழைக்க
வாதித்தன் வந்தெழுந்தா னங்கு.

இவ்வகை அன்று கழித்த மற்றைநாள் கதிர் எழுதல் கண்டு இரண்டு படையும் பண்ணிவந்து போர்க்களம் புகுந்து முன்னைப் படை நிலையில் அணிகட்டா நின்றார். அப்பொழுது செயத்திரதனை யும் கன்னனையும் அசுவத்தாமனையும் சகுனி சல்லியரையும் உள்ளிட்டார் எண்பதினாயிரம் தேராட்களையும் பல பதினாயிரம் காலாள்களையும் வலப்பாகத்தில் நிறுத்தி, காம்போசனையும், மாளுவனையும், குண்டலனையும் உள்ளிட்டார் முப்பதினாயிரம் தேராட்களையும் பல பதினாயிரம் யானை குதிரைகளையும் இடப் பாகத்தில் நிறுத்தி, பூரி பூரிசிரவாவினையும் பிரசிந்தரையும் குலிந் தரையும் சூரசேனரையும் பிரிவிந்தரையும் காலிங்கரையும் வாலாக நிறுத்தி, துரியோதனனையும் தம்பிமார்களையும் பிறநாட்டுக் காலாள் வீரர்களையும் வயிறாக நிறுத்தித்தானும் பல பதினாயிரம் தேராட்களும் படைகாவலாகப் புறப்பட்டுச் சுற்றுமுற்றுங் கட் டமைய நிறுத்தி இவ்வகை 'சகடபத்திரம்' என்னும் அணி வகுத்துத் தூசிமுகத்து மறைக்கொடி விசும்பணுவத் தேர்மிசை

---

678. மிண்டி - நெருங்கி.

679. வேலை - கடல். வேலை என வாதித்த – கடமை செய்யத் துடித்து வருந்திக் கொண்டிருந்த.

பா. வே: 1. கழலதனின் மண்டின். 2. தொடர்ந்தடைவாய். 3. யொலிகண். 4. சாமரையா.

நின்றான் துரோணன் என்றவாறு. இவ்வகைநின்ற சேனையையும், ஆசிரியனால் வகுக்கப்பட்ட படைநிலையையுங் கண்டு வானத்தே நின்ற தேவர்கள் யாது சொன்னாரோ வெனில்; (உ)

680. மாக்கோ புரமிழந்த மாமதிலும் வெண்டிங்கள்
போக்கோவு நீள்விசும்பும் போன்றதே—நோக்கின்
மூனைக்கொடித்தேர் மன்னரேலா முன்னின்று வெல்லும்
பனைக்கொடித்தே ரில்லாப் படை.

எ - து. கொடு முடியில்லாத மதிலும் திங்கள் உலாவாத விசும்பும் போன்றது வீடுமன் இல்லாப் படைநிலை என்றவாறு. இவ்வகை நின்ற அளவில் பாண்டவர் படையை அன்றில் என்னும் அணிவகுத்து நின்றான் திட்டத் துய்மனாகக் கருதுவது. அப்பொழுது இரண்டு படையுந் தலைடபெய்து தாக்கித் தேருந் தேருந் திளைத்தன; மாவும் மாவும் மயக்குற்றன; களிறுங் களிறுங் கை வைத்தன; வாளும் வாளுங் வகை தெரிந்தன; சரபடலங்கள் திசைமுகங்களை மறைத்திட்டன; தூளிபடலம் விசும்பு போர்த்தது; எல்லாப் படைக்கலங்களும் எதிரெதிர் மலைந்து சீறிப் பொறிசிந்த இரண்டு படையும் வற்றா நின்ற தென்றவாறு. ஒருபால், (௩)

681. சோமகருஞ் சிஞ்சையருஞ் சூழ்ந்து துரோணன்றன்
கோமகனைச் சென்று குறுகினார்—கோமுனையின்
[1]மாதர்க் கமலத்து மாமறையோன் கைவார
வேதக் குலக்கோடியான் மேல்.

இவ்வகை திட்டத் துய்மன் புகுந்து துரோணனையும் அசுவத்தாமனையும் வளைத்து மூடித் திளைத்து ஆர்த்தான். அப்பொழுது யாது செய்தான் துரோணன்: (௪)

682. சென்றேறு பாஞ்சாலர் தேர்மேலு மார்மேலுங்
குன்றேறு [2]செங்கணவிற் கோத்தேவி—நன்றேறி

---

680. போக்கோவு - போக்கொழிந்த. பனைக்கொடித்தேரில்லாப் படை - வீடுமன் படை.

681. மாதர் - அழகு; விருப்பம். கோமுனை - வானுலகு. மாமறையோன் - நான்முகன். கைவார - வழிவந்த.

பா வே: 1. மாதக்க வில்லதனின் மாமறையோர்; மாதிக் கமலத்து மாமறையோ.

2. செங்கட்குயவரிபோ - லன்றேறி

வுல்லான் [1]விழுத்துகின்ற வாளவுண ராமென்னக்
கொல்லா விழுத்தான் கொதித்து.

இவ்வகை பட்டுப்படாத பாஞ்சாலரையும் படக் கொடுத்துத் திட்டத் துய்மனும் புறகிட்டான் என்றவாறு. அப்பொழுது அசுவத்தாமன் என்ன செய்தான் : (௫)

683. சொரிந்த கணைமாரிச் சோமகரை மூட்டி
யெரிந்த கணைமாரி யேவி—மூரிந்து
மறைத்தலைவன் மற்றந்த வாள்வேந்த ரெல்லாங்
குறைத்தலையாக் கொன்றான் கொதித்து.

அசுவத்தாமனின் சரபடலத்தால் பல பதினாயிரம் சோமகரும் சிஞ்சையரும் பட்டவிந்தாராகக் கருதுவது. ஒருபால், (சு)

684. மாதேவர் தாஞ்சூழ வாள்வேந்தர் காந்தாரர்
சாதேவ னோடு சலித்தார்கண்—மாதேவ
ரென்றாங் கெதிர்ந்தார்க ளெய்தார் கணைமாரி
சென்றாங் [2]கெரித்தார் செரு.

எ - து. *சகுனிக்கும் சகாதேவனுக்கும் பெரும்போர் விளைந்திட்டது. அப்பொழுது சகுனியை யாது செய்தான் சகாதேவன் :* (௭)

685. ஒருகணையாற் பாக னுயிர்வவ்வி நான்கு
தெரிகணையாற் றேர்சிதைய நூறி—யிருகணையான்
மேகத் தனிக்கொடியை மேனிலத்தில் வீழ்த்தவன்ற
னாகத் தழுத்தினா னங்கு.

எ - து. *சகாதேவனுற்றேரும் சிலையும் அழிப்புண்டு நிலத்தனைத் தண்டு பிடித்தோடுதலுஞ் சகுனியோடு சகாதேவனும்*

---

682. வல்லான் - முருகன். அவுணர் - அசுரர். கொல்லா விழுத்தான் - கொன்று வீழ்த்தினான்.

683. மூரிந்து - வளைந்து.

684. சலித்தார் - இளைத்தார். காந்தாரன் - சகுனி.

685. நூறி - அழித்து. ஆகம் - மார்பு.

பா. வே : *1. வதிக்கின்ற. 2. கெதிர்ந்தார்.*

தண்டேந்திய கையனாய்த் தேர்மிசை இழியப் பாய்ந்து மேற் சென்றி யாது செய்தான் சகாதேவன் : (அ)

686. வலக்கை மணித்தண்டில் வஞ்சகுனி தாக்க
விடக்கைமணித் தண்டுகோடு மோதி—மிடற்கண்
ணுருமனையா [1]னொய்யென் றுயர்புலிபோ லோடிப்
போருமனையார் புக்கார் புரிந்து.

இவ்வகை சகுனியைச் சகாதேவனும் மற்றவனைச் சகுனியும் படைக்கலம் இலனாக்கிக் காலாளாக்கித் துரந்தார்த்துக் கொண்டார் என்றவாறு. ஒருபால், (௯)

687. வென்றி முரசுயர்த்த கோமானு மேவலர்மேற்
கன்று மரவுயர்த்த காவலனுஞ்—சென்றாங்கு
முட்டினார் முட்டி முரசதிர வார்த்தெழுந்து
கிட்டினார் தம்மிற் கிடைத்து.

இவ்வகை தருமனும் துரியோதனனும் தலைப்பெய்து தாக்கினார். அப்பொழுது யாது செய்தான் தருமன் : (௧0)

688. மல்லாருந் திண்டோண் மறமன்னர் தஞ்சேனை
யெல்லா மிரிந்தா ரிறைப்போதில்—[2]வில்லாளாய்ப்
போய்க்கூத்துக் [3]கண்டான் புகுதார் பெருஞ்சேனை
பேய்க்கூத்துக் கண்டான் பெயர்ந்து.

இவ்வகை எதிர்ந்தாரை அவிய நூறிப் பெருந்தானையைக் கை சுருக்குவித்துப் போர்க்கள முழுதும் தானாய்த் திரிகின்ற தருமனைத் தலைப்பெய்து பின்னும் ஒருபால் யாது செய்தான் துரியோதனன் : (௧௧)

689. மாநிரையைப் போக்கி மணித்தேர்கள் பின்செல்லக்
கானிரையைக் காய்களிற்றைக் கைவகுத்துத்—
[தேனிரியாத்

686. மிடல் - வலி. உரும் - இடி. ஒய் - விரைவுக்குறிப்பு.

688. புகுதார் – பகைவர்.

பா. வே : 1. ரெய்யென். 2. வில்லாளர்,
3. கண்டார் புகுந்தார்.

தார்வேந்தர் சூழச் சமுத்திரம்போற் றப்பாமற்
போர்வேந்தைச் சூழ்ந்தான் புரிந்து.

இவ்வகை துரியோதனனும் உடன்பிறந்தார்களும் துரோணன் கிருபன் கன்னன் அசுவத்தாமன் உள்ளிட்டாரும் யானை தேர் குதிரை கருவிக் காலாளாற் தருமனைச் சூழ்ந்துகொண்டு மண்ணும் விண்ணும் தோன்றுவகை சரபடலந் திசை மறைப்ப முடுக்கா நின்றவிடத்து யாது செய்தான் தருமன் : (கஉ)

690. மாற்றப் படைதன்னை வாளமரிற் கொன்றுழக்கிக்
கூற்றப் படைபோலக் கோபித்துத்—தோற்றத்து
மட்டுலாம் [1]பூந்தண்டார் மன்னர்கோன் றேளிரண்டுங்
கட்டினன் பாசத்தாற் காய்ந்து.

இவ்வகை மற்றவனுடன் வந்த போர்வீரர் அனைவரையும் துரந்து தேருஞ் சிலையும் அழித்துப் புறகிடுவித்துத் துரியோதனனை யும் தேருஞ் சிலையும் அழித்து மற்றவன் வலவனையும் புரவி நான் கினையும் கொன்று வீழ்த்துப் படைக்கலனிழக்கச் செய்து பாம்புப் பிணைப்பால் கட்டுவித்து அரிமா முழக்கம் செய்தான் தருமன் என்றவாறு. அப்பொழுது அதுகண்டு யாது செய்தான் துரோணன் : (கங)

691. எட்டுத் திசையு மிரியப் படர்சிறைப்புள்
விட்டுத் தருமன் [2]மிடைந்தோடக்—கிட்டின
னற்றப் படுநாக மன்னவனை யஞ்சலெனு
வெற்றித் துரோணன் வெகுண்டு.

இவ்வகை துரியோதனனைக் கட்டின பாம்புப் பிணைப்பை விடுவிக்க வொரு கலுழன் என்னும் அம்பைத் தொடுத்துவிடக் கண்டு நடுக்கத்தோடிடுக்கண் எய்திப் பாம்புப் பிணைப்பு விட்டோடத் துரியோதனனை மீட்டுக்கொண்டு போர்க்களம் கழியக்கொண்டு

---

689. நிரை - அணிவகுப்பு. கானிரை - காலாட்படை. கை - பக்கம். தேன் இரியா – வண்டு அகலா.

690. பாசம் - நாகபாசம்.

691. சிறைப்புள் - கலுழன்.

பா. வே: 1. தண்டார் சேர். 2. மிறைத்தோடக்.

போயினன் துரோணன் என்றவாறு. அதுகண்டு வீமன் யாது செய்தான் : (கச)

692. அடர்த்த முடிவேந்த ரஞ்சியெங்கு மோட
வெடுத்த மணித்தண்டா லெற்றி—யிடுக்கொருவர்
நில்லாத வண்ண நிரவிக் கொடுசென்றான்
மல்லார்தோள் வீமன் மதித்து.

இவ்வகை எதிர்மலைந்த வேந்தரைச் சிதற நோக்கி அழகிய தண்டாற்றுணிய மோதி மாவொடு மாவடித்துத் தேரொடு தேரெறிந்து களிறொடு களிறு கலக்கி முடியொடு முடியுருட்டித் தலையொடு தலைபுரட்டி மதயானை போலக் களமுழுதும் திரியா நின்றான் வீமன். அப்பொழுது நிலையாற்றா திரிந்திட்டது துரியோதனன் பெரும்படை என்றவாறு. அப்பொழுது, (கரு)

693. ஓங்கு கரைசாய்ந் துடைந்த பெரும்புனலைத்
தாங்கு மலைச்சிறைபோற் றாங்கினா—னாங்குப்
படைவேந்தைக் கண்டுடைந்த பல்படையை யெல்லாங்
கொடைவேந்தன் மத்திரத்தார் கோ.

எ - து. நிலையாற்றா துடைந்திட்ட பார்வேந்தன் படையை மத்திரவேந்தன் சல்லியன் சென்று தாங்கி யெதிர் மலைந்தானொடு நகுலன் வந்து தாக்கப் பெரும்போர் விளைந்திட்டது. அப்பொழுது யாது செய்தான் சல்லியன் : (கசு)

694. கொடியுங் குனிசிலையுங் கோலாளுந் தேரு
மடியும் படிவாளி விட்டா—னொடியின்
மலைசுழன்று [1]வீழ்வதுபோன் மன்னர்நெடுந் தேர்மே
னிலைசுழன்று வீழ்ந்த நிலத்து.

இவ்வகை தன்னுடன் வந்த பார்வேந்தரையும் அவியக் கொடுத்துத் தானும் சல்லியனால் தேரும் சிலையும் அழிப்புண்டு புறகிட்டுப் பின்னும் ஒருபால் ஒருசேமத் தேரும் சேமச் சிலையும் பெற்று வெகுண்டெழுந்து யாது செய்தான் நகுலன் : (கஎ)

---

692. நிரவிக் கொடு - ஒரு சீராய்த்தட்டிக்கொண்டு.

693. சிறை - அணை; தடை.

694. கோலாள் - வில்வீரர். "கொடி, சிலை, ஆள், தேர் வீழ்ந்த"

பா. வே : 1. போவது போல்,

695. ஓரம்பு வில்லின்மே லீரம்பு பாகன்மேற்
கூரம்பு மூன்று குலக்கோடிமேற்—பேரம்பு
மாவின்மே ணண்செய்து மற்றையது மத்திரத்தார்
கோவின்மே லெய்தான் குறித்து.

எ - து. நகுலனால் தேரும் சிலையும் அழிப்புண்டு வலவனையும் புரவி நான்கினையும் மடியக் கொடுத்துக் காலாளாய்ப் புறகிட்டான் சல்லியன் என்றவாறு. ஒருபால் கடோற்கசனுக்கும் பகதத்தனுக்கும் பெரும்போர் விளைந்திட்டது. அப்பொழுது, (க௮)

696. தேர்மேலு மாமேலுந் திண்ணேன் கொடிமேலுங்
கார்மேலு மம்பு கடாவினார்—சீர்பொன்னான்
மின்னுக்கும் பூணார் விறல்வேந்தர் மேன்மாரி
யென்னப் பொழிந்தா ரெதிர்ந்து.

இப்பால், (கக)

697. பொங்கரவ மூன்றுயர்த்த போர்வேந்தன் [1]மைந்தனுட
னங்கரவஞ் செய்தா னழன்றெழலும்—பொங்கும்
புவன மெரிகொளுவப் போர்வாளி தூவி
யிலனு மெதிர்ந்தா னிரைத்து.

துரியோதனன் மைந்தன் இலக்கண குமரனுடன் செயசேனன் சென்று தலைப்பெய்து படைக்கலங்களைப் பொழிந்திட்டாராகக் கருதுவது. ஒருபால், (உ0)

698. தென்னெடுந்தேர் மன்னன் செயத்திரத னுஞ்செம்பொன்
மன்னெடுந்தேர் மாயன் மருகனு—மன்னர்
விடைக்குஞ் செருக்களத்து வில்லோடுவிற் றம்மிற்
புடைக்கும் படிபொருதார் புக்கு.

எ - து. செயத்திரதனுக்கும் அபிமன்னுவுக்கும் பெரும்போர் விளைந்திட்டது. அப்பொழுது தேருஞ் சிலையும் அழிப்புண்டு

---

697. அரவம் – ஒலி; ஆரவாரம்.

698. தென் – அழகு. மருகன் - அபிமன்னு. விடைக்கும் - செருக்கி எழும்.

பா. பே: 1. செம்மலுட,

தண்டேந்திய கையனுய்த் தேரினின்றிழியப் பாய்ந்து யாது செய்தான் அபிமன்னு : (உக)

699. அலங்குளைப் பாய்மாக்கோன் றம்மாவுய்ப் பானைப்
[1]பொலங்கொடித்தேர் மேற்புரள மோதி—நலந்திகழக்
கார்மேவு பூங்குஞ்சி கைத்தலத்தாற் சூழ்ந்தவனைத்
தேர்மேனின் றீர்த்தான் செயிர்த்து.

எ - து. செயத்திரதனைக் கைக்கொண்டு தேருஞ் சிலையும் அழியத் தண்டினுல் புடைத்து அவன் பூங்குஞ்சியைப் பிடித் திழுத்துத் தேரினின்றிழிய வீழ்த்தார்த்துக் கொண்டான் அபிமன்னு என்றவாறு. அதுகண்டு சல்லியன் வந்தேன்று கொண்டு சயத்திரதனைக் கைக்கொண்டு மற்றவனைத் தன்றேர் மிசையிட்டுக்கொண்டு சிறிதிடம் போய்த் தேற்றிப் போகவிட்டு அபிமன்னுவின் மேற் சென்ருன் சல்லியன். அப்பொழுது யாது நிகழ்ந்ததோ வெனில் : (உஉ)

700. ஆர்க்கு மழைவண்கை யத்திரத்தான் மத்திரர்கோன்
[2]றூர்த்த மழைமாரி தான்கண்டான்—போர்க்கு
[3]மழவிடைபோ னின்றறுத்தான் மாதவிதன் செம்மன்
மழவிடைபோ லெங்கு மலைந்து.

சல்லியனும் அபிமன்னுவும் போர் விளைத்த விடத்து அபிமன்னு தேர் வலந்திரியிற் சல்லியன் தேர் இடந்திரியும்; சல்லியன் தேர் வலந்திரியின் அபிமன்னு தேர் இடந்திரியும். இவ்வகை இருவர் சினத் தீயாலும் இரண்டு படையும் கைகுறைந் திட்டன. ஒருபால், (உ௩)

701. பாஞ்சால ராசனும் பல்போர் விராடனும்
பூஞ்சாலி மத்திரன்மேற் போர்மலைந்தார்—தாஞ்சாலி

---

699. அலங்கு உளை - அசையும் பிடரிமயிர்.

700. மாதவிதன் செம்மல் - அபிமன்னு. மழவிடை - இளங் காளை.

701. சாலி மின் – வடமீன்; அஃதாவது அருந்ததிமீன். 'சாலி ஒருமீன்' என்ருர் இளங்கோவடிகள்.

பா. வே : 1. பொலங்கொடிஞ்சி. 2. சார்த்து.
3. மழவிடை போனின்ருன்.

மின்னொத்த பைம்பூண் விறலரசர் நண்பல்லார்
பொன்னொத்த வாளி புரிந்து.

எ - து. விராடனும் பாஞ்சாலனும் அபிமன்னுவுக்குத் துணை புகுந்து சல்லியனோடே தலைப்பெய்து புறகிடுவித்தார். அப்பொழுது யாது செய்தான் சல்லியன் : (உ௪)

702. இருவர் சிலையினையு மீரிரண்டு கூறுச்
சிறுபொழுதிற் சின்னங்கள் செய்தங்—குறுபொழுதில்
வானிற் றனிக்கோடியை மண்ணின்மேல் வீழ்த்தவர்
மேனியிற்று னெய்தான் வெகுண்டு. [கண்

எ - து. பாஞ்சாலனும் விராடனும் வில்லும் கொடியும் அழிந்து மல்லகலத்துப் புண்கூர வாள் வாய் அம்பால் ஏவுண்டு மயங்கினாராகக் கருதுவது. அதுகண்டு யாது செய்தான் அபிமன்னு : (உ௫)

703. கொடியுங் குனிசிலையுங் கோலாளுந் தேரு
மடியும் படிவாளி வாங்கி—நொடியின்
மலைதுளங்க மண்டுளங்க வான்றுளங்க நெஞ்ச
நிலைதுளங்க வெய்தா னெடிது.

எ - து. அபிமன் அம்பினால் வலிகெட்டுத் தேருஞ் சிலையும் அழிந்து புறகிட்டோடிக் காலாளாய் ஒருபால் தண்டேந்திய கையனாய் எதிர்மலைந்து பின்னும் யாது செய்தான் சல்லியன் : (உ௬)

704. செருத்திண்டே ரூர்வானைத் தேர்சிதைய நூறிப்
பருத்தண்டு கொண்டிழியப் பாய்ந்தான்-றிருத்திண்டோட்
சித்திரத்தே ரார்ப்பச் செழும்பொற் கழலார்ப்ப
மத்திரத்தார் வேந்தன் மலைந்து.

இவ்வகை மத்திர வேந்தன் சல்லியன் மணித் தண்டுபிடித்து வீமன் மேலோடி யாது செய்தானே வெனில் : (உ௭)

---

702. சின்னஞ் செய்து – துண்டாக்கி.

703. துளங்க – நடுங்க.

705. உடற்கண் வெருவ வொளிநெடுந்தோள் வீமன்
[1]றடக்கைமணித் தண்டுகொடு தாக்க—மிடற்கண்
மடங்காப்போர் மால்யானை மத்திரத்தார் வேந்தன்
றளங்காப்போய் வீழ்ந்தான் [2]சுளிந்து.

வீமனால் அவன் தலையிடை மொத்துண்டு நிலையாற்றாது மயங்கி வீழ்ந்தானைக் கிருதவன்மா கண்டு கடிது சென்று கைக்கொண்டு தன்தேர் மிசை யிட்டுக் கொண்டு போர்க்களங் கழியக் கொண்டு போகலுற்றான். அது கண்டு துரியோதனன் படை நிலையாற்றாது இரிந்திட்டதாகக் கருதுவது. (உஅ)

706. முடியு முரசு மிடறித்தன் [3]றுளா
லடருமின மாவொடாங் கெய்தி—யடியிற்றின்
கைஞ்ஞாகம் புக்கவியக் காய்கதிரோன் காணலன்போன்
மைஞ்ஞாகம் புக்கான் மறைந்து.

இவ்வகை தேரும் மாவும் களிற்றீட்டமும் களத்தவியக் கண்டு கருத்தமைந்து கதிரோனும் பகல் நாழிகை சுருக்குவித்து மறையும் மலை சென்றடைந்தான். அப்பொழுது இரண்டு படையும் கைவாங்கித் தம் பாடிவீடு புக்காராகக் கருதுவது. இப்பால் துரியோதனனும் போய்ப் பாடிவீடு புகுந்து கவலை யுளத்தனாய் அன்றிரவின்கண் யாது செய்தானோ வெனில்: (உகூ)

707. கைவிளக் கெங்குங் கலந்தெரியக் கண்டுயிலா
[4]மெய்விளக்கும் பூணா ருடன்மேவிப் [5]போய்யில்
புரிந்தார் படையிரியப் போர்மண் டபம்போந்
திருந்தானப் போர்வேந்த னின்று.

அற்றை நாட் பட்டுப் படாத படைமன்னரும் தானும் இரவின்கண் கவலை யுளத்தனாய் இருபக்கமும் இருபதினாயிரம்

---

706. அடரும் - தாக்கும். ஞாகம் – நாகம்
மைஞ்ஞாகம் – (மை நாகம்) கரிய மலை. காணலன் - காணமாட்டாதவன்: தற்குறிப்பேற்றவணி.

707. பூணார் - மகளிர்.

பா. பே: 1. றடக்கை மணித்தண்டு தாக்க. 2. சுளித்து.
3. றுள்க, ளடியொடினமாவொ டாங்குற்-றடியிற்றன்,
4. மெய் விளக்கப். 5. பொய்யிற் பொருந்தார்.

கைவிளக்கொளி பரந்து விளங்க அவைக்களத்திருந்து, தான் பட்ட துன்பமும் தன் படைபட்ட மயக்கமும் நினைந்து துரோணனை நோக்கி யாது சொன்னான் துரியோதனன் : (௯௦)

708. வீமன் வலியும் விசயன் பெருந்திறலுந்
தாமோழியு மன்றே தனிச்சிலையோ—யேமுனைக்கு
நாயகமே [1]நன்குடிக்குக் காரணனே யென்றனக்குத்
தாயகனைப் பற்றிநீ தா.

எ - து. வெம்முனையிற் கூற்றமன்ன வீமனும் அருச்சுனனும் பொருகின்றது தருமனை நாடு செய்வித்தல் பொருட்டாக ஆதலால் மற்றவனை நின் ஆற்றலெல்லாம் கொண்டு உயிரோடு பற்றித் தருவாயாக என்கின்ற துரியோதனனை நோக்கி யாது சொன்னான் துரோணன் : (௯௧)

709. வேலற்கரிய வெஞ்சமத்து விண்ணவர்கோன் றன்னை
மலைக்குந் துணைபெறினு மாட்டேன்—முனைக்க
ணுருமனையான் மாய னுயிர்த்துணையாய் நிற்கத்
தருமனையான் பற்றித் தர.

தேவர்க்குங் காண்டற்கரிய கண்ணன் துணையாகத் தேவர்கோன் சிரிய கணைகளினால் தேர்ந்த அருச்சுனன் நிற்கத் தருமனைப் போர்க்களத்தில் பற்றித் தருவேன் என்பது தேவர்கோனுக்கும் அரிதாதலால், மற்றவனை நாலுநாழிகை என்னருகு வாராமல் தடுக்க வல்லார் உண்டாகிற் றருமனைப் பற்றித் தருவேன் என்று துரோணன் சொல்லக் கேட்டுத் திரிகத்தன் முதலாயுள்ள பல பதினாயிரம் வீரர்களும் நாராயண கோபாலரும் எழுந்திருந்து தீக்கடவுளைச் சான்றாக வைத்து யாது சொல்லி உறுதி பண்ணினாரோ வெனில் : (௯௨)

710. கடவுட் குரங்கின் கொடித்தேர்த் தானைத்
தொலையா வூக்கத் தடுபோர் விசயனை

708. ஏமுனை - அம்புமுனை; இவண் போர்க்களம் எனக்குறித்து நின்றது. தாயகன் - தருமன்.

710. அறைதனைக் கூவி - அறைகூவி.

பா. வே: 1. நங்குடிக்குக் காரணனே யெந்தமக்கு.

யமர்க்களங் கழிய வறைதனைக் கூவித்
தருமனுஞ் சேனையுந் [1]தனிப்படுத் தவனொடு
போர்புரிந் தெல்லாம் போன்றுத [2]லன்றேன்
மற்றவன் றன்னை வானகத் துய்த்த
றனையிவ் விரண்டிலொன் றொழிது மாகின்
[3]மெய்மணி மாலையைக் கைமிசைக் கொண்டு
முடிமிசைச் சூட்டி யடியிணை வருடிய
குலமனைக் கிழத்தியைப் பிறரொடுங் கண்டு
பின்னவள் கையாற் பெய்துணும் பேதையு
[4]மற்றது வொழிந்து வன்செரு வதனி
லுற்றவ பூசலி லுறக்கி முன் னின்ற
குருக்களைக் கொன்ற கொடியவோர் பாவியு
[5]மறமலி யரச னணிமனைக் கிழத்தியைக்
[6]குறியல னரசன் கொண்டுடன் போகக்
கேட்டு மிருந்தவோர் கெடுபுகழ் வேந்தனு
மிவ்வுலக யிவரிவ ரிழிந்திடு நரகம்
[7]புக்கவர் நாங்க ளெனப்புகழ்ந் தோதினர்
மிக்கதேர் வேந்தர் விரைந்தவன் முன்னே.

இவ்வகையாற் சஞ்சத்தகரும் திரிகத்தனும் உறுதி செய்யக் கேட்டுத் துரியோதனனு மனமகிழ்ந்து மற்றவர்க்குச் சிறப்புச் செய்து ஆங்கவர்க்கு விடைகொடுத்துத் தானும் தன் கோயில் புகுந்தான் துரியோதனன் என்றவாறு. (௩௩)

ஒழிதும் ஆகின் - ஒழிந்தோம் ஆனால். பெய்துணும் - படைக்க வுண்ணும். உறுக்கி - அழித்து. குருக்கள் - ஆசிரியர். குறியலன் - கொள்கையில்லான். கெடு புகழ் என்பதைப் புகழ் கெடு என மாற்றுக. இழிந்திடு - இறங்கும்.

பா. வே: 1. *தனிப்பட் டவனொடு.* 2. *லன்றி.* 3. *மென்மணி.* 4. *மற்றமீ தொழிந்து.* 5. *மறிவிலி.* 6. *குறியிலி யரசன்.* 7. *புக்குழி.*

பதினோராநாட் போர் முற்றும்.

கடவுள் வாழ்த்து

711. அந்தரத்தில் வானவருந் தானவரு மாழ்திரை நீர்
சிந்தமுதங் கொண்டமுதஞ் செய்தநாண்—மந்தரந்தான்
சோரா முதுகைச் செறியத் துயிலுகந்த
காராண்மை யார்நமக்கோர் காப்பு.

இப்பால் அன்று கழிந்த மற்றை நாள். (ரு.௪)

712. தேனடைந்த கோதைத் திருவனையார் தம்மோடு
[1]மூனடைந்த வேலா குணர்ந்தெழவே—வானின்மேற்
[2]கானடைந்த வெய்யோன் கனையிருளைக் கையகற்றிச்
சேணடைந்து காட்டினான் சென்று.

இவ்வகை கதிரோன் எழக் கண்டு தானும் பள்ளியுணர்ந்து புறப்பட்டுத் தன் படைத்தலைவரை நோக்கி யாது சொன்னான் துரியோதனன் : (ரு.ரு)

713. பண்ணுமின்கள் சேனையெல்லாம் பாய்பரியும் பொற்றேரு
நண்ணுமின்கண் மாக்களிறு நாற்றிசையும்—விண்ணின்ற
தானவரு மஞ்சப் பிடிப்பன் றருமனையான்
[3]மானவரும் போய்க்காமின் மற்று.

இவ்வகை பார்வேந்தன் துரியோதனன் சொல்லக் கேட்டுப் பெரும்படையும் சஞ்சத்தகரும் நாராயண கோபாலரும் ஆர்த்தெழுந்து கலுழக்கொடி விசும்பணுவ யானை தேர் குதிரை கருவிக் காலாளுடன் போய் யாது செய்தாரோ வெனில் : (ரு.௬)

714. சோதி விளக்கெரிமுன் சூழ்சபையிற் சூளுற்ற
வேதிப் படைவேந்த ரெல்லாரு—நீதி

---

711. ஆழ்திரை நீர் - கடல் நீர். அமுதம் செய்த - அமுது கொண்ட. மந்தரம் - ஒரு மலை; மத்தாகப் பயன்பட்டது.

712. கோதை - மாலை. மேற்கான் - மேற்குப்பகுதியில். கனை இருள் - செறிந்தஇருள். கையகற்றி - ஓடச்செய்து. சேண் - உயரே.

பா. வே : *1. மூனடர்ந்த. 2. கானடந்த. 3. வானவரும்.*

நிறைகூவிக் கொள்ளு நிரைமலர்த்தார்ப் பார்த்தற்
கறைகூவிப் போயினா ராங்கு.

திரிகத்தனும் சஞ்சகத்தரோடு பதினாயிரம் நாராயண கோபாலரும் வந்து அருச்சுனனை அறைகூவி ஆர்ப்பரவம் பண்ணக் கண்டு மிகு விரைவுடன் மற்றவர்மேற் செல்லலுற்ற அருச்சுனனைத் தடுத்து யாது சொன்னான் தருமன்: (௩எ)

715. ஆர்தமக்கு வேறே யறைகூவிப் போயினார்
கூரிலைவேற் [1]பார்த்த குறித்துரைத்தா—ரேதிலர்மூற்
சீராகுந் திண்டேரட் [2]டிரிகத்தர் தம்மோடு
நாரா யணன்மக்க ளன்கு.

அன்றியும், (௩அ)

716. கலங்கா மணித்திண்டேர் காளையர்மே லின்று
விலங்காநீ யோட்டி விரைய—லலந்திகழுஞ்
[3]சந்திலங்கு கைத்தோட் டனஞ்சயனே யிங்குடன்று
[4]வந்தவர்க ளோன்றான் மதித்து.

எ - து. திரிகத்தன் முதலாய சஞ்சத்தகரும் வந்து அறைகூவினார்; இதற்கு நீ விரைந்து போவாயல்லை; வந்தபடி கேட்பாயாக என்று பின்னும் யாது சொன்னான் தருமன் : (௩௯)

717. நின்னைப் பிரிவித்து நின்றாரைக் கையகற்றி
யென்னைப் பிடிப்பதனுக் கெண்ணினா—னென்னைப்
[5]பிடியாது காவாயேற் பேரெழிலா னம்புக்
[6]கேதிராகி யார்மலைவா ரின்று.

714. வேதிப்படை - வேதப்படை; துரோணர்படை. நீதிநிறைகூவிக்கொள்ளும் - நீதி தனக்குக் காவலனாகிப் பல்காலும் கூவிக்கொள்ளும்; அறப்போராளி என்றது. அறைகூவுதல் - ஆற்றல் இருந்தால் எங்களைத் தாக்கவா என அழைத்தல்.

716. விலங்கா - விலங்கி; திருப்பி. விரையல் – செல்லாதே. சந்து - சந்தனம்.

717. நின்றாரைக்கையகற்றி - என்னோடும் நின்றவரை விலக்கி. பேரெழிலான் - துரோணன்;

பா. வே: 1. பார்த்தற். 2. டிரிகத்தன் றன்னோடு. 3. சந்துலங்கொள். 4. வந்தவ ரென்னான் மதி. 5. பிரியாது. 6. கிரியாதி.

ஏ - து. சஞ்சத்தகர் அறை கூவல் கேட்டு நீ அவர்கள்மேற் போயின பொழுது உன்னைப் போர்க்களம் கழியக் கொண்டு போயினபின், தங்கள் நாற்படையோடும் ஆற்றல் அனைத்துங் கொண்டு தானை வெள்ளத்தைத் தளர்வித்து, என்னைப் பிடித்துத் துரியோதனன் கையிற் கட்டிக் கொடுப்பானாகத் துரோணன் ஒருப்பட்டான் என்று ஒற்றர்கள் வந்து சொல்லக் கேட்டேன் ஆதலால் அவன் சினத்தீ ஆற்ற வல்லார் நின்னையல்லது யாவருமில்லை. நீ இன்று என்னைப் பிரிந்தால் இப்பொழுதே வந்தமராடி என்னைப் பிடிப்பதற்கும் கேடுவிளைவதற்கும் ஐயமில்லை என்று தருமன் சொல்லக் கேட்டு யாது சொன்னான் அருச்சுனன்: (௪0)

718. தேவ ருலகத்துங் கண்டறியேன் [1]நிண்டிறலா
யாவரு மென்னையறை கூவுவார்—யாவர்மதி
மட்டுவெண் பூந்தெரியல் வாழ்வேந்தர் கோமானே
பட்டவா வென்றான் பணிந்து.

ஏ - து. தேவர்கோன் முதலாகவுள்ள தேவர்களும் என்னை அறைகூவினாரில்லை; மண்ணுலகத்தவர் வந்தறைகூவக் கேட்டிருக்கும் அஃது என வீரமாண்புக்கு இழிவாங் கண்டாய் என்றுரைத்து இவ்வகை செய்த திரிகத்தன் உள்ளிட்டாரை நெர்டிவரையிற் படமலைந்து கண்ணன் திருவருளால் நிலத்துத் தலைபுரட்டி வெற்றிகொண்டு ஈண்டன் வருகின்றேன்; சங்கிதற்கு எம்பெருமான் வெகுளாது ஒழிவாயாக; எனக்கு நின் திருவுளக் கருத்தால் வெற்றிகொண்டு வருவேனாக உன் அருள் வலியால் விடை தருவாயாக என்று தருமனை அடிபணிந்து விடை கொண்டு பின்பு வீமனைக் கைதொழுது யாது சொன்னான் அருச்சுனன்: (௪௧)

719. கடுந்திறலாற் கானகத்திற் காரிருளில் வந்த
விடும்பனை யீடழிய வென்றாய்—படர்ந்தான்
செருவேற்ற மன்னவனைத் திண்கையாற் பற்றி
யொருநூற்றுக் கால்சுழற்ற வோய்ந்து.

---

718. யாவர்மதி என்பதைக் கூவுவார் யாவர் என்று வினாவாக்கியும், மதி என்பதைக் கருது என்றாக்கியும் கொள்க. பட்டவா – பட்டவாறு; ஏற்பட்டவாறு.

719. ஒரு நூற்றுக்கால் - ஒரு நூறுமுறை.

பா. வே: 1. நிண்டிறலார் யாவரோ வென்னையறை.

எ - து. நடுயாமத்துப் போர் மலைந்து இடும்பனை அன்று உயிர்குடித்தனை; அதுவுமன்றிப் பகனைக் கொன்று எழில் நகரத்தார் இடுக்கண் தீர்த்தனை; எல்லாவீரரையும சிறையில் வைத்த சராசந்தனைப் பிளந்தெறிந்தனை; வைச்சிரவணன் மணி நகரிற் செப்பொற் சாரலுக்குக் காவலாகிய மணிமானை வானேற்றி மந்தார மலர் கொடுவந்து பாஞ்சால கன்னிக்குச் சூட்டுவித்தனை; கீசகர் நூற்றுவரையும் கூற்றுலகுக்கு விடுத்தனை; கிழக்கும் வட கிழக்கும் உள்ள வேந்தரை வென்று அரசர் வேள்விக்கு மானெதிர் கொடுவந்து தருமனுக்குக் கொடுத்தனை; கின்னரர், கிம்புருடர் தொடக்கத்தார் பெருவலிகளுக்கு அச்சமாயினை. தேவர்களுக்கு நினைப்பரிய அரிமாக்கொடியுடைய நீ தேவர்கோனும் துணுக்கம் எய்துவதோர் பீம (பரு) வலியால் பீமன் ஆகிப் பெருவிரைவுடையதோர் தண்டுத் தடக்கை வீரனாகி நிற்க நின்னருகு நின்ற தருமனை யாவராலும் துளக்க வரிதேயென்றும், தருமனுக்குத் தீங்கு விளையாது காப்பாய் என்றும், இது நினக்கே பணியல்லால் யாவராலும் காக்கப் படாது என்றுங் கூறி வீமனைப் பின்னும் வணங்கித் தருமனுக்குத் துணை செய்யென்று பின்னும் யாது செய்தான் அருச்சுனன் : (சஉ)

720. மன்னர் பெருமானை மச்சத்தார் கோமானே
நின்னிற் பரமென்று நில்கண்டாய்—பின்னும்
படைக்கலங்க டாஞ்சிந்தும் பாஞ்சாலர் கோவே
யடைக்கலமா மென்றா னவன்.

இவ்வகை விராடனுக்கும் பாஞ்சாலனுக்கும் தருமனை அடைக்கலங் காட்டிக் கொடுத்துப் பின்னும் எல்லா வீரரையும் நகுல சகாதேவரையும் நோக்கி யாது சொல்லி யாது செய்தான் அருச்சுனன் : (சங)

721. வேறுரைத்த மன்னவரை விண்ணுலகுக் கிப்பொழுதே
யேறுவித்து மீளுவனென் றேகினான்—மாறடர்த்த
தென்னவனைத் தம்பியரைச் சிஞ்சயரைச் சோமகரை
மன்னவனைக் காக்க வகுத்து.

எ - து. சஞ்சத்தகர் வந்து அறை கூவினாரைக் கண்ணன் திருவருள் வலியால் விண்ணேற்றிக் கண்ணனோடு மீண்டு

720. நின்னிற்பரம் – நின்பொறுப்பு.

721. வேறு - இதற்குமுன் கேட்டறியாத ஒன்று. மாறு அடர்த்த - பகைத்துவந்த.

இவ்வகை மற்றவனால் விடப்பட்ட சீரிய வளை கண்ணன் திருமார்புக்கு மணிகளால் அழுத்தப்பட்ட வயிர கண்டி என்பதோர் மாலையாய்ப் பூண்டிலங்கிற் றென்றவாறு. அது கண்டு தேவர்களும் வியந்து பூமழை பொழிந்தார். அவ்விடத்து இரண்டு படைக்கும் வியப்பாயிற்று. அவ்விடத்து யாது செய்தான் அருச்சுனன் : (அ0)

758. காற்று மெரியுங் கடுகி யெதிர்மண்டுங்
கூற்ற மெனும்வாளி கோத்தேறிய—மாற்றரிய
வம்பொற் கவச மறுக்க வழியாமற்
றம்போற்றேர் மீண்டவே தாம்.

ஏ - து. ஊழித் தீயும் ஊழிக் காற்றும் போல வன்கடுங் கணைகளை அருச்சுனன் எய்ய ஆங்கவையும் போய்ப் பகதத்தன் மெய்ம்மறை பிளக்க மாட்டாமை மீண்டுவரக் கண்டு கண்ணன் தன் நாராயண அத்திரங் கொடுப்ப ஆங்கதனைத் தொழுது வாங்கி உரிய முறை நிரம்பத் தொடுத்துவிட அதுவும் போய் யாது செய்ததோ வெனில் : (அக)

759. விரிகடல் வண்ணன்றன் வெவ்வாளி யேவப்
புரிகடல்சூழ் பூதலத்துப் பொங்கிக்—கரியுண்
மலைதுமிக்கு மால்யானை மன்னுபக தத்தன்
றலைதுமியப் போயிற்றே தான்.

அன்றியும், (அஉ)

760. திக்கு நடுங்கத் திகைப்போயாத் தேர்வேந்தர்
மிக்கவியச் சென்று விசையினாற்—றேக்க
பகதத்தன் றன்றலையைப் பார்மேற் புரட்டிச்
சுகமுற்றப் போயிற்றே தோக்கு.

இவ்வகை பகதத்தனை நாராயண அத்திரத்தால் வீடுபோக விடை கொடுத்துப் பின்னும் சுப்பிர தீபத்தை யாது செய்தான் அருச்சுனன் : (அ௩)

---

759. புரிகடல் – வளைந்த கடல். கரியுண் மலை – கருநிறத்தை - தன்னிடத்துக் கொண்ட மலை. துமிக்கும் - துகளாக்கும். தலைதுமிக்கத் தலையறுபட.

760. சுகம் – வீடுபேறு.

761. வல்விறற் சாண்டைய வார்சிலையி னுணுதைத்த
பல்பதி னாயிரமாம் பாய்கணையாற்—புல்லார்
தலைக்களிற்றை யப்புருவத் தன்னடிக்கீழ் வீழ்த்துக்
கொலைக்களிற்றைக் கொன்றான் கொதித்து.

இவ்வகை தேவர்கோனால் சிறகறுப்புண்டு வீழ்ந்ததோர் வியன் குன்றுபோல அருச்சுனன் சிறிய கணைகள் பட்டுருவச் சுப்பிரதீபமும் வீடுபக்க தென்றவாறு. இவ்வகை பகதத்தன் பட்டு வீழ்தலும் அவனை வலமாகத் தோகடாவி, கண்ணனை வணங்கி, சுதக்கணன் என்பானைத் தலைதுமித்துச் சயத்திரதனை யும் சௌவீரரையும் அச்சத்தோடு நடுக்குறுத்திக் கிருபனையும் கிருதவர்மனையும் பொருகணையாற சிலையறுத்துப் போகாநின்ற அருச்சுனன் எதிரே காந்தாரர் எல்லாம் எதிர் விலங்கி யாது செய்தார் : (அச)

762. எல்லாரும் வெஞ்சிலையா ரெல்லாருந் திண்டேரா
ரெல்லாரு மிட்ட கவசத்தா—ரெல்லாரும்
பூந்தார்க ளார்ப்பத்தம் போர்வலியான் [1]மூடினார்
காந்தார ரெல்லாங் கலந்து.

இவ்வகை சகுனி உள்ளிட்ட காந்தாரர் இருபதினாயிரவர் சென்று வளைத்துக் கொள்ளலும் யாது செய்தான அருச்சுனன் : (அரு)

763. காந்தாரர் சேனைக் கடலைக் கணைமழையாற்
பூந்தார மார்பன் புரட்டினான்—காந்தாரர்
கல்லேறு தம்மிற் கடலே றனையாரை
மல்லேறு வென்றான் மதித்து.

இவ்வகை காந்தாரர் வலியைக் கட்டழித்துச் சகுனிமக்கள் எழுவரையும் நிலத்திற்றலைபுரட்டி, விடதரையும், காலிங்கரையும் கொடியளவில் கொன்றுழக்கித் திரியாநின்ற அருச்சுனனோடும் யாது செய்தான் சகுனி : (அசு)

---

761. புல்லார் – பொருந்தார்; பகைவர். தலைக்களிறு – சுப்பிர தீபம்.

753. கல்லேறு – மலையில் வாழும் ஏறு; அரிமா. கடல் ஏறு – கடலில் உறையும் ஏறு; சுறு. மல் ஏறு – வலிமையான ஏறு; இடி.

பா. வே : 1. மூட்டினார்.

764. அம்போற் சிலைமே லடுகணைக டானெய்து
வெம்பு சரமாரி வித்திருன்—முன்போருவர்
செய்யாத வண்ணந்தான சேனைநடு வட்புகுந்தங்
கெய்தார்த்தான் காந்தார ரேறு.

இவ்வகை செய்த சகுனியைக் கண்டு யாது செய்தான் அருச்சுனன் : (அஎ)

765. தாரறுத்து நாணறுத்துக் காந்தாரர் கோமானைப்
போரறுத்து [1]முன்னே புறங் கண்டான்—சீரறுத்துப்
பார்வேந்தர் கோமான் படநாக முன்னுயர்த்த
போர்வேந்தன் முன்னே புரிந்து.

இவ்வகை சகுனி புறகிட்டோடக் கடற்படையைக் கலக்குறுத்தி அரிமுழக்கம் செய்தான் அருச்சுனன் என்றவாறு. ஒருபால், (அஅ)

766. சேனை முதல்வனையுஞ் சென்றங்க [2]நாடர்தங்
கோனையுங் கொண்டு குலவேந்தன்—வானுலவு
மாமதியைச் சூழ்போன மண்டலம்போ லெண்டிசையும்
வீமனைச்சூழ் போனன் விரைந்து.

எ - து. துரோணனையும் கன்னனையும் தன் தம்பியரையும் உடன்கொண்டு அரியோதனன்போய் வீமனைச் சூழ்ந்து கொள்ளலும் அதுகண்டு யாது செய்தான் வீமன் : (அக)

767. ஒருகைச் [3]சிலையுகைத்தங் கோர்கைச் சரந்தேர்ந்
திருகையுஞ் சென்றங் கிசைந்தா—ரோருகையே
முன்றொடர்ந்து போன முனைவேந்த ரெல்லாரும்
பின்றொடர்ந்து சென்றார் பெயர்ந்து.

அதுகண்டு பின்னும் யாது செய்தான் வீமன் : (கூ0)

768. அலையுழவை யன்று னடுசரங்கள் பாயச்
சிலையழிவார் தேரழிவா ராகி—நிலையழிந்து

---

766. சேனை முதல்வன் - படைத்தலைவன்; துரோணன். வீமனைச் சூழ்ந்த பகை வீரர் மதிசூழ் மண்டலம்.

767. ஒரு கையே - ஒரு பக்கமாகவே.

பா. வே : 1. முன்போற். 2. நாடனையுங். 3. சிலைகுனித்தங்.

மாவேந் துயரான் மடங்கிப் புறகிட்டா
ராவந் திகரோடு மாங்கு.

இவ்வகை இரண்டாவதுஞ் சென்று தாக்கி வீமனால் தேரும் சிலையும் அழிப்புண்டு தானும் தன் தம்பியரும் பெருந்தானையு நிலையாற்று துடைந்திட்டான் துரியோதனன். அப்பொழுது, (௬௧)

769. ஓங்கி வரம்பிழந்தங் குள்வாங்கு மோதம்போற்
[1]பூங்கமழ்தார் மன்னர் போகுசேனை—யாங்கிரண்டும்
[2]பூண்டுபோர் செய்தழிந்து புண்ணீர் வழிசோர
மீண்டுபோய்ப் புக்கதம் வீடு.

அன்றியும், (௬௨)

770. மன்னர் போகுதழிய மண்டலங்க ளெண்டிசையு
மன்ன [3]பரிசென் றறியாமுன்—மன்னு
புணரியின்மேல் வந்துதித்த பொற்கதிரோன் மேலைப்
புணரியின்மேற் [4]புக்காரப் போது.

எ - து. *கதிரோன் மறைவாலும், வீமன் கடுமைக்கு ஆற்றாமையாலும் இரண்டு படையுங் கைவாங்கித் தம் பாடி வீடு புக்காராகக் கருதுவது.* (௬௩)

---

768. அலை உழுவை - வேட்டத்தில் அலையும் புலி. ஆவந்திகர் - உற்றுழி உதவுவார்.

769. புண்ணீர் - குருதி. வழிசோர - வழியெல்லாம் ஒழுக.

770. புணரி – கடல்.

பா. வே: *1. பூங்கழுநர். 2. பூண்டும் போர்ச் செய்கழிந்து புண்ணீர் உடல்சோர மீண்டும் போய்ப். 3. பரிசொன். 4. புக்கவப் போழ்து.*

பன்னிரண்டாநாட் போர் முற்றும்.

வருமளவும் தருமனைக் காப்பீராமின் என்று பாண்டியனையும் நகுல சகாதேவரையும் திட்டத் துய்மனையும் திட்ட கேதுவையும் பல்லாயிரம் சோமகரையும் சிஞ்சயரையும் பிற நாட்டு வேந்தரையும் கடோற்கசனையும் தருமனைக் காப்பாராக்கி அறை கூவின திரிகத்தன் நின்ற திசை நோக்கிப் போயினான் அருச்சுனன் என்றவாறு. (சச)

722. மன்னவனைக் காமினேன் வாளமர்க்கண் வாள்விசய
னின்னபரி சென்றுணர்ந் தங் கேகினான்—மின்னிடையின்
மைவகுத்த சோலை வளநாடர் கோமானுங்
கைவகுத்து நின்றான் கலந்து.

இவ்வகை அருச்சுனன் போனபின்பு தங்கள் படையுடன் போர்க்களம் புகுந்து [1]'சர்வசமூகம்' என்னும் அணி வகுத்து நின்றான் துரோணன் என்றவாறு. இப்படி வகுத்திரண்டு படையுந் தலைப் பெய்து தாக்கின விடத்து யாது நிகழ்ந்ததோ வெனில்: (சரு)

723. மேல்கடலுங் கீழ்கடலு மீண்டி யெதிர்ந்ததுபோற்
போர்மலைந்து மன்னர் புரிந்தார்கள்—சீர்மலிந்த
காந்தட் [2]கடிக்கலச யோனியுந்தன் காவலரும்
வேந்தற்கு முன்னே விரைந்து.

எ - து. பன்னீராயிரம் முடிமன்னரும் சயத்திரதன் உள்ளிட்டாரும் பூரி பூரிசிரவாவும் கிருபனும் கிருதவன்மனும் கன்னனும் அசுவத்தாமனும், சகுனி சல்லியன் உள்ளிட்டார் எழுபதினாயிரம் தேர்க்குழாமும் அதன் இரட்டி புரவியும், நூறாயிரம மதயானையும இரண்டு அக்குரோணி காலாள் வெள்ளமும், மன்னர் மன்னன் துரியோதனன் தம்பிகளோடும் ஆர்த்துவர நிலத்தைக் கடல் கொண்டாற் போலவும், முகிற் படலத்தைச் சுழற்காற்றுச் சிதறியடித்தாற் போலவும் சங்கு தாரை மிகமுழங்கத் தருமன்மேற் சென்றான் துரோணனுகக் கருதுவது. (சசு)

---

722. இன்னபரிசு - இவ்வகையாக.

723. கடி - மணம். கலசயோனி - துரோணன்.

பா. வே: 1. மகரமென்னும்.

2. கரக்கலச.

724. பல்பதி னாயிரவர் பாஞ்சாலர் வெஞ்சமத்து
வில்லோ டுடன்வளைய வெஞ்சரந்தூய்க்—கொல்லை
யிடைபுகுந்தாற் போல வியனெடுந்தே ரோட்டி
யிடைபுகுந்தான் பாஞ்சால ரேறு.

எ - து. திட்டத்துய்மன் உள்ளிட்ட பல பதினாயிரம் பாஞ்சாலருடன் வில் வளைத்து எரி சரங்கள் தூவி எதிர்மலைந்த பெரும்படை முன் புகுந்து யாது செய்தான் பாஞ்சாலன் : (சஎ)

725. வில்வளைத்த பல்வேந்தர் வெங்களத்துப் பட்டவிய
வேல்வளைக்கை யம்பெங்கும் வீசினான்—கல்வளைத்த
காந்தட் கடிச்சாரற் காவலர்கோன் பாஞ்சால
வேந்தர்க்கு முன்பிறந்த வேந்து.

எ - து. வரையிழி குருதியிற் படவுழக்கித் துன்மருடன் என்பானை மார்பிடை மயங்க வெய்து காலிங்கரையும காந்தாரரையும் கலக்குறுத்திப் பெரும்படையை இரிய நூறிப் போர்ப்பகையாகிய துரோணனோடே தாக்கிய சயத்திரதன் திண் சிலையைப் பத்தம்பினால் அறுத்துக் கூருக்கி ஆர்த்துக் கொண்டான். அதுகண்டு மிகவும் வெகுண்டெழுந்து யாது செய்தான் துரோணன் : (சஅ)

726. பாய்வாளி யோன்பதினாற் பாஞ்சாலன் வில்லறுத்து
வாய்வாளி யைம்பதினான் மான்றேரை—யீர்வாளி
யூக்கமா மேன்றங் குதிர வுடனூர்த்தான்
வீக்கமால் [1] காண வெகுண்டு.

இவ்வகை வாள் வாய் அம்பு ஒன்பதினால் வில்லறுத்து ஐம்பது கணையினால் மணிநெடுந் தேரை நிலத்து வீழத் துருட்டி யார்த்துக்கொண்ட துரோணனைக் கண்டு நிலையாற்ருது காலாளாய்ச் சிதறியோடி மற்றுங்கொரு சேமத் தேர் ஏறி வேட்டமுற்ற கோளரியே போல வெகுண்டெழுந்தொரு சிரிய கணையினைத் தெரிந்துகொண்டு துரோணனுடனே தாக்கி யாது செய்தான் பாஞ்சால மன்னன் : (சகூ)

---

724. தூய் – தூவி. கொல்லை - தோட்டம்; பயிர்க்கொல்லை. விடை – காளை.

725. கல் – மலை. கடிச்சாரல் – மணம் பரவும் மலைச்சரிவு.

726. வீக்கமால் காண - மிக்க மயக்கங் கொள்ளுமாறு.

பா. வே: 1. கண்டு.

727. நாகம் வளைத்தருளி நாக மசைத்தருளு
மாகன்மே லேக மலர்வாளி—யேவுதிறன்
மன்மத ளுமென்ன மன்னும்பல் வாளியெய்தான்
[1]பன்மதரா மென்னப் பரந்து.

எ - து. பாஞ்சால மன்னன் பலவகைப்பட்ட வெங்கணை மாரி பொழிந்திடுதலும் எண்டிசையும் தலை பனிப்பக் கூற்றுவன் தண்டு செல்வதாம் எனக் குருதியாறு கொதித்தெழுந்தது; அப்பொழுது துரோணன் வெகுண்டெழுந்து யாது செய்தானோ வெனில் : (ருo)

728. பாஞ்சாலர் வெள்ளம் படுகளத்துப் பட்டவியக்
[2]காஞ்சாலி யம்பு கடாவினான்—பாஞ்சாலன்
[3]வேல்லழித்துத் தேரழித்து வேல்வேந்தர் தம்முன்னே
வில்லறுத்து நாணுவித்தான் மேல்.

இவ்வகை இரண்டாவதும் பாஞ்சாலன் வில்லும் தேரும் அழிப்புண்டு உயிராவலால் காலாளாய் ஓட அதுகண்டு யாது செய்தான் திட்டத் துய்மன் : (ருக)

729. செய்கை யழிந்து [4]திரிந்தானோன் றந்தையென
வெய்ய சினத்தான் மிகவெழுந்து—கையாற்
சலிக்கவே [5]வெய்தாத் தடஞ்சிலையின் வின்று
ளுலிக்கவுட னெய்தா னுடன்று.

எ - து. துரோணன் தன்னுடனே அடற்சிலையை வளைத்துத் திட்டத்துய்மன் தலைப்பெய்தான். அப்பொழுது மண்ணும் விண்ணும் அதிர்ந்திட்டன. பெரும்போர் விளைந்திட்டது. அப்பொழுது யாது செய்தான் துரோணன் : (ருஉ)

---

727. நாகம் - மலை; இவண் மேரு. அதனை வளைத்தவன் சிவன். முப்புரம் அழித்தற்கு. நாகம் - பாம்பு. அசைத்து - கட்டி. ஆகன் - உடலுடையான்; சிவன். காமன் கண்ணுதலான் மேல் ஐங்கணை பொழிந்தாற்போல. பன்மதர் - பல மன்மதர்.

728. காஞ்சாலி. காய்ந்து + ஆலி—என்பது காஞ்சாலி என ஆயிற்று. சினந்து மழைத்தாரைபோல் அம்புதொடுக்கும் என்பது பொருள். வெல் - வெற்றி.

729. கையாற் சலித்தல் - கையாற் புடைத்தல்.

பா. வே : 1. பன்மதனு. 2. காய்ஞ்சாலு மம்பு கடாயினான். 3. வில்லறுத்துத். 4. திரிந்தான்றன். 5. வெய்தான் றடஞ்சிலையின்.

730. இருநூறு வெவ்வாளி யேவிக் கொடிவீழ்த்
தொருநூறு மல்லகல மூன்றிப்—பொருநூறு
பாகன்மே லேவிப் பதிற்றிரட்டி வெவ்வாளி
தேரின்மே லெய்தான் றிளைத்து.

இவ்வகையால் தேரும் சிலையும் கொடியும் அழிப்புண்டு மல்லகலத்துப் புண்கூரத் திட்டதுய்மன் தளர்ந்து போகலும் சிகண்டியுள்ளிட்ட பாஞ்சால குமரரைக் கலக்குறுத்திப் படை முற்றும் அழிவு செய்து எதிர் பொருவாரைப் பெருது மேற் செல்லுகின்ற துரோணனைச் சென்று தாக்கி யாது செய்தான் பாண்டியன்: (ருங)

731. பாண்டவர்கண் மண்ணளப் பாண்டியர்கோன் [சென்றெதிர்ந்
தாண்டகைதன் னோடன் றமர்செய்தான்—பூண்டயங்கு
மேனிமேற் சென்று [1]விடுகணைக ரூர்கலச
யோனிமேற் சென்ற னுடன்று.

இவ்வகை பாண்டிய வேந்தன் வந்து ஏன்றுகொண்டு பொருகின்ற பொழுது யாது செய்தான் துரோணன்: (ருச)

732. பாண்டியர்கோன் பத்துச் [2]சிலையழித்துப் பார்மீது
[3]பூண்டயங்க நாண்டயங்கப் போதலுமே—யீண்டியெதிர்
தாக்கினர் மேலுந் தனித்துச் சரமாரி
[4]போக்கினர் தேர்மேற் புரிந்து.

இவ்வகை பாண்டியன் ஏன்றுகொண்டு ஐயிரண்டு சிலை பிடித்து அமாழிய அதுகண்டு சேர சோழர் விலக்குதலும் அது கண்டு யாது செய்தான் துரோணன்: (ருரு)

733. கொற்றக் கொடிச்சிலையைக் கூறுக்கி வார்கணையால்
வெற்றிக் கொடியோடு [5]வில்லிணையு—மற்று

731. கணைகரூர் - கணைகள் ஏவும்.
732. தயங்க - விளங்க.
பா. வே: 1. விடுகணைகட்; விடுகணைபா யக்கலச.
2. சிலையழிந்து. 3. பூண்டயங்கி நாண்டயங்கிப்.
4. போக்கினன். 5. வில்லிணையு.

விடவாளி கொண்டே விரைந்தெய்தா னாங்கே
யடலே றனையா னவன்.

இவ்வகை தேரும் சிலையும் கொடியும் இழந்து கவசம் பிளக்க ஏவுண்டு சேர சோழர் தளர்ந்து போகலும் அதுகண்டு விராடன் வந்து ஏன்றுகொண்டு யாது செய்தானோ வெனில்: (ருசு)

734. மல்லாருந் [1]திண்டோளான் மச்சத்தார் தங்கோமான்
வில்லாற் றுரோணன்றன் வெம்படைஞ—ரெல்லாம்
பிணச்சேற்றி லேயழுந்தப் [2]பேய்கூத்தங் காட
நிணச்சேறறின் மூழ்குவித்தா னின்று.

அவ்விடத்து மற்றது கண்டு யாது செய்தான் துரோணன்: (ருஎ)

735. கைம்மேலு மார்மேலுங் காமர் சிலைமேலு
மெய்ம்மேலு மம்பேங்கும் [3]வித்தினன்—மேன்மேலு
மாய்ந்திட்ட தேர்[4]நின்று மச்சர்கோன் மாநிலத்துப்
டாய்ந்திட்டுப் போனான் பதைத்து.

இவ்வகை விராடவேந்தன் நிலையாற்றாது தேரினின்றிழியப் பாய்ந்து காலாளாய் ஓடுதலும் அதுகண்டு வீமன் வந்து ஏன்று கொள்ளலும் அதுகண்டு யாது செய்தான துரியோதனன்: (ருஅ)

736. சிங்கக் கொடியுஞ் சினமாவுந் தேரினுடன்
மங்கத் தனிவாளி வாங்கினான்—[5]றுங்கவுடல்
போற்றரிய பஞ்சவர்க்குப் போர்கொடுத்துப் பார்கொடா
மாற்றரிய நூற்றுவர்க்கு மன்.

இவவகை வெகுண்ட துரியோதனன் தன் அடு சரங்களால் வீமன் அரிமாக் கொடியுந் தேரும் இழந்து எல்லாப் படைக்கலங்க

---

733. விட வாளி - நஞ்சுதடவப்பெற்ற அம்பு.
734. நிணம் - கொழுப்பு.
735. காமர் - அழகிய. வித்தினன் - தூவினன்.
736. மாற்றரிய - தான் கருதியதை மாற்றுதல் இல்லாத.
பா. வே: 1. திண்டோள்வண். 2. பேய்கூத்தங் காடி.
3. வீசினன். 4. நின்ற. 5. றுங்கமுடன்.

ளாலும் மறைப்புண்டான். அதுகண்டு யாது செய்தான் தருமன் : (ருசு)

737. அம்பொன் முடிதுளக்கி யாடெழிற்றேர் மேற்கொண்டு
செம்பொற் கவசஞ் செறிவித்தே—யும்பரைமுன்
னாண்டவர னென்ன வலங்கரித்து வாளமரிற்
பாண்டவர்கோன் றோன்றினான் பார்த்து.

(சுo)

அன்றியும்,

738. மானத் திடையடங்கும் வாரி நெடுங் கடலிற்
சேனைத் தனியாறு செல்வதுபோற்— றானை
யுடனோக்கி வேனோக்கி யாடெழிற்றே ரோக்கிப்
படைநோக்கி வந்தான் பரிந்து.

இவ்வகை தலைமறையும் வீரப்புட்டிலும் செம்பொற் கவசமும் சாத்திப் படைக் கோலத்துடன் வந்து யாது செய்தான் தருமன்: (சுக)

739. மாமலையு மண்ணு மறிகடலும் வானகமுங்
கோமலையு மஞ்சிக் குலைந்தனவே—போர்முனையில்
விற்கையான் றன்மன் விசைத்துச் சிலை[1]நாணப்
பொற்கையா னாணெறிந்த போது.

ஏ - து. தருமன் திண்டேரோட்டிச் செருமலைந்து எதிர் விலக்கினாரை மலங்க நூறிப் பின்னும் ஒருபால் துரோணனைத் தாக்கி யாது செய்தான் தருமன் : (சுஉ)

740. மற்றத் துரோணன்றன் மார்மேலுந் தோண்மேலுங்
கோற்றச் சிலைமேற் கொடிமேலுஞ்—சுற்றுஞ்
சரபடலம் போர்ப்பத் தலைப்பெய்தான் றன்மன்
[2]விரைபடலத் தேர்முடுக விட்டு.

---

737. உம்பரை ஆண்டவரன் என்ன - தேவரை முன்னே ஆண்ட பெரியோன் என்ன; தேவர் கோன் என்ன.

739. கோமலை - மேரு. தன்மன் - தருமன். நாணப் பொற் கையால் - நாண், அப்பொன் கையால்.

740. விரை படல - மணம் பரவ.

பா. வே: 1. நாணைப். 2. விரைபடரத்.

எ - து. துரோணனுடன் தருமன் தாக்க, இருவரின் அம்பு முழக்கத்தாலும் இருவரின் சரபடலத்தாலும் திசை மயங்கியிட்டதாகக் கருதுவது. அப்பொழுது ஒருவரை ஒருவர் சாயாது நின்றார். அவ்விடத்து யாது செய்தான தருமன் : (௬௩)

741. கார்க்கலச யோனி கடுஞ்சரத்தைக் கார்மழைபோற்
போர்ச்சிலையி னோடும் புரிவித்தான்—பார்க்குங்
கரமாரி யன்ன கருணையான் கையிற்
சரமாரி யாலே தகைந்து.

எ - து. துரோணன் விட்ட அம்புகளைத் தருமன் அம்புகளால் அறுத்து மாற்றப் பெரும்போர் விளைந்திட்டது. அப்பொழுது இரண்டு திறத்தோர் படையும் குறைந்திட்டது. ஆங்கு, (௬௪)

742. வீமனுஞ் சேயும் விசயன் பெருமகனு
மாமனு மச்சத்தார் கோமானுஞ்—சோமகரும்
பைத்தோடி [1]மார்வமேற் பாய்பகழி கால்வீழ்த்து
மொய்த்தோடிப் புக்கார்கண் முன்.

எ - து. வீமனும் கடோற்கசனும் அபிமன்னுவும் சாத்தகியும் விராடனும் உள்ளிட்டார் பன்னூறாயிரம் வலுவோடு மணி நெடுந்தேர் விரைய வேவிப் பெருமுழக்கஞ் செய்து சங்கம் ஊதித் தருமனுக்காய் முன் புகுதலும், கிருப கன்ன அசுவத்தாமனோடும் தலைப்பெய்து யாது செய்தான் வீமன் : (௬௫)

743. காலாளாய்த் தேரிழிந்து கையிற் கதையினற்
[2]றேராட்க ளாளுரைத் தேரழித்துத்—தேராட்க
ணிற்பாரைக் காணூ நின்று னெழிற்றருமன்
பொற்பாதஞ் [3]சென்னி பொறுத்து.

741. கரமாரி - கைம்மழை. சரமாரி - அம்புமழை. தகைந்து - தடுத்து.

742. மாமன் - சாத்தகி. பைத்து ஓடி - விரைந்து சென்று. கால்வீழ்த்து - ஊன்றி.

743. வீமன் தருமன் பாதம் சென்னி பொறுத்து நின்றான். பொறுத்து - தாங்கி; என்றது வணங்கி.

பா. வே: 1. யார்வமேற்.
2. றேராள ராளுரைத் தேரழித்துத் - தேராளர்.
3. சென்னியிற் பூத்து.

இவ்வகை பெரும்படையொடும் தாக்கிக் காலாளாய்த் தண்டு கொண்டு தேர் வேந்தர் ஆயினரைப் போர்க்களத்தில் நில்லாது எப்பக்கமும் ஓடத் துரத்தித் தேராட்கள் எதிர்ப்பாரைப் பெறாது பெருங்காற்றுத் திரிவதாமெனத் திரிந்து ஆர்க்கின்ற வீமன், துரியோதனர் வந்தாரை ஆர்ப்பரவத்தினால் அச்சமூட்டி, துரோண கிருப கன்ன அசுவத்தாமனையும் படைக்கலம் அழிய மோதி எல்லா வீரர்களையும் திசைதிசையிற் சிந்துவித்துத் துரியோதனனை எப் பக்கமும் ஓடத்துரத்திச் சல்லியன் தாக்கினானை வன்மையாய்த் தாக்கிச் சயத்திரதன் வந்தானைத் தேரொடும் எடுத்தெறிந்து, சகுனி வந்தானை அஞ்ச உரப்பி, மான் கூட்டத்தைப் புலி துரந்த தாம் என்ன மானவேந்தரை ஓடத்துரத்தித் தருமன் திருவடி களிலே வணங்கி நின்றான் எனறவாறு. அப்பொழுது யாது செய்தான் பகதத்தன் : (சுசு)

744. தாடளர்ந்து தங்கள் படையிரியத் தானேதிரே
[1]யோட விறல்யானை யுந்தினான்—கூடா
ருரம்போழுத வெற்றிபுனை யும்பர்க்காய்த் [2]தேவா
சுரம்போருத வேந்தன் [3]சுளிந்து.

எ - து. தேவர்கோனுக்குத் தோழனாகி அசுரர் குலப்பகை தணித்துக் கொடுத்துத் தேவர்களோடும் அமிழ்தம் கடைந்தான் பகதத்தன் என்னும் ஓர் அரக்கன் பதினாயிரம் யானை வலுவுடை யான், நூறாயிரம் யானையின் வலுவுடையதொரு சுப்பிர தீபம் என்னும் மதகரியை மேற்கொண்டு தாக்குமளவில் மற்றுங்கது யாங்ஙனம் ஓடிற்றோ வெனில் : (சுஎ)

745. தேர்துகைத்து மாப்பிளந்து சேண்வரைபோ லாள் [விலக்கிப்
பேரெழிற்கை யானைபின்னே போய்ப்பிறங்க—வீர
சிரிந்தோட வோடி யிகற்களிறுந் தானுந்
திரிந்தானவ் வெம்முனைமேற் சென்று.

எ - து. பகடுந் தேரும் பாய்மாவும் பாவடியிற் படவுழக்கித் தன் பெருங்கோட்டுப் புண் சுமந்து, காலுடையதோர் மால்வரை

744. தாடளர்ந்து - தாள் தளர்ந்து; சோர்ந்து. தாள் - முயற்சி. கூடார் – பகைவர். உரம் - மார்பு. வேந்தன் - பகதத்தன்.

745. துகைத்தல் - சவட்டுதல். சேண் வரை - உயர்ந்த மலை. பிறங்க – விளங்க.

பா. வே: 1. யோடை. 2. தெவ்வர். 3. சுளித்து.

நிலமிசைத் திரிவதாமெனக் கடுங் காற்றின் வடிவு கொண்டதாமெனக் கொடுங் கூற்றங் கொதித்தெழுந்ததெனச் செல்லாநின்ற சுப்பிர தீபத்தை மேற்கொண்டு கணைமழை பொழிகின்ற பகதத்தனுக்கு நிலையாற்றாது எட்டுத்திசையும் இரிந்தோடுகின்ற தருமன் படையைக்கண்டு அழிபடை தாங்கிவந் தேன்றுகொண்டு யாது செய்தான் வீமன் : (௬௮)

746. ஆலால வாசுகிதன் வாயிற் புறப்பட்ட
வாலாலம் போல வடுஞ்சினமாய்க்—காலாளா
யம்பொற்றண் டேந்தி யமராடப் போயினான்
செம்பொற்றோள் வீமன் செயிர்த்து.

அன்றியும், (௬௯)

747. வாமவே லேந்தி வரைதடிந்த [1]வள்ளல்போல்
வீமனே சென்று விலக்கினான்—கோமான்
புனைவயிரக் கோட்டியானைப் பொன்னுதன்மேற்
சினவயிரத் தண்டேவிழச் சென்று. [றுன்கைச்

இவ்வகை வெகுண்டு சென்று பகதத்தன் ஊர்தியாகிய சுப்பிரதீபத்தின் நெற்றியிடைப் புடைத் தார்த்தான் வீமன். அப்பொழுது, (௭0)

748. ஒருவ ரொருவர்க்கங் கொல்காது போரி
லிருவருமே சென்றங் கெதிர்ந்தார்—விரலினாற்
கார்முழக்கோ மாகடலோ காற்றோ [2]வெனவன்றிப்
போர்முழக்கோ வென்னப் புகுந்து.

இவ்வகை பகதத்தனோடும் சுப்பிர தீபத்தோடும் வீமன் தலைப்பட்டு! அரிமாமுழக்கமும் சங்கொலியும் எழுப்பி ஆர்த்து

---

746. ஆலாலம் - சுழற்சி. ஆலாலம் - ஆலகாலம்; நஞ்சு. அமராட - போராட. வாசுகி - பாற்கடல் கடைதற்குக் கயிறாகப் பயன் பெற்ற பாம்பு.

747. வாமவேல் - ஒளியுடைய வேல். வரை - மலை; கிரௌஞ்சம். வள்ளல் - முருகன்.

748. ஒல்காது - தளராது. விரலினால் - கலத்தலால்.

பா. வே: 1. வாசவன் போல்; வாயுப்போல்.
2. வெனவன்றிப்.

எம்மருங்கும் திசைசிலும்பத் தன்பெரும் படைமேற் போகாமல் மற்றதனைத் தகைந்து நின்று பெரும்போர் செய்யா நின்றான், அப்பொழுது, (எக)

749. பாண்டவர்கள் சேனையெனுங் காட்டைப் பகதத்தன்
றூண்டுசினத் தீயாற் சுடும்போழுதிற்—காண்டீபப்
போர்வண்ண விற்கைப் புயல்கொண்டு வந்ததே
கார்வண்ண னென்பதோர் காற்று.

(எ - து.) எத்தனையோராயிரம் யானையின் வலுவுடைய தோர் சுப்பிரதீபத்தை மேற்கொண்டு பகதத்தன் என்னும் பெருவீரன் புகுந்து பாண்டவர் படையைக் கொல்கின்றானென்று கண்ணன் தன் திருவுளத்தே நினைந்து, பதினாயிரம் நாராயண கோபாலரையும், பதினாயிரம் சஞ்சத்தகரையும் தோற்கவைத்து அருச்சுனனைக் கொண்டுவந்து போர்க்களம் புகுந்தான் என்றவாறு. அப்பொழுது, (எஉ)

750. விசயன் வருதலுமே வீமன்க ணின்றும்
விசயன்மே லேதிரிய விட்டான்—திசைசுழலும்
வாலுடைத்தாய் மூன்று மதமுடைத்தா யீரிரண்டு
காலுடைத்தா யோடுங் களிறு.

எ - து. வீமன் போர் செய்து மற்றவனை வெல்ல வொண்ணாமல் கைவிட்டு, அருச்சுனனுடனே தாக்கி யாது செய்தான பகதத்தன் : (எ௩)

751. மார்மேலுந் தோண்மேலு மால்வண்ணன் றன்மேலுந்
தேர்மேலும் பொற்பகழி சிந்தினான்—[1]போர்மேலு
மேன்றான் சரமாரி யெண்ணு யிரங்கோடி
குன்றுமே லெய்தான் கோத்து.

இவ்வகை தேர்மேலும் குரக்குக் கொடியின் மேலும் கண்ணன் மேலும் யாவராலும் தாங்கவொண்ணாவகை அம்புமழை பொழிந்து நின்றான் பகதத்தன் ; அதுகண்டு யாது செய்தான் அருச்சுனன். (எச)

---

749. படை, காடு; பகதத்தன் சினம், தீ; கார்வண்ணன் காற்று; அக்காற்றால் தள்ளுண்டு வந்த புயல், அருச்சுனன்: உருவகம்.

பா. வே: 1. போரின்மே லென்றான்.

752. வில்லறுத்து நாணறுத்து வெற்றிக் கொடியறுத்து
மல்லறுத்தங் காளை மதமறுத்து—நில்லென்றான்
றேனூறு சோலைத் திருநாடர் [1]கோமானைப்
பூநாறு வேலான் புகன்று.

இவ்வகை பகதத்தன் வில்லுங் கொடியும் கொல்யானையும் குறைவுபட்டு, ஆற்றாமல் தோற்றோடிப் பின்னும் பெருஞ்சினத்துடன் யாவராலும் தாங்கற் கரியதோர் ஆற்றலை எண்ணி யுரைத்துக் கண்ணன்மேல் வெகுண்டு விட்டான். அப்பொழுது விண்ணும் மண்ணும் அதிரவருகின்ற அதனைக் கண்டு வானவரும் பேரச்சம் கொண்டு துணுக்கம் எய்தும் அளவில் மற்றதனை அருச்சுனனுக்குக் காட்டி யாது செய்வித்தான் கண்ணன்: (எரு)

753. மாக்கடல் வண்ணன்றன் மல்லார் வரைமார்பின்
மேற்கதுவ வந்ததோர் வெவ்வேலை—நோக்கி
யிரண்டிறுன் மூன்றாக வெய்தறுத்து வீழ்த்தான்
றிரண்டநாண் காலலைப்பச் சென்று.

இவ்வகை மிக்க ஆற்றலுடைய வேற்படையை அறுத்து விழ்த்தான் அருச்சுனன். அப்பொழுது பின்னும் ஒருபால் வெகுண்டு யாது செய்தான் பகதத்தன்: (எசு)

754. மால்வரையே போன்றதவன் மால்யானை [2]மால்வரை
மேல்வரையின் மாநாகம் வில்விசையிற்—கோலிப் [யின்
பெருமாரி பெய்வதேனப் பெய்தான் சிலையாற்
சரமாரி பெய்கின்றான் றன்.

இவ்வகை மழை பொழிந்தாற் போலத் தன் கடவுட்சிலை கால் வளைத்துக் கணை மழை பொழிகின்ற பகதத்தனைக் கண்டு மிகவும் வெகுண்டு பொங்கி யாது செய்தான் அருச்சுனன்: (எஎ)

755. கணைமாரி யெல்லாங் கலக்கிவிற் கோலி
யிணைமார்பி னூண்புரள வார்த்தே—யிணையில்லாக்

753. கதுவ - பட.

754. மேல் வரை - மேல் எல்லை. கோலி - வளைத்து.

பா. வே: 1. கோமானைப் பூ நாறு வேலாற்.

2. மேல் வரையின் வேலரவின்.

காலன் கடும்படையை விட்டான் கருதலன்மேல்
மால்வண்ணன் றோழன் மதித்து.

இவ்வகை வாருணமும் வாசவமும் உள்ளிட்ட சிறிய கணைகளையும் சுடுகணைகளால் அறுத்து மாற்றி மிகவும் வெகுளி பொங்கி நின்ற அருச்சுனனைக் கண்டு யாது செய்தான் பகதத்தன்: (எஅ)

756. கூர்வாளி நூறு கோடியின்மேற் கோத்தெய்து
போர்வாளி மூந்நூறு போற்பரிமே—வீராய
[1]வச்சிரம்போ லெய்தான் மலைந்தான் றடந்தோளிற்
[2]சிச்சிரம்போன் மன்னன் செயிர்த்து.

இவ்வகையால் பகதத்தன் விட்ட சிறிய கணைகளைக் கண்ணன் திருவருளால் கிடைத்த வாப்பியம் என்னும் கணையால் அறுத்து மாற்றித் தோற்கச் செய்யக் கண்டு பகதத்தன், கணையெல்லாம் வெற்றியாதலும், மதயானையின் தோட்டியினை, வானவராலும் தடுப்பதற்கரியதனை, பல்லாயிரம் ஆண்டு நிறைவுடையதனை, மணி அழுத்திச் செய்யப்பட்ட ஒளியுடைய வதனை, வைணவ அத்திரமாக நினைந்தோதி வானின்கட் டிரித்து முனையிரிய விட்டெறிதலும், தீக்கொழுந்தால் அரசர்குழாம் வெந்து விழ மாக்கடல் உலகம் தலை பனிப்பச் செல்லாநின்றதனைக் கண்டு, அருச்சுனனும் வைணவ அத்திரம் தொடுக்கலுற்றானைத் தகைந்து மற்றதற்குத் தன் வலப்பாகத்தைக் கொடுத்தான் கண்ணன்: அப்பொழுது யாது நிகழ்ந்ததோ வெனில், (எசு)

757. மன்னன் வெகுண்டெறிந்த வன்கை வலையமெலாங்
தன்னை யுடையான் றடமார்பிற்—றன்னிகுளைக்
காலைவாய்ச் [3]சேந்த கடவுட் கதிர்மணிசேர்
மாலையாய்ப் பூண்டதே வந்து.

---

755. கருதலன் – பகைவன்; பகதத்தன்.

756. மலைந்தான் – சூடிக் கொண்டான். வச்சிரம் – இடி; செயிர்த்து எய்தான் என்றும், சித்திரம்போல் மலைந்தான் என்றும் இயைக்க. சிச்சிரம், சித்திரம் என எதுகை நோக்கியது.

757. சேந்த - சிவந்த. வளை, மாலையாயிற் றென்க.

பா. வே: 1. வச்சிரமேல். 2. சித்திரம் போல்.
3. செங்கட்.

கடவுள் வாழ்த்து

771. மூன்றுருவா யப்பான் முதலுருவே யில்லாத
சான்றுருவா யப்பாற் றருமுருவாய்த்—தோன்றி
யிணையாக நாகத் தறிதுயில்வா னேன்றுந்
துணையாக நெஞ்சே தொழு. (எஅச)

772. வெய்ய கதிரோன் விளங்க வுலகெங்குந்
துய்யபொற் குன்றின்மேற் றோன்றுதலுங்—கைவகுத்துப்
பாராளு மன்னர் படையிரண்டு மார்த்தெழுந்து
போராளப் புக்காரப் போது.

வ - து. கதிரோன் எழக்கண்டு இரண்டுபடையும் பதின் மூன்றுநாள் போர்க்களம் புகுந்தபொழுது அருச்சுனனைச் சஞ்சத் தகர் ஒழிந்தார்வந் தறைகூவிக்கொண்டு போர் மண்டலம் கழியக் கொண்டு போயின பின்னைத் தருமனைப் பிடிக்கவெண்ணிக் காலிங்கனையும் கௌசலனையும் வணிகரையும் சூரசேனரையும் பல பதினாயிரம் அரசர்களையும் சுற்றுமுற்றும் விளிம்பாக நிறுத்தி, இலக்கண குமரனையும் எழுபத்தாறாயிரம் தேராட்களையும் துரியோதனனையும் நடுவு நிறுத்தி, சயத்திரதனையும் பல பதினாயிரம் போர் வீரரையும் நாசி முகத்தின்கண் நிற்பாராக்கிச் 'சகடம்' என்னும் அணிவகுத்து மறைக்கொடி விசும்பனுவத் தேர் குதிரைகளை முடுக எவி முப்பதினாயிரந் தேர்க்குழாத்தோடும் அச் சகட அணிக் காப்பாளனாய் நின்றான் துரோணன் என்றவாறு. (எஅரு)

773. சல்லியனுங் [1]குண்டலனுஞ் சாளுவனு மாளுவனுங்
கோல்லவருங் கொங்கணருங் கோசலரும்—பல்லவருங்
[2]கங்கணருங் காந்தாரர் காலிங்கர் தம்மோடு
போங்கணையாற் போர்புரிந்தார் புக்கு.

இவ்வகை சல்லியன் துச்சாதனன் உள்ளிட்ட பெருவீரர் தம்மிற் றிரண்டு வீமனை அறைகூவிக் கொண்டுபோய்க் கொல்ல

---

772. கைவகுத்து - அணி வகுத்து.
773. பொங்கணையால் - பொங்குதலால்; எழுச்சியால்.

பா. வே : *1. குந்தளனும். 2. தங்கணருங்.*

வேண்டும் என்று மனத்தெழுந்த களிப்பினோடு மடசுதிரகோசம் என்னும் அழகிய இடமபுக்கார் அப்பொழுது. இப்பால், துரோணன் திட்டத்துய்மனால் வகுக்கப்பட்ட மண்டலம் என்னும் அணியைப் பிளந்து புக்குப் பெரும்படையோடு வந்து மூடிக்கொண்டு எதிர்மலைந்தாரைக் கொன்றுழக்கிச் சோமதத்தன் தலைதுமித்துத் துட்டகேதுவினைத் துண்டஞ் செய்து பாடணரைப் படவுழக்கிப் பத்திரசாலரைப் பரிந்து கொன்று குண்டலரைக் குடல் சரிவித்துக் கோசலரைக் குருதியிற் பாய்ச்சிச் சிஞ்சயரைத் தலைதுணித்துச் சித்திரசேனனையும் திட்டத்துய்மனையும் தேருஞ் சிலையும் அழியவெய்து. களிற்றினங்களைக் களத்தவித்துச் சத்திய சாத்தகியைத் தளர்வித்துத் தருமனைக் காத்தவரை யெல்லாம் கூற்றுலகத்துக் கேற்றித் தருமனை வளைத்துக் கொண்டான். அப்பொழுது தங்கள் பெரும்படையின் அழிவுகண்டு தன்னருகு நின்ற அபிமன்னுவை நோக்கி யாது சொன்னான் தருமன்: (கஃகூ)

774. மாயன்று னன்றேன் மகனன்றேல் வானவர்கோன்
சேயன்றே லல்வென்ற தேர்வேந்தே —நீயன்றி
யானைக்கட் டார்சிதைப்பா ராழ்கடல்போன் முன்னின்ற
சேனைக்கட் டார்சிதைப்பார் சென்று.

இ - ள். கண்ணனாதல் அருச்சுனனாதல் பிரத்தியும்னனாதல் அன்றிச் சக்கர அணி பிளக்கவல்லார் இல்லையாதலால், அருச்சுனன் வருமளவும் நம்படைக்கும் நமக்கும் கேடு விளையும். யானுமின்று துரோணன் கையில் படுதல், பிடியுண்ணுதல் இவ்விரண்டில் ஒன்று உறுதியாயிருந்தது. ஆதலால் நீ இந்த அணியைப் பிளந்து உட்புகுவாயாக என்று தருமன் சொல்லக் கேட்டு யாது செய்தான் அபிமன்னு: (கூ0)

775. விற்புட்டி லிட்டு விறற்பட்டஞ் சாத்திமிகப்
[1]புக்க சரத்தூணி மேற்போக்கி—யுக்கிரமாய்
வெஞ்சிலையோன் றேர்ந்தி விறற்கரிபோற் றேன்றினன்
வெஞ்சினவேன் மான்மருகன் மிக்கு.

அன்றியும், (கூஅ)

---

774. கட்டு - பகைவர் உட்புகவொண்ணா ஒருவகை வகுப்பு: வியூகம் என்பது அது.

775. பட்டம் - நெற்றியில் இடப்பெறுவது. மான்மருகன் - அபிமன்னு.

பா. வே: 1. புக்குஞ் சரந்தூணி.

776. மூரிச் சிலையு மூரட்கோதை யுங்கட்டிப்
பூரித்த கண்டம் புனைந்துடனே—வீரக்
கொடிமேற் குரங்குயர்த்துக் கொண்டாங்கே சென்று
னடிமேற் றொழுவா னமைந்து.

இவ்வகை போர்க் கோலங் கொண்டு தன் திண்டேரை வலம் வந்து வணங்கி மேல்கொண்டு கடுவிசையாற் சென்று தருமனைக் கண்டு யாது செய்தான் அபிமன்னு: (௬௯௯)

777. விற்கையா லேதொழுதான் வேந்தனை [1]வேந்தனுந்தன்
பொற்கையா லேதழுவிப் போக்கினான்—நற்குலத்து
மாமனையுந் தந்தையையும் போல வயவேந்த
ரேமுனையை யெய்தழிப்பா யென்று.

இவ்வகை வில்லேந்திய கையனாய்ச் சென்று தருமனை வணங்கி நிற்ப, அபிமன்னுவைத் தழுவிக்கொண்டு தந்தைக்கு நுந்தை யன்று தானவரைக் கொன்று கொடுத்தாற்போல நீயும் என்பகையைத் தணித்துத் தருவாயாக என்று விடை கொடுப்ப விடை கொண்டு யாது செய்தான் அபிமன்னு: (௭௦௦)

778. மற்றொழிந்த தந்தையரைத் தாளிறைஞ்சி மாமணித்தே
ருற்றங்கே மேல்கொண் டுருமுப்போற்—[2]செற்றதிர்ந்து
சேனையின்முன் சென்று திறலழிக்கப் புக்கானே
[3]யானையின்மேற் சீயம்போ லன்று.

இவ்வகை தருமனை விடை கொண்டு பின்பு நகுல சகாதேவரையுங் கடோற்கசனையும் வணங்கி மற்றவரையும் விடை கொண்டு வெம்முனையின் மேற்போன வீமனைத் தேடிக் காணாது மற்றவனையும் அருச்சுனனையும் கண்ணனையும் நினைந்து வணங்கி மிக விரைவாய்த் தேர் கடாவி முடுகச் சென்று பகைவர் படை முகத்துத் தாக்கி வீரத்தோடும் யாது செய்தான் அபிமன்னு: (௭௦௧)

---

776. முரண் - வலிமை. கோதை - முன்கைத்தோற்கட்டு. கண்டம் – கவசம்; மெய்மறை.

778. சீயம் - அரிமா.

பா. வே: 1. வேந்தனுந்தான். 2. செற்றெதிர்ந்து.
3. ஆனைமேற் சீயம்போ லார்த்து.

779. அதிரதர்கள் சேனையெனு மாழ்கடலி னுள்ளே
முதிர முறைமுறைதே ரோட்டி—[1]யதிருமவண்
மாதவிதான் பெற்ற [2]மரக்கலத்தா னோடிற்றே
போதவிழ்தார் மன்னர்குழாம் புக்கு.

அன்றியும், (௧0௨)

780. முன்னின்ற தூசிப் படைமுழுதுந் [3]தூசறுத்துப்
பின்னின் றரசர்களைப் பிற்படுத்தி—முன்னின்ற
சக்கரக்கை யூகங் கலங்கச் சரந்தொட்டான்
சக்கரத்தான் றங்கை மகன்.

எ - து. கண்ணன் பக்கற் பெற்றதேர் கணையினை மறைமொழிந்து எய்து தூசி முகத்து நின்ற போர் வீரர் அனைவரையும் கலக்குறுத்தி எதிர்மலைந்தாரை மயங்க நூறித் துரோண கிருப கன்னரையும் அசுவத்தாமனையும் சிலையறுத்துச் சல்லியன் சகுனி உள்ளிட்டாரை அருகிறத்திடை அம்பு பாய்ச்சி மற்றவரைச் சூழ்ந்த யானை தேர் கருவிக் காலாட்களையும் கட்டழித்துத் துரோணனால் வகுக்கப்பட்ட சக்கர அணியைப் பிளந்து உள்புக்குப் படை முகத்தை இரிவித்து யானை குதிரை காலாட்களை நிலைப் படுத்திப் பின்னும் யாது செய்தான் அபிமன்னு: (௧0௩)

781. எவ்விடத்த னென்னி லிமைப்பளவி லெங்கெங்கு
மவ்விடத்த னாகி[4]யமர்புரிந்து—தெவ்வுடையக்
கூறுகூ றாக்கிக் கொடுஞ்சினவாய்க் கூற்றம்போல்
வேறுவே றுய்ப்பொருதான் வேந்து.

அன்றியும், (௧0௪)

782. [5]தார்த்தரட்டி சேனையெனுஞ் சாதுரங்கத் [6]தாழ்கடலிற்
றீத்திரட்டி யோட்டித் திசைதூவி—வீழ்த்துருட்டி

---

779. சேனை, கடல். அபிமன்னு, மரக்கலம். முதிரம் - முகில். உறைமுறை - மழைபொழியுமாறு. போது - பூ.

780. தூசு - கொடி. சக்கரத்தான் - கண்ணன். தங்கை - சுபத்திரை; மாதவி என்பவளும் அவள்.

781. தெவ் - பகைவர்.

பா. வே: *1. யதிருமவன். 2. மரக்கலந்தான். 3. தூரறுத்துப். 4. யமர்புரிந் - தெவ்வுடலுங். 5. தாத்திரட்டி. 6. தாழ்கடலைத், தீர்த்திரட்டி.*

மாதவிதான் பெற்ற மதகயந்தா னேடிற்றே
போதவிழ்தார் மன்னர்குழாம் புக்கு.

இவ்வகை சக்கர அணி பிளந்து உள்புக்குப் பெரும்போர் செய்யாநின்ற அபிமன்னுவுக்குத் துணைப்போவாரைப் பெறாது நின்ற அளவில், வீமன் றன்னுடன் போர்மலைந்த பகைவரை அழித்து விரைவினால் வந்து தருமனைப் பணிந்து நின்றானை நோக்கித் தருமன் சொல்லுவான்: கண்ணன் அருச்சுனனையும் உன்னையும் பிரிவித்துத் துரோணன் கிருபன் கன்னன் அசுவத் தாமனொடும் துரியோதனன் என்னளவும் வந்தானைத் துரந்து கொண்டு சக்கரவணி பிளந்து உட்புகுந்தான் அபிமன்னு. நீயும் ஆங்கவனுக்குத் துணையாகக் கதுமெனப் போவாயாக என்று சொல்லக் கேட்டுக் கவலையுளத்தனாய் யாது சொன்னான் வீமன்: (௧௦௫)

783. காலனே யன்ன கடற்படைஞர் தம்மேலே
[1]பாலனே செல்லப் படைவிடுத்தா—யேலங்
குதலைவாய் நாறுங் குருநாடர் கோவே
மதலையாய் வாழுதியோ மற்று.

அதுவன்றியும், முன்னாள் சகுனியது மாயச் சூதினால் நாடும் தோற்று எந்திழையையுந் தோற்றுத் துச்சாதனனால் குழல் தீண்டச் செய்து பாரறியத் துயர்ப்படுவித்தாய். அதுவுமன்றியும் காடுறைவும் வழக்குமாக்கினை; இன்று வீடுமனை யுள்ளிட்ட பெரு வீரரைக் கொன்று நாடு பெறுவதாக விருந்தோமுக்குப் பதினாறு ஆண்டும் நிரம்பிற்றில்லாத பாலனைப் படையின் மேலே விடுத்தாய். அவனுக்கொரு தீங்கு புகுதில் கண்ணன் மனமுங் கன்றும்; அவ்வளவில் ஒரு முழுத்தத்தில் யாங்களும் படுகின்றோம். எம்பெருமானே பிழை செய்தாய் என்று எல்லை யில்லாததோர் கவலையோடும் யாங்ஙனம் போயினான் வீமன்: (௧௦௬)

784. தங்கோன் றிருவடியைக் கைதொழுது தண்டேந்திப்
போங்கோதம் போற்கோதித்துப் போயினா—னங்கோத

782. தார்த்தராட்டி சேனை - துரியோதனர் படை. தாழ்கடல் - ஆழ்கடல். தீத்திரட்டி - சூழ்ச்சித் திறனெல்லாம் ஒன்றாக்கி. மதகயம்- யானை. பின்னிரண்டடிகளை 779 ஆம் பாடற் பின்னிரண்டடிகளுடன் இணைத்துக் காண்க.

783. ஏலம் குதலை வாய் நாறும் - ஏலமும் மழலைமொழியும் மணக்கும் வாய். "கோவே வாய் நாறும் மதலையாய் வாழுதியோ?"

பா. வே: 1. பாலனையே.

மால்வண்ணன் றன்மருகன் றன்மதலை நின்றளவுங்
கால்வண்ண னாகக் கடிது.

இவ்வகை வீமன் வெகுண்டெழுந்து காலாளாய்த் தண்டு பிடித்தோடித் தூசிமுகத்தினைகண் நின்ற துரியோதனன் படையோடு தாக்கி யாது செய்தானோ வெனில்: (கூ0எ)

785. ஆனைகளுந் தேரு மடையப் பிடித்தடித்துச்
சேனைகளைத் தண்டாற் சிதைவித்துத்—தானை
[1]முடியரசைக் கொன்றழக்கி மூரிநீர் சூழ்ந்த
[2]படியரசைக் கொன்றான் பரிந்து.

எ - து. ஊழிக்காலத்துக் கடுமையாய் எழுந்த ஊழிக் காற்றும் ஊழித்தீயும் போல யானை குதிரை வலியையும் நிலப் படுத்திப் பெரும்படையைத் திசைதோறும் சிதறுவித்துக் கூற்றமே போலக் கொதித்தெழுந்து படையைத் துரந்து சுருக்குவித்து அபிமன்னுவுக்குத் துணையாவதாக வீமன் வருகின்ற கடுவிரைவும் தங்கள் பெரும்படையின் ஆற்றாமையும் கண்டு சயத்திரதனைச் சென்றெய்தி யாது சொன்னான் துரியோதனன்: (கூ0அ)

786. நின்ற குலமதலை நம்படையை நேராகக்
கொன்று குவித்திடுவன் கூற்றம்போ—லின்றிவனை
விண்ணுலகுக் கேற்றாயேல் வீமன் றுணைபுகுந்து
மண்முழுதுந் தானாள்வான் மற்று.

எ - து. யாவராலும் பிளக்க அரிய சக்கர அணியைப் பிளந்து உட்புகுந்து உருமேறெனப் பெரும்படையைக் கொல்லா நின்ற அபிமன்னுவுக்குத் துணையாக வீமன் கூடுமாகில் காற்றும் எரியும் போல நம் பெருமபடையைத் துகளாக்குங் கண்டாய். மற்றவன் கூடுவதன் முன்னம் சிவனபக்கற் பெற்ற கொன்றை மாலையாற் றடுத்து அபிமன்னுவினைத் தனியனாக்கிக் கொல்விப்பா யாக எனக்கேட்டு மற்றவனும் வருத்தத்தால் உடன்பட்டு யாது செய்தான் சயத்திரதன்: (கூ0கூ)

784. பொங்கோதம்-பொங்கு கடல். அங்கு ஓதமால் வண்ணன் தன்மருகன் - அங்கே, கடல் வண்ணன் மருகனாகிய அபிமன்னு. கால் வண்ணன் – காலாள். நின்ற அளவும் – நின்ற இடத்தின் அளவும், தொகுத்தல்.

785. அடைய - எல்லாவற்றையும். படி - நிலம். மூரிநீர் - கடல்.
பா. வே: 1. முடியரசர்க், 2. படியரசர்க்.

787. மன்சொன்ன சூழ்கழற்கான் மன்னவர்கண் மாமுனை [மேன்
[1]முன்சென்ற மூரித்தேர் கால்காப்பப்—பின்சென்ற
கொற்றவன்றன் வந்தமரிற் கூடாமை யீசன்பாற்
பெற்றவரத் தாற்றடுத்தான் பின்.

தான் முன்னம் வீமனாற் பட்ட தோல்வியுற்ற பழிதீர வேண்டிச் சிவபெருமானை நோக்கித் தவஞ்செய்ய, ஆங்கவனும் காட்சியளித்து உன் கருத்தென்ன என்றலும், பாண்டவரை வெல்லுமாறெனக்கு அருளிச் செய்வாயாக என்றலும், திருமால் உதவியாளராகிய பாண்டவரை வெல்லல் அரிது. மற்றவரை ஒருக்கால் இழிவுபடுத்தி என்று தன் சடைமுடிக் கொன்றை மாலையை அருளப் பெற்றுப் போந்த கொன்றை மாலையால் வீமன் துணைபுகுதாது விலக்கிவிட்டான் சயத்திரதன் என்றவாறு. இவ்வகைப் பட்ட கொன்றை மாலையைக் கண்டு யாது செய்தான் வீமன்: (௧௧௦)

788. [2]கன்றி யெயிறு கடித்தெழுந்து காலன்போல்
வென்றிசேர் வீமன் விரைந்தேகிக்—கொன்றைத்
தொடைமாலை கண்டளவிற் கைதொழுது வீழ்ந்தா
னடன்மாலை வேலார்முன் றாங்கு.

எ - து. *சயத்திரதன் விட்ட கொன்றை மாலையைக் கண்டு கடுவிரைவோடுஞ் செல்கின்ற வீமன் பெரும்படையோடும் தடுப்புண்டு குருமொழி பிழையாமல் பணிந்து வணங்கி நின்றான் என்றவாறு. அப்பொழுது வீமனோடும் போயின தேராட்களில் இட்டத்துய்மன் வீமனைநோக்கி யாது சொன்னானோ வெனில்:* (௧௧௧)

789. நின்ற குலமதலை நின்னுடைய மைந்தனிவ
னென்று கருதாதிங் கென்செய்தா—யின்றுதவி

787. மன் - துரியோதனன். முனை – போர்முனை. கால் – கால்வழி; மைந்தன் - அபிமன்னு. பின்சென்ற கொற்றவன் – வீமன். ஈசன் - சிவன். வரம் – கொன்றை மாலை கொண்டு தடுத்தல்.

788. கன்றி - கொதித்து. கண்ட + அளவில் – கண்டளவில்; தொகுத்தல்.

பா. வே: 1. *முன்சென்று.* 2. *கன்று மயரிற் கடிதெழுந்து.*

மன்னரசர் முன்னே மதலையைநீ காவாயேல்
விண்ணரச [1]னாமே விரைந்து.

எ - து. உன் புதல்வன் அபிமன்னு தனியே நின்றும் பகைவருடன் பெரும்போர் செய்து அருந்துயர்படக் கண்டும் நீ சென்றுதவி மற்றவனைக் காத்து மலைந்தார் படை குலைந்தோடக் கொல்லாது நின்றனையே என்று பேசிக் கொன்றை மாலையைக் கடந்து உட்புகா நின்ற திட்டத்துய்மன் சாத்தகி கடோற்கசன் தொடக்கத்தாரைத் தகைந்து மிகவெகுண்டு யாது சொன்னான் வீமன் : (௧௧௨)

790. எங்கள் குடிப்பிறந்தா ரெல்லா மிறந்தாலுஞ்
சங்கரன்றன் மாலை தனைக்கடவோ—மங்கவனும்
பட்டானே யாகிற் படுத்தான் [2]றனைப்படுத்தேங்
கட்டாவி யுங்களைவேங் காண்.

என்றிவ்வகை சொல்லி நிற்ப அப்பால் துரியோதனர் படையென்னும் பெரு வெள்ளத்திற் புகுந்த அபிமன்னு யாது செய்தான் : (௧௧௩)

791. தேர்மேலு மாமேலுந் திண்கருங்கை வெண்கோட்டுக்
கார்மேலுங் [3]காலாட் கடன்மேலும்—வீரர்
விலங்கினார் தம்மேலும் வெஞ்சரங்க ளேவக்
கலங்கினார் மன்னர் களத்து.

எ - து. நாற்பத்தெட்டு யோசனை பரந்த கடற்சேனை வெள்ளத்தைப் படவுழக்கிச் சுருக்குவித்துப் புகலரியதோர் பெருங்காட்டைப் பொங்கெரி பரந்து சுட்டாற்போல மதயானையையும் கொடித்தேரையும் பரிமாவையும் காலாள் தொகுதியையும் ஆரவாரமாகக் கலக்கிக் கொல்லா நின்ற அபிமன்னுவைத் துரோண கிருபகன்ன அசுவத்தாமன் உள்ளிட்ட பெருந்தேராட்கள் துரியோதனரோடும் சென்று கணைமழை பொழிந்து தாக்கினார். அப்பொழுது யாது செய்தான் அபிமன்னு : (௧௧௪)

---

790. பட்டான் – இறந்தான். படுத்தான்றனை - கொன்றானை. எம் கட்டாவியும் - எம் வலிய உயிரையும். களைவேம் - போக்குவேம்.

791. கோடு - கொம்பு. கார் - யானை. விலங்கினார் - தடுத்தார்.

பா. வே : *1. னாவான். 2. றனைப்படுத்தென், கட்டாவியுங்களைவன். 3. காலாட்க டம்மேலும்.*

792. வார்கடா மால்யானை மன்னன் குலமதலை
போர்கடா வெம்முகத்த போர்வாளி— போர்புகா
முன்புக்கா ரெய்தார் முகங்கூர் நெடும்பகழி
[1]யொன்றுக்கா றெய்தா னுடன்று.

இவ்வகை ஆங்கு எதிர்ப்பட்டாரையும் படைக்கலங்களால் அறுத்து மாற்றி மற்று நின்ற வீரர் கூட்டங்களையும் கலங்கச் செய்து ஆர்க்கின்ற அபிமன்னுவை அத்திரிக வேந்தன் எதிர் விலங்கி யாது பட்டானோ வெனில்: (௧௧௫)

793. வடிக்கணையான் வில் லுதைத்த வாயம்பு பாய
வடற்சிலையுந் தேரு மழிந்து—[2]பிடித்திருந்த
வாளுந்தன் கேடகமு மண்மேல் விழவிழுந்தான்
றோளுந் தலையுந் துணிந்து.

இவ்வகையினால் தேருஞ்சிலையும் அழிப்புண்டு, மார்புந் தோளும் ஒலிப்புண்டு, வாளும் கேடகமும் பிடித்தோடித் தோளும் தலையும் அறுப்புண்டு அத்திரிக வேந்தன் பட்டு வீழ்தலும் அது கண்டு மிகஅச்சம் எய்தி இரிந்திட்டது துரியோதனன் படை. அப்பொழுது, (௧௧௬)

794. அங்காகோ னுள்ளிட் டரசர் குழாமெல்லா
மெங்டா போவ தினியென்னப்—பொங்கிவருந்
தேரரசர் சூழத் தெரிசரமேற் றாவினார்
போரரச ரெல்லாம் புகுந்து.

இவ்வகை துரியோதனன் படை யுடைந்திட்ட தெல்லாம் ஒருமுகமாய் நின்று கணைமழை பொழிந்தார்ப்ப அப்பொழுது யாது செய்தான் அபிமன்னு : (௧௧௭)

795. வந்தெதிர்ந்த டல்வேந்தர் மார்மேலுந் தோண்மேலும்
பந்தியாய் நின்ற படைமேலு—முந்தி

792. வார்கடா மால்யானை - பெருமுழக்கமிடும் வலிய யானை. போர் கடா - போர்க்கண் கடாவும். போர் வாளி - பகைவரை மூடும் அம்பு. போர்புகா முன் புக்கார் - போர்க்களத்திற்குப் போ முன்னரே போய்ச் சேர்ந்தார் உக்கு ஆறு எய்தான் - அஞ்சி ஓடுங்குமாறு எவினான்.

795. பந்தி - தொகுதி; வரிசை.

பா. வே: 1. ஒன்றுக்கொன்று. 2. பிடித்திழிந்த.

விடுத்தா னடுசரங்கள் வேல்வேந்தர் தம்மைக்
கெடுத்தான் [1]றிறலாற் கிளர்ந்து.

எ - து. துரியோதனனைக் கலக்குறுத்தித் துச்சாதனனைத் தேரழித்துத் துரோணனை வில்லறுத்துக் கன்னனைக் கட்டழித்துப் பூரி பூரிச்சிரவாவினையும் புறகிடுவித்துச் சல்லிய சகுனியரைச் சிதறுவித்து மற்றொழிந்த தேராட்களையும் வீரர்களையும் தேரும் சிலையும் அழித்து ஊர்தி இழந்து காலாளாய் ஓடத்தாக்கி ஊழிக் காலத்து உருத்தெழுந்த கூற்றமேபோலக் கொன்றுழக்கிக் குருதிப் புனல் பெருகிக் குமிழியிட யானை தேர் குதிரை கருவிக் காலாளும் பட்டவிந்து நிணமவிழப் பிணமிதப்பக் கரையினறிப் பெருகாநின்ற சோரிப்புனலிடையிற் குளித்தெதிர் பொருவாரை யின்றிக் களித்தெழுந்த மனத்தனாகித் திரிகின்ற விடலைக்கூற்றம் அபிமன்னுவைக் கண்டு அச்சமும் பரிவும் எய்தி ஊர்தி பலவிழந்து துரப்புண்டு போந்து நின்ற எல்லா வீரர்களும துரியோதனனும் தம்பிமாரும் பெருந்தோட்களும் பட்ட தோல்வியையும், மானச் சினத்தீக் கனற்ற ஆர்த்தெழுந்து மிக்கெழுந்த வெகுளியுடன் கொல்லா நின்ற அபிமன்னுவையுங் கண்டு துரியோதனன் மகன் இலக்கண குமரன் வந்து என்றுகொள்ள அவனை யாது செய்தான் அபிமன்னு: (ககஅ)

796. கொற்றக் குரங்குயர்த்தான் கோமதலை கோளரவ
வெற்றிக் கொடிகொண்டான் [2]மெய்மகனை—யற்றுத்
தலைபுரண்டு வீழச் சரந்தொட்டா னங்கோர்
மலைபுரண்டு வீழ்வதுபோல் மாண்டு.

இவ்வகையினால் மன்னர் மன்னன் துரியோதனன் மகன் இலக்கணகுமரனை அரும்படைக்கலங்களால் தலைதுமித்து அவனொடும் வந்த அரசகுமரர் எண்ணிறந்தாரைத் தலையும் இடையும் துணித்து அரிமுழக்கஞ் செய்து எம்மருங்குந் தானேயாய்ப் பொருகணை மாரி பொழிகின்ற மாதவி மைந்தன் பெருவலியாளனை எண்ணிறந்தார் சூழ்ந்து கொளலும் மத்திர வேந்தனைத் தேரழித்து மற்றவனைப் புறங்கண்டு, வந்தெதிர்ந்த அரசர்களை எப்பக்கமும் ஓடத்துரத்தி, பல்லாயிரம் மதகரியும் பல்லாயிரம் மணிநெடுந்தேரும பல்லாயிரம் பாய்மாவும் எண்ணிறந்த காலாள் வெள்ளமும் தண்டு சரங்களால் அவிய நூறிக் கொடிப் படையை இரிவிக்கின்ற அபிமன்னுவினுக்கு நிலையாற்றுது இரிந்தோடுகின்ற பெரும்படையைக் கண்டு, மிகக் கடுமையுடன்

பா. வே: 1. திறத்தான் கிளர்ந்து. 2. மேயமக - னற்றுத்.

மகனுக்கு இரங்கித் துரோண கிருப கன்ன அசுவத்தாமனையும் நோக்கி யாது சொன்னான் துரியோதனன் : (௧௧௯)

797. இம்மகியு மிவ்வரசும் வேண்டே னிகலமரு
ணின்மகனு நினகண்ணனுங் காணவே—யென்மகனைக்
கொன்றுளனாய் நிற்கவோர் [1]கூனல்வில் வேள்போன்மா
லின்றுளனா யென்செய்கேன் யான்.

அதுவன்றியும் எனக்கு நட்புரிமையால் போர்செய்ய வந்த இருமுழுக்கு அரசவீரர் அறுபதினாயிரவரும், அரசகுமரர் நூறாயிரவரும் ஐம்பது இலக்கம் மதகரியும் நூறாயிரலக்கம் குதிரைகளும் இரண்டு நூறுலக்கம் மணிநெடுந்தேரும், எண்ணிறந்த காலாள் வெள்ளமும் என்மகன் இலக்கணகுமரனும் இதற்குமுன் பட்டார்கள். இனிச் சயத்திரதன் ஒருவனும் ஒழிய என உறவினரும் பெரும்படையும் இவன் கண்ணில் அச்சத்தால் இரிந்தோடுகின்றன; யானும் இவன் கையிற் படுகின்றேன்: இனிச் சிறிது பொழுதில் அருச்சுனன் வந்து அபிமன்னுவுக்குத்துணை செய்யுமாகில் பின்பு முக்கடவுளராலும் வெல்லவரிது; அதற்கு முன்னமே மலைந்திவனைக் கொன்மின் என்று துரியோதனன் வெகுண்டுரைப்பப் பல பதினாயிரம் போர் வீரரும் துரோண கிருப கன்ன அசுவத்தாமனும் சென்று செல்வனைச் சூழ்ந்து கொளாலும் அப்பொழுது யாது செய்தான் கன்னன் : (௧௨௦)

798. மன்ன னுரைகேட்டு மாமறையோ னுள்ளிட்ட
மன்னர் பலரோடும் வந்தெதிர்ந்து—கன்னன்
சரமாரி தூவித் தடுத்தான் கதத்தாற்
பொருமால் களிற்றுனைப் புக்கு.

அதுகண்டு யாது செய்தான் செல்வன் : (௧௨௧)

799. அங்க வளநாட னெய்தானை யையைந்து
வெங்கணைகொண் டீரிருகால் வில்லறுத்தே—யங்
[கவன்றன்

---

797. மகி - நாடு. வில்வேள் - மன்மதன்.

பா. வே : 1. கூநல்வேள் போலுமா;
கூனவேள் போலுமா;
கூனற் குரங்குபோ;

கோலாளைக் கொன்று கொடித்தே ரழித்தவனைக்
காலாளாச் செய்தான் கறுத்து.

இவ்வகையால் வில்லுந்தேரும் அழிப்புண்டு வலவனையும் படக்கொடுத்து வெறுநிலத்திடை இழியப் பாய்ந்து விரைந்தோடித் துச்சாதனன் தேரேறிக் கடு விரைவோடும் உடன்று பொங்கி அபிமனனுவுடன் வந்து தாக்கி யாது செய்தான் கன்னன்: (௧௨௨)

800. கொற்றச் சிலைத்தொழிலுங் கோலத்தேர்ச் சாரதியு
[1]மற்றப் படுமோற்ற மாறாதே—மற்றவனைத்
தான்பட்ட வெல்லாம் படுத்தினான் றார்வேந்த
[2]னூன்பட்ட வேலா னுடன்று.

எ - து. காளமுகில் பொழிந்தாற் போலவும் கலந்தெழுந்த இடியேறு போலவும் பார்முழுதும் பரந்தெரிய அம்புச்சரங்கள் திசை மறைப்ப அக்கினி அத்திரத்தொன்றும், விட்டுணு அத்திரத் தொன்றும், மாலிங்க அத்திரத்தொன்றும் இப்படிப் பல வகைகளால் பகைவர்களுக்கும் அறியலாகாது வகைவகையாகச் சரமழை பொழிந்து சக்கர வளையம் எனத் திரிந்து ஆர்க்கின்ற செல்வன் மெய்ம்மறைகளைத் தக்க கணைகளால் அறுத்து, மாற்றி யொரு நான்கு வாள்வாய் அம்பு கொண்டு அவன் வெண்குதிரை களைத் துணித்து வீழ்த்தி இரு நான்கு சுடுகணையால் அவன் வலவனையும் குரக்குக் கொடியினையும் அறுத்து மாற்றி அரி முழக்கம் செய்தான் கன்னன் என்றவாறு. இவ்வகை அங்கர் கோனாற் றேரழிப்புண்டு யாது செய்தான் அபிமன்னு: (௧௨௩)

801. வாமத்தேர் [3]கட்டவிழ மாணச் சிலையழியச்
சேமத்தேர் மற்றாரத் தேரின்றி—நாமக்
கொடுஞ்சுடர்வாள் கேடகங்கைக் கொண்டிழியப்
னெடுஞ்சுடர்வாண் மன்ன னேக. [பாய்ந்தா

800. அற்றப் படுமாற்றம் - அழிவுபடும் தன்மை. தான்பட்ட வெல்லாம் - தான் பட்ட அழிவெல்லாம். படுத்தினான் - அபிமன்னுவும் படச்செய்தான்.

801. சேமத்தேர் - வைப்புத்தேர். நாமம் - அச்சம். ஏக - மனமுடைய.

பா. வே: 1. அற்றுப் படுமாற்றம்; அற்றப் படச்செய்து.
2. றான்பட்ட. 3. கட்டவிய.

எறிகடல் நடுவுள் இளஞாயிறு வெளிப்பட்ட தென்னக் கிண்கிணி கணகண வென்பதோர் ஒலியுடைய அகன்ற தேர் ஆர்க்க, கேடகம் இடஞ்சுழல, வச்சிரப்படைக்கு ஒப்பானதோர் வெஞ்சுடர்வாள் வலஞ்சுழல, எழிற்றேர் மிசை நின்றிழியப் பாய்ந்த அரசிளங்குமரன் அபிமன்னுவினைக் கண்டு முன்னம் பரந்தகன்ற எல்லா வீரர்களும் திசைதிசைதோறும் வந்து கூடி நிரைத்து நின்று கொடிய கணைகளால் மறைத்தார்த்தார்; யாங்ஙனமோ வெனில் : (௧௨௪)

802. நம்பற்கு நேராக நாற்காலு மூக்காலுந்
தம்போற் படையழிந்த தார்வேந்தர்—செம்போற்
கலியம்பால் வெம்முகத்துக் காய்பரித்தே ரோட்டிக்
குவியம்பா லெய்தார் குறித்து.

அது கண்டு யாது செய்தான் அபிமன்னு : (௧௨௫)

803. வீழ்சுடர்வாண் மன்னர் விடுசரங்க ளெல்லாந்தன்
சூழ்சுடர்வாள் வட்டணையி லேதுணித்துச்—சூழ
மழிதந்து [1]வேந்திரிய வாளோடும்போ யானை
யுழிதந்து கொன்றா னொருங்கு.

இவ்வகை மிக நுண்ணிய செயலாளனாய் ஆங்கவர்கள் எய்து ஆர்க்கின்ற அடுசரங்களை ஏழும் எட்டும் துண்டமாக வாள்வீசி அறுத்து மாற்றிக் கன்னனோடு தலைப்பெய்து மற்றவன் தேர்ப் புரவியையும் வலவனையும் அவிய நூறிக் காந்தருவ வித்தையாற் கடற்படையை இரிய நூறி ஆர்க்கின்ற மாதவி மைந்தனைக்கண்டு வானில் அமரர் கூட்டம் மகிழ்ந்து மலர்மழை பொழிந்தார். அப்பொழுது துரியோதனர் படை ஒன்றொருவரை முகநோக்கி யாது சொன்னார்: (௧௨௬)

804. [2]களிமா னுலகுக்கோர் காலனே சொல்லீர்
கடல்வண்ணன் றங்கை கருவுயிர்த்த தென்பார்
[3]தெளிமான வாளேந்திச் செய்கின்ற போரிற்
சிலையேந்திச் செய்த செருவென்ன தென்பா

802. கலியம் - கடிவாளம். குவி அம்பு – நிறைந்த அம்பு.
803. வட்டணை - சுழற்சி. அழிதந்து - அழிந்து. உழிதந்து – அலைக்கழித்து.

பா. வே : 1. வெந்திரிய. 2. களிமா னுலகுக்கோர்.
3. தெளிமா னவவேந்திச்.

ரோளிமாலோ டன்றே படைபயின்ற தென்பா
ரோள்ளிலைவேற் பார்த்தன்சே யல்லனோ வேன்
புளிமாவ தாகுமோ தேமாங்கன் றென்பார் [பார்
புலிக்குப் பிறந்த தெலியாமோ வென்பார்.

என்றிவ் வகையினால் திருதராட்டிரர் படை வியப்ப ஆங்கு அவர்களை எப்பக்கமும் ஓடத்துரந்து துரோணனோடே தலைப் பெய்து யாது செய்தான் அபிமன்னு : (௩௨௭)

805. போராளு மன்னர் போகுசளங்கைக் கோண்டப்போ
தோராண்மை சொல்லச் [1]சுளிந்ததற்பின்—பாராளும்
வேந்தற்கா வந்தெதிர்த்த [2]வெம்மறையோன் வெஞ்
சேர்ந்திருகால் வீழ்த்தான் சிதைத்து. [சிலையைச்

இவ்வகை துரோணன் தேரும் சிலையும் அழிந்து படைக்கலம் இல்லானாக்கினான் அபிமன்னு. அது கண்டு மிகவும் நாணி மானச் சினங் கனற்ற மற்றொரு சேமத்தேர் ஏறிச் சேமச்சிலை யொன்று வாங்கிப் பார்வேந்தர் பலருங் கண்டு நிற்க அபிமன்னுவின்மேற் சென்று யாது செய்தான் துரோணன் : (௩௨௮)

806. [3]கோடுஞ்சினத்தீப் போங்கவோர் கூர்வாளி கோத்துக்
கடுஞ்சிலைநாண் காலலைப்பச் சென்றங்—கடுஞ்சரமாத்
தாளடும்போர் மாமறையோன் வீட்டினா னற்றேருகை
வாளோடும்போய் வீழ மலைந்து.

இவ்வகை துரோணனால் தோள் அறப்புண்டு மற்றதற்குத் துளங்காது மானத்தேரின் மணியாழியை மற்றைக் கையாற் பறித்துக் கொண்டு கண்ணனிடைத் தான் பயின்ற கலைத்திறத் தால் அங்கதனை மறைமொழி நினைந்து விரற்படுத்தி வானில் திரித்திடுதலும் அதுகண்டு வீரரெல்லாம் ஒன்றொருவரை முக நோக்கி யாது சொன்னார் : (௩௨௯)

---

805. சேந்து – சிவந்து. சேர்ந்து எனின் தொடர்ந்து என்றும்.

பா. வே: 1. சுளித்ததற்பின்.
2. வென் மறையோன்.
3. கொடுஞ்சினத்தீப்.

807. பாண்டவர்க ளின்றே படையொழிந்து பாராள்வார்
மூண்டசெரு வின்றே முடிந்ததா - வீண்டவனின்
கைவிடா முன்னமினிக் காலசக்க ரந்தன்னை
[1] யெய்திடுமி னெல்லீரு மின்று.

இவ்வகை திருதராட்டிரர் படை யொன்றொருவரை முக நோக்கிச் சொல்லுமளவில் அபிமன்னுவினால் விடப்பட்ட கால சக்கரம் யாங்ஙன மோடிற்றென்னில் : (௩௩௦)

808. காலன் கடும்பாசங் கைக்கொள்ள வெண்டிசையும்
போல நடுங்கிப் பொலிவழிந்து—வேலையெனக்
காலைசூழ் மாசேனை நோக்கிக் [2] கழிந்ததே
வேலைசூழ் மன்னரெலா மிக்கு.

இவ்வகை கால சக்கரத்தை மறையோதி விடுதலும் கண்ணன் காலசக்கரம் போல உலகங்களை எரித்திடுவதோர் கடுமையுடன் வருகின்றதென்று பல பதினாயிரம் படைவேந்தரும் பருதி மண்டலத்தை மழை மறைத்தாற் போலக் கணைமழை பொழிந்து பின்னமாக்கினர். அப்பொழுது அபிமன்னு யாது செய்தான் : (௩௩௧)

809. [3] சுற்றுந்தான் பார்க்குந் துணைகாணான் றேர்காணான்
[4] பற்றத்தான் பார்க்கும் படைகாணான்—முற்றுந்தான்
றன்படையே யாயினான் றாமரைப்பூப் [5] போன் மலர்ந்
மூன்படையும் பின்படையாய் மொய்த்து. [தான்

இவ்வகை எண்ணிறந்த அரசர்களோடும் ஏழு அக்குரோணிப் படையுடையானாகிலும், மண்மீதில் கண்ணனை மாமனாக உடையானாகிலும், தேவர்கோன் மகன் காண்டவக் காடழித்த அருச்சுனனை யும், வீமனையும் தந்தையாக உடையானாகிலும், காற்றும் தீயும் போல்வார்கள சத்திய சாத்தகி, திட்டத்துய்மன், கடோற்கசன்

807. படையொழிந்து — போரொழிந்து.

808. வேலையெனக் காலைசூழ் மாசேனை - கடல்போலக் காலைப் பொழுதில் சூழ்ந்து வந்த பெரும் படை. கழிந்தது - ஓடியது.

பா. வே : 1. யெய்திட ரெல்லீரு. 2. கழிந்தனரே.
3. சுற்றித்தான். 4. பற்றித்தான்.
5. போன்மலங்கு.

என்பாரையும் உத்தரமோசாவையும் உதார்மனையும் தனக்குத் துணையாக உடையானாகிலும் முன்னை வினை வயத்தால் துணையின்றித் தனியனாகித் தேருஞ்சிலையும் தோளும்வாளும் இழந்து காலசக்கரமும் பழுதாகிக் கவசமும் கிழிந்து போரிழந்து பசும்புண்ணின் நிணங் குழம்பின கொழுங்குருதியிற் புறங்கூடவும் தளர்ந்திலாத பெருவலிமையினோடும கடற்படையைக் கலக்குறுத்தித் திரிகின்ற அபிமன்னு யாது போனானோ வெனில்: (௩௩௨)

810. ஒற்றைத் தடக்கையா லொண்குருதிச் செவ்வொளியாற்
சேற்றத்தோ டாளரியச் சீற்ற—னற்றைக்கோர்
கல்லாடு கொல்லுங் [1]கடாயானை போன்றனே
மல்லார்தோட் பார்த்தன் மகன்.

இத்தன்மையினால் விரைந்தோடி யாங்கொரு பெருமனை வயிரத்தண்டு விழுந்து கிடந்ததனை யெடுத்துக்கொண்டு அசுவத்தாமனின் மான்றேர்ப் புரவிகளை மடியமோதி ஆங்கவனைக் காலாளாக்கிச் சிறும அளவில் அதுகண்டு துச்சாதனன மகன் செயசேனன திண்சிலையேற்றித் தெரிகணை தெரிந்து தேரேறியார்த்து வந்து அபிமன்னுவினுடன் தாக்குதலும் அதுகண்டு தேவர்கள் யாது சொன்னார்: (௩௩௩)

811. கையிழந்து வில்லிழந்து காலாளாய்ப் புண்கூர்ந்து
மெய்தளர்ந்து நின்றானை வெற்றிகொளப்—பையரவ
மேந்தினான மைந்த னிகலமருள் வில்லேந்திப்
போந்தவா றென்றோ புகல்.

இவ்வகை தேவர்களும் வியப்புறத் துச்சாதனன் மகன் வந்து தாக்கினான். அது யாங்ஙனமோவெனில்: (௩௩௪)

812. துச்சா தனன்புதல்வன் றோன்றினான் றோன்றலுந்தே
ரச்சா சுவங்களையு மாங்கடித்து—மற்றவன்றன்
சாரதியை வீழ்ப்பத் தனுவொழிக்கு[2] தண்டேந்திப்
போர்மலைந்து நின்றான் புகன்று.

---

810. செற்றத்தொடு ஆள் இரிய - செற்றத்தொடாளிரிய. கல்லாடு - மலையாடு; வரையாடு.

812. தேர் அச்சு அசுவம் - தேரச்சாசுவம்.

பா. வே: 1. கடயானை. 2. வாள்வாங்கிப்.

இவ்வகை துச்சாதனன் மகன் தாக்கினானை, தேர்க்குதிரை களையும் வலவனையும் படவடித்து மற்றவனும் வலவன்படக் காலாளாய் ஒரு தண்டுகொண்டு எதிர்க்கப் பெரும்போர் செய்யத் தொடங்கினான் அப்பொழுது; அது யாங்ஙனமோ வெனில்: (௧௩௫)

813. தண்டோடு தண்டு தடுமாறத் தாமலைந்தார்
மண்டு செருவில் வழக்கழ்வு—கொண்ட
குலவேந்தன் றம்பி குமரன் விழ வீழ்ந்தான்
சிலைவேந்தன் வாழ்விசயன் சேய.

இவ்வகை துச்சாதனன் மகன் தண்டு கொண்டு தாக்கினானைப் பெரும்போர் செய்து கொன்று, செலவின் மிகு விரைவாலும் செந்நீரின் குறைபாட்டாலும் முண் முருக்கு மலர்ந்தாற்போல் எண்ணிறந்த புண்களாலும் அடிதளர்ந்து ஆற்றல் கெட்டுத் தளாவெய்தி நிலத்திடை வீழ்ந்திட்டான் அபிமன்னு என்றவாறு. அப்பொழுது வானில் தேவர்கள் வியப்பெய்தி இன்னிலை கொடுத்துப் புகழ்ந்துரைத்துப் பூ மழை பொழிந்து சீரிய வானவூர்தியேற்றிக் கொண்டு செல்ல, மத்தளம் வீணையொடும அரம்பையர்களின் கூத்தும் இசையும் குலவ விளக்கமாக வீர விடுதலை புக்கானாகக் கருதுவது. (௧௩௬)

814. மேதக்கா ராமாறிங் காருரைப்பார் மேவலரால்
வாதைப் படாநின்ற மன்னவர்க—ளாதிக்கண்
மாக்கருணை யான்மருகன் வல்லாண்மை செய்ததற்கு
மாக்கருணை தோன்றிற்றே வந்து.

இவ்வகை அபிமன்னு பட்டுவீழ்தலும் ஆர்த்தெழுந்தது துரியோதனர் படை. அதிர்ந்தியம்பின சங்கு பேரிகை; செங்கதிர்ச் செல்வனும் மேல்மலைக்கு அண்ணியன் ஆயினான்; துரோண கிருப கன்ன அசுவத்தாமனும் பூரி பூரிச்சிரவாவும் பிறநாட்டு வேந்தரும் எண்ணிறந்த படையும தததம் மக்களை இழந்தார் போலப் பெருந் துயரத்தினோடுங் கைவாங்கித் தம் பாடிவீடு புகுந்தாராகக் கருதுவது. இப்பால் பாண்டவர் படையும் அபிமன்னுவின் பாடுகேட்டுக் கைதளர்ந்து மெய்சோர்ந்து கருத்தழிய நிலத்து வீழ்ந்து கிடந்து யாது சொல்லி அரற்றினான் தருமன: (௧௩௭)

---

813. வழக்கழிவு - உறுப்புக்கள் இழந்து படைக்கலங்கள் இன்றிப் பொருவானைப் படைகொண்டு தாக்கும் முறைகேடு.

814. மாக்கருணையான் - கண்ணன். மாக்கருணை தோன்றிற்று - இறப்பென்னும் அருட்கொடை தோன்றிற்று. மா - இறப்பு.

815. வெம்பிமத யானையின்மேல் மீளாயங் கேட்டு
விராடன் குலமதலை மெய்பூரித் தாங்கே
நம்பிவரு கின்றானென் றென்றிருசகுங் கோல் லோ
நாரா யணன்றங்கைக் கென்னுரைப்பே னந்தோ
தும்பிமலர்த் தார்விசயன் சூழேர்யிற பாயத்
துணைசெற்றே னென்றனுடைத் தோல்வினையா லந்
வெம்பியழும் யானுடனே யெறிடலைஞர் முகத்தே [தோ
யேகவிட்டுப் பின்பிருந்தோ மெம்முயிரைக் காத்தே.

அன்றியும், (௩௧௮)

816. செறிகடகத் தோள்விசயன் சீர்மதலாய்
செங்கண்மால தெய்வ மார்பிற்
போர்யிடையே யாய்வளர்ந்த போதகமே
மாதலிதன் புதல்வா போரி
லெறிபடைஞர் புடைசூழப் போகின்றேற்
கென்முன்னே யேற்றாய் பின்னை
மறுபடையி லென்பின்பு வந்திலையே
யெங்கோளித்தாய் மன்ன ரேறே.

என்றிவ்வகை அரற்றினனை வேதவியாதன் வந்து கண்டு நல்லுரையும், பிறவிச் சக்கரம் வருகின்றவாறும் சொல்லி நல்வினை தீவினை இருக்கும் முறையும் உரைத்துத் தன் குண்டிகை பணி நீரால் கண்கழுவி மற்றவனைத் தேற்றிச் சிறிதுபொழுது இருந்து வானூடெழுந்தான் என்றவாறு. அவ்விடத்துப் பாண்டவர் படையும் பெருந் துயரத்தினோடும் கைவாங்கித் தம் பாடிவீடு புக்காராகக் கருதுவது. இப்பால் அருச்சுனன் நிலைமை யாதாயிற்றோவெனில் : (௩௧௯)

817. ஏற்ற படையனைத்து மீடழியப் போர்போகு
மாற்றலர்க ளுள்ளார் மனநடுங்கச்—சீற்றக்
கருடன்றன் டாசனக் கார்வண்ண னின்று
வரும்வழியிற் றன்னிமித்தம் வந்து.

எ - று. சஞ்சத்தகரை அழித்து, சங்கத்துளையின்கண் முகம்வைத்து வாராநின்ற கண்ணன் திக்குறி கண்டு கருத் தடக்கித் தேர்க் கோலங் கொண்டு வருகின்ற விடத்து

817. ஈடு – வலிமை. மாற்றலர் – பகைவர்.

அருச்சுனனும் கவலை யெய்தி வாரா நின்றான் என்றவாறு. அவ் வளவில் கண்ணன் தேவர்கோனை அழைத்தருளி, மறைவாக நின்று யாது பணித்தருளினான் கண்ணன் : (௧௪௦)

818. மாயவனு மாங்கே நினைந்தருளி மற்றங்குக்
காயு மழலை* கடிதெழுப்பி—மாயத்தா
லிந்திரனே நீயு மிதிலவிழு மாப் போலின்றிங்
கந்தணனாய் நில்லா யமர்ந்து.

எ - து. அருச்சுனன் புதல்வனாகிய அபிமன்னு பட்டான் ஆதலால் மற்றந்தச் செய்தி அருச்சுனன் கேட்பதன் முன்னம் அவன் போம்வழியில் ஒரு கிழ மறையோனாய் நின்று தீப் புகப் போவது போல நின்றால், மற்றது கண்ட அருச்சுனன் உன்னை விலக்குவானாக வருவன்; வந்தால் அவனை எவ்வழியாலும் தேற்றிப் போவாயாக என்று கண்ணன் அருளிச் செயயக் கேட்டு யாது செய்தான் தேவர்கோன் : (௧௪௧)

819. வானவர்கோன் பார்த்தன் வரும்வழியில் வேதியனாய்க்
கானமதி லங்கிதனைக் கைதொழுது—வானவர்கோன்
வீழ்வே னிதிலேன்று விஞ்சவலம் வந்தானே
தாழ்வேது மில்லான் றனித்து.

இவ்வகை வானவர்கோன் ஒரு கிழ மறையோன் வடிவு கொண்டு அருச்சுனனும் கண்ணனும் போகின்ற வழியில் தீபுகப் போவதாகத் தீ மூட்டி மற்றதனில் வீழ்வதாக வலம் செய்து வாராநின்றானாகக் கருதுவது. அக்காலத்துக் கண்ணனும் மற்றந்தத் தேவர்கோன் செயலை அருச்சுனனுக்குக் காட்டி யாதருளிச் செய்தான் : (௧௪௨)

820. மைத்துனனே பாராயோர் மாமறையோன் சேன்றந்த
வக்கினியில் வீழ வகைகருதி—மற்றதனைக்
கைதொழுது நின்றான்பா லேகிக் கடுகியவன்
மெய்தொழுது காவாய் விரைந்து.

என்றிவ்வகை கண்ணன் அருளிச் செய்யக் கேட்டுக் கவலை யோடும் வருகின்ற அருச்சுனன் கதுமெனத் தேரினின்றிழியப் பாய்ந்து யாது செய்தான் : (௧௪௩)

---

818. விழுமாப்போல் - விழுவதுபோல்.

819. அங்கி - தீ. தாழ்வு - இழப்புக்குறை

821. ஆய்தற் கரியானே ரந்தணனாய் வெஞ்சுடரிற்
சாய்வாக வாங்கோர் தனியிடத்துப்—பாய்வா
னெருப்பெரியா நின்றானைக் கண்ணுற்றா னங்கே
திருப்பிரியாத் தோட்பெரியான் சென்று.

இவ்வகை கண்ணுற்று யாருமில்லாததோர் இடத்தின்கண் தீப்புகுகின்றதென்கொலோ மறையோனே என்று அருச்சுனன் விலக்க, அவனை நோக்கி யாது சொன்னான் மறையோன்: (௧௪௪)

822. என்மகனை யானிழந் திங்கிரே னென்றிசைந்தே
னென்மகனே டியானு மெரிமூழ்கி—நன்மை
யுடலுழப்பே னென்றுரைத்தா னந்தணனும் வெற்றிக்
[1]கடலுழக்க மற்றவனைக் கண்டு.

எ - து. என் மகனை இழந்து மகக்கவலையினால் ஆற்றவொண்ணாது தீப்புகுவேனை அருச்சுனா, விலக்குவது உனக்கு அறமன்று கண்டாய் என்று மறையோன் உரைப்பக் கேட்டு யாது சொன்னான் அருச்சுனன்: (௧௪௫)

823. தக்க மகன்கீர்த்தி தந்தையை மாக்கதிக்கே
யுய்க்கும் படியுள்ள தாதலான்—மக்களைத்தான்
றோற்றுவித்து வைத்துத் துறவாதான் றுஞ்சினா
லேற்றுவிக்குந் தன்மை [2]யிலன்.

எ - து. மக்களுக்குப் புத்திரன் என்னும் பெயராயிற்று, தந்தையை நிரயம் புகாமற் காப்பதன் பொருட்டுக் கண்டாய்; ஆதலால் புதல்வரைத் தோற்றுவியாது உயிர்விடுவது மறையோனே உனக்கு அறமன்று என்று அருச்சுனன் விலக்கக்கேட்டு அவனை நோக்கி யாது சொன்னான் மறையோன்: (௧௪௬)

824. நீவிலக்க வென்னுயிரை மீட்டே னெறிவிசையா
யான்விலக்க நின்னுயிரை நீமீள்வாய்—வான்விலக்கி

---

821. சாய்வாக - வீழ. திரு – வீரத்திரு.

822. இசைந்தேன் - உறுதிகொண்டேன். உழக்கும் - நீந்தும்.

823. மாக்கதி - மேல் நிலை. துஞ்சினால் – இறந்தால். ஏற்றுவிக்கும் - மேன்மைப் படுத்தும்.

824. நெறி - நல்வழி. எறி விசையா – வெற்றி விசயனே.

பா. வே: 1. கடலினுக்கு மைத்துனனைக். 2. வியல்பு.

நின்றான்றன் முன்னே நிறையந்த ணன்றானும்
வென்றானப் போதே விரைந்து.

ஏ - து. என் மகக் கவலையால் எரிபுகுகின்றேனை நீ விலக்க விலங்கினேன், நீ வாய்மையாளன் ஆதலாலும், உலகில் வீரன் ஆகையாலும் கண்டாய்; இது யாவர்க்கும் விலங்கேன்; இது நிற்க, உனக்கு மொருகாலத் தவ்வகை வந்துற்றால் யான் விலக்க விலங்குவாயாக என்று அருச்சுனனை வரங்கேட்க அவனும் உடன் பட்டு வரங்கொடுப்ப வரம்பெற்றுத் தானும் அவனால் விலக்குண்டு கண்ணனை இதற்குச் சான்றாக்கிப் போகின்றான் தேவர்கோன் ஆகின்ற மறையோன என்றவாறு. அப்பொழுது மற்றுங்கது வெல்லாம் தன் திருவுளத்தே கொண்டு திருபுன் முறுவல் அரும்பி மறையோனைக் காணுது காத்தாய் அருச்சுனு உனக்கு அருட் பேறு கண்டாய் எனறருளிச்செய்து தேரேறிக் கதுமெனச் சென்று பாடி வீடு குறுகுதலும் அந்த நகரம் எத்தன்மையதாய் இருந்ததோ வெனில்: (௧௬௭)

825. பாட லோலியவிந்து பல்லியங்கள் பாட்டின்றி
யாடன் முழவ மதுவடங்கி—நீடரவ
மோவிக் கிடந்த வொலிகடலே போன்றதே
மேவிப் புகழ்பயில்வான் வீடு.

இவ்வகை ஆரவாரம் இன்றி அட்டில் புகையாது கவலை யுற்றுக்கிடந்த படைவீட்டையும் வருகின்ற தீக்குறிகளையும் கண்டு தருமனுக்குத் தீங்கு புகுந்த துண்டு கொல்லோ வென்று மயங்கா நின்ற மனத்தனாய் மணிநெடுங்கோயிற் புகாநின்றபொழுது அருச்சுனன் எதிரே அந்தப்புரத்தினர் அழுது விழுதலும், கண்ணன் அதனை அறிந்தருளிக் கருவிகளை யெல்லாம் வாங்கிக் கொண்டு மணிநெடுந்தேரிழிந்து அருச்சுனனைத் தழுவிக்கொள்ள எம்பெருமானே உரையாய் என்னைத் தன் செந்தாமரைக்கண் அருவி சோர நின்று அபிமன்னு அழிவென்னும் வெஞ்சொல் மாற்றச் சுடுநுனையதனை அண்ணல் யானை அருச்சுனன் காதருகில் கூறி யாதருளிச் செய்தான் கண்ணன்: (௧௬௮)

826. எங்கை பயந்த விளவே றனக்குரிய
சிங்கமுன் செல்வத் திருமதலை—துங்கச்

---

825. பல்லியம் – பல்வேறு இசைக்கருவிகள். அரவம் ஓவி – ஒலி ஒழிந்து.

சினக்களிறு போலச் செருமுனையில் வைகி
வனக்கரிசூழ் வானடைந்தான் மற்று.

எனக்கேட்டு யாது செய்தான் அருச்சுனன் : (௧௪௬)

827. தேவர்க் கிறைபணித்த தீச்சொற் செவிப்புலத்தே
மேவிப் புகாமுன்னம் வெய்துயிரா — வாய்விட்
டலறா வழிவழியா வவ்வாயுங் கண்ணு
முலராப்போய் வீழ்ந்தா னுடன்று.

இவ்வகை மகக்கவலை யெய்தி ஆற்றாமல் மயங்கி வீழ்ந்து புவி மிசை மூச்சற்றுக் கிடந்தானை யெடுத்துக் குருகுலக் கூட்டத்தார் தேற்றி உலகவியற்கை பலபேசி மணிநீரான் முகந்துடைத்துக் கண்கழுவியிருந்த விடத்துத் தருமனையும் வீமனையும் கண்டு பின்னும் கவன்று கண்ணனை நோக்கி யாது சொல்லி அரற்றினான் அருச்சுனன் : (௧௫௦)

828. கனைகடல் வண்ணா கனைகடல் வண்ணா
கழிய வாழி கனைகடல் வண்ணா
வென்மக னிறந்த வின்னா மாற்றமென்
முன்னின் றெனக்கு மொழிந்திலை நீதா
னுடந்தனை யென்று மொழிந்தனை யென்னுமென்
னைந்தா வென்னு மதலா யென்னு
மந்தோ வாழி யபிமா வென்னும்
வானம ருழந்து வந்தே னென்னுடன்
போனகம் பற்றப் போதா யென்னு
நேரொத்து விளங்கிய நேமியான் றன்னுடை
மார்பத்து வளர்ந்த மைந்தா வென்னும்
யாதவர் குலத்துக் கெழில்விளக் கென்ன
மாதவி பெற்ற மகனே யென்னு

---

826. எங்கை - எம் தங்கை; சுபத்திரை. வனக்கரிசூழ் - அழகிய முகில் சூழ்ந்த.

827. உயிரா, அலறா, உலரா என்பவை உயிர்த்து, அலறி, உலர்ந்து என்னும் பொருளன.

828. கனைகடல் - ஒலிக்கும் கடல். மாற்றம் - சொல். போனகம் - உணவு. இனைதரும் - துன்புறுத்தும். நூல் - நூற்பொருள். சிறிதுபடும் - இளமையில் பட்ட.

மொருபது மூன்று மொருங்குநல் லாண்டு
பெருமக னின்னைப் பிரிந்தே னென்னும்
பிரிந்ததற் பின்னையென்
னினைதரு வேட்கை நெஞ்சுறு நோயின்
வளரிளஞ் செல்வி பொழுதொரு நோக்கி
விராடன் பெருமகள் மென்சொலுத் தரையைப்
புதுமணக் கோலம் புல்காது வைத்துய
ரவரோ டெங்கட் கமர்விளைந் திவ்வழி
யெந்தையர் துணையில ரென்றுகரு தாது
பொன்வா னுலகுபுகப் போயினை யோவென்
னப்பா வென்னு மழகா வென்னும்
வாளா ரமரின் மதலையை யிழந்து
மாளா தென்னுயி ரிருப்பதோ வென்னு
நீயே விசும்பிற் றனிபோ காதே
யானும் வந்தே னரசே யென்னு
மரசி னாசை யற்றே னென்னுஞ்
செருவி னாசை தீர்ந்தே னென்னுந்
தடமுகில் வண்ணனுந் தருமனும் வீமனு
மிடந்தனி னூல்க ளெடுத்துட னோதி
யாற்றவு மாற்றன் றேற்றவந் தேரு
னறிவோர்க் கடங்கா னெறிமொழி கேளா
னழிவழிந் தரற்றி யப்பனே யென்று
சிறிதுபடுங் காதற் சிறுவனை யிழந்தே.

இவ்வகையன் ஆகிய வருச்சுனன் மகக் கவலை சந்தித் தருமனை நோக்கி அபிமன்னு எவ்வகை போயினான்; அங்கு ஆரால் கொல்லப்பட்டான் எனக்கேட்டு எண்ணுமளவில் யாது சொன்னான் தருமன்: (௧௬௧)

829. என்னுடைய மைந்தனெனக்குத் துணையாகி
மின்னிடையின் மன்னரெலாம் வீழ்வித்துப்—பின்னு
வெங்களத்துப் புக்கு வியந்தார்த்தான் பின்னரவ [மொரு
னெங்கொளித்தா னென்றறியேன் யான்.

---

829. மின்னிடையில் - ஒரு மின்னல் பொழுதில்.

இவ்வகை கேட்ட அருச்சுனனை நோக்கி யாது சொல்லி ஆற்றினன் கடோற்கசன் : (௩௫௨)

830. மாற்றரிய மாமதலை மன்னவர்க ளாவருக்குந்
தேற்ற வரிய செழுமணியா— னூற்றுவர்க்குக்
காலனாய்த் தோன்றிக கறைமிடற்றான் கொன்றையினான்
மேலவனாய் வீழ்ந்தான் விரைந்து.

இவ்வகைப்பட்ட பல செய்தியும் கேட்டு மகக்கவலை மிக வெய்தி யாவருந் தேற்றத் தேறாது தீப்புகுவேன் எனத் துணிந்து நிற்கின்ற அருச்சுனனைக் கண்டு, இவனைத் தேற்றுவதரிது இவனின் முன்னம் யானே மாண்டு போவேன் என்று தருமன் ஒருப்படுதலும் ஆங்கவனை நோக்கிக் கண்ணன் விலக்கி அருச்சுன னுக்குத் தீக்கொடுப்பச் சந்தனமரம் என்னும் சிதை யடுக்கிச் செந்தீ மூட்டித் தீப்புக அருச்சுனன் போக யாது நிகழ்ந்ததோ வெனில் : (௩௫௩)

831. சேந்* ....

---

830. கறைமிடற்றான் - சிவபெருமான்.

* இதற்கு மேல்வரும் பாடலும் உரையும் கிட்டாமையால் இவ்வளவுடன் நின்றது.

துரோண பருவம் முற்றும்.

பாடற்றொகை

		வெண்டா		அகவல்		விருத்தம்		
க.	உத்தியோக பருவம்	479	—	4	—	—	=	483
உ.	வீடும பருவம்	191	—	—	—	3	=	194
௩.	துரோண பருவம்	148	—	2	—	3	=	153
		818	—	6	—	6	=	830

பின்னிணைப்பு—1

பெருந்தேவனார்கள் பெயரால்

அறியவரும் பாடல்கள்

கடவுள் வாழ்த்து

1. நீல மேனி வாலிழை பாகத்
தொருவ னிருதா ணிழற்கீழ்
மூவகை யுலகு முகிழ்த்தன முறையே.

—ஐங்குறுநூறு.

2. தாமரை புரையுங் காமர் சேவடிப்
பவளத் தன்ன மேனித் திகழொளிக்
குன்றி யேய்க்கு முடுக்கைக் குன்றின்
நெஞ்சுபக வெறிந்த வஞ்சுடர் நெடுவேற்
சேவலங் கொடியோன் காப்ப
ஏம வைக லெய்தின்றா லுலகே.

—குறுந்தொகை.

3. மாநிலஞ் சேவடி யாகத் தூநீர்
வளைநரல் பெளவ முடுக்கை யாக
விசும்புமெய் யாகத் திசைகை யாகப்
பசுங்கதிர் மதியமொடு சுடர்கண் ணாக
இயன்ற வெல்லாம் பயின்றகத் தடக்கிய
வேத முதல்வ னென்ப
தீதற விளங்கிய திகிரி யோனே.

—நற்றிணை.

4. கார்விரி கொன்றைப் பொன்னேர் புதுமலர்த்
தாரன் மாலையன் மலைந்த கண்ணியன்
மார்பி னஃதே மையி லுண்ஞாண்
நுதல திமையா நாட்ட மிகலட்டுக்

கையது கணிச்சியோடு மழுவே மூவாய்
வேலு மூண்டத் தோலா தோற்கே
ஊர்ந்த தேறே சேர்ந்தோ ளுமையே
செவ்வா னன்ன மேனி யவ்வான்
இலங்குபிறை யன்ன விலங்குவால் வையெயிற்
றெரியகைந் தன்ன வவிர்ந்துவிளங்கு புரிசடை
முதிராத் திங்களொடு சுடருஞ் சென்னி
மூவா வமரரு முனிவரும் பிறரும்
யாவரு மறியாத் தொன்முறை மரபின்
வரிகிளர் வயமா னுரிவை தைஇய
யாழ்கெழு மணிமிடற் றந்தணன்
தாவில் தாணிழற் றவிர்ந்தன்று வுலகே.

— அகநானூறு

5. கண்ணி கார்நறுங் கொன்றை காமர்
வண்ண மார்பிற் றாருங் கொன்றை
ஊர்தி வால்வெள் ளேறே சிறந்த
சீர்கெழு கொடியு மவ்வே றென்ப
கறைமிட றணியலு மணிந்தன் றக்கறை
மறைநவி லந்தணர் நுவலவும் படுமே
பெண்ணுரு வொருதிற னாகின் றவ்வுருத்
தன்னு ளடக்கிக் கரக்கினுங் கரக்கும்
பிறைநுதல் வண்ண மாகின் றப்பிறை
பதினெண் கணனு மேத்தவும் படுமே
எல்லா வுயிர்க்கு மேம மாகிய
நீரற வறியாக் கரகத்துத்
தாழ்சடைப் பொலிந்த வருந்தவத் தோற்கே.

—புறநானூறு.

6. எரியெள் ளுவன்ன நிறத்தன் விரியிணர்க்
கொன்றையம் பைந்தா ரகலத்தன் பொன்றுார்
எயிலெரி யூட்டிய வில்லன் பயிலிருட்
காடமர்ந் தாடிய வாடல னீடிப்
புறம்புதை தாழ்ந்த சடையன் குறங்கறைந்து

வெண்மணி யார்க்கும் விழவின னுண்ணூற்
சிரந்தை யிரட்டும் விரல னிரண்டுருவா
யீரணி பெற்ற வெழிற்றகைய னேரும்
இளம்பிறை சேர்ந்த நுதலன் களங்கனி
மாறேற் கும் பண்பின் மறுமிடற்றன் றேறிய
சூலம் பிடித்த சுடர்ப் படைக்
காலக் கடவுட் குயர்கமா வலனே.

—தொல். புறத். 26 நச். மேற்

இப்பாடல் பதிற்றுப்பத்துக் கடவுள் வாழ்த்தாக இருக்கலாம் என்றும், பெருந்தேவனார் பாடியதாகலாம் என்றும் கருதுவர்.

7. வேலற் றரீஇய விரிசடைப் பெம்மான்
வாலிழை பாகத் தமரிய கொழுவேற்
கூற்றங் கதழ்ந் தெறி கொன்றையன்
கூட்டா வுலகங் கெழீஇய மலிந்தே.

—இன்னிலை (கடவுள் வாழ்த்து.)

அகப்பொருள்

8. போத்தில் காழ வத்த யாஅத்துப்
பொரியரை முழுமுதல் உருவக் குத்தி
மறங்கெழு தடக்கையின் வாங்கி யுயங்குநடைச்
சிறுகட் பெருநிரை யுறுபசி தீர்க்கும்
தடமருப் பியானை கண்டனர் தோழி
தங்கடன் இறீஇயர் எண்ணி இடந்தொறும்
காமர் பொருட்பிணிப் போகிய
நாம்வெங் காதலர் சென்ற வாறே.

—குறுந்தொகை. 255

பாலை: இடை நின்று மீள்வரெனக் கவன்ற கிழத்தியைத் தோழி வற்புறுத்தியது. இப்பாடலை இயற்றியவர் 'கடுகு பெருந்தேவன்.'

9. எம்மூர் வாயில் ஒண்டுறைத் தடைஇய
கடவுள் முதுமரத் துடனுறை பழகிய
தேயா வளைவாய்த் தெண்கண் கூருகிர்
வாய்ப்பறை அசாஅம் வலிமுந்து கூகை
மையூன் தெரிந்த நெய்வெண் புழுக்கல்
எலிவான் சூட்டொடு மலியப் பேணுதும்
எஞ்சாக் கொள்கையெம் காதலர் வரல்நசைஇத்
துஞ்சா தலமரு பொழுதின்
அஞ்சுவரக் கடுங்குரல் பயிற்றா தீமே.

—நற்றிணை. 83

குறிஞ்சி: இஃது இரவுக்குறிவந்த தலைவன் சிறைப்புறத் தானாகத் தோழி சொல்லியது.

10. ஆள்வழக் கற்ற சுரத்திடைக் கதிர்தெற
நீளெரி பரந்த நெடுந்தாள் யாத்துப்
போழ்வளி முழங்கும் புல்லென் உயர்சினை
முடைநசை இருக்கைப் பெடைமுகம் நோக்கி
ஊன்பதித் தன்ன வெருவரு செஞ்செவி
எருவைச் சேவல் கரிபுசிறை தீய
வேனில் நீடிய வேயுயர் நனந்தலை
நீயுழந் தெய்தும் செய்வினைப் பொருட்பிணி
பல்லிதழ் மழைக்கண் மாஅ யோள்வயிற்
பிரியிற் புணர்வ தாயிற் பிரியா
தேந்துமுலை முற்றம் வீங்கப் பல்லூழ்
சேயிழை தெளிர்ப்பக் கவைஇ நாளும்
மனைமுதல் வினையொடும் உவப்ப
நினைமாண் நெஞ்சம் நீங்குதல் மறந்தே.

—அகநானூறு 51.

பாலை: பொருள் வயிற் பிரிவு கடைக்கூட்டிய நெஞ்சிற்குத் தலைமகன் சொல்லியது. பெருந்தேவனார் என்பதற்குக் கடுகு பெருந்தேவனார் என்னும் பாடவேறு பாடும் உளது.

படைத்தலைவரை வருத்தல்

11. கங்கை சிறுவனும் காய்கதிரோன் செம்மலு
மிங்கிருவர் வேண்டா வெனவவ ளீக்—கங்கை
சிறுவன் படைக்காவல் பூண்டான் செயிர்த்தார்
மறுவக்தார் தந்த மனம்.

—தொல். புறத்திணை இயல் 17. நச். மேற்.

இது பெருந்தேவனார் பாட்டு; குருக்கள் தமக்குப் படைத் தலைவரை வருத்தது.

திருவள்ளுவமாலை

12. எப்போதுளும் யாரும் இயல்பின் அறிவுறச்
செப்பிய வள்ளுவர்தாஞ் செப்பவரு—முப்பாற்குப்
பாரதஞ்சீ ராம கதைமனுப் பண்டைமறை
நேர்வனமற் றில்லை நிகர்.

—திருவள்ளுவமாலை. 30.

பாரதம் பாடிய பெருந்தேவனார் பெயரால் உள்ள பாடல் இது. கவி சாகரப் பெருந்தேவனார் பெயரால் வேறொரு வெண்பா உளது.

13. பூவிற்குத் தாமரையே பொன்னுக்குச் சாம்புனதம்
ஆவிற் கருமுனியா யானைக்—கமரரும்பல்
தேவிற் றிருமால் எனச்சிறந்த தெனபவே
பாவிற்கு வள்ளுவர்வெண் பா.

—திருவள்ளுவமாலை. 36.

பெருந் தேவனார் பாரதம்

மாவிந்தம்.

'பெருந்தேவனார் பாரதம்' - 'மாவிந்தம்' என்னும் பெயருடைய நூல் ஒன்று பொழிப்புரையுடன் தஞ்சை சரசுவதிமால் 9 ஆம் வெளியீடாக வெளிப்பட்டுள்ளது புகழேந்தியார் வாக்குடன் போட்டியிட்டு ஒப்ப சிறக்கத் தக்க பெருந்தேவனார் வாக்கு எங்கே! மாவிந்தத்தார் வாக்கு எங்கே!

செய்யுள் யாத்தலிலும் உரைநடை வரைதலிலும் தெளிந்து தேறாத ஒருவர் யாத்த நூல் அஃது என்பது வெள்ளிடை மலை. இருப்பினும்,

"இப்பாடல்கள் பாரதத்தின் இறுதிப் பகுதியைச் சேர்ந்தன. இப்பகுதிக்குச் சுவடியில் 'மாவிந்தம்' என்ற பெயரிடப் பெற்றிருக்கிறது. அஃதாவது பாண்டவர்கள் சுவர்க்கமென்னும் மகாவிந்தத்துக்குச் சென்ற பகுதி என்பது அதன் பொருள்.

"இப்பகுதி உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுளாகவும் அதன் நடை பெரும்பாலும் நந்திவர்மன் காலத்திய பெருந்தேவனார் பாரதத்தின் நடையை ஒத்தும், இதிலுள்ள உரை நடையும் நந்திவர்மன் காலத்திய பாரதத்தின் நடையைப் போல் இருத்தலால் இது நந்திவர்மன் காலத்திய பாரதத்தின் இறுதிப் பகுதியாகிய சுவர்க்காரோகண பருவத்தின் பகுதியாகக் கொள்ளத் தகும்.

"நந்திவர்மன் காலத்திய பெருந்தேவனார் பாரதத்திலே வெளிவந்த பாரதப் பாட்டுக்களின் முதற்குறிப்பும் இப்பாரதப் பாட்டுக்களின் முதற்குறிப்பும் சில விடங்களில் ஒன்றியிருத்தலால் இவ்விரு நூலாசிரியரும் ஒருவராகவே இருத்தல் கூடும் என்பது உய்த்துணரற் பாலது"

என்று முன்னுரை எழுதிப் பாரதம் பாடிய பெருந்தேவனார் பாடல் என்றே அதிலும் மூன்றும் நந்திவர்மன் காலத்தில் வாழ்ந்த பெருந்தேவனார் பாடல் என்றே—உரைநடையையும் அவருடையது என்றே துணிந்துள்ளனர்.

பெருந்தேவனார் பாரத வெண்பாவில் கண்டுள்ள மூத்த பிள்ளையார் வணக்கத்தையும், திருமால் வணக்கத்தையும் மேற்கொண்டுள்ள அந் நூலில் அவ்விரண்டு வெண்பாக்களுக்கு ஒப்பானதொரு வெண்பாவைக் காணுமாறு இல்லை என்பதை மேலோட்டமாக நோக்குவாரும் எளிதில் அறிவர். பாரத வெண்பாவொடு ஒப்பிட்டுக் காண்பதற்காக மாவிந்தத்தின் முதல் இரண்டு வெண்பாக்களைக் காட்டுதும் :

"விதியா றதன்மேல் வினைமுன்னே காப்பதற்கென்
றோதுவார் தம்மை யுடனழைத்து நீதி
அருந்தவ வேள்வி யதுதுடங்கு மன்றுன்
பெருந்தழலில் நெய்வார்த்துப் பின்"

"நெய்பெய் தழல்வளர்த்து நேரிருந்த சித்திரையிற்
றெய்வ மறையவனைத் தேர்வேந்தன்—கையிலோர்
தெர்ப்பையினால் விட்டெறியத் திண்டாடி வேதியனும்
அப்பொழுதே பட்டான் அயர்ந்து"

'விதியா' எனத் தொடங்கியவர்க்கு, 'ஓதுவார்' 'நீதி' என எதுகை வெளிப்படுமா? 'தொடங்கும்' என்பது 'துடங்கும்' என்றாகுமா? 'நித்திரையும் தெர்ப்பையும்' விட்டெறியும் திண்டாட்டம் வருமா பெருந்தேவனார்க்கு?

'போங்கானல் என்காலுக் கோர்பூ' (97)
'கஞ்சனைக் காய்ந்தபதியே உனக்கபயம்' (102)
'திருமகனே கணபதியே உனக் கபயம்' (103)
'தேருநெறி ஈதென்னுக் கணபதியே உனக் கபயம்' (104)

இவ்வாறு வெண்பாவின் ஈற்றடி வரப்பெறுமா? இனி உரை நடை பற்றியோ உரைக்க வேண்டுவதில்லை!

பாரத வெண்பாவில் ஈடுபட்ட ஒருவர் தம் கைச் சரக்கைப் பெருந்தேவனார் சரக்காகக் காட்டிப் பெருமையுற நினைந்துள்ளார்; அவ்வளவே; இவர் பெயரும் பெருந்தேவனாரே என்றால் பெருந் தேவனார் வரிசையில் ஏழாமவராகச் சேர்க்கத் தக்கவரே. **இவர் பாரதவெண்பாப் பாடிய பெருந்தேவனார் அல்லர்.**

பாரத வெண்பாப் பதிப்பில் 'மாவிந்தப்' பகுதியைச் சேர்த்தற் குரியதாகாதோ எனக் கருதுவார் உளராயின் அவரைக்கருதி இவ்விளக்கம் எழுத வேண்டியது இன்றியமையாமை யாயிற் றென்க.

பின்னிணைப்பு—2

பாரதப் பழம்பாடல்கள்

பெருந்திணை

1. பூண்டாழ் மார்பிற் பொருப்பிற் கோமான்
பாண்டியன் மடமகள் பணைமுலைச் சாந்தம்
வேறு தொடங்கிய விசயன் நெஞ்சத்
தாரழல் ஆற்று ... ...
போதியிற் சாந்த மெல்லாம் பொருதிரை
முத்தினும் முழங்கழற் செந்தீப்
போத்துவது போலும் புலம்புமுந் துறுத்தே.

—தொல். அகத். 54 நச். மேற்.

இது சுட்டி ஒருவர் பெயர் கொண்ட பெருந்திணை.

[இருவரும் பொருது வீழ்தல்]

2. ஆதி சான்ற மேதகு வேட்கையி
னுளுங் கோளு மயங்கிய ஞாட்பின்
மதியமு ஞாயிறும் பொருவது போல
வொருத்தி வேட்கையி னுடன்வயிற் றிருவர்
செருக்கூர் தண்டி னெருக்கின ரெனவு
மரவணி கொடியோற் கிளையோன் சிறுவனும்
பெருவிறல் வீமற் கிளையோன் சிறுவனு
முடன்றமர் தொடங்கிய காலை யடங்கா
ருடங்குவருஞ் சீற்றத்துக் கைப்படை வழங்கி
யிழந்தவை கொடாஅர் கிடந்தன வாங்கித்

தேர்மிசைத் தமியர் தோன்றூர் பார்மிசை
நின்றுசுடர் நோக்கியு மொன்றுபடத் திருகியுந்
தும்பியடி பிணங்கு மண்ணிற் றேற்றமொடு
கோடிகோடி பிணங்கி வீழ்வன போல
வொருவயின் வீழ்ந்தடு காலை
யிருபெரு வேந்தரும் பெரிதுவந் தனரே.

—தொல். புறத். 17 நச். மேற்.

'இருவர் தலைவர் தபுதிப் பக்கமும்' என்பதற்கு இருபெரு வேந்தர் தானைத் தலைவரும் தத்தம் வேந்தர்க்காகித் தார் தாங்குதலே அன்றி அத் தலைவர் இருவரும் தம்மிற்பொருது வீழ்தற் கண்ணும் என உரை எழுதி 'இப் பாரதப் பாட்டினுள் அவ்வாறுதல் கண்டு கொள்க' என்பர் நச்சினார்க்கினியர்.

[படையறுத்துப் பாழிகொள்ளல்]

3. கோல்லேறு பாய்ந்தழிந்த கோடுபோற் றண்டிறுத்து
மல்லேறு தோள்வீமன் மாமனைப்—புல்லிக்கோண்
டாறுத போர்மலைந்தா ரங்கரசர் கண்டார்த்தா
ரேறுட லாய ரென.

—தொல். புறத். 17 நச். மேற்.

படையறுத்துப் பாழிகொள்ளும் ஏமம் என்பதற்கு இப் பாடல் எடுத்துக்காட்டு.

களிற்றெறிந் தெதிர்தல்

4. வானவர் போரிற் றானவர்க் கடந்த
மான வேந்தன் யானையிற் றறுஅது
பல்படை நேரிவ தோல்லான் வீமன்
பிறக்கிடங் கோடான்றன் முகத்தெழிந் தார்த்துத்
தானெதிர் மலைந்த காலை யாங்கதன்
கோடுழக் கிழிந்த மார்போடு நிலஞ்சேர்ந்து

போர்க்கோள் வளாகந் தேர்த்துக ளனைத்தினு
மிடைகோள வின்றிப் புடைபெயர்ந்து புரண்டு
வருந்தா வுள்ளமொடு பெயர்ந்தனன்
பெருந்தகை யாண்மையொடு பெயர்த்தலோ வரிதே.

—தொல். புறத். 17 நச். மேற்

'களிறு எறிந்து எதிர்ந்தோர் பாடு' என்பதற்கு எடுத்துக் காட்டு. 'இது களிறெறிந்தான் பெருமை கூறுதலின் யானை நிலையுள் அடங்காதாயிற்று' (நச்.)

வாளமலை

5. நான்மருப் பில்லாக் கானவில் யானை
வீமன் வீழ்த்திய துடன்றெதிர் தாங்கு
மாமுது மதுரை மணிநிறப் பாகனொ
டாடமர் தொலைத்த லாற்றான் றேரொடு
மைத்துனன் பணியின் வலமுறை வந்து
கைத்தலங் கதிர்முடி யேற்றி நிற்றந்
திறைஞ்சின னவர்க் கிடையோ னதுகண்டு
மறந்தீர் மன்னனு மிறைஞ்சித் தனது
வேழம் விலக்கி வினைமடிந் திருப்பச்
சூர்மருங் கறுத்த நெடுவேள் போல
மலைபுரை யானையுந் தலைவனுங் கவிழ்ந்த
வாளுகு களத்து வாள்பல வீசி
யொன்று மன்னரு மாடினர் துவன்றி
யின்று வின்ப மெய்தித்
தன்னமர் கேளிரு முன்னூர்த் தனரே.

—தொல். புறத். 17 நச். மேற்.

'களிற்றொடு பட்ட வேந்தனை அட்ட வேந்தன் வாளோர் ஆடும் அமலைக்கு' எடுத்துக் காட்டு.

நல்லிசை

6. மறங்கெழு வேந்தன் குறங்கறுத் திட்டபி
னருமறை யாசா னொருமகன் வெகுண்டு
பாண்டவர் வேர்முதல் கீண்டெறி சீற்றமோ
டிராவூ றறியாது இவரை வேந்தொடு
மாதுலன் றன்னை வாயிலி னிறீஇக்
காவல் பூட்டி யூர்ப்புறக் காவயி
னைவகை வேந்தரோ டரும்பெறற் றம்பியைக்
கைவயிற் கொண்டு கரியோன் காத்தலிற்
றெருக்குடம் பிரீஇத் துறக்க மெய்திய
தந்தையைத் தலையற வெறிந்தவ னிவனெனத்
துஞ்சிடத் தெழீஇக் குஞ்சி பற்றி
வடாது பாஞ்சால னெடுமுதற் புதல்வனைக்
கழுத்தெழத் திருகிப் பறித்த காலைக்
கோயிற் கம்பலை யூர்முழு துணர்த்தலிற்
றம்பியர் மூவரு மைம்பான் மருகரு
முடன்றமர் தொடங்கி யொருங்குகளத் தவிய
வாள்வாய்த்துப் பெயர்ந்த காலை யாள்வினைக்
கின்னே ரினிப்பிற ரில்லென வோராங்குத்
தன்முதற் றுறையோடு கோன்முத லமரர்
வியந்தனர் நயந்த விசும்பி
னியன்றதலை யுலகமு மறிந்ததா லதுவே.

—தொல். புறத். 17 நச். மேற்.

'செருவகத்து இறைவன் வீழ்ந்தெனச் சினைஇ ஒருவன் மண்டிய நல்லிசை நிலை' என்பதற்கு, அது குருகுல வேந்தனைக் குறங்கறுத்த ஞான்று இரவு ஊரெறிந்து பாஞ்சாலரையும் பஞ்சவர் மக்கள் ஐவரையும் கொன்று வென்றி கொண்ட அச்சுவத்தாமாவின் போர்த்தொழில் போல்வன எனக் கூறி இப் பாரதப் பாடலை எடுத்துக் காட்டாகத் தந்துள்ளார் (நச்.)

பெரும்பகை தாங்கும் வேல்

7. குன்று துகளாக்குங் கூர்ங்கணையான் வேலெறிந்
தன்று திருநேடுமோ லாடினு—னென்றும்
பனிச்சென்று மூளாத பல்கதிரோன் சேயோ
டினிச்சென் றமர்போரா யென்று.

—தொல். புறத். 21 நச். மேற்.

'பெரும்பகை தாங்கும் வேலினாலும்' என்பதற்கு எடுத்துக் காட்டு.

புல்லா வாழ்க்கை வல்லாண்

8. கலிவா லூழியின் வாழ்க்கை கடிந்து
மலிபுகழ் வேண்டு மனத்த—ரோலிகடல்சூழ்
மண்ணகலம்வேண்டாது வான்வேண்டி யீண்டினார்
புண்ணகலாப் போர்க்களத்துப் போந்து.

—தொல். புறத். 21 நச். மேற்.

புறத்திரட்டு. 1347 (அமர்)

'புல்லா வாழ்க்கை வல்லாண் பக்கம்' என்பதற்கு எடுத்துக் காட்டு.

அவிப்பலி

9. எம்பியை வீட்டுத லெம்மனைக்கா யான்படுதல்
வெம்பகலின் முன்விளைப்ப னென்றெழுந்தான்—றம்பி
புறவோரிற் பாணிப்பப் போங்கெரிவாய் வீழ்ந்தா
னறவோன் மறமிகுந்த வாறு.

—தொல். புறத். 21 நச். மேற்.

அவிப்பலி என்பதற்கு இப்பாடலை எடுத்துக் காட்டி, 'இப் பாரதத்துள் ஒருவன் இன்னது செய்வல் என்று அது செய்ய முடியாமையின் அவிப்பலி கொடுத்தவாறு காண்க' என்பர் (நச்.)

[ஒல்லார் இடவயிற் புல்லிய பாங்கு]

10. இந்திரன் மைந்த னுயிர்வேட் டிரந்திரவி
மைந்தனை வெல்வான் வரங்கொண்டான்—றந்தநா
ளேந்திலைவேன் மன்னனே யன்றி யிதற்குவந்த
வேந்தனும் பெற்றான் மிகை.

—தொல். புறத். 21 நச். மேற்.

ஒல்லார் இடவயிற் புல்லிய பாங்கினும் என்பதற்கு இப் பாடலை எடுத்துக் காட்டாகக் கூறி, 'இப் பாரதத்துப் பகைவனாற் படுதல் அறிந்துந் தன் கவச குண்டலங் கொடுத்தமை கூறியமையிற் புல்லிய பாங்காயிற்று. அது வீரம் பற்றிய கருணை யாகலின் வாகையாயிற்று என்பர் (நச்.)

ஓடாப் படை யாண்மை

11. மானக மூன்னுயர்த்தான் சேனை களமுழுதுந்
தானா வருமதனைத் தாங்கினான்—மேனாள்
அருகணையா வண்ண மடற்போரின் வென்ற
வருகணையான் பெற்ற மகன்.

—வீரசோழியம் 98 மேற்.

பதமீட்சி

12. வீரர் களிறேற வேல்வேந்தர் தேரேறப்
போர்கெழு வெஞ்சிலைநாண் பூட்டேற—வார்முரச
மார்ப்பேற வேலினைஞர் மாவேற வெஞ்சுடர்வாள்
கூர்ப்பேற வேறினான் குன்று.

—வீரசோழியம் 150 மேற்.

இதில் 'ஏற' என்று ஒருபதமே மீள வந்தமையால் பதமீட்சி என்னும் அலங்காரமாயிற்று. (பெருந்தேவனார் பாரதம் 620 காண்க.)

ஊக்கம்

13. மலைதகர்ந்து போகாதோ வற்றாதோ பௌவ
மலர்கதிரோன் வீழாதோ வஞ்சி—நிலையெனக்குப்
பார்வேந்த ரொப்பரோ பாய்நீர்க் குருகுலத்தார்
போர்வேந்தே யான்முனிந்த போது.

—வீரசோழியம் 152, 168 மேற்.

தாக்கிய விடத்தெதனைத் தடுப்பார் யாரென ஊக்கங் கூறுதற்கும், தன்வலி மிகுத்துச் சொல்லும் தன் மேம்பாட்டுரைக்கும் எ - டு.

உதாரதை

14. மண்ணகன்று தன்கிளையு நீங்கி வனமடைந்து
பண்ணுந் தவமுயலும் பார்த்தனார்—விண்ணிறந்து
மீதண்டர் கோன்குலையும் வெய்யோர் குலந்தோலைத்
கோதண்ட மேதுணையாக் கொண்டு. [தான்

—வீரசோழியம் 169 மேற்.

இஃது உள்ளமிகுதி சொன்னமையால் உள்ளமிகுதி உதாரதை.

குந்தி

15. காய்கதி ரோனுக்குக் கன்னனையீன் றுங்கன்னி
யாகிப்பின் மூவரையும் ஈன்றளித்த—தோகை
தலைமைசேர் கற்பினாள் தாள்வணங்கு முன்னாள்
மலையெடுத்துக் கார்காத்த மால்.

—தண்டியலங்காரம் 125 மேற்.

கால மலைவு என்பதற்கு எ - டு.

வீமன் தேர்

16. கடல்கிழிய ஓடும் கலம்போல ஒன்னார்
உடல்கிழிய ஒள்வாள் விதிர்த்து—மடல் கிழியும்
பைம்பொற்றார் மன்னர் படைநடுவே ஓடிற்றே
செம்பொற்றண் டேந்தினான் தேர்.

—தொண்டைமண்டல சதகம் 52 மேற்.

அறன்வலி யுறுத்தல்

17. உலகெலாங் காக்கு மொருவ னொருவ
னுலகெலாங் காலா லுழன்றும்—விலையுண்டாங்
காராது நல்கூர்ந்து மென்று லறம்பாவம்
பாராத தென்னோவிப் பார்.

—புறத்திரட்டு. 38.

கற்புடை மகளிர்

18. எப்பணியா லின்புறுவர் காதலரக் காதலரை
யப்பணியா லப்பொழுதே யன்புறுத்தி—யொப்ப
மனங்குழையும் வண்ண மகிழ்விப்ப தன்றே
கனங்குழையார் தங்கள் கடன்.

—புறத்திரட்டு. 77

கற்பில் மகளிர்

19. உற்ற நலத்தான் ஒழுகாது நாணாளும்
பெற்றவ னேவியசொற் பேணாது—மற்றவன்முன்
திண்ணுருவங் கொண்டு சிலைக்கு மவளன்றே
பெண்ணுருவங் கொண்டதோர் பேய்.

—புறத்திரட்டு. 64.

விருந்தோம்பல்

20. வருந்தி யொருவன்பால் மற்றொருவன் வந்தால்
பொருந்தி அகமலர்ந்து போற்றி—விருந்தேற்றுத்
தன்னா லியன்றளவுந் தானுதவா னாகினவற்
கின்னா நரகே யிடம்.

—புறத்திரட்டு. 104.

இனியவை கூறல்

21. மலர்ந்தமுகத் தானு மதுரமொழி யானு
நலந்தந் திடுவர்க ளல்லோர்—புலந்திருந்த
வின்னா முகத்தா னருளா திடும்பொருள்
தன்னாற் பயனுண்டோ தான்.

—புறத்திரட்டு. 108.

பொறையுடைமை

22. அற்றவுறுப் பெல்லா மறுவையி னான்மறைப்ப
மற்றொருவர் காணா மறையுமால்—வெற்றி
யறையார் கழலா யவமாய வெல்லாம்
பொறையான் மறைக்குமேற் போம்.

—புறத்திரட்டு. 169.

தீவினையச்சம்

23. தன்னைச் செறுதானைக் காய்ந்தான் றகாக்கொலையன்
பின்னைக் குரவரைப் பேணாதான்—முன்னொருவ
னில்லாளைக் காதலித்தா னிந்நால்வர் வெந்நரகத்
தல்லா லழுந்தா தவர்.

—புறத்திரட்டு. 196.

24. அற்றங்கள் பார்த்தங் கடைத்திருந்து சொல்வானுங்
குற்றம்போய்க் கோவுக் குரைப்பானுஞ்—செற்றத்தே
நின்றானுஞ் செய்ந்நன்றி நீத்தானு மந்தணரைக்
கொன்றாரோ டொப்பர் குறித்து.

—புறத்திரட்டு. 197.

அருளுடைமை

25. மெய்தகளி யாகப் பொறையாந் திரிக்கொளீஇ
நெய்தவ மாக நிறைதரப்—பெய்தாங்
கருளாம் விளக்கேற்றி யம்மைப்பாற் செல்ல
விருள்போய் வெளியாய் விடும்.

புறத்திரட்டு. 252.

புலால் மறுத்தல்

26. வாயிற் சுவைவெஃகி மான்கொன்று மீன்கொன்று
நாயோத் துழல்வார்க்கு நாவளவே—போயிழிந்தால்
இன்னு தினிதேன் றறியா ரிதற்காக
மன்னுவூன் றின்றல் விடு.

—புறத்திரட்டு. 263.

இன்னா செய்யாமை

27. இறப்ப நமக்கடுத்த வெவ்வநோ யாவும்
பிறர்க்குமஃ தாமென்று கொண்மி—னுறக்கருதி
யெவ்வா றமக்குறுதி யெண்ணுதிர்நீ ரெல்லார்க்கு
மவ்வாறே யெண்ண லறம்.

—புறத்திரட்டு. 326.

கொல்லாமை

28. இந்நோய் எமக்குண்டென் றெண்ணுதே யெவ்வுயிரு
முன்னேவக் கொல்லு முழுமக்க—ளெந்நோயும்
பண்ணப் படுநரகிற் பாவிகளிற் பாவிகளென்
றெண்ணப் படுவே ரிகழ்ந்து. [329]

29. ஆனை யடியு ளடங்கா தனவில்லை
யேனை யவற்றடிகள் யாவையு—மூனுயிரைக்
கொல்லா வறத்தின் கொழுநிழலுட் பட்டடங்கு
மெல்லா வறனு மியைந்து.

—புறத்திரட்டு. 330.

பல்வகை நிலையாமை

30. பலதிரண்ட செல்வத்தைப் பார்க்கிற் கனவாம்
மலர்திரண்டாற் போலிளமை வாடுஞ்—சிலநிகழ்ந்த
மின்னுக்கும் வாழ்நா ளிவையிற்றை மெய்யென்றிட்
டுன்னிக் களிப்பா ருளர். [394]

இடனறிதல்

31. வான்சேரிற் புள்ளஞ்சா வல்லரில் சுற்றிய
கான்சேரின் மானின் கணமஞ்சா—வான்சேர்
சிகர வரைசேரிற் றேனஞ்சா அஞ்சா
மிகுநீர்க் கயஞ்சேரின் மீன். [613]

32. உளையச் சிலைக்கு முழுவையுந் தான்றன்
அளையிற் றீர்ந் தூரடைந்த தாக—இனிவந்
துயிரிழப்ப தென்று லுறுமிடநீத் தேன்கோல்
செயிருழக்குந் தீங்கு செயல். [614]

கண்ணோட்டம்

33. ஒன்று நரம்பென்கோ வொன்றுத வென்பென்கோ
இன்றசை தானென்கோ யாதென்கோ—மென்
றொடையாழ்ப்
பண்ணோட்டு மின்சொற் பணைத்தோளாய்
சேர்ந்தவர்பாற்
கண்ணோட்ட மில்லாத கண். [688]

34. யாவர் வரினு மெதிரேற்குந் தெய்வமடப்
பாவை யகத்திருந்தும் பாழன்றே—மேவினரைத்
தண்ணார் கரதலத்தால் தள்ளாவாய்த் தாழுமொரு
கண்ணாகி நிற்கின்ற கண். [689]

35. வெண்மை கருமை விரிசெம்மை நீண்மைவனப்
போண்மையிவற்றேன் றொழித்தேனுங்-கண்மையினை
வையாது மாந்தர் மயில்போ லெனத்தனது
கையா லிறைவகுத்தான் கண். [690]

வினைசெயல்வகை

36. சூதினு ளுகத்தன் றேள்வலியாற் றுஞக
யாதினு ளயினும்வர் தெய்துமேற்—றீதெண்ணிச்
சூழ்வாரைத் தாமுன்னஞ் சூழ்வதே மன்னராய்
வாழ்வாருக் குள்ள வழக்கு. [765]

தூது

37. ஒருவ ரகத்தொருவர் உண்டுடுத்துத் தம்மின்
மருவி மனமகிழ்வ ராயிற்—செருமுனையின்
மன்னைப்போர் செய்யு மழைமதமால் யானையாய்
பின்னைப்போர் தக்கதோ பேசு. [770]

பெருந்தேவனார் பாரதம் 165 காண்க.

38. செல்லுங்காற் றேயத் தியறெரிந்து சென்றக்காற்
புல்லிய சுற்றம் புணர்வறிந்து—புல்லார்
மனத்தாற் பிரித்து வலியா னுதவும்
இனத்தாற் றெரிவது தூது. [771]

39. தடுமாற்ற மின்றித் தகைசான்ற சொல்லான்
வடுமாற்றம் வாய்சோரா னுகி—விடுமாற்றம்
எஞ்சாது கூறி இகல்வேந்தன் சீறுங்கால்
அஞ்சா தமைவது தூது. [772]

40. படையளவு கூறுர் பெரியார்முன் மாற்றுர்
படையளவிற் றென்று வியவார்—கொடைவேந்தன்
ஈத்ததுகண் டின்புறு ரேந்திழையார் தோள்சேரார்
பார்த்திபர்தூ தாயடைந்தார் பண்பு. [773]

41. தானறிந்து கூறுந் தலைமற் றிடையது
கோனறைந்த தீதென்று கூறுமாற்—றுனறியா
தோலையே காட்டும் கடையென் றுருமூன்று
மேலையோர் தூதுரைத்த வாறு. [774]

42. அன்புடைமை யாய்ந்த வறிவுடைமை யிற்பிறப்பு
நன்குடைமை நல்ல நயனுடைமை—நன்கமைந்த
சுற்ற முடைமை வடிவுடைமை சொல்வன்மை
கற்றடங்க றூதின் கடன். [775]

சூது

43. உருவழிக்கும் உண்மை நலனழிக்கும் வண்மைத்
திருவழிக்கும் மானஞ் சிதைக்கும்—ஒருவர்
ஒருவரோ டன்பழிக்கும் ஒன்றலாச் சூது
பொருவரோ தக்கார் புரிந்து. [1072]

44. முன்னர் விளையாடி முட்டுவார் குட்டினுற்
றன்மை திரிந்து சலந்தோன்றும்—பின்னர்
மிகாதோ வெகுளி வெகுண்டாலச் சூது
தகாதோ தருவதோ தான். [1073]

45. பிறன்றுரம் வேட்டல் பிழைப்பில்லார்ச் சீறல்
அறன்கேட ஞயமே சூழ்தன்—மறந்தேயுந்
தீநிலத்தார் சோற்கேட்டல் தீச்சூ திவைகண்டாய்
மேனிலத்தார் கேட்டுக்கு வித்து. [1074]

நன்றியில் செல்வம்

46. தீயாலோ நீராலோ தேர்வேந்தர் தம்மாலோ
மாயாத தெவ்வர் வலியாலோ—யாதாலோ
இப்பொருள்போய் மாய்கின்ற தென்றபொருள்
எப்பொழுது நீங்கா ரிடர் [வைத்தார்கள்
—புறத்திரட்டு 1148.

படைச் செருக்கு

47. நல்வா னவர்காண நம்மை யமரகத்து
வெல்வான் விரும்பிய வேல்வேந்தைக்—கொல்வான்
உனக்கே யுரிமை யுளதேனினு மிப்போர்
எனக்கே தருவா னிறை. —புறத்திரட்டு 1311.

களம்

48. கைபொருத வோசையாற் கண்ணுமிழ்ந்த செந்தீயான்
மெய்பொருது தோய்ந்தெழுந்த வெம்புகையா—ஐயோ
வெதிர்வெங் கடுங்கானம் போன்றதே வெம்போ
ரெதிர்வேந்தர் செய்த விடம். —புறத்திரட்டு. 1429.

MARAIMALAI ADIGAL LIBRARY

செய்யுள் முதற்குறிப்பு அகரவரிசை

[எண் : செய்யுள் எண்]

அங்கண் இருமருங்கு 29
அங்கர்கோ னுள்ளிட்ட 794
அங்கர்கோன் சொல்ல 193
அங்க வளநாட 799
அங்கோ ரிளங்குமர 487
அச்சஞ்சூழ் சாபம் 14
அஞ்சன வண்ண 76
அடர்த்த முடிவேந்த 692
அட்டிலங்கு வேல் 555
அணிகலனும் வேண்டே 262
அண்டத் தலர்கதிரோன் 295
அண்ட.........றன் 678
அண்ட.........றிரு 217
அண்ண லெமக்குரிய 402
அதிரதரே மாரதரே 455
அதிரதர்கள் சேனையெனு 779
அத்த மலையடைந்த 560
அத்திப் பதிக்கே 23
அத்திரங்க ளிந்தானை 51
அந்தணர்க ளுள்ளார் 161
அந்தமற மன்னவர்க 131
அந்தரத்தில் வானவருந் 711
அந்தார வார்பகழி 581
அந்தார் விசய 662
அப்படியே செய்வே 503
அப்பொழுதே யான்சென் 245
அம்பொற் சிலைமே 764
அம்பொன் முடிதுளக்கி 737
அம்மேநீர் வேண்டிற்றுப் 334
அரவக் கொடியான் 528
அரவக்......மன்னு 370
அரவக்......வீம 587
அரவணையான் றானுரைத்த 382
அரவுயர்த்தோ னோலை 388
அரவுயர்த்தோன் சல்லிய 21
அரவுயர்த்தோன் செய்த 24
அரவுயர்த்தோன் சொன்ன 5
அரவுயர்த்தோன் றன்னை 136
அரிநாம மாதரியா 618
அருந்தவங்கள் செய்வா 277
அலங்குளைப் பாய்மாக் 699
அலைப்பட்ட வேலுழு 607
அலையுழுவை யன்னை 768
அவனுக் கிணையாக 403
அவனு முடிக்குரியான் 33
அழகியதே சொன்னாய் நீ 257
அழித்தழித் தென்கண் 48
அழிப்புண்ட தேர்மிசை 527
அறந்தெரியுந் தன்ம 361
அறுவர் சிலைதுணித் 500
அறுவர் சிலையிணையு 493
அற்ற சிலையானு 498
அன்பி னிடுஞ்சோறு 166
அன்றங் கிரணியனைக் 134
அன்று சபையுள் 10
அன்றுன் சிறுவன் 45
அன்னையென வந்தென்னை 307
ஆக்கை குலைந்திட் 631
ஆசா ரியன்புதல்வ 108
ஆடகப் பொருப்பு 671
ஆடரவம் பூண்ட 501
ஆண்டகைவேற் பாண்ட 377
ஆண்டவனை விட்டமரு 259
ஆண்டிரண்டு பத்தும்போய் 7
ஆண்டு பதின்மூன்றுஞ் 32
ஆதியா னங்குரைத்த 375
ஆயனுடன் பார்த்த 103
ஆயனும் பார்த்தனு 379
ஆயனே யச்சுதனே 167
ஆயனை மாலென் 149
ஆயாவென் மைத்துன 477
ஆயிரக்கா றானுடைய 132
ஆய்தற் கரியானே 821
ஆய்ந்து பணித்தான் 643
ஆரமருட் டேராழி 125
ஆராத வன்பி 303
ஆர்க்கு மழைவண்கை 700
ஆர்தமக்கு வேறே 715
ஆர்த்தபுக ழங்கர்கோன் 196
ஆலால வாசுகிதன் 746
ஆவா வெனவே 612
ஆவி யனையார்க 314
ஆழி தனைவீழ்த்தி 228
ஆழி யதுவீழ்த்த 230

ஆறுநூ றாயிரம்பேர்க்	235
ஆற்றலுடை யங்க	372
ஆற்றுவரேற் றோள்வலி	118
ஆனைகளுந் தேரு	785
ஆனையொடு தேர்மா	628
இக்கிடந்த மாதரைப்	309
இங்கிவர்க்காய் நீநிற்க	463
இச்சொற் பணித்தனை நீ	440
இதுவெனக்குக் கால	652
இந்தவேல் கொள்ளு நீ	287
இந்திரனே யுன்மகனை	238
இந்திரன்சேய் போக	127
இந்திரன் போக	293
இந்திரன் றன்மகனை	243
இப்பொழுதே வேண்டி	430
இமைப்பளவின் மூன்று	95
இம்மகியு மிவ்வரசும்	797
இரவலர்க்கு மந்தணர்க்கும்	328
இருநூறு வெவ்வாளி	730
இருபத் தொருகா	392
இருவர் சிலையினை	702
இவனொழிய வேறொருவ	232
இவ்வளவும் யார்பாலுஞ்	427
இவ்வீடுன தெனவே	153
இறைவர் திருமூர்த்தி	227
இற்றைக்கு மூவைந்தா	482
இன்று பிறப்பறிந்தே	223
இன்றேயிம் மாற்ற	253
இன்னனவுங் கூறி	28
இன்னாச்சொல் வந்து	182
இன்னா னெனவறியா	315
ஈங்கிவன்றன் சொற்படியே	419
ஈங்கென் மனக்கருத்தை	256
ஈன்றார்க்கோர் மாதுன்ப	117
உடற்கண் வெருவ	705
உந்தமது புத்திரர்க்கா	321
உந்தைமார் சாக	441
உம்பரிக லேறுபோ	323
உய்ய......குண்	266
உய்ய........வொண்	110
உரிமைதனை வேண்டி	37
உரிமை யிருவர்க்கு	172
உலகத் திருணீங்க	350
உறுதேர்மே லுன்னை	96
உற்ற விடத்துதவு	289
உற்றாரை......லதின்	119
உற்றாரை......லும்	475
உற்றான் றறியே	215
உனக்கினிய தம்பிமா	312
உன்கருத்தே போலப்	431
உன்கருத்தே முற்றுவிப்	140
உன்னளவோ முன்ன	411
உன்னாண்மை யாலுரைத்த	458
உன்னா ருயிரா	286
உன்னா லொருகுற்	661
உன்னாற் றரவெளிதா	265
உன்னுடைய பாக	60
உன்னுடைய மைந்தர்	337
உன்னை யுடையேனா	461
உன்னை வருவித்	305
ஊழிமுதற் காலத்	126
ஊன்கிடந்த விவ்வுடல்	571
ஏங்கள் குடிப்பிறந்	790
எங்கள் குலமுதலே	478
எங்கள் துணையாய்	25
எங்குத் தலைப்பட்டாய்	17
எங்குலின் றெம்மிடை	12
எங்கை பயந்த	826
எட்டுத் திசையு	691
எண்டிசை மன்ன	485
எண்ணிற் படாத	456
எத்திசைக்கு மிங்கிருந்தே	434
எந்தைக் குரிய	43
எந்தையாய்த் தாயா	546
எம்பி விசயனுட	104
எம்பெருமா னின்னேவல்	444
எம்பெருமா னெம்பி	385
எம்பெருமா னென்பா	421
எம்பெருமான் கண்ணுள	596
எம்பெருமான் கேட்டா	79
எம்பெருமான் நின்மாமி	13
எம்பெருமான் பேசுமதோர்	208
எம்பெருமான் பேராழி	539
எரிகதிரோ னல்கு	195
எல்லா மிழந்திடினு	352
எல்லாரும் வெஞ்சிலையா	762
எவ்விடத்த னென்னி	781
என்றா னொழின்மன்	356
என்றான் விதுர	156
என்மக னென்மு	481
என்மகனை யானிழந்	822
என்மக்க ளைவர்க்கு	327
என்வரவு நீயறைதி	90
என்ன குறையுடையே	78
என்ன வினவுதியே	87
என்னா ருடற்பிறந்த	261

என்னுடைய தாய்மா 308
என்னுடைய பேதைமையு 437
என்னுடைய மூதாதா 657
என்னுடைய மைந்த 829
என்னுறுப்பை யானே 448
என்னெஞ்சம் விட்டழுங்க 609
என்னே விதியின் 27
என்னைக் கொலப்படா 288
என்னைப் படைத்துணை 98
என்னை முனிந்தருளே 442
என்னை யறிந்ததற்பி 225
என்னை யறிந்தாயே 198
ஏற்ற செருக்களத்தில் 46
ஏற்ற படையனைத்து 817
ஏனைநடு வாக 343
ஐவர்க்கு மைந்தூர் 174
ஐவர்க்கு மோருயிரே 201
ஒட்டிய காலங் 168
ஒட்டிய பன்னீராண் 6
ஒண்சிலையு நான்மறை 521
ஒப்பரிய கோபால 100
ஒருகணையாற் பாக 685
ஒருகுலத்துக் காளையரோ 568
ஒருகைச் சிலையுகை 767
ஒருபா விடும்பிசே 554
ஒருவ ரகத்தொருவ 165
ஒருவ ரொருவர் 748
ஒருவர்சோ றுண்டங் 233
ஒலிகடலு மொவ்வா 159
ஒற்றைத் தடக்கையா 810
ஒற்றைத்...மணி 570
ஒற்றைத்...யோற் 304
ஒற்றைத்...யோன் 655
ஒற்றை மணித்துகிரு 155
ஒன்பதி னாயிரம் 399
ஒன்றினால் வெஞ்சிலை 580
ஓங்கி வரம்பிழந் 769
ஓங்கு கரைசாய் 693
ஓடிய ஞாயிறுவா 569
ஓதத்...நாட் 360
ஓதத்...பல 355
ஓத வினையகலு 1
ஓரம்பு வில்விண்மே 695
ஓரிரண்டு கூடி 391
கங்கை தரித்தா 57
கங்கை பெருமகனே 467
கங்கை பெறுமகனை 486
கங்கைமக னுங்கலச 163
கங்கைமகன் றன்பாற் 613
கஞ்சனைக் காய்ந்த 71
கடகிடந்து மீன்விழுந்து 639
கடலுடைந்த தாமென்னக் 557
கடவுட் குரங்கின் 710
கடுந்திறலாற் கானகத் 719
கடும்பகழி யொன்று 536
கணைமாரி யெல்லாங் 755
கண்டத்தி லிட்ட 296
கண்ணுதலான் றன்சிலை 181
கண்மூன்றுந் திப்பிறக்கக் 213
கமரழிந்த நீர்நாடன் 614
கரிபத்துத் தேர்மூன்று 398
கலங்கா மணித்திண்டேர் 716
கல்லணி திண்டோளார் 577
கழிந்திடுக வாண்டெல் 169
களிமா னுலகுக்கோர் 804
கள்ளமரு வீசுங் 84
கற்றூர்க்கு நான்மறை 234
கனைகடல் வண்ணா 828
கன்றி யுடன்றெழுந்த 522
கன்றி யெயிறு 788
கன்ன பெருமானுங் 460
காங்கேய னுள்ளிட்ட 150
காங்கேயன் றன்றனிமை 640
காடு மலையுங் 147
காடுறைந்த பாண்டவர்தங் 67
காடுறைந்த பின்னைக் 44
காடுறையும் ஆண்டும் 40
காந்தாரர் சேனைக் 763
காய்ந்த கடோற்கசன் 406
காய்பரித்தேர் மன்னர் 531
காரிருளு மெய்யன்பாற் 533
கார்க்கலச யோனி 741
கார்தோற்றுப் போகத் 122
கார்புரியும் வண்மையான் 189
கார்வரையைச் சூழ்ந்த 530
காலக் களமன்று 622
கால விறுதிக் 676
காலனே யன்ன 783
காலன் கடும்பாசங் 808
காலாளாய்த் தேரிழிந்து 743
காவலனே நின்சேனை 673
காவு மடலனைய 558
காளையர்கள் வாழ்வுங் 52
காற்றுங் கனலு 135
காற்று மெரியுங் 758
குடகடலிற் பாய்ந் 515

குடகடன்மிக் கோடிக்	518
குடையொன்று கைபிடித்	247
குணவாரி யன்னான்	526
குந்தி வளநாடர்	222
குயில்பாயுஞ் சோலைக்	653
குரக்குக் கொடியின்	635
குரவனையும் பார்த்தனை	381
குருகுலத் தரசர்	466
குருக்கை மதவேழக்	276
குருநாட னோலை	393
குலக்குதிரை மேலுங்	649
குறைந்ததாழ்ந்த சிந்தை	300
குன்றாத வாய்மை	273
குன்றுங் குரைகடலும்	11
கூராழி தானுடைய	80
கூருகிரும் வாளெயிறுங்	94
கூரெயிற்று நாகக்	494
கூர்முகத்து வாளமரர்	474
கூர்வாளி நூறு	756
கைபோற் சிலைகுனியக்	623
கைம்மேலு மார்மேலுங்	735
கையாற் சிலையெறிந்து	506
கையிழந்து வில்லிழந்து	811
கைவிளக் கெங்குங்	707
கொடியுங்...வாங்	703
கொடியுங்...விட்	694
கொடுஞ் சிலையை	551
கொடுஞ் சினந்தீப்	806
கொண்ட னிறக்கோமான்	202
கொள்வா ளரவங்	359
கொற்றக் குரங்குயர்த்	796
கொற்றக் கொடிச்சிலை	733
கொற்றக் கொடிமுரசங்	624
கொற்றச் சிலைத்தொழிலுங்	800
கொற்ற...தேர்	194
கொற்றப் படைமன்னர்	177
கொற்ற முரசுயர்த்த	565
கொற்றவனின் பாதம்	616
கொற்ற வரவுயர்த்த	111
கொற்றவனே நின்னுடைய	282
கொற்ற...விதுர	347
கொன்னவிலுங் கூர்வேற்	184
கொன்னவிலுந் தேர்ப்பாக	316
கொன்னவில்வே னாகக்	349
கோட்டிய வில்லின	593
கோபால னிங்குக்	158
கோவத் தனமெடுத்த	357
கோனுந்தன் றம்பியரு	585
சந்தார் திரடோட்	297
சரந்துரந்து பார்த்தன்	55
சல்லியனுங் குண்டல	773
சாதா ரணஞ்செய்யுஞ்	109
சாதேவ னோடுங்	133
சாமரைகள் வீசத்	280
சாரதியுந் தேருந்	579
சிங்கக் கொடியுஞ்	736
சித்திரனார் வந்துன்றன்	53
சிலைத்தொழிலான் வெஞ்	187
சிலையுங் கொடியுஞ்	637
சினமேவுங் கையான்	542
சீரடிக னோவச்	302
சீரணிந்த செம்பொற்	74
சுற்றத் தவர்சூழத்	39
சுற்றுந்தான் பார்க்குங்	809
சூழ்சபையிற் சூளுற்ற	120
செம்பொனெடுந் தேரித்	492
செம்மையான் மண்	301
செய்கை யழிந்து	729
செருத்திண்டே ரூர்வானை	704
செருவீரர் யானைத்	86
செல்வனைப் புல்கித்	15
செறிகடகத் தோள்விச	816
செற்றவனைக் காய்ந்த	18
சென்றன புண்டிறந்து	654
சென்று திசைவணங்கத்	510
சென்று நடுங்கியிட	509
சென்றேறு பாஞ்சாலர்	682
சென்றேன்ற பார்வேந்தர்	529
சென்றேன்று சிகண்டி	648
சேரார் தமக்குவரஞ்	435
சேனை முதல்வனை	766
சொரிந்த கணையாரி	683
சொன்ன சவுதாயஞ்	62
சொன்ன விலையெல்	263
சோதி விளக்கெரி	714
சோமகருஞ் சிஞ்சை	681
தக்க சரத்தாலுஞ்	480
தக்க மகன்கீர்த்தி	823
தங்கள் வெளிப்பாடு	8
தங்கோன் றிருவடி	784
தஞ்சம் எனஒருவர்	22
தண்டொடு தண்டு	813
தந்தைக் குரியதுவும்	38
தந்தை யடிபணிந்து	102
தந்தையா வானுந்	114
தம்பிமார் பட்டவிய	594

தம்பியரு நீயுந் 367
தம்பியருந் தானும் 656
தம்பியர்க டற்சூழத் 61
தருமற்குந் தம்பியர்க்குங் 354
தருமனுந் தம்பியுந் 380
தருமனொடு வீமன் 330
தருமன் றனைக்கண்டு 362
தலைவருவ வெல்லாஞ் 598
தனியே முதலாய 365
தன்போ லதிரதனு 457
தன்றுதை தன்னுரிமை 42
தன்னகரி கோடித்துத் 148
தன்னுடைய முன்னே 311
தன்னுரிமை யெல்லாந் 171
தன்னொத்த சுற்றத்தா 390
தன்னை நயந்தொருவன் 188
தன்னை யறிந்திலான் 178
தாங்கு புனற் 564
தாடளர்ந்து தங்கள் 744
தாமரையாள் கோனைத் 72
தாமானங் கூறப் 121
தாயாகித் தந்தை 478
தாரகஞ் சேருந் 429
தாரறுத்து நாணறு 765
தார்த்தரட்டி சேனை 782
தார்ப்பொலியுந் தோளான் 335
தானங்கள் செய்தாய் 368
தானுக யாரிடைக்குஞ் 426
தானே யரசாள்வான் 179
தானைத் தலைமை 548
தானோ விசய 192
திகழு மொளிமான் 646
திசைநடுங்கத் தெய்வப் 511
திக்கு நடுங்க 760
திண்ணென் சிலைகுனித்து 644
திருடக் கொடிகொண்ட 99
திருமா றுரியோ 152
திருமிக விளங்கிய 470
திருவுடைய வுள்ளத்தா 254
திருவொப்பார் நின் 413
தீப்பிறக்குஞ் சக்கரக் 151
துச்சா தனன்புதல்வன் 812
துன்றுபுகழ்ப் பாண்டவர் 241
தூண்டுபரித்......றுவ 210
தூண்டுபரித்......னறிய 405
தூண்டுபரித்......னன்ற 443
தூதாகப் போவேனைச் 130
தூதுக் குடன்பட்டுச் 143
தூய புரோகிதனும் 66
தூவு மலைக 283
தெய்வப் படையாலுஞ் 636
தெய்வப் படையான் 675
தென்னெடுந்தேர் மன்னன் 698
தேரிழந்து மாவிழந்து 499
தேருருவ வோடுஞ் 574
தேர்துகைத்து மாப் 745
தேர்மேலு......கருங் 791
தேர்மேலு...ண்ணன் 696
தேவரா வாருந் 445
தேவ ருலகத்துங் சி 285
தேவ ருலகத்துங்...மெ 718
தேவர்கோ னுலென் 274
தேவர்க் கிறைபணித் 827
தேவா சுரர்போர் 677
தேவேந் திரன்வந்து 271
தேனடைந்த கோதை 712
தேனேங்கு சோலைத் 484
தேன்மொழுடையல் சேர 659
தையல் சுயம்வரத்துஞ் 49
தொக்கிலங்கு துத்திச் 83
தொடலரிய நாகந் 642
தொடுத்த கணைமாரி 627
தொடுத்த கொடுஞ்சிலை 543
தொல்லரச ரீண்டப் 453
தொன்னகர்க்கு நின்வரவு 164
தோளாண்மைப் பாண்டவர் 218
நகுலன் பரியேறி 107
நம்படையோ டிப்படை 468
நம்பர்க்கு நேராக 802
நல்லார்க ளெல்லாரு 252
நற்றேர் விராட 41
நன்றாக மன்ன 322
நன்றுதீ தெண்ணாதே 185
நாகக் கொடியானைக் 346
நாக மிருகாற் 329
நாகம் வளைத்தருளி 727
நாக வரவுயர்த்தோ 404
நாடறிய நாட்டார் 56
நாடு பலகடந்து 345
நாரணன்றன் பாத 82
நாழிகையிற் காற்கூறு 608
நாளை யளவென்போர் 617
நான்முகனோ டொத் 364
நிகரடும்போர் மீளி 645
நில்லா வுயிர்கொடுத்து 272
நினைப்பரிய கூர்வாளி 488

நினைவுக்கும் வாய்மைக்	284	பாண்டவர்க ளின்றே	807
நின்ற குலமதலை...நே	786	பாண்டவர்கள் காடுறைந்து	58
நின்ற குலமதலை...மூ	633	பாண்டவர்கள் சேனை	749
நின்ற குலமதலை...மை	789	பாண்டவர்கள் தம்பதிக்குப்	418
நின்றுணைவ னங்கர்	597	பாண்டவர்தஞ் சேனை	658
நின்னருளை யான்	278	பாண்டியர்கோன் பத்துச்	732
நின்னுற்றன் னுலைத்த	540	பாம்புயர்த்த வெல்கொடி	209
நின்னைச் செலவிட்டா	115	பாயிருளிற் போய்மீண்ட	433
நின்னைப் பிரிவித்து	717	பாய்வாளி யொன்பதினாற்	726
நீதியா னின்ற	438	பாரதத்துட் பட்டேன்	340
நீயேயோ தூதுக்	139	பாரதத்தை வெல்வதற்குப்	436
நீலமே காரின்	514	பாரதப்போர் தான்பொருது	449
நீவிலக்க வென்னுயிரை	824	பாரதப் போர்பொருது	450
நெய்விளக்கு முன்னெரிய	672	பாராள வல்லீரோ	384
நெருப்பெழுந்து நீறாக	214	பாராள வேண்டியே	424
நேர்நின்றா யுன்பேர்	408	பாராள ரெண்ணும்	371
பகைவன் கருத்தழியப்	452	பாராளு மன்னவனை	137
பங்கயக்கண் மாய	138	பாராளு மன்னர்	425
பங்கயமும் பல்கொடி	358	பாராளு மாசையாற்	88
பஞ்சவர்க ளெண்ணத்	363	பாராளும் பாண்டவர்	339
பஞ்சவர்கள் பாகங்	353	பாராளும் வேந்தன்	77
படர்ந்தனவும் பார்	590	பார்குறித்த மன்னர்	534
பட்ட நுதல்யானைப்	31	பார்த்தற்கா மாயன்	268
பண்ணுமின்கள் சேனை	713	பார்த்தனையான் கோற	324
பரமன் றிருவருளாற்	124	பார்த்தன்மேற் பட்டு	291
பரிகடவிப் போர்	650	பார்மன்னன் மீண்டு	101
பலியூட்ட வேண்டுமோ	454	பார்வேண்டிச் சென்று	229
பல்களிற்றை வெல்களி	556	பாலூன்று நீணிரையும்	54
பல்பதி னுயிரவர்	724	பால்வலைக்கு மின்சொற்	516
பல்லா யிரம்பணத்தார்	601	பிறப்பு நிலைகே	476
பல்லா யிரம்பரித்	625	புண்ணமர்ந்த தேரும்	584
பல்வே றரசர்க்கும்	386	புண்ணாறு செங்குருதி	575
பற்றா ருடன்பகரும்	373	புத்தகமு ஞானத்து	2
பனியகலப் பாரிடத்தோ	465	பூஞ்சாலி மச்சத்தார்	626
பனைக்கொடியின் மேலும்	525	பூதலத்து மன்னர்	544
பன்மணிகள் சிந்திப்	319	பூருவர்கள் சொல்லும்	471
பன்மணித் துத்திப்	69	பெண்டுகளும் பிள்ளை	141
பன்னொன்று கூறாகப்	497	பெற்றவுடம் பன்றாகி	310
பாஞ்சால ராசனும்	701	பெற்ற வுனக்கரிதோ	332
பாஞ்சாலர் கோமானும்	588	பேரொலிநீர்க் கங்கை	489
பாஞ்சாலர் வெள்ளம்	728	பேர்ந்தில னாசனத்துப்	216
பாட லொலியவிந்து	825	பைங்கதிரைச் சூழ்ந்த	595
பாண்டவரி லேறனையான்	428	பைம்பொற் றனுவிற்	423
பாண்டவரும் பாம்பணை	409	பைய விருளோடி	619
பாண்டவரை...செ	420	பொங்கமர்செய் தாங்க	513
பாண்டவரை...வே	383	பொங்கரவ முன்னுயர்த்த	697
பாண்டவர்கண் மண்	731	பொங்கு புனற்குருதி	589
பாண்டவர்கண் மைத்துன	517	பொங்குமுலைப் பாலூட்	200

பொங்கெழிற்றேரான் 538
பொங்கொலிநீர் வண் 205
பொய்யுரைத்தே னல்லேன் 306
பொய்யுறக்கங் கொண்ட 85
பொருப்படைந்து தங்கள் 387
பொருள்கொடுப்ப ரேனும் 170
பொன்னிறத்தோன் பொற் 541
பொன்னுந் துகிலும் 632
பொன்னே யெனைப்பயந்த 331
போராரு மன்னர் 805
போர்க்களத்தில் யான் 336
போர்வயிரத் திண்டரிற் 496
போர்வல் லவன்வீமன் 549
போர்வாளி மற்றவன் 537
போர்வீரர் தம்மோடும் 105
போர்வென்ற வீமன் 567
பௌவத் தொளிவிரி 220
மக்க ளிருவரையு 512
மங்குன் மதிதவழும் 664
மட்டவிழ் தார் மன்னர் 545
மண்டபத்தில் வீற்றிருந்த 410
மண்டபத்துக் கூவுவித்து 47
மண்டலத்தின் மன்னரெல் 240
மண்ணரச ரெண்ண 190
மண்ணெலாங் காத்தளி 313
மண்ணெல்லா மூவெழு 670
மதமா மழகளிற்றான் 318
மதித்த வரக்கரையு 204
மத்திரத்தார் கோமானு 490
மத்திரத்தார் கோமான் 19
மத்திரத்தார் வேந்தனை 553
மந்திரத்தின் வாய்மையான் 472
மருவார்வண் டாரான் 317
மருவிய வன்கவச 269
மல்ல னெடும் 523
மல்லாருந் திண்டோண் 688
மல்லாருந் திண்டோளான் 734
மல்லிற் பொருதிண் 615
மல்லுக் குயர்ந்த 611
மல்லுயர் தோட்பார் 341
மறுவண்ண மேற் 279
மறையோன் சேய் 231
மற்றத் துரோணன் 740
மற்றவர்க் கெல்லா 333
மற்றுள்ள மன்னவர்க் 9
மற்றேதும் வேண்டே 260
மற்றொழிந்த தந்தை 778
மன்சொன்ன சூழ்கழற் 787
மன்றலந்தார் மன்னவனு 63
மன்றலர்தார் மன்னவர்க்கு 395
மன்ற வமர்க்களத்துண் 290
மன்றில் வலித்தானு 258
மன்னர் கழறொழுது 146
மன்னர் குருநாடர் 298
மன்னர் சபைநடுங்க 459
மன்னர் சபையகத்து 176
மன்னர் நிலைகலங்க 507
மன்னர் பெருமானு 586
மன்னர் பெருமானை 720
மன்னர் பொருதழிய 770
மன்னவர்கண் மண்டலிகர் 462
மன்னவர்க ளெல்லாருந் 123
மன்னவனுந் தம்பியரு 606
மன்னவனைக் காமினென் 722
மன்னவன்பாற் றனையோந்து 374
மன்னவையுட் பட்ட 116
மன்ன னினிதிருந்த 407
மன்ன னுரைகேட்டு 798
மன்ன னுரைத்தபடி 207
மன்னன் மறுத்தனவு 65
மன்னன் வெகுண் 757
மாக்கடல் வண்ணன் 753
மாக்களிறும் பாய்மாவு 630
மாக்கொடியுந் தேரும் 634
மாக்கோ புரமிழந்த 680
மாண்ட பொழுதுன் 532
மாதேவர் தாஞ்சூழ 684
மாநிரையைப் போக்கி 689
மாமலையு மண்ணு 739
மாமறையோர் வாக்குப் 447
மாமறையோன் றானுரை 221
மாமானு மத்திரனு 563
மாமுனிவன் சாபத்தால் 668
மாயத்தாற் சூதாடி 369
மாயப் பெருவிறற் 603
மாயவனு மாங்கே 818
மாயவனே கேட்டரு 175
மாயனி செய்திட்ட 197
மாய னெழுந்தருளி 351
மாய னெழுந்தருளிக் 394
மாயன்றா னன்றேன் 774
மாயா மணிவண்ணு 129
மாரியது கூந்தன் 519
மார்மேலுந் தோண்மேலு 751
மாலென்ப தாம்பின்னை 3
மாலைக் குழல்சரியம் 572

மாலை மதியடைய	591
மாலை முடிபுனைந்த	412
மால்களிறும் பாய்மாவு	561
மால்வரையே போன்ற	754
மாவல்ல பாஞ்சாலன்	495
மாறில்லை யென்றுரைத்த	401
மாற்றரிய மாமதலை	830
மாற்றுப் படைதன்னை	690
மானத் திடை	738
மான மணிவரைத்தோள்	34
மிக்கசிலை சிறி	464
மின்பயிலு மாமணிப்பூண்	236
மின்னாரம் பூண்ட	610
மின்னுமணி நாக	73
மீளி வயமாமே	550
மீனமா யாமையாய்	583
முகூர்த்தமிட நாங்கண்	414
முடியு முரசு	706
முப்பொழுதாய் ஞான	97
முப்பொழுதாய் மூன்றுல	629
முரசொலியுஞ் சங்கொலியு	144
முழுதுடையான் பாகம்	173
முன்செய்த பாவத்தான்	338
முன்பிறந்தான் பாகம்	226
முன்போ திரவலருக்	244
முன்ன மறையவனுன்	70
முன்னமற் றந்த	219
முன்னம் விசயனையான்	92
முன்னின்ற தூசி	780
முன்னீந்த தெல்லா	255
முன்னே புகுந்தேன்	89
முன்னை முதற்பொரு	36
முன்னை யிரவலர்கட்	281
முன்னை வினையான்	26
முன்னொருவன் செய்யும்	20
மூங்கி லிடைப்பிறந்த	647
மூதாதை கையின்	112
மூதாதை தன்னை	50
மூத்தான் இருக்க	35
மூத்தான் மகனை	180
மூப்பும் பெரிதாகி	242
மூரிச் சிலையு	776
மூலமென வோலமிடு	559
மூவே ழிருபத்	663
மூன்றுருவா யப்பன்	771
மெய்கொண் டெழுந்த	491
மேதக்கா ரமாறிங்	814
மேல்கடலுங் கீழ்கடலு	723
மேவலரை வெல்லும்	378
மேற்குலவுந் தெய்வத்	582
மைத்தடங்கண் மாதேவி	320
மைத்துனனே பாரா	820
மைந்த னினைவின்	451
மொய்தா ரொலிப்ப	641
யாயாகி யெந்தை	669
யாருகி நிற்கு	674
யாறு மிவனு	93
யானொருவ னிற்க	191
யான்பிறந்து வந்து	224
யிசையின் மணிக்கவச	270
வஞ்சனை யறிந்து	212
வஞ்சனையாற் கொல்லி .	502
வஞ்சனை யென்று	211
வடிக்கணையான் வில்லு	793
வணங்கா முடியுடைய	469
வண்டமர்தார் வானவர்	292
வண்டுவரை மன்னவனு	68
வண்டுவரை மன்னன்	75
வண்மையாற் கல்வியான்	4
வண்மை...ராத	422
வண்மை...வை	251
வண்மை வரிசிலைநால்	439
வந்தடைந்த வேதியனை	248
வந்தவா காண்குமது	113
வந்தெதிர்ந்த பல்வேந்தர்	795
வப்பவிழ்தார் மன்னு	326
வரிசிலையும் பல்படையு	397
வரியரவிற் றிண்கொடி	344
வருக வரவிடுமின்	299
வலக்கை மணித்தண்டில்	686
வலிமிக்க வாள்வீமன்	59
வல்விறற் காண்டீப	761
வன்றறுகண் வீரரை	483
வாக்கினுற் சொன்னுன்	91
வாங்கப் படாதனகாண்	267
வாங்கு திரைப்பரவை	638
வாங்கு புனற்கங்கை	665
வாருடா வென்றாலும்	264
வாமத்தேர் கட்டவிழ	801
வாமவே லேந்தி	747
வாயிலபி தாவிட்ட	250
வாரிதனைச் சென்ற	396
வார்கடா மால்யானை	792
வாழி திருவடியாய்	16
வாளிரவி மைந்தன்	348
வான மலர்பொழிய	145

வானவர்கோன் சொற்படி	508
வானவர்கோன் பார்த்தன்	819
விசைய நெடுந்தேரான்	524
விசயன் வருதலுமே	750
விசயன்றன் சீர்மகனை	602
விண்ணவர்கோன் வேல்	294
விண்ணவர்கோன் றன்	246
விண்ணவர்கோன் ருனே	162
விதுர னளவேயோ	186
விதுரனுடன் மேவி	154
விரிகடல் வண்ணன்	759
வில்லறுத்து நாணறுத்து	752
வில்லா விலங்கை	81
வில்விகளிற் பாண்டவரை	599
வில்லை யிறுத்து	183
வில்வல்லான் றன்மகனும்	566
வில்வளைத்த பல்வேந்தர்	725
விற்கையா லேதொழு	777
விற்புட்டி விட்டு	775
வின்மருவுந் திண்டோள்	30
வீங்கோத வண்ணன்	585
வீமனுஞ் சேயும்	742
வீமன் வலியும்	708
வீமன்றே ராழிதனைக்	576
வீரத் தனிக்கொடி	604
வீரர் களிறேற	620
வீழ்சுடர்வான் மன்னர்	803
வெங்கண் மதயானை...வீ	573
வெங்கண் மதயானை...வெ	547
வெங்கண் விடநாக	666
வெங்கலிங்கர் கூட்டமும்	562
வெஞ்சமத்து வந்து	400
வெஞ்சரங்கோத் தெய்து	325
வெஞ்சிலையே யன்று	505
வெம்பிமத யானையின்	815
வெம்பு மதயானை	592
வெய்ய கதிரோன்	772
வெலற்கரிய.........பூம	275
வெலற்கரிய.........மண்	239
வெலற்கரிய வாட்டானை	479
வெலற்கரிய வெஞ்சமத்து	709
வெவ்வொளி யைஞ்நூறு	651
வெள்ளிக் குடைநிழற்	160
வெற்றிக் களம்பட்ட	667
வெற்றிச் சிலையல்லா	504
வெற்றிச் சிலையொன்றும்	578
வெற்றித் தனிக்களத்	605
வெற்றித்தேர் வீமன்	621
வெற்றிப் பறவைக்	157
வெற்றிப் புகழ்த்தருமன்	142
வெற்றி.........வில்	106
வெற்றி விறல்விசயன்	237
வெற்றி.........வின்	600
வென்றிநெடு வேல்விசயன்	342
வென்றி மதயானை	206
வென்றி முரசுயர்த்த	687
வேகத்தா னுண்முகூர்த்தம்	416
வேண்டி விடுப்ப	128
வேதியரின் மிக்கானும்	520
வேதியர்க டம்மை	446
வேதியனே யுன்றன்	249
வேதியன் சொல்லும்	366
வேந்தர் பெருமா	417
வேந்தர் பெருமான்றன்	389
வேந்தன் மறுப்ப	64
வேர்த்து நடுங்கி	660
வேலை யொலியே	679
வேறுரைத்த மன்னவரை	721
வைதவங்கள் செய்தாலு	415
வைய மறியாமே	199
வைய மிருளகல	376
வைய மிருள்பரந்து	203
வைய மிருள்பறப்ப	432
வைய முழுதாளும்	552